Agatha Christie

அகதா கிறிஸ்டி

The Murder of Roger Ackroyd

ரோஜர் ஆக்ரய்ட் கொலைப்பட்டார்

34366

கண்ணதாசன் பதிப்பகம்

ரோஜர் ஆக்ராய்டு கொல்லப்பட்டார்

அகதா கிறிஸ்டி

தமிழில் :

கொரட்டூர் ஸ்ரீனிவாஸ்

கண்ணதாசன் பதிப்பகம்

23, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர்
சென்னை - 600 017.
தொலைபேசி : 044 - 2433 2682
கிளைகள் : மதுரை ★ கோவை ★ பாண்டி ★ வேலூர்

மொழிபெயர்ப்பாசிரியரின் உரை

ஒரு கொலை; அதன் மீதான மரண விசாரணை; இதன் விளைவாக ஸ்தலத்திலிருந்த அனைவரின் மீதும் சந்தேகம் பரவுதல்; பிறகு அந்த கூட்டத்திலிருந்து ஒரேயொருத்தரைக் கொலைகாரன் என அடையாளம் காணுதல்.

ஆயிரமாயிரம் துப்பறியும் கதைகளும் இத்தகையவைதான். *ரோஜர் ஆக்ராய்டு கொல்லப்பட்டார்* நாவலும் அப்படியே. ஆயினும் இது பத்தோடு பதினொன்று அல்ல; ஆயிரத்தில் ஒன்று! சென்ற நூற்றாண்டின் சிறந்த சர்வதேச நூறு துப்பறியும் நாவல்களில் முதலாம் இடத்தில் இருக்கும் ஓரிரு நாவல்களில், தலையாயது!

மூத்தவரான ரோஜர் ஆக்ராய்டு, இவருக்குத் தேவையான மற்றும் தேவையற்ற பல விஷயங்களைத் தெரிந்து வைத்திருப்பவர் - இதுவே இவருக்கு வில்லங்கமாய் முடிகின்றது. கொலையாகிறார்.

அது குறித்த சூடு பறக்கும் துப்பறிதல் இதுவரை எக்கதையிலும் படித்திருக்க முடியாத சிறப்பான ஒரு பிரம்ம முடிச்சு அதனை சாதுர்யம் பொங்க துப்புறியும் நிபுணர் பொய்ரெட் அவிழ்க்கும் கிளைமாக்ஸ் அப்போது நம்மையும் இழந்து நாம் பிரமித்து வாய் திறக்கும், ''ஆ''!!

பைக்குள்ளேயே எப்போதும் வைத்துக் கொண்டு, போகும்போதும் வரும்போதும் படிக்கத் தூண்டும் பிரமிப்புதான், அகதா கிறிஸ்டியின் இந்த மைல்கல் படைப்பு!

என்ஜாய்...!

அன்பன்,
முனைவர் கொரட்டூர் **கே என் ஸ்ரீனிவாஸ்,**
மனை எண் 252, இரண்டாவது தெரு,
டி என் ஹெச் பி காலனி,
கொரட்டூர், சென்னை - 600 080.

தொலைபேசி : 044 2635 8948
மின்னஞ்சல்: srinivasknS@yahoo.co.in

முக்கிய கதாபாத்திரங்கள்

ரோஜர் ஆக்ராய்டு	ஃபெர்ன்ஸி பார்க் மாளிகையின் தலைவர்
கேப்டன் ரால்ஃப் பேடன்	ரோஜரின் வளர்ப்பு மகன்
சிசில் ஆக்ராய்டு	ரோஜரின் மச்சினி
மிஸ் ஃப்ளோரா	சிசில் ஆக்ராய்டின் பெண்
கிங்ஸ் அப்பாட் கிராமம்	கதை நடக்கும் இடம்
டாக்டர் ஜேம்ஸ் ஷெப்பர்ட்	கிங்ஸ் அப்பாட் கிராமத்து முக்கிய டாக்டர்
கரோலின்	டாக்டரின் சகோதரி
மேஜர் ஹெக்டர் ப்ளண்ட்	ரோஜரின் நண்பர்
ஜியோஃபெர்ரி ரேமண்ட்	ரோஜரின் செகரட்டரி

ஜான் பார்க்கர்	ஃபெர்ன்லி பார்க் பணியாள்
எலிஸபெத் ரஸ்ஸெல்	ஃபெர்ன்லி பார்க் மாளிகையின் தலைமை பணியாள்
மிஸ் ஊர்மிளா	சமையல் நிர்வாகி
மிஸ்டர் ஆஹ்லே ஃபெர்ரர்ஸ்	ஃபெர்ன்லி பார்க் அருகே வசிப்பவர்
மிஸஸ் ஃபெர்ரர்ஸ்	ஆஹ்லேயின் மனைவி, ரோஜரை நேசிப்பவர்
துப்பறியும் நிபுணர்	**ஹெர்குல் பொய்ரெட்**

மற்றும் இன்ஸ்பெக்டர் ரக்லான், இன்ஸ்பெக்டர் டேவிஸ், சூப்பரின்டென்டெண்ட் ஹேஸ் மற்றும் பலர்.

அத்தியாயம் I

காலை சிற்றுண்டியில், டாக்டர் ஷெப்பர்ட்

செப்டம்பர் 16-17 கலந்திருந்த வியாழக்கிழமை இரவில், திருமதி ஃபெர்ரர்ஸ் காலமாகியிருந்தார். உடனடியாக வருமாறு 17, வெள்ளிக்கிழமை காலையில் எனக்குத் தகவல் அனுப்பப்பட்டது. மேற்கொண்டு செய்வதற்கு இதில் ஒன்றுமிருக்கவில்லை. சில மணி நேரங்களுக்கு முன்னமேயே அவர் இறந்திருந்தார்.

மறுபடியும் நான் வீடு திரும்பி சேர்ந்தபோது மணி ஒன்பதைக் கடந்து சில நிமிடங்கள் ஆகியிருந்தது. என்னிடமிருந்த சாவியால் நிலைக்கதவினைத் திறந்தேன். பனிக்காலத்துக் காலைப்பொழுது ஆகையால் கடுமையாய் குளிரிருக்கும் என்ற புத்திசாலித்தனமான சிந்தனையால் நான் கையோடு கொண்டு போயிருந்த மேல் கோட், தொப்பி ஆகியவற்றைக் கழற்றி அவற்றுக்கான கொக்கிகளில் மாட்டிய பின்னும், வேண்டுமென்றே தாமதித்தபடி நடு ஹாலிலேயே கொஞ்சநேரம் நின்றேன். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், நான் அதிக அளவுக்கு நிலைகுலைந்துப் போயிருந்தேன்... கவலையடைந்துமிருந்தேன். யெஸ். இனி தொடரும் வாரங்களில் என்னென்ன நடக்கப் போகின்றன என அந்த நொடியில் நான் கணித்து விட்டேன் என்றெல்லாம் மேதாவித்தனமாக சொல்லிக் கொள்ள நான் பிரியப்படவில்லை; இருந்தாலும், சுழன்றடிக்கப் போகும் சூறாவளிக் காலங்கள் எதிரில் காத்திருப்பதாய் என் உள்ளுணர்வு கோடிக்காட்டியது.

எனக்கு இடப்புறத்திலிருந்த டைனிங் ஹாலிலிருந்து தேநீர் கோப்பைகள் உரசும் ஓசைகளும் தொடர்ந்து என் சகோதரி கரோலினின்

சின்னதான வறட்டு இருமலும் கேட்டன.

''ஆஹ்... நீ தானா, ஜேம்ஸ்?'' என்றது, அவளே.

வேறு ஒருவரும் இருக்க வாய்ப்பற்ற போது இது ஒரு தேவையற்ற கேள்வி. சொல்லப்போனால், நான் நடு ஹாலிலேயே தாமதித்து நின்று போனதற்கு காரணம் என் சிஸ்டர் கரோலின் தான். இந்தக் குடும்பத்தின் வேதவாக்கே இது தான் (என்பார், திரு கிப்லிங்): 'போ. கண்டுபிடி.' எங்கள் குடும்பம் பற்றிய இந்தக் கிண்டலின் ஆரம்பத்தில் இடம்பெறும் 'போ'வினை விட்டு விடலாம்... அதற்கு மதிப்பே இல்லை; வெறுமனே ஒரேயிடத்தில் உட்கார்ந்துக் கொண்டே, எத்தனை கண்டுபிடிப்புகள் வேண்டுமோ அத்தனை கண்டுபிடிப்புகளைக் கரோலின் பேஷாகப் பண்ணி விடுவாள்!எப்படித்தான் இவளால் மட்டும் அப்படி முடிகின்றதோ... ஆனால் *அப்படித்தான்.* இவளுடைய சாதுர்யம் மிகுந்த தகவல் சேகரிக்கும் வியூகத்தை வெற்றிகரமாய் ஆக்க, வேலைக்காரர்களின் கூட்டமும் வியாபாரிகளின் சகவாசமும் துப்பறியும் அணி வகிக்கின்றன என்பது என் ஊகம். மீறி ஒரு வேளை இவள் வெளியே போனாளேயானால், அது தகவல்களைச் சேகரிக்க இருக்காது; அவற்றைப் பரப்ப. இதிலும், இவள், வியக்கத்தக்க அளவுக்கு மேதமை வாய்ந்தவள்!

முடிவெடுக்க முடியாமல் குழப்பத்தை என்னுள் இப்போது ஏற்படுத்தியிருப்பதே, நான் மேலே கடைசியில் 'வியந்த' கரோலினின் குணாதிசயம் தான். மிஸஸ் ஃபெர்ரர்ஸ் மரணம் குறித்து நான் இப்போது என்னவெல்லாம் கரோலினிடம் சொல்லவுள்ளேனோ அவையத்தனையும் இன்னும் ஓரிரு மணித்துளிகளுக்குள் கிராமம் முழுவதும் பரவலாக அறியப்பட்ட ஒரு பொதுச் செய்தியாகியிருக்கும். நான் ஒரு டாக்டர்... ஆகவே என் பேஷண்ட்டுகளைப் பற்றி நானே வளவளவென வெளியே சொல்வதில் ஜாக்கிரதையாய் சிந்தித்து செயல்படத் தேவையுள்ளது. ஆகவே எத்தனை முடியுமோ அத்தனை அளவுக்கு, என் சகோதரியின் காதுகளை எட்டாமல் நான் தகவல்களை என்னிடமே தக்க வைத்து விடுகிறேன். இப்படி எதை நான் முடிந்து வைத்துக் கொண்டேனோ, ஜஸ்ட் அதையே அவள் கண்டுபிடித்து விடுகிறாள், இருந்தாலும்கூட, என் வாய் வழியே அவளுக்கு அந்த சேதி போகாததால், அதில் என்னைக் குற்றம் சொல்ல எதுவும் கிடையாது

என்ற அறம் சார்ந்த மனச்சாந்தியாவது எனக்கு மிஞ்சுகின்றதே!

மிஸஸ் ஃபெர்ரர்ஸ்-ன் கணவர் போன வருஷம் தான் காலமானார். இது குறித்து, 'அவருடைய பொண்டாட்டி தான் விஷம் வைத்து அவரைக் கொன்றிருப்பது... ஆமாம், ஆமாம்' என கரோலின் உடும்புப்பிடியாய் இருக்கிறாள் இப்படி உறுதியாய் வற்புறுத்தி சொல்லிக் கொண்டேயிருக்க எவ்விதமான அடித்தளமும் இல்லாத போதும்!

தொடர்ச்சியாய் மதுபான வகைகளைக் குடித்துக் கொண்டேயிருந்த தால் உண்டான தீரா குடல் நோயால் தான் திரு ஃபெர்ரர்ஸ் மரண மடைந்தார் என்று நான் முன்வைக்கும் தவறற்றப் பிரதிவாதத்தை ஏளனமாய் ஒதுக்கித் தள்ளி விட்டு என்னை நிந்திக்கிறாள் இவள். குடல் வெந்துப்போய் மரிப்பதற்கும், ஆர்சனிக் போன்ற கொடிய விஷங்களை உட்கொண்டதால் ஏற்படும் மரணத்திற்குமான அறிகுறிகளில் அதிக மாறுபாடுகள் இருக்காது... ஒப்புக்கொள்கிறேன். ஆனால், கரோலின் தனது கருத்தை முன்வைக்கப் பயன்படுத்தும் தளமே வேறாய் உள்ளதே...

''அவ மூஞ்சியை மட்டும் தான் நீ பார்க்கணும்... *எல்லாம் விளங்கிடும்*'' - அவள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

மிஸஸ் ஃபெர்ரர்ஸுக்கு இளமைப் பொங்கும் பிராயம் கிடையாது, இருந்தாலும் கவர்ச்சிக்குப் பஞ்சமில்லா பெண். அலங்காரங்கள் அதிகமற்ற உடைகளையே அவர் அணிந்தாலும் அவை உடலோடு ஒட்டி உறவாடும் சிக்கென்ற வகையிலிருக்கும். பாரீஸிலிருந்து வரும் நவீன ஆடைகள். இப்படிப்பட்ட நவீன ஆடைகளைப் பாரீஸிலிருந்து தருவித்துப் பற்பல பெண்கள் அணிந்துக் கொண்டு தானிருக்கின் றார்கள்... ஆனால் அவர்களெல்லாம், சிக்கென சிக்க வைக்கும் மிதப்பில் இருக்கப் பிரயத்தனப்படும் முதிர் பெண்கள் என்ற ஒரே காரணத்துக்காக, கணவனுக்கு விஷம் வைத்தவர்களாகி விட முடியாது.

இத்தனை தினுசான எண்ணங்கள் என்னுள் கடந்துக் கொண்டிருக்க நான் நட்டநடு ஹாலில் அப்படியே நின்றபடியிருந்த போது மறுபடியும் என் சோதரியின் குரல் கறாரான பாவம் தாங்கி வந்தது.

''அங்கேயே அப்படியே நின்னுக்கிட்டு நீ என்னத்தைப் பண்ணிக் கிட்டிருக்கே, ஜேம்ஸ்? வந்து சீக்கிரம் சாப்பிட்டுத் தொலைக்கக்

கூடாதா?''

''வ... வ... வரேன்மா'' என மளமளவென சொன்னேன். ''நான் என் மேலங்கியைக் கொக்கியில மாட்டிக்கிட்டிருந்தேன்.''

''இதுக்குள்ளே அரை டஸன் சட்டைகளை நீ மாட்டி முடிச்சிருக்க லாம்.''

அவள் சரி தான். என்னால் மாட்டியிருக்க முடியும்.

டைனிங் அறைக்குள் நுழைந்த நான், வழக்கமாய் தரும் ஒரு கிள்ளலை அவளுடைய முகவாய்க்குத் தந்து விட்டு, முட்டைக்கும் ரொட்டிக்கும் முன்னால் உட்கார்ந்தேன். ரொட்டி சில்லிடத் துவங்கி யிருந்தது.

''இத்தனை சீக்கிரம் எங்கே போய்ட்டு வரே?''–குறியாய் கேட்டாள் கரோலின்.

''ம். கிங்ஸ் படாக் மாளிகை வரை. மிஸஸ் ஃபெர்ரர்ஸ்.''

''எனக்குத் தெரியும்'' – சொன்னாள் என் சகோதரி.

''உனக்கெப்படி தெரியும்?''

''ஆன்னீ எனக்கு சொன்னா.''

ஆன்னீ வீட்டிலிருக்கும் வேலைக்காரி. நல்ல பெண் தான்–ஆனால் கட்டுப்படுத்தயியலாத வம்புக்காரி.

சிறு இடைவேளை விளைந்தது. நான் முட்டையையும் ரொட்டியையும் சிரத்தையாய் சாப்பிடுவதில் இருந்தேன். என் சகோதரியின் மூக்கு–நீளமாயும் ஒல்லியாயும் இருக்கும் அந்த மூக்கு–நுனியில் கொஞ்சமாய் துடிக்க ஆரம்பித்தது. எதன் மீதாவது மிகுந்த ஈடுபாடோ கிளர்ச்சியோ கொண்டாளேயானால் அவளுக்கு இப்படி நேரும்.

''அப்புறம்?''–அவள் கட்டளையாய் கேட்டாள்.

''ஒரு துக்க சேதி. ஒண்ணும் பண்றதுக்கு இல்லே. தூக்கத்திலேயே எகிறியிருக்கணும்.''

''எனக்குத் தெரியும்'' – மறுபடியும் சொன்னாள் என் சகோதரி.

இந்த முறை எனக்கு எரிச்சல் உண்டானது. ''உனக்குத் தெரிஞ்சிருக்க முடியாது'' – பட்டென்று பேசினேன். ''நான் அங்கே போய் சேர்ற வரைக்கும் எனக்கே அந்த விபரீதம் தெரியாது. அது பற்றி இன்னும் ஒரு ஜீவனுக்கு நான் சொல்லலை. அந்த ஆன்னீ பொண்ணுக்குத்

தெரிஞ்சிருக்குன்னா அவ ஆவிகளோட பேசும் ஒரு மந்திரவாதியாதான் இருக்க முடியும்.''

''என்கிட்டே சொன்னது ஒண்ணும் ஆன்னீ கிடையாது. போதுமா? அது, பால்காரன். அவனுக்கு ஃபெர்ரர்ஸ் வீட்டு சமையல்காரன் தந்திருக்கான்.''

நான் சொன்னது மாதிரியே, தகவலைப் பெற மெனக்கெட்டு வெளியே போக வேண்டிய தேவையே இவளுக்குக் கிடையாது. இவள் வீட்டிலேயே உட்கார்ந்திருக்க, அதுவாய் வரும்.

என் சகோதரி தொடர்ந்தாள்: ''எதனால அவ செத்தாளாம்? ஹார்ட் அட்டாக், ஆங்?''

''இதையும் அந்தப் பால்காரன் உன்கிட்டே சொல்லலையா?'' – வஞ்சப்புகழ்ச்சி கமழ கேட்டேன் நான்.

கரோலினைப் பொறுத்தவரை வஞ்சப்புகழ்ச்சியெல்லாம் வீண். பேசும் எதையும் அவள் முக்கியத்துவம் தந்து எடுத்துக் கொண்டு அதற்கேற்றாற் போல் சீரியஸாகத் தான் பேசுகின்றாள். ''அவனுக்குத் தெரியலே'' என்று விளக்கினாள்.

அப்படியே இருந்தாலும் தான் என்ன! இப்போதோ நாளையோ இவளுக்கு நிச்சயம் தெரியத்தான் போகின்றது – ஏன், என் வாயிலிருந்து கிண்டியெடுத்தாலும் எடுத்து விடுவாள். ''நிறைய வெரோனல் சாப்பிட்டதாலே உயிர் பிரிஞ்சிருக்கு'' என்றேன் நான். ''சமீப காலமா தூங்கறதுக்காக அதை எடுத்துக்கிட்டு வராங்க. தெரியாம நிறைய எடுத்துக்கிட்டிருக்கணும்.''

''முட்டாள்'' என்றாள் இவள் உடனே. ''வேணுமுன்னே தான் அவ சாப்பிட்டிருக்கா. என்கிட்டே கதை விடாதே.

உங்களுக்குள்ளேயே ரகசியமாய் ஒரு நம்பிக்கை இருக்கின்றது... இருந்தாலும் அதை மனதார ஏற்றுக்கொள்ளவும் உங்களுக்கு சம்மதமில்லை... ஆனால் அதை அப்படியே அச்சு அசலாக யாரோ ஒருவர் சொல்லும்போது அப்படியெல்லாம் கிடையாது எனச்சொல்லி மறுக்க விறுவிறுவென உள்ளுக்குள் ஊறும் ஆவேசம் – ஒரு விந்தை தான். அப்படியோர் ஆவேசத்தில் உடனேயே நான் எரிச்சலாய் உடைந்தேன்: ''மறுபடியும் உன் வேலையைக் காட்டறே'' என்றேன். ''காரண காரியமில்லாத பேச்சு. என்ன பாழாப் போற காரணத்துக்காக மிஸஸ்

ஃபெர்ரர்ஸ் தன்னைத்தானே மாய்ச்சுக்க நினைக்கணும்? ஒரு விதவை – இன்னும் போதுமான இளமை உள்ளவ – நல்ல பணப்பசை – சூப்பரான ஆரோக்கியம் - வாழ்க்கையைக் கொண்டாடுவதைத் தவிர வேற ஜோலி கிடையாத நிலைமை. முட்டாளா பேசாதே.''

''இங்கே எவளும் முட்டாள் கிடையாது. கொஞ்ச நாளா அந்தம்மா எத்தனை வித்தியாசமா நடந்துக்க ஆரம்பிச்சானு நீயே கூட கவனிச் சிருப்பே. அதுவும் கடைசி ஆறு மாசமா. உலுக்கப்பட்டவ மாதிரி தெரிஞ்சா – திரிஞ்சா. சரியா தூக்கம் கூட வராம அவ தவிச்சானு நீயே தானே இப்ப சொன்னே? ஆங்? அப்புறம்?!''

''உன்னோட கணிப்பு தான் என்னடீ?'' – கூர்மையாய் கேட்டேன். ''அசிங்கமான ஒரு காதல் தொடர்பு? அப்படித்தானே?''

என் சகோதரி மறுப்பாய் தலையசைத்தாள். *''மனச்சாட்சி''*– நெஞ்சு நிமிர்த்தி அறிவித்தாள் இவள்.

''மனச்சாட்சி?''

''யெஸ். அவ புருஷனை அவதான் விஷம் வெச்சுக் கொன்னானு நான் சொன்னப்போ நீ எங்கே நம்பினே? இதுல, அப்போ இருந்ததை விட இப்போ நான் பரிபூரண முடிவா இருக்கேன். ஆமா. அவ தான் *கொன்னா.''*

''உனக்கு மூளை இருக்கானே எனக்கு சந்தேகமா இருக்கு'' என்று மறுப்பு சொன்னேன் நான். ''அப்படி ஒரு கொடூர கொலையை ஒரு பொண்ணு செஞ்சிருந்தானா, அதனால விளையவல்ல கனியை அணுஅணுவா ரசிச்சு ருசிக்கத் தான் பிரியப்படுவாளே தவிர, பச்சாதாபப்பட்டு மனச்சாட்சிக்கு பயந்துக்கிட்டு ஒடுங்கிக் குறுக மாட்டா. ஓ கே?''

விட்டு விடாது, என் சகோதரி மறுப்பாய் தலையசைத்தாள். ''அப்படி சில பெண்கள் இருக்கலாம் – ஆனா மிஸஸ் ஃபெர்ரர்ஸ் அப்படிப்பட்ட பெண்கள்ல ஒருத்தி கிடையாது. அவ உடம்பு முழுக்க தைரியம் – நரம்பதிராத குண்டு தைரியம். வாழ்க்கையே படாதபாடாகி தினந்தோறும் தாங்க முடியாத துன்பங்களால செத்துச்செத்துப் பிழைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டா, அதையெல்லாம் சகிச்சுக் கிட்டு வாழும் கிராக்கி கிடையாது இந்தம்மா; மேலும், ஆஹ்லே ஃபெர்ரர்ஸ் மாதிரியான ஒரு ஆம்பிளைக்கு மனைவியா இருக்கிறவ

உபத்திரவங்களையும் உபாதைகளையும் சந்திச்சுத்தான் ஆகணும்னு சொல்லித்தான் தெரியணுமா...?! தாள முடியாம பொங்கியெழுந் திருப்பா–போட்டுத் தள்ளிட்டா.''

இதற்கு நான் ஒப்புதலாய் தலையசைத்தேன்.

''அதிலிருந்து... போட்டுத் தள்ளின அந்தக் கணத்திலிருந்து... அவ அதே நினைப்பாலேயே அறையப்பட்டிருந்தா. அவளுக்காக என்னால பரிதாபப்படாம இருக்க முடியலே.''

எனக்கென்னவோ, திருமதி ஃபெர்ரர்ஸ் உயிருடன் இருந்த காலம் முழுவதும் இவள் ஒரு முறையேனும் பரிதாபப்பட்டதாய் நினைப் பில்லை. இப்போது, அந்தம்மா, இறுக்கமான பாரீஸ் கவுனெல்லாம் அணிய முடியாத பரலோகம் போய் சேர்ந்து விட்ட காரணத்தால் கனிவு பரிதாபம் போன்ற தயை மிகுந்த உணர்வுகளுக்குள் கரோலின் புகுந்துக் கொள்ள பார்க்கிறாள்.

இப்படியெல்லாம் போகும் இவளுடைய அத்தனை ஊகங்களும் முழுக்க முழுக்கத் தவறு என்று சொல்லியே விட்டேன் நான். இவள் சொன்ன சில பகுதிகளோடு நான் ரகசியமாய் ஒத்துப் போனேன்... ஆயினும், தன்னை ஈர்த்த சில கற்பனைகளைச் சாட்சியாய் வைத்துக் கொண்டு ஒரு முடிவுக்கு வருவதென்பது தவறு. இப்படிப்பட்ட குணாதிசயத்தை நான் ஊக்குவிக்கப் போவது கிடையாது. இப்போது கிளம்பி கிராமம் முழுக்கப் போய் தனது கோணத்தை ஊர் முழுக்கப் பதியம் போடப் போகிறாள்... ஊரும், ஏதோ நான் கொடுத்துதவிய மெடிக்கல் அறிக்கைகளின்படித் தான் இவள் ஸ்திரமாய் பேசுகிறாள் என்று நினைத்து 'ஆஹா... ஓஹோ... என வாய் பிளந்துத் தொலைக்கப்போகின்றது. வாழ்க்கையே, இப்படியோ அப்படியோ எனும் கற்பனை முயற்சிகளின் ஆக்கமாகவே ஆகி விட்டது.

''மூளையத்தவன்'' என்றாள் என்னை – நான் அவள் கற்பனை முடிவுகள் தவறு என்றதற்கு. ''பார்க்கத்தானேப் போறே. தான் செஞ்ச அத்தனையும் ஒரு கடிதத்துல எழுதி மன்னிப்புக் கேட்டிருக்கப் போறாளா இல்லையானு பார்க்கத்தானேப் போறே.

''அப்படியெல்லாம் ஒரு கடுதாசியையும் அந்தம்மா எழுதி வைக்கலே'' என்று கூர்மையாய் சொன்னேன் நான்.

''ஓ'' என்றாள் வியப்பாய் கரோலின். ''அப்போ நீ அதைப்பற்றிக்

கேட்டிருக்கே, இல்லியா? அப்படினா, ஜேம்ஸ், நீ, உள்ளூர, உன் நெஞ்சுக்கு நெஞ்சா, நான் என்ன நினைக்கிறேனோ அதையே தான் நினைக்கிறேனே எனக்குத் தோணுது. ஆனா நீ அதை ஒத்துக்க விரும்பாத பழங்காலத்து வெத்துவேட்டு.''

''தற்கொலை என்ற கருத்தும் விளைவதை யாராலும் தடுக்க முடியாது தான்''–ஆமோதித்தேன் நான்.

''மரண விசாரணை இருக்குமா?''

''இருக்கலாம். பல விஷயங்களைப் பொறுத்தது இது. அளவுக் கதிகமான வெரோனல் மருந்தினைத் தெரியாத்தனமா ஒரு விபத்து போல உட்கொள்ளப்பட்டிருக்கு என்பதுல எனக்கு சந்தேகமே கிடையாதுனு நான் மருத்துவச் சான்றிதழ் தந்தேன்னா மரண விசாரணை இல்லாம இயற்கை மரணமா அறிவிக்கப்பட்டுடலாம்.''

இப்போது புத்திசாலித்தனமாய் என் சகோதரி கேட்டாள்: ''அப்படி சொல்வதுல உனக்குப் பூரண திருப்தியிருக்கா?''

நான் பதில் சொல்லவில்லை, ஆனால் சாப்பாட்டு மேஜையிலிருந்து எழுந்துக் கொண்டேன்.

அத்தியாயம் 2

கிங்ஸ் அப்பாட் கிராமத்துவாசிகள்

கரோலினிடம் நான் என்ன சொன்னேன் என்பதைப் பற்றியும் அதற்கு கரோலின் என்னிடம் என்ன சொன்னாள் என்பதைப் பற்றியும் விளக்க முற்படுவதற்கு முன்னால், எங்கள் கிராம வரைபடம் என நான் சொல்லிக்கொள்ளும் கிங்ஸ் அப்பாட் பகுதிகள் பற்றி நேயர்களுக்கு விவரிப்பது சற்று சகாயமாய் இருக்கும். எங்களுடைய கிராமமான 'கிங்ஸ் அப்பாட்', என்னைப் பொறுத்தவரை, பொதுவாய் அமைந்திருக்கும் ஏனைய கிராமங்களைப் போன்றதே தான். எங்களுக்கு அருகாமையில் இருக்கும் டவுன் க்ரென்செஸ்டர் ஆகும் – ஒன்பது கல்கள் தள்ளி உள்ளது. மற்றபடி எங்களுக்கு ஒரு விசாலமான ரயிலடி இருக்கிறது – சின்ன போஸ்ட் ஆபீஸ் ஒன்று – இரண்டு ஜெனரல் ஸ்டோர்ஸ். உடல் உரம் உள்ளவர்களெல்லாம் சிறு பிராயத்திலேயே ஊர் விட்டு வெளியேறி பிழைத்துக் கொள்வது இங்கு வாடிக்கையானாலும், நாங்கள், திருமணமாகாத கன்னிப் பெண்களாலும் ஓய்வு பெற்ற பட்டாளத்தான்களாலும் அதிகமாய் நிரப்பப்பட்டவர்கள். எங்களுடைய பொழுதுபோக்கினை ஒரே வார்த்தையில் முடித்து விடலாம்: *கிசுகிசு.*

முக்கியத்துவம் வாய்ந்தவை என்று வகைப்படுத்தினால் இரண்டு வீடுகள் தான் கிங்ஸ் அப்பாட் கிராமத்தில் தேறும். ஒன்று, கிங்ஸ் படாக் – மிஸஸ் ஃபெர்ரர்ஸுக்கு அவருடைய புருஷன் காலமானதால் வந்து சேர்ந்தது. இன்னொன்று, ஃபெர்ன்லி பார்க் – ரோஜர் ஆக்ராய்டு சொந்தமாய் வைத்திருப்பது. இசை நாடகங்களின் துவக்கத்தில், கிராமத்துப் பின்னணியில், முகம் முழுக்க சிகப்புச் சாயம் அடித்துக் கொண்டு வந்து குதித்து சிரிக்க வைக்கும் பாத்திரமாகத்தான் என்னுள்

ரோஜர் ஆக்ராய்டு பதிந்துள்ளார். லண்டன் வரைக்கும் ஏதோ ஜோலியாய் போய் வருவதாய் பாட்டுப்பாடியபடி நாடகத்தைத் துவக்கி வைப்பது இப்பாத்திரத்தின் வேலை. பார்க்க, கிராமத்தை வலம் வந்துக் கொண்டிருக்கும் வெட்டி துரை போல இவர்கள் படைக்கப்பட்டிருப்பார்கள். இப்பொழுதெல்லாம் எங்கே இசை... எங்கே நாடகம்? இவை மங்கி விட்டதைப் போலவே அந்தப் பாத்திரமும் போயே விட்டது.

ஆனால், ரோஜர் ஆக்ராய்டு கிராமத்து துரையல்லாம் கிடையாது. எனக்குத் தெரிந்து, நாலு சக்கர வண்டிகளின் சக்கரங்களைத் தயாரிப்பதில் அபரிமித வெற்றி கண்டவராவார் ரோஜர். ஐம்பத் தைந்தை ஒட்டிய வயது – இளஞ்சிவப்பு முகம் – நடவடிக்கைகளில் ஜீவனோடு இயங்கும் உல்லாசமானவர். கோயில் குரு போல இயங்குவதை மூச்சுக்காற்றாய் கொண்ட ஆக்ராய்டு – கோயில் மற்றும் சர்ச் சம்பந்தப்பட்ட அறக்கட்டளைகளுக்குக் கை பொங்கப்பொங்க தானமளிப்பவர் (தனக்கென செய்துக் கொள்ளும் செலவுகளில் மகா கஞ்சன் என்ற புரளிக்கு மத்தியில்). கிரிக்கெட் மேட்சுகள், விடலைப் பசங்களின் கிளப்புகள், ஊனமுற்ற சிப்பாய்களின் சங்கங்கள் ஆகியவற்றுக்கு தருமம் செய்து செமத்தியாய் ஊக்கமளிப்பவர். எங்களுடைய அமைதியான கிங்ஸ் அப்பாட் கிராமத்தின் நாடித் துடிப்பான சுவாசமே ரோஜர் தான்.

இனி ரோஜர் ஆக்ராய்டு இருபத்தியொரு வயசு வாலிபனாய் இருந்தபோது.

இவரை விட ஐந்தாறு வயது மூத்த பெண்ணொருத்தியின் மீது தீரா காதலில் விழுந்து அவளை மணந்துக் கொண்டார் ரோஜர். அவள் அதிரூப சுந்தரி. அத்தனை அழகு. பேடன் என்பது அவள் பெயர். விதவையான அவளுக்கு ஒரு மகனிருந்தான். இந்தத் திருமணத்தின் வரலாறு மிகக் குறுகியது... வலி நிறைந்தது. பட்டவர்த்தனமாய் சொல்ல வேண்டுமென்றால் மது மது என ஆல்கஹால் வகை திரவங்களுக்காக ஓடியோடி அலைந்த சாராய வெறி பிடித்தவள் பேடன். இந்தத் திருமணம் முடிந்த நாலாவது வருடம் குடித்துக் கொண்டே கல்லறைக்குள் விழுமளவுக்குப் போய் சேர்ந்தாள் அவள்.

தொடர்ந்த வருடங்களில் இரண்டாவது திருமணம் எனும்

சாகசத்தை முயற்சி பண்ணிப் பார்க்க ரோஜர் துணியவில்லை. இவருடைய மனைவியின் முதல் மணத்தின் வாயிலாக பிறந்திருந்த மகனுக்கு அப்போது வயது வெறும் ஏழு. இப்போது அவன் வயது இருபத்தைந்து. ஆக்ராய்டு அவனை எப்போதுமே தனது சொந்த மகனாகவே பாவித்து அதன்படியே தான் ஆளாக்கினார். ஆனால் முரட்டு சுபாவம் கொண்ட காட்டானாய் உருவான அவனோ தனது வளர்ப்புத் தந்தைக்கு ஒரு தீராத தொந்தரவாகவும் அவருடைய நெஞ்சுவலிக்கும் கவலைக்கான ஒரே காரணமாகவும் தான் உலவினான். இத்தனையானாலும் நாங்களனைவரும் கிங்ஸ் அப்பாட்டின் கேப்டன் ரால்ஃப் பேடன் மீது அதிக ப்ரீதி கொண்டே இருந்தோம். பூரிக்கும் அதியற்புத அழகன் அவன் – அதனால்.

நான் முன்னமேயே சொன்னது போல, கிசுகிசுக்க எங்கள் கிராமத்தில் எல்லோரும் எப்போதும் தயாராகவே இருப்போம். திருமதி ஃபெர்ரர்ஸும் ரோஜர் ஆக்ராய்டும் ஆரம்பத்திலிருந்தே ஒருத்தருக் கொருத்தர் நல்லபடியாய் இசைந்துப் போவதை கிராமவாசிகள் அனைவரும் கவனித்தோம். அவளுடைய கணவரின் மரணத்துக்குப் பிறகு இந்த இசைவு இன்னும் அதிகமாய் குறித்துக் கொள்ளும்படி வளர்ந்தது. சுற்றுவட்டாரத்தில் இருவரும் எப்போதும் ஒன்றாகவே தென்பட்டனர். இதனால், மிஸ்டர் ஆஷ் இறந்த துக்க அனுஷ்டிப்புகள் முடிந்த பிறகு, உடனேயே, மிஸஸ் ஃபெர்ரர்ஸ் என்பது மிஸஸ் ஆக்ராய்டு என மாறி விடும் என்று நாங்களனைவரும் வெகு இயல்பாக உத்தேசித்துக் கொண்டோம். சொல்லப்போனால், இப்படி சொல்வதில் ஒரு பொருத்தம் இருக்கிறது என்பதும் நிஜமே. ரோஜர் ஆக்ராய்டின் மனைவி குடித்துக் குடித்தே போனாள் என்பற்கு ஊரே சாட்சி. ஆஹ்லே ஃபெர்ரர்ஸும் மரணிப்பதற்கு முன்னால் பற்பல வருடங்கள் ஆல்கஹால் சகவாசத்தோடே கிடந்தவன். இத்தகையவர்கள், தங்களுடைய கடந்தக்கால சாராய ஜோடியிடம் அகப்பட்டுக் கொண்டு பட்ட திண்டாட்டங்களுக்கெல்லாம் ஒரே தீர்வாக, ஒன்றுசேர்ந்து வாழ்வதே பொருத்தம்.

ஃபெர்ரர்ஸின் குடும்பம் இங்கு வாழ வந்தது ஒரு வருடத்துக்கு முன்பு தான். ஆனால், ஆக்ராய்டைச் சுற்றிலும் வண்டி வண்டியாக கிசுகிசுக்கள் வருடக்கணக்காய் வளையமிட்டுக் கொண்டுள்ளன.

சிறுவனாயிருந்து வாலிபனாய் ரால்ஃப் பேடன் வளரும் காலந்தோறும் ஆக்ராய்டின் இல்லத்தில் பற்பல வேலையாட்கள் வேலையிலிருந் தார்கள். அந்த ஒவ்வொருவரும் கரோலின் மற்றும் அவளுடைய குழுவினரின் உயிரோட்டமான சந்தேகங்களால் சூழப்பட்டனர். இப்படி வேலையிலிருக்கும் ஒருத்தியைத் தான் ரோஜர் ஆக்ராய்டு கலியாணம் கட்டிக் கொள்ளப் போகிறார் என்று கடந்த பதினைந்து வருட காலமாக கிராமமே ஸ்திரமாய் எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தது என்று சொன்னால் அது ஒன்றும் நிச்சயமாய் மிகையே கிடையாது. கடைசியில் இருந்த மிஸ் ரஸ்ஸெல், அவளுக்கு முன் இருந்தவர்கள் பதவி வகித்ததை விட இரு மடங்காக ஐந்து வருடங்கள் வரை வேலைக்காரியாய் நீட்டித்ததால், அவளிடம் இச்சந்தேகம் வலுவாகவே பிரயோகிக்கப்பட்டது. இதிலிருந்து ஆக்ராய்டு தப்பித்திருக்கவே முடியாது எனும் அளவுக்கு உணரப்பட்டது. இதில் நேர்ந்த ஒரு திருப்பம்: கனடாவிலிருந்து வந்து சேர்ந்த ஆக்ராய்டுடைய விதவை மச்சினியின் நுழைவு. திருமதி சிசில் ஆக்ராய்டு. வந்ததும் வராததுமாய் ஃபெர்ன்லி பார்க்கின் நிர்வாகத்தைக் கையிலெடுத்துக் கொண்ட சிசில், (கரோலின் சொன்னதன்படி) மிஸ் ரஸ்ஸெல்லை வைக்க வேண்டிய இடத்தில் வைப்பதில் சிறப்பான வெற்றி பெற்றாள்.

'வைக்க வேண்டிய இடம்' என்றால் அது என்ன மாதிரியான இடம் என்பது எனக்குத் தெரியாதது. இவ்வர்ணனையே அசிங்கமாயும் பயமுறுத்துவதாயும் எனக்குப் படுகின்றது. ஆனால் மிஸ் ரஸ்ஸெல் இறுக்கமாய் மூடிய உதடுகளோடும் அமிலத்தன்மையான ஒருவகை புன்சிரிப்போடும் வலம் வருகிறாள் என்பது எனக்குத் தெரியும். மேலும் அபரிமிதமான இரக்கத்தோடு 'புவர் மிஸஸ் ஆக்ராய்டுக்காக' வருத்தமாய் பேசியும் வருகிறாள்: 'பாவப்பட்ட இந்த மிஸஸ் ஆக்ராய்டு வாழ்வதற்குத் தேவையான பணத்தை அவளுடைய கணவனின் தம்பியிடமிருந்து கருணைத் தொகையாக பெற வேண்டியுள்ளதாமே! அப்படி விழும் காசிலிருந்து வாங்கும் ரொட்டித்துண்டு கூட கசக்காதோ! நான் வாழத் தேவையானவற்றை நானே உழைத்து சம்பாதிக்காமல் ஆகி விட்டால் அதை விட பெரிய கொடுமை எனக்கு வேறு இருக்காதப்பா.'

மிஸஸ் ஃபெர்ரர்ஸ் தொடர்பு பற்றி திருமதி சிசில் என்ன

நினைத்தாள் என்பது எனக்குத் தெரிய வரவில்லை. ஆக்ராய்டு கலியாணம் ஏதும் கட்டிக் கொள்ளாமலே வாழ்ந்து விட்டது அவளுக்கு சாதகமாய் ஆகியது. மிஸஸ் ஃபெர்ரர்ஸை விடவும் ஈர்ப்பும் மலர்ச்சியும் எப்போதும் அதிகம் கொண்டிருந்தாள் சிசில். ''இதுல என்ன பெருசா பிரயோஜனம்?'' என்று என் இக்கருத்தைப் புறக்கணித்து விட்டாள் கரோலின்.

இப்படிப்பட்டவை தான் கடந்த சில வருடங்களாய் கிங்ஸ் அப்பாட் கிராமத்தை ஆக்கிரமித்திருப்பவை. எந்தவொரு கோணத்தையும் விட்டு வைக்காமல் அத்தனை மூலைகளிலிருந்தும் மிஸ்டர் ஆக்ராய்டின் தொடர்பு பற்றி நாங்கள் பேசி விட்டோம். மிஸஸ் ஃபெர்ரர்ஸ் இந்த ஊகத்தில் தவிர்க்க முடியாமல் அவருக்கான இடத்தில் பொருந்தியே நின்றார்.

இப்போதோ, சொல்லி வந்த திரைக்கதையில் மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. இருவருக்கும் என்ன கலியாண ப்ரஸென்டேஷன் வாங்கலாம் என்ற லகுவான விவாதமானது, துக்கத்தின் மையத்தில் போய் நின்றுக் குலுங்கும்படி மாற்றங்கண்டது.

இவற்றையும் இன்னபிற சிந்தனைகளையும் உள்ளே சுழல விட்டுக் கொண்டே நான் எனது தினசரி ஆஸ்பத்திரி 'ரவுண்டில்' இயந்திரத் தனமாய் இருந்தேன். என் மனதினை முழுசுமாய் திசைதிருப்பவல்ல ஸ்பெஷல் நோயாளிகள் எவரும் சிகிச்சைக்காக வந்திராத காரணமும், மீண்டும் மீண்டும் என் மனது திருமதி ஃபெர்ரர்ஸின் மரணம் குறித்த மர்மத்தைச் சுற்றியே சுழலும்படி ஆக்கிப் போட்டது. அவளாகவே அவளுடைய சொந்த உயிரினைப் பறித்துக் கொண்டிருப்பாளா? அப்படி நடந்தது தான் உண்மையானால், அவள், அச்செய்கையை விளக்கும்விதமாய் பின்னாலேயே ஒரு கடிதத்தையும் விட்டு வைத்துத் தான் சென்றிருப்பாள். என் அனுபவங்களை வைத்து சொல்கிறேன்... தற்கொலை தான் தீர்வு என தீர்மானமாய் இறங்கும் பெண்கள், அப்படியொரு இறுதி முடிவில் அவர்களை இயங்க வைத்த மனோநிலை தான் என்ன என்பதைச் சொல்லாமல் போக மாட்டார்கள். பத்து பேர் மத்தியில் தாங்கள் பேசப்பட வேண்டும் என்பது அவர்களுடைய எப்போதும் அழியா ஆசை.

நான் அவளைக் கடைசியாய் பார்த்தது எப்போது? இப்பொழுது சில

வாரங்களாய் கிடையாது. அவளுடைய நடத்தை, கடைசியாய் பார்த்த காலத்தில், எல்லா விஷயத்தைப் பொறுத்தமட்டிலும்... யெஸ், எல்லா விஷயத்தைப் பொறுத்தமட்டிலும்... சாதாரணமாகவே இருந்தது.

பிறகு தான் எனக்கு சட்டென்று நினைவுக்கு வந்தது... அவளை நான் நேற்று தான் பார்த்தேன். யெஸ், நேற்றேதான்! அவள் ரால்ஃப் பேடனுடன் நடந்துப் போய்க் கொண்டிருந்தாள். அவன் இங்கு கிங்ஸ் அப்பாட் கிராமத்தில் இருப்பான் என்று நான் கொஞ்சமும் நினைத்திராததால் எனக்கு ஆச்சரியம் தாளவில்லை. அவனுடைய வளர்ப்புத் தந்தையுடன் கடைசியில் கூச்சல் குழப்பத்தில் விழுந்துள்ளான் என்று தான் அப்போது நான் நினைத்தேன். அவனைப் பற்றிய எதுவும் கடந்த ஆறு மாதங்களாக இப்பகுதியில் காணப்பட வில்லை. அவர்களிருவரும் இணையாய் நடந்துக் கொண்டிருந்தார்கள், மிக அருகில், இருவரின் தலைகளும் ஒன்றோடொன்று நெருக்கமாய். அவள் மிக ஊக்கமாய் பேசிக் கொண்டிருந்தாள்.

இந்தத் தருணத்தில் தான் எதிர்காலம் குறித்த ஒரு முன்னறிவிப்பு என்னுள்ளே சுழலாய் இறங்கியது. எதுவும் இதுவரை ஸ்தூலமாய் நிச்சயமாகவில்லை – ஆயினும் நிகழ்வுகள் கொள்ளும் வடிவத்தை வைத்து ஒரு பனிமூட்டமான ஆரூடமாய் இப்படி என்னுள்ளே தோன்றியது. ரால்ஃப் பேடனுக்கும் மிஸஸ் ஃபெர்ரர்ஸுக்கும் இடையே நேற்று முன்தினம் நான் பார்த்த அந்த நிஜமான ஈடுபாடு என்னுள் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாய் அறைந்தது.

ரோஜர் ஆக்ராய்டை இப்போது நேருக்கு நேர் பார்க்கும் வரை இதையே தான் மனதுக்குள் போட்டுப் பிசைந்துக் கொண்டிருந்தேன் நான்.

''ஷெப்பர்ட்!'' – ஆச்சரியப்பட்டார் அவர். ''நான் புடிக்கணும்னு நினைச்சுக்கிட்டிருந்த அதே மனுஷன். ஓஹ், அது ஒரு கொடூரமான சமாச்சாரம்ப்பா.''

''அப்ப உங்க காதுக்கும் விஷயம் வந்துடுச்சா?''

ஒப்புதலாய் தலையசைத்தார். இந்த அடியை ஆழமாய் உணர்ந் திருந்தார் அவர். என்னால் வெளிப்படையாகவே பார்க்க முடிந்தது. அவருடைய வாளிப்பான பெரிய சிகப்புக் கன்னங்கள் வெதும்பித்

தொய்ந்துத் தோன்றின. அவருக்கே உரிய ஜாலியான சுயம் மற்றும் ஆரோக்கியமான அணுகுமுறை ஆகியவற்றிலிருந்து நொறுக்கப்பட்ட வராய் காட்சியளித்தார்.

''விஷயம், நீங்க தெரிஞ்சு வெச்சிருப்பதை விட மோசமானது'' என்றார் அமைதியாய். ''கவனியுங்க ஷெப்பர்ட்... நான் உங்ககூட கொஞ்சம் பேசணும். இப்பவே. உங்களால என்னோட வர முடியுமா?''

''கஷ்டமாச்சே. நான் பார்த்து அனுப்ப வேண்டிய நோயாளிங்க இன்னும் மூணு பேர் இருக்காங்க. மேலும் என்னோட ஆபரேஷன் பேஷண்ட்டுகளைப் பார்க்க நான் பனிரெண்டு மணிக்கு திரும்ப வேண்டிய கட்டாயமிருக்கு.''

''அப்ப இன்னிக்கு மத்தியானம்? ம்ம். வேணாம். அப்பவும் உங்களுக்கு நெருக்கடி இருக்கலாம். ராத்திரி சந்திச்சுடுவோமே. டின்னருக்கு? ராத்திரி ஏழரைக்கு? இது ஒத்து வருமா?''

''யெஸ். எப்படியாவது ஏழரைக்கு நான் வந்துடறேன். என்ன சமாச்சாரம்? ரால்ஃப் பற்றியா?''

இப்படி நான் எதற்காக சொன்னேன் என்பது எனக்கே கூட தெரியாது – இவருக்கு பெருந்தலைவலியாய் அடிக்கடி இந்த ரால்ஃப் பயல் தான் இருக்கிறான் என்பதைத் தவிர.

நான் சொன்னதில் கிஞ்சித்தும் விளங்காதவரைப் போல வெறுமையாய் என்னைப் பார்த்தார் ஆக்ராய்டு. உடனேயே, எங்கோ எதிலோ பெருந்தப்பு நேர்ந்துள்ளது என்பதை நான் உணர்ந்துவிட ஆரம்பித்தேன். இந்த அளவுக்கு நொறுங்கிய ஆக்ராய்டை நான் இதற்குமுன் பார்த்ததேயில்லை.

''ரால்ஃப்?'' – குழப்பமாய் கேட்டார் அவர். ''ஓ, நோ! இது ரால்ஃப் பற்றியெல்லாம் கிடையாது. ரால்ஃப் லண்டன்ல இல்ல இருக்கான். அய்யய்யோ... மிஸ் கன்னட் வராங்களே... இந்த விஷயத்தையெல் லாம் இந்தம்மா கிட்ட பேசணும்கிற தேவை எனக்கு கிடையாது. இன்னிக்கு ராத்திரி உங்களை சந்திக்கறேன், ஷெப்பர்ட். ஏழரைக்கு.''

நான் ஒப்புதலாய் தலையசைக்க, என்னை ஆச்சரியத்தில் அப்படியே விட்டுவிட்டு நகர்ந்து விட்டார் அவர். ரால்ஃப், லண்டனில்? ஓரிரு நாட்களுக்கு முன்பு கூட மதியம் அவன் இங்கே இந்த கிங்ஸ் அப்பாட்டில் இருந்தானே? அவன் நேற்றிரவோ அல்லது அதிகாலை

யிலோ கிளம்பி டவுனுக்குப் போயிருக்கலாம்... ஆனால் ஆக்ராய்டின் நடவடிக்கையோ முழுக்கவும் மாறுபட்ட பதிப்பையல்லவா எனக்குள் ஏற்படுத்தியது. ஏதோ இந்தப் பகுதியில் வேறெங்கிலுமே கடந்த பல மாதங்களாக ரால்ஃப் வராதது போல அல்லவா அவர் பேசினார்.

இந்த சமாச்சாரத்தை இன்னும் தோண்டித்தோண்டி புதிர் போட்டுக் கொள்ள எனக்கு அவகாசம் இருக்கவில்லை. (வயதான) மிஸ் கன்னட் என் மேல் வந்து விழுந்திருந்தார் – தகவல்களுக்கான தாகத்துடன். கரோலினுக்கு என்னவெல்லாம் குணாதிசயங்கள் உள்ளனவோ அவையத்தனையும் பெற்றவர் தான், இந்த கன்னட் – ஆனால் கரோலினின் அந்தத் தொய்யாத முடிவெடுக்கும் அலாதியான திறமையில் இவர் பின்தங்கி விடுகிறார். கரோலினின் ஆச்சரியமே அது தான் முடிவு அறிவிப்பது. மூச்சு விடாது வம்பளக்க ஆரம்பித்திருந்தார் கன்னட்.

'புவர் மிஸஸ் ஃபெர்ரர்ஸின் கதை தான் எத்தனை சோகமாய் முடிஞ்சிடுச்சு? அந்தம்மா வருஷக்கணக்காய் ட்ரக் எடுத்துக் கிட்டிருந்ததா பார்க்கிறவங்க எல்லாரும் முடிவா சொல்றாங்களே? இப்படியெல்லாம் பேசிக்கிட்டு அலையும் மக்கள் தான் எத்தனை கீழ்த்தரமானவங்க? இருந்தாலும் பாருங்க... இந்த அத்தனை பேச்சிலும் எங்கேயாவது, ஒரு சிறு பொறி உண்மை இருக்கத்தான் செய்யுது. நெருப்பில்லாம புகையா! இதை எப்படியோ கண்டு பிடிச்சுட்டதால தான் மிஸ்டர் ஆக்ராய்டு கூட நிச்சயதார்த்தத்தை ஒடைச்சுட்டாராமே – அதாவது ஏற்கெனவே *நிச்சயதார்த்தம் நடந் திருக்காமே.*' கடைசியில் சொன்ன விஷயத்தில் சாட்சி வைத்திருப்பது போல நிச்சயமாயிருந்தார் கன்னட். இத்தனையையும் அவர் என்னிடம் போட்டுப் பார்க்க காரணம் – எனக்கு அது பற்றி முழுக்க தெரிந்திருக்க வேண்டும்; டாக்டர்களுக்கு எல்லாமும் தெரியும்... ஆனால் தொழில் தர்மம் கருதித்தான் வெளியே சொல்வது கிடையாது.

நடந்த இத்தனை உரையாடலும் அவருடைய மணிமணியான கருவிழிகள் என்மேல் பதிந்து ஊடுருவிய நிலையில் தான் போனது – எனக்குள் இவ்விஷயங்களில் என்னென்ன விளைவுகள் உண்டா கின்றன என்ற தேடுதலோடு! அதிர்ஷ்டவசமாக, கரோலினுடனான

என்னுடைய நெடுநாளைய அனுபவங்கள், எக்காரணம் கொண்டும் முகத்தில் எவ்வித உணர்வையும் பிரதிபலிக்காமல் பட்டும்படாத குறிப்புகளைத் தந்து தப்பித்துக் கொள்வதில் நன்கு உதவின.

இத்தனையிலும், ஆரோக்கியமற்ற கிசுகிசுக்களில் தன்னை நுழைத்துக் கொள்ளாமல் இருந்ததற்காக மிஸ் கன்னட்டை நான் உள்ளூரப் பாராட்டினேன். உரையாடலை நீட்டித்து மேற்கொண்டு என்னிடமிருந்து வார்த்தைகளைப் பிடுங்க அவர் ஆரம்பிப்பதற்குள் நான் கிளம்பியிருந்தேன்.

ஆபரேஷன் பிரிவில் எனக்காக பல நோயாளிகள் காத்திருப்பதைப் பார்க்க, பலத்த சிந்தனையுடன் நான் வீடு போய் சேர்ந்தேன்.

அவர்களில் கடைசி பேஷண்ட் வரை அத்தனை பேரையும் கவனித்து அனுப்பி விட்டு, லஞ்சுக்குப் போகுமுன் தோட்டத்தில் சற்று நேரம் சுய சிந்தனையிலும் சுய ஆலோசனையிலும் இருந்த நான், உள்ளே மீண்டும் நுழையும்போது இன்னொரு பேஷண்ட் வந்து காத்திருப்பதாய் அறியப் பெற்றேன். அவளைப் பார்த்து ஆச்சரியத்தில் நின்று விட்ட என்னை நாடி எழுந்து நெருங்கி வந்தாள் அவள்.

வழக்கமான மனிதத்தோல் அமையப்பெறாத இரும்பு மனுஷி மிஸ் ரஸ்ஸெல் என்பதைத் தவிர இவளைப் பற்றி ஆச்சரியப்பட வேறொன்றும் இல்லாதபட்சத்தில், ஆச்சரியத்தில் மூழ்கிப் போனேன் நான். ரோஜர் ஆக்ராய்டு வீட்டு வேலைக்காரி நல்ல நெட்டையான அழகு மிகுந்தவளே; ஆயினும் தோற்றத்தில் ஈர்ப்பை விட பார்ப்பவர் களைத் தவிர்ப்பது தான் பிரதானமாக இருக்கும். உறுதி கொண்ட கண்கள் உண்டு அவளுக்கு. இறுக்கமாய் மூடியேயிருக்கும் உதடுகள். இவளுக்கு அடியில் வேலை பார்க்கும் ஒருத்தியாய் மட்டும் நானிருந்தால் இவள் வருகிறாள் என்று கேள்விப்பட்டவுடனேயே அடித்துப் பிடித்துக் கொண்டு ஓடி ஒளிந்து விடுவேன் என்று தான் சொல்வேன்.

''குட் மார்னிங் டாக்டர் ஷெப்பர்ட்'' என்றாள் மிஸ் ரஸ்ஸெல். ''என் முட்டிக்கு என்ன ஆச்சுனு ஒரு பார்வை பார்த்தீங்கன்னா நான் உங்களுக்கு அவ்வளவு கடமைப்பட்டவளா இருப்பேன்.''

முட்டிக்கு என்ன ஆயிற்று என்று பார்த்தேன். வலி இருப்பது போல மிஸ் ரஸ்ஸெல் பண்ணியவை நம்பத்தகுந்ததாக இல்லாததால், இது

போன்ற ஊரோடு ஒத்து வராத ஜென்மங்கள் தாமாய் கதைகட்டிக் கொண்டு வந்து வம்பு தேட இப்படி செய்திருக்கலாம் என்றே என்னை சந்தேகப்பட வைத்தது. திருமதி ஃபெர்ரர்ஸின் மரணம் பற்றிய பேச்சில் என்னைத் திணித்துப் பேசவே இப்படியொரு நோவினைக் கண்டுபிடித்துக் கொண்டு இவள் வந்திருப்பதாய் ஒரு கணம் என் மூளைக்குள் வெட்டியது. ஆனால் உடனடியாகவே என் கணிப்பு தப்பு என்பதை உணர்ந்தேன். அந்த மரணம் குறித்து மிகக் கம்மியாய் தான் இவள் பேசினாள். அதிகமாய் முன்னேறவில்லை. இருந்தாலும் வக்கணையாய் உட்கார்ந்து வம்படிக்கத் தயார் என்பது போலத் தான் இருந்தாள்.

''ஓ... இந்த தைல பாட்டில் தந்ததுக்கு ரொம்ப தேங்க்ஸ், டாக்டர்'' என்றாள் இறுதியாய். ''இருந்தாலும், இதனால அதிகம் நிவாரணம் கிடைச்சுடும்னு எனக்குத் தோணலே.''

எனக்கும் தைலம் அப்படியொன்றும் பிரமாத நிவாரணம் தந்து விடும் என்று நம்பிக்கையில்லை தான். ஆனாலும் தொழில் ரீதியாய் அவள் சொன்னதை மறுக்கத்தான் செய்தேன். அப்படியொன்றும் இது பாதக விளைவுகளை உண்டுபண்ணப் போவதில்லை... மேலும், ஒருத்தர், அவருடைய தொழில்ரீதியான உபகரணங்களைச் சார்ந்து தானே இருக்க வேண்டியுள்ளது.

நான் அடுக்கி வைத்திருந்த பாட்டில்களின் மீது நம்பிக்கையற்றுப் பார்வையை மேய விட்ட மிஸ் ரஸ்ஸெல் ''எனக்கு இந்த மருந்து டானிக்குகளிலெல்லாம் நம்பிக்கையே கிடையாது'' என்றாள். ''ட்ரக்குகள் அதிகம் பின்விளைவுகளைத் தருது. கோகைன், காபி போன்ற பழக்கங்களை எடுத்துக்குங்க.

''அதெல்லாம் —''

''— உயர்தட்டு மக்கள்கிட்டே தவிர்க்க முடியாதவை.''

எனக்கு மேல்தட்டு மக்கள் பற்றித் தெரிந்திருக்கும் சமாச்சாரங்களை விடவும் மிஸ் ரஸ்ஸெலுக்கு ஏகமாய் விஷயங்கள் தெரியும் என்பதில் நான் நிச்சயமாயிருந்தேன். இந்த என் கருத்து குறித்து விவாதிக்க நான் முனையவில்லை.

''எனக்கு ஒரு விஷயம் பற்றி மட்டும் சொல்லுங்க டாக்டர்'' என்றாள் இவள். ''நீங்க உண்மையிலேயே ட்ரக் எடுத்துக்கிறதுல மீட்க

முடியாத அளவுக்கு அடிமையா இருக்கீங்கனு வெச்சுக்குவோம்... இதுக்கு ஏதாவது தீர்வு இருக்கா?''

இப்படிப்பட்ட கேள்விக்கு எந்த மருத்துவராலும் வெறுங்கையால் பதில் தர முடியாது. இது பற்றி ஒரு சிறு விரிவுரை தந்தேன் நான். அதை இவள் முழு கவனத்துடன் கேட்டுக் கொண்டாள். இன்னும் கூட எனக்கு இவள் மிஸஸ் ஃபெர்ரர்ஸ் பற்றிய விஷயத்தைக் கறக்கவே காத்திருப்பதாய் பட்டது.

''இப்போ, ஓர் உதாரணத்துக்கு, வெரோனலை நாம எடுத்துப் போமே —'' என நான் முன்னேறினேன்.

ஆனால், புரிந்துக் கொள்ள முடியாதவளாய், வெரோனலில் இவள் ஈடுபாடே பொதிக்கவில்லை. மாறாக, பேச்சின் போக்கையே திசை திருப்பினாள். உட்கொண்டதைக் கண்டுபிடிக்க முடியா வண்ணம் காற்றோடு காற்றாய் கரைந்து விடவல்ல விஷங்களும் உண்மை யிலேயே இருக்கின்றனவா என்று என்னைக் கேட்டாள்.

''ஆஹ்...'' என்றேன் நான். ''துப்பறியும் நாவல்கள் நெறய படிக் கிறீங்களோ?''

படிப்பதுண்டு என ஒப்புக்கொண்டாள்.

''துப்பறியும் கதைகளின் நாடித்துடிப்பாய் போகும் அந்த விஷம்... என்று துவங்கிய நான், ''எங்காவது தென் அமெரிக்கா போன்ற பகுதி யிலிருக்கும் யாரும் கேள்விப்பட்டிராத ஒரு காட்டுவாசிப் பிரதேசத்தி லிருந்து வந்திருக்கணும். அந்தக் காட்டுவாசிங்க அம்பின் நுனியில தடவி வேட்டையாடும் ஒரு கொடிய விஷமா அது இருக்கணும். மரணம் – நொடிப்பொழுதுல. அது என்னனு விளங்காம போலீஸ் தலையப் பிச்சிக்கணும். இப்படிப்பட்ட ஒண்ணைத் தான் நீ கேட்கிறியா?''

''யெஸ். நெஜமாவே அப்படியெல்லாம் இருக்கா?''

மறுப்பாய் தலையசைத்தேன் நான். ''அப்படியெல்லாம் ஏதும் இருக்கறதா எனக்குப் படலே. அஃப்கொர்ஸ், குராரே அப்படினு ஒண்ணுயிருக்கு.''

குராரே பற்றி நிறைய எடுத்துச் சொன்னேன் நான். ஆனால் இவள் இதிலும் மீண்டும் ஈடுபாட்டினை இழந்து விட்டதாய் பட்டது. அப்படிப்பட்ட ஏதாவது ஒன்று என் அலமாரியில் இருக்கிறதா என்றாள்.

கிடையாது என்ற பதிலால் அவளுடைய மதிப்பீட்டில் நான் சற்று இறங்கி விட்டேன் என்று தோன்றியது.

கிளம்ப வேண்டிய நேரம் வந்து விட்டதாய் இவள் சொன்னபோது லஞ்சுக்கான மணியடித்தது.

துப்பறியும் நாவல்களிலெல்லாம் ஈடுபாடு மிகக் கொண்டவளாய் நான் ரஸ்ஸெல்லை நினைத்திருக்கும் வாய்ப்புகளே இல்லை. இந்த நினைப்போடே சாப்பிடக் கிளம்பினேன்.

அத்தியாயம் 3

பூசணிக்காய் வளர்த்தவன்

ஃபெர்ன்லியில் நான் டின்னர் எடுத்துக் கொள்ள வேண்டியிருப்பதைக் கரோலினிடம் சொன்னேன். ஒரு மறுப்பும் அவள் தெரிவிக்கவில்லை – என் எதிர்பார்ப்புக்கு எதிராக!

''எக்ஸலெண்ட்'' என்றாள் அவள். ''அதைப் பத்தின எல்லா விவரங்களையும் நீ கேள்விப்படுவே பாரு. அது சரி, இந்த ரால்ஃப் கிட்டே என்ன கோளாறு?''

''ரால்ஃப் கிட்டேயா?'' என ஆச்சரியப்பட்டுக் கேட்டேன். ''அவன் நல்லாத்தானே இருக்கான்.''

''அப்ப ஃபெர்ன்லி பார்க்ல தங்க வேண்டியது தானே? அங்கே தங்காம எதுக்காக கிராமத்து ஆண்கள் லாட்ஜில தங்கணுமாம்?''

விடுதியிலா ரால்ஃப் தங்கியிருக்கிறான் என்று நிரூபித்துக் கொள்ள இவளை நான் மறுமுறை கேட்கவேயில்லை. ஒரு சமாச்சாரத்தைக் கரோலின் சொல்லியிருக்கிறாளென்றால், எனக்கு அதுவே எதேஷ்டமானது.

''பய லண்டன்ல இருக்கானுல்லே ஆக்ராய்டு என்கிட்டே சொன்னார்'' என்றேன் நான். இவளிடம் எந்தத் தகவலையும் பகிர்ந்துக் கொள்வதில்லை எனும் என்னுடைய விலைமதிப்பற்ற சட்டதிட்டத்திலிருந்து, திடுமென விளைந்திருந்த கிளர்ச்சியால், ஒரு கணம் நான் வழுவி விட்டேன்.

''ஓ!'' என்றாள் கரோலின். நான் சொன்னத் தகவலின் பேரில் இவள் தன்னுடைய மூளையைத் துரிதமாய் இயக்கிக் கொண்டிருப்பதை,

இவளுடைய மூக்கு நுனி சுண்டி விட்டாற்போல துடிதுடிப்பதிலிருந்து என்னால் காண முடிந்தது.

''நேத்துக் காலைல தான் லாட்ஜுல வந்து எறங்கினான் அவன்'' – சொன்னாள் அவள். ''இன்னும் அங்கேயே தானிருக்கான். நேத்து ராத்திரி ஒரு பொண்ணோட வெளியே போயிருக்கான்.''

இது எனக்கு எள்ளளவும் வியப்புண்டாக்கவில்லை. ரால்ஃப், அவனது வாழ்நாளில் ஏறத்தாழ எல்லா இரவுகளிலும், ஏதாவது ஒரு பெண்ணுடன் வெளியிலேயே தான் தங்கியிருக்கிறான். ஆனால் உல்லாசம் வெகுவாய் காணப்படும் டவுனை விட்டுவிட்டு இங்கு கிராமமான கிங்ஸ் அப்பாட்டை அவன் ஏன் தெரிந்தெடுத்திருக்க வேண்டும் என்பதில் எனக்கு ஆச்சரியம் உண்டானது.

''பார்ல வேலைப் பண்ற யாராவது ஒருத்தியா?'' – கேட்டேன் நான்.

''கிடையாது – இது தான் விஷயமே. அவளை சந்திக்கத்தான் அவன் கிளம்பி வெளியே போயிருக்கான். அவ யாரென்பது தான் எனக்குத் தெரியலே.''

(இப்படியொரு தோல்வியை ஒப்புக் கொள்வது கரோலினுக்கு மிகக் கசப்பாயிருந்திருக்கும்.)

''ஆனா என்னால ஊகிக்க முடியும்'' – சலிப்பென்பதேயறியாத என் தங்கை தொடர்ந்தாள்.

பொறுமையாய் காத்திருந்தேன்.

''அவன் உறவுக்காரப் பொண்ணு.''

''ஃப்ளோரா ஆக்ராய்டு?'' – ஆச்சரியத்தால் எக்காளமாய் கேட்டேன்.

இந்த ஃப்ளோரா ஆக்ராய்டுக்கும் ரால்ஃபுக்குமிடையே எந்த விதமான உறவுமுறையும் கிடையாது. ஆனால், ஆக்ராய்டின் உண்மையான சொந்தப் பிள்ளையாகவே இவன் பார்க்கப்படுவதால், இவ்விரு இளைஞர்களும் உறவுக்காரர்கள் என்றே எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டது.

என் கேள்விக்கு பதிலாய், ''ஃப்ளோரா ஆக்ராய்டு'' என்று சம்மதம் வைத்தாள் என் சகோதரி.

''சரி... அப்படி அவளைப் பார்த்துத்தான் ஆகணும்னா நேரா இவன் ஃபெர்ன்லி பார்க்குக்கே போக வேண்டியதுதானே?''

''ரகசிய நிச்சயம்'' என்று அடக்கமுடியாத கொண்டாட்டத்தோடு

சொன்னாள் இவள். ''இதை அந்த வயசான ஆக்ராய்டு ஏத்துக்க மாட்டான்... இதுங்க இப்படி தனியா வெளியேதான் சந்திச்சாகணும்.

கரோலினின் தியரியில் ரொம்பவே அதிகமான ஓட்டைகளை நான் பார்த்தேன். ஆனால், அதையெல்லாம் அவளுக்கு சுட்டிக்காட்டு வதிலிருந்து நான் பின்தங்கி விட்டேன். எங்கள் பக்கத்து வீட்டுக்கு வந்திருக்கும் புது மனிதனைப் பற்றிய குறிப்பு ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இதிலிருந்து தப்பிக்கச் செய்தது.

லார்ச்சஸ் எனும் குடும்பத்தைச் சேர்ந்தது, அடுத்த வீடு. அந்த வீடு, ஓர் அந்நியனால் சமீபத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. கரோலினை எரிச்சலின் உச்சத்துக்கே கொண்டு செல்லும் விதமாய், அவர் ஒரு அயல்நாட்டினன் என்பதைத் தவிர, அவரைப் பற்றிய எந்தத் தகவலையும் இவளால் பெயர்க்க முடியாமல் ஆகியுள்ளது. இவளுடைய துப்பறியும் கூட்டமும் இதில் பரிதாபமாய் தோற்றுள்ளது. ஏனையவர்களைப் போலவே பால், காய்கறிகள், இவற்றோடு இறைச்சியும் வாங்கிக் கொள்கிறார் அவர்... ஆனால் இவற்றை அவருக்கு சப்ளை பண்ணும் எந்தவொரு வியாபாரியாலும் அவர் குறித்த எவ்விதமான தகவலையும் சேகரிக்க இயலவில்லை. அவரது பெயர், வெளிப்படையாய், *மிஸ்டர் பொர்ராட்* என்று அறியப் பட்டுள்ளது – இப்படியொரு பெயர் இருப்பது சாத்தியமேயில்லை என அறிவிப்பது போன்ற நிஜத்தன்மையற்ற ஒரு பெயர். அவரைப் பற்றி அனைவருக்கும் தெரிந்துள்ள ஒரே பொது விஷயம் இது தான்: அவர் பூசணிப்பழங்களை வளர்க்கிறார்.

ஆனால், நிச்சயமாய் இப்படிப்பட்ட ஒரு தகவலைத் துரத்திக் கொண்டு கரோலின் அலையவில்லை. இவளுக்கு தெரிய வேண்டிய தெல்லாம் – அவர் எங்கிருந்து வருகிறார்? அவர் என்ன செய்கிறார்? அவருக்குக் கலியாணம் முடிந்து விட்டதா? அவர் மனைவி எப்படி யிருந்தாள் அல்லது எப்படியிருப்பாள்? குழந்தைகள்? அவருடைய அம்மாவின் பூர்வீகமெல்லாம் என்ன? இன்னும் பலப்பல. கரோலினை அப்படியே உரித்து வைத்துள்ள யாரோ ஒருத்தர் தான் இந்த பாஸ்-போர்ட் கேள்விகளை வடிவமைத்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்!

''மை டியர் கரோலின்'' என அழைத்தேன் நான். ''அந்த ஆள் என்ன

வேலைல இருந்தான் என்பதுல கடுகத்தனை சந்தேகங்கிடையாது. நாவிதனா இருந்திருக்கணும் முடி திருத்துபவன். அவனோட மீசையைத் தான் பாரேன்.''

கரோலின் இணங்கவில்லை. முடி திருத்துபவனாயிருந்தால் அவனுக்கு அலைஅலையான கேசம் தான் இருக்கும் என்றாள் - குச்சிக் குச்சியாக அல்ல என்றும் முடித்தாள். ''அப்படித்தான் எல்லா பார்பருங்களும் இருக்கானுங்க.''

நீளநீளக் குச்சி முடி கொண்ட பற்பல முடி திருத்துபவர்களை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும்... அவர்களையெல்லாம் சாட்சிக்கு அழைத்துப் பார்த்தேன்; வழிக்குவர மறுத்தே விட்டாள் கரோலின்.

''அந்தாளை என்னால எதுலயுமே சேர்க்க முடியலே'' – பாதிக்கப்பட்டவளாய் சொன்னாள் இவள். ''அன்னிக்கு, தோட்ட சாமான்கள் சிலதை அவர்கிட்டேயிருந்து கடன் வாங்கினேன்... அத்தனை சாந்தமா தந்தார். ஆனா என்னால அப்பவும் அவர் கிட்டேயிருந்து எதையும் பிய்க்க முடியலே. வெளிப்படையா அவர் பிரெஞ்சு நாட்டவரானு பளீர்னு கேட்டும் பார்த்தேன் – அப்படி யெல்லாம் எதுவும் கிடையாதுனார். ஆனா என்ன மாய மந்திரமோ... இதுக்கு மேல என்னால வேற எதையும் கேட்க முடியலே.''

எங்களுடைய மர்மமான பக்கத்து வீட்டுக்காரன் மீது எனக்குப் புதுப்பிக்கப்பட்ட ஈடுபாடு உருவாவதை உணர்ந்தேன். கரோலின் வாயினையும் அடைத்து அவளை வெறும் காலிப்பெட்டியாக ஒருத்தனால் திருப்பி அனுப்ப முடிகிறதென்றால், அவன் நிச்சயம் ஒரு தனிப்பட்ட பிரத்யேகமானவனாய் தானிருக்க வேண்டும்!

''அவர்கிட்டே... என்று தொடர்ந்ததும் இவள் தான். ''புதுசா அறிமுகமாயிருக்கிற வாக்யூம் க்ளீனர் இருக்குனு நினைக்கிறேன்...

ஏதோ ஆழ்ந்த சிந்தனைக்குள் விழுந்து விட்டவளாகவும் அதன் தாக்கத்தினால் தொடர்ந்து கதிர்வீச்சாய் கேள்விகள் வந்து விழப் போகின்றன என்பதையும் நான் கரோலினுடைய திண்டாடும் விழிகளிலிருந்து படித்து விட்டேன். இந்த இடைவெளி தான் வாய்ப்பு என்று அறிந்த நான், தோட்டத்துக்குள் தப்பித்து ஓடி விட்டேன். எனக்குத் தோட்டம் என்றால் அபிலாஷை ஜாஸ்தி. அங்குமிங்கும்

கிளை பரப்பியிருந்த செடிகளின் கிளைகளை நான் ஒடித்தெறிந்து நேர்த்தி பண்ண இறங்கியபோது, அருகிலிருந்து எச்சரித்து ஒலித்த ஒரு குரலும், என் காதருகே பாய்ந்த ஒரு கனமான பொருளின் 'உஸ்'ஸென்ற விசில் சப்தமும், சேற்றிலிருந்த பிடுங்கப்பட்ட ஒன்று வெறுப்பூட்டும் ஓசையெழுப்பி 'சொதக்'கென்று விழும் ஒலியும், கலவையாய் கேட்டன. விழுந்த அது – *பூசணி!*

நிமிர்ந்து கடுங்கோபத்துடன் பார்த்தேன். சுவருக்கு மேல், என் இடப்புறத்தில், அங்கொரு முகம் தோன்றியது. முட்டை வடிவ முகம் – கறுப்பு முடியால் பாதி நிரப்பப்பட்டிருந்த தலை – இரு புறங்களிலும் கூரான காட்டு மீசைகள் – மேலும், கண்காணித்துக் கொண்டிருக்கும் இரு சக்திமிகு கண்கள். இது, எங்களுடைய எவ்வித அடையாளமும் இதுவரை தெரியாத மர்ம பக்கத்து வீட்டுக்காரர் - மிஸ்டர் பொர்ராட்.

என்னைக் கண்ட நொடியில் மளமளவென மன்னிப்புக் கேட்கும் அருவியாய் மடைதிறந்துப் போனார் அவர்.

''ஆயிரமாயிரம் மன்னிப்புகளை உங்ககிட்டே கேட்டுக்கிட்டு நிக்கறேன், டியர் ஸார். ஸாரி, ஸாரி. கொஞ்சநாளா நான் பூசணி பயிரிட்டுக்கிட்டு வரேன். இன்னிக்குக் காலையில இந்தப் பூசணிங் களால எனக்கு நானே அப்படி கடுங்கோபத்துக்குள்ளாகிட்டேன். அதுங்களா தாராளமா வளரட்டும்னு விட்டுடறேன், தெரியுமா! பெருசா எனக்குக் காய் வேணும் – இதுதான் என் ஒரே எதிர்பார்ப்பு. சுவத்துல எல்லாம் கூட தூக்கிப் போட்டுப் படர விடறேன். இதுங்களை சுத்தப்படுத்தும்போது இப்படி நேர்ந்துடுச்சு. வெட்கப்படறேன் ஸார். சாஷ்டாங்கமா விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கறேன்.''

அப்பழுக்கற்ற இப்படிப்பட்ட மன்னிப்புகளுக்கு முன்னால் என் கோபம் இளகி உருகும்படி ஆகிப்போனது. சொல்லப்போனால் அழுகிய இந்தத் தாவரப்பாகம் ஒன்றும் என் மீது விழுந்து விடவில்லை. கூடவே, தேவையற்ற தாவரத்தைத் தூக்கி அடுத்த வீட்டுக்குள் எறிவது எங்களுடைய புது நண்பரின் பொழுதுபோக்கு கிடையாது என்ற எண்ணமும் இப்போது என்னுள் விளைந்தது. அப்படியொரு பழக்கம் இருந்தா, ஓஹ்... எப்படி இவரை பக்கத்து வீட்டுக்காரராய் வைத்து சமாளிப்பது?!

விளங்கிக் கொள்ள முடியாத இந்த வித்தியாசக் குள்ளர், என்

நினைவுகளைப் படித்து விட்டார் என்று தோன்றியது. ''ஓ, நோ'' என்று ஆச்சரியக் கதறலிட்டார். ''வீணா உங்களுக்குள்ளே குழம்பிக்காதீங்க. இப்படி எறிவதெல்லாம் எனக்கு தினசரி வழக்கம் கிடையாது'' என்றவர், சற்று ஆழமான உளவியலைப் பேசுவது போல பின்வருமாறு சொன்னார்: ''ஓர் இலக்கை வெச்சுக்கிட்டு அதையடைய ஒரு மனுஷன் ஓய்வொழிச்சல் இல்லாம உழைக்கலாம்; பரபரணு ஓடியோடி உழைக்கலாம். எப்படா இந்த வேலையெல்லாம் ஒழியும்னு நினைக்குமளவுக்குக் கடுமையா உழைக்கலாம்; ஆனா, இதெல்லாம் அடைந்து முடிந்த பிறகு தான் அவனுக்கே உறைக்கும்... அவன் தாளா ஆசை கொண்டு காத்திருப்பது அவனுடைய அந்தப் பழைய பரபரப்பான நாட்களுக்குனு! எப்ப ஒழியும்னு அவன் வெறுத்தானோ அதே நாட்களுக்குனு! என்ன விளங்குதா?''

''யெஸ்'' என்றேன் நான் மெதுவாய். ''இதேபோலதான் எல்லாருக்கும் நடக்குதோனு நினைக்கிறேன். என்னையே ஓர் உதாரணமா எடுத்துக்கலாம். ஒரு வருஷத்துக்கு முன்னாடி *மூதாதையர் வழியில எனக்கு நிறைய பணம் வந்தது.* எதிர்பாராதது. என் கனவை நனவாக்கிக்க எனக்குப் போதுமானது அது. எனக்குப் பிரயாணம்னா கொள்ளை ஆசை – உலகத்தின் பல பாகங்களைப் பார்க்க. அனுபவிக்க. வெல், நான் சொன்ன அதிர்ஷ்டம் எனக்கு அடிச்சது, நான் இப்ப சொன்ன மாதிரி – ஒரு வருஷத்துக்கு முன்னாடி. ஆனா – *நான் இன்னும் இங்கேயே!*''

என் குள்ள பக்கத்து வீட்டுக்காரர் ஒப்புதலாய் தலையசைத்தார்.

''ஒன்றை அடைய நினைக்கிறோம். அதுவும் கிடைக்குது. அப்போ ஒரு வெற்றிடம் உருவாயிடுது. பழையபடி துடிக்க ஆரம்பிச்சுடறோம். இன்னொரு தேடலுக்காக! சுழலும் சக்கரம் நிற்காமல்!'' விளக்கிவிட்டு, புது சமாச்சாரத்துக்குகு தாவினார்: ''ஆங்... குறிச்சுக்கோங்க தோழரே. என் தொழில் ஒரு விறுவிறுப்பான தொழில். உலகத்துல இருக்கும் தொழில்களிலேயே அதிக இண்ட்ரஸ்டிங்கான தொழில் இது தான்.''

''ஓஹோ?'' என்றேன் நான் ஊக்குவிக்கும் விதமாய். அந்த கணத்தில் கரோலினின் குணாதிசயம் என் மீது ஸ்ட்ராங்காகப் படிந்து இயக்கியது.

''மனித நடவடிக்கைகளை – உளவியலைப் படிப்பது, ஸார்!''

மறுப்பின்றி இவர் ஒரு ஓய்வு பெற்ற முடி திருத்துபவர் தான். மனித உளவியலின் ரகசியங்களை முடி திருத்துபவனைத் தவிர வேறு யார் ஆழமாய் அறிய முடியும்?

''எனக்கொரு ஃப்ரண்ட் இருந்தான் – நண்பன்... என்னை விட்டு வருஷக்கணக்காய் பிரியவே பிரியாதவன். அப்பப்போ சித்த சுவாதீனம் போயிட்டவனைப் போல நம்மை பயமுறுத்துவான் - இருந்தபோதிலும் எனக்கு மிக ப்ரீதியானவன் அவன். அவனுடைய அப்படிப்பட்ட முட்டாள்தனங்களைப் பிரிந்திருப்பது கூட என்னால இயலாத ஒன்றாய் இருக்கு என்பதைப் புரிஞ்சுக்குங்க. அவனோட வெகுளித்தன்மை... பொய் தெரியாத உண்மையான தோற்றம்... அவனுக்கு உயர்ந்த அன்பளிப்புகள் தந்து மகிழ்வித்து, அப்படி அவன் மகிழ்வதைப் பார்த்து பூரிப்பது... வார்த்தைகளால் இட்டு நிரப்பி விளக்க முடியாத அளவுக்கு இவற்றையெல்லாம் நான் ரொம்ப மிஸ் பண்றேன், தெரியுமா?''

''காலமாயிட்டானா?'' – இரக்கத்தோடு கேட்டேன்.

''அப்படியில்லே. வளமா வாழ்ந்துக்கிட்டுத் தானிருக்கான் – ஆனா உலகின் மறுபக்கத்துல. அர்ஜெண்டைன்ல இப்ப இருக்கான் அவன்.''

''அர்ஜெண்டைன்லியா?'' – பொறாமையோடு கேட்டேன் நான்.

தென் அமெரிக்காவுக்குப் போயே ஆக வேண்டும் என்றோர் எண்ணம் அணையாமல் எப்போதுமே என்னுள் இருப்பதுண்டு. பெருமூச்சு விட்டு நிமிர்ந்தேன். மிஸ்டர் பொர்ராட் என்னை பரிதாபமாய் பார்த்த வண்ணமிருந்தார். எல்லோரையும் உடனே படித்துப் புரிந்துக் கொண்டு விடும் குள்ளனாய் பட்டார் அவர்.

''நீங்க அங்கே அடிக்கடி போவீங்களோ?'' – கேட்டார் அவர்.

ஒரு பெருமூச்சோடு மறுப்பாய் தலையசைத்தேன் நான். ''நான் நெனச்சா போயிருக்கலாம்'' என்றேன். ''ஒரு வருஷத்துக்கு முன்னாடி. நான் ஒரு முட்டாள். ம்ம்... முட்டாளை விட மோசமான, பேராசையானவன்.''

''விளங்குது'' என்ற அவர், ''அதிருக்கட்டும்... உங்ககிட்டே நான் ஒரு கேள்வி கேட்க விரும்பறேன்'' என்றபடி கேட்டார்: ''இந்தக் குக்கிராமத்துல உங்களுக்கு சந்தேகமற அத்தனை பேரை பற்றியும் நல்லா தெரிஞ்சிருக்கணும். கன்னங்கறு கேசத்தோடும் அதே போன்ற

கருகரு கண்களோடும் இருக்கும் அந்த அற்புத அழகன் யார்? தலையைப் பின்னுக்குப் போட்டுக் கொண்டு மேட்டுமையாகவும் அதே சமயம் உதட்டுல எப்பவுமே ஒரு புன்னகையை சுலபமாகவும் சுமந்து நடக்கும் அந்த ஆண்மகன் - யார்?''

இந்த விவரிப்பு எவ்வித சந்தேகமுமின்றி எனக்கு விடையைத் தந்தது. ''அது கேப்டன் ரால்ஃப் பேடனா இருக்கணும்'' என்றேன் மெதுவாய்.

''அவனை நான் இங்கே முன்னமேயே பார்த்திருக்கும் வாய்ப்பு இல்லையா?''

'நோ. அவன் கொஞ்ச நாட்களாகவே இங்கே இல்லே. அவன் ஃபெர்ன்லி பார்க்கின் ஆக்ராய்டுடைய மகன் – சரியா சொல்லணும்னா வளர்ப்பு மகன்.''

என் பக்கத்து வீட்டுக்காரர் திடீரென்று பொறுமையிழந்து விட்ட வரைப் போன்ற துடிதுடிப்பினைக் காட்டினார்.

''ஓ... நானே இதை ஊகிச்சிருக்கணும். மிஸ்டர் ஆக்ராய்டு அவனைப் பற்றி பலமுறை என்னிடம் பேசியிருக்காரே.''

''உங்களுக்கு ஆக்ராய்டைத் தெரியுமா?'' – ஆச்சரியத்தை மறைக்கயியலாமல் கேட்டேன்.

''மிஸ்டர் ஆக்ராய்டுக்கு என்னை லண்டன்ல இருந்தபோது தெரியும் நான் அங்கே பணியில இருந்தபோது. என் பணி பற்றிய எதையுமே இங்கே ஒருத்தருக்கும் சொல்லக் கூடாதுனு அவருக்குக் கட்டளை யிட்டிருக்கேன் நான்.''

''ஐ, ஸீ'' என்றேன் நான், விசித்திரமாய்.

சவடால் அடிக்கிற ஆடம்பரப் பேச்சினைத் தனது பகட்டான புன்முறுவலோடு தொடர்ந்த வண்ணமிருந்தார் அந்தக் குள்ளர்: ''பிறர் அறிந்துக் கொள்ளா வண்ணம் ஒருத்தர் மாறுவேடத்தில் இருக்கப் பிரியப்படறார். தேவையற்ற புகழும் பிரபல்யமும் எனக்குப் பிடிக்காதவை. என் பேரை மாத்திப் போட்டு இந்த கிராமத்துல நீங்கள்லாம் பிசைவதைக் கூட திருத்த நான் விரும்பலே.

''அப்படியா'' என்றேன் நான், இதற்கு என்ன மாற்று வார்த்தையைப் பேசுவது என்று தெரியாமல்.

''கேப்டன் ரால்ஃப் பேடன்'' என முணுமுணுத்தார் மிஸ்டர்

பொர்ராட். ''இவன், ஆக்ராய்டின் உறவான அழகு ஃப்ளோராவுடன் நிச்சயமாகியிருக்கான்.''

''இதை யார் உங்ககிட்டே சொன்னது?'' என்று மிகவும் அதிசயப்பட்டதால் உடனடியாய் கேட்டேன் நான்.

''மிஸ்டர் ஆக்ராய்டு. ஒரு வாரத்துக்கு முன்னாடி. இது பற்றி அவருக்கு அத்தனை சந்தோஷம் – இப்படி ஒண்ணு நடக்கணும்னு அவர் ரொம்ப நாளா ஏங்கிக்கிட்டிருந்தது போல உணர்ந்தேன் நான். இதை எப்படியாவது மறுக்காம ஏத்துக்கணும்னு இளைய பயலை அவர் பலவந்தப் படுத்தியிருப்பார்னு நம்பறேன். இது தப்பு – இப்படி பண்ணவே கூடாது. ஓர் இளைய வாலிப அழகன், அவனுக்குப் பிடிச்சா மாதிரி தான் கலியாண வாழ்க்கையில செட்டில் ஆகணுமே தவிர, எதுவோ எதிர்பார்த்திருக்கும் ஒரு வளர்ப்புத் தந்தையைத் திருப்தி படுத்த அல்ல.''

என் ஊகங்கள் அத்தனையும் அப்படியே தலைகீழாய் கவிழ்ந்துக் கொட்டிப் போயின. ஒரு முடி திருத்துபவனைப் போய் தனது நம்பிக்கைக்கு உகந்தவனாய் எடுத்துக் கொண்டு அவனிடம் தனது உறவுக்காரப் பெண் மற்றும் வளர்ப்பு மகனின் கலியாணத்தைப் பற்றி ஆக்ராய்டு பேசியிருப்பார் என்பதை – என்னால் கற்பனைக் கூட பண்ணிப் பார்க்க முடியவில்லை. இதனால், இந்தப் பொர்ரெட், நிஜத்தில் ஒரு பார்பராய் இருக்க முடியாது என்ற கோணத்தில் நான் சிந்திக்க ஆரம்பித்தேன்.

இப்படியொரு குழப்பம் என்னுள் இருப்பதை அவரிடமிருந்து மறைத்து விட, என் மூளைக்குள் அப்போது வந்த முதல் விஷயத்தைப் பேசி விட்டேன்: ''ரால்ஃப் பேடனை இப்படி கவனிக்கும்படி உங்களை எது தூண்டிச்சு? அவனோட அற்புத தோற்றம்?''

''கிடையாது – அது மட்டும் கிடையாது – ஒரு இங்கிலீஷ்காரனையும் விட அதியற்புத சுந்தரனா தோன்றும் அது மட்டுமே கிடையாது – உங்க லேடி நாவலாசிரியைங்க வர்ணிக்கும் 'கிரேக்க கடவுள்' மாதிரியான தோற்றம் மட்டுமே கிடையாது. அந்த இளைஞனைப் பற்றி என்னவோ இருக்கு – நான் புரிஞ்சுக் கொள்ள முடியாத ஒன்று.''

என்மீது விவரிக்க முடியாத ஒரு பதிப்பினை உண்டுபண்ணும்படி அந்தக் கடைசி வாக்கியத்தை கிசுகிசுப்பாய் சொன்னார் அவர்.

அவருக்குள்ளேயே வெளிச்சமாகியுள்ள ஏதோவொரு தகவலை வைத்துக் கொண்டு, அந்தப் பயலை ஒட்டுமொத்தமாக வர்ணித்துக் கூறும் போக்கில் இருந்தது அந்தக் கடைசி வாக்கியம். என் சகோதரியின் குரல் வீட்டிலிருந்து வீச்சாய் வந்து என்மீது அப்போது விழுந்தபோது, எங்களிருவரின் சந்திப்பும், இத்தகைய விளக்கவொண்ணா பதிப்புடன் நின்று விட்டது.

நான் உள்ளே போனேன். கரோலின் தலையில் தொப்பி இன்னுமிருந்தது–ஆக, அவள் அப்போது தான் கிராமத்திலிருந்து வந்து நுழைந்திருக்கிறாள் என்பது விளங்கியது. எவ்வித முகாந்திரமும் தராமல் துவங்கினாள் அவள்.

''நான் மிஸ்டர் ஆக்ராய்டை சந்திச்சேன்.''

''அப்படியா?''

''நான் தான் அவரைப் பிடிச்சு நிறுத்தினேன். ஆனா அவர் ஏதோ பெரிய அவசரத்துல இருப்பது மாதிரியும், உடனடியா போகணும் எனும் பரபரப்புல இருந்தது மாதிரியும் தோணிச்சு.''

இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்பதில் எனக்கு ஐயம் கிடையாது. இன்றைய முந்தைய பாகத்தில், மிஸ் கன்னட்டிடம் அவர் எப்படி உணர்ந்தாரோ அதே போலத்தான் மிஸ் கரோலினிடமும் அவர் உணர்ந்திருக்க வேண்டும் என்பதில் எனக்கு சந்தேகமே கிடையாது. சொல்லப்போனால் இவள் விஷயத்தில் இன்னும் வீரியமாய். மாட்டிக்கொண்டால் வெளியேறுவது அத்தனை கஷ்டமாகிப் போகும் –கரோலினிடம்.

''அப்பவே, அங்கேயே ரால்ஃப் பற்றி அவர்கிட்டே கேட்டேன். முழுக்க முழுக்க ஆச்சரியப்பட்டுப் போனார் அவர். அந்தப் பய இங்கே வந்து இறங்கியிருப்பது பற்றி அவருக்குத் துளி ஐடியா இல்லே. நான் ஏதோ தப்பான தகவலைச் சொல்வதாத்தான் அவர் நினைச்சார். நான்! தப்பான தகவல்!''

''கேலிக்கூத்து'' என்றேன் நான். ''உன்னைப் பற்றி இன்னும் அவர் ஆழமா தெரிஞ்சிருக்கணும்.

''பிறகு, ரால்ஃப்பும் ஃப்ளோராவும் நிச்சயமாகியிருக்கும் விஷயத்துக்குப் போனார் அவர்.''

பெருமையாய், ''அது எனக்கும் தானே தெரியும்'' என்றேன் நான்.

''யார் சொன்னது உனக்கு?''

''நம்ம புது பக்கத்து வீட்டுக்காரர்.''

ஓரிரு நொடிகள் எதுவும் பிடிபடாமல் கரோலின் அல்லாடுவது வெளிப்படையாகவே தெரிந்தது. ''அப்புறம், கிராமத்து ஆண்கள் லாட்ஜுல தான் அவன் தங்கியிருக்கிற விஷயத்தை நான் ஆக்ராய்டு கிட்டே சொன்னேன்.''

''கரோலின்...'' என்றழைத்த நான், ''யார்கிட்டே என்னத்தை சொல்வது என்ற விவஸ்தையேயில்லாம ஓலைப்பனையில தண்ணியக் கொட்டின மாதிரி இப்படி நீ லொடலொடனு சொல்லிக்கிட்டு அலைவது, உனக்கே நாளைக்கு பாதகமா ஆகிடும்னு நினைக்கவே மாட்டியா?'' என்றேன்.

''நான்-ஸென்ஸ்'' என்றாள் என் சகோதரி – என்னை. ''எல்லாருக்கும் எல்லா விஷயங்களும் தெரிஞ்சாகணும். அப்படி மற்றவர்களுக்கு விஷயங்களைப் பரப்புவதை நான் என் கடமையா செய்யறேன். மிஸ்டர் ஆக்ராய்டு என்கிட்டே ரொம்ப விசுவாசமா நடந்துக்கிட்டார் தெரியுமா?''

''ஓ'' என்றேன் நான், இந்த முன்னுரையினால் இன்னும் நிறைய வரக்காத்திருக்கின்றன என்ற சுத்தமான புரிதலோடு.

''அவர் நேரா லாட்ஜுக்குப் போனார்னு தான் நான் நினைக்கிறேன். ஆனாலும் அவனை அங்கே ஆக்ராய்டு பார்க்க முடிஞ்சிருக்காது.''

''பார்க்கலே?''

''இல்லேங்கறேன். ஏன்னா நான் அங்கேயிருந்து திரும்பும்போது மரக்காடுகள் வழியா வந்தேன்—''

''மரக்காட்டுக்கா போனே?'' – இடைமறித்தேன் நான்.

இதையெல்லாம் அப்படியே வழித்து எறிந்து விட்டு முன்னேறும் நெஞ்சுரம் பெற்றிருந்தாள் கரோலின்.

''இது ஓர் அற்புதமான நாள்'' என ஆச்சரியமாய் சொன்னாள். ''எனவே அதுக்குள்ளே போய் ஒரு ரவுண்ட் அடிச்சுட்டு வரலாம்னு முடிவு செஞ்சேன். பனிக்காலத்துக் குளிரை உள்ளடக்கிப் பச்சை வாசம் கமழும் காட்டின் உட்பகுதி இந்த இலையுதிர் காலத்துல அனுபவிக்க வேண்டிய ஒரு சொர்க்கம்.''

வருடத்தின் எந்தவொரு பருவகாலத்திலும் காட்டுக்குள் போய்

ஆனந்தப்படுவது என்றெல்லாம் துளியும் பிரியப்படாதவள் கரோலின். கால் பூரா களி மண் ஒட்டிக் கொள்ளும் பிரதேசம்... அல்லது தலையில் எதிர்பாராது ஏதாவது எச்சங்கள் விழுந்துக் கொண்டிருக்கும் கண்றாவி... இவை தான் அவளைப் பொறுத்தவரை காடு என்பது. நோ... மூக்கை நீட்டிக் கொண்டு ஓடும் கீரிப்பிள்ளை குணம் தான் அவளை அங்கே வரை இழுத்துப் போயுள்ளது. முழு கிராமத்தின் எந்தவொரு பிராணியும் பார்க்க முடியாதவாறு மனம் கவர்ந்தவளைத் தனியே தள்ளிக் கொண்டு போகவல்ல மரக்காடு அது – கிங்ஸ் அப்பாட் கிராமத்தின் அருகாமைக் காடு. ஃபெர்ன்லி பார்க்குக்கும் அருகே வரும்.

''ம்'' என்றேன் நான். ''தொடர்.''

''நான் சொன்னது மாதிரி, காட்டுக்குள் ஒரு சின்ன ரவுண்ட் அடிச்சுட்டுத் திரும்பிக்சிட்டிருந்தேன்... அப்பத்தான் சில குரல்கள் என் காதுல விழுந்தன.''

கரோலின் நிறுத்தினாள்.

''ம்?''

''ஒரு குரல் ரால்ஃப் பேடனுடையது. உடனடியா இது எனக்குத் தெரிஞ்சுப் போச்சு. அந்த இன்னொன்று, ஒரு பெண்ணுடையது. அவங்க என்னப் பேசறாங்க என்பதைக் கேட்பதெல்லாம் என் குறிக்கோளே கிடையாது —''

''உனக்கு அப்படியெல்லாம் குணம் கிடையாதே'' என்றேன் நான் வஞ்சப்புகழ்ச்சியாய் – ம்ம், இந்தக் கிண்டல் அவளிடம் எடுபடாமல் தோற்றே போனது.

''ஆனா, அவங்க பேசறது என் காதுல விழுவதைத் தடுக்க முடியாமலே போயிடுச்சு. அந்தப் பொண்ணு என்னவோ சொன்னா – அது என்ன என்பதை என்னாலப் பிடிக்க முடியாம ஆயிடுச்சு. இதுக்கு ரால்ஃப் பதில் தந்தான். பயங்கரக் கோவத்துல அவன் இருந்தா மாதிரி இருந்துது. ''த பாரு'' அப்படினான் அவன். ''ஒரு நயா பைசா இல்லாம என்னை அந்த கிழவன் அறுத்து விட்டுடுவான்னு உன் மண்டைக்கு ஏறவே இல்லையா? கடந்த சில வருஷங்களாவே என்னால அவனுக்குப் 'போதும் போதும்னு' ஆகிடுச்சு. இது அதுக்கு இன்னும் வலு சேர்க்கப்போகுது. கிழவன் மண்டையைப் போட்டான்னா நான்

மில்லியனரா மாறிடுவேன்டீ. ஒரே ராத்திரியில. செலவழிக்கிறதுல கஞ்சனா இருக்கிறதை வெச்சு அவன் பரம ஏழைனு எடை போட்டுடாதே... பண மெத்தையில தூங்கிக்கிட்டிருக்கான். எழுதியிருக்கிற உயிலை அவன் முழுசா மாத்தி எழுதிடற மாதிரி நடந்துக்க நான் விரும்பலே. கவனி.. விஷயத்தை என்கிட்டே விட்டுட்டு நீ கவலைப்படாம இரு.'' – இவை தான் அவனோட அச்சுஅசலான வார்த்தைகள். எனக்கு அட்சர சுத்தமா நினைவிருக்கு. என் துரதிர்ஷ்டம்... அப்பனு பார்த்தா நான் ஒரு காஞ்ச சுள்ளி மேல காலை வெக்கணும்? வெச்சேன். உடனே அவங்க குரலை மளமளனுத் தணிச்சுக்கிட்டாங்க. அப்புறம் அது கூட பத்தாதுனு நினைச்சாங்களோ என்னவோ – நகர்ந்துப் போயிட்டாங்க. நானும் பின்னோடேயே ஓட முடியாத இக்கட்டு – அதனால அந்தப் பொண்ணு யாருங்கறதை என்னால கவனிக்க முடியாமலே முடிஞ்சிடுச்சு.''

''இது உன்னைக் கேவலமா வெறுக்கடிச்சிருக்குமே'' என்றேன் நான். ''இப்படி அலைஞ்சதாலே, திரும்பும்போது உனக்கு மயக்கம் வர மாதிரி ஆகி, அதனால நீ அங்கே பக்கத்துலேயே இருந்த லாட்ஜுக்கு வந்த மயக்கத்துலேந்து விடுபட ஒரு பெக் பிராண்டிக்காக போய், அப்போ அங்கே பணியிலிருக்க வேண்டிய அந்த ரெண்டு 'பார்' பொம்பளைங்களும் டியூட்டியில இருக்கானு அலச முயற்சி செஞ்சிருக்கணும்னு நினைக்கிறேன்...''

துளி தயக்கமின்றி ''அது – இந்த ரெண்டு 'பார்' பொம்பளைங்கள்ல ஒருத்தி கிடையாது'' என்றாள் அவள். ''அது ஃப்ளோரா ஆக்ராய்டு தான் என்பதுல தொண்ணூறு சதம் நான் ஊர்ஜிதமா இருக்கேன். இருந்தாலும் – இருந்தாலும் –''

''இருந்தாலும் இப்படி நினைக்கிறது புத்திசாலித்தனமா படலே... யெஸ்'' என அங்கீகரித்தேன் நான்.

''அப்படி அது ஃப்ளோராவா இல்லாவிட்டால் வேற யாரா இருக்க முடியும்?''

சுற்றுவட்டாரத்தில் இயங்கும் வேலைக்காரப் பெண்களின் பெயர்களை வெகு துரிதமாக ஒரு பட்டியலிட்டு, அவர்களுக்கு இந்த விவகாரத்தில் உள்ள சாதக பாதக காரணங்களையும் விவரித்து முடித்தே விட்டாள் என் சகோதரி.

இடையே மூச்செடுத்துக் கொள்ள அவள் சற்றே ஆசுவாசமான போது, முக்கிய பேஷண்ட் ஒருவன் வந்து பாவம் காத்திருக்கிறான் என்றபடி நான் நழுவி விட்டேன்!

லாட்ஜுக்குப் போவது என முடிவு கட்டிக் கொண்டேன். இப்போது ரால்ஃப் பேடன் அங்கு திரும்பியிருப்பான்.

எனக்கு, ரால்ஃப் பேடனின் தாயாரை வெகு விமரிசையாய் தெரிந்த காரணத்தால் இவனுக்குள் இந்த உலகம் எதையெல்லாம் புதிராக பார்க்கின்றனவோ அதெல்லாம் ஏன் அப்படி என என்னால் விளங்கிக் கொள்ள முடியும்; இதனால் இங்கு கிங்ஸ் அப்பாட் குக்கிராமத்தில் இருக்கும் ஏனைய எவரையும் விட நன்றாகவே, ரால்ஃபை எனக்குத் தெரியும். பரம்பரைக் குணங்களின் தாக்கத்தின் ஓர் இரை இவன் எனலாம்... தப்பில்லை. இவனுடைய அம்மாவின் விட்டொழிய முடியாத கடும் குடிப்பழக்கத்தை இவன் அடியொற்றித் தொடரவில்லை... ஆயினும், இவனுக்குள் விலக்க முடியாத தொய்வும் அசதியும் நிரந்தரமாகிக் கிடந்தன. காலையில் உதயமான எனது புது ஃப்ரண்ட் வியந்தது போல, இவன் ஓர் அழகனே. கச்சிதமாய் உடற்கட்டு அமையப் பெற்று, ஆறடிக்கும் மேலான உயரத்துக்குள், ஒரு தடகள வீரனின் தோற்றப் பொலிவில், எப்போது வேண்டுமானாலும் ஈர்க்கும் காந்தச் சிரிப்பு உதடுகளிலிருந்து எப்போது வேண்டுமானாலும் கொட்டிவிடலாம் என்ற அமைப்பில் தகதகக்கும் கறுப்பு நிலா இவன். எவ்வித மெனக்கெடலும் இல்லாது வசீகரிக்க என்றே பிறந்துள்ள சில அபூர்வ அதிர்ஷ்ட ஜென்மங்களில் தலையாயவன் இவன். ஊதாரிதான்... பூமியில் எதன் மீதும் இவனுக்குப் பணிவென்பதே கிடையாது. இருந்தாலும் விரும்பத்தக்கவன். நட்பையும் மீறி இவனது ஒவ்வொரு நண்பனும் இவனுக்காக பக்தி செலுத்துமளவுக்கு அர்ப்பணிப்பு மிக்கவர்கள்.

இந்தப் பயலுக்கு என்னால் ஏதாவது காரியம் பண்ண முடியுமா? முடியுமென்றேபட்டது எனக்கு.

லாட்ஜில் மேற்கொண்ட விசாரிப்பில் இவன் அப்பொழுது தான் உள்ளே நுழைந்திருக்கிறான் என்பது தெரிய வந்தது. மாடியேறிப் போன நான் முன்னறிவிப்பு ஏதுமின்றி உள்ளே நுழைந்தேன்.

இது வரை நான் கேட்ட சேதிகளை வைத்துக் கொண்டு ரால்ஃபின்

மனோநிலை எப்படியிருக்கும் என ஊகித்திருந்த நான், ஒரு கணம், இவனால் எப்படி வரவேற்கப்படுவேன் என்ற சந்தேகம் கொண்டேன். தயங்கினேன். ஆனாலும் கிடைத்திருக்கும் வாய்ப்பினை நான் தவற விடுதல் கூடாது.

''ஆஹ், தோ பாருடா டாக்டர் ஷெப்பர்ட்! வாங்க, வாங்க, வாங்க, வாங்க.''

என்னை ஏற்றுக் கொள்ள முன்னால் வந்தான். கைகளை அகலமாய் நீட்டிக்கொண்டு, ரவிப்பிரகாசம் முகச்சிரிப்பில் ஒளிர.

என் புருவங்களை உயர்த்திய நான், ''எந்த இடத்துல நீ வந்து தங்கியிருக்கே?'' என்றேன்.

வெறுப்பான சிரிப்பினை பதிலாக்கினான் அவன். ''அது ஒரு பெரிய கதை டாக்டர். நடக்கிற எல்லாமே எனக்கு சாதகமா நடக்க மாட்டேங்குது, டாக்டர் ஷெப்பர்ட். கொஞ்சம் குடிக்கிறீங்களா, ஆங்?''

''தேங்க்ஸ்'' என்றேன் நான். ''குடு.''

போய் மணியடித்து விட்டு அவன் திரும்பி இருக்கைக்கு வந்தான்.

''குழப்ப சகதிக்கு நடுவுல மாட்டிக்கிட்டு முழி பிதுங்கிக் கிட்டிருக்கேன். சொல்லப்போனா அடுத்து என்ன செய்றதுனு கூட எனக்கு தெரியலே.''

கருணை பொதிந்து ''என்ன ப்ராப்ளம்?'' என்றேன்.

''எல்லாம் என் அப்பன் தான்.''

''அவர் என்ன பண்ணிட்டாரு உனக்கு?''

''ப்ராப்ளம், அவர் என்ன எனக்குப் பண்ணியிருக்கார் என்பதைப் பற்றி அல்ல. அது –அவர் எனக்கு என்னப் பண்ணிடுவாரோ என்பதைப் பற்றி.''

அடித்த மணிக்கு பதிலாய் ஒருத்தன் வந்து நின்றான். அவனிடம் குடிக்க சில விஷயாதிகளைச் சொன்னான். அவன் கேட்டுக்கொண்டு நகர்ந்ததும், தன்னையே சுமக்கயியலாது என்பதைப் போல அப்படியே கைவைத்த நாற்காலியில் புதைந்து, தனக்குத்தானே வெறுப்பாய் முணுமுணுத்தான். முகஞ்சுளித்திருந்தான்.

''அதென்ன – உண்மையாவே அத்தனை ஸீரியஸானதா?'' – நான் கேட்டேன்.

அவன் ஒப்புதலாய் தலையசைத்தான். ''நான் இந்த தடவை

விடப்போறதில்லே'' என்றான் அசூயையாய்.

அசாதாரணமாய் அவன் குரலின் பாவத்திலிருந்த கனம் அவன் உண்மையைத்தான் பேசிக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்த்திற்று. ஆழ்ந்து புதைந்துப் போகுமளவுக்கு சமாச்சாரம் அவனை ஆக்கியிருந்தது.

''சொல்லப்போனா'' என தொடர்ந்த அவன், ''எனக்கு முன்னாடி பாதை எப்படி விரிஞ்சு எந்தப் பக்கமா போய்க்கிட்டிருக்குனே எனக்குத் தெரியலே'' என்றான் குழப்பமாய். ''அது மட்டும் எனக்குப் புலப்பட்டுதுன்னா—''

''என்னால எனக்கு உதவ முடியும்னா—'' என சற்று கூச்சமாய் முன்வந்தேன்.

ஆனால் அவன் ஸ்திரமாய் மறுத்துத் தலையசைத்து விட்டான்.

''உங்க அன்புக்கு நன்றி டாக்டர். ஆனா, என்னால, உங்களை, இந்த சமாச்சாரத்துக்குள்ளே நுழைய விட முடியாது. நான் இதைத் தனியாத்தான் விளையாடி ஆகணும்.''

சில நிமிடங்கள் அமைதியாகியிருந்த அவன், பிறகு சற்றே அந்நியமான மற்றும் வித்தியாசமான குரலெடுத்து சொன்னான்: ''யெஸ் – *நான் இதைத் தனியாத்தான் விளையாடி ஆகணும்.*

அத்தியாயம் 4

ஃப்பெர்ன்லியில் இடம்பெற்ற டின்னர்

ஃபெர்ன்லி பார்க் இல்லத்தில் நான் வாசல் அழைப்புமணியை அடித்தபோது, மணி ஏழே காலைத் தாண்டி ஓரிரு நிமிடங்கள் கடந்திருந்தது. வருவோர் அழைத்தவுடன் திறக்கவே காத்திருந்தது போல உடனடியாய் பட்லர் பார்க்கரால் கதவு திறந்து விடப்பட்டது.

அருமையான ஓரிரவாக அன்றைய இரவு அமைந்திருந்ததால் காலாற நடந்து செல்வதையே நான் விரும்பி தேர்ந்தெடுத்திருந்தேன். பிரம்மாண்டமாயிருந்த முன்னறைக்குள் நான் நுழைந்து நின்றதும் என் மேல்கோட்டினைக் கழற்றுவதில் உதவினான் பட்லர். அதே சமயத்தில், ஆக்ராய்டின் காரியதரிசியும் பார்க்க மிக லட்சணமாக இருக்கும் இளைய அழகனுமான ரேமண்ட் என்ற பெயர் கொண்ட வாலிபன், கை நிறைய தாள்களுடன், ஆக்ராய்டின் படிக்குமறைக்குப் போக, முன்னறையைக் கடந்துக் கொண்டிருந்தான்.

''குட் ஈவினிங் டாக்டர். டின்னருக்கா? இல்லே, இது தொழில் ரீதியான சந்திப்பா?''

அங்கிருந்த ஓக் மர டேபிளின் மீது நான் கையோடு கொண்டு வந்திருந்த என்னுடைய அலுவலக கறுப்புப் பையினை வைத் திருந்தேன்... அதைப் பார்த்ததால் ரேமண்ட் கேட்ட கேள்வியிது. ஒரு பிரசவக் கேஸைக் கவனிக்க எப்போது வேண்டுமானாலும் அழைப்பு வரலாம் எனும் நிலையில் நானிருப்பதாகவும், அந்த அவசர அழைப்புக்கு என்னை நானே தயார்படுத்திக் கொண்டு எனது டாக்டர் பையினைக் கையோடே கொண்டு வந்து விட்டதாகவும் விளக்கினேன். ஒப்புதலாய் தலையசைத்த ரேமண்ட் அவன் வழி பார்த்துக் கொண்டு

முன்னேறினான், தோள் வழியே பின்வருமாறு கூறிக்கொண்டு: ''டிராயிங் ரூமுக்கு நேரா போயிடுங்க. உங்களுக்குத் தான் வழி தெரியுமே. நான் இந்தத் தாள்களைக் கொண்டு போய் மிஸ்டர் ஆக்ராய்டுகிட்டே கொடுக்க வேண்டியிருக்கு. நீங்க இங்கே இருக்கிற விஷயத்தை அவரண்டை நான் சொல்லிடறேன்.''

ரேமண்ட் என்னுடன் இணைந்துக் கொண்டதுமே பார்க்கர் விலகியிருந்தபடியால் நான் தனியாக விடப்பட்டேன். என் டையினைக் கழற்றி பெட்டிக்கருகேயே வைத்தேன்... அங்கிருந்த பெரிய நிலைக் கண்ணாடியில் ஒரு முறை என்னைப் பார்த்துத் திருத்திக் கொண்டேன்... எனக்கு நேரெதிராயிருக்கும் கதவு தான் டிராயிங் ரூமுக்கு இட்டுச் செல்லும் கதவென்பது எனக்குத் தெரியும். ஆகையால் அது நோக்கிக் குறுக்காய் நடந்து முன்னேறினேன்.

அக்கதவின் பிடியை அமுக்கிக் கதவினைத் திறக்க வேண்டியது தான் பாக்கி – அப்போது உள்ளேயிருந்து ஓர் ஓசையைக் கேட்டேன்; அங்கு அறைக்குள்ளிருக்கும் ஜன்னல் எதையோ இழுத்து மூடி அதன் தாழ்ப்பாளை இறக்கும் ஓசையாய் அவ்வோசையை நான் எடுத்துக் கொண்டேன். அந்நேரத்தில், கேட்ட ஓசைக்கு எவ்வித முக்கியத் துவமும் பொருத்திக் கொள்ளாமல், வெறும் இயந்திரத்தனமாய் தான் கவனித்துக் கொண்டேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

கதவினைத் திறந்தேன். உள்ளே நுழைந்தேன். இப்படி செய்யும் போதே, வெளியே வருவதற்காக சரியாய் அதேயிடத்தில் விரைந்து வந்த மிஸ் ரஸ்ஸெல்லின் மீது, ஏறத்தாழ நேருக்கு நேர் மோதி விட்டேன். இருவரும் மன்னிப்புக் கோரிக் கொண்டோம்.

முதன்முறையாக இந்த வேலைக்காரப் பெண்ணை நான் பாராட்டிப் பார்த்தேன் – ஒரு காலத்தில் இவள் எத்தனை அழகு ததும்பும் பெண்ணாயிருந்திருக்க வேண்டும் என்ற பிரமிப்பான எண்ணத்தோடு; சொல்லப்போனால், இந்த பிரமிப்பைப் பொறுத்தமட்டில், இப்போதும் கவனிக்கும்படித்தான் இவள் இருக்கிறாள் என்பது புரிந்தது. அவளுடைய கருங்கூந்தல் நரையின் நிழல் காணாது செழித்திருந்தது.

ஒரு வேளை இவள் வெளியே எங்காவது போய் விட்டு இப்போது தான் உள்ளே நுழைகிறாளோ என்று என்னையுமறியாமல்

எண்ணும்படி ஆயிற்று... ஓட்டப்பந்தயம் ஓடி விட்டு வந்திருப்ப வளைப் போல அப்படி மூச்சு வாங்கியது இவளுக்கு.

''முந்திரிக் கொட்டை மாதிரி சில நிமிஷங்கள் முன்னாடியே வந்துட்டேனோ?'' என்றேன் நான்.

''ஓ! அப்படி ஒண்ணும் இல்லே ஸார். மணியிப்பவே ஏழரையைத் தாண்டியாச்சு'' என்றவள், பின்வருவதைச் சொல்லுமுன் தேவையற்று சற்று தயங்கினாள்: ''எ – எனக்கு, நீ – நீங்களும் இன்னிக்கு டின்னர்ல கலந்துக்க வரீங்கனு தெரியாது. மிஸ்டர் ஆக்ராய்டு என்கிட்டே சொல்லலே.''

இந்த டின்னரில் நான் கலந்துக் கொள்வது இவளுக்கு சிறு அதிருப்தியை உண்டுபண்ணுவதாய் எனக்குள் ஒரு பதிவு உருவாவதை உணர்ந்தேன். ஆனால் ஏனப்படி இவளுக்குத் தோன்ற வேண்டும் என விளங்கவில்லை.

''முட்டி எப்படியிருக்கு?'' – விசாரித்தேன்.

''தேங்க் யூ டாக்டர். அது அப்படியே தானிருக்கு. நான் இப்பக் கிளம்பியாகணும். அந்த மிஸஸ் ஆகராய்டு இப்பக் கீழே வந்துடும். நா – நான், மலரலங்காரமெல்லாம் சரியா ஆகியிருக்கானு பார்க்கத்தான் இங்கே வந்தேன்.''

அறையை விட்டு விரைவாக வெளியேறி விட்டாள். இவள் இங்கு வந்ததற்கான நிரூபணத்தை என்னுள் எதற்காக வெளிப்படையாய் இப்பெண் பதிக்க வேண்டும் என்ற ஆச்சரிய நினைப்போடு நான் ஜன்னல் பக்கமாய் நகர்ந்துப் போய் நின்றேன். இப்படி நான் செய்யும்போதே, கம்பிகள் இல்லாமல் வெறும் கதவு மட்டுமே கொண்ட அகண்ட ஃபிரெஞ்சு வகை ஜன்னல்கள், மாடியின் திறந்த பால்கனியைப் பார்த்துத் திறந்தபடி இருந்ததைக் கவனித்தேன். எனில், அப்போது நான் கேட்ட ஓசை, ஜன்னலொன்று இழுத்து மூடப்பட்டு அதன் தாழ்ப்பாள் தாளிடப்பட்ட ஓசையாக இருக்க முடியாது.

அப்போதைக்கு வேறு ஏதும் வேலையில்லாததாலும், மண்டையைக் குடையும் மற்றபிற சிந்தனைகளிலிருந்து தாற்காலிக விலக்குக் காண்பதற்காகவும், வேறு எது அந்த ஓசையை உண்டாக்கியிருக்கும் என்ற ஆச்சரியத் தேடலை மேற்கொள்ள இறங்கினேன்.

கணப்பில் எறியப்பட்ட கரித்துண்டுகள்? நோ. அது, அப்படிப்பட்ட ஓர் ஓசையே கிடையாது. பீரோ ஒன்றின் ஏதோவொரு தட்டு உள்நோக்கித் தள்ளி மூடப்பட்டிருக்குமோ? நோ, அதுவும் கிடையாது.

அப்போது, என் கண்கள், அதில் நிலைகுத்தி நின்றன. அது ஒரு வெள்ளி டேபிள்–அதன் மூடியைத் தூக்கித் திறக்கலாம். அது கண்ணாடி மூடி. ஆகவே அதனுள்ளிருக்கும் பொருட்கள் வெளிப்படையாய் தெரியும். அதைத் தாண்டிப் போகும்போது உள்ளே என்னென்ன இருக்கின்றன என நோட்டமிட்டேன். ஓரிரு பழைய வெள்ளிச் சாமான்கள், கிங் சார்ல்ஸ் I –ன், சிறு பிரயாண ஷூக்கள், பலவண்ணக் கற்களாலான சைனா படங்கள், நிறைய ஆப்பிரிக்க அரியப் பொருட்கள். சைனா படங்களில் ஒன்றினையெடுத்து மிக அருகாமையில் வைத்துப் பரிசோதித்துப் பார்க்க விரும்பிய நான், மூடியைத் திறந்தேன். அது என் விரலிடுக்குகளில் வழுக்கி விழுந்தது.

அதே கணத்தில், நான் கேட்ட ஓசையினை அடையாளம் கண்டு விட்டேன். இந்த மூடியே தான் அப்போது மெதுவாகவும் ஜாக்கிரதை யாகவும் மூடப்பட்டிருக்கின்றது. என்னுடைய திருப்திக்காக ஓரிரு முறை மூடியை நான் திறந்து மூடிப் பார்த்துக் கொண்டேன். பிறகு மூடியை முழுக்கத் திறந்து எனக்கு வேண்டியப் பொருட்களைக் கிட்டத்தில் வைத்துப் பார்த்துக் கொண்டேன்.

நான் இன்னமும் திறந்த நிலையிலிருந்த வெள்ளி டேபிளில் குனிந்துப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, ஃப்ளோரா ஆக்ராய்டு உள்ளே வந்தாள்.

நிறைய பேருக்கு ஃப்ளோரா ஆக்ராய்டைக் கண்டால் பிடிப்பதில்லை. ஆனால், அவளைப் பிரமிக்காமல் யாராலும் இருந்து விட முடியாது. அவளுடைய நண்பர்களுக்கு, அவள் இன்னமும் வசீகரம் மிகுந்தவளாய் இருக்க வேண்டும். எடுத்த எடுப்பில் உங்களை வந்து அறையும் அவளுடைய பொலிவு – அவளது அளவுக்கதிகமான வெண்ணிறமாகும். அவளது கண்கள் நீல நிறமானவை – நீலம்... எழுந்து அடங்கி அலையும் கடலலைகளைப் போல. அவளது உடல் சருமம் ரோஜா நிறத்திலும் க்ரீமின் வழுவழுப்பிலும் மதமதப்பாய் மினுக்கும். ஆண்களைப் போன்ற தினவு கண்ட தோள்கள். உடையும் இடை. மருத்துவத் தொழிலில் ஊறியிருக்கும் என் போன்றவனுக்கு

இத்தனை படு சுத்தமான ஆரோக்கியம் கண்ட ஒருத்தரைப் பார்ப்பதில் அலாதி இன்னும் அதிகமாகும். சிம்பிளானவள். முதுகுக்குப் பின்னால் பேசும் பழக்கமற்று முகத்தில் பேசும் ஒளிவுமறைவற்ற குணம்.

என்னிடம் நெருங்கி வெள்ளி டேபிளுக்கருகே நின்றுக் கொண்ட அவள், ஒரு வேளை மகாராஜா கிங் சார்ல்ஸ் I, குழந்தையாயிருக்கும் போது ஷூவை அணிந்திருக்கவே மாட்டாரா என்ற மாறுபட்டக் கேள்வியை எழுப்பினாள். உடனேயே, ''எப்படியோ...'' என்றவள், ''இதெல்லாம் ரொம்ப ஓவரா தெரியலே?'' என்றாள் நம்பிக்கையற்ற வளாய். ''இந்த ஷூ கிங் சார்ல்ஸ் I போட்டுக்கிட்டதாம். ஏன், வேற ஒருத்தரும் அப்புறம் போட்டிருக்கவே முடியாதா? கூடாதா? ஊஃப்! வெத்து வேட்டு நம்பிக்கைகள். இது மாதிரிதான், மாபெரும் நாவல் எழுதப்பட்ட பேனானு ஒரு பேனா பாதுகாக்கப்படும். ப்ச் – *வெறும் பேனா*– அதுக்கு இத்தனை பதவி!''

''இதைப்பற்றியெல்லாம் மதிப்பாய் பேசும் கலாச்சாரப் புத்தகங்களிலெல்லாம் உங்களுக்குப் பழக்கம் கிடையாது போல தோணுது, மிஸ் ஃப்ளோரா'' என்றேன் நான்.

''நோ, நோ. ஐ லைக் தெம். அப்படிப்பட்ட புத்தகங்கள் நான் விரும்பிப் படிப்பவை.''

இப்படியொரு பதிலைக் கேட்டதில் நான் குளிர்ந்துப் போனேன். இந்தக் காலத்துப் பெண்கள் படிப்பதாய் சொல்லிக் கொண்டு பீற்றிக் கொள்ளும் புத்தகங்களின் பொருளடக்கங்கள் என்னை பயமுறுத்துபவை.

''நீங்க எனக்கு இன்னும் வாழ்த்துத் தெரிவிக்கலே, டாக்டர் ஷெப்பர்ட்'' என்றாள் ஃப்ளோரா. ''கேள்விப்படலே?''

அவளது இடக்கையைத் தூக்கி என் முகத்துக்கு நேராய் நீட்டினாள். அதன் மூன்றாவது விரலில் தனிப்பட்டு ஜுவலித்த ஒரு முத்து மோதிரம் டாலடித்தது.

''நான் ரால்ஃப்பைக் கைபிடிக்கப் போறேன், தெரியுமா'' என தொடர்ந்தாள்: ''அங்கிளுக்கு ரொம்ப சந்தோஷம். இந்தக் குடும்பத்தை விட்டுப் போயிடாம இந்த பந்தம் என்னை நிரந்தரமா பிணைச்சு வெச்சுடுது, கவனிச்சீங்களா!''

அப்போது அவளுடைய இரண்டு கைகளையும் என் கைகளுக்குள்

பிடித்திழுத்து வைத்துக் கொண்டேன். ''எனக்கு இனியவளே'' என்றேன். ''நீ ரொம்பவும் சந்தோஷமா வாழணும்னு எதிர் பார்க்கிறேன்.''

''ஒரு மாசம் ஆகுது, நாங்க ரெண்டு பேரும் நிச்சயமாகி'' என்று அவளுடைய சிலுசிலுக்கும் குரலில் தொடர்ந்தாள் ஃப்ளோரா: ''இருந்தாலும் இது நேத்து தான் அறிவிக்கப்பட்டது. அங்கிள் பெரிய வீடு கட்டித் தரேங்கிறார் - நாங்க வாழ. ஆனா நாங்க பெரிய பண்ணை தான் வேணும்னு பிடிவாதமா இருக்கப் போறோம்! குளிர்கால மெல்லாம் சுத்தப்போறோம். கோடைகாலத்துல கடல்ல – கப்பல் பந்தயங்கள். கடல்னா என் உயிர். சர்ச் சம்பந்தப்பட்ட மதகுரு சமாச்சாரங்களில் என்னை நான் அதிகம் ஈடுபடுத்திக்கப் போறேன். மாதாகோயில் மதர்கள் நடத்தும் அத்தனை கூட்டங்களிலும் பங்கெடுத்துக்கப் போறேன்.''

இன்பக் கனவுகளை செல்வி அடுக்கிக் கொண்டே போக, அப்போது சரசரவென்ற ஒலியெழுப்பியபடி உள்ளே நுழைந்தாள் திருமதி ஆக்ராய்டு. காலந்தாழ்ந்து வந்ததற்கு மிகவும் மன்னிப்பு வேண்டினாள்.

இப்படி சொல்வதற்கு மன்னிக்க என்னால் அந்த மிஸஸ் ஆக்ராய்டைச் சகிக்க முடியவில்லை. கழுத்தெங்கும் சங்கிலி சங்கிலியாய் பல்லிளித்துக் கொண்டு! நன்றாய் வெறுப்புண்டாக்க வல்ல பெண். சின்ன, சுரத்தற்ற, நெருப்புக்கங்காய் இரண்டு கண்கள். படபடவெனப் பொறிந்துத் தள்ளியபடி குழாயிலிருந்து பீய்ச்சியடிக்கும் நீராய் அவள் பேசிய வண்ணமேயிருந்தாலும், அந்தக் கண்கள் மட்டும், துணிந்து எதையோ தீவிரமாய் யோசித்த வண்ணமேதானிருக்கின்றன.

ஜன்னலிலேயே ஃப்ளோராவை விட்டுவிட்டு, மிஸஸ் பக்கமாய் நகர்ந்தேன் நான். கையெலும்பின் அடி வரை நொறுங்கும்படி அவளுடைய மோதிர விரல்களால் அழுத்தி குலுக்கியவள் இயன்றவரை சப்தமாய் பேசினாள்.

ஃப்ளோராவின் நிச்சயதார்த்தம் பற்றி பேச்சு வந்தது. எல்லா வகையிலும் மெத்த பொருத்தமான ஜோடி என அப்போது எண்ணிக் கொண்டேன் நான். கண்டதும் காதல் என என்னருமை இளையவர்கள் காதல் கொண்டுள்ளனர். அத்தனை அருமையான பொருத்தம் – அவன் நல்ல கறுப்பு, மற்றும் இவள் நல்ல வெண்மை.

''ஒரு தாயின் மனசிலிருந்த பாரம் குறைஞ்சு எத்தனை லகுவாயிடுச்சுனு, டாக்டர் ஷெப்பர்ட், உங்களுக்கு என்னால வார்த்தைகள்ல விளக்க முடியாது.

பெருமூச்சு விட்டாள் மிஸஸ் ஆக்ராய்டு – ஒரு தாயின் மனசிலிருந்த பாரம் குறைஞ்சதனால் புத்துணர்ச்சியுடனாக, அவளுடைய விழிகள் மட்டும் என்னைப் படிப்பதிலேயே ஆழ்ந்திருந்தன

''ஆச்சரியம் தெரியுமா என்னோட நீங்க டியர் ரோஜரோட நீண்டகால நண்பன். உங்களுடைய தராசுத்தனமான ஆலோசனைகள் மீது அவருக்கு எத்தனை நம்பிக்கையிருக்குனு எங்களுக்கில்லே தெரியும். ஃபிசிசில் குடும்பத்து விதவையா – என் நிலைமை அத்தனை கஷ்டமாயிருக்கு, வகைவகையா உயிர் வாங்கும் வேலைகள் செட்டில்மெண்ட்ஸ் புரியுதா? இந்த ரோஜர் அத்தனை பணத்தையும் ஃப்ளோரா மேலே எழுதி வைக்கும்படி விரும்பினார். ஆனா, இந்தப் பண விஷயத்துல, அவர், ஒரு புரிஞ்சுக்க முடியாதவர், ஆங்! பெரிய தொழிலதிபர்களாயிருக்கும் ஆண்கள் கிட்டே இப்படியொரு குணாதிசயம் இருப்பது சகஜம்தானாம் தேள்விப்பட்டிருக்கேன். நீங்க போய் அவருக்கு இந்த விஷயத்துல தகுந்த புத்திமதி சொல்லிக்கணுனு தொறந்து விடக் கூடாதானு நான் யோசிச்சிருக்கேன். உங்கமேலே அத்தனை பிரியம் வெச்சிருக்கா, ஃப்ளோரா. உங்களைப் பற்றி எங்களுக்கு ஜஸ்ட் ரெண்டு வருஷமாத்தான் தெரியும் இருந்தாலும், அவரோட பழைய நீண்டகால நண்பன் ... நல்லா விமரிசையாகவே தெரியும்.''

மிஸஸ் ஆக்ராய்டின் பேச்சுவன்மையை மறை திறக்கப் பட்ட டிராயிங் ரூமின் கதவோசையால் தடைபட்டது. இந்த தடையால் நான் குளிர்ந்துப் போனேன். அப்பாடா! மற்றவர்களின் விஷயத்தில் தானாய் மூக்கை நுழைப்பதை அடி வரை வெறுப்பவன் நான். ஃப்ளோராவுக்கு சொத்தினை செட்டில் பண்ணுவதில் நான் போய் பேசுவது – ஓஹ்... என்னால் எண்ணிப் பார்க்கக்கூட முடியாத ஒன்று. உரையாடல் இன்னும் சில நொடிகள் நீண்டிருந்தால் இந்த என் எண்ணத்தை அப்படியே நான் கடுமையாக சொல்லிவிடும்படி ஆகியிருக்கும்.

''உங்களுக்கு மேஜர் ப்ளண்ட்டைத் தெரியுமில்லே, டாக்டர்?''

''ம்.''

பற்பலருக்கு ஹெக்டர் ப்ளண்ட்டைத் தெரியும்–அட்லீஸ்ட், அவரது தொழில்ரீதியாகவாவது அவரைத் தெரிந்து வைத்திருப்பார்கள். உலகில் வாழும் எந்த மனிதனையும் விட, போக முடியாத பிரதேசங்களுக்குப் போய் கொடூர காட்டு விலங்குகளை அதிகம் கொன்ற ஒரே நபர் இவராகத்தானிருக்கும் என்பது என் கணிப்பு. இவரைப் பற்றிப் பேச்சுவாக்கில் குறிப்பிடும்போது மக்கள் சொல்வதுண்டு: ''ப்ளண்ட்–அந்தக் காட்டு மனுஷனையாக் குறிப்பிடறீங்க?''

ஆக்ராய்டுடனான ப்ளண்ட்டின் நட்பு எனக்கு எப்போதுமே கொஞ்சம் புதிராய்த்தான் தெரியும். இந்த இரு ஆண்களும் முழுக்க முழுக்க வித்தியாசப்படுபவர்கள். ஹெக்டர் ப்ளண்ட், ஆக்ராய்டை விடவும் ஐந்து வருடங்கள் இளையவர். சின்னப் பிராயத்தில் இருவரும் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டனர்... இருவரின் தொழில்களும் விரிந்து இணையாமல் ஆனாலும், பிரியாது இணைந்தே இருந்தது நட்புறவு. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை, ஃபெர்ன்லியில் வந்து ரெண்டு வாரங்கள் போல் தங்கிப் போவார் ப்ளண்ட்.

தற்சமயம், அவருக்கே உரிய நிதானமான அதே சமயம் மிருதுவான தப்படிகள் வைத்து அறைக்குள்ளே நுழைந்தார் ப்ளண்ட். மத்திம உயரம் கொண்டு வளர்ந்திருந்த அவர், வலிமையாகவும் அதே சமயம் நன்றாய் பெருத்தும் இருந்தார். கெட்டியான செம்மரத்தின் பிரதானத் தண்டு போல இருந்த அவரது முகம், ஏன் என விளக்கவொண்ணா வகையில் உணர்ச்சிகளற்று அம்மரம் போலவே இருந்தது. சாம்பல் நிற விழிகள் கொண்டிருந்தார்... அவை எங்கோ வெகு தூரத்தில் நடப்பதை ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருப்பதைப் போன்றதொரு பதிப்பை ஏற்படுத்தித் தரும். ரொம்பக் கம்மியாகத் தான் பேசுவார். அப்படிப் பேசப்படுவதும் ஏதோ அவருக்குள்ளிருந்து வார்த்தைகள் வேண்டாவெறுப்பாக வெளியே தள்ளப்படுவதைப் போல விட்டுவிட்டுத் தான் இருக்கும்.

இப்போது, அவருக்கே வாடிக்கையாயுள்ள எதிர்பாரா ஃபேஷனோடு, ''எப்படியிருக்கீங்க டாக்டர் ஷெப்பர்ட்?'' என்றார் திடுதிப்பென்று. கேட்டுவிட்டு கனப்புக்கு நட்டநடுவில் வந்து, எங்கள் தலைகளுக்குப் பின்னால் என்னத்தையோ மிகமிக ஈடுபாடான ஒன்றைப் பார்த்து விட்டவரைப் போல அந்தத் திசையையே பார்த்தபடி

நின்றார்.

''மேஜர் ப்ளண்ட்'' என்ற ஃப்ளோரா, ''நீங்க இப்ப எனக்கு இந்த ஆப்பிரிக்கன் பொருட்களைப் பற்றி விளக்கக் கூடாதா'' என்றாள். ''இதெல்லாம் என்னென்னனு உங்களுக்கு நிச்சயம் தெரியும்னு எனக்குத் தெரியும்.''

ப்ளண்ட் பெண்களை வெறுப்பவர் என்று பலர் வர்ணித்திருப்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அவர், இப்போதோ, உற்சாகம்-ஊக்கம் என்றெல்லாம் சொல்லப்படுவதை விவரிக்கும் விதமாய் கிளம்பி அப்பெண்ணிடம் போனார்.

செட்டில்மெண்ட் பற்றி மறுபடியும் அந்த மிஸஸ் ஆக்ராய்டு பேச ஆரம்பித்து விடலாம் என பயந்துப்போன நான், புதிதாய் வந்துள்ள இனிப்புப் பட்டாணிகள் பற்றி வேகவேகமாய் அறிமுகங்கள் தர ஆரம்பித்தேன். அன்றைய டெய்லி மெயில், அப்படியொரு பட்டாணி வகை உள்ளது என்று, காலையில் எனக்கு விவரித்திருந்தது. மிஸஸ் ஆக்ராய்டுக்கு தோட்டக்கலை பற்றியெல்லாம் எவ்விதமான அறிதல்களும் கிடையாது; ஆனாலும், அன்றைய தினத்தில் என்னென்ன சேதிகள் பரவிக்கிடக்கின்றனவோ அவற்றை தனக்கு நன்றாய் தெரிந்தது போல காட்டிக்கொள்ளும் வகை. மேலும், அவளும், டெய்லி மெயில் படிக்கிறாள். ஆக்ராய்டிடம் அவருடைய காரியதரிசியும் வந்து இணைந்துக் கொள்ளும் வரை எங்களால் புத்திசாலித்தனமாய் பட்டாணி குறித்துப் பேசிக்கொண்டிருக்க இயன்றது. உடனடியாகவே பார்க்கர் டின்னர் தயார் என்று அறிவித்தான்.

டைனிங் டேபிளில், எனது இடம், மிஸஸ் ஆக்ராய்டுக்கும் மிஸ் ஃப்ளோராவுக்கும் இடையே அமைந்தது. ப்ளண்ட், மிஸஸ் ஆக்ராய்டுக்கு மறுபக்கத்தில் அமர்ந்தார். அவருக்கு அடுத்து ரேமண்ட்.

டின்னர் ஒன்றும் அப்படி குதூகலமான நிகழ்வாய் இருக்கவில்லை. ஏதோ ஓர் எண்ணத்தால் முழுக்கவும் ஆக்ராய்டு ஆட்கொள்ளப் பட்டிருந்தது வெளிப்படையாகவே தெரிந்தது. முழுகிப்போய் விட்டவரைப் போல தோன்றிய அவர் எதுவும் சாப்பிட்ட மாதிரி தெரியவில்லை. ஆக்ராய்டு பரம்பரையின் அந்த விதவை, நான் மற்றும் ரேமண்ட் தான் இரவு விருந்தின் சம்பாஷணையை வழிநடத்திக்

கொண்டிருந்தோம். தனது மாமனின் மனக்குடைச்சலால் பாதிக்கப் பட்டவளாய் தெரிந்தாள் ஃப்ளோரா. தனது வழக்கமான மோன நிலைக்குள்ளேயே கிடந்தார் ப்ளண்ட்.

II

டின்னர் முடிந்ததும் முடியாததுமாக தனது கையை என் கைக்குள் பிணைத்துக் கொண்ட ஆக்ராய்டு, என்னை அப்படியே அவருடைய பிரத்யேக அறைக்கு இட்டுச்சென்று விட்டார்.

''காபி வந்து முடிஞ்சதும், யாராலும் நாம தொந்தரவு பண்ணப்பட மாட்டோம்'' என விளக்கினார். ''நமக்கு யாரும் இடையூறு தராம பார்த்துக்க வேண்டியது ரேமண்ட்டின் பொறுப்புனு அவன்கிட்டே சொல்லிட்டேன்.''

கவனிப்பது வெளியே தெரிந்து விடாவண்ணம் நான் அவரை ஓசையின்றிப் படித்தேன். அவர் ஏதோவொரு உத்வேகத்தின் பிடியில் சிக்கிக்கிடப்பது துல்லியமாய் புரிந்தது. சில நிமிடங்கள் அறையின் தரையில் மேலும் கீழுமாய் நடந்துக் கொண்டிருந்த அவர், காபி டிரேயுடன் பார்க்கர் உள்ளே நுழைந்த சடுதியில், அங்கு கனப்புக்கருகி லிருந்த ஒரு நாற்காலியில் தன்னை அப்படியே போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

ஆக்ராய்டின் பிரத்யேக படிக்குமறை, வசதிகள் செறிந்த வாட்டமான ஓர் அறையாயிருந்தது. ஒரு சுவர் முழுவதும் புத்தக அலமாரிகள் அமைக்கப்பட்டிருந்தன. பெரிய பெரிய நாற்காலிகள் நீலநிற ரப்பர் தோல் கொண்ட உறையால் மூடப்பட்டு அழகுற வைக்கப்பட்டிருந்தன. வரிசையாக அடுக்கப்பட்டு சுத்தமாய் ஃபைல் பண்ணப்பட்டிருந்த தஸ்தாவேஜுக்களும் ஆவணங்களும் ஜன்னலோரத்தில் தெரிந்த அகலமான மேஜையில் பரத்தப்படாமல் அடுக்கப்பட்டிருந்தன. பல சஞ்சிகைகளும் விளையாட்டுப் பத்திரிகைகளும் அங்கிருந்த ஒரு

வட்டமேஜையில்.

தனக்கான காபி கோப்பையைக் கைநீட்டி எடுத்தபடி, ''சாப்பிட்டு முடிச்சதும் தினசரி அந்த வலி மறுபடியும் வருது டாக்டர்'' என்று குறிப்பிட்டார் ரோஜர் அமைதியாய். ''அன்னிக்கு இதுக்கு நீங்க கொடுத்த அதே மாத்திரைகளை மறுபடியும் இன்னும் கொஞ்சம் தரணும்.''

எங்கள் சந்திப்பு என்னவோ மருத்துவரீதியான ஒன்று என்ற பதிப்பினை உண்டாக்க அவர் துடிப்பதாய் எனக்குப்பட்டது. நானும் அதற்கேற்றாற்போலே பாத்திரம் தாங்கினேன். ''வலி இருக்கணும்னு எதிர்பார்த்தேன். அதனால தான் கையோட கொஞ்சம் டேப்லட்ஸ் கொண்டு வந்திருக்கேன்.''

''குட் மேன். அதுங்களை இப்பவே குடுங்க.''

''ஹால்ல என் பையில இருக்கு. கொண்டு வரேன்.''

''அந்த சிரமம் உங்களுக்கு வேண்டாம்'' என்ற வார்த்தைகளில் சட்டென என்னைக் கைதூக்கிக் கட்டிப்போட்டார் அவர். ''பார்க்கர் எடுத்துட்டு வருவான். ம்... டாக்டர் பையைக் கொண்டு வரீயா, பார்க்கர்?''

''நிச்சயமா, ஸார்.''

பார்க்கர் நகர்ந்து விட்டான். நான் பேச வாயைத் திறந்திருப்பேன்... ரோஜர் ஆக்ராய்டு கையை நிமிர்த்தித் தடுத்து விட்டார். ''இப்ப ஆரம்பிக்க வேண்டாம். வெயிட். என்னை நானே கட்டுப்படுத்திக்க முடியாத அளவுக்கு நரம்பதிர்ந்துக்கிட்டு இருக்கேன்னு உங்களுக்குத் தெரியலியா?''

எனக்கு இது பட்டவர்த்தனமாகவே தெரிந்தது. மேலும் நானும் இருப்புக்கொள்ளாமல் இருந்தேன். இவர் இங்கு காட்டிக் கொண்டிருக்கும் எல்லாவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் என்மேல் கவிழ்ந்து விழுந்து என்னை நிலைகொள்ளாமல் ஆக்கியிருந்தன.

மறுபடியும் ஆக்ராய்டு ஏறத்தாழ திடீரெனப் பேசினார். ''அந்த ஜன்னல் சாத்திதானேயிருக்குனு, ப்ளீஸ் ஒருமுறை பார்த்துட முடியுமா?'' என்றார்.

சின்னதாய் ஆச்சரியப்பட்ட நான், எழுந்து, அந்த ஜன்னல் வரை

போனேன். அது, ஒரு பலகணிச்சட்ட ஜன்னல். அதன் கனமான நீலநிற வெல்வெட் சீலை இழுத்து மூடப்பட்டிருந்தாலும், அந்த ஜன்னல், சீசாப்பலகை போன்ற மூடி கொண்ட அதன் மேல்பாகத்தில் திறந்தேயிருந்தது.

நான் இன்னும் அதே ஜன்னலருகே இருந்தபோது, பார்க்கர் எனது சின்ன டாக்டர் பையை எடுத்துக் கொண்டு மீண்டும் அறைக்குள் பிரவேசித்திருந்தான்.

மீண்டும் அறைக்குள் அவசரமாய் நுழைந்தபடி, ''எல்லாஞ்சரியாத் தானிருக்கு'' என்றேன் நான்.

''அந்த ஜன்னலோட தாழ்ப்பாளைப் போட்டுட்டீங்க இல்லே?''

''யெஸ், *யெஸ்.* உங்களுக்கு என்ன ப்ராப்ளம், ஆக்ராய்டு?'

பார்க்கர் அப்போது தான் கதவினைச் சாற்றி விட்டு வெளியேறியிருந்தான்... இல்லாவிட்டால் இக்கேள்வியை நான் கேட்டிருக்கவே மாட்டேன்.

இதற்கு மறுபதில் தருவதற்கு முன் ஒரு நிமிடம்போல பொறுத்திருந்தார் ஆக்ராய்டு.

பிறகு ஒரு நிமிடம் கழித்து ''நான் நரகத்துல இருக்கேன்'' என்றார். ''நோ... அந்த மாத்திரைங்களை எடுத்து வெறுப்பேத்தாதீங்க. பார்க்கருக்காகத் தான் நான் அப்படி சொன்னது. வீட்டுல என்ன நடக்குதுனு ஆவலா கேட்கக் காதைத் தீட்டிக்கிட்டுக் காத்திருப்பானுங்க இந்த வேலைக்காரப் பயலுங்க. இப்படி வந்து உட்காருங்க. கதவும் சாத்திதானேயிருக்கு?''

''யெஸ். ஒருத்தராலும் ஒட்டுக்கேட்க முடியாது. இப்படி இருப்புக்கொள்ளாமத் துடிக்காதீங்க.''

''ஷெப்பர்ட்... கடந்த இருபத்து நாலு மணிநேரத்துல நான் எதையெல்லாம் அனுபவிச்சிருக்கேன்னு ஒருத்தருக்கும் தெரியாது. ஒரு வீடு குட்டிச்சுவராகி அதன் சொந்தக்காரன் தலையில் விழுந்தா அவனுக்கு எப்படியிருக்கும்... அப்படி விழுந்திருக்கு என் தலைமேல – *இடி.* ரால்ஃபோட பிரச்சினை ஒருபக்கமிருக்கு. இருக்கட்டும். ஆனா நாம இப்ப அதைப்பற்றிப் பேசப்போவதில்லே. இது வேற – *வேற!* இதை எப்படி சமாளிக்கிறதுனே எனக்குத் தெரியலே. ரொம்ப சீக்கிரமா இதுல நான் ஒரு முடிவெடுக்க வேண்டிய நெருக்கடி வேற.''

ஓரிரு நிமிடங்கள் மௌனமாகிப் போனார் ரோஜர் ஆக்ராய்டு. எவ்விதமாய் தொடங்குவதென்று விளங்காத பிடிப்பற்ற தன்மை அவரிடம் தெரிந்தது. மீறி அவர் பேசியபோது கேட்ட கேள்வி எனக்கொரு முழு ஆச்சரியமாய் அமைந்தது. இப்படியொன்று கேட்கப்படும் என்று நான் துளியும் எதிர்பார்க்கவேயில்லை.

''ஷெப்பர்ட்... நீங்கதானே ஆஹ்லே ஃபெர்ரர்ஸ் கடைசியா நோயாகி விழுந்தபோது போய் மருத்துவம் செஞ்சது?''

''யெஸ். நான் சிகிச்சை தந்தேன்.''

முதல் கேள்வியை விட, அடுத்த கேள்வியைக் கட்டமைக்க அவர் அதிக சிரமப்படுவதாய் தோன்றியது.

''நீங்க எப்பவாவது சந்தேகிச்சதுண்டா – எப்பவாவது உங்க மண்டைக்குள்ளே எழுந்ததுண்டா – அதாவது... அதாவது... வெல், அவருக்கு விஷம் வைக்கப்பட்டிருக்கலாம்னு எந்த சமயத்திலாவது உங்க டாக்டர் மூளைக்குள்ளே பொறி கீறியதுண்டா?''

இப்போது நான் ஓரிரு நிமிடங்கள் சாந்தமாகியிருந்தேன். பிறகு என்ன சொல்வதென்று எனக்குள் நான் ஒரு முடிவுக்கு வந்துக் கொண்டேன். ரோஜர் ஆக்ராய்டு ஒன்றும் காரலின் கிடையாது.

''நான் உண்மையைச் சொல்றேன்'' என்றேன் நான். ''அந்த சமயத்துல எனக்கு எந்தவகையான சந்தேகங்களும் கிடையாது. ஆனா, வெட்டியா என் ஸிஸ்டர் பேசின வம்பு தான், அப்படியொரு எண்ணத்தை என் மூளைக்குள்ளே முதல்ல வெதச்சது. அப்போதி லிருந்து அந்த எண்ணத்திலிருந்து என்னால வெளிவரவே முடியலே. ஆனா, நினைவிருக்கட்டும், அப்படியொரு மனக்கிலேசத்துக்கு எந்த வகையான அடித்தளமும் மருத்துவரீதியா என்கிட்டே கிடையாது.''

''அவருக்கு விஷம் வைக்கப்பட்டிருக்கு'' – அவர் சொன்னார். சுரத்தேயற்ற கனமான குரலில் இதைப் பேசினார் அவர்.

''யாரால?'' – கறாராய் கேட்டேன் நான்.

''அவரோட மனைவி.''

''இது எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''இப்படித்தான்னு அவளே என்கிட்டே சொன்னா.''

''எப்போ?''

''நேத்து! மை காட், நேத்து! ஆனா – அது தந்தச் சுமை – ஏதோ பத்து

வருஷத்துக்கு முன்னால கேட்ட சேதி போன்ற பாரத்தை என் நெஞ்சுல தந்திருக்கு.''

நான் ஒரு நிமிடம் போல அமைதியானேன்... பிறகு அவரே தொடர்ந்தார்: ''உங்களை முழுக்க நம்பிக்கைக்குப் பாத்திரமானவரா எடுத்துக்கிட்டுத்தான் இதை நான் உங்ககிட்டே சொல்றேன் ஷெப்பர்ட், புரியுதா? உங்களைத் தாண்டி இது எங்கும் போகக் கூடாது. இதுல உங்களோட ஆலோசனை எனக்குத் தேவை – நானே இந்த பாரத்தைத் தூக்கிக்கிட்டு அலைய முடியாது. சற்று முன்னாடி நான் சொன்னது மாதிரி... இதை எப்படி சமாளிக்கிறதுனே எனக்குத் தெரியலே.''

''அந்த முழுகதையையும் உங்களால என்கிட்டே சொல்ல முடியுமா?''– கேட்டேன். ''நான் இன்னும் ஏதும் விளங்காத இருட்டு லேயே தானிருக்கேன். எதனால இப்படியொரு பாவ மன்னிப்பைக் கேட்க மிஸஸ் ஃபெர்ரர்ஸ் முன்வந்தாங்க?''

''இதான் கதை: மூணு மாசங்களுக்கு முன்னாடி என்னைக் கலியாணம் பண்ணிக்கும்படி நான் மிஸஸ் ஃபெர்ரர்ஸ்கிட்டே கேட்டேன். அவ மறுத்தா. விடலே–நான் மறுபடியும் போய் கேட்டேன். அவ இணங்கினா. ஆனா, அவளோட ஒரு வருஷ துக்க அனுசரிப்பு முடியற வரைக்கும் எங்களுக்குள்ளே நிச்சயமானதை பப்ளிக்கா சொல்ல அவ என்னை அனுமதிக்கலே. நேத்து அவளை நானா போய் பார்த்தேன்... அவ கணவர் இறந்து ஒரு வருஷம் மூணு மாசம் ஆகிடுச்சுனு சுட்டிக்காட்டிய நான் எங்க நிச்சயதார்த்தத்தைப் பப்ளிக்கா அறிவிப்பதுல மேற்கொண்டு எவ்விதமான தடையும் இருக்கக் கூடாதுனு நினைவுபடுத்தினேன். கொஞ்சநாளாவே அவளோட நடவடிக்கைகள்ல ஒருவித அந்நியத்தன்மை இருப்பதை நான் கவனிச்சுக்கிட்டுத்தான் வரேன். அப்போ, திடுதிப்புனு, எவ்விதமான முன்னறிப்பும் எனக்குத் தராம, அவ, சடால்னு உடைஞ்சு நொறுங்கிப் போனா. அவ–அவ–எல்லாத்தையும் என்கிட்டே சொன்னா. கொடூரனா இருந்த அவ கணவன் மேல அவளுக்குள்ளே உருவாகியிருந்த வெறுப்பு – என்மேல வளர ஆரம்பிச்சிருந்த காதல் – அப்புறம், அ-ப்-பு-ற-ம் கொடூரமான முறையில அவ எடுத்த முடிவு. விஷம்! மை காட்! அது ஓர் ஈவிரக்கமற்ற கொலை.''

ஆக்ராய்டு முகத்தில், இப்போது உருவான, திகில்... அது அறிவுறுத்திய விலகல்... ஆகிய இரண்டையும் நான் பார்த்தேன். இவற்றையே திருமதி ஃபெர்ரர்ஸும் நிச்சயமாய் கவனித்திருக்க வேண்டும். அனைத்தையும் காதலுக்காக மன்னித்தருளும் வகையைச் சேர்ந்த காதலன் கிடையாது இந்த ரோஜர் ஆக்ராய்டு. இவர் ஒரு சாதாரண பிரஜை. சட்டத்துக்குக் கட்டுப்பட்ட விஷயங்களே நல்லவை மற்றும் ஆபத்தற்றவை என்ற இவருடைய குணாதிசயம், மேற்சொன்ன உண்மைகள் வெளிவந்து முடிந்த கணமே, இவரை அவளிடமிருந்து தாட்சண்யமின்றி விலக்கியிருக்கும்.

''யெஸ்'' என்று தணிந்த குரலில் அவருடைய தனி ஆவர்த்தனத்தைத் தொடர்ந்தார்: ''அவ எல்லாத்தையும் ஒத்துக்கிட்டா. இதுல– இந்த அத்தனை சமாச்சாரங்களையும் தெரிஞ்சு வெச்சிருக்கும் ஒரு நபர் இருப்பது எனக்குத் தெரிய வந்தது. ஏகப்பட்ட தொகையைக் கேட்டு அவளை அவன் ப்ளாக்-மெயில் பண்ணிக்கிட்டிருக்கான். இது ஏற்படுத்தித் தந்த மன உளைச்சல் தான் அவளைப் பைத்திய நிலைக்குத் தள்ளி, அவளோட நடவடிக்கைகள்ல ஒருவித அந்நியத்தன்மையைத் தந்திருக்கு.''

''யாரந்த நபர்?''

கேட்ட என் கண்முன் அருகருகில் சென்றுக் கொண்டிருந்த ரால்ஃப் பேடன் மற்றும் மிஸஸ் ஃபெர்ரர்ஸ் ஆகியோரின் முகங்கள் எழுந்து நின்றன. அத்தனை நெருக்கமாய் இருந்த இவ்விருவரின் தலைகள். மளமளவென உள்ளே மூண்ட படபடப்பினை நான் அக்கணம் அனுபவித்தேன். ஒரு வேளை–ஓஹ்!–ஆனால் நிச்சயமாய் அதெல்லாம் சாத்தியமே கிடையாது. அன்றைய மதியமே வெளிப்படையாய் கல்மிஷமின்றி வரவேற்ற ரால்ஃபின் அணுகுமுறை நினைவுக்கு வந்தது. நானொரு முட்டாள்!

''அந்த ஆள் பேரை அவ என்கிட்டே சொல்ல முன்வரலே'' என்றார் அவர் மெதுவாய். ''சொல்லப்போனா, அது ஓர் ஆண்னு அவ சொல்ல வரலே. ஆனாலும் கூட —''

''— ஆனாலும் கூட'' என ஒப்புக்கொண்டு தொடர்ந்த நான், ''அது ஓர் ஆணாத்தானிருந்தாகணும். எனில், இதுல உங்களுக்கு யார் மேலயும் சந்தேகமே இல்லையா?'' என்று கேட்டான்.

இதற்கு பதிலாய் பன்றி போல தாளாது உறுமிய ஆக்ராய்டு, தனது கைகளுக்குள் முகத்தை அப்படியே போட்டு புதைத்துக் கொண்டார். ''அப்படி இருக்க முடியாது'' என்றார். ''அப்படியொரு தீர்வை நினைச்சுப் பார்ப்பது கூட என்னை ஒரு பைத்தியக்காரக் கட்டத்துக்குக் கொண்டு போயிடும். நோ – என் மூளையைக் கடந்துப்போன அந்தக் காட்டுத்தனமான கற்பனையை நான் உங்ககிட்டே கூட பகிர்ந்துக்க மாட்டேன். இருந்தாலும் டாக்டர்... உங்ககிட்டே நான் ஒரு விஷயத்தைச் சொல்லிடறேன். அவ சொன்ன *எதுவோ* தான், விவாதப்பொருளாயிருக்கும் அந்த ஆள் நெஜத்துல என் வீட்டிலேயேயிருக்கும் ஒரு நபர்னு என்னை நினைக்க வெச்சது – ஆனா, ஓ நோ... அது அப்படியிருக்க முடியாது. அவ சொன்னதை நான் தான் தப்பர்த்தம் பண்ணிக்கிட்டுக் குழம்பியிருக்கணும்.''

''நீங்க அவங்களுக்கு சொன்னது தான் என்ன?'

''என்னத்தை நான் சொல்றது? அவ பேசினதெல்லாம் எப்படியாப்பட்ட அதிர்ச்சியா எனக்குள்ளே இறங்கிச்சுனு அவ தான் நேராவே பார்த்தாளே? பிறகு அந்தக் கேள்வி முளைச்சது – *இதுல என்னோட கடமை என்ன?* நடந்த காரியங்களுக்குப் பின்னால என்னை ஓர் இணைப்பா ஆக்கினா அவ – தெரியுதா? என்ன நடக்கப் போகுதுனு அவ உணர்ந்துட்டானு எனக்குப்பட்டுது. தூணாயிட்டேன் – யெஸ். என்கிட்டே இருபத்து நாலு மணி நேர அவகாசம் கேட்டா – அதுக்குள்ளே அவ ஒண்ணும் பண்ணிக்கமாட்டானு எனக்கு சத்யம் பண்ணித் தந்தா. இவளை ப்ளாக்-மெயில் பண்ணி மிரட்டிக் கிட்டிருக்கும் அந்தப் பொறுக்கியோட பெயரை எனக்குத் தர அவ திட்டவட்டமா மறுத்துட்டா. தெரிஞ்சுட்டா நான் ஆயுதத்தோட நேரா அவன்கிட்டே ஓடுவேன்னும், அதனால அவளோட ரகசியங்களெல் லாம் காட்டுத்தீயா பரவிடும்னு நெனச்சாளோ என்னவோ. அவகிட்டேயிருந்து எனக்குத் தகவல் வரும்னா, அது, இருபத்து நாலு மணி நேரம் முடியறதுக்குள்ளே வரும்னு சொன்னா. கடவுளே! ஓ, ஷெப்பர்ட்! சத்யமா சொல்றேன்... இதுல அவ என்ன பண்ணிக்கப் போறானு மறைஞ்சிருப்பது என் மூளைக்கு எட்டவேயில்லை – யெஸ்! *தற்கொலை!* நான் அவளை இந்த முடிவு நோக்கி விரட்டியிருக்கேன். ஓ!''

''கிடையவே கிடையாது'' என்றேன் நான். ''நடந்துள்ள விஷயங்களை ரொம்பவும் மிகைப்படுத்திப் பார்க்காதீங்க. அவங்க மரணத்தின் காரணம் உங்க வீட்டு வாசப்படியில இல்லை.''

''இப்பக் கேள்வி என்ன தெரியுமா? *நான் இப்ப என்ன பண்ணுவது?* அந்த துரதிர்ஷ்டப் பெண்மணியோ போய் சேர்ந்துட்டா. இப்பப் போயா அந்தக் குப்பையை மறுபடியும் கிளறணும்?''

''குட். நானும் உங்க கருத்தை ஏத்துக்கறேன்.''

''ஆனா இதுல இன்னொரு பாயிண்ட்டும் இருக்கு. அவளை நெஜத்துல வந்து கொன்னுப் போட்டதுக்கு சமமா, அவளை தற்கொலை வரை விரட்டி வெற்றி கண்டிருக்கும் அந்தப் பொறுக்கி நாயை நான் எப்படி அடைவது? அவனுக்கு அந்த முதல் குற்றம் தெரியும் – அதை வெச்சுக்கிட்டு அவன் வட்டமடிச்சுக்கிட்டே நெருங்கும் கழுகு போல இறங்கியிருக்கான். குற்றத்துக்கான அபராதத்தை அவ கட்டிட்டா... ஆனா அவனை அப்படியே விடுதலையா உலவ விட்டுட வேண்டியது தானா?''

''ஓஹோ'' என்றேன் நான் மெல்லமாய். ''அவனைத் தேடி பிடிச்சுத் தான் ஆகணும்னு சொல்றீங்களா? இதுக்கு நிறைய விளம்பரங்கள் தேவைப்படும் – விளங்குதா?''

''ஆமாம். இது பற்றி நானும் யோசிச்சேன். குறுக்கும் நெடுக்குமா மேலிருந்து கீழ் வரைக்கும் நான் என் மூளைக்குள்ளே போட்டு உலுக்கி எடுத்தாச்சு.''

''குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும் என்ற உங்களுடைய கருத்தை நானும் முழுக்க ஆமோதிக்கறேன். ஆனா இதுக்கு நாம தர வேண்டிய விலை?''

எழுந்துக் கொண்ட ஆக்ராய்டு அப்படியும் இப்படியுமாக நடக்க ஆரம்பித்து விட்டார். தற்சமயம் மறுபடியும் அவரிருந்த இருக்கைக்குள் புதைந்தார்.

''கவனியுங்க, ஷெப்பர்ட். நாம இப்படிப் பண்ணினா என்ன? அவ கிட்டேயிருந்து ஒரு பதிலும் வரலேனா – மறைஞ்சுப்போன அத்தனை சமாச்சாரத்தையும் மறைஞ்சதாகவே விட்டுடுவோம்.

''*அவகிட்டேயிருந்து பதிலா? ஓஹ்...* என்ன சொல்ல வரீங்க?'' என்றேன் நான் ஆர்வமாய்.

''எங்கேயாவது – எப்படியாவது – அவ போவதற்கு முன்னாடி – எனக்காக ஒரு தகவலை விட்டு வெச்சிருக்கணும் என்பது என்னுடைய அழுத்தமான எதிர்பார்ப்பு. இந்த என் நிலைப்பாட்டை உங்களோட என்னால விவாதிச்சுக்கிட்டிருக்க முடியாது – ஆனா, இது அப்படித்தான்.''

நான் மறுப்பாய் தலையசைத்தேன். ''அவங்க ஒரு வார்த்தையோ ஒரு கடிதமோ கூட உங்களுக்கு விட்டு வெச்சுட்டுப் போகலே'' என்று குறிப்பிட்டுக் காட்டினேன்.

''ஷெப்பர்ட்... *அவ விட்டு வெச்சிருக்கா* என்பதுல நான் பூரண நம்பிக்கையா இருக்கேன். மேலும், முக்கியமா, இறப்பு எனும் முடிவைக் கையில வெளிப்படையா எடுத்துக் கொள்வதன் மூலம், அவளை அப்படியொரு இக்கட்டான முடிவை எடுக்கும்படி விரட்டியடிச்சவனோட அடையாளம் தேடப்படட்டும்னும், இந்த வகையில அவன் மீதான அவ பழி தீர்க்கப்படட்டும்னும் அவ முடிவு பண்ணியிருக்கா. அவளோட கடைசி கட்டத்துல நான் அவளை சந்திச்சிருந்தேன்னா, அவன் யார் என்பதை என்கிட்டே சொல்லிட்டு, எப்படியாவது அந்த நாய் மகனைக் கண்டுபிடிச்சுக் கண்டந்துண்டமா வெட்டிப் போடும்படி அவ சத்யம் வாங்கிக்கிட்டிருப்பா. யெஸ்.''

இப்போது என்னைப் பார்த்தார் அவர். ''உள்ளுக்குள் தோன்றும் இப்படிப்பட்ட நினைவுகள் மீது உங்களுக்கு நம்பிக்கை கிடையாதா?''

''ஓ, யெஸ்... நம்புவது உண்டு. இந்த விஷயத்தைப் பொறுத்த வரைக்கும், நீங்க இப்ப சொன்ன மாதிரி, அவங்க கிட்டேயிருந்து ஒரு பதில் வார்த்தை வந்து —''

இந்த இடத்தில் நான் அப்படியே நிறுத்தி விடும்படி ஆனது. கதவு ஓசையின்றி திறக்கப்பட கையில் ஒரு கொத்துக் கடிதங்களுடன் உள்ளே நுழைந்துக் கொண்டிருந்தான் பார்க்கர்.

''மாலை தபால்ல வந்தவை, ஸார்'' என அத்தனையையும் அவரிடம் ஒப்படைத்தான். பிறகு காபி கோப்பைகளைச் சேகரித்த அவன் வெளியேறினான்.

எனது கவனம் கண நேரம் திசைமாற்றப்பட்டு பின் ஆக்ராய்டின் மேல் விழுந்தது. வந்தவற்றில் ஒரு பெரிய நீலநிற உறையைப் பார்த்துக் கொண்டிருந்த அவர், மனிதனொருவன் சிலையாய் ஆகி விட்டதைப்

போல ஆகியிருந்தார். மீதிக் கடிதங்கள் தரையில் விழும்படி ஸ்மரணையற்றவராயிருந்தார் அவர்.

''அவ கையெழுத்து'' – மூச்சடைக்க சொன்னார் அவர். ''அவ வெளியே போய் நேத்து ராத்திரி இதை போஸ்ட் பண்ணியிருக்கணும் – ஜஸ்ட், அதுக்கு – அ-து-க்-கு முன்னாடி.

அந்த உறையின் ஒட்டப்பட்டப் பகுதியைக் கிழித்தெறிந்த ரோஜர் அதனுள்ளிருந்து கனமான மற்றோர் உறையை உருவினார். பிறகு அவர் நிமிர்ந்து கூர்மையாய் கவனித்தார். கேட்டார்: ''ஜன்னலை மூடியாச்சுல்லே? நிச்சயமா?''

''படு நிச்சயமா'' என்றேன் நான் ஆச்சரியமாய். ''ஏன்?''

''இன்னிக்கு சாயங்காலம் முழுக்க யாரோ என்னைக் கவனிப்பதா... உளவு பார்ப்பதா... பின்தொடர்வதா... விளக்கவொண்ணா ஓர் உள்ளுணர்வு என்னை வதைச்சுக்கிட்டேயிருக்கு. ஏய், ஏய்... என்னது அது —''

சட்டென்று திரும்பினார் அவர். அப்படியே செய்தேன் நானும். கதவின் தாழ்ப்பாள் மிக நுணுக்கமாக திறக்கப்பட்ட ஓசை போன்ற எதையோ, நாங்களிருவருமே கேட்டது போல உணர்ந்தோம். நான் எழுந்து கதவு வரை போனேன். திறந்தேன். அங்கே ஒருத்தரும் இல்லை.

''பயம்...'' என்று சொல்லிக் கொண்டார் ஆக்ராய்டு அவருக்குள்.

கனமான அந்தத்தாள்களின் மடிப்புகளைத் திறந்து பிரித்தார்; பிறகு ஒலிகம்மிய குரலில் நானும் கேட்க வாசித்தார்:

> *மை டியர், மை வெரி டியர் ரோஜர்... இறைவன் சொல்லியிருக்கிறான் – உயிருக்கு உயிர் தான் விலை என்று. எனக்கு இது இப்போது புரிந்து விட்டது – அதிலும் குறிப்பாக உங்கள் முகம் கொண்ட மாற்றத்தைக் கண்டதும் இது புரிந்தே விட்டது. கடந்த வருடம் என் வாழ்க்கையையே சின்னாபின்னமாக்கி நிம்மதியற்றுப் போகும்படி செய்த நபரைப் பழி வாங்கும் படலத்தை நான் உங்களிடம் ஒப்படைத்து விட்டுக் கிளம்புகிறேன். அந்த நபரோட பெயரை இன்று மதியம் நான் உங்களிடம் சொல்ல விரும்பவில்லை, ஆனால் அதனை இப்போது நான் உங்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்க விரும்புகிறேன். எனக்குப்*

பிள்ளைக் குட்டிகளோ உறவினர்களோ கிடையாது... எனவே இந்த சமாச்சாரம் என் பெயருக்கு ஏற்படுத்தித் தரவல்ல சின்னத் தனமான விளம்பரத்தை யெண்ணி நீங்கள் அஞ்ச வேண்டாம். ரோஜர், மை டியர் ரோஜர், மை டியர் ரோஜர்... ... ...

ஆக்ராய்டு, அவரது விரல்கள் தாளின் அடுத்த வரிக்குள் இறங்கக் காத்திருந்த நிலையில், நிறுத்தினார். ''ஷெப்பர்ட்... என்னை மன்னிச் சுடுங்க. இதை நான் மட்டும் தனியாத்தான் படிக்கணும்'' என்றார், நிதானமற்று. ''இது என் கண்களுக்குத்தான் – என் கண்களுக்கு மட்டும் தான்.''

கடிதத்தை உறைக்குள் போட்ட அவர் அதனை மேஜையின் மீது வைத்தார். சொன்னார்: ''அப்புறமா. நான் தனிமையில இருக்கும் போது.''

''நோ'' – தூண்டப்பட்டவனைப் போல கத்தி விட்டேன் நான். ''இப்பவே படிங்க.''

கொஞ்சம் ஆச்சரியத்தோடு என்னை முறைத்துப் பார்த்தார் ரோஜர் ஆக்ராய்டு.

சூடாகியபடி, ''நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்'' என்றேன் நான். ''என் காதுக்குக் கேட்கும்படி படிங்கனு நான் சொல்ல வரலே. பட், நான் இங்கே இருக்கும்போதே அதை முழுக்கப் படிச் சுடுங்க.''

மறுப்பாய் தலையசைத்தார் ஆக்ராய்டு. ''நோ. தனிமைக்குக் காத்திருக்கேன்.''

எனக்கே விளங்காத ஏதோ ஒரு காரணத்துக்காக லஜ்ஜையின்றி அவரை மறுபடியும் கெஞ்ச ஆரம்பித்தேன்: ''அட்லீஸ்ட்... அந்த ஆளோட பேராவது என்னனு படிங்களேன்.''

இதற்கு, ஆக்ராய்டு, மறுப்பின்றி ஒரு பாறாங்கல்லாயிருந்தார். எத்தனைக்கெத்தனை ஒரு விஷயத்தைப் பண்ணும்படி நீங்கள் ஆக்ராய்டைக் கெஞ்சுகின்றீர்களோ அத்தனைக்கத்தனை அவர் அந்த வேலையைப் பண்ணப் போவது கிடையாது. என் வாக்குவாதங்கள் அனைத்தும் வீணாயின.

அக்கடிதம், எட்டு நாற்பது மணிக்கு உள்ளே கொண்டு வரப்பட்டது.

நான் அவரை விட்டு எட்டு ஐம்பதுக்குக் கிளம்பும்போதும் கூட அக்கடிதம் படிக்கப்படாமலே மேஜை மீது கிடந்தது. கதவுப் பிடியில் கை வைத்து சற்று யோசித்தபடி நின்ற நான், எதையாவது விட்டுவிட்டுக் கிளம்புகிறேனோ என்ற சந்தேகத்தில், திரும்பி நாங்கள் அமர்ந்திருந்த பகுதியைப் பார்த்தேன். மறுப்பான ஒரு தலையசைப்போடு வெளி யேறிய நான் எனக்குப் பின்னால் கதவினை அறைந்து சாற்றினேன்.

உடனே கைக்கெட்டும் தூரத்தில் பார்க்கரின் முகத்தைக் க்ளோஸ்-அப்பில் பார்த்ததில் நான் துணுக்குற்றுப் போனேன். மனக்கலவரத்தில் குழப்பப்பட்டவனாய் தோன்றினான் அவன்... இதனால் கதவருகே நின்று அவன் கேட்டுக் கொண்டிருந்திருப்பான் என்று எனக்குப் பட்டது.

எத்தனை கொழுத்த, எண்ணெய் வடியும், லாயக்கற்ற ஒரு முகரை... நிச்சயம் இந்த மூஞ்சியில் கழுவும் மீனில் நழுவும் தன்மை மிகுந்தேயிருக்கின்றது.

''மிஸ்டர் ஆக்ராய்டு அவரை ஒருத்தரும் வந்து தொந்தரவு பண்ணக் கூடாதுனு விரும்பறார்'' என்றேன் நான் கறாராய். ''உங்ககிட்டேயும் இதை சொல்லிடச் சொன்னார்.''

''அப்படியே, ஸார். அ-வ-ர் அழைப்பு மணி அடிச்ச மாதிரி எனக்குக் கேட்டுது.''

இது ஓர் அப்பட்டமான பொய் என்பது எளிதாய் புலப்படுகின்றது... எனவே இதற்கு விளக்கம் கேட்டு பேச்சை வளர்க்க நான் விரும்ப வில்லை. ஹால் வரை எனக்கு முன்னால் நடந்து வந்த பார்க்கர் அங்கு எனது உடைமைகளை எடுத்துத் தந்து உதவினான். நான் இருட்டுக்குள் இறங்கினேன். நிலா மறைந்திருக்க காணும் அத்தனையும் மங்க லாகவும் இருளடைந்தும் தெரிந்தன.

வீட்டின் கேட்டினைக் கடந்து நான் வெளியேறிக் கொண்டிருந்த போது அங்கிருந்த சர்ச் மணியோசை ஒன்பது என்று அடித்து உணர்த்தி யது. இடப்பக்கம் திரும்பி கிராமத்து திசையில் நான் முன்னேறத் துவங்கியபோது எதிர்ப்புறத்திலிருந்து வந்துக் கொண்டிருந்த ஒரு மனிதனின் மீது எக்குத்தப்பாக மோதி நின்றேன்.

கரகரப்பான அடைத்த குரலில் ''இதுதானே ஃபெர்ன்லி பார்க் போக வழி, மிஷ்டர்?'' என்று கேட்டான் அந்த அந்நியன்.

நான் அவனைப் பார்த்தேன். கண்களை மூடும்படி தொப்பியை இழுத்து அணிந்திருந்த அவன், கோட்டின் காலர்களைத் தூக்கிக் கழுத்தின் மேற்புறம் வரை நன்றாய் மூடும்படி ஆக்கிக் கொண்டிருந் தான். அவனுடைய முகத்தின் கொஞ்சப் பகுதியை மட்டுமில்லை... எந்தப் பகுதியையுமே அவனுடைய முகத்தில் என்னால் பார்க்க முடியவில்லை, ஆயினும், அவன் இளைய வாலிபப் பயலாகத் தான் தெரிந்தான். அவனது குரல் கரகரத்தும் படிப்பறிவற்ற தினுசிலும் இருந்தது.

''இது தான் கேட் கதவு'' – நான் சொன்னேன்.

''தாங்க் யூ மிஷ்டர்'' – கடந்து உட்புறம் போக ஆரம்பித்தவன் தேவையேயில்லாமல் கூடுதலாக சொன்னான்: ''இப்பகுதிக்கு நான் புதுசு, புரிஞ்சுதா?''

அவன் பக்கமாய் திரும்பிய நான், கேட்டைக் கடந்து அவன் உள்ளே போய்க் கொண்டிருப்பதைப் பார்க்கும்படி அமைந்தது.

இதில் வியத்தகு விஷயம் என்னவென்றால், அவனுடைய குரல், எனக்கு ஏற்கெனவே நன்கு பரீச்சியமாகியிருந்த ஒருத்தருடைய குரலாகத் தோன்றியது தான். ஆனால் அது யாருடையது என்பதை என்னால் அப்போது குறிப்பிட்டு நினைவுபடுத்திக் கொள்ள முடிய வில்லை.

பத்து நிமிடங்கள் கழித்து நான் என் வீட்டுள் மீண்டும் நுழைந் திருந்தேன். நான் எதற்காக அத்தனை சீக்கிரமாய் திரும்பி விட்டேன் என்பதை தெரிந்துக் கொள்வதில் படு ஈடுபாடாயும் கிளர்ச்சியாயும் இருந்தாள் கரோலின். அவளை சாந்தப்படுத்த அன்று மாலை நடந்ததாய் கொஞ்சம் கற்பனை கலந்த ஒரு கதையை சிருஷ்டித்து நான் சொல்லும்படி ஆனது; இருந்தாலும் என் நெஞ்சுக்குள் அவள் கண்கள் ஊடுருவி எதையோ தேடிக் கொண்டிருப்பதாய் எனக்குப் படபடத்தது.

பத்து மணிக்கு கொட்டாவியோடு எழுந்துக் கொண்ட நான் படுக்கப் போகலாம் என ஆலோசித்தேன். கரோலின் சம்மதித்தாள்.

அது வெள்ளி இரவு. வெள்ளி இரவில் தான் நான் கடியாரத்துக்கு சாவி கொடுப்பது வழக்கம். அப்பணியை நான் பண்ணிக் கொண் டிருக்கும்போது வேலைக்காரி சமையற்கட்டு வேலைகளையும் கதவு சாற்றும் வேலைகளையும் சரியாய் செய்து விட்டாளா என்பதைப்

பரிசோதித்துக் கொண்டிருந்தாள்.

மாடிக்கு நாங்கள் போன போது மணி பத்தே கால். நான் மாடித் தளத்தில் கால் வைத்தவுடன் ஹாலிலிருந்த டெலிபோன் அலறியது.

நான் மளமளவெனு கீழிறங்கி, ரிஸீவரை எடுத்தேன்.

''என்னது?'' என்றேன் நான். ''என்னது? நிச்சயமா. அடுத்த நொடியில நான் அங்கிருப்பேன்.''

மாடிக்கு எட்டடிப் பாய்ச்சலில் நான் ஓடினேன், என் மருத்துவப் பையைப் பிடுங்குவதைப் போல அதனிடத்திலிருந்து பிய்த்தெடுத்துக் கொண்டேன், அதற்குள் சில மருத்துவப் பொருட்களை அள்ளித் திணித்துக் கொண்டேன்.

''போன்ல பார்க்கர்'' என்று கரோலினுக்குக் கத்தினேன் நான். ''ஃபெர்ன்லியிலிருந்து. ரோஜர் ஆக்ராய்டைக் கொலை பண்ணப்பட்ட நிலையில அங்கே கண்டுபிடிச்சிருக்காங்க.'

அத்தியாயம் 5

கொலை

கலமே தாழ்த்தாமல் காருக்குள் நானிருந்தேன். கொட்டும் நீர் வீழ்ச்சியாய் காரை விரட்டினேன். சேர்ந்ததும் குதித்திறங்கிய நான், அழைப்பு மணியை அடித்தேன். இதற்கு பதில் வர சற்று தாமதம் விளைய... உடனடியாய் மறுபடியும் அமுக்கினேன்.

பிறகு, கதவு திறக்கப்படும் ஓசை கேட்க தொடர்ந்து திறக்கப்பட்ட கதவின் நிலையில், படபடப்பில்லாத, அவனுடைய முகஜாடை சற்றும் அசைக்கப்படாத நிலையில், பார்க்கரைப் பார்த்தேன்.

அவனை அப்படியே தள்ளிக் கொண்டு ஹாலை ஏறக்குறைய கடந்திருந்தேன் நான்.

''எங்கே? அவர் இப்ப எங்கே?'' – உடனடியாய் விடை வேண்டும் என்று கட்டளையாய் கேட்டேன்.

''மன்னிக்கணும், ஸார். *என்ன?''*

''உன் முதலாளி. போலீஸுக்குத் தகவல் சொல்லிட்டியா?''

ஏதோ நானொரு பேய் போல என்னை அப்படி கண்ணகல முழித்தான் பார்க்கர்.

''உனக்கு என்னடா ஆச்சு, பார்க்கர்? ஒரு வேளை, நீ சொன்ன மாதிரி, உன் முதலாளி கொலை பண்ணப்பட்டிருந்தா —''

ஒரு மூச்சடைப்பு பார்க்கரிடமிருந்து வெளிப்பட்டது.

''முதலாளி? கொலை பண்ணப்பட்டார்? சாத்தியமேயில்லை, ஸார்.''

இது நான் முழிக்க வேண்டிய சுற்று. மூச்சடைத்து முழித்தேன். ''நீ

எனக்கு போன் பண்ணலே, ம்? அஞ்சு நிமிஷம் கூட ஆகலே, ஆங்? மிஸ்டர் ஆக்ராய்டைக் கொலையான நிலையில பார்த்ததா எனக்கு சொல்லலே?''

''நானா, ஸார்? ஓ! அப்படியெல்லாம் எதுவுமே கிடையாது, ஸார். அப்படியொரு போனை நான் பண்ணுவதா நான் கனவு கூட காண மாட்டேன், ஸார்.''

''அப்ப, அப்படி வந்த 'கால்' வெறும் மோசடிங்கிறியா? மிஸ்டர் ஆக்ராய்டுக்கு ஒண்ணும் ஆகலேனு சொல்ல வரியா?''

''எக்ஸ்க்யூஸ் மீ, ஸார். போன் பண்ண ஆள், என் பேரையா உபயோகப்படுத்தினான்?''

"நான் கேட்ட அதே வார்த்தைகளை இப்ப சொல்றேன், கேட்டுக்க: 'டாக்டர் ஷெப்பர்டா? பார்க்கர், ஃபெர்ன்லியின் பட்லர் பேசறேன். உங்களால இப்ப உடனடியா புறப்பட்டு வர முடியுமா, ஸார்? மிஸ்டர் ஆக்ராய்டு கொலை பண்ணப்பட்டிருக்கார்'.''

ஒருத்தருக்கொருத்தர் மாற்றிமாற்றி முழித்துக் கொண்டிருந்தோம்.

''இது ரொம்பக் கேவலமான விளையாட்டு, ஸார்'' என்றான் இறுதியாய், அதிர்ச்சி கொண்ட குரலில். ''இப்படியுமா ஒருத்தன் பேசுவான், போன்ல?''

''மிஸ்டர் ஆக்ராய்டு இப்ப எங்கே?'' என்றேன் நான் திடுமென்று.

''இன்னும் அவரோட படிக்குமறையில இருக்கணும்னு நினைக்கிறேன், ஸார். பெண்கள் படுக்கப் போயிட்டாங்க. மிஸ்டர் ப்ளண்ட்டும் மிஸ்டர் ரோமண்ட்டும் பில்லியர்ட்ஸ் ரூம்ல இருக்காங்க.''

''ஒரு நிமிஷம் உள்ளே போய் அவரைப் பார்த்துடலாம்னு தோணுது'' – நான் சொன்னேன். ''யாரும் மறுபடியும் அவரைத் தொந்தரவு பண்ணுவது அவருக்கு எரிச்சலுண்டாக்கும்னு எனக்கும் தெரியும், ஆனா, இந்த கீழ்த்தரமான விளையாட்டு என்னை இருப்புக்கொள்ளாம ஆக்கிடுச்சு. அவர் நல்லாதான் இருக்கார்னு ஜஸ்ட் எனக்கு நானே திருப்திப்படுத்திக்க விரும்பறேன்.''

''நிச்சயமா, ஸார். நீங்க சொன்னது என்னையும் கொஞ்சம் உலுக்கிப் பார்த்திருக்கு. கதவு வரை நானும் உங்க கூட வரதுல எந்த ஆட்சேபணையும்—''

''நாட் அட் ஆல்'' என்றேன் நான். ''கூட வா.''

வலப்பக்கம் இருந்த கதவினைக் கடந்து பார்க்கர் என் பின்தொடர கிளம்பினேன் நான். சின்ன தாழ்வாரத்தைத் தாண்டியதும் ஆக்ராய்டின் படுக்கையறைக்குக் கொண்டு செல்லும் படிகள் தென்பட்டன... ஏறினோம். அவருடைய படிக்குமறையின் கதவுகளைத் தட்டினோம்.

அங்கு இதற்கு பதில் கிடைக்கவில்லை. கதவின் பிடியைத் தாழ்த்தித் திறக்க முயன்றேன், ஆனால் அது உட்புறம் பூட்டப் பட்டிருந்தது.

''என்கிட்டே விடுங்க, ஸார்'' என்றான் பார்க்கர்.

அவனைப் போல குண்டுருண்டையாய் வளர்ந்திருந்த ஆளால் முடியவே முடியாது... இருந்தாலும் சுறுசுறுப்பாய் ஒரு காலை மடித்து முட்டிப்போட்டு உட்கார்ந்த அவன், சாவித்துவாரம் வழியாய் அறையுள் பார்த்தான்.

எழுந்தபடி, ''சாவி, சாவித்துவாரத்துலேயே விடப்பட்டிருக்கு, ஸார்'' என்றான். ''உள்பக்கத்துல. மிஸ்டர் ஆக்ராய்டு கதவைப் பூட்டிட்டு அப்படியே தூக்கத்துல விழுந்திருக்கணும். பாதகமில்லே, ஸார்.''

குனிந்தமர்ந்த நானும், பார்க்கரின் வாக்கியங்களை ஊர்ஜிதப் படுத்திக் கொண்டேன்.

''பார்த்தா, இதுல பாதகமொண்ணுமில்லேனு தான் படுது'' என்ற நான், ''இருந்தாலும் பாரு பார்க்கர்... நான் இப்ப உன் மாஸ்டரை எழுப்பத்தான் போறேன். அவரோட சொந்த இதழ்கள் திறந்து அவருக்கு ஒண்ணும் நேரலேனு கேட்ட திருப்தியில்லாம என்னால வீட்டுக்குத் திரும்ப முடியாதுப்பா'' என்றேன்.

இவ்வாறு சொல்லியபடியே, கதவுத் தாழ்ப்பாளைப் போட்டு டப்டப்பென அறைந்த நான், ''ஆக்ராய்டு, ஆக்ராய்டு, ஒரு நிமிஷம்'' என்றேன்.

ஆனால் இதற்கும் எவ்விதமான விடையும் வரவில்லை. நான் என் தோள் வழியாக திரும்பி நோட்டமிட்டேன். அப்படியே, ''இப்ப வீடு முழுக்க எச்சரித்து எல்லாரையும் எழுப்ப நான் விரும்பலே'' என்றேன் தயக்கத்தோடு.

நகர்ந்துப் போன பார்க்கர், நாங்கள் உள்ளே நுழைந்திருந்த ஹாலின்

கதவை அறைந்து மூடிவிட்டான். ஹால் அமைந்த முன்பகுதியையும், ஆக்ராய்டின் அறைகள் கொண்ட இப்பகுதியையும் பிரிப்பது, இந்த கதவு. ''இப்ப சரியாயிருக்கும்னு தோணுது, ஸார். பில்லியர்ட் இருக்கு மிடம் வீட்டின் அடுத்த பக்கத்துல இருக்கு. அப்படியே தான் கிச்சன் பகுதியும், பெண்கள் படுத்திருக்கும் பகுதியும்.''

விளங்கியதென்று ஒப்புதலாய் தலையசைத்து உணர்த்தினேன். பிறகு ஓர் இடியாய் கதவினை ஒருமுறை குத்தினேன். பிறகு குனிந்த மர்ந்து, சாவித்துவாரம் வழியே நுழைந்து அந்தப்பக்கம் உள்ளே போய் விழப் போகிறவனைப் போல், ''ஆக்ராய்டு, ஆக்ராய்டு. இது ஷெப்பர்ட். உள்ளே வர கொஞ்சம் அனுமதிக்கணும்'' என்று கத்தினேன்.

இன்னும் கூட – *அமைதி.* பூட்டப்பட்ட அறைக்குள் ஒரு வாழும் ஜீவன் இருப்பதற்கான எவ்வித அறிகுறியும் காணோம். நானும் பார்க்கரும் ஒருத்தருக்கொருத்தர் நோட்டமிட்டுக் கொண்டோம்.

''கவனி பார்க்கர்'' என்ற நான், ''நான் இந்தக் கதவை உடைச்சு இப்ப உள்ளே போகப் போறேன் – நாமனு கூட சொல்லலாம். யெஸ், நாம ரெண்டு பேரும். நான் இதுக்கான அனைத்துப் பொறுப்புக் களையும் ஏத்துக்கறேன்.''

''எனக்கும் இதே தான் தோணிச்சு, ஸார். இப்ப மிஸ்டர் ஆக்ராய்டு பற்றி எனக்கு பயங்கர பயம் வந்துடுச்சு. ஸ்டார்ட், ஸார்.''

சிறு தாழ்வாரத்தைச் சுற்றிலும் ஒரு முறை நோட்டமிட்ட நான் கனமான ஓக் மர நாற்காலியொன்றினைத் தள்ளிக் கொண்டு வந்தேன். நானும் பார்க்கரும் எங்களிருவருக்குமிடையே அதனை வைத்துக் கொண்டு எங்கள் குறியினை நோக்கி வேகமாய் தள்ளிக்கொண்டுப் போனோம். ஒன்று... இரண்டு... மூன்று... போராடினோம். அடுத்து முயற்சியில் தாழ்ப்பாள் நெகிழந்து எகிறிவிட நாங்கள் அறைக்குள் பிரவேசித்திருந்தோம்.

கனப்புக்கு முன்னால் கை வைத்த நாற்காலியில் நான் கிளம்பும் போது விட்டுவிட்டுப் போயிருந்த அதே மாதிரி உட்கார்ந்த நிலையிலிருந்தார் ஆர்க்ராய்டு. பக்கவாட்டில் அவரது தலை சாய்ந்துப் போயிருந்தது. அங்கு, பிரதானமாய் மறைவின்றி தெரியும் வகையில், அவரது கோட் காலருக்கு ஜஸ்ட் உடனடி கீழே இருந்தது, பளபளக்கும்

ஒரு வளைந்த உலோகம்.

சும்பிப் போயிருந்த உடலுக்கு வெகு நெருக்கத்துக்குப் போகும் வரை நானும் பார்க்கரும் நடந்துப் போனோம். அடக்கமுடியாமல் சுவாசக்காற்றை உஸ்ஸென்று பார்க்கர் உள்ளுக்கிழுத்துக் கொண்டு விக்கித்ததை நான் கேட்டேன்.

''பின்பக்கமா வந்து குத்தப்பட்டிருக்கார்'' என்றான் அவன் கிசுகிசுப்பாய். ''கொடுமை. கொடூரம்.

வியர்த்து விறுவிறுத்திருந்த அவனுடைய நெற்றியைக் கைக்குட்டை கொண்டு துடைத்தெறிந்த அவன், தயக்கமாயும் மிருதுவாயும் அவனுடைய கையை அந்த ஆயுதம் நோக்கி நீட்டினான். நெருங்கினான்.

''நீ அதை தொடவே கூடாது'' என்றேன் நான் கறாராய். ''உடனடியா போனுக்குப் போ. ம். போலீஸுக்கு போன் போடு. சொல்லு. என்ன நடந்திருக்கு எனும் தகவலை சொல்லு. அப்புறம் ரேமண்டுக்கும் ப்ளண்ட்டுக்கும் சொல்லி அனுப்பு.''

''யெஸ், ஸார்.''

இன்னும் வியர்வை ஊறிக்கொண்டிருந்த நெற்றியை வழித் தெறிந்துக் கொண்டு விரைந்தான் பார்க்கர்.

பண்ண வேண்டியிருந்த சின்ன சமாச்சாரத்தை நான் மேற்கொண் டேன். உடலை சிறிதும் அசைத்து விடக்கூடாது என்பதிலும் ஆயுதத்தைத் தொட்டு விடவே கூடாது என்ற முன்னெச்சரிக்கையிலும் நான் ஜாக்கிரதையாய் இருந்தேன். எந்தவொரு பொருளும் இப்போதைக்கு அசைக்கப்படவோ மாற்றப்படவோ தொடப்படவோ கூடாது என்பதில் ஸ்திரமானேன். நிச்சயமாய் சிறிது நேரத்துக்கு முன்னமேயே ஆக்ராய்டு மரணமடைந்திருக்க வேண்டும்.

அப்போது, இளைய ரேமண்டின், கிலிபற்றி குமுறிக் கலங்கும் குரலை, வெளியிலிருந்து கேட்டேன். ''என்னடா சொல்றே நீ! ஓ! அசாதாரணம்! டாக்டர் இப்ப எங்கே?''

விறுவிறுவென கதவு வரை வந்த அவன், முகம் முழுக்க வெளிறிப் போக, அந்த நிலைப்படியிலேயே அப்படியே நின்றுப் போனான். ஒரு கை அவன் தோளில் விழுந்து அவனை அகற்றி விட, ஹெக்டர் ப்ளண்ட் அவனைக் கடந்து உள்ளே நுழைந்திருந்தார்.

''மை காட்'' என்று இவருக்குப் பின்னாலிருந்த ரேமண்ட் கூக்குரலிட்டான்: ''அப்ப, இது உண்மை தான்!''

நாற்காலியை அடையும்வரை நேராய் உள்ளே வந்து சேர்ந்தார் ப்ளண்ட். கிடந்த உடல் வரை நெருக்கமாய் அவரும் வளைந்து குனிந்து விட, பார்க்கரைப் போலவே இவரும் அந்த வளைந்தக் கூராயுதத்தின் மீது கைகளைப் பதித்து விடப்போகிறார் என்றே எண்ணினேன் நான். உடனடியாய் ஒரு கையால் அவரை அப்படியே பின்னுக்கு இழுத்தேன்.

''எதுவும் நகர்த்தப்படக் கூடாது'' என விளக்கினேன் நான். ''அவர் இப்ப எப்படியிருக்காரோ அதே நிலைமையிலேயே போலீஸ் வந்து பார்க்கணும்.''

உடனடியாய் புரிந்துக் கொண்டவராய் தலையசைத்தார் ப்ளண்ட். வழக்கம்போலவே அவரது முகம் உணர்ச்சிகளற்றுத்தானிருந்தது, ஆயினும் அந்த இறுக்கமான முகமூடிக்கும் கீழே சில உணர்ச்சிப் பிரவாகங்களை நான் கண்டுபிடித்தேன் என்றே சொல்வேன். இப்போது எங்களுடன் இணைந்திருந்த ஜியோஃபெர்ரி ரேமண்ட், ப்ளண்ட்டின் தோளுக்கு மேலே தலையை நுழைத்துத் துளைப்பது போல பார்த்தான்.

''இது அநியாயம்'' என்றான் அவன், தாழ்ந்த குரலில்.

தற்சமயம் ப்ளண்ட் அவருடைய இயல்பு நிலைக்குத் திரும்பியிருந்தார்... ஆனால், மூக்கில் மாட்டிக்கொள்ள அவரது பார்வைக்கான கண்ணாடியை எடுத்து அதை சிறு துணியால் பாலிஷ் செய்தபோது அவருடைய கைகளிரண்டுமே நடுங்கிக் கொண்டிருப்பதை கவனித்தேன்.

''திருட்டு முயற்சி. அப்படித்தான் தோணுது'' என்றார். ''அவன் எப்படி உள்ளே வந்திருப்பான்? ஜன்னல் வழியா? ஏதாவது களவாடப் பட்டிருக்கா?''

கேட்டுக்கொண்டே டேபிள் வரை போனார் அவர்.

''நீங்க இது திருட்டு கும்பலோட கைவரிசைனா நினைக்கிறீங்க?'' – நான் மெதுவாய் கேட்டேன்.

''இது வேற என்னவா இருக்க முடியும்? இதுல தற்கொலை எனும் பேச்சுக்கே இடமில்லைனு நான் நினைக்கிறேன்.''

''இப்படி ஒரு கோலத்துல எந்த ஆளும் தன்னைத்தானே குத்திக்க

மாட்டான்'' என திட்டவட்டமாக சொன்னேன் நான். ''இது சர்வ நிச்சயமா கொலை. ஆனா என்ன குறிக்கோளுக்காக?''

''ரோஜருக்குனு இந்த உலகத்துல எதிரிங்களே கிடையாது'' என சாந்தமாய் சொன்னார் ப்ளண்ட். ''திருடன் தான் வந்திருக்கணும். ஆனா எதைக் குறி வெச்சுக்கிட்டு திருட வந்தான்? எதுவும் கலைக்கப்பட்ட மாதிரியே தெரியலியே?''

சொன்ன அவர் அறையை ஒரு சுற்று பார்த்தார். டேபிளிலிருந்த பேப்பர்களை இன்னமும் ரேமண்ட் அடுக்கிக் கொண்டிருந்தான்.

''இதுல எதுவுமே காணாமப் போயிருக்கிற மாதிரி தோணலே. எந்த டிராயராவது உடைக்கப்பட்டதாகவோ, திறக்கப்பட்டதாகவோ எவ்வித அறிகுறியும் தெரியலே'' என இறுதியாய் சொன்னான். ''இது மாயம் – மர்மம்.''

தனது தலையை மிகச்சின்னதாய் அசைத்தார் ப்ளண்ட். ''இங்கே தரையில சில கடுதாசிங்க இருக்கு'' என்றார் அவர்.

நான் அவற்றை கீழே கவனித்தேன். கொஞ்ச நேரத்துக்கு முன்பு ஆக்ராய்டு தவறவிட்ட சில கடிதங்கள் இன்னும் அப்படியே தரையிலேயே கிடந்தன.

ஆனால், மிஸஸ் ஃபெர்ரர்ஸின் கடிதம் தாங்கியிருந்த நீலநிற உறை மறைந்துப் போயிருந்தது. நான் பேச பாதி வாயைத் திறந்திருப்பேன்... அப்போது வீட்டின் அழைப்பு மணியோசை கணீரென அடித்தது. ஹாலில் குழப்பமான குரலோசைகளின் முணுமுணுப்பு. பிறகு லோக்கல் இன்ஸ்பெக்டருடனும் கான்ஸ்டபிளுடனும் நுழைந்தான் பார்க்கர்.

''குட் ஈவினிங், ஜென்டில்மென்'' என்றார் இன்ஸ்பெக்டர். ''நடந்துள்ள துக்கத்துக்கு நான் ரொம்பவும் வருந்தறேன். நல்ல கருணை மனம் படைத்த ரோஜர் ஆக்ராய்டு போன்ற மனிதருக்கா? பட்லர் இது ஒரு கொலைனு சொல்றான். விபத்தாகவோ அல்லது தற்கொலையாகவோ இருக்கும் சாத்தியமே இல்லையா?''

''அப்படி எதுவும் இருக்கவே முடியாது'' – நான் சொன்னேன்.

''ஆஹ்! வேலை வாங்கப் போகிற பிஸினஸ்.''

அவர் சொல்லி விட்டு உடலுக்குப் பக்கத்தில் வந்து நின்றுக் கொண்டார். ''இது நகர்த்தப்பட்டதா?'' – கூர்மையாய் கேட்டார் அவர்.

''உயிரற்றப் பொருளா ஆகியாச்சு என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதற்காக பரிசோதித்ததைத் தவிர – அது ஒண்ணும் அத்தனை கடினமான காரியமே கிடையாது – பாடியை நான் எவ்விதமாகவும் கையாளலே.''

''ஆஹ்! இங்கிருக்கும் எல்லாமும் கொலையாளி சுலபமா தப்பிச்சுட்டான் என்பதையே காட்டுது – அட்லீஸ்ட், தற்போதைக்கு! சரி... இப்ப நான் முழு கதையையும் கேட்கிறேன். யார் உடலைப் பார்த்தது?''

நேர்ந்த சூழ்நிலையை நான் ஜாக்கிரதையாய் விவரித்தேன்.

''ஒரு டெலிபோன் தகவல்னா சொல்றீங்க? பட்லர்கிட்டே யிருந்தா?''

''அந்தத் தகவல் – நான் தராதது'' என நிஜமாய் சொன்னான் பட்லர். ''இன்னிக்கு சாயங்காலம் முழுக்க நான் டெலிபோன் பக்கமே போகலே. நான் போகலே என்பதற்கு மற்றவங்க கூட சாட்சியா நிற்பாங்க.''

''விசித்திரமாயிருக்கு. அது பார்க்கர் குரல் மாதிரி ஒலிச்சதா, டாக்டர்?'

''வெல் – அதை கவனிச்சேன்னு நான் சொல்ல மாட்டேன். அது பார்க்கர் குரல் தான்னு நானா எடுத்துக்கிட்டேன்.''

''நேச்சுரலி. வெல்... நீங்க இந்த இடம் வரைக்கும் வந்தீங்க – கதவையும் உடைச்சீங்க – பிறகு பாவப்பட்ட ஆக்ராய்டு செத்துக் கிடப்பதையும் பார்த்தீங்க. அவர் எத்தனை நேரமா இப்படி பிரேதமா கிடப்பார்னு சொல்வீங்க, டாக்டர்?''

''குறைந்தபட்சம் அரை மணிநேரம் - கூடவும் இருக்கலாம்.''

''கதவு உள்பக்கமா பூட்டப்பட்டிருந்ததுனு சொல்றீங்க. அப்ப ஜன்னல்?''

''இன்னிக்கு சாய்ங்காலம் இங்கே நான் வந்திருந்தபோது திரு ஆக்ராய்டின் வேண்டுகோளுக்கிணங்க நானே போய் ஜன்னலை இழுத்து மூடி தாளிட்டேன்.''

இன்ஸ்பெக்டர் தப்படிகள் வைத்து ஜன்னல் வரை இப்போது போய், அதன் சீலையை விலக்கி விட்டார்.

''வெல், அது இப்போ எப்படியோ திறந்திருக்கு'' என குறிப்பு

தந்தார்.

ஆமாம். அது நிஜமாய் திறந்திருந்தது. உள்ளும் வெளியுமாய் நெட்டைக்குத்தலாய் ஆடும் சீசாப் பலகை போன்ற ஜன்னலது. அதன் கீழ் பகுதி முழுக்க திறந்துக் கிடந்தது.

அசைவற்று ஓவியம் போல கிடந்த வெளிப்புறத்தை நோக்கி தன்னுடைய சக்திமிகு டார்ச் விளக்கின் ஒளியை நீட்டினார் இன்ஸ்பெக்டர். ''இந்தப் பக்கமாத்தான் அவன் வெளியேறியிருக்கான்'' என்றார். ''மேலும் இப்படியேதான் உள்ளேயும் வந்திருக்கான். இங்கே பாருங்க.''

டார்ச் விளக்கின் பிரகாசமான வெளிச்சத்தில் பற்பல வரையறுக்கப்பட்ட காலடித்தடங்களை ஜன்னலின் மரச்சட்டத்தில் பார்க்க முடிந்தது. அடியில் முத்து முத்தாய் ரப்பர் வட்டங்கள் கொண்ட ஷூவின் தடங்களவை. துல்லியமாய் புலப்பட்ட ஒரு காலடித்தடம் உள்பக்கமாய் திசைகாட்டியது, அதன்மேல் ஏறத்தாழ அமைவது போல படிந்திருந்த இன்னொரு தடம், வெளிப்பக்கமாய் நீண்டது.

''ஏதாவது விலையுயர்ந்த சாமான்கள் தவறியிருக்கா?''

ஜியோஃபெர்ரி ரேமண்ட் மறுப்பாய் தயைசைத்தான். ''எங்க கண்ணுக்குத் தெரியற மாதிரி எதுவும் காணாமப் போன மாதிரி படலே, ஸார். குறிப்பிட்டு சொல்லும்படியான விலையுயர்ந்த எந்தவொரு சாமானையும் மிஸ்டர் ஆக்ராய்டு இந்த அறைக்குள்ளே வைக்கலே.''

''ஹ்ம்'' என்றார் இன்ஸ்பெக்டர். ''அந்த மனுஷன் திறந்த ஜன்னலைப் பார்த்திருக்கான். ஏறி உள்ளே குதிச்சிருக்கான். அங்கே ஆக்ராய்டு உட்கார்ந்திருப்பதாய் அவன் பார்த்திருப்பான் – ஆனா அவர் ஆழ்ந்த நித்திரையில இருந்திருக்கலாம். ரோஜரைப் பின்பக்கத்திலிருந்து வெட்டிச் சாய்த்திருக்கலாம். அப்புறம் கை நடுங்க கால் நடுங்க வந்தவழியே கம்பி நீட்டியிருப்பான். ஆனா அவன் காலடித் தடங்களை ரொம்ப வெளிப்படையாவே விட்டு வெச்சிருக்கான். அதிக சிரமமில்லாம அவனை நம்மால அடைய முடியணும். இந்தப் பகுதியில சந்தேகப்படும்படியான அந்நியர்கள் யாராவது சுத்திக்கிட்டு இருந்தாங்களா, ஆங்?'

''ஓ!'' என்றேன் நான்.

''என்னது டாக்டர்?''

''இன்னிக்கு ராத்திரி நான் ஓர் ஆம்பிளையைப் பார்த்தேன் – ஜஸ்ட் வாசல் கேட்டை நான் கடந்தபோது. ஃபெர்ன்லி பார்க்குக்கு எப்படிப் போவதுனு அவன் வழி கேட்டான்.''

''இது எத்தனை மணிக்கு நடந்திருக்கும்?'

''ஒன்பது மணிக்குத்தான். கேட்டை நான் கடந்துக்கிட்டிருந்த போது தான் மாதா கோயில் மணியோசை ஒன்பதுனு அடிச்சது.''

''அவனை விவரிக்க முடியுமா?''

என் சக்திக்குட்பட்டு எத்தனை முடியுமோ அத்தனை அழகாய் விவரித்தேன்.

இன்ஸ்பெக்டர் பட்லர் பக்கம் திரும்பினார். ''இந்த விவரிப்புக்கு உட்பட்ட யாராவது வாசலுக்கு வந்தாங்களா?''

''நோ, ஸார். இன்னிக்கு சாயந்திரத்துக்கு மேல ஒரு நாதி கூட இந்தப் பக்கம் வரலே, ஸார்.''

''பின்பக்கம்?''

''அது எனக்குத் தெரியாது, ஸார். இல்லேனு தான் நினைக்கிறேன். விசாரிச்சு வேணும்னா சொல்றேனே.''

அவன் கதவு பக்கம் உடனடியாய் நகர ஆரம்பித்து விட, இன்ஸ்பெக்டர் பெருசாய் கையமர்த்தி நிறுத்தி விட்டார். ''நோ, தேங்க்ஸ். விசாரணையெல்லாம் என் வழியில நானே பண்ணிப்பேன். ஆனா இப்ப முதல் வேலையா இந்த நேர விவகாரத்தை நான் சரிபண்ணிக்க விரும்பறேன். கடைசியா மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு எப்ப உயிரோட பார்க்கப்பட்டார்.''

''நான் தான் *அப்படிப்* பார்த்திருக்கணும்'' என்றேன் நான். ''நான் கிளம்பும்போது – எப்ப அது – ஆங், ஒன்பதடிக்க பத்து நிமிஷமிருக்கும் போது. அவரை யாரும் வந்து தொந்தரவு பண்ணக்கூடாதுனு விரும்புவதா அவர் சொன்னார். அந்த ஆணையை நான் அப்படியே பார்க்கரிடம் திருப்பிச் சொல்லிட்டேன்.''

''அப்படியே, ஸார்'' என்றான் பார்க்கர்.

''மிஸ்டர் ஆக்ராய்டு ஒன்பதரை மணிக்கும் நிச்சயமா உசுரோடத்தானிருந்தார்'' என வலு கூட்டினான் ரேமண்ட். ''ஏன்னா – இங்கே உள்ளே அவர் பேசிக்கிட்டிருந்ததை நான் கேட்டேன்.''

''யாரோட அவர் பேசிக்கிட்டிருந்தார்?'

''அது எனக்குத் தெரியாது. அந்த சமயத்துல டாக்டர் ஷெப்பர்ட் அவர்கூட இருந்ததாலே அவர்தான் ஐயாவோட பேசிக்கிட்டிருக்கார்னே நான் எடுத்துக்கிட்டேன். நான் கவனம் செலுத்தியிருந்த சில ஆவணங்கள் மீதான சந்தேகங்களை அவர்கிட்டே கேட்க விரும்பினேன். ஆனா, சில குரல்கள் உள்ளேயிருந்து வருவதைக் கேட்டபோது தான், எந்தவிதமான இடையூறுகளும் இல்லாம அவர் டாக்டர் ஷெப்பர்ட் கூட பேசயிருப்பதாய் சொன்னது எனக்கு நினைப்புக்கு வந்தது. திரும்பிப் போயிட்டேன் நான். ஆனா இப்பப் பார்த்தா டாக்டர் அதுக்கு முன்னாடியே கிளம்பிப் போயிட்ட சேதி வெளியே வருது.''

நான் ஒப்புதலாய் தலையசைத்தேன். ''நான் ஒன்பதே காலுக்கு வீட்டிலிருந்தேன். போன் அழைப்பு வர்ற வரைக்கும் நான் வேற எங்கேயும் போகவும் இல்லே.''

''ஒன்பது அடிச்சு அரை மணி கடந்த பிறகு, அவர்கூட அப்போ வேற யார்தான் இருந்திருக்க முடியும்?'' – விசாரணைக் கேள்வி தொடுத்தார் இன்ஸ்பெக்டர். ''அது நீங்க கிடையாதே, மிஸ்டர்—''

''மேஜர் ப்ளண்ட்'' என எடுத்துச் சொன்னேன் நான்.

''ஆ – மேஜர் ஹெக்டர் ப்ளண்ட்?'' – கேட்டார் இன்ஸ்பெக்டர், மதிப்புக்குரிய மரியாதை கேட்ட குரலில் வட்டமிட்டிருக்க.

ஏற்றுக்கொள்ளும் விதமாய் மத்யமாய் தலையசைத்துக் காட்டினார் ப்ளண்ட்.

''இந்தப் பகுதியில உங்களை ஏற்கெனவே முன்னாடி ஒரு தடவை பார்த்திருப்பதா தோணுது, ஸார்'' என்று சொன்னார் இன்ஸ்பெக்டர். ''உடனடியா இப்ப உங்களை என்னால அடையாளம் காண முடியாம போயிடுச்சு... ஆனா நீங்க போன மே'ல ஆக்ராய்டு கூட வந்து தங்கியிருந்தீங்க, இல்லே?''

''ஜுன்'' – திருத்தினார் ப்ளண்ட்.

''யா, யா. அது ஜுன். ஆங், இப்ப நான் கேட்டது மாதிரி ஒன்பதரை மணிக்கு மிஸ்டர் ஆக்ராய்டு கூட உள்ளேயிருந்த அது, நீங்க கிடையாதே?''

ப்ளண்ட் மறுப்பாய் தலையசைத்தார். ''டின்னருக்கு அப்புறம் அவரை நான் சந்திக்கவேயில்லே.''

''உள்ளே போய்க் கொண்டிருந்த சம்பாஷணையில் எதையுமேவா

நீங்க கேட்கலே, ஸார்?''

''அதன் ஒரு துண்டை நான் கேட்க நேர்ந்தது'' என்றான் காரியதரிசி. ''உள்ளே டாக்டர் ஷெப்பர்ட் தான் இருக்கார்னே நான் நினைச்சிருந்ததாலே, அவ்வசனத்துண்டு, எனக்கு தேவையேயற்ற ஒன்றாய் தான் பட்டது. என்னுடய சக்திக்கு உட்பட்டு, அந்தத் துண்டு வசனங்கள் இவை தான். மிஸ்டர் ஆக்ராய்டு: *''சமீப காலமாய் என் பர்ஸ் மேல் கண்பதித்து அடிக்கடி அதற்கு வரும் அழைப்புகள் அதிகமாகிக் கொண்டே போகின்றன.''* இது தான் அவர் சொன்னார். அப்புறம்: *''இதனால், உன் தேவைகளை இனிமேல் என்னால் பூர்த்தி பண்ண முடியாமல் ஆகி விடுமோ என்று எனக்கு அச்சமாகக்கூட உள்ளது.''* மறுபடியும் நான் உடனடியா திரும்பிப் போயிட்டேன் அதனால என்னால மேற்கொண்டு வேற எதையும் கேட்க முடியலே. அப்ப நான் அதிகமா அதிசயிச்சுப் போனேன், ஏன்னா —''

''— ஏன்னா, டாக்டர் தனக்காக கடன் வாங்குவது கிடையாது... மற்றவங்களுக்காக நன்கொடைகள் கேட்டு நச்சரிப்பவரும் கிடையாது'' என நான் முடித்துக் கொடுத்தேன்.

''பணம் கேட்டு வற்புறுத்தல்'' – ஓசையின்றி சொல்லிக் கொண்டார் இன்ஸ்பெக்டர். ''இதுல நமக்கு அதிமுக்கியமான க்ளூ இருக்கலாம்'' என்றார். அவர் பட்லர் பக்கமாய் திரும்பினார்: ''பார்க்கர்... வாசக்கதவு வழியா யாரும் இன்னிக்கு சாயந்திரத்திலிருந்து உள்ளே விடப்படலேனு நீ சொன்னே.''

''அப்படித்தான் நான் சொன்னது, ஸார்.''

''அப்படினா, மிஸ்டர் ஆக்ராய்டே அந்த அந்நிய ஆளை உள்ளே விட்டிருப்பார் என்பது போலத்தான் தெரியுது. ஆனா எனக்கு இதுல இன்னொண்ணு விளங்கலே —''

இன்ஸ்பெக்டர் ஒருவித பகல் கனவுக்குள் சில நிமிடங்கள் ஆழ்ந்துப் போனார். முழுகிக் கொண்டிருந்த தன்னை அவரே இழுத்து நினைவுலகுக்கு வந்து, ''ஆனா ஒண்ணு சுத்தமா தெரியுது'' என்றார். ''ஆக்ராய்டு ஒன்பதரை மணிக்கு உயிரோட நல்லாத்தானிருந்திருக்கார். இது தான் அவர் உயிரோட இருந்ததா அறியப்படும் கடைசி சந்தர்ப்பம்.''

பார்க்கர் மன்னிப்புக் கோரும் விதமாய் ஓர் இறுமலை வெளியிட அது இன்ஸ்பெக்டரின் பார்வையை அப்போதைக்கு அவன் மீது

டெரஸ் - மாடி நடைபகுதி


புறக்கடை
டைனிங்
வரவேற்பறை
சின்ன
மாடிப்படிகள்
ஹால்
பில்லியர்ட் அறை
படிக்குமறை
STAIRCASE
முன்
நுழைவாயில்
சுருக்குப்
பாதை
LAWN
சின்னத் தோட்ட
அறை
கேட்

திசைதிருப்பி வைத்தது. ''என்ன?'' என்று கேட்டார் கூர்மையாய்.

''இடையூறுக்கு மன்னிக்கணும், ஸார். அதுக்கப்புறமும் அவரை மிஸ் ஃப்ளோரா சந்திச்சுது, ஸார்.''

''மிஸ் ஃப்ளோரா?''

''யெஸ், ஸார். ஒன்பதே முக்கால் இருந்திருக்கலாம் அப்ப. இதுக்கு அப்புறம் தான் மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு அன்னிக்கு ராத்திரி முழுமைக்கும் ஒருத்தராலும் இடையூறு பண்ணப்படக் கூடாதுனு விரும்புவதா அவங்க சொன்னது.''

''அந்தத் தகவலோட அந்தப் பொண்ணு அவரால உன்னிடம் அனுப்பப்பட்டாளா?''

''அப்படியும் சொல்லிட முடியாது, ஸார். சோடாவும் விஸ்கியும் வெச்ச ட்ரேயை எடுத்துக்கிட்டு நான் வந்துக்கிட்டிருந்தேன். அப்போ இதே ரூமிலிருந்து வெளியேறிய மிஸ் ஃப்ளோரா படிக்குமறைக்கு முன்னாடி இருக்கும் சின்ன பகுதியில் என்னை வெச்சு, யாரும் வந்து இடையூறு தரக்கூடாதுனு ஐயா கறாரா சொன்னதா சொன்னாங்க.''

இதுவரை காட்டியதை விடவும் அதிகமான கவனம் பொதித்து இப்போது பட்லரைக் கவனித்தார் இன்ஸ்பெக்டர். ''உனக்குத்தான் மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டைத் தொந்தரவு பண்ணக்கூடாதுனு ஏற்கெனவே தகவல் தரப்பட்டிருக்கே? இல்லையா?''

பார்க்கர் தடுமாறத் துவங்கினான். அவனுக்கு நடுங்கியது.

''யெஸ், ஸார்... யெஸ், ஸார். அப்படியே தான், ஸார்.''

''அப்படியிருந்தும் தொந்தரவு பண்ண நீ போனே?''

''அதை நான் மறந்துட்டேன், ஸார். அதாவது – இந்த சமயத்துல தெனமும் விஸ்கியும் சோடாவும் ஐயாவுக்குக் கொண்டு போற வழக்கம் இருப்பதாலேனு சொல்ல வர்ரேன், ஸார். தூங்கப் போறதுக்கு முன்னாடி வேற ஏதாவது உதவி வேணுமானு கேட்கவும் விரும்பினேன், ஸார். இது தெனமும் பண்றது. வழக்கம்போல டியூட்டியைப் பண்ணிட்டேன், ஸார்... *சிந்திக்காம.*

இந்தக்கணத்தில் தான் பார்க்கர் அதிகபட்ச சந்தேகவுணர்ச்சியில் பதைபதைத்துப் போவதை என்னால் கண்கூடாக பார்க்க முடிந்தது. மனுஷன் உடம்பு முழுக்க நடுங்கினான்... நெளிந்துப் போனான்.

''ஹ்ம்'' என்ற இன்ஸ்பெக்டர், ''மிஸ் ஆக்ராய்டை நான் இப்பவே

பார்க்கணும். இப்போதைக்கு, இந்த அறையை, இது எப்படி இருக்கோ அதே நிலைமையில விட்டுட்டுக் கிளம்புவோம். மிஸ் ஆக்ராய்டு என்கிட்டே என்ன சொல்ல விரும்பறாங்க என்பதைக் கேட்ட பிறகு நான் மறுபடியும் இங்கே வரேன். ஜன்னக்கதவை மூடி போல்ட் போடுகிற முன்னெச்சரிக்கையை மட்டும் செஞ்சுடுவோம்.

இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை நிறைவேற்றப்பட, ஹால் நோக்கிப் பாதை வகுத்துக் கொண்டு கிளம்பினார் அவர். நாங்கள் பின்தொடர்ந்தோம். அப்போது கண நேரம் தயங்கி நின்ற அவர், சிறு படிக்கட்டுகள் கொண்ட பகுதியைக் கண்களால் பார்த்தபடி, தனது தோள்வழியே ஏட்டுடன் பேசினார்: ''ஜோன்ஸ்... நீ இங்கேயே இருந்து விடுவது நல்லது. அந்த ரூமுக்குள்ளே யாரையும் போக விடாதே.''

இதற்கு மிகவும் மரியாதையாய் குறுக்கிட்டான் பார்க்கர். ''கோவிச்சுக்கக் கூடாது, ஸார். இப்ப நம்மை ஹாலுக்குள் நுழைய வழிவிடும் அந்தக் கதவை மூடிப் பூட்டிட்டா யாராலும் ஐயாவோட பகுதிக்கு வரவே முடியாது, ஸார். இந்தச் சின்னப்படிக்கட்டுகள் ஐயாவோட படுக்கையறை மற்றும் பாத்ரூம் ஆகிய இரண்டுக்கும் மட்டும் தான் இட்டுச் செல்லும். வீட்டின் வேற எந்தப் பகுதிக்கும் இது தொடர்பு ஏற்படுத்தாது. அந்தப் பகுதி அவருக்கே அவருக்குனு தனிமைப்படுத்தப்பட்டதுனு இருக்க அவர் விரும்பினார், ஸார்.''

அவ்விடத்தைத் துல்லியமாய் விளக்கவும் நிலைமையைச் சரியாய் புரிய வைக்கவும், வீட்டின் இந்த வலப்புறப் பகுதியின் அமைப்பினை நேயர்களுக்கு இணைத்துத் தந்துள்ளேன். பார்க்கர் சொன்னது போலவே, சிறு படிக்கட்டுகள், இரண்டு அறைகளை ஒன்றாக்கிப் பெரிதுபடுத்தப்பட்ட ஒரேயொரு பெரிய படுக்கையறைக்கு சென்று முடிந்தன... அதனருகில் குளியலறை மற்றும் கழிவறை.

இன்ஸ்பெக்டர், அமைப்பினை ஒரு நோட்டமிட்டுத் தனக்குள் வாங்கிக் கொண்டார். ஹாலுக்குள் நுழைந்ததும் இரு பகுதிகளையும் பிரித்தக் கதவினைப் பூட்டி சாவியைச் சட்டைப் பைக்குள் நழுவ விட்டுக் கொண்டார். பிறகு தணிந்த குரலில் கான்ஸ்டபிளுக்கு இன்ஸ்பெக்டர் ஏதோ கட்டளைகளைப் பிறப்பிக்க, கேட்டுக் கொண்ட ஏட்டுக் கிளம்ப ஆயத்தமானான்.

''நாம அந்த கால் தடங்கள் மீது வேலையை முடுக்கி விட

வேண்டியிருக்கு'' என்று விளக்கினார். ''அதுக்கெல்லாம் முன்னாடி, மொதல்ல, நான் மிஸ் ஆக்ராய்டு கூட பேசியாகணும். அவங்க மாமாவைக் கடைசியா பார்த்த மனித ஜீவன் – அவர் தான். அவங்க காதுக்கு விஷயம் போயிடுச்சா?''

ரேமண்ட் மறுப்பாய் தலையசைத்தான்.

''வெல், அப்படினா, அடுத்த ஐந்து நிமிடங்கள் வரைக்கும் அவங்களுக்கு எதுவும் நாம சொல்லத் தேவையில்லை. அவங்க மாமாவோட சங்கதியைப் பற்றிக் கேட்டு நிலைகுலையாம இருந்தா, அவங்களால என் கேள்விகளுக்கு நல்லபடியா பதில் தர முடியும். போய் சின்ன திருட்டு நடந்துப் போச்சுனு அவங்ககிட்டே சொல்லிட்டு, உடை மாற்றிக் கீழே வந்து சின்ன விசாரணையில பங்கு கொள்ள முடியுமானு கேளுங்க.''

இதற்கு மாடிப்பகுதிக்குப் போனது, ரேமண்ட். திரும்பும்போது, ''மிஸ் ஆக்ராய்டு இன்னும் சில நிமிடங்கள்ல வந்துடுவாங்க'' என்றான். ''நீங்க ஆலோசித்ததை அப்படியே அவங்ககிட்டே சொல்லிட்டேன்.''

தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் ஆவதற்குள் மாடிப்படிகள் இறங்கிக் கொண்டிருந்தார் ஃப்ளோரா. வெளிர் பிங்க் நிற நைட்டியில் புகுந் திருந்தார். விறுவிறுப்பாகவும் அதிர்வுடனும் தெரிந்தார்.

இன்ஸ்பெக்டர் முன்னோக்கி சென்றார். ''குட் ஈவினிங், மிஸ் ஆக்ராய்டு'' என்று போலீஸ்காரத்தனமாய் சொன்னார். ''திருட்டுக் கும்பலோட கை வரிசை காட்டப்பட்டிருக்கோனு சந்தேகிக்கிறோம். இதுல எங்களுக்கு உங்களோட உதவி வேணும். இதென்ன அறை – பில்லியர்ட்ஸ் அறை? இதுக்குள்ளே வாங்க. உட்காருங்க.''

சுவரின் நீளம் முழுதும் நீண்டுப் போயிருந்த மெத்தை திவானின் நுனியில் உட்கார்ந்தாள் ஃப்ளோரா. நிமிர்ந்து இன்ஸ்பெக்டரைப் பார்த்தாள். ''எனக்கு இன்னும் எதுவும் தெளிவாகலே. எது திருடப் பட்டிருக்கு? இதுல நான் என்னத்தை உங்ககிட்டே சொல்லணும்னு எதிர்பார்க்கிறீங்க?''

''விஷயம் இவ்ளோ தான், மிஸ் ஃப்ளோரா. இங்கிருக்கும் பார்க்கர் நீங்க மிஸ்டர் ஆக்ராய்டு அறையிலிருந்து ஒன்பதே முக்கால் மணிக்கு வெளியே வந்தீங்கனு சொல்றான். இது சரியா?''

''ரொம்பச் சரி. குட் நைட் சொல்ல நான் அவரைப் பார்க்கப்

போயிருந்தேன்.''

''சொல்லப்படும் நேரம் சரிதானே?''

''வெல்... அதையொட்டிய நேரமாத்தானிருக்கணும். புள்ளி வெச்சு என்னால சொல்ல முடியலே. தோராயமா – யெஸ், இருக்கும்.''

''அப்போ உங்க மாமா தனியா இருந்தாரா? இல்லே, யாருடனாவது இருந்தாரா?''

''அவர் தனியா இருந்தார். டாக்டர் ஷெப்பர்ட் கிளம்பிப் போயிருந்தார்.''

''அங்கேயிருந்த ஜன்னல் திறந்திருந்ததா அல்லது மூடியிருந்ததானு பார்க்கும் சந்தர்ப்பம் ஏதாவது—?''

ஃப்ளோரா அவள் தலையை மறுப்பாய் அசைத்தாள். ''என்னால அது சொல்ல முடியாது. சீலைகள் இழுத்து மூடப்பட்டிருந்தன.''

''நானும் நினைச்சேன்.''

ஞாபகப்படுத்திக் கொள்பவளைப் போல சற்று நேரம் நிறுத்தினாள் ஃப்ளோரா. ''உள்ளே போன நான், 'தூங்கப் போறேன் அங்கிள். குட் நைட். இன்னிக்கு ரொம்ப ஆயாசமா வருது'னேன். ஒருவகையான உறுமலை அவர் வெளியிட்டார். அவர் வரை போன நான் அவருக்கு முத்தம் தரும்போது இந்த ஃப்ராக்குல நான் ரொம்ப அழகா தெரியறேன் என்பது போல எதுவோ சொன்னார். உடனடியா கிளம்பும்படியும் அவர் ரொம்ப பிஸியா இருப்பதாகவும் சொன்னார். நான் வந்துட்டேன்.''

''அவருக்கு இடையூறே கூடாதுனு ரொம்ப ஸ்பெஷலா வலியுறுத்தி சொன்னாரா என்ன?'

''ஓஓ, மறந்துட்டேனே. அவர் சொன்னார்: *'இன்னிக்கு ராத்திரிப் பொழுதுக்கு இதுக்கு மேல எனக்கு இனி ஒண்ணும் வேண்டாம்னு பார்க்கர்கிட்டே சொல்லிடு. அவன் வந்து என்னைத் தொந்தரவு பண்ணக்கூடாது.'* இந்தப் படிக்குமறைக் கதவுக்கு வெளியில பார்த்தீங்கனா ஒரு சின்ன ரேழியிருப்பது விளங்கும் – அதாவது சின்ன இடம்... நாலஞ்சு பேர் நின்னு பேசலாம் என்பது போல. தாராளமாயிருக்கும். அங்கேயே, கதவுக்கு உடனடி அருகாமையிலேயே பார்க்கரைப் பிடிச்ச நான் அப்படியே அதை அவன்கிட்டே சொல்லிட்டேன்.''

''யெஸ்'' என்றார் இன்ஸ்பெக்டர், சிந்தனையாய்.

''ஓ கே. திருடப்பட்டது என்ன என்பதை நீங்க என்கிட்டே சொல்லக்

கூடாதா?''

காட்டுத்தனமான பயம் பெண்ணின் முகத்தில் படர்ந்தது. அவள் துணுக்குறத் தொடங்கினாள். ''என்ன சமாச்சாரம்? நீங்க எதையோ என்கிட்டேயிருந்து மறைச்சு வைக்கப்பார்க்கிறீங்க?''

அவருக்கே உரித்தான மரம் போன்ற நடைநடந்து, இன்ஸ்பெக்டருக்கும் இளையவளுக்கும் இடையே வந்து நின்றார் ப்ளண்ட். அவள் தனது ஒரு கையை அவரை நோக்கி நீட்ட, அதை தனது இரு கைகளுக்குள்ளும் வாங்கிக் கொண்டு சிறு குழந்தை ஒன்றைத் தட்டிக்கொடுப்பது போல் அவர் தட்ட, நடக்கக்கூடாத ஏதோ நடந்துள்ளது என்பது போல துரிதமாய் அவர் நோக்கிப் பார்வையை ஊடுருவினாள் அவள்.

''ஒரு துக்க சேதி ஃப்ளோரா'' என்றார் அவர் சாந்தமாய். ''நம் எல்லோருக்குமே இது துக்கமான சேதிதான். உன்னோட மாமன் —''

''யெஸ்?''

''இது உனக்கு ஒரு பேரதிர்ச்சியா இருக்கப் போகுது, கண்ணே. ஜாக்கிரதை. *ரோஜர் ஆக்ராய்டு – கொல்லப்பட்டார்.''*

அவரிடமிருந்து அப்படியே தன்னை விடுவித்துக் கொண்டு விலகிப் பின்வாங்கிய அவளுடைய கண்களில் தீர்க்கத்தனம் குறைந்து கொடூரகிலிப் பரவலானது. ''எப்போ?'' – குரல் கம்மக் கேட்டாள் அவள். ''எப்போ?''

''மன்னிக்கணும் – அது, நீ கிளம்பி வந்த உடனேயே'' என்றார் ப்ளண்ட், ஆழ்ந்து.

தனது தொண்டை வரை நெரித்துக் கொள்வது போல் கைகளைக் கொண்டு போன ஃப்ளோரா வீலென்று கதறினாள். நழுவலாய் விழுந்தவளைத் தாங்கிப் பிடிக்க நான் ஓடினேன். அவள் மயங்கி விட்டாள். நானும் ப்ளண்ட்டும் அவளைத் தாங்கிப் பிடித்து மாடிப்படிகளேறிக் கொண்டு போய் அவளுடைய படுக்கையில் கிடத்தி விட்டோம். பிறகு அவர் துணையோடு போய் அந்த மிஸஸ் ஆக்ராய்டை எழுப்பி நடந்துள்ள துயர உண்மையைச் சொல்லத் துணிந்தேன். துரிதமாய் ஃப்ளோரா மீண்டு விட அவளை அவளுடைய தாயாரிடம் ஒப்படைத்தேன் மயக்கமான பெண்ணுக்கு என்னென்ன பண்ண வேண்டும் என்ற மருத்துவ அறிவுறுத்தலோடு. பிறகு கீழ்ப்பகுதிக்கு மறுபடியும் நான் இறங்கிக் கொண்டிருந்தேன், விரைவாக.

அத்தியாயம் 6

துனிஸியாவிலிருந்து வந்த பிச்சுவாக்கத்தி

அடுக்களைப் பகுதிக்கு வழி பண்ணித்தரும் கதவு வழியே வெளிவந்துக் கொண்டிருந்த நிலையில் இன்ஸ்பெக்டரைப் பிடித்தேன்.

''அந்த யங் லேடி எப்படியிருக்காங்க, டாக்டர்?'' என்றார்.

''தெளிஞ்சுட்டா. அவ அம்மா கூடவே இருக்காங்க.''

''நல்லது. வேலைக்காரனுங்களைக் கேள்விக் கேட்டுக்கிட்டிருந்தேன். இன்னிக்கு ராத்திரி பின்பக்கமா வந்து யாரும் கதவைத் தட்டலேனு மறுக்கறாங்க. அந்த அந்நியனைப் பற்றிய உங்க விவரிப்பு குழப்பமானதாயிருக்கு. மேற்கொண்டு முன்னேற அவனைப் பற்றி இன்னும் நல்லா ஸ்திரமான அடையாளங்களை உங்களால தர முடியாதா?''

''முடியாது போலத்தான் நிலைமையிருக்கு'' என்றேன் நான் வருத்தமாய். ''இது ஒரு காரிருள் இரவு, கவனிச்சிருப்பீங்க. மேலும், நாய் நாக்கு போல நீண்டிருந்த கோட் காலரைத் தூக்கி கழுத்துக்கு மேல போகும்படியும், கண்களை மறைச்சுத் தொங்கும்படி தொப்பியையும், அவன் ஏற்பாடு பண்ணி அணிஞ்சிருந்தான்.''

''ஹ்ம்'' என்றார் இன்ஸ்பெக்டர். ''அவனா முகத்தை வேணும்னே மறைச்சுக்கப் பிரயத்தனப்பட்டது மாதிரி தெரியுது. அது, உங்களுக்குத் தெரிஞ்ச முகங்கள்ல யாருடையதும் கிடையாது என்பதுல நீங்க ஸ்திரமா இருக்கீங்களா?''

அப்படித்தான் என்று நான் பதில் தந்தாலும், அடித்து ஒரு முடிவாய்

சொல்ல இயலவில்லை. அந்த அந்நியனின் குரல் எனக்குப் பழக்கப் படாத ஒரு குரல் கிடையாது என்று எனக்குள் விளைந்த பதிப்பினை நான் இப்போது ஞாபகப்படுத்திக் கொண்டேன். விட்டு விட்டு, இதை நான் அப்படியே இன்ஸ்பெக்டரிடம் தடுமாறி சொல்லி விட்டேன்.

''கரடுமுரடா – படிப்பறிவற்றவன் குரல் போல இருந்ததுனு சொல்றீங்க, ஆங்?''

நான் ஒப்புக்கொண்டேன்... ஆனால், குரலிலிருந்த அந்தக் கரடுமுரடான குணாதிசயம் ஏறக்குறைய மிகைப்படுத்திக் காட்டப் பட்ட ஒன்றாய் தான் எனக்குப்பட்டது. ஒரு வேளை, இன்ஸ்பெக்டர் கருதுவது போலவே, அவன் தன்னுடைய முகத்தினை அடையாளம் தெரியாமல் மறைத்துக் கொள்ள முயன்றிருக்கிறான் என்றால், அதே போல அவனுடைய குரலுக்கும் ஒரு முகமூடியைப் போர்த்த அவனுக்கு எத்தனை நேரம் ஆகியிருக்கப் போகின்றது?

''மறுபடியும் ஒருமுறை அந்தப் படிக்குமறைக்கு என்னோட வர முடியுமா, டாக்டர்? அங்கே ஓரிரு விஷயங்கள் நான் உங்களைக் கேட்கப் பிரியப்படறேன்.''

நான் இணங்கினேன். பூட்டப்பட்ட அப்பகுதி கதவினை இன்ஸ்பெக்டர் டேவிஸ் திறந்ததும் நாங்களிருவரும் உள்ளே நுழைந்து விட உடனேயே எங்களுக்குப் பின்னால் கதவினை அறைந்து மூடி விட்டார் அவர்.

''நம்மளை யாரும் தொந்தரவு பண்ணக்கூடாது'' என்றார் அவர் இறுக்கமாய். ''யாரும் மறைஞ்சிருந்து பேசும் ரகசியங்களை ஒட்டும் கேட்டுடக் கூடாது. சொல்லுங்க – என்ன இந்த ப்ளாக்-மெயில் சமாச்சாரம்?''

''ப்ளாக்-மெயில்!'' அதிர்ந்துப் போய் அப்படியே ஆச்சரியத்தில் கூவி விட்டேன் நான்.

''இது ஒருவேளை இந்த பார்க்கர் பயலோட கற்பனையின் வெற்றியா இருக்குமா? இல்லே, இந்த வார்த்தைகள்ல நெஜமாவே அர்த்த மிருக்கா?''

''ப்ளாக்-மெயில் பற்றியெல்லாம் பார்க்கர் கேட்டிருந்தான்னா—'' என மெல்லமாய் சொன்ன நான், ''சாவித்துவாரத்து வழியா தன்னோட காதைத் திணிச்சு நுழைச்சு அவன் ஒட்டுக் கேட்டிருந்தாத்தான்

முடியும்'' என்றேன்.

டேவிஸ் ஒப்புதலாய் தலையசைத்தார்.

''இன்னிக்கு சாய்ந்திரம் முழுக்க பார்க்கர் என்னவெல்லாம் பண்ணிக்கிட்டிருந்தான் என்பது பற்றி ஒரு நீண்ட விசாரணை செஞ்சேன். உண்மையா சொல்லணும்னா, அவனோட நடவடிக்கைகள் எனக்குப் பிடிக்கலே. அவனுக்கு என்னவோ தெரிஞ்சிருக்கு. நான் கேள்விகளை ஒண்ணொண்ணா அடுக்க ஆரம்பிச்சபோது பய அப்படியே சுருண்டுப் போனான். அப்போதான் இந்த ப்ளாக்-மெயில் எனும் அழுக்கு மூட்டைக் கதையைத் தூக்கி என் தலையில கட்டினான்.''

நான் ஓர் உடனடி முடிவினைத் துரிதமாய் எடுத்தேன்.

''இந்த விஷயத்தை நீங்களாவே முன்மொழிஞ்சதை நினைச்சு நான் சந்தோஷப்படறேன்'' என்றேன். ''எல்லாத்தையும் அப்படியே எடுத்து உரிச்சு வெச்சுடலாமா வேணாமா என்பது பற்றி முடிவெடுக்க முயற்சி பண்ணிக்கிட்டிருந்தேன். ஏற்கெனவே எல்லா உண்மையையும் சொல்லிடணும் எனும் முடிவை நான் எடுத்திருந்தாலும்கூட, அதுக்கு சாதகமான ஒரு சந்தர்ப்பத்துக்காக காத்திருந்தேன். அது அமைஞ்சுடுச்சு. முழுசையும் இப்ப நீங்க கேட்கலாம்.''

அங்கேயே அப்போதே மாலை முழுவதும் நடந்த நிகழ்வுகளை ஒவ்வொன்றாக வரிசையாய் அடுக்கி இன்ஸ்பெக்டரிடம் ஒப்பித்தேன். ஆழ்ந்து கவனமாய் கவனித்துக் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர்... அவ்வப்போது ஒருசில கேள்விகளை மட்டும் இடைச்செருகி.

நான் முடித்தவுடனேயே, ''நான் இதுவரை கேட்டறியாத அசாதாரண கதை'' என்றார் அவர். ''அந்தக் கடிதம் அப்படியே முழுசுமா காத்துலக் கரைஞ்சுடுச்சுனா சொல்றீங்க? இது வில்லங்கமா படுது – படு வில்லங்கமா படுது, யெஸ். இது, இந்த விஷயத்துல, நமக்குத் தேவையானதை நம்ம கைமேல தருது – *இலக்கு!* கொலைக்கான இலக்கு!''

நான் ஒப்புதலாய் தலையசைத்து ஏற்றுக் கொண்டேன். ''என்னாலும் உணர முடியுது.

''அவரோட வீட்டு நபர்கள்ல யாரோ ஒருத்தர் இந்த மிரட்டல்ல ஈடுபட்டிருக்கலாம்னு ஆக்ராய்டே சொன்னதா சொல்றீங்க... 'இந்த வீட்டுல இருக்கிற யாரோ' எனும் பதம் ஓர் எலாஸ்டிக் பதம்'ங்க.

யாருக்கு வேணும்னாலும் பொருந்தற மாதிரி அதை நாம இழுத்துக்கலாம்.''

''இந்த பார்க்கர் பய தான் நாம துரத்திக்கிட்டிருக்கிற ஆளா இருப்பான்னு உங்களுக்குத் தோணலே?'' என்று கேட்டேன் நான்.

''அதுபோலத்தான் தெரியுது. நீங்க வெளியே வரும்போது அவன் வெளிப்படையா தெரியும்படி கதவுக்கருகாமையில ஒட்டுக்கேட்டுக் கிட்டு இருந்திருக்கான். அப்பறமா மிஸ் ஆக்ராய்டு அவனுக்கெதிரா வராங்க... அப்பவும் படிக்குமறைக்குள்ளே போகும் தொனியிலதான் பார்க்கர் இருந்திருக்கான். எந்தத் தடையும் அவங்களால ஏற்படாம ஆனதும் இவன் முயற்சி பண்ணியிருக்கான்னு ஒரு பேச்சுக்கு எடுத்துப்போமே–ஆக்ராய்டை இவன் குத்தறான், கதவை உள்பக்கமா பூட்டிடறான், ஜன்னலைத் திறக்கிறான், இறுதியா வெளியேறிடறான். வீட்டை சுத்தி வந்து ஏற்கெனவே திறந்து வெச்சிருந்த கதவின் வழியா உள்ளே நுழைஞ்சிடறான். இதெப்படி இருக்கு?''

''இதுல ஒண்ணேயொண்ணு மட்டும் எதிரா நிக்குது'' என்றேன் நான் மெல்லமாய். ''ஒரு வேளை, ஆக்ராய்டு, நான் கிளம்பி வெளியேறிய கையோடு அந்தக் கடுதாசியை முழுசா படிக்க முன்னேறியிருந்தால் – அதைத்தான் அவர் செய்ய விரும்பினார்– தொடர்ந்த அடுத்த ஒரு மணி நேரத்துக்கு இதே நாற்காலியிலேயே புடிச்சு வெச்ச மாதிரி உட்கார்ந்துக்கிட்டு, விஷயங்களையெல்லாம் தன் மண்டைக்குள்ளே போட்டு திருப்பிக்கிட்டு இருந்திருப்பார்னு எனக்குத் தோணலே. உடனடியா பார்க்கருக்கு சொல்லியனுப்பியிருப்பார்... அவனும் வந்திருப்பான்... அவனோட குற்றத்துக்காக அவனை நார்நாரா கிழிச்சிருப்பார்... தாள முடியாத வாய்த்தகராறு நடந்திருக்கும். ஞாபகமிருக்கட்டும்... ஆக்ராய்டு, மூக்கு நுனியில கோபம் எப்பவுமே தொங்கிக்கிட்டிருக்கும் ஒரு விறுவிறு கேரக்டர்.''

''அப்ப உடனடியா கடிதத்தைப் படிக்கும் அவகாசம் இல்லாம போயிருந்தா...'' என ஆலோசித்தார் இன்ஸ்பெக்டர். ''ஒன்பதரை மணிக்கு அப்புறமா அவரோட யாரோ இருந்திருக்காங்க என்பது நமக்குத் தெரியும். நீங்க வெளியிலே கிளம்பினவுடனே அந்த அந்நியன் உள்ளே வந்து, அப்புறம் அவன் வெளியேறியதும் குட் நைட் சொல்ல மிஸ் ஆக்ராய்டு உள்ளே நுழைஞ்சிருந்தா, வெல்... அவரால பத்து மணி

வரைக்கும் அந்தக் கடிதத்தைத் தொட்டிருக்கவே முடியாதே.''

''அப்புறம் அந்த டெலிபோன் 'கால்'?''

பார்க்கர் பண்ணியிருக்கணும். பூட்டப்பட்ட கதவு மற்றும் திறக்கப்பட்ட ஜன்னல் இந்த ரெண்டையும் நினைச்சுப் பார்க்காம லேயே பார்க்கர் பண்ணியிருக்கலாம் – விடுங்க. அப்புறம் மனசை மாத்திக்கிட்டு அல்லது முழு நடுக்கத்துக்குள்ளே அகப்பட்டுக்கிட்டு, தனக்குத் தெரிஞ்ச அனைத்தையும் தெரியாது என்பது போல காட்டிக்க முடிவெடுத்திருக்கலாம். இது, இப்படித்தான். நீங்க நம்பலாம்.''

''ஆ-மாம்'' என்றேன் நான், சந்தேகத்துடனே.

''எப்படியிருந்தாலும் எக்ஸ்சேஞ்சிலிருந்து நம்மால அந்த டெலிபோன் அழைப்பு பற்றிய உண்மையை அடைந்து விட முடியும். ஒருவேளை அது இங்கேயிருந்து தான் பண்ணப்பட்டதென்றால், அது, பார்க்கரைத் தவிர வேற ஒருத்தராலும் பண்ணப்பட்டிருக்காது என்பது என் கணிப்பு. ஆனா இதை இருட்டுலேயே வையுங்க – கை முழுகச் சாட்சிகள் தங்கற வரைக்கும் அவனை நாமே எச்சரிக்கை பண்ணிடக் கூடாது. அவன் நழுவிடாம நான் பார்த்துக்கறேன். எல்லார் கண்களை யும் பொறுத்தமட்டில், நாம, உங்களோட அந்த அந்நியன் மேலே மட்டுந்தான் கவனம் பதிச்சிருக்கோம் – ஓ கே?''

டேபிளுக்கு போடப்பட்டிருந்த நாற்காலியில் நெட்டைக் குத்தலாய் இத்தனை நேரம் உட்கார்ந்திருந்த அவர் எழுந்து ஆடாமல் அசையாம லிருந்த கைவைத்த நாற்காலியருகே போனார். ''இந்த ஆயுதம் நமக்கு ஏதாவது துப்புத் தந்துதவத்தான் வேண்டும்'' என்றார். ''இது ரொம்ப வித்தியாசமான ஒண்ணாயிருக்கு. ஒரு கலைப் பொருள் மாதிரி. இதைப் பார்த்தவுடனே எனக்கு இப்படித்தான் படுது.''

குனிந்த அவர் கவனமாய் அதன் கைப்பிடியைக் கணக்கிட்டார். மேலும் ஏதோ திருப்தியடைந்தவராய் அவர் உறுமியது எனக்குக் கேட்டது. பிறகு ரொம்ப ரொம்ப சன்னமாய், பட்டும்படாமல் தனது கையினை அந்தப் பிச்சுவாக் கத்தியிருந்த பகுதியின் கீழே வைத்து அமுக்கி காயத்திலிருந்து ப்ளேடினை இழுத்தெடுத்தார். கைப்பிடியில் கை பட்டுவிடக் கூடாது என்ற காரணத்துக்காக இன்னும் அப்படியே பிடித்திருந்த அவர், கனப்புக்கருகிலிருந்த பெரிய அலமாரியில் அகலமான தட்டு போல அழகாயிருந்த பீங்கான் குவளையொன்றில்

அதனை வைத்தார்.

''யெஸ்'' என்று அதனைப் பார்த்து ஒப்புதலாய் தலையசைத்தார் அவர். ''கலைநயம் மிக்க அழகிய படைப்பு. நுணுக்கமான தயாரிப்பு. இதே போல பல கத்திகள் இருக்க முடியாது.''

சொல்லப்போனால் அது ஓர் அழகிய கலைப்படைப்பு. குறுகலான, நுனியில் கூராகிக்கொண்டே போகும் கத்தி. உலோகங்கள் நேர்த்தியாய் ஒன்றோடொன்று இடைச்செருகப்பட்டு கவர்ந்திழுக்கும் வகையில் கவனமாய் செதுக்கப்பட்டிருந்த உன்னதம். அவர் விரல்களால் ப்ளேடின் நுனியைத் தடவி அதன் கூர்மையைப் பரிசோதித்துப் பார்த்தார். பாராட்டும்படியான பெருமிதப் பார்வையை வெளியிட்டார்.

''கடவுளே... என்ன ஒரு கூர்மை'' என்று அதிசயித்தார். ''வெண்ணையை சுலபமா வெட்டியெடுப்பது போன்ற லகுத்தன்மை யோடு, ஒரு குழந்தை இதை மனுஷனின் உடலில் சுலபமா பாய்ச்சித் தீர்த்துடலாம். இங்கே வைத்திருக்க உகந்ததே அற்ற மிக ஆபத்தான வஸ்து.''

''பிரேதத்தை இப்ப நான் சரியா பரீட்சிக்கலாமா?'' என கேட்டேன் நான்.

''ஆரம்பிங்க.

நுனி முதல் அடி வரை பரீட்சித்தேன். நான் முடித்ததும் ''வெல்?'' என கேட்டார் இன்ஸ்பெக்டர். ''மருத்துவ வார்த்தைகளைத் தவிர்த் துடறேன்'' என்றேன் நான். ''அவற்றை மரண விசாரணைக்கு வெச்சுப் போம். இவருக்குப் பின்னால நின்னுக்கிட்டிருந்த ஒரு வலது கை பழக்கமுள்ள ஆளால குத்த விடப்பட்டிருக்கு. மரணம் உடனடியா நிகழ்ந்திருக்கணும். மரணமடைஞ்சிருப்பவரின் முக பாவத்தைப் பார்க்கும்போது, இத்தகைய ஒரு மரண அடி, அவர் நிச்சயமா எதிர் பார்த்திராத ஒன்று. இப்படி இவரை அடிச்சது யார் எனும் அறிதலே இல்லாம இறந்திருக்கணும்.''

''இந்த பட்லருங்க பூனை மாதிரி காலடிச் சத்தமே கேட்காம நடக்கும் வல்லமை தெரிஞ்சவங்க'' என்றார் இன்ஸ்பெக்டர் டேவிஸ். ''ஆக, இந்த கேஸைப் பொறுத்தவரைக்கும் ரொம்ப மர்மமெல்லாம் இருக்கப் போவதில்லே. அந்த ஆயுதத்தோட கைப்பிடியைக் கொஞ்சம்

பாருங்க.''

நான் பார்த்தேன்.

இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார்: ''நான் குறிப்பிடுவதை உங்களால தெளிவா பார்க்க முடியலேனு விளங்குது. அவை உங்களுக்கு வேணும்னா வெளிப்படையா புரியாம இருக்கலாம்; ஆனா எனக்கு ஸ்படிக சுத்தமா படுதுல்லியமா விளங்குது.'' இப்போது குரலை நன்றாய் தணித்துக் கொண்டார். சொன்னார்: ''கைரேகைகள்.''

''யெஸ்'' என்றேன் நான் சன்னமாய். ''எதிர்பார்த்தேன்.''

இப்படி சொன்னாலும் எதற்காக நான் சாதுர்யமேயன்றி இருந்திருக்க வேண்டும் என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். கைரேகைகள் – ஊகித்திருக்க வேண்டுமா, வேண்டாமா! துப்பறியும் நாவல்கள் படிப்பவன் நான். செய்தித்தாள்களும்! மேலும், நான் சராசரியை விடவும் புத்திக்கூர்மை நிறைந்தவன் வேறு.

இன்ஸ்பெக்டர் சொன்னதை வைத்துக் கொண்டு நான் த்ரில் ஆகாததில் அவர் எரிச்சலாகியிருக்க வேண்டும். பெரிய சைஸ் தட்டு போல அகலமாயிருந்த பீங்கான் குவளையைக் கையிலெடுத்துக் கொண்ட அவர் அவருடன் கூட பில்லியர்ட் அறை வரை வரும்படி கேட்டுக் கொண்டார்.

''மிஸ்டர் ரேமண்ட் இந்த ஆயுதம் பற்றி ஏதாவது தகவல் தர முடியுமானு நான் பார்க்கணும்'' என்றார்.

எங்களுக்குப் பின்னால் இன்னொரு முறை கதவினை மூடிக் கொண்டு பில்லியர்ட் அறை வரை போன நாங்கள், அங்கு ஜியோஃப்ரி ரேமண்ட்டைச் சந்தித்தோம். தன் கையிலிருந்த விஷயத்தை அவனிடம் காட்டினார் இன்ஸ்பெக்டர். ''இதை எங்கேயாவது பார்த்த மாதிரியிருக்கா?''

''ஓ, நிச்சயமா. இது ஒரு கலைப்பொருள் – மிஸ்டர் ப்ளண்ட்டால் திரு ஆக்ராய்டுக்குக் கொடுக்கப்பட்டது. துனிஸ் பகுதியில தயாராகி வருவது இது. அரேபியா. ஓஹோ... ஆக, கொலை இதை வெச்சுக்கிட்டு நடத்தப்பட்டிருக்கா? என்ன ஓர் அசாதாரண நிகழ்வு. இதெல்லாம் சாத்தியமேயில்லைனு தோணினாலும், இதே போல கத்தி ரெண்டு இருக்கும் போல தோணுது. நான் போய் ப்ளண்ட்டைக் கூட்டிட்டு வரட்டுமா?''

இதற்கான விடைக்காகக் காத்திருக்காமல் பரபரப்பாய் நகரலானான் அவன்.

''அற்புதமான காரியதரிசி'' என்றார் இன்ஸ்பெக்டர். ''அவனுக்குள்ளே விசுவாசமும் சாதுர்யமும் பிணைஞ்சுக்கிடக்கு.

நான் ஏற்றுக் கொண்டேன். ரோஜர் ஆக்ராய்டுக்கு கடந்த இரு வருடங்களாய் ரேமண்ட் காரியதரிசியாய் இருந்துவந்த காலம் நெடுகிலும் இவன் குழம்பியதாகவோ, குழப்பியதாகவோ அல்லது கோபங்கொண்டு வெகுண்டதாகவோ நான் பார்த்ததேயில்லை. ரேமண்ட், என்னைப் பொறுத்தமட்டில், விஷயம் தெரிந்த ஒரு காரியதரிசியே.

ஓரிரு நிமிடங்களில் ரேமண்ட் கூடவே ப்ளண்ட்டையும் இணைத்துக் கொண்டு திரும்பியிருந்தான். ''நான் சொன்னது தான் சரி'' என்றான் அவன் பரபரப்பாய். *''அது துனிஸியன் கத்திதான்.''*

''இன்னும் அதை மேஜர் ப்ளண்ட் பார்க்கலே'' என்று மறுப்பாய் இன்ஸ்பெக்டர் சொன்னார்.

''இந்த அறைக்குள்ளே நான் அப்ப நுழைஞ்ச நொடியிலேயே அதை நான் பார்த்துட்டேன்'' என்றார் அந்த சாந்த மனிதன்.

''அப்ப, இதை நீங்க அடையாளம் கண்டிருக்கீங்க, ஆங்?''

ப்ளண்ட் ஒப்புதலாய் தலையசைத்தார்.

''இதைப் பத்தி நீங்க வாயே திறக்கலே...'' என்றார் இன்ஸ்பெக்டர் சந்தேகமாய்.

''தவறான சந்தர்ப்பத்துல... மற்றும் தவறான நேரத்துல விஷயங்களை உளறி விடுவது நமக்கு நிறைய தொல்லைகளை உண்டுபண்ணிடும்.''

இன்ஸ்பெக்டர் முறைத்த முறைப்பை சிரமப்படாமல் இவ்வாறு அவரிடமே திருப்பி விட்டார் ப்ளண்ட்.

கடைசியில் ஓர் உறுமல் செய்து விட்டு வேறு பக்கம் திரும்பிக் கொள்ளும்படி ஆனது இன்ஸ்பெக்டருக்கு. அந்தப் பிச்சுவாக் கத்தியைச் சுமந்துக் கொண்டு இப்போது ப்ளண்ட் பக்கம் போனார் அவர். ''இந்த விஷயத்துல நீங்க நிச்சயமாத்தானே இருக்கீங்க, ஸார்? இது தான் *அதுனு* உங்களால ஸ்திரமா அடையாளம் காண முடியுதா?''

''அப்ஸல்யூட்லி. எவ்விதமான சந்தேகத்துக்கும் இதுல இடங்

கிடையாது.''

''இந்தக் கலைப்பொருள் வழக்கமா எங்கே வைக்கப்படும்? இதை எனக்கு சொல்ல முடியுமா, ஸார்?''

இதற்கு விடை தர முன்வந்தது, காரியதரிசி. ''முன்னறையில இருக்கும் வெள்ளி டேபிள்ல, ஸார்.''

''என்ன?''– நான் கத்தி விட்டேன்.

ஏனையவர்கள் என்னைத் திரும்பி பார்த்தார்கள். ''யெஸ், டாக்டர்?'' என்று ஊக்கப்படுத்தம் விதமாய் கேட்டார் இன்ஸ்பெக்டர். ''கேட்டதுல என்ன தப்பு?'' என்றார் இன்னும் அந்த ஊக்கப்படுத்துதல் குறையாது.

''அது வெறும் அற்பமான ஒண்ணுதான்'' என்றேன் நான், பவ்யமாய். ''நேத்து ராத்திரி நான் டின்னருக்கு இங்கே வந்து சேர்ந்ததும் அந்த வெள்ளி டேபிளோட மூடி மூடப்பட்ட ஓர் ஓசையை நான் கேட்டேன் – இது தான் அந்த அற்பமான விஷயம்.''

முக்கியப்படுத்தட்ட ஐயம் இன்ஸ்பெக்டரின் முகம் முழுவதும் படர்ந்து அவரது அணுகுமுறையையே சற்று மாற்றியதாய் உணர்ந்தேன்.

''அது ஸில்வர் டேபிளோட மூடியோசை தான்னு உங்களுக்கெப்படி கறாரா தெரியும்?''

எனவே முழுவதுமாய் விளக்கும் நிலைக்கு நான் தள்ளப்பட்டேன் – நீளமாக, மூச்சு வாங்கும் அளவுக்கு, இத்தனை நீளத்துக்கு விளக்கி யிருக்கத்தான் வேண்டுமா என நானே நொந்துக் கொள்ளும்படி விளக்கினேன்.

இறுதிவரை கேட்கவும் செய்தார் இன்ஸ்பெக்டர்.

''அதுல இருந்த விஷயாதிகளை நீங்க எட்டிப் பார்க்கும்போது இந்தப் பிச்சுவாக் கத்தியும் அதுங்களுக்கு நடுவுல இருந்ததா?'' – அவர் கேட்டார்.

''ஐ டோண்ட் நோ'' என்றேன் நான். ''எனக்குத் தெரியலே. இதை நான் கவனிச்சேன்னும் என்னால சொல்ல முடியலே. ஆனாலும், இது, அதுங்கள்ல இருந்திருக்கலாம்.''

''வீட்டைச் சுத்தம் செஞ்சு பார்த்துக் கொள்ளும் ஆளை விசாரிப் போம்'' என்று குறிப்பிட்ட இன்ஸ்பெக்டர், மணியை அடித்தார்.

சில நிமிடங்களில், பார்க்கரின் அறிவுறுத்தலின் ஆபரில், மிஸ்

ரஸ்ஸெல் வந்து சேர்ந்தாள்.

இன்ஸ்பெக்டர் அவருடைய கேள்வியைத் தூக்கி வீசியதும், ''அந்த டேபிளுக்குப் பக்கத்துல போனதாகவே எனக்கு நினைவில்லே'' என்றாள் அவள். ''அலங்காரப் பூக்களெல்லாம் வாடிடாம மலர்ச்சியா இருக்கானு தான் நான் பார்த்துக்கிட்டிருந்தேன். ஓ, யெஸ் – இப்ப எனக்கு நினைவுக்கு வருது! தேவையேயில்லாம ஸில்வர் டேபிளோட மூடி திறந்திருந்தது. அப்ப அந்தப்பக்கமா அதைக் கடந்துப் போன நான் –அதை மூடி விட்டேன்.''

எரிச்சலாய் அவளைப் பார்த்தார் இன்ஸ்பெக்டர். ''அப்போ, அதுக்குள்ளே, இந்தக் கத்தியிருந்ததானு உங்களால சொல்ல முடியுமா?''

மிஸ் ரஸ்ஸெல் அந்தக் கூராயுதத்தைத் தோராயமாய் பார்த்தாள். ''நிச்சயப்படுத்தி என்னால சொல்ல முடியுமானு தெரியலே'' என்றாள். ''உள்ளே இருப்பதையெல்லாம் பார்க்கிறதுக்குனு நான் நிக்கலே. எந்த நிமிஷத்திலும் எல்லாரும் கூடிடுவாங்கனு எனக்குத் தெரியும்... அதுக்குள்ளே கிளம்பும் அவசரத்துல நானிருந்தேன்.''

''நன்றி'' என்றார் இன்ஸ்பெக்டர்.

இப்படி சொன்ன இன்ஸ்பெக்டரின் தொனியில் தயக்கத்தின் சாயல் படர்ந்துக் கிடந்தது – ஏதோ இன்னும் கொஞ்சம் கேள்விகள் கேட்க அவர் பிரியப்பட்டதைப் போல. ஆனால், சொன்ன நன்றியை வெளியேறுவதற்கான அனுமதியாகவே எடுத்துக் கொண்டு விட்ட ரஸ்ஸெல் சடுதியில் வழுக்கி மறைந்து விட்டாள்.

''அங்கிருக்கிற ஜன்னல்களில் ஒரு ஜன்னலின் முன்னால் அந்த ஸில்வர் டேபிள் இருப்பதாய் தானே சொன்னீங்க, டாக்டர்? போய்ப் பார்ப்போமா?''

இதற்கு ரேமண்ட் எனக்காக பதில் தந்தான். ''யெஸ். இடப்புற ஜன்னலருகில்.''

''ஜன்னல் திறந்திருந்ததா?''

''ஒருக்களிச்சு.''

''வெல்... இந்தக் கேள்விக்குள்ளே இன்னும் அடியாழம் வரை இப்போதைக்குப் போக வேணாம்னு நினைக்கிறேன். யாராயிருந் தாலும் – சும்மா தான் சொல்றேன், அது யாராயிருந்தாலும் – அவனுக்கு எப்ப விருப்பமோ அப்போ இந்தக் கத்தியை எடுத்துக்கிட்டிருக்கலாம்.

சரியா எந்த சமயத்துல இதை எடுத்தான் என்பது முக்கியமற்றுப் போயிடுது. விடிஞ்சதும் முதன்மை கான்ஸ்டபிள் கூட நான் வருவேன், ரேமண்ட். அதுவரை, அந்தக் கதவின் சாவியை நானே வெச்சுக்கறேன். கலோனல் மெல்ரோஸ் வந்து எல்லாம் என்னென்ன இடத்துல இருந்தன என்பதை சம்பவம் நடந்தபோது இருந்தா மாதிரியே பார்க்கணும்னு நான் விரும்பறேன். மாகாணத்தின் அடுத்த பக்கத்துல ஒரு டின்னர்ல அவர் இருப்பதாய் அறிகிறேன்.''

இன்ஸ்பெக்டர் அங்கிருந்த ஜாரை எடுத்துக் கொள்வதை நாங்கள் கவனித்தோம். ''இதை நான் ஜாக்கிரதையா பேக் பண்ணணும்'' என்றார். ''பல வழிகள்ல இது ஒரு முக்கியமான சாட்சியமா இருக்கப் போகுது.''

சில நிமிடங்கள் கழித்து நான் ரேமண்ட்டுடன் பில்லியர்ட்ஸ் அறையை விட்டு வெளியே வந்துக் கொண்டிருந்தபோது, காரியதரிசி சன்னமாய் ஓர் ஆச்சரிய ஒலியெழுப்பினான்.

என் கையில் அவன் சுட்டிக்காட்டிய அழுத்தத்தை உணர்ந்த நான், அவன் கண்கள் ஜாடை போட்டுக் காட்டிய திசையில் நடந்தேன்.

''கொஞ்சம் வெளிச்சம் விழுது போல'' என முணுமுணுத்தான் என் உடன் இருந்த அவன். ''ஆக பார்க்கர் தான் சந்தேகத்துக்கு ஆளாகி யிருப்பவன், ஆங்?'' என கேட்டான். ''கொஞ்சம் கைரேகைகளைக் கலெக்ட் பண்ணி இன்ஸ்பெக்டருக்கு நாமளும் உதவுவோமா?'

அங்கிருந்த பார்வையாளர் அட்டை கோப்பிலிருந்த இரண்டு அட்டைகளை எடுத்து, அவற்றை நல்ல பட்டுத்துணி கொண்டு வழித்துத் துடைத்து, ஒன்றை என்னிடம் தந்தான்... இன்னொன்றை அவனே வைத்துக் கொண்டான். பிறகு, மேட்டுமையாய், அவையிரண் டையும் அவன் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் ஒப்படைத்தான். ''அன்பளிப்புகள்'' என்றான் அவன். ''1. டாக்டர் ஷெப்பர்டுடையது. 2. பணிவான என்னுடையது. மேஜர் ப்ளண்ட்டிடமிருந்து, நாளை காலைல வரும்.''

இளைஞன், குதூகலத்தில் மிதந்துக் கொண்டிருந்தான். அவனுடைய நண்பனாகவும் முதலாளியாகவும் இருந்தவருடைய கொடூர மரணம் கூட இவனுடைய அக்னிக்குஞ்சினை வெகு நேரம் அவித்து வைக்கவில்லை. சொல்லப்போனால் இப்படித்தானிருக்க வேண்டும்.

ஏனோ தெரியவில்லை... என்னுள்ளிருந்த மனோதிடம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்துள்ளது.

நான் திரும்பிய போது மிகவும் நேரங்கடந்திருந்ததால், கரோலின் படுத்திருப்பாள் என்றே நான் நினைத்திருந்தேன். நான் அவளைப் பற்றி இன்னும் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். அவள் சுடச்சுட கோ-கோ குடித்து விட்டு எனக்காகக் காத்திருந்தாள். எனக்கான சுடு தேநீரை நானருந்தும் போதே அன்றைய மாலைப் பொழுதின் முழு வரலாற்றையும் அவள் என்னுள்ளிருந்து பிடுங்கி விட்டாள். ப்ளாக்-மெயில் பற்றி மட்டும் அவளிடம் சொல்வதை நிறுத்தி விட்டிருந்த நான், மற்றபடி கொலை சம்பந்தமாய் நடந்த அத்தனையையும் ஒப்புவித்தேன்.

படுக்கைக்குப் போகும் உத்தேசத்துடன் எழுந்த நான், ''போலீஸ் பார்க்கரைத்தான் முழுக்கவும் சந்தேகப்படுது'' என்றேன். ''அவனுக்கு எதிரா வலுவான ஒரு கேஸா இது அமைஞ்சிருக்கு.''

''பார்க்கர்!'' என்றாள் என் சகோதரி. ''வைக்கோல்! இந்த இன்ஸ்பெக்டர் யாராலும் அடிச்சுக்க முடியாத ஒரு வடிகட்டின முட்டாளா இருக்கணும். பார்க்கராம்! கண்றாவியா பேசாதே! போய் வாயைக் கழுவு!''

அதற்குக் கிளம்பினேன்!

அத்தியாயம் 7

என் பக்கத்துவீட்டுக்காரனின் வேலை என்ன என அறிந்தேன்

மறுநாள் காலை எந்தவிதமான முக்கியமான நோயாளிகளும் வந்திராததால் ஒரு சுற்று நடை போய்விட்டு வரலாமே என விரைந்திருந்தேன். முடித்து விட்டு திரும்பும்போது என்னை எதிர்கொள்ள ஹாலில் இருந்தாள் கரோலின்.

''ஃப்ளோரா ஆக்ராய்டு வந்திருக்கா'' என்று கிசுகிசுப்பாய் சொன்னாள் அவள் – பரபரக்கும் கிளர்ச்சியில்.

''என்ன?'' – கேட்டபோது, எனக்குள் பெருக்கெடுத்திருந்த ஆச்சரியத்தை எத்தனை முடியுமோ அத்தனை மறைத்தேன்.

''உன்னைப் பார்க்கனும்னு துடிச்சுக்கிட்டிருக்கா. அரை மணி நேரத்துக்கு முன்னாடியே அவ வந்தாச்சு.''

பேசிக்கொண்டே எங்களுடைய சின்ன வரவேற்பறைக்கு வழி செய்துக் கொண்டு கரோலின் முன்னேற, நான் தொடர்ந்தேன்.

ஜன்னலருகே போடப்பட்டிந்த சோஃபாவில் உட்கார்ந்திருந்தாள் ஃப்ளோரா. கறுப்பு உடையிலிருந்த அவள் நரம்பதிர்வில் ஓர உள்ளங்கைக்குள் மற்றதைப் போட்டுப் பிசைந்தபடியிருந்தாள். அவள் முகத்தைப் பார்த்த கணத்தில் நான் அதிர்ச்சியடைந்தேன். அதிலிருந்த அத்தனை இளமை வண்ணங்களும் நிறமிழந்துப் போயிருந்தன. ஆனால் அவள் பேசும்போது வாக்கியங்கள் மிகச் சுருக்கமாகவும் முடிவாயிருப்பதாகவும் அமைக்கப்பட்டிருந்தன.

''டாக்டர் ஷெப்பர்ட்... எனக்கு உதவும்படி உங்களை வேண்டிக் கேட்டுக்கத்தான் நான் இப்ப வந்திருக்கேன்.''

''பின்னே, பண்ணாமலா! உட்கார் கண்ணு! உனக்கு பண்ணாம யாருக்குப் பண்ணப் போறான் அவன்!'' என்று எனக்காக பதில் தந்து விட்டாள்கரோலின்.

இந்தச் சந்திப்பில் கரோலின் இருக்கலாம் என ஃப்ளோரா விரும்பியதாய் எனக்குத் தோன்றவில்லை. நிச்சயமாக, அந்த இளையவள், என்னுடன் தனிப்பட்ட முறையில் பேசுவதை மட்டுமே முற்றிலும் எதிர்பார்த்திருப்பாள். ஆயினும் இப்போதுள்ள நிலைமையில் மேற்கொண்டு எவ்வித நேர விரயத்தையும் விரும்பாத அவள், உடைத்த தேங்காயாய் வந்த விஷயத்துக்குள் நுழைந்து விட்டாள்.

''நீங்க இப்ப என்கூட *லார்ச்சஸுக்கு* வரணும்.''

''லார்ச்சஸ்?''– ஆச்சரியப்பட்டு விசாரித்தேன் நான்.

''யெஸ். அங்கேயிருப்பது யார்னு உங்களுக்குத் தெரியும் தானே?''

''அந்த ஆள்'' என்ற நான், ''ஓய்வு பெற்ற சிகையலங்கார நிபுணனா இருக்கணும்னு பேசிக்கிட்டோம்.''

ஃப்ளோராவின் நீலநிற விழிகள் படபடத்து அகன்றுக் கொண்டே போயின.

''ச்சே! அது *ஹெர்குல் பொய்ரெட்!* அவர் யார்னு விளங்குது இல்லே – தனியார் துப்பறியும் நிபுணர். துப்பறியும் அதிகாரிகள் டிடெக்டிவ் நாவல்கள்ல பண்ணும் அத்தனையையும் இவர் அதியற்புதமா நிஜ வாழ்க்கையில பண்ணியிருக்கார்... பண்ணிக்கிட்டிருக்கார்னு சொல்லிக்கிறாங்க. ஒரு வருஷத்துக்கு முன்னாடி இந்த உளவு வேலையையெல்லாம் மூட்டைக்கட்டிட்டு இங்கே வாழுவதற்காக இடம்பெயர்ந்து வந்தார். அங்கிளுக்கு இவர் யார்னு தெரியும்... ஆனாலும் வெளியே ஒருத்தர்கிட்டே சொல்ல மாட்டேன்னு சத்யம் பண்ணியிருந்தார் – ஏன்னா மனித தொந்தரவுகளே இல்லாம தனிமையில ஓசையின்றி இருப்பதையே மிகவும் விரும்பியிருக்கார் *பொய்ரெட்.''*

''ஓ, அப்படியா விஷயம்; அவரா, இவரு?'' என்றேன் நான், மெதுவாய்.

''அப்ப, நீங்களும் பொய்ரெட் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக் கீங்க?''

''நான் ஒரு கட்டுப்பெட்டி – இந்த கரோலின் என்னை வர்ணிப்பதைப்போல'' என்ற நான், ''ஆனா, ஜஸ்ட் இப்ப, அவரோட புகழை நான் தெரிஞ்சுக்கிட்டேன்'' என்றேன்.

''அசாதாரணம்!'' என வர்ணித்தாள் கரோலின்.

அவள் இப்படி எதை சொல்கிறாள் என எனக்கு விளங்கவில்லை – நிஜத்தைக் கண்டுபிடிக்காமல் அவள் தோற்றுவிட்டதைக் குறிப்பிட்டிருக்கக் கூடும்.

''அவரைப் போய் பார்க்க விரும்பறியா?'' என்றேன் நான் மெல்லமாய். ''இப்ப எதுக்கு இதெல்லாம்?''

''இந்தக் கொலையைத் துப்பறியும்படி அவரைத் தட்டி விடத்தான், வேறெதுக்கு?'' என்றாள் கரோலின் கூர்மையாய். ''இத்தனை கரித்துண்டா நீ இருத்தலாகாது, ஜேம்ஸ்.''

நான் ஒன்றும் அடிமுட்டாளாய் அங்கு அமர்ந்திருக்கவில்லை. இந்தக் கரோலினுக்கு எதை விரட்டிப் பிடிக்க நான் பேச்சை வளர்க்கிறேன் என்பதெல்லாம் எப்போதுமே விளங்குவது கிடையாது.

''இன்ஸ்பெக்டர் டேவிஸ் மேல உனக்கு நம்பிக்கை இல்லையா?'' என்று தொடரலானேன் நான்.

''நிச்சயமா அவளுக்குக் கிடையாது'' என்றாள் கரோலின். ''ம்கும். எனக்கும் தான்.''

இங்கு யாரிருந்திருந்தாலும், கொல்லப்பட்டது கரோலினின் அங்கிள் என்றே எடுத்துக் கொண்டிருப்பார்கள்.

''அவர் இந்தக் கேஸைக் கையில எடுத்துப்பார்னு எப்படி நீ எதிர்பார்க்கிறே?'' – நான் கேட்டேன். ''இப்படியெல்லாம் மெனக்கெடும் பணியிலிருந்து அவர் ஓய்வெடுக்க விலகிட்டார் – ஞாபகமிருக்கட்டும்.''

''இது ஒரு பிரச்சினை தான்'' என்றாள் ஃப்ளோரா. ''அவரை நான் கெஞ்சிக் கேட்டு இறங்க வைக்கணும்.''

ஆழ்ந்தக் குரலெடுத்துக் கேட்டேன்: ''இதெல்லாம் புத்திசாலித்தனம்னு நினைக்கிறியா?''

''அவ புத்திசாலி தான்'' என்றாள் கரோலின். ''வேணும்னா நானே கூட அவ கூட போய் உதவியாயிருப்பேன்.''

''அய்யய்யோ... தப்பா நினைக்கலேனா, எனக்கு டாக்டர் ஷெப்பர்ட்

மட்டும் போதும், மிஸ் ஷெப்பர்ட்'' என்றாள் ஃப்ளோரா. 'நோ' சொல்ல வேண்டிய தருணங்களில் அப்படிசொல்லி விடுவது எவ்வளவு விலையுயர்ந்தது என்பது அவளுக்குத் தெரியும். சூசகமாய் எதைச் சொல்லியிருந்தாலும் அது கரோலினிடம் பல்லிளித்துத் தோற்றுத்தான் போயிருக்கும்.

''அதாவது...'' என்று நேரடியாய் சொல்லி விட்டதை அழகாய் கையாளும் விதமாய், ''டாக்டர் ஷெப்பர்ட் ஒரு மருத்துவராயிருப்ப தாலும், மேலும் அவர் தான் உடலைக் கண்டெடுத்திருக்கிறார் என்பதாலும், அவராலத் தான் எல்லா நுணுக்கமான தகவல்களையும் திரு பொய்ரெட்டுக்குத் தர முடியும்'' என்று முடித்தாள் இளையவள்.

''யெஸ்'' என்றாள் கரோலின் சபித்துக் கொண்டு. ''எனக்கும் புரியுது.''

அறைக்குள்ளேயே மேலும் கீழுமாய் கொஞ்ச நேரம் நடந்தேன் நான். மறுபடியும் ஆழ்ந்தக் குரலெடுத்து, ''ஃப்ளோரா...'' என்றழைத்த நான் சொன்னேன்: ''நான் சொல்றதை மட்டும் கேளு. இந்த டிடெக் டிவ்வைப் பிடிச்சு இழுத்துக்கிட்டு வந்து கேஸுக்குள்ளே விட வேணாம்னு எச்சரிக்கிறேன்.''

துள்ளி எழுந்தே விட்டாள் ஃப்ளோரா. போயிருந்த வண்ணம் அவள் முகத்தில் மீண்டும் மளமளவென கூடியது. ''நீங்க இப்படி ஏன் சொல்றீங்கனு எனக்குத் தெரியாமலில்லே'' என்றாள். ''ஆனா அந்த ஒரேயொரு காரணத்துக்காகத் தான் நான் இப்ப கிளர்ந்தெழுந்து படபடப்பா இயங்கிக்கிட்டிருக்கேன். நீங்க பயப்படறீங்க! ஆனா நான் பயப்படலே. உங்களைவிட ரால்ஃப் பற்றி எனக்கு நல்லாவே தெரியும்.''

''ரால்ஃப்!'' என்றாள் உடனே கரோலின். ''இதுல ரால்ஃப்க்கு என்னயிருக்கு?''

எங்கள் இருவரில் ஒருவர் கூட அவளைக் கண்டு கொள்ளவில்லை.

''ரால்ஃப் பார்க்க வேணும்னா வலுவற்றுத் தெரியலாம். கடந்த காலங்கள்ல அவர் முட்டாள்தனமாய் என்னத்தையாவது செஞ்சுத் தொலைத்திருக்கலாம் – ஏன், துஷ்டத்தனமா கூட இயங்கியிருக்கலாம். ஆனா அவர் யாரையும் கொலை பண்ண மாட்டார்.''

''நோ, நோ'' என நான் பரபரப்பானேன். ''நான் அவரைக்

குறிப்பிட்டுப் பேசவேயில்லை'' என்றேன்

''அப்ப நீங்க எதுக்காக ஆண்கள் லாட்ஜுக்கு நேத்து ராத்திரி போனீங்க?'' – பதில் வேண்டும் என்பது போல கேட்டாள் அவள். ''அங்கிளோட உடல் கண்டெடுக்கப்பட்ட பிறகு – நீங்க வீட்டுக்குத் திரும்பிக்கிட்டிருந்த வழியில?''

அப்போதைக்கு நான் வாய் திறக்க முடியாமல் ஆக்கப்பட்டேன். நான் போய் வந்த அந்த சந்திப்பு யாராலும் கவனிக்கப்படாமலேயே இருக்கும் என்று தான் நான் எண்ணியிருந்தேன்.

''அந்த விஷயம் எப்படி உனக்குத் தெரிய வந்தது?'' என குறுக்கு விசாரணை செய்தேன் நான்.

''நான் அங்கே இன்னிக்குக் காலைல போயிருந்தேன்'' என்றாள் அவள். ''வேலைக்காரனுங்க மூலமா ரால்ஃப் அங்கே தங்கியிருக்கும் விஷயம் எனக்குக் கிடைச்சது —''

நான் அவளை இடைமறித்தேன். ''அவன் நம்ம கிங்ஸ் அப்பாட் கிராமத்துல வந்து தங்கியிருப்பதைப் பற்றி உனக்கு ஒரு ஐடியாவும் கிடையாதா?''

''கிடையாது. நான் திகைச்சும் ஆச்சரியமாயும் ஆனேன். என்னால விளங்கிக்க முடியலே. நான் நேரா அங்கே போய் அவரைக் கேட்டேன். இதுக்கு பதிலா அவங்க நேத்து ராத்திரி உங்ககிட்டே சொன்ன அதே பதிலைத்தான் என்கிட்டேயும் சொன்னாங்கனு நினைக்கிறேன் – நேத்து ராத்திரி ஒன்பதரை மணி வாக்குல கிளம்பி வெளியே போன அவர் – அவர்– அப்புறம் திரும்பவேயில்லே.''

போருக்கு அறைகூவல் விடுக்கும் தொனியில் அவளுடைய கண்கள் என் கண்களைச் சந்தித்தன. எதையோ என் கண்களில் படித்து விட்ட தொனியில், அதற்கு பதிலளிக்கும் விதமாய், வெடித்தாள்: ''வெல்... அப்படி ஏன் அவர் வெளியே கிளம்பிப் போகக்கூடாதுனு நான் கேக்கறேன். பதில் சொல்லுங்க. அவர் கிளம்பிப் போயிருக்கலாம் – எங்கே வேணும்னாலும். அவர் லண்டனுக்கே கூட திரும்பிப் போயிருக்கலாம், ஸார். உங்களுக்கென்ன அது பத்தி?''

மிருதுவாய் கேட்டேன்: ''அவர் லக்கேஜையெல்லாம் ஓட்டல்லேயே அப்படியே விட்டுட்டு, ஆங்?''

ஃப்ளோரா தரையை எத்து விட்டாள். ''மண்ணாங்கட்டி. அதைப்

பத்தியெல்லாம் நான் கவலையே படலே. அவர் வெளியே போயிருக்கார்னா அதுக்கு ஸிம்பிளா ஒரு காரணம் தான் இருக்க முடியும்.''

''ஆக, இதுக்காகத் தான் நீ ஹெர்குல் பொய்ரெட்கிட்டே போகணும்கிறே, இல்லையா? விஷயங்களை அப்படியப்படியே அததன் இடத்துல விட்டு வைப்பது தான் சிறந்ததுனு உனக்குப் புரியலே, இல்லையா? கடைசி இலக்கா கூட இந்த போலீஸ் ரால்ஃபை நினைக்கலே, நினைவிருக்கட்டும். நீயா குதிக்காதே. போலீஸ், முழுக்கவும் வேற ஒரு தடத்துல உழைச்சுக்கிட்டிருக்கு.''

''அய்யோ...'' என்று அலறினாள் அவள். ''அவங்க அவரை சந்தேகப்படறாங்க. க்ரான்செஸ்டர் பகுதியிலிருந்து ஒரு குண்டன் இன்னிக்குக் காலையில வந்தான். இன்ஸ்பெக்டர் ரக்லானாம். பயங்கரமான தோற்றம் கொண்ட கீரிப்பிள்ளை போன்ற குள்ளன். எனக்கு முன்னாடியே லாட்ஜுக்கு இந்தாளு போயிருக்கிற விஷயம் எனக்குத் தெரிய வந்திருக்கு. இவன் அங்கேயிருந்த சமாச்சாரத்தையும் அப்போ இவன் கேட்ட கேள்விங்க எல்லாத்தையும் அங்கே என்கிட்டே சொன்னாங்க. இவன், ரால்ஃப் தான் பண்ணியிருக்கணும்னு நினைச்சுக்கிட்ருக்கணும் – யெஸ்.''

''இப்படி ஒரு மாற்றம் வந்திருக்குனா அது நேற்று இரவுக்கு மேல தான் ஏற்பட்டிருக்கணும்'' என்றேன் நான் மெல்லமாய். ''அப்ப அது பார்க்கர் தான்னு டேவிஸ் சொல்லும் தியரியை இந்தாளு ஒத்துக்கலே போல தெரியுது.''

''பார்க்கர்தாண்ணா, பார்க்கரே தான்'' என்று கிண்டலாய் சொன்ன என் சகோதரி, முகத்தை வெட்டித் திருப்பிக் கொண்டாள்.

ஃப்ளோரா எழுந்து வந்து அவளுடைய கையை என் கையின் மேல் வைத்தாள். ''ஓ, டாக்டர் ஷெப்பர்ட். எதுக்கு இத்தனை குறுக்கு விசாரணை? நேரா கிளம்பி திரு பொய்ரெட்டிடம் போயிடுவோம். அவர் கண்டுபிடிப்பார், உண்மை என்ன என்பதை.''

அவள் வைத்திருந்த கையின் மீது என் இன்னொரு கையை வைத்த நான், ''டியர், டியர் ஃப்ளோரா'' என்றேன். ''உண்மைதான் நமக்குத் தெரிய வரணும் என்பதுல நீ நிச்சயமாயிருக்கியா?''

வேறு என்னவாயிருக்க முடியும் என்ற அர்த்தத்தை ஆழ்ந்து

பிரதிபலித்தபடி அவள் தலையை மெல்லமாய் அசைத்து ஆமோதித்தாள். ''உங்களுக்குத் தான் நிச்சயத்தன்மை இல்லை'' என்று குறிப்பிட்டாள். ''எனக்கிருக்கு. உங்களை விட என்னுடைய ரால்ஃப் பற்றி எனக்கு நல்லா தெரியும்.''

''ஆமாமாம்... இவனுக்கு எங்க அவனைப் பத்தியெல்லாம் நல்லா தெரியப் போகுது?'' என்று ஒரு தேவையே அற்ற காமெண்ட்டை, பெரும் பிரயத்தனப்பட்டு மௌனம் காத்து வந்த கரோலின் அவிழ்த்து விட்டாள். ''ரால்ஃப் வேணும்னா கூத்து கொம்மாளம்னு சுத்தியிருக்கலாம். ஆனா, பய நல்ல பய. டியர் பாய். சிறந்த நடத்தையுண்டு அவனுக்கு.''

எக்கச்சக்கமான கொலைகாரர்கள் அனைவருமே 'சிறந்த நடத்தை' கொண்டிருந்தவர்கள் தான் என்று நான் கரோலினிடம் விளக்கியிருப்பேன்... ஆனால் ஃப்ளோராவின் இருப்பு என்னைக் கட்டுப்படுத்தி விட்டது. இளையவள் ஒரு முடிவாயிருந்தபடியால், நான் அவள் வழிக்கே போனேன். என் சகோதரி முந்தியடித்துக் கொண்டு அடுத்துப் பேச ஏதாவது ஒரு குறிப்பின் வாலைப் பிடித்துத் தந்து பேச்சை வளர்த்து விடுவதற்குள் நாங்களிருவரும் உடனடியாய் கிளம்பினோம்.

லார்ச்சஸின் கதவினை ஒரு வயதான பெண்மணி எங்களுக்காகத் திறந்து விட்டாள். திருமிகு பொய்ரெட் வீட்டிலிருப்பதாய் தான் தோன்றியது.

துல்லியமாயும் ஒழுங்காயும் அமைக்கப்பட்டிருந்த ஒரு சிறு விருந்தினர் அறைக்குள் நாங்கள் அனுமதிக்கப்பட்டோம். அங்கு, ஓரிரு நிமிடங்கள் கடந்த பிறகு, எனது நேற்றைய நண்பன் வந்தார்.

''வந்தனங்கள் திருவாளருக்கு'' என்று அழகாய் வரவேற்றார். ''என் இனியவளுக்கும்'' என்று ஃப்ளோராவைப் பார்த்து அவர் செய்த புன்முறுவலில் இருவருமே அவரிடம் சற்று அன்யோன்யமாகி விட்டோம். ஃப்ளோராவுக்கு முதுகு வளைத்து ஆங்கிலேய வணக்கம் தெரிவித்தார். எனக்குக் கைகுலுக்கல்.

நான் தான் ஆரம்பித்தேன். ''நேற்றிரவு நடந்த துயரச் சம்பவம் உங்களுக்கும் தெரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்.''

அவரது முகம் தொய்வு கொண்டது. ''நிச்சயமா. கேள்விப்பட்டேன். இது கொடூரம் – அராஜகம். மேடமுக்கு என் மனமார்ந்த அனுதாபங்

களைச் சமர்ப்பிக்கிறேன். எந்த வகையில நான் உங்களுக்கு சேவை தரணும், கம் ஆன்!''

''மிஸ் ஆக்ராய்டு – உங்களை – இந்த – இந்த —''

''ப்ச்'' என்று என்னைப் பார்த்த ஃப்ளோரா, துல்லியக் குரலில் முழுசாய் அறிவித்தாள்: ''நீங்க கொலைகாரனைக் கண்டுபிடிச்சுத் தரணும்.''

''ஓஹோ'' என்றார் அந்தக் குள்ளமனிதர். ''ஆனா இதைத்தான் போலீஸ் பண்ணிடுமே, இல்லே?''

''அவங்க தப்புப் பண்ணி விடும் சாத்தியமிருக்கு'' என்றாள் ஃப்ளோரா. ''இப்பகூட ஒரு தவறைப் பண்ணும் பாதையில போலீஸ் போய்க்கிட்டிருப்பதா நான் நினைக்கிறேன். ப்ளீஸ், திரு பொய்ரெட்... எனக்கு நீங்க உதவக் கூடாதா? ஒருவேளை, தயக்கத்துக்குக் காரணம், பணம்னா —''

''கிடையாது, கிடையாது. ப்ளீஸ் மேடம், பணத்துக்காகத் துப்பறிபவனல்ல நான். உண்மைக்காக. பணம் வேண்டாம்னு சொல்ல மாட்டேன்'' – இப்போது சின்னதாய் கண்ணடித்தார் அவர் – ''பணம், எனக்கு முக்கியமான ஒரு பொருளா இருந்திருக்கு... உதவியுமிருக்கு'' என்றவர் தொடர்ந்தார்: ''பிரச்சினை பணமல்ல. கவனியுங்க. ஒரு விஷயம் உங்களுக்குப் புரிஞ்சுடணும். *இந்த சமாச்சாரத்தை இதன் முடிவு வரை நான் விட மாட்டேன்.* ஒரு நல்ல மோப்ப நாய், அது முகர்ந்த மோப்பத்தைக் கவ்வும் வரை விடாது – நினைவிருக்கட்டும். அதனால, பேசாம போலீஸ்கிட்டேயே விட்டுட்டுக் காத்திருங்க.''

''ம்ம்'' என மறுத்த ஃப்ளோரா, ''எனக்கு உண்மை வேணும்'' என்றாள், அவருடைய கண்களை நேருக்கு நேராய் சந்தித்துக் கொண்டே.

''எல்லா உண்மையுமா?''

''எல்லா உண்மையுமே.''

''அப்படினா, நான் – ஏத்துக்கறேன்'' – குள்ளமனிதர் சாந்தமாய் ஒப்புதலை அளித்தார். ''நீங்க மேலே சொன்ன வார்த்தைகளுக்குப் பின்னாடி வருந்த மாட்டீங்கனு எதிர்பார்க்கிறேன். இப்ப, எல்லா சூழல்களையும் எனக்கு விளக்குங்க.''

''டாக்டர் ஷெப்பர்ட் சொல்வது தான் சிறந்தது'' என்றாள் ஃப்ளோரா.

''எனக்குத் தெரிஞ்சிருப்பதை விட அவருக்குத் தான் நல்லா தெரியும்.''

இவ்வகையில் அவர்களோடு இணைத்துக் கொள்ளப்பட்ட நான், அனைத்து நிஜங்களையும் உள்ளடக்கி ஜாக்கிரதையாய் ஒப்புவித்தேன். ஆங்காங்கே சில கேள்விகளை மட்டும் இடைச்செருகி பொய்ரெட் கவனமாய் கேட்டுக் கொண்டார்; ஆனால் என் விளக்கத்தின் முழு நேரமும் அவர் அமைதியாகவும் விட்டத்தில் பதித்திருந்த கண்களை எப்பக்கத்திலும் திருப்பாமலுமே இருந்தார்.

கடந்த இரவன்று நானும் இன்ஸ்பெக்டரும் ஃபெர்ன்லி பார்க் வளாகத்திலிருந்து வெளியேறிய கட்டத்தில் என்னுடைய கதையை பூர்த்தி செய்துக் கொண்டேன்.

உடனேயே, ''சரி... இப்ப'' என்ற ஃப்ளோரா, ''அவருக்கு ரால்ஃப் பற்றிய முழு விவரங்களையும் கொடுங்க'' என்றாள்.

நான் தயங்கினாலும் அவளுடைய விரட்டும் பார்வையால் நான் இயக்கப்பட்டேன்.

எனது இக்கதையையும் நான் மூடியபோது, ''அந்த விடுதிக்கு – ஆண்கள் விடுதிக்கு – நேத்து நீங்க திரும்பும்போது போய் வந்ததா சொன்னீங்க?'' என்ற பொய்ரெட் கேட்டார்: ''ஆமாம் – *அது எதுக்காக?''*

ஜாக்கிரதையாய் வார்த்தைகளைப் பொறுக்கிக் கொள்ள நான் கண நேரம் தாமதித்தேன். ''யாராவது ஒருத்தர் அந்த வாலிபனின் வளர்ப்புத் தந்தை இறந்து விட்ட சேதியைப் போய் சொல்லணும்னு நினைச்சேன். ஃபெர்ன்லியை விட்டுக் கிளம்பும்போது தான், எனக்கும் ஆக்ராய்டுக்கும் மட்டும் தான் அவன் இந்த கிராமத்துல வந்து தங்கிக் கிட்டிருக்கும் சேதியே தெரியும் என்பது என் ஞாபகத்துக்கு வந்தது.''

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தார். ''உண்மைதான். இது ஒண்ணு மட்டும்தானா நீங்க அங்கே போனதற்கான ஒரு குறிக்கோள், ஆங்?''

''இது ஒண்ணுதான் நான் அங்கே போனதற்கான ஒரு குறிக்கோள்'' என்றேன் நான் கடுமையாய்.

''நீங்க போனது – அவர் அங்கேதான் இருக்காரானு – ஒரு தடவை ஊர்ஜிதப்படுத்திக்கக் கிடையாதுனு – நாம சொல்லலாமா?''

''நான் ஊர்ஜிதப்படுத்திக்கவா?''

''எனக்கென்னவோ, டியர் ஸார், நான் என்ன சொல்ல விரும்புறேன் என்பது உங்களுக்குத் தெரிஞ்சிருக்குனே நினைக்கிறேன்... ஆனா அப்படி எதுவும் புரியாத மாதிரி காட்டிக்க நீங்க பிரியப்படறீங்க. கேப்டன் ரால்ஃப் அன்னிக்கு மாலை முழுக்க அங்கேயே தான் இருந்தார் என்பதை ஊர்ஜிதப்படுத்திக்கிட்டா அது உங்களுக்கு ஒரு பெரிய நிம்மதியாயிருந்திருக்கும்னு நான் சொல்ல வரேன்.''

''கிடையவே கிடையாது'' என்றேன் நான் கடுமையாய்.

எனக்காக மறுத்துத் தலையசைத்தார் அந்தக் குள்ள டிடெக்டிவ். ''மிஸ் ஃப்ளோரா என் மேல வெச்சிருக்கும் நம்பிக்கைல உங்களுக்கு நம்பிக்கை இல்லே, டாக்டர். பரவாயில்லே. விட்டுடுவோம். இப்ப நாம கவனிக்க வேண்டியது இதுதான்: ரால்ஃப் காணாமப் போயிருக்கார்; இதுக்கு விளக்கம் தேவைப்படுது. இந்த சமாச்சாரம் ரகசியம் நிறைஞ்சுதானிருக்கு என்கிற நிலைமையை நான் உங்ககிட்டேயிருந்து மறைச்சு வைக்க விரும்பலே. இருந்தபோதிலும், இதுக்கு, வெறும் ஸிம்பிளான ஒரு காரணம் கூட இருக்கலாம்.''

''இதையே தான் நான் திருப்பித்திருப்பிக் கதறிக்கிட்டிருக்கேன்'' என்றாள் ஃப்ளோரா ஈடுபாடு அதிகமாகி.

இந்தப் பேச்சில் மேற்கொண்டு வேறெதையும் பொய்ரெட் தொடவில்லை. உடனடியாய் லோக்கல் போலீஸைப் பார்த்து விடலாம் என ஆலோசித்தார். ஃப்ளோரா தற்சமயத்துக்கு வீட்டுக்குப் போய் விடுவதே சிறந்தது என்ற அவர், நான், அவருடன் கிளம்பிச் சென்று, வழக்கைக் கையாளும் அதிகாரிகளுக்கு பொய்ரெட்டை அறிமுகப் படுத்தி வைக்க வேண்டும் என்று முடிவானது.

உடனடியாய் இத்திட்டத்தை நாங்கள் செயல்படுத்தினோம். போலீஸ் ஸ்டேஷனுக்கு வெளிப் பிரதேசத்தில் டேவிஸை நாங்கள் பார்த்தோம். அவருடன் கூட கலோனல் மெல்ரோஸ், முதன்மை கான்ஸ்டபிள் மேலும் இன்னொருவரும் இருந்தனர்; ஃப்ளோராவின் 'கீரிப்பிள்ளை போன்ற' என்ற வர்ணிப்பின் உதவியோடு அந்த இன்னொருவர் க்ரான்செஸ்டர் பகுதி இன்ஸ்பெக்டர் ரக்லான் என்று சுலபமாய் விளங்கிக் கொண்டேன்.

மெல்ரோஸை எனக்கு நெருக்கமாய் தெரியும், ஆகையால் பொய்ரெட்டை அவருக்கு முதலில் அறிமுகம் செய்து வைத்து அவர்

இணைந்துள்ள நிலைமையையும் எடுத்து முன் வைத்தேன். இதற்கு முதன்மை கான்ஸ்டபிள் அடிவரை வெறுப்பானார். கருமேகம் சூழ்ந்து வெடிக்கும் இடி போல முகம் மாறினார் ரக்லான். தனது உயரதிகாரிகளின் எரிச்சலைக் கண்டு சற்றே களிப்படைந்தவராய் தோன்றினார் டேவிஸ்.

''கேஸ், துளி சிக்கலில்லாம இதோ முடியப் போகுது'' என்றார் இன்ஸ்பெக்டர் ரக்லான். ''இதுல அங்கீகாரமற்ற தனியாரெல்லாம் மூக்கை நுழைக்க வேண்டிய தேவையே தெரியலே. நேத்து ராத்திரி நடந்த விஷயங்களை வெச்சுக்கிட்டு ஒரு முட்டாள் கூட முடிவைச் சொல்லிட முடியும். அதுக்கு இவரைக் கூட்டிட்டு வந்திருக்கீங்க.''

மோசமான வரவேற்பு. பழிதீர்க்கும் பார்வையை இந்த இன்ஸ்பெக்டர் அந்த டேவிஸ் இன்ஸ்பெக்டர் பக்கம் வீச அதை அவர் ஆமோதிப்பாய் பெற்றுக் கொண்டார்.

கலோனல் மெல்ரோஸ், ''மிஸ்டர் ஆக்ராய்டு குடும்பத்தாருக்கு எது சிறந்ததுனு படுதோ அதைப் பண்ண அவங்களுக்கு உரிமையிருக்கு'' என்றார். ''ஆனா, அதிகாரபூர்வ விசாரணை எந்த வகையிலும் பாதிக்கப்படுவதை நாம அனுமதிக்க முடியாது. ஆயினும் மிஸ்டர் பொய்ரெட்டுடைய கீர்த்தி பற்றி எனக்கு நல்லாவே தெரியும்'' என்று முடித்தார் கனிவாய்.

''அப்ப இந்த கேஸ்ல வெற்றியும் விளம்பரமும் போலீஸுக்குக் கிடைக்கப் போவதில்லே... துரதிர்ஷ்டம்'' என்றார் ரக்லான்.

இப்படிப் போய்க் கொண்டிருந்த சுகமற்ற சூழலைக் காப்பாற்றியது, அடிவாங்கிக் கொண்டிருந்த பொய்ரெட் தான்!

''இந்தத் துப்பறியும் உலகத்திலிருந்து நான் ஓய்வு பெற்று விலகியாச்சு என்பதே நிஜம்'' என்றார் அவர். ''மறுபடியும் இன்னொரு கேஸைக் கையிலெடுத்துக் கொள்வது என் எண்ணமே கிடையாது. இதுக்கெல்லாம் மேலாய் – புகழ் விளம்பரம் இவையெல்லாம் எனக்கு அலர்ஜி. ஆக ஒண்ணு சொல்லிக்க விரும்பறேன்: இதுல என்னால ஏதாவது உபகாரம் ஆகி கேஸ் பைசலானா அதனால் வரும் புகழில் கடுகளவும் எனக்கு வேண்டாம். ஓ கே?''

இன்ஸ்பெக்டர் ரக்லானின் முகம் கொஞ்சம் ஒளி கொண்டது.

''உங்களுடைய சில குறிப்பிட வேண்டிய பெரும் வெற்றிகள்

பற்றியெல்லாம் எனக்குத் தெரியும்'' என குதித்து வந்தது கலோனல்.

''எனக்கு நீண்ட நெடுங்கால அனுபவம் இருக்கு'' என்று அமைதியாய் ஒப்புக் கொண்டார் பொய்ரெட். ''ஆனா என்னுடைய பல கேஸ்களின் வெற்றிகள் போலீஸின் உதவியால் பெறப்பட்டவையே. உங்களுடைய ஆங்கிலேய போலீஸ் மேல எனக்கு எப்பவுமே அளவு கடந்த மரியாதை உண்டு. இன்ஸ்பெக்டர் ரக்லான் என்னை இதுல துப்பறிய அனுமதிச்சா அதை நான் எனக்குக் கிடைச்ச பேறாகவும் மரியாதையாகவும் தான் எடுத்துப்பேன்.''

இன்ஸ்பெக்டர் ரக்லானின் முகபாவம் இன்னும் கொஞ்சம் பரிமளித்தது.

கலோனல் மெல்ரோஸ் இப்போது என்னை தனியே இழுத்துப் போனார். ''எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் இந்தக் குள்ள மனிதன் பல பாராட்டும்படியான துப்பறிதல்களைப் பண்ணியிருக்கார்'' என்றார் முணுமுணுப்பாய். ''ஸ்காட்லாண்டு யார்ட் போலீஸையெல்லாம் இதுக்குள்ளே விட்டுடக் கூடாதுனு ரக்லான் பிடியாயிருக்கார். தனது முடிவுல ரக்லான் ஸ்திரமான நம்பிக்கையில இருப்பதா படுது – ஆனா நான் அவரோட முடிவை அப்படியே முழுக்க ஏத்துக்கலே. யெஸ். இந்த வழக்குல பின்னிப் பிணைஞ்சிருக்கிற மனுஷாளை அவரை விட எனக்கு ரொம்ப நல்லாவே தெரியும்'' என்றவர், ''யெஸ், யெஸ்'' என்று உரக்க அறிவித்து, ''இனி தொடரவுள்ள வழக்கின் கட்டங்கள்ல உங்களையும் சேர்த்துப்பது புத்திசாலித்தனம்னு நினைக்கிறோம், ஸார்'' என்றார் துப்பறியும் நிபுணரிடம்.

''நான் உங்களுக்கு நன்றி சொல்லிக்கறேன்'' என்றார் பொய்ரெட். ''என் நண்பர் டாக்டர் ஷெப்பர்ட், பட்லர் மீது சந்தேகம் பதிஞ்சிருப்பதா சொல்றார்.''

''அதெல்லாம் வெறும் வெத்துவேட்டு'' என்றார் இன்ஸ்பெக்டர் ரம்லான். ''இந்த ஹை-க்ளாஸ் சமுதாயத்தோட வேலைக்காரனுங்க ஏதோ அவனுங்களுக்குத் தான் எல்லாம் தெரிஞ்சா மாதிரி தேவையில்லாத சின்ன விஷயத்துக்குக் கூட பதுங்கிப்பதுங்கி சந்தேகத்தனத்தோட நடந்துக்குவானுங்க.''

''கைரேகைகள்?'' – நான் எடுத்துக் கொடுத்தேன்.

''பார்க்கருடையவை போல இல்லே'' – உணர்ச்சியற்ற சிரிப்பைத்

தந்த அவர் கூடுதலாய் சொன்னார்: ''ரேமண்ட்ஸ் மற்றும் உங்களுடைய கைரேகைகளாகவும் அவையில்லை, டாக்டர்.''

''காப்டன் ரால்ஃப் பேடன்?'' – சாந்தமாய் கேட்டார் பொய்ரெட்.

சரியான நேரத்தில் வழக்கின் கயிறை அப்படியே தன் கைக்கு மாற்றி எடுத்துக் கொண்ட பொய்ரெட்டின் சாதுர்யத்தை நான் ரகசியமாக பாராட்டினேன். இன்ஸ்பெக்டரின் கண்களில் ஒரு தனித்துவம் மிக்க மரியாதை இப்போது வந்த அமர்ந்துக் கொண்டு விட்டதை நான் கவனித்தேன்.

''ஓ... சோம்பி உட்கார்ந்து உங்க காலுக்கு அடியில புல் வளர்ற அளவுக்கு காத்திருக்க மாட்டீங்க போலிருக்கே, மிஸ்டர் பொய்ரெட்? என்ன சுறுசுறுப்பு! உங்களோட உழைப்பதும் ஒத்துழைப்பதும் ஒரு சுகானுபவமா இருக்கும் போல தோணுதே. அந்த இளையவனின் மீது எங்கள் கைகளைப் பதித்த மறு நொடியே அவருடைய கைரேகைகள் பெறப்பட்டு விடும்.''

''நீங்க தப்புத்தப்பா புரிஞ்சுக்கிட்டிருக்கீங்கனு என்னால சொல்லாம இருக்க முடியலே, இன்ஸ்பெக்டர் ரக்லான்'' என கதகதப்பாய் தான் குறிப்பிட்டார் கலோனல். ''சின்னப் பையனாயிருந்து, வளர்ந்து வாலிபனா இப்ப நிப்பது வரை, எனக்கு ரால்ஃப் பேடனைத் தெரியும். கொலை எனும் அளவுக்கு அவன் தரம் தாழ மாட்டான்.''

''அப்படி இல்லாமலும் இருக்கலாம்'' என்றார் இன்ஸ்பெக்டர் விடாப்பிடியாய்.

''அவருக்கு எதிரா அப்படி நீங்க எதைத்தான் வெச்சிருக்கீங்க?'' என்றேன் நான்.

''ஒன்பது மணிக்கு வெளியே எங்கேயோ கிளம்பிப் போயிருக்கார் அவர். ஒன்பதரை மணியையொட்டி ஃபெர்ன்லி பார்க்கை ஒட்டிய பகுதியில் அவரைப் பார்த்திருக்காங்க. அதுக்கப்புறத்திலிருந்து அவர் கண்ணுல படலே. தாளாத பணமுடையில இருந்திருப்பதா நம்பப் படுது. என்கிட்டே இங்கே அவரோட ஒரு ஜோடி ஷூக்கள் இருக்கு – ஷூக்கள்... முத்து முத்தாய் ரப்பர் வட்டங்கள் கொண்ட ஷூக்கள். ஒரே மாதிரியான இரு ஜோடி ஷூக்கள் அவரண்டை இருந்திருக்கு. இங்கிருக்கும் காலடித்தடங்களோட இந்த ஷூவை நான் இப்பப்போய் ஒப்பிடப்போறேன். யாரும் அந்த சாட்சியை சிதைச்சுடாம அங்கே ஏட்டு

கவனிச்சுக்கிட்டிருக்கார்.''

''அப்ப நாம இப்பவே போயிடுவோம்'' என்றார் கலோனல் மெல்ரோஸ். ''நீங்களும், மிஸ்டர் பொய்ரெட்டும் கூட வரீங்க, இல்லே?''

நாங்கள் இறங்கி எல்லோரும் கலோனலுடைய கார் நோக்கிப் போனோம். இன்ஸ்பெக்டர் காலடித் தடங்களைப் போய் அடைந்து விட வேண்டும் என்பதில் துடிப்பாயிருந்தார். காம்பவுண்டுக்கு உள்ளே பாதி தொலைவு வரை நாங்கள் பயணமாகியிருப்போம்... அங்கு வலப்புறத்தில், ஒரு பாதை கிளை பிரிந்தது; அது வளைந்துப் போய் உப்பரிகை போன்ற மாடியின் அகண்ட வராண்டாவுக்கும் ஆக்ராய்டு படிக்குமறையின் ஜன்னலுக்கும் போனது. இது தான் வீட்டின் 'டெரஸ்.'

''இன்ஸ்பெக்டருடன் போகப் பிரியப்படறீங்களா, மிஸ்டர் பொய்ரெட்?'' என்று முதன்மை கான்ஸ்டபிள் கேட்டார். ''இல்லே, நீங்க அந்தப் படிக்குமறையைப் பரீட்சிக்க விரும்பறீங்களா?''

பொய்ரெட் இரண்டாவது சொல்லப்பட்டதைத் தெரிந்தெடுத்துக் கொண்டார். பார்க்கர் எங்களுக்காகக் கதவினைத் திறந்து விட்டான். அவனுடைய நடவடிக்கைகள் நேர்த்தியாகவும் தைரியமாகவும் மாறியிருந்தன... நேற்றைய இரவு தந்திருந்த அதிர்ச்சியிலிருந்து அவன் மீண்டு விட்டிருந்தான்.

தனது பாக்கெட்டிலிருந்து சாவியொன்றை எடுத்துக் கதவினைக் கலோனல் திறக்க, நாங்கள் அறைக்கு, பின்னியிருந்த சிறு பகுதியைக் கடந்து அறைக்குள் போனோம்.

''உடலை அப்புறப்படுத்தியதைத் தவிர, மிஸ்டர் பொய்ரெட், இந்த அறை, நேற்றிரவு எந்த நிலைமையில இருந்ததோ அதே நிலைமையில தான் இப்பவுமிருக்கு.

''உடல் – எங்கே கண்டெடுக்கப்பட்டது?''

எத்தனை துல்லியமாய் முடியுமோ, அத்தனை துல்லியமாய் ஆக்ராய்டு கிடந்த நிலையை விவரித்தேன். அவரமர்ந்திருந்த கைவைத்த நாற்காலி இன்னமும் கனப்புக்கு முன்னாடியே தானிருந்தது.

பொய்ரெட் அதனிடத்தில் போய் உட்கார்ந்து பார்த்தார்.

''நீங்க குறிப்பிட்ட அந்த நீலக்கடுதாசி, நீங்க கிளம்பும்போது

TOP


சஞ்சிகை
டேபிள்
கதவு
இழுக்கப்பட்ட
நாற்காலி
ரோஜர் ஆக்ராய்டு
இருந்த நாற்காலி
வட்டமேஜை
கனப்பு
டெஸ்க்
ஷேப்பர்ட் உட்கார்ந்திருந்த இருக்கை

BOTTOM

எங்கேயிருந்தது?''

''ஆக்ராய்டுக்கு வலப்பக்கத்திலிருந்த சின்ன டேபிள்ல அதை அவர் போட்டார்.''

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்துக் காட்டினார்.

''அதை தவிர ஏனைய அனைத்தும் அதனதன் இடங்கள்ல தான் இருக்கா?''

''யெஸ். அப்படித்தான் நான் நினைக்கிறேன்.''

''கலோனல் மெல்ரோஸ்... நீங்க இப்ப தயவுகூர்ந்து இந்த சேர்ல வந்து உட்கார முடியுமா? தேங்க் யூ. ஆங், டாக்டர்... இப்ப அந்தப் பிச்சுவாக் கத்தியிருந்த நிலையை மிகச்சரியா காட்ட முடியுமா?''

குள்ளர் போய் வாயிற்கதவருகே நின்றுக் கொண்டுவிட, நான் கத்திக்குத்து இடம்பெற்றிருந்த பகுதியை உட்கார்ந்துக் கொண்ட கலோனல் கழுத்தில் நான் சுட்டிக் காட்டினேன்.

''அப்படினா, பிச்சுவாக் கத்தியின் கைப்பிடி கதவருகே நீங்க வந்தவுடனேயே நிறைவா தெரிஞ்சிருக்கு. நீங்களும் பார்க்கரும் உடனேயே இதைப் பார்க்க முடிஞ்சிருக்கு?''

''யெஸ்.''

பொய்ரெட் ஜன்னலையடுத்துப் போய் நின்றுக் கொண்டார். ''நீங்க பாடியைக் கண்டுபிடிச்சபோது எலக்ட்ரிக் பல்ப் எரிஞ்சுக்கிட்டிருந் திருக்கணும் இல்லையா?'' என்று திரும்பி அவரது தோள் வழியே கேட்டார்.

நான் நிச்சயப்படுத்தினேன். பிறகு, ஜன்னல் திட்டிலிருந்த காலடிகளை அவர் ஆராய்ந்துக் கொண்டிருந்த இடத்திற்கு நானும் போய் இணைந்துக் கொண்டேன்.

''இந்த ரப்பர் வட்டங்கள் அச்சுஅசலாய் கேப்டன் ரால்ஃபோட ஷூ டிஸைனே தான்'' என்றார் அமைதியாய்.

பின், மற்றுமொரு முறை அறையின் மையத்துக்கு வந்து நின்றுக் கொண்டார் அவர். அறையிலிருந்த அனைத்தையும் அவருடைய கண்கள் விரைவாகவும் பயிற்சி கொண்ட முதிர்ச்சியுடனும் ஒரு முறை வலம் வந்து நோட்டமிட்டன. நிறைவாக, ''நீங்க, பார்ப்பவற்றைத் துல்லியமாக மனதில் பதிந்துக் கொள்ளும் வழக்கமுள்ளவரா, டாக்டர் ஷெப்பர்ட்?'' என கேட்டார்.

''அப்படித்தான் நினைக்கிறேன்'' என்றேன் நான் ஆச்சரியப்பட்டு.

''கனப்புல நெருப்பு இருந்திருக்கு என்பது எனக்குத் தெரியுது. நீங்க கதவை உடைச்சுக்கிட்டு வந்து ஆக்ராய்டு இறந்திருப்பதைப் பார்த்த அந்த சமயத்துல, நெருப்பு எப்படியிருந்தது? கம்மியா இருந்ததா அது?''

நான் வெறுத்துப்போன சிரிப்பொன்றை உதிர்த்தேன். ''எ-எ-என்னால சொல்ல முடியலே. அதை நான் கவனிக்கவேயில்லே. ஒருவேளை, மேஜர் ப்ளண்ட் அப்படியில்லேனா மிஸ்டர் ரேமண்ட் —''

எனக்கு முன்னால் நின்றுக் கொண்டிருந்த அந்தக் குள்ளமனிதன் வற்றிப்போன சிரிப்பொன்றை பதிலாய் தந்தார். ''ஒருத்தர், ஒரு விஷயத்தை, அதற்குண்டான சரியான முறையில தான் அணுகணும். அந்தக் கேள்வியை உங்ககிட்டே கேட்க நானெடுத்த முடிவே, தப்பு. அவரவர் சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளைப் பொறுத்துத்தான் ஒருத்தருடைய அறிதல்களும் இருக்கும். வந்த நோயாளியுடைய நிலைமை எப்படியிருந்ததுனு நான் உங்ககிட்டே தாராளமா கேக்கலாம் – இதுல, உங்க கண்ணிலிருந்து எதுவும் தப்பாது. அந்த டேபிள்ல இருந்த ஆவணத்தாள்களைப் பற்றி ரேமண்ட்கிட்டே கேட்டேன்னா, அதுல சிக்கலேயில்லாம அவரால பதில் தர முடியும் - காரியதரிசியில்லே! இந்த நெருப்பு சமாச்சாரம் பற்றி தெரிஞ்சுக்கணும்னா, இதை எந்த மனுஷன் கவனிக்கணுமோ அவரைத்தான் நான் கேட்டாகணும், ஆக—''

நிறுத்திய பொய்ரெட், துரிதமாய் கனப்புக்கருகில் போய் நின்றுக் கொண்டு பணியாட்களை அழைக்கும் மணியையடித்தார்.

ஓரிரு நிமிடங்கள் கடந்த பிறகு பார்க்கர் வந்து சேர்ந்தான். ''பெல்லடிச்சது, ஸார்'' என்றான் தயக்கமாய்.

''இங்கே வா பார்க்கர்'' என்றார் கலோனல் மெல்ரோஸ். ''இந்த ஜென்டில்மேன் உன்கிட்டே எதையோ கேட்கப் பிரியப்படறார்.''

பார்க்கர் மரியாதை கலந்த பார்வையை இப்போது பொய்ரெட் மீது பதித்தான்.

''பார்க்கர்...'' என்ற குள்ளதுப்பறியும் நிபுணர், ''நேற்றிரவு நீ டாக்டர் ஷெப்பர்ட் கூட சேர்ந்து கதவை உடைச்சுக்கிட்டு உள்ளே நுழைஞ்சு உங்க ஐயா இறந்துக் கிடந்ததைப் பார்த்தபோது, கனப்பிலிருந்த நெருப்பின் நிலைமை எப்படியிருந்தது?''

''அது ரொம்பக் கம்மியா எரிஞ்சுக்கிட்டிருந்தது, ஸார். சொல்லப்

போனா அது முழுக்க அணைஞ்சுடுச்சுனே சொல்லலாம்.''

''ஆஹ்!'' என்றார் பொய்ரெட். இந்த ஆச்சரிய வெளிப்பாடு, ஒரு கொக்கரிக்கும் வெற்றியாகவே அமைந்திருந்தது. அவர் மேலும் தொடர்ந்தார்: ''சுற்றிவர கொஞ்சம் கவனி, பார்க்கர். அப்ப இருந்த மாதிரியேவா இப்பவும் இந்த ரூமிருக்கு?''

பட்லரின் கண்கள் அறை முழுவதையும் வழித்தெடுப்பது போல பார்த்தது. அவை ஜன்னலைக் கடக்கும் போது நின்றன. ''திரைச்சீலை இழுத்து விடப்பட்டிருந்தது, ஸார். எலக்ட்ரிக் பல்ப் எரிஞ்சுக் கிட்டிருந்தது.''

ஏற்றுக்கொள்வதாய் தலையசைத்தார் பொய்ரெட். ''இன்னும் ஏதாவது?''

''யெஸ், ஸார். இந்த சேர் வெளிப்பக்கமா நிறைய இழுக்கப் பட்டிருந்தது, ஸார்'' என்றான்.

கதவுக்கு இடப்பக்கத்திலிருந்த பெரிய தாத்தா சேரைக் காட்டிய அவன், அந்த சேருக்கும் ஜன்னலுக்குமான இடைப்பட்ட தூரத்தைக் குறிப்பிட்டான். நேயர்களுக்கு குழப்பமில்லாமல் புரிய அந்த அறையின் அமைப்பையே கீழே இணைத்துத் தருகிறேன்.

''ஜஸ்ட், அதைக் கொஞ்சம் அமைத்துக் காட்டு'' என்றார் பொய்ரெட்.

இப்போது விவாதத்திலிருந்த அந்த சேரை இரண்டடி போல தாராளமாய் இழுத்து, அது கதவைப் பார்த்திருக்கும்படி நன்றாய் திருப்பிப் போட்டான்.

''அய்யய்யே'' என்று முணுமுணுத்தார் பொய்ரெட். ''இந்த அறையில, அப்படி ஒரு கோணத்துல சேரைப் போட்டுக்கிட்டு ஒருத்தரும் உட்கார மாட்டாங்கனு நினைக்கிறேன். அப்போ, இந்த நாற்காலியை, யார் அதன் சரியான இடத்துக்கு நகர்த்திப் போட்டது? எனக்கு இது ஆச்சரியமாயிருக்கு? நீயே பண்ணினியா, நண்பா?''

''நோ, நோ, ஸார்'' என்றான் பார்க்கர். ''ஐயாவை அந்தக் கோலத்துல பார்த்தது மற்றும் அந்தக் களேபரத்துல, நான் நிலைகுலைஞ்சுப் போயிருந்தேன், ஸார்.''

பொய்ரெட் திரும்பி அறைக்குக் குறுக்காய் என்னைப் பார்த்தார். ''நீங்களா, டாக்டர்?''

நான் மறுப்பாய் தலையசைத்தேன்.

''நான் மறுபடியும் போலீஸோட உள்ளே நுழையும்போது அது சரியா ஆகியிருந்தது, ஸார்'' என்றான் பார்க்கர். ''இதுல நான் நிச்சமா யிருக்கேன்.''

''விசித்திரம்'' என்றார் பொய்ரெட்.

''ரேமண்ட் இல்லேனா ப்ளண்ட், அதைத் தள்ளி சரியாப் போட்டிருக் கலாம்'' என ஆலோசித்தேன் நான். ''இதென்ன அத்தனை முக்கியமா?''

''இது முழுக்கவும் முக்கியமே அற்ற ஒண்ணு தான்'' என்றார் பொய்ரெட். ''அதனால தான் இது அத்தனை இண்ட்ரஸ்டிங்கா யிருக்கு'' என மிருதுவாய் முடித்தும் கொடுத்தார்.

''ஒரு நிமிஷம், எக்ஸ்க்யூஸ் மீ'' என்ற கலோனல், பார்க்கருடன் நகர்ந்தார்.

''பார்க்கர் உண்மையைத் தான் பேசறான்னு நீங்க நினைக்கிறீங் களா?'' என கேட்டேன் நான்.

''சேரைப் பொறுத்தவரைக்கும், யெஸ். மற்ற விஷயங்கள்ல எனக்குத் தெரியாது. டியர் டாக்டர்... இந்த மாதிரி கொலை வழக்குகள்ல உங்களுக்கு அதிக அனுபவம் இருந்தால், ஒரு விஷயத்துல மட்டும் எல்லாருமே ஒத்துப்போய் ஓரணியா ஒண்ணா நிற்பது உங்களுக்கே புரியும்.''

''அது என்ன?'' என நான் ஆர்வமாய் கேட்டேன்.

''இதுல சம்பந்தமுள்ள ஒவ்வொருத்தருக்கும் மறைச்சுப் பதுக்கி வெச்சுக்க ஒரு விஷயம் இருக்கும்.''

''நான் ஏதாவது மறைச்சு—?''–புன்னகைத்தபடி கேட்டேன் நான்.

என்னைக் கவனமாய் பார்த்தார் பொய்ரெட். ''உங்களுக்கும் ஒரு விஷயம் இருக்குனு நினைக்கிறேன்'' என்றார் சாந்தமாய்.

''ஆனா—''

''இந்த யங் மேன் பேடன் பற்றி உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும் அத்தனை சங்கதிகளையும் நீங்க என்கிட்டே சொல்லிட்டீங்களா?''– நான் படபடப்பாய் ஆவதைப் பார்த்து புன்னகைத்தார் அவர். ''ஓ, பயப்படாதீங்க. நான் சொல்லச் சொல்லி வற்புறுத்த மாட்டேன். காலப்போக்குல நானே தெரிஞ்சுக்குவேன்.''

''ஓஓஓ... ஸார்! உங்களுடைய அணுகுமுறை தான் என்ன என்பதை

நீங்க என்னிடம் சொல்லணும்னு நான் விரும்பறேன்'' – என் குழப்பத்தை மறைக்க, முந்திரிக்கொட்டையாய் சொல்லி விட்டேன் நான். ''கனப்பு நெருப்பையே உதாரணத்துக்கு எடுத்துக்குவோமே...

''ஓ! அது ஸிம்பிள். நீங்க ஆக்ராய்டை எட்டு ஐம்பதுக்கு விட்டுட்டு விலகறீங்க – அப்படித்தானே?''

''யெஸ். இதை, துல்லியமானு கூட நான் சொல்வேன்.''

''ஜன்னல் அப்போ மூடி பூட்டப்பட்டிருக்க, கதவு பூட்டப்படலே. பத்தே கால் மணிக்கு உடல் கண்டெடுக்கப்பட்டபோது, கதவு பூட்டிப்பட்டிருக்க, ஜன்னல் திறந்திருக்கு. *யார் அதை திறந்தது?* மிஸ்டர் ஆக்ராய்டே அப்படி பண்ணியிருக்க விஸ்தாரமா வாய்ப்பிருக்கு – ரெண்டு காரணங்களுக்காக. இந்த அறை தாள முடியாத அளவுக்கு சூடா ஆகியிருந்தால்; ஆனா, கனப்பின் நெருப்புக் கம்மியாகியிருக்க, நேற்றைய மாலை நேரத்து வெப்பநிலையும் படு வேகமாக உறை நிலைக்குப் போய்க் கொண்டிருக்க... ம்ம், இது சாத்தியமேயில்லே. இது காரணமாயிருக்க முடியாது. இன்னொண்ணு: அந்த வழியா அவர் யாரையோ உள்ளே வர அனுமதிச்சிருக்கார். அப்படி அவர் யாரையோ உள்ளே நுழைய அனுமதிச்சிருக்கார் என்பது தான் நிஜம்னா, நிச்சயமா அது அவருக்கு மிகவும் பழக்கப்பட்ட ஒருத்தராத் தானிருக்க முடியும் – ஏன்னா, அந்த ஜன்னல் பற்றிய இருப்புக் கொள்ளாமை அவர்கிட்டே ரொம்ப நேரமாகவே இருந்திருக்கு.''

''இத்தனை ஸிம்பிளா?'' என்றேன் நான்.

''எல்லாமே ஸிம்பிள்தான் அறியப்படும் உண்மைகளைச் சரியா *முறையா* வரிசைப்படுத்தினால்! நாம இப்போ அவரோட ஒன்பதரை மணிக்கு கூடயிருந்த ஆளுடைய சுபாவம் பற்றி அறிஞ்சாகணும். எல்லாமும், அந்த நபர் ஒரு தனியாள் என்றும் அந்தத் தனியாள் *அவராலேயே* ஜன்னல் வழியா உள்ளே விடப்பட்டிருக்கார் என்றும் தான் போகுது. மிஸ் ஃப்ளோராவால் மிஸ்டர் ஆக்ராய்டு ஒன்பதே முக்காலுக்கு உயிரோடப் பார்க்கப்பட்டிருந்தாலும், அந்த நபர் யார் என்பது தெரியாத வரைக்கும் நம்மால இந்த மர்மத்துக்கு ஒரு முடிவு எழுத முடியாது. ஒரு வேளை அந்த நபர் வெளியேறிய பிறகு ஜன்னல் மூடப்படாமல் விடப்பட்டிருந்து, அது, கொலையாளிக்கு ரத்தினக்கம்பள வழியா அமைந்திருந்தால்? இல்லே, ஒரு வேளை அதே

நபரே மறுபடியும் ஜன்னல் வழியா நுழைஞ்சு...? ஆஹ், அதோ கலோனல் வராரே...''

கலோனல் மெல்ரோஸ் ''அந்த டெலிபோன் அழைப்பு ஒரு வழியா அடையாளம் காணப்பட்டாச்சு'' என்றபடி வந்தார். ''அது இங்கிருந்து செய்யப்படலே. அது, டாக்டர் ஷெப்பர்டுக்கு, நேற்றிரவு 10.15க்கு, கிங்ஸ் அப்பாட் கிராமத்தின் ரயில் நிலையப் பொதுதொலைபேசியிலிருந்து போயிருக்கு. 10.23க்கு, ராத்திரி மெயில் லிவர்-பூல் பகுதிக்குக் கிளம்புது.''

அத்தியாயம் 8

இன்ஸ்பெக்டர் ரக்வான் ஸ்திரமாயிருக்கிறார்

நாங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம்.

''நீங்க ஸ்டேஷன்ல விசாரணையை முடுக்கி விடுவீங்க, இல்லையா?''–கேட்டேன் நான்.

''வேற வழி? ஆனா அது தரும் முடிவுகள்ல எனக்கு அப்படியொண்ணும் பிரமாத நம்பிக்கை கிடையாது. அந்த ரயில்வே ஸ்டேஷன் எப்படிப்பட்டதுனு உங்களுக்குத் தெரியுமில்லே?''

எனக்குத் தெரியும். கிங்ஸ் அப்பாட் வேண்டுமானால் ஒரு வெகு சாதாரண கிராமமாயிருக்கலாம். ஆனால் அதன் ஸ்டேஷன், ஒரு முக்கிய சந்திப்பாகும். ஏறத்தாழ அனைத்து எக்ஸ்பிரஸ் ரயில்களும் அங்கு நிற்கும். ரயில்கள் அங்கிருந்து பல பகுதிகளுக்குப் பிரியும், மாற்றியமைக்கப்படும், எஞ்ஜின்கள் இணைக்கப்பட்டு மேற்கொண்டு பிரயாணமாகும். அங்கு இரண்டு அல்லது மூன்று பொது தொலைபேசி முனையங்கள் உள்ளன. அந்தக் குறிப்பிட்ட இரவு நேரத்தில், 10.19க்கு உள்ளே நுழைந்து 10.23க்கு புறப்பட்டு வடக்கு திசை நோக்கிப் போகும் எக்ஸ்பிரஸ் ரயிலைப் பிடிப்பதற்காக, மூன்று லோக்கல் ரயில்கள் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமான நேரத்தில் வருகின்றன... அப்போது, முழு ரயிலடியுமே அல்லோகல்லோலப்படும். ஒரு குறிப்பிட்ட நபர் டெலிபோன் பண்ணுவதையோ அல்லது ரயிலுக்குள் ஏறுவதையோ குறி வைத்து கவனிப்பதென்பது அசாத்தியமே.

''ஆனா எதுக்காக டெலிபோன் கால் பண்ணணும்?'' என கட்டளையாய் கேட்டார் கலோனல் மெல்ரோஸ். ''இதைத்தான் நான்

அதிகபட்ச அசாதாரண நிகழ்வா கருதறேன். இதுல எந்தக் காரிய காரணமும் எனக்குத் தென்படலே.''

பொய்ரெட் அங்கிருந்த அலமாரியிலிருந்த ஒரு பீங்கான் அழகுப்பொருளை நேர்செய்து திருப்பி வைத்தார். அப்படியே, ''அதுல ஒரு காரணமிருக்கு என்பதை மறக்க வேணாம்'' என்றார் அவர்.

''அந்தக் காரணம் தான் என்னவாயிருக்க முடியும்?''

''அது நமக்குத் தெரிய வரும்போது, நமக்கு அனைத்துமே தெரிய வந்துடும். இந்த கேஸ் ரொம்பவும் விசித்திரமான, வித்தியாசமான ஒண்ணு.''

கடைசி வாக்கியத்தை அவர் சொன்னபோது, அது சொல்லப்பட்ட விதம், விவரிக்க முடியாத ஒரு தினுசில் அமைந்திருந்தது. அவருக்கே வெளிச்சமான ஒரு விளக்கவொண்ணா கோணத்தில் நின்றுக் கொண்டு கேஸினைப் பொய்ரெட் படிப்பதாய் எனக்குப் பட்டது. அப்படி செய்யும்போது அவர் எதைப்பார்த்தார் என்பதை எனக்கு சொல்லத் தெரியவில்லை.

பொய்ரெட் தற்போது ஜன்னல் வரை போய் அங்கிருந்து வெளியே பார்த்தபடி நின்றுக் கொண்டார். ''கேட்'டுக்கு வெளியே இந்த அந்நியனைப் பார்த்தபோது மணி இரவு ஒன்பதுனு சொன்னீங்க, டாக்டர் ஷெப்பர்ட்?'' – சுற்றியிருந்த எங்களைக் கவனிக்காமலேயே இந்தக் கேள்வியைக் கேட்டார் அவர்.

''யெஸ்'' என நான் மறுபதில் தந்தேன். ''மாதா கோயில் மணியோசையின் ஒன்பது மணிக்கான கணீர் கணீர் ஒலியை நான் கேட்டேன்.''

''அங்கிருந்து வீட்டை அடைய – இந்த ஜன்னலைனு கூட வெச்சுக்கலாம்... இந்த ஜன்னலையடைய – எவ்ளோ நேரம் பிடிக்கும், அவனுக்கு?'

''வெளியே அஞ்சு நிமிஷம் ஆகிடும். வலப்புற பாதையை தெரிந்தெடுத்து நேரா இங்கே மட்டும் வந்திருந்தான்னா... அதுக்கு ஒரு ரெண்டு மூணு நிமிஷங்கள்.''

''ஆனா அப்படி அவன் வரணும்னா இது தான் வழினு அவனுக்கு நல்லாவே தெரிஞ்சிருக்கணும். இதை நான் எப்படி உங்க எல்லாருக்கும் விளக்குவேன்? ஆங் — அவன் ஏற்கெனவே இங்கே வந்துப் பழக்கப்

பட்ட ஒருத்தனாத்தான் இருக்கணும்னு சொல்ல வரேன். இந்த சூழலெல்லாம் தெரிஞ்ச ஒருத்தன்.''

''அது நெஜந்தான்'' என்று ஆமோதித்தார் கலோனல்.

''கடந்த வாரத்துல திரு ஆக்ராய்டைப் பார்க்க வந்த புது ஆட்களைப் பட்டியலிட்டா அது யார்னு சந்தேகத்துக்கிடமின்றி அவனை நம்மால அடையாளம் கண்டுபிடிக்க முடிஞ்சுடும், இல்லையா?''

''இதை யங் ரேமண்ட் நமக்கு சொல்லலாம்னு நினைக்கிறேன்'' என வழி காட்டினேன் நான்.

''அப்படியில்லைனா பார்க்கர்'' என்றார் மெல்ரோஸ்.

''இல்லே, ரெண்டு பேரும்'' என்றது பொய்ரெட்.

கலோனல் ரோஸ் உடனடியாய் ரேமண்ட்டைத் தேடி நகர, நான் மற்றுமொரு முறை பார்க்கருக்கான மணியை அடித்தேன்.

இளைய செகரட்டரியைக் கையோடு அழைத்துக் கொண்டு போன வேகத்திலேயே திரும்பியிருந்தார் கலோனல். அவனைப் பொய்ரெட்டுக்கு அறிமுகம் செய்து வைத்தார். வழக்கம்போல் பொலிவுடனும் தயாராகவும் இருந்தான். ஜியோஃபெர்ரி ரேமண்ட். பொய்ரெட்டுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதில் அதிசய ஆச்சரியத்தையும் குதூகலத்தையும் அவன் தெரிவித்தான்.

''இத்தனை நெருக்கத்துல நீங்க எங்க கூடவே வாழ்ந்துக் கிட்டிருப்பது பற்றி எங்களுக்குத் துளி தெரியாது, திரு பொய்ரெட்'' என்றான் அவன். ''நீங்க பணியில இருக்கும்போது உங்களைக் கவனிச்சுக்கிட்டே இருப்பது – கண்காணிச்சுக்கிட்டு பிரமிப்பது – எங்களுக்கு ஒரு புது சுவையான அனுபவமா அமையப் போகுது. ஹல்லோ... ஹல்லோ... மை காட்... என்ன பண்றீங்க?''

பொய்ரெட் கதவுக்கு ஜஸ்ட் உடனடி இடப்புறத்தில் நின்றுக் கொண்டிருந்தார். இப்போது ஒருபக்கமாய் திடுதிப்பென்று நகர்ந்தார் அவர்; நான் முதுகு காட்டிக்கொண்டு நின்றுக் கொண்டிருந்த சமயத்தில், மிக துரிதமாக, கை வைத்த சேரைப் பார்க்கர் சுட்டிக்காட்டியிருந்த இடம் வரை அவர் இழுத்து நகர்த்தியிருக்க வேண்டும் என்பதை என்னால் கணிக்க முடிந்தது.

''எதுக்கு இதெல்லாம்? இந்த சேர்ல என்னை உட்கார வெச்சு ப்ளட்-டெஸ்ட்டுக்கு ரத்தமெடுக்கப் போறீங்களா?'' என நகைச்

சுவைக்காகக் கேட்டான் செகரட்டரி. ''பின்னே இதுக்கென்ன அர்த்தம்?''

''மிஸ்டர் ரேமண்ட்... நேத்து ராத்திரி மிஸ்டர் ஆக்ராய்டு கொலையான கோலத்துல பார்க்கப்பட்டபோது இந்த சேர் இழுக்கப் பட்டிருக்கு – இதோ இது மாதிரி. யாரோ இதை மறுபடியும் அதோட சரியான நிலைக்கு இழுத்துப் போட்டிருக்காங்க. நீங்க இப்படி பண்ணினீங்களா?''

செகரட்டரியின் பதில் கண நேர தாமதமின்றி விழுந்தோடி வந்தது: ''நோ. நான் அப்படியெல்லாம் எதுவும் பண்ணலே. அது அப்படியொரு மாறுபட்ட நிலையில இருந்தது என்பதை கூட நான் கவனிக்கலே – ஆனா நீங்க சொல்வதால, அது அப்படி இருந்திருக்கலாம். எப்படியோ... யாராவது அப்புறமா அதோட சரியான இடத்துக்கு நகர்த்தி வெச்சிருக்கலாமில்லையா? இதனால உங்களுக்கு வந்திருக்க வேண்டிய க்ளூ ஏதாவது சேதமாயிடுச்சா? அச்சச்சோ!''

''இது பெரிய முக்கியத்துவம் வாய்ந்ததெல்லாம் கிடையாது'' என்றார் டிடெக்டிவ். ''எவ்வகையிலும் முக்கியத்துவம் அற்றது. ஆனா நான் உங்ககிட்டே கேட்க நினைச்சது இது தான், மிஸ்டர் ரேமண்ட்: கடந்த வாரத்துல யாராவது அந்நிய மனுஷன் மிஸ்டர் ஆக்ராய்டைப் பார்க்க வந்தானா?''

புருவங்களை முடிச்சிட்டுக் கொண்டு செகரட்டரி சற்று நேரம் மூளைக்குள் துளாவினான். இந்த இடைப்பட்ட நேரத்தில் அடித்த அழைப்பு மணிக்கு விடையாய் பார்க்கர் வந்து சேர்ந்தான்.

கடைசியில், ''நோ'' என்றான் ரேமண்ட். ''எனக்கு அப்படி எவனும் நினைவுக்கு வரலே. உனக்கு பார்க்கர்?''

''எதை, ஸார்?''

''இந்த வாரம் யாராவது வெளியாள் வந்து மிஸ்டர் ஆக்ராய்டைப் பார்த்துட்டுப் போனாங்களா?''

இப்போது பட்லர் சில நிமிடங்களைச் சிந்திக்க எடுத்துக் கொண்டான். ''புதன்கிழமை இங்கே வந்துட்டுப் போன அந்த வாலிபப்பய இருக்கானே, ஸார்'' என்றான். *''கர்ட்டீஸ் அண்ட் ட்ரௌட் கம்பெனியிலிருந்துனு ஞாபகம்.''*

இது ஒன்றுக்கும் உதவாத தகவல் என்பதைப் போல கையசைத்து

இதனை விலக்கி விட்டான் ரேமண்ட். ''இது எனக்கும் நினைவிருக்கு பார்க்கர். ஆனா இப்படிப்பட்ட வெளியாளை இவர் குறிப்பிடலே.'' சொல்லிவிட்டு பொய்ரெட் பக்கமாய் திரும்பினான் அவன். ''மிஸ்டர் ஆக்ராய்டு பேசுவதைப் பதிந்துக் கொள்ளும் ரிக்கார்டர் ஒண்ணை வாங்க திட்டமிட்டிருந்தார்'' என விளக்கலானான்: ''பல வேலைகளைக் குறுகிய நேரத்துல முடித்து விட இது எங்களுக்குப் பேருதவியா இருக்கும். அவர் டிக்டேட் பண்ண நினைப்பதை அதுல எப்ப வேணும்னாலும் அவர் பதிந்து வெச்சுடலாம். நான் பிறகு டைப் பண்ணி, மேற்கொண்டு போஸ்ட் பண்ணணுமோ, இல்லே வேற என்ன பண்ணணுமோ பண்ணிடலாம். இதுதான் அவரோட திட்டம். மேற்சொன்ன கம்பெனி, அவங்களோட பிரதிநிதியை அனுப்பி யிருந்தாங்க – ஆனா ஒண்ணும் தோதா முடியலே. அதை வாங்கும் முடிவுக்கு மிஸ்டர் ஆக்ராய்டு போகலே.''

பொய்ரெட் பட்லர் பக்கம் திரும்பினார்.

''வந்த அந்த யங் பிரதிநிதியை எனக்கு விவரிக்க முடியுமா, என் இனிய பார்க்கர்?''

''அவனுக்கு வெளிர்நிற கேசம் இருந்தது, ஸார். மேலும் குள்ளம். நீல நிற சூட்ல நல்லா சுத்தமான உடையணிஞ்சிருந்தான். அவனை ஒத்தப் பசங்கள்ல, தன்னை ரொம்ப அழகா முன்நிறுத்தும் வாலிபன், ஸார்.''

பொய்ரெட் என் பக்கமாய் திரும்பினார். ''நீங்க கேட்'டுக்கு வெளியே பார்த்த அந்த ஆள், டாக்டர், நல்ல ஒசரம், இல்லையா?''

''யெஸ்'' என்றேன் நான். ''ஆறடிக்கு பக்கம்.''

''அப்ப இதுல நமக்கு வேற ஒண்ணும் கிடையாது'' என முடிவாய் சொன்னார், குள்ள பெல்ஜியன் டிடெக்டிவ். ''தேங்க் யூ, பார்க்கர்.''

பட்லர், ரேமண்ட்டிடம் பேசினான்: ''மிஸ்டர் ஹேமந்த், ஜஸ்ட் இப்பத்தான் வந்தார், ஸார். அவரால ஏதாவது உதவிகரமா இருக்க முடியுமா என்பதுல அவர் துடிதுடிப்பாயிருக்கார் ஸார். உங்களைப் பார்க்கணும்னும் காத்திட்டிருக்கார்.''

''உடனடியா நான் வரேன்'' என்றான் இளைய காரியதரிசி. விரைந்து வெளியேறி விட்டான். பொய்ரெட் விசாரிக்கும் தொனியில் முதன்மை கான்ஸ்டபிளைப் பார்த்தார். இதற்கு பதிலாய், ''குடும்ப வக்கீல்,

மிஸ்டர் பொய்ரெட்'' என்றார் அவர்.

''இந்த இளைய காரியதரிசிக்கு இது ஒரு அவசரமான காலகட்டம். கால்ல சக்கரத்தைக் கட்டிக்கிட்டு இயங்க வேண்டிய தருணம்'' என முணுமுணுத்தார் பொய்ரெட். ''அப்படியியங்க காற்று போல பலமிருக்கு அவருக்கு.''

''மிஸ்டர் ஆக்ராய்டு இவரை மிகவும் பொருத்தமான காரியதரிசியா மதிச்சிருக்கார்னு நினைக்கிறேன்.''

''இங்கே – அவர் எத்தனை காலமா வேலைல இருக்கார்?''

''ஜஸ்ட், ரெண்டு வருஷமானு நினைக்கிறேன்.''

''அவருடைய கடமைகளை அவர் தவறாம துல்லியமா முடிக்கிறார். இதுல நான் நிச்சயமா இருக்கேன். இந்த பணி பளுவிலிருந்து அகல – அவர் என்ன பண்ணுவார்? அதாவது... பொழுதுபோக அவர் என்ன பண்றார்? ஏதாவது விளையாட வெளியே போவாரா?''

''அப்படிப்பட்ட கொண்டாட்டத்துக்கெல்லாம் பிரத்யேக காரியதரிசிகளுக்கு நேரமே இருக்காது, ஸார்'' என்றார் கலோனல் மெல்ரோஸ் புன்னகையுடன். ''ரேமண்ட் கோல்ஃப் விளையாடறார்னு கேள்விப்பட்டிருக்கேன். டென்னிஸ் கூட.

''பயிற்சிகள் எதுவும் எடுத்துக்கிறதில்லையா – அதாவது, உதாரணத்துக்கு, குதிரை பயிற்சி?''

''குதிரை சவாரி? ம்ம். அவருக்கு சவாரியில ஈடுபாடு இருக்கிற மாதிரி எனக்குத் தோணலே.''

ஒப்புதலாய் தலையசைத்த பொய்ரெட் இவ்விஷயத்தில் ஈடுபாட்டினை அப்படியே விட்டுவிட்டதாய் பட்டது. படிக்குமறையை ஒருமுறை மெதுவாய் நோட்டமிட்டார். ''நான் இங்கே பார்க்க வேண்டிய அனைத்தையும் பார்த்துப் பதிஞ்சாச்சுனு நெனக்கிறேன்.''

இப்போது நானும் ஒருமுறை அறை முழுக்கவும் நோட்டமிட்டு விட்டு, முணுமுணுத்தேன்: ''அந்த சுவர்களுக்கு மட்டும் வாயிருந்துப் பேசும் சக்தியிருந்தால்...?!''

''வெறும் நாக்கு மட்டும் சுவருக்கு இருந்துட்டா பத்துமா?'' என்றார் பொய்ரெட். ''அதுக்கு, ரெண்டு கண்களும் ரெண்டு காதுகளும் கூட இருந்தாகணும். ஆனா, இதோ, இது போன்ற அஃறிணைப் பொருட்களெல்லாம் —'' என்று விட்டு அங்கிருந்த புத்தக அலமாரியின்

மேற்பகுதியைத் தட்டிக்காட்டிய அவர், ''— ஏதோ கண் காது வாய் அற்றவைனு மட்டும் நினைச்சிராதீங்க. என்னிடம், இவையெல்லாம், சில சமயங்கள்ல பேசும். நாற்காலிகள், டேபிள்கள்... இவையெல்லாம் சேதி வெச்சிருக்கும். வெச்சிருக்கு.''

அவர் கதவு பக்கமாய் திரும்பிக் கொண்டார்.

''அது தான் என்ன தகவல்?'' என்று கத்தி விட்டேன் நான். ''என்ன சேதி அது?'' என்று கெஞ்சினேன் எனவும் சொல்லலாம். ''இன்று, இவை, உங்களுக்கு அள்ளித்தந்த சேதி தான் என்ன?''

தோள் வழியே திரும்பி என்னைப் பார்த்த அவர், 'புதிராயுள்ளது' ஒரு புருவத்தைத் தூக்கி உணர்த்தினார். ''ஒரு திறந்த ஜன்னல். ஒரு பூட்டப்பட்ட கதவு. தானாகவே நகர்ந்துக் கொண்டுள்ள ஒரு நாற்காலி. இவையனைத்துக்கும் நான் சொல்லிக் கொள்கிறேன்: ''ஏன்?''விடை தான் எனக்குக் கிடைக்கவில்லை.''

மறுப்பாய் தலையசைத்துக் கொண்டார். இருமினார். எங்களனை வரையும் பார்த்துக் கொண்டு முழித்தபடி நின்றார். அவர் மட்டும் தான் அனைத்தும் தெரிந்தவர் என்பது போல ஒருவிதக் கோமாளித்தனமான முடிவோடு நின்றுக் கொண்டிருந்த மாதிரி இருந்தது, அவரைப் பார்த்தபோது. ஒரு டிடெக்டிவ்வாக பொய்ரெட் உபயோகமானவர் தானா என்றே எனக்கு சந்தேகம் தொனித்தது. அவரது கீர்த்தியும் பெருமையும் வரிசையாய் வந்த அதிர்ஷ்ட வெற்றிகளால் மட்டுமே ஆனதோ!

முகஞ்சுளித்து நின்றுக் கொண்டிருந்த கலோனல் மெல்ரோஸுக்கும் இதே எண்ணம் தான் ஓடிக்கொண்டிருக்க வேண்டும்.

நாசூக்குத் தன்மையில்லாமல், ''நீங்க சொன்னதையெல்லாம் தவிரவும் இன்னும் என்னத்தையாவது நீங்க பார்த்துத் தொலைக்க விரும்பறீங்களா மதிப்புக்குரிய பொய்ரெட்'' என்றார் கலோனல், மரியாதையற்று.

''அந்த ஆயுதம் எடுக்கப்பட்ட ஸில்வர் டேபிளை மட்டும் நீங்க எனக்கு தயவுகூர்ந்து காட்டணும். அதுக்கப்புறம் நான் உங்களுடைய இனிய தன்மைக்குக் குறுக்கே புகுந்து இடையூறு தர மாட்டேன்.''

நாங்கள் வரவேற்பறை நோக்கிக் கிளம்பினோம்... ஆனால் வழியிலேயே கலோனலைத் தடுத்து நிறுத்திய கான்ஸ்டபிள்,

முணுமுணுப்பாய் எதையோ அவரிடம் சொல்ல, இதற்கு பதிலாய் எங்களிடம் எக்ஸ்கியூஸ் கேட்டுக் கொண்டு ஒட்டுமொத்தமாக சென்று விட்டார் கலோனல். பொய்ரெட்டுக்கு நானந்த டேபிளைக் காட்டினேன். ஓரிரு முறை மூடியைத் திறந்து அது விழும்படி விட்டுவிட்டு கவனித்த அவர், ஜன்னலைத் தள்ளித் திறந்து பரந்த மேல்தளத்தில் இறங்கினார். நான் தொடர்ந்தேன்.

இன்ஸ்பெக்டர் ரக்லான் அப்போதுதான் வீட்டின் முனையில் திரும்பியிருந்தார். எங்களை நோக்கி வந்துக் கொண்டிருந்தார். அவரது முகம் கடுகடுப்பாகவும் இருந்தது... திருப்தியாகவும் இருந்தது.

''ஓ, இங்கேயிருக்கீங்களா, திரு பொய்ரெட்?'' என்றார் அவர். ''இது ஒண்ணும் அவ்ளோ பெரிய சிக்கலா இருக்கப் போதில்லே, பாருங்க.''

பொய்ரெட்டின் முகம் இதற்கு வாடிப்போய்விட, அவர் மிருதுவாய் சொன்னார்: ''அப்படினா உங்களுக்கு நான் ஒண்ணும் பெரிய அளவுல உதவியா இருக்கலேனு நினைக்கிறேன்...?''

''அடுத்த தடவை பார்த்துக்கலாம்'' என்றார் இன்ஸ்பெக்டர் சாந்தப்படுத்தும் விதமாய். ''இந்த அமைதியான பூமியின் ஒதுக்குப்புறப் பிரதேசத்துல தினம்தினம் கொலைகாரனுங்க கிடைக்க மாட்டானுங்க என்பது ஒன்று தான் ஒரே குறை!''

பொய்ரெட்டின் பார்வையில் பாராட்டி பிரமிக்கும் தொனி வந்து இப்போது குடிகொண்டது. ''தயாராய்... ஆயத்தமாய்... காலதாமதமே யில்லாம இயங்கும் உங்களுடைய பணித்தூய்மை, ஒரு பிரமிப்பு. எப்படி இப்படி உடனடியா உங்களால முன்னேறி ஒரு வழக்கை முடிக்க முடியுதுனு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''நிச்சயமா'' என்றார் இன்ஸபெக்டர். ''முறை. இதைத்தான் நான் இந்தக் கேள்வியை யார் கேட்டாலும் பதிலா தருவேன். முறை. *சரியான முறை.*

''ஆஹ்...'' என கத்தலாய் சொன்னது, டிடெக்டிவ். ''இது தான் என்னுடைய தாரக மந்திரமும். முறை – அதாவது மிகச் சரியான அணுகுமுறை மற்றும் சாம்பல் நிற செல்கள்.''

''செல்கள்?''– முழித்தபடி கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''மூளையின் சாதுர்யத்துக்கு மிக முக்கியமான லிட்டில் சாம்பல் மூளை செல்கள்.''

''ஓ... அது தான் எல்லாருக்கும் இருக்கே.''

''சிலருக்கு நிறைய... பலருக்கு கம்மியா'' – முணுமுணுப்பாய் சொன்னார் பொய்ரெட். ''மேலும் அதன் தரத்திலும் ஆளுக்காளு வேறுபாடு இருக்கு. இதற்கெல்லாம் மணிமகுடமா, ஒரு கொலைக் குற்றத்தைக் கண்டுபிடிக்க அத்தியாவசியமானது – உளவியல் ஞானம். கொலையின் உளவியல். ஒரு கொலையில் இதைத்தான் நாம தேடணும்.''

''ஆஹ்!'' என்ற இன்ஸ்பெக்டர், ''மனோவியல் பற்றி படிச்சதெல்லாம் இறக்கிவெக்க ஆளில்லாம தவிக்கிறீங்களோ? நான் வெளிப்படையான மனுஷன்...'' என்றார்.

''ஓஹோ... அதை நான் உங்க மனைவிகிட்டே இல்லே கேட்டுப் பார்க்கணும்...! அவங்களைக் கேட்டா அவங்க நிச்சயமா நீங்க ஒரு வெளிப்படையான மனுஷன் கிடையாதுனு தான் சொல்வாங்க. என்ன?'' – புன்னகைத்தபடி கேட்டார் பொய்ரெட்.

''ஆஹாஹா...'' என்று திணறியதைப் போல காட்டிக் கொண்ட இன்ஸ்பெக்டர், ''மொழிகள் தான் எத்தனை பலம் வாய்ந்ததா இருக்கு... நான் ஒரு அர்த்தத்துல சொன்னா அது வேற மாதிரியில்லே போய்ச் சேர்ந்திருக்கு? நான் வெளிப்படையானவன்னு சொன்னது என் தொழில்ல...''

''ஓ!''

''என் தொழிலை நான் வெளிப்படையா, ஒளிவு மறைவின்றி அணுகுவேன். நோ ரிஸர்வேஷன்ஸ். நடந்துள்ள சம்பவங்களை மனதில் கொண்டு... ஒழுங்கான அணுகுமுறை. கவனியுங்க. மிஸ்டர் ஆக்ராய்டு அவரோட உறவுக்காரப் பொண்ணால ஒன்பதே முக்காலுக்கு உயிரோட பார்க்கப்பட்டிருக்கார். இது முதல் நிஜம், இல்லையா?''

''நீங்க அப்படிதான்னு சொன்னா!''

''வெல், அப்படித்தான். பத்தரை மணிக்கு வரும் டாக்டர் அரை மணிக்கு முன்னாடியே அவர் இறந்திருக்கணும்னு எழுதித் தரார். அதுல நிச்சயமாத்தானே இருக்கீங்க, டாக்டர்?''

''படு நிச்சயமா'' என்றேன் நான். ''அரை மணிநேரமோ, இல்லே அதுக்கும் மேலயோ.''

''வெரி குட். இது, கால் மணி நேரத்துக்குள்ளே தான் கொலை

நிகழ்த்தப்பட்டிருக்கு எனும் நிலைமையை நமக்குத் தெளிவு படுத்திடுது. நான் வீட்டிலிருந்த அனைவரைப் பற்றியும் ஒரு பட்டியல் போடறேன்... அதுல, ஒவ்வொருத்தருக்கும் நேராகவும், அவங்க, ஒன்பதே முக்காலிலிருந்து பத்து மணி வரை எங்கேயிருந்தாங்க மற்றும் என்ன பண்ணிக்கிட்டிருந்தாங்கனு எழுதறேன். அது, இது தான்.''

அவர் ஒரு தாளினைப் பொய்ரெட்டின் கைகளில் ஒப்படைத்தார். அதை நான் டிடெக்டிவ்வுக்குப் பின்னால் நின்றபடி அவருடைய தோள் வழியே படித்தேன். முத்து முத்தாய் எழுதப்பட்டிருந்த அந்தப் பட்டியல் பின்வருமாறு அமைந்திருந்தது:

மேஜர் ப்ளண்ட்: மிஸ்டர் ரேமண்ட்டுடன் பில்லியர்ட் அறையிலிருந்தார். (இதை ரேமண்ட் உறுதிப்படுத்தினார்.)
மிஸ்டர் ரேமண்ட்: பில்லியர்ட் அறையில். (மேற்படி.)
மிஸஸ் ஆக்ராய்டு: 9.45க்கு, பில்லியர்ட் விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். 9.55க்குப் படுக்கப் போனார். (ரேமண்ட்டும் ப்ளண்ட்டும் அவர் படியேறுவதைப் பார்த்திருக்கின்றனர்.)
மிஸ் ஆக்ராய்டு: அவருடைய மாமா அறையிலிருந்துக் கிளம்பி நேராக மாடிக்குப் போயிருக்கிறார். (பார்க்கராலும் வீட்டு வேலைக்காரியான எலிஸி டேல் என்பவளாலும் உறுதிப்படுத்தப்பட்டது.)

வேலைக்காரர்கள்:
பார்க்கர்: பட்லருடைய உணவுக்கிடங்குக்குப் போனார். (வீட்டின் காப்பாளரான ரஸ்ஸெல் இதனை ஊர்ஜிதப்படுத்தினார். இவள், எதைப்பற்றியோ கலந்துப் பேச இங்கு 9.47க்கு வந்து பத்து நிமிடம் போல இங்கேயே இருந்திருக்கிறாள்.)
மிஸ் ரஸ்ஸெல்: மேற்படி. மாடியில் வீட்டு வேலைக்காரி எலிஸி டேலிடம், 9.45க்கு உரையாடியிருக்கிறார்.
ஊர்மிளா (அறைகளை கவனிப்பவள்): 9.55 வரையில் இவளுக்கான அறையிலேயே இருந்திருக்கிறாள். பிறகு, வேலைக்காரர்களுக்கான அறையில்.
மிஸஸ் எம்மா கூப்பர் (சமையற்காரி): வேலைக்காரர்களுக்கான அறையில்.

க்ளாடிஸ் ஜோன்ஸ் (இரண்டாவது வேலைக்காரி): *வேலைக்காரர்களுக்கான அறையில்.*
எலிஸி டேல்: *மேலே, படுக்கை அறையில். அங்கிருந்ததை மிஸ் ரஸ்ஸெல் மற்றும் மிஸ் ஃப்ளோரா ஆகியோர் கவனித்திருக்கின்றனர்.*
மேரி ட்ரிப் (சமையலறை காப்பவள்): *வேலைக்காரர்களுக்கான அறையில்.*

''சமையல்காரி இங்கே ஏழு வருஷமாயிருக்கா. அடுக்களையை நிர்வகிக்கும் பொண்ணு ஒன்றரை வருஷமா. அப்புறமா அந்த பார்க்கர் கிட்டத்தட்ட ஒரு வருஷமா. மத்தவங்களெல்லாம் புதுசு. இந்தப் பார்க்கர் பயலோட மலங்க மலங்க முழிக்கும் தன்மையைத் தவிர, மீதியெல்லாருமே, என்னைப் பொறுத்தவரைக்கும், ஆல் ரைட் தான்.''

அவரிடமே அதைத் திருப்பிக் கொடுத்த பொய்ரெட் ''ஒரு கம்ப்ளீட் லிஸ்ட்'' என்றார். கூடவே, மிகவும் ஆழ்ந்து, ''பார்க்கர் இந்தக் கொலையைப் பண்ணலே என்பதுல நான் ஸ்திரமாயிருக்கேன்'' என முடித்தார்.

''அப்படியே தான் என் தங்கையும் சொல்றா'' என் நான் இடை புகுந்தேன். ''அவ சொல்வதெல்லாம் வழக்கமா சரியாவே இருக்கும்.'' ஒருவரும் என்னுடைய ஒப்பிடுதலில் கவனம் காட்டவில்லை.

''இது மிக அழகா வீட்டு வேலையாட்கள் எல்லாரையும் வெளியே தள்ளிடுது'' என தொடர்ந்தார் இன்ஸ்பெக்டர்: ''இப்ப நாம ரொம்பும் ஆழமான பகுதிக்கு வரோம். வாசல்ல காவக்காரனுக்கான சிறு அறையில தங்கியிருக்கும் பொம்பிளை – மேரி ப்ளாக் – இவ, திரைச்சீலைகளை இழுத்து மூடி விடற வேலையை நேத்து ராத்திரி பண்ணிக்கிட்டிருந்திருக்கா. அப்போ, அவ, இந்த ரால்ஃப் பேடன் வாச கேட்டருகிலே வந்து, நின்று, பிறகு திரும்பி அப்படியே வீடு நோக்கி நடப்பதைப் பார்த்திருக்கா.''

''அவ சொல்லும் தகவல்ல, அவ நிச்சயமாத்தான் இருக்காளா?'' – நான் கூர்மையாய் கேட்டேன்.

''படு நிச்சயமா. எங்கே பார்த்தாலும் அவரை அடையாளம் கண்டுபிடிச்சுடுவாளாம் மேரி ப்ளாக். விறுவிறுவென உள்ளே நுழைஞ்சிருக்கான். அப்புறம், வலப்பக்கமா திரும்பும் பாதையைத்

தெரிந்தெடுத்து முன்னேறியிருக்கான் – இது தான் மாடி டெரஸ் பகுதிக்குப் போகவுள்ள குறுக்கு வழி, ஓ கே...!''

வேறெதிலும் கவனம் பொதிக்காத முகபாவத்தோடு உட்கார்ந்துக் கொண்ட பொய்ரெட், ''இது நடந்தது எத்தனை மணிக்கு?'' என்றார்.

''மிகச்சரியா – 9.25க்கு'' என ஆழ்ந்து சொன்னார் இன்ஸ்பெக்டர்.

இப்போது அங்கு அமைதி வந்தது. பிறகு இன்ஸ்பெக்டரே மறுபடியும் பேசினார்: ''இதுல எல்லா குழப்பங்களும் தீர்ந்துப் போயிடுது. எவ்வித குறையுமில்லாம அனைத்து நிஜங்களும் அமர்க்களமா பொருந்தி நிக்குது. 9.25க்கு வாசல் காவக்கார குடிலைக் கடந்து பேடன் உள்ளே நுழைந்தது கவனிக்கப்பட்டிருக்கு. ஒன்பதரைக்கோ அல்லது அதையொட்டியோ, இங்குயிருக்கும் ரேமண்ட், அறைக்குள்ளே யாரோ பணம் கேட்டுக் காரசாரமா பேசியதையும் இதை ஆக்ராய்டு நிராகரித்துப் பேசியதையும் கேட்டிருக்கார். அப்புறம் என்ன நடக்குது? கேப்டன் பேடன் வந்த வழியிலேயே திரும்பிடறார் – அதாவது ஜன்னல் வழியா. கோபத்துடனும் முழுக்கவும் உலுக்கப்பட்ட குரோதத்துடனும், மாடி உப்பரிகையான டெரஸ் பகுதியில் அவர் நடக்கிறார். வரவேற்பறையின் திறந்திருக்கும் ஜன்னலருகே வந்து நிற்கிறார் அவர். இப்ப மணி ஒன்பதே முக்கால்னு வெச்சுப்போம். மிஸ் ஃப்ளோரா அவங்களோட மாமாவுக்கு குட்நைட் சொல்லிக்கிட்டிருக்கா. மேஜர் ப்ளண்ட், மிஸ்டர் ரேமண்ட், மிஸஸ் ஆக்ராய்டு எல்லாரும் பில்லியர்ட் அறையில். வரவேற்பறை காலியாயிருக்கு. அவர் திருட்டுத்தனமா உள்ளே நுழையறார்... ஸில்வர் டேபிளிலிருக்கும் பிச்சுவாக் கத்தியை எடுத்துக்கிறார்... திரும்பி படிக்குமறைக்கான ஜன்னலுக்கே வரார். அவரோட ஷூக்களைக் கழற்றி விடும் அவர், உள்ளே ஏறி — வெல், பிறகு நான் மறுபடியும் விளக்கத் தேவையில்லை. மறுபடியும் வெளியே குதிக்கும் அவர் போயிடறார். திரும்பி அவர் தங்கியிருந்த ஆண்கள் விடுதிக்கேப் போக அவருக்குத் மனத்தெம்பு இல்லே. ஸ்டேஷனுக்குனு முடிவெடுத்துக்கும் அவர், அங்கிருந்து போன் செஞ்சு''

''அதான் ஏன்?'' என மிருதுவாய் கேட்டார் பொய்ரெட்.

இந்த இடைச்செருகலுக்கு நான் குதித்தே விட்டேன். கேட்ட குள்ள

மனிதன் அவரது இருக்கையிலிருந்து வளைந்து முன்னால் நகர்ந்துக் கொண்டிருந்தார். விளக்கவொண்ணா பச்சை நிறத்தில் அவருடைய கண்மணிகள் மினுமினுத்துக் கொண்டிருந்தன.

இக்கேள்வியால் இன்ஸ்பெக்டர் ரக்லான் கண நேரம் திணறடிக்கப்பட்டார். கடைசியாய், ''அப்படி அவர் எதுக்காக செஞ்சார் என்பதைக் குறிப்பிட்டு விளக்க முடியாது'' என்றார். ''கொலைகாரங்க படு கோமாளித்தனமான செய்கைகளை செஞ்சுடறாங்க, யூ நோ! நீங்க போலீஸ் வேலையில இருந்திருந்தால் இதைப் பற்றியெல்லாம் தெரிஞ்சிருக்கும். அதி புத்திசாலியான கொலைகாரன் எவனோ அவன் தான் கோமாளித்தனமான தப்பைப் பண்ணிடறான். விடுங்க... என்கூட வாங்க. நான் அந்த காலடித் தடங்களின் கதையை விளக்கறேன்.''

அவரைத் தொடர்ந்த நாங்கள் டெரஸின் மூலையிலிருந்த படிக்கு மறை ஜன்னல் வரை போனோம். கிராமத்து விடுதியிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த ஷூவினை, இன்ஸ்பெக்டர் கேட்டுக் கொண்டதன் பேரில் ஓர் ஏட்டு கொண்டு வந்து கொடுத்தான்.

அந்த ஷூவினை, ஜன்னல் மரக்கட்டையில் இருந்த காலடித்தடங்களின் மீது பதித்தார் இன்ஸ்பெக்டர்.

''இவையிரண்டும் ஒண்ணே தான்'' – இன்ஸ்பெக்டர் ஊர்ஜிதமாய் இருந்தார். ''ஆனாலும், இதே ஷூக்கள் தான் இந்தக் காலடித் தடங்களை இங்கே விட்டு வெச்சிருக்குனு சொல்லிட முடியாது. அந்த ஷூக்களோட அவர் போயிருப்பார். இது, அதைப் போன்ற ஜோடி ஷூக்கள். ஆனா பழசு – தெரியுதா, அடி ரப்பர் முழுவதும் தேஞ்சிருக்கு?'

''பற்பலர், ரப்பர் அடி கொண்ட ஷூக்களை அணிஞ்சுக்கிட்டு தானேயிருக்காங்க?'' – கேட்டார் பொய்ரெட்.

''ஆமாமாம்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''உலகமகா முட்டாப்பய – இந்த கேப்டன் ரால்ஃப் பேடன்'' என்றார் பொய்ரெட் சிந்தனையாய். ''அவன் இங்கே இருந்திருக்கான் என்பதற்கு இத்தனை சாட்சிகளையா விட்டு வைப்பான்?''

''ஆஹ்! வெல்...'' என்ற இன்ஸ்பெக்டர், ''அது ஒரு வறண்ட இனிய இரவு, நினைவிருக்கா? சரளைப் போடப்பட்டிருக்கும் பாதையிலோ

அல்லது இந்த பெரிய மாடி பால்கனியான டெரஸிலோ அவர் எவ்விதமான காலடித்தடங்களையும் விட்டு வைக்கலே. ஆனா, அவரோட துரதிர்ஷ்டம், நடந்து வரும் பாதையோட முடிவுல ஒரு சிறு ஊற்று கிளம்பியிருக்கணும். இங்கே பாருங்களேன்.''

சரளைக்கற்கள் போட்டு நிரவப்பட்ட ஒரு சிறு பாதை, சில அடிகள் தள்ளி, வாசலிலிருந்து நீண்டு வந்து, மாடியின் மேல்தளமான மேல்மச்சினை (டெரஸ்) இணைத்தது. இந்த இணைப்பின் அருகில், ஓரிடத்தில், நிலம் ஈரமாகவும் சதுப்பாகவுமிருந்தது. இந்த சகதியான யிடத்தைக் கடந்து மீண்டும் காலடித்தடங்களிருந்தன. அவற்றில் ரப்பரின் அடிப்பகுதியில் முத்து முத்தான பகுதிகள் கொண்ட ஷூவின் தடங்களும் காணப்பட்டன.

அந்தப் பாதையை பொய்ரெட் கொஞ்ச தூரம் பின்தொடர்ந்து நடந்தார் – அருகில் இன்ஸ்பெக்டர். ''இதுல பொண்ணோட காலடித் தடங்களும் இருப்பதைக் கவனிச்சீங்களா?'' என்றார் அவர் திடுமென்று.

இதற்கு இன்ஸ்பெக்டர் சிரித்து விட்டார். ''இருக்கலாமே. அதுக்கென்ன இப்ப? எத்தனையோ பற்பல பெண்கள் இந்தப் பாதையில நடந்திருப்பாங்க – ஆண்களும் தான். இதுதான் வீட்டுக்கு உள்ள வழக்கமான சுருக்குவழி. இத்தனை காலடித்தடங்களையயும் வகைப்படுத்தி வரிசைப்படுத்த முடியாது. அந்த ஜன்னல் மரச் சட்டத்துல இருந்தக் காலடித்தடங்கள் தான் நமக்கு முக்கியமானவை.''

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தார்.

''இனியும் மேற்கொண்டு போவதுல ஒரு பிரயோஜனமும் கிடையாது'' என்றார் இன்ஸ்பெக்டர், நாங்கள் அந்த நீண்ட பாதையைப் பார்க்கும்படி வந்து நின்றபோது. ''இங்கெல்லாம் முழுக்க முழுக்க சரளைப் போட்டு நிரவியிருக்காங்க. கரடுமுரடான பாதை.''

மறுபடியும் பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தார் – ஆனால் அவருடைய கண்கள் எதிரிலிருந்த சின்னத் தோட்ட அறைக்குள் நிலைத்திருந்தன. எங்களுக்கு முன் நீண்டுக் கொண்டிருந்த பாதையின் இடப்புறத்தில் அமைந்திருந்தது அந்த சிறு அறை. சரளைப் போடப்பட்ட பாதை அவ்வறை வரை நீண்டது.

இன்ஸ்பெக்டர் திரும்பி வீட்டுக்குள்ளேயே போகும்வரை

இப்படியப்படியுமாய் நடப்பது போல் காட்டிக் கொண்டிருந்தார் பொய்ரெட். பிறகு அவர் என்னைக் கவனமாய் பார்த்தார். பேசினார்:

''என் நண்பன் ஹேஸ்டிங்ஸுக்கு ஒரு மாற்றாக உங்களைக் கடவுள் என்னிடம் அனுப்பியிருக்கணும்''–இதனைக் கண்ணடித்துக் கொண்டு குறிப்பிட்டார் – ''என்னை விட்டு நீங்க நகராமலே இருப்பதை நான் கவனிச்சுக்கிட்டு தானிருக்கேன். சொல்லுங்க டாக்டர் ஷெப்பர்ட்... நாம அந்த சின்ன தோட்ட அறையைப் போய் துப்பறிஞ்சா என்ன? அது என்னைக் கவருது.''

அதன் கதவு வரை போன பொய்ரெட், திறந்தார். உள்ளே, பகுதி முழுவதும், ஏறக்குறை கும்மிருட்டாயிருந்தது. துருப்பிடித்த ஓரிரு இருக்கைகள் இருந்தன, சில மடிக்கப்பட்டிருந்த நாற்காலிகள்.

அங்கு என்னுடைய புது நண்பனுடைய நடவடிக்கைகளைக் கவனிப்பதில் நான் துணுக்குற்றுப் போனேன். தனது கைகளையும் கால்களையும் ஒருசேர பூமியில் பதிக்கும்படி ஆகியிருந்த அவர் தவழ ஆரம்பித்திருந்தார். அவ்வப்போது ஏதோ திருப்தியற்றுப் போய் விட்டதைப் போல தலையை மறுத்து ஆட்டிக் கொண்டார் அவர். இறுதியாய், முட்டிப் போட்டபடி அப்படியே அமர்ந்து விட்டார்.

''ஒண்ணுமில்லே'' என முணுமுணுத்தார் அவர். ''சொல்லப் போனா, அதை, இங்கே எதிர்பார்க்கக் கூடாது. ஆனா அது மிகப்பெரிய விளக்கங்களைத் தரும் —''

திடுமென உடைந்துப் போன அவர், உடலின் ஒவ்வொரு பாகத்திலும் இறுகிப் போனார். பிறகு அவருடைய ஒரு கையைத் துருப் பிடித்திருந்த ஒரு நாற்காலி நோக்கி நீட்டினார். அதன் ஒருபாகத்திலிருந்து என்னதையோ பிரித்தெடுத்தார்.

''என்னது அது?'' – அலறிவிட்டேன் நான். ''எதை நீங்க கண்டு பிடிச்சீங்க?'

பொய்ரெட் தனது கையை விரித்து அங்கு உள்ளங்கையில் என்ன இருக்கிறது என்று நான் பார்க்க ஏதுவாய் காட்டியபடி, அவர் சிரித்தார். இறுகிப் போயிருந்த மெல்லிய வெள்ளைத்துணியொன்றின் துண்டு.

அவரிடமிருந்து அதை வாங்கிக் கொண்ட நான் ஆர்வமாய் பார்த்து விட்டு அவரிடமே திருப்பித் தந்தேன்.

''இதிலிருந்து என்ன முடிவுக்கு வரீங்க நண்பா, ஆங்?'' என்று

கேட்டார் அவர், என் மேல் கவனமாய் கண்கள் பதித்தபடி.

''ஒரு கைக்குட்டையிலிருந்து கிழித்தெடுக்கப்பட்டிருக்கும் சின்னத்துண்டு'' என்றேன் நான், என் தோள்களைக் குலுக்கியபடி.

பிறகு ஒரு பெரிய இறகினை – பார்க்க வாத்து இறகு போலயிருக்கும் இறகினை – எடுத்தார்.

''இது?'' என வெற்றிமுழக்கமாய் கேட்டார் அவர். ''இதிலிருந்து என்ன முடிவுக்கு வரீங்க நீங்க?''

என்னால் வெறுமனே முழிக்கத்தான் முடிந்தது.

அந்த இறகினை அவரது பாக்கெட்டுக்குள் நழுவவிட்டுக் கொண்ட அவர், மறுபடியும் அந்தச் சின்ன மெல்லிய துண்டு வெள்ளைத் துணியைக் கவனிக்கலானார். ''ஒரு கர்சீஃபின் கிழிந்த பகுதியா, ஆங்?'' என முணுமுணுத்துக் கொண்டார். ''ம்... நீங்க சொல்வதும் சரிதான். ஆனா இதை ஞாபகம் வெச்சுக்கோங்க – ஒரு *தேர்ந்த வண்ணான், கைக்குட்டைக்குக் கஞ்சி போட மாட்டான்.''*

என்னைப் பார்த்து ஒப்புதலாயும், மாபெரும் வெற்றிக் களிப்போடும் தலையாட்டிக் காட்டிய அவர், அவரது ஞாபகக்குறிப்பு புத்தகத்துக்குள் அந்த இறுகிய வெள்ளைத் துணியைப் பத்திரப்படுத்திக் கொண்டார்.

அத்தியாயம் 9

தங்கமீன்கள் நிறைந்த குளம்

நாங்களிருவருமாய் சேர்ந்து வீட்டுக்கு நடந்தோம். இன்ஸ்பெக்டர் பற்றி எந்த அறிகுறியும் தென்படவில்லை. பொய்ரெட் மச்சுப்பகுதியில் சிறிது நேரம் தயக்கமாய் நின்றார். தலையை மெதுவாய் அக்கம்பக்கம் பார்த்துத் திருப்பியபடியிருந்தார்.

''எத்தனை அழகான சொத்து'' என்றார் அவர் நிறைவாய். ''இது யாருக்குப் போகுது?''

அவருடைய வார்த்தைகள் எனக்கு பேரதிர்ச்சியைத் தந்தன. இது ஒரு வித்தியாசமான கோணம்... ஆனால் இந்த நொடி வரை இது சட்டரீதியாய் யாருக்குப் போகிறது என்ற கேள்வியே என் மண்டைக்குள் நுழையவில்லை. பொய்ரெட் என்னைக் கூர்மையாய் கவனித்துக் கொண்டிருந்தார்.

கடைசியில், ''இது உங்களுக்கு ஒரு புது ஐடியாவா படுது போலிருக்கு'' என்றார். ''இப்படி நீங்க முன்னாடியே நினைச்சுப் பார்க்கலே போல தெரியுது, ஆங்?''

''நோ'' என்று விட்டேன் நான் நேர்மையாய். ''எனக்கும் இது தோணியிருக்கணும்.''

என்னை மறுபடியும் அவர் ஈடுபாடாய் கவனித்தார். ''நீங்க என்ன சொல்றீங்கனு எனக்கு விந்தையாயிருக்கு'' என்றார் சிந்தனையுடன். 'ஓ, வேண்டாம், வேண்டாம்'' என்றார் நான் பேசத் துவங்கும்போது. ''பிரயோஜனமில்லே! நீங்க நிஜத்துல என்ன நினைச்சீங்கனு என்கிட்டே உண்மையா சொல்ல மாட்டீங்க.''

''ஒவ்வொருத்தருக்கும் மறைச்சு வெச்சுக்க ஏதோ ஒண்ணு இருக்கு'' என்று சுட்டிக்காட்டினேன் நான் புன்னகைத்தபடி.

''எக்ஸாக்ட்லி.''

''அப்ப, இன்னும் நீங்க இந்த வாக்கியத்தை நம்பறீங்க, ஆங்?''

''முன்னெப்போதையும் விட, இப்போ, அதிகமா! ஆனா ஹெர்குல் பொய்ரெட்கிட்டேயிருந்து விஷயங்களை ரொம்ப நாளைக்குப் பதுக்கி வைப்பதென்பது, சிரமமான விஷயம். அவற்றைக் கண்டெடுக்கும் வித்தைகள் தெரிஞ்சவர் – *அவர்.*''

பேசியபடி, அங்கிருந்த தோட்டத்துக்குள் படிகளிறங்கினார்.

''கொஞ்சதூரம் காலாற நடப்பமே'' என்றார். ''குளிர்ந்த காற்று பிரமாதமாயிருக்கு.''

நான் அவரைத் தொடர்ந்தேன். ஊசியிலை மரங்களால் வேலியமைக்கப்பட்டிருந்த தோட்டத்தின் இடப்புறமிருந்த பகுதிக்குள் என்னை அழைத்துப் போனார் அவர். அங்கு, இருமருங்கிலும் மலர்ச் செடிகள் பாத்தி போலிருக்க, இவற்றுக்கு மத்தியில் ஓடிக்கொண்டிருந்த சிறு பாதையில் நாங்கள் முன்னேறியபோது, ஓர் இளைப்பாறும் இடம் போன்ற மூலையை அடைந்தோம். அங்கு ஓர் இருக்கையும் சிறு தங்கமீன் குளமும் இருந்தன. அதன் இடப்புறப்பாதையில் மேற்கொண்டு நடப்பதற்கு பதிலாக, மேல்நோக்கி வளைந்து சென்ற மரத்தாலான சரிவுப்பாதையைத் தெரிந்தெடுத்தார் பொய்ரெட். அங்கே, ஓரிடத்தில், மரங்களெல்லாம் வெட்டப்பட்டு இருக்கை போடப்பட்டிருந்தது. இங்கு உட்கார்ந்துக் கொள்ளும் ஒருவருக்கு, நகரத்தின் சிறப்பான காட்சி கிடைக்கும்; கீழேயிருக்கும் இளைப்பாறும் பகுதியும் தங்கமீன் குளமும் கூட தெரியும்.

''மிக அழகானது – இங்கிலாந்து'' என்றார் பொய்ரெட், கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலும் தோன்றிய அதன் வளர்ச்சியைப் பார்த்து பிரமித்து. பிறகு அவர் புன்னகைத்தார். ''அதே போலத்தான் – ஆங்கிலப் பெண்களும்.'' இதைத் தணிந்தக் குரலில் சொன்ன அவர், ''உஷ், ஃபிரண்ட்'' என்று என்னை ரகசியமாக்கி, ''ம், கீழே தெரியும் அழகிய ஓவியத்தைப் பாருங்க'' என்றார்.

இதற்கு பிறகு தான் அங்கு ஃப்ளோரா இருப்பதையே நான் கவனித்தேன். நாங்கள் இப்போது விட்டுவிட்டு நகர்ந்து வந்திருந்த

பகுதியில், ஏதோவொரு பாட்டின் சிறு துண்டினை முணுமுணுத்தபடி அலைந்துக் கொண்டிருந்தாள் அவன். அவளுடைய அடிகள், நடப்பதைவிட, நடனத்தையே அதிகம் ஒத்திருந்தன. துக்கத்திற்காக உடுத்த வேண்டிய கறுப்பு உடையைத் தாண்டி அவளுடைய முழு இயக்கத்திலும், குஷியைத் தவிர வேறு எதுவுமில்லை. ஒரு நிலையில் அவளுடைய நடன நடையை அவள் சட்டென நிறுத்த பொங்கியிருந்த அவளது கறுப்பு கவுன் அப்படியே குவிந்து அடங்கியது... அதே கணத்தில் தன்னுடைய தலையைப் பின்னுக்குத் தள்ளி வானத்தைப் பார்த்த அவள் படபடவென வெளிப்படையாய் சிரித்தாள்.

இப்படி அவள் பண்ணிக் கொண்டிருக்கும்போதே ஒரு மனிதன் அங்கிருந்த மரப்புதருக்குள்ளிருந்து வெளிப்பட்டான். அது, ஹெக்டர் ப்ளண்ட்.

இளையவள் துணுக்குற்று விட்டாள். அவளுடைய பாவங்கள் சிறு மாற்றங்களடைந்தன. ''என்னை எப்படி பயமுறுத்திட்டீங்க, நீங்க – நான் உங்களைக் கவனிக்கவேயில்லை.''

இதற்கு ப்ளண்ட் ஒன்றுமே சொல்லவில்லை... அப்படியே அவளை மட்டும் பார்த்தபடி ஓரிரு நிமிடங்கள் நின்றபடியிருந்தார். அப்போது, சற்றே குரோத வாசம் வீச, ''உங்ககிட்டே எனக்கு மிகவும் பிடிச்ச விஷயம் என்னதுன்னா...'' என்ற ஃப்ளோரா குறிப்பிட்டாள்: ''...நீங்க தரும் உற்சாகமான உரையாடல்.''

இதற்கு மளமளவென்று தன்னுடைய தாடை முழுவதும் ப்ளண்ட் சிகப்பானதை நான் கவனித்தேன். பேசிய அவரது குரல், இப்போது, வித்தியாசப்பட்டிருந்தது; விளக்கவொண்ணா பவ்யம் அதிலிருந்தது: ''பேசுவதற்கு உகந்த மனுஷனா நான் எப்பவுமே இருந்ததில்லே. அதை நீ சுட்டிக்காட்டறியா?'' என்றார். ''சின்ன வயசிலிருந்தே நான் இப்படித்தான்.''

''அதெல்லாம் நடந்து முடிஞ்சு பல வருஷம் ஆகியிருக்கணுமே'' என்றாள் ஃப்ளோரா, ஆழ்ந்து.

அவளது குரலில் தொனித்திருந்த நகைப்பினை என்னால் இனம்பிரித்தறிய முடிந்தது. ஆனால் அதை ப்ளண்ட் பிரித்தறிந்தார் என்று எனக்குத் தோன்றவில்லை.

''யெஸ்'' என்றார் அவர் சாதாரணமாய். ''அப்படித்தான்.''

பிறகு ப்ளண்ட் சில நிமிடங்களுக்கு எதுவுமே சொல்லவில்லை. பிறகு ஃப்ளோராவிடமிருந்து பார்வையை விலக்கி தூரப்பிரதேசத்தைப் பார்த்த அவர், அங்கிருந்த ஒரு பெரிய மரத்தின் தடிமனான தண்டுப்பகுதியைப் பார்த்துக் கொண்டே அவர் ஆப்ரிக்கா கிளம்பிப் போக வேண்டிய காலம் நெருங்கி விட்டது என்பதை எடுத்துரைத்தார்.

''இன்னொரு துணிகரமான படையெடுப்பு, ஆங்? சுடப் போறீங்களா?'

''இருக்கலாம். வழக்கமா போகும்போது பண்ணுவது தான் – ஐ மீன், சுடுவது.''

''ஹால்ல இருக்கிற தலை, நீங்க சுட்டுக் கொண்டு வந்தது தானே?''

ப்ளண்ட் ஒப்புதலாய் தலையசைத்தார். பிறகு துள்ளிக்குதித்தெழுந்த அவர் கேட்டார்: ''ஏதாவது தோல் மேல நீ ஆசைப்பட்டதுண்டா? அப்படினா அதை நான் எடுத்து வர முடியும்.''

''ஓ, ப்ளீஸ் பண்ணுங்களேன்'' என் கெஞ்சினாள் ஃப்ளோரா. ''நிச்சயம் செய்வீங்களா? மறந்துட மாட்டீங்களே? ஓ, ப்ளீஸ்!''

''நான் மறக்க மாட்டேன்'' என்றார் ஹெக்டர் ப்ளண்ட்.

உரையாடலில் திடீரென தோன்றியதை சொல்வது போல சொன்னார்: ''ரொம்ப காலம் ஆகுது நான் போய். ஆங்... இப்படிப் பட்ட வாழ்க்கைக்கு நான் பொருத்தமே கிடையாது, தெரியுமா? இங்கு வாழத்தேவையான குணாதிசயங்கள் எனக்கு இல்லே. யெஸ். நான் ஒரு கரடுமுரடானவன் – சமுதாயத்துக்கு லாயக்கில்லாதவன். பிரயோஜன மில்லாதவன். என்னத்தை எப்பப் பேசணும் எனும் அறிவேயில்லே எனக்கு. *நான் கிளம்பிடணும்.*''

''ஆனா நீங்க இப்ப உடனடியா கிளம்பலே, இல்லியா?''–அலறலாய் கேட்டாள் ஃப்ளோரா. ''நோ – நாம இப்படி வலைல மாட்டிக் கிட்டிருக்கும்போது, ம்ம். ஓ, ப்ளீஸ், கேளுங்க. ஒரு வேளை நீங்க கிளம்பிட்டா —''

கொஞ்சமாய் நகர்ந்துத் திரும்பிக் கொண்டாள் அவள்.

''நான் போகக்கூடாதுனு நீ நினைக்கிறியா?'' – கேட்டார் ப்ளண்ட். யோசித்து நிதானமாயும் சாந்தமாயும் பேசினார் அவர்.

''எல்லாருமே அப்படித்தான் நினைக்கிறோம் —''

''நான், நீ என்ன நினைக்கிறேனு மட்டும் தான் கேட்டேன்'' என்றார்

ப்ளண்ட் குறியாய்.

மறுபடியும் மெல்லமாய் திரும்பி அவரது கண்களைச் சந்தித்த ஃப்ளோரா, ''நீங்க இங்கேயே தங்கணும்னு நான் விரும்பறேன்'' என்றாள்.

அங்கு அமைதி நிலவியது. தங்கமீன் குளத்தருகே போடப்பட்டிருந்த கற்களில் இருவரும் உட்கார்ந்துக் கொண்டனர். அடுத்து என்ன பேசுவது என்று இருவருக்குமே தெரியாமல் ஆகி விட்டதைப் போல அமைந்தது, அந்தக் காட்சி.

''உன் அங்கிளை நீ பார்த்து ரெண்டு வருஷம் ஆகியிருக்கும் இல்லே?'' என்றார் ப்ளண்ட். ''நீண்ட இடைவெளி... ஆக, ரொம்ப வருத்தமிருக்காது.''

''எல்லாத்தையும் நீங்க ஆறுதலா... அமைதியா எடுத்துக்கிற மாதிரியிருக்கு'' என்றாள் ஃப்ளோரா. ''எல்லா விஷயத்தையுமே நீங்க ரொம்ப ஸிம்பிளா, எளிதா ஆக்கிடறீங்க.''

''சட்டப்படி, எல்லா விஷயமும் எளிது தான்'' – சொன்னார் அந்தப் பெரிய வேட்டைக்காரன்.

''ம்ம். அப்படி எப்பவுமே இருந்துடாது.''

அவளது குரல் கம்மியது. ப்ளண்ட், திரும்பி அவளைக் கவனிப்பதைப் பார்த்த எனக்கு, அவருடைய கண்களின் பார்வை, தூர தேசமான ஆப்பிரிக்காவிலிருந்து அகன்று மறுபடியும் இந்தத் தோட்டத்துக்கே வந்துவிட்டது புரிந்தது. அவளுடைய குரல் மாற்றத் துக்கான காரணத்தைப் பிடித்து விட்டதைப் போல ப்ளண்ட் பேச ஆரம்பித்ததை, பின்வருமாறு அவர் திடுதிப்பென்று சொன்ன வார்த்தைகளிலிருந்து என்னால் உணர முடிந்தது: ''கவனியுங்க... நீங்க கவலைப்படக்கூடாது – அந்த இளைய பயலை நினைச்சு! விளங்குதா? இன்ஸ்பெக்டர் ஒரு பெரிய கழுதைப்பய. அத்தனை பேருக்கும் தெரியும் – அவன் பண்ணியிருப்பான்னு நினைப்பதைப் போன்ற ஒரு முட்டாள்தனம் வேற கிடையவே கிடையாதுனு அத்தனை பேருக்கும் நல்லாவே தெரியும். யாரோ வெளி மனுஷன் தான் பொறுப்பு. திருடனாயிருக்கலாம். இது ஒண்ணு தான் சாத்தியப்படும் ஒரே தீர்வு.''

அவரைப் பார்ப்பதற்காக திரும்பினாள் ஃப்ளோரா. ''நெஜமாவே இப்படித்தான் நீங்க நினைக்கிறீங்களா?''

''நீ நெனக்கலே?''–உடனடியாய் சொல்லி விட்டார் ப்ளண்ட்.

''நா-ன்... ஓ, யெஸ். பின்னே?''

மறுபடியும் அமைதி. பிறகு உடைத்தது ஃப்ளோரா. ''நா-ன்... நா-ன்... ஓ கே! கவனியுங்க. இன்னிக்குக் காலைல நான் எதுக்காக அத்தனை சந்தோஷமாயிருந்தேன்னு இப்ப உங்களுக்கு சொல்றேன். இப்படியா இதயமில்லாத இரும்பு இவனு நீங்க நினைச்சா கூட பரவாயில்லே – சொல்றேன். இதுக்குக் காரணம் வக்கீல் – மிஸ்டர் ஹேமந்த். உயில் பற்றிய விவரத்தை அவர் எங்ககிட்டே சொன்னார். அங்கிள் ரோஜர், எனக்குனு இருபதாயிரம் பவுண்டுகளை எழுதி வெச்சிருக்கார். நினைச்சுப் பாருங்க – இருபதாயிரம் அற்புதப் பவுண்டுகள்!''

ப்ளண்ட் ஆச்சரியப்பட்டவராய் தெரிந்தார். ''இது, உனக்கென்ன, அத்தனை மாபெரும் தொகையாவா தெரியுது?''

''மாபெரும் தொகையா தெரியுதானா கேட்கறீங்க? ஓ... எனக்கு எல்லாமே இது தான். விடுதலை – வாழ்க்கை முழுக்க சுதந்திரம் – பணம் பணம்னு முன்கூட்டியே ஏற்பாடு பண்ணிக்கிட்டு மூளையைக் குழப்பிப்பது இனி கிடையாது–எங்கே பணமிருக்குனு புதையல் தேடும் வேலை கிடையாது–காலடியில விழுந்து —''

''காலடியில விழுந்து?'' – சட்டென இடைமறித்து கூர்மையாய் கேட்டார் ப்ளண்ட்.

இதற்கு ஒரு நிமிடம் குப்புறத் தள்ளப்பட்டவளாய் தெரிந்தாள் ஃப்ளோரா. ''நான் என்ன சொல்ல வந்தேன்னு தெரியலே?'' என்றாள் நிச்சயமற்று. எனினும் தொடர்ந்தாள்: ''நம்முடைய பணக்கார உறவுகள் தரும் அத்தனைக்காகவும் ரொம்ப நன்றிக்கடன் பட்டிருப்பது போல காட்டிக்கிட்டு, ஓஹ், ச்சே! போன வருஷம் வாங்கி பழசா போன சட்டை, கோட்டு, தொப்பியெல்லாம் ஏழை என்பதால நமக்குப் பரிசா வர... அதுக்காக தேங்க்ஸ் சொல்லி... நமஸ்காரம் பண்ணி...''

''லேடீஸ் உடைகள் பற்றி எனக்கு ரொம்ப தெரியாது. எனக்கு இப்படியொரு தேவையில்லாம நல்லாத்தானிருக்கேன்னு நீ சொல்லிட வேண்டியது தானே...?''

''ஆனா அதுல எனக்கு லாபமிருந்ததே...'' – ஒலி கம்மிய குரலில் குறிப்பிட்டாள் ஃப்ளோரா. ''இப்பப்போய் அந்தக் கொடூர அனுபவங்

களைப் பேச வைக்காதீங்க. நான் ரொம்ப சந்தோஷமாயிருக்கேன். நான் விடுதலையடைஞ்சிருக்கேன். என்னவெல்லாம் நான் பண்ண விரும்பறேனோ அத்தனையையும் நான் பண்ண வந்திருக்கும் விடுதலை. எதெல்லாம் பண்ண வேண்டாமோ—''

அவள் திடுமென்று நிறுத்தி விட்டாள்.

''எதெல்லாம் பண்ணக் கூடாது?'' – ப்ளண்ட் துரிதமாய் கேட்டு விட்டார்.

''வேண்டாமே. அதையெல்லாம் நான் இப்ப மறந்துடறேன், ஓ கே? அவை, முக்கியமில்லே.''

கையில் ஒரு சிறு கம்பு வைத்திருந்தார் ப்ளண்ட். அதனைக் குளத்தின் மேற்பரப்பில் படுமாறு வைத்துத் தட்டிக் காட்டினார்.

''என்ன பண்றீங்க, மேஜர் ப்ளண்ட்?''

''உள்ளே அங்கே என்னவோ பளபளனு பிரகாசமா தெரிஞ்சது. என்னவாயிருக்கும்னு ஒரு சிறு ஆவல். தங்கக் கொண்டையூசியோ? தொட்டதுல களிமண் கலங்கிடுச்சு – பிரகாசமும் போயிடுச்சு.''

''ஒருவேளை, அது ஒரு மகுடமாயிருந்திருக்கலாம்'' என்றாள் ஃப்ளோரா.

''ஓபரா நடனங்களில் கன்னிகள் போட்டுக் கொண்டு ஆடுவது போல, ஆங்?''

''ஆஹ்... என்ன பொருத்தமான கற்பனை! ஓபரா நடனங்கள் ரொம்பப் பிடிக்குமோ – கூர்மையா கவனிச்சிருக்கீங்க?''

''ஃபிரண்ட்ஸ் என்கிட்டே வந்து இதைப்பற்றி சில சமயங்கள்ல பேசுவதுண்டு'' என்றார் அவர், சிறு வருத்தத்துடன். ''பார்க்க விறுவிறுப்பாயிருக்கு எனும் போர்வையில் நடக்கும் கோமாளி யாட்டம். சொல்லி விட்டு ஒரு சிறு கல்லைத் தூக்கி தங்கமீன் குளத்துக்குள் எறிந்தார். பிறகு, நடவடிக்கையில் ஒரு சிறு மாற்றத்தோடு, ஃப்ளோரா பக்கமாய் திரும்பினார்.

''மிஸ் ஆக்ராய்டு... என்னால உனக்கு ஏதாவது பண்ண முடியுமா? பேடன் சம்பந்தமா கேட்கிறேன். இவன் விஷயத்துல நீ எத்தனை ஆர்வப் பரபரப்போட இருக்கணும்னு எனக்குத் தெரியும்.''

''தேங்க் யூ'' என்று அவசியமில்லை எனும் தொனியில் மறுப்பாய் சொன்னாள் அவள். ''இதுல பண்றதுக்கு எதுவும் கிடையாது. ரால்ஃப்

நல்லாத்தானிருப்பான். உலகத்தின் மிகச் சிறந்த உன்னத டிடெக்டிவ்வை நான் பிடிச்சுட்டேன். இதைப்பற்றின எல்லாத்தையும் அவர் கண்டுபிடிச்சுடப் போறார். அப்புறம் என்ன?''

இங்கு எங்களுடைய நிலையினை எண்ணி சில நொடிகள் நான் அசௌகரியமானேன். கீழேயிருக்கும் இருவரும் நிமிர்ந்தால் எங்களிருவரையும் விமரிசையாய் பார்க்கலாம் என்பதால் நாங்கள் ஒன்றும் இங்கு ஒளிந்திருந்து ஒட்டுக் கேட்டுக் கொண்டிருக்கவில்லை என்பது நிஜமே. இருந்தாலும் கூட நாங்கள் இங்கு இருப்பதைக் குறித்து அவர்களிடம் சொல்லி, நான் முன்னமேயே அவர்களது கவனத்தை இழுத்திருக்க வேண்டும். என் புது நண்பன் ஓர் எச்சரிக்கை அழுத்தத்தை என் கைகளில் தந்து தடுத்து விட்டதால் இது முடியாமல் ஆகி விட்டது. இப்படிச் செய்ததன் மூலம் நான் அமைதியாகவே இருக்க வேண்டும் எனும் அவரது விருப்பத்தைத் தெரிவித்து விட்டார். இத்தனையிருந்தாலும், இப்போது, அவர் சுறுசுறுப்பாய் இயங்கினார்.

விரைவாய் எழுந்துக் கொண்ட அவர் தொண்டையைச் செருமினார். ''மன்னிக்கணும்!'' என்றார். ''இத்தனை தாராளமா மேடம் என்னைப் புகழ்ந்து நம்பிக்கையைத் தெரிவிக்கும்போது இங்கிருந்தும் இல்லாதது போல இருக்க எனக்கு மனசு வரலே. தானில்லாதபோது, தன்னைப் பற்றி மற்றவர்கள் புகழ்ந்து ஒருத்தனாலும் கேட்க முடியாது என்ற பொதுமொழியுண்டு... ஆனா இப்ப அது பொய்யுனு நிரூபணமாயிடுச்சு!''

நான் அவரை ஒட்டியபடி பின்தொடர்ந்தபடியிருக்க அப்பாதையில் வேகமாய் இறங்கினார் அவர். குளத்தருகே ஏனைய இருவரோடும் சேர்ந்துக் கொண்டோம்.

''இது மிஸ்டர் பொய்ரெட்'' என்றாள் ஃப்ளோரா. ''இவரைப் பற்றி நீங்க கேள்விப்பட்டிருக்கணுமே.''

பொய்ரெட் பவ்யமாய் தலை வணங்கி வணக்கம் சொன்னார். ''மேஜர் ப்ளண்ட்டின் தொழில் கீர்த்தி பற்றி எனக்குத் தெரியும்'' என்றார் சாந்தமாய். ''உங்களை சந்திச்சதுல எனக்கு ரொம்ப மகிழ்ச்சி, ஸார். நான் உங்களால தர முடியும் ஒரு தகவலை வேண்டி நிற்கிறேன்.''

விசாரிக்கும் பார்வையை ப்ளண்ட்டின் மீது செலுத்தினார் அவர்.

''நீங்க மிஸ்டர் ஆக்ராய்டைக் கடைசியா எப்பப் பார்த்தீங்க?''

''டின்னர்ல வெச்சு.''

''நீங்க அப்புறமா அவரைப் பார்க்கலையா? அவர் பேசிக் கேட்கலையா?''

''பார்க்கலே. அவர் குரலைக் கேட்டேன்.''

''எப்படி நடந்தது இது?''

''நான் டெரஸ்ல சிறு நடை நடந்துக்கிட்டிருந்தேன்—''

''மன்னிக்கணும். அப்ப மணி எத்தனை?''

''ஒன்பதரை இருக்கும். மேலும் கீழுமா நடந்தபடி வரவேற்பறை ஜன்னல்கிட்டே நின்னு சிகரெட் ஊதிக்கிட்டிருந்தேன். ஆக்ராய்டு படிக்குமறையில பேசிக்கிட்டிருந்ததை நான் கேட்டேன்—''

பொய்ரெட் அவர் பேசுவதை நிறுத்தினார். ''நிச்சயமா டெரஸின் அந்தப் பகுதியிலிருந்து உங்களால படிக்குமறையில பேசும் வார்த்தைகளைக் கேட்கவே முடியாது'' என்றார் கிசுகிசுப்பாய்.

பொய்ரெட், ப்ளண்ட்டைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை – ஆனால் நான் பார்த்துக் கொண்டிருந்தேன். என் முழு ஆச்சரியத்துக்கும் தீனி போடும் விதத்தில், அப்படியே பெருக்கித் தள்ளப்படுவதாய் அவர் உணர்ந்ததை நான் கவனித்தேன்.

''டெரஸ்ல நடந்துட்டிருக்கும்போது படிக்குமறை ஜன்னல் வரையும் கூட நான் போய் வந்தேன்'' என்றார் வேண்டாவெறுப்பாய்.

''ஆஹ்! அப்படியா?'' என்றார் பொய்ரெட். மிக மிருதுவான முறையில் இதை சொன்னதன் மூலம் இன்னும் விஷயங்கள் வேண்டும் என்பதை உணர்த்தினார் அவர்.

''அங்கிருந்த புதர்களுக்குள் ஒரு பொண்ணு பதுங்கியது என் கண்ணுல பட்ட மாதிரியிருந்தது. சின்னதா ஒரு வெள்ளை நிற பளபளப்பு, அவ்ளோதான். ஒருவேளை நான் தப்பா எடுத்துக் கிட்டிருக்கணும் – யெஸ். அங்கே டெரஸின் நுனியில வந்து நான் நின்னுக்கிட்டிருந்த போது தான், அவரோட செகரட்டரிக்கிட்டே பேசிக்கிட்டிருந்த ஆக்ராய்டின் குரல் எனக்குக் கேட்டது.''

''ஜியோஃபெர்ரி ரேமண்ட் கிட்டே பேசிக்கிட்டிருந்த குரல்?''

''யெஸ் – இப்படித்தான் நான் அப்போ நினைச்சேன். அது தப்புனு இப்ப தெரியுது.''

''பேசிக்கிட்டிருந்தவரை, மிஸ்டர் ஆக்ராய்டு பேர் சொல்லிக்

குறிப்பிடவேயில்லையா?''

''ஓ, நோ.''

''அப்படினா, கேட்கறேனேனு தப்பா எடுத்துக்காதீங்க, எதுக்காக நீங்க நினைக்கணும்?''

ப்ளண்ட் மெனக்கெட்டு விளக்கலானார்: ''அது ரேமண்ட்டாத் தானிருக்கணும்னு எடுத்துக்கிட்டேன் – ஏன்னா, நான் வெளியே வர்றதுக்கு முன்னாடி, ஆக்ராய்டு கிட்டே சில பேப்பர்களைக் கொண்டு போய் காட்டப் போவதா ரேமண்ட் என்கிட்டே சொன்னான். அதனால வேற யாரும் இருக்க முடியாதுனு நினைச்சுக்கிட்டேன்.''

''நீங்க கேட்ட வார்த்தைகள் என்னென்னனு நினைவுபடுத்த முடியுமா, உங்களால?''

''முடியாதுனு தான் படுது. சாதாரணமான... முக்கியமா படாத வார்த்தைகள் தான். துளித்துளியா எதுவோ விழுந்தது. அந்த சமயத்துல நான் முழுக்க முழுக்க வேற எதையோ மனசுல யோசிச்சுக் கிட்டிருந்தேன்.''

''அப்ப இதை விட்டுடுவோம்'' என்றார் பொய்ரெட். ''உடல் கண்டெடுக்கப்பட்ட பிறகு நீங்க அந்த அறைக்குள்ளே போன போது, அங்கிருந்த நாற்காலியொன்றை நகர்த்திப் போட்டீங்களா?''

''சேர்? இல்லை. எதுக்காக நான் அப்படி பண்ணணும்?''

பொய்ரெட் தோள்களைக் குலுக்கி 'தெரியாதே... என்று உணர்த்தினாரே ஒழிய பதில் தரவில்லை.

''உங்ககிட்டேயிருந்தும் ஒரு விஷயத்தை நான் தெரிஞ்சுக்க விரும்பறேன், மேடம். டாக்டர் ஷெப்பர்டுடன் சேர்ந்து ஸில்வர் டேபிள் சமாச்சாரங்களை நீங்க பரீட்சிக்கும் போது, அதுல, அந்தப் பிச்சுவாக் கத்தி, இருந்துதா? இல்லையா?''

ஃப்ளோராவின் முகவாய் பற்றிக் கொண்டது. ''இதையே தான் அந்த இன்ஸ்பெக்டர் ரக்லானும் கேட்டது'' என்றாள் விரோதமாய். ''அப்ப அவர்கிட்டே சொன்னேன். இப்ப உங்ககிட்டே. அந்தக் கத்தி அங்கே இல்லை என்பதுல நான் படு நிச்சயமா இருக்கேன். அது அங்கே தானிருந்தது என்றும் சாயங்காலத்துக்கு மேல அதை ரால்ஃப் திருடி எடுத்துக்கிட்டான் என்றும் அவர் நினைக்கிறார். மேலும், அவர் என்னை நம்பறதா இல்லே. இப்படி நான் சொல்வதற்குக் காரணமே,

ரால்ஃப்பைப் பொத்திக் காப்பாற்றத்தான்னு அவர் நினைக்கிறார்.''

''அப்போ, நீங்க அப்படி பண்ணலே?'' என்றேன் நான் ஆழமாய்.

ஃப்ளோரா காலை பூமியில் எத்தினாள். ''நீங்களுமா, டாக்டர் ஷெப்பர்ட். ஓ! இது படுமோசம்!''

பொய்ரெட் சமயோஜிதமாய் ஒரு மாற்றத்தை உண்டுபண்ணி விட்டார். ''நீங்க பேசி நான் சற்றுமுன் கேட்டது – நிஜந்தான் மேஜர் ப்ளண்ட். குளத்துக்குள்ளே என்னவோ மினுமினுக்குது, யெஸ். என்னால அதை நெருங்க முடியுதானு பார்ப்பம்.''

குளத்தருகே முட்டிப் போட்டு உட்கார்ந்துக் கொண்ட அவர், வலக்கை முட்டியை வலக்கால் முட்டியில் பதித்தபடி, கையை மட்டும் மெதுவாக – குளத்து நீரைக் கலக்கி விடாமல் – ஜாக்கிரதையாய் நீருக்குள் நுழைத்தார். ஆனால், அவர் எடுத்துக் கொண்ட இத்தனை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மீறி, நீர் சுழன்றது... கலங்கி விட்டது. வெறும் கையை அவர் வெளியே எடுக்கும்படி ஆனது.

கை முழுதும் அப்பியிருந்த களி மண்ணை முறைத்துப் பார்த்தார். துடைத்துக் கொள்ள நான் கொடுத்த கைக்குட்டையை பல நன்றிகளுக்குப் பிறகு வாங்கிக் கொண்டார்.

ப்ளண்ட் அப்போது அவருடைய கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். ''லஞ்ச் டைம் ஆகிடுச்சு'' என்றவர் ''வீட்டுக்குப் போகலாம்னு நினைக்கிறேன்'' என்றார்.

''நீங்க எங்களோட லஞ்ச் எடுத்துக்கலாமே, பொய்ரெட்'' என்றாள், ஃப்ளோரா. ''நீங்க என்னோட அம்மாவைச் சந்திக்கணும்னு பிரியப்படறேன். அவங்களுக்கு – ரால்ஃப்னா உயிர்.''

குள்ள டிடெக்டிவ் ஒப்புதலாய் வணங்கினார். ''என்னோட பாக்கியம், மேடம்'' என்றார் நாடகப்பாணியில்.

''நீங்களும், கூட வரலாமில்லே, டாக்டர் ஷெப்பர்ட்?''

நான் தயங்கினேன்.

''ஓ, வாங்க!''

எனக்கும் பங்கு கொள்ள ஆசை தான், ஆகவே மேற்கொண்டு திருவிழா ஆக்காமல் ஒப்புக்கொண்டு விட்டேன்.

ஃப்ளோராவும் ப்ளண்ட்டும் முன்னால் நடந்துக் கொண்டு போக, நாங்களிருவரும் கூட, வீடு நோக்கிச் செல்ல எழுந்தோம்.

''என்ன கூந்தல்!'' என்றார் பொய்ரெட், தணிந்த குரலில், ஃப்ளோராவின் கடலலை போன்ற கூந்தலை அங்கீகரித்தபடி. ''நிஜமான தங்க நிறம்! ரெண்டு பேரும் சரியான ஜோடியா மிளிர்வாங்க – இவங்களும் அந்த கருத்த ஆணழகு பேடனும். இல்லையா?''

விசாரிக்கும் பார்வையை நான் அவர் மீது வீச, அவரோ, அவருடைய கோட்டின் மீது படிந்திருந்த சிற்சில நீர்த்துளிகளைத் தட்டி விடும் வேலையிலிருந்தார்.

''இத்தனை பண்ணி ஒண்ணுமில்லாம போச்சு'' என்றேன் நான் பரிதாபமாய். ''அப்படியென்ன தான் அந்தக் குளத்துக்குள்ளே இருந்திருக்கும்? வியப்பாயிருக்கு —''

''பார்க்க விரும்பறீங்களா?'' – பொய்ரெட் கேட்டார்.

நான் அவரைப் பார்த்து முறைத்தேன். ஒப்புதலாய் தலையசைத்தார் அவர்.

மிருதுவாய், ''மை குட் ஃபிரண்ட்...'' என்ற அவர், ''தான் குறி வெச்ச பொருளை அடைவது உறுதி என்றாகும்வரை, தன்னுடைய அருமையான உடையைச் சேதப்படுத்திக்க விரும்பவே மாட்டான், இந்த ஹெர்குல் பொய்ரெட். அப்படி இலக்கை அடைய நானெடுக்கும் பிரயத்தனங்கள் வேடிக்கையாவும் கேலிக்கூத்தாவும் படலாம். ஆனா – நான் எப்பவும் கோமாளியா இயங்கினதில்லே.''

''ஆனா நீங்க வெறும் கையையில்லே வெளியே எடுத்துட்டு வந்தீங்க?'' – மறுத்தேன் நான்.

''திடீர் முடிவெடுக்க வேண்டிய தருணங்களும் வரும், டாக்டர். உங்க நோயாளிங்க கிட்டே நீங்க எல்லாத்தையும் சொல்லிடுவீங்களா, டாக்டர் – *எல்லாத்தையும்?* இருக்காதுனு நினைக்கிறேன். இல்லே, உங்களோட எக்ஸலண்ட் சகோதரிகிட்டே நீங்க உங்களுக்குத் தெரிஞ்ச எல்லாத்தையும் சொல்லுவீங்களா – *இருக்காது.* காலியான என் கையை நான் காட்டுவதற்கு முன்னாடியே அதிலிருந்ததை நான் என்னோட அடுத்த கரத்துக்கு மாற்றியிருந்தேன். அது என்ன என்பதை இப்ப நீங்க பார்க்கலாம்.''

உள்ளங்கை திறந்திருந்த நிலையில் கையை நீட்டினார் அவர். அதில் உட்கார்ந்திருந்தது, ஒரு சின்ன வட்டத்தங்கம். பெண்ணின் திருமண மோதிரம்.

அவரிடமிருந்து அதை நான் எடுத்துக் கொண்டேன்.

''உள்ளே பாருங்க'' என கட்டளையாய் சொன்னார் அவர்.

அப்படியே நான் பண்ணினேன். உள்ளே, நுண்ணிய எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது:

From R., **மார்ச் 13.**

நான் பொய்ரெட்டைப் பார்த்தேன், ஆனால் அவரோ, அவருடைய தோற்றத்தைப் பையிலிருந்த ஒரு சிறு கண்ணாடியில் பரிசோதித்துக் கொள்வதில் இறங்கியிருந்தார். அவருடைய மீசையை முறுக்கிக் கொள்வதில் அவர் மிகுந்த முக்கியத்துவம் தந்துக் கொண்டிருந்தாரே ஒழிய, என்மீது கவனம் காட்டவில்லை. மேற்கொண்டு பேசுவதில் அவர் ஈடுபாடு வைக்கவில்லை என்பதை நான் உணர்ந்தேன்.

அத்தியாயம் 10

வீட்டு வேலைக்காரி

மிஸஸ் ஆக்ராய்டை நாங்கள் ஹாலில் சந்தித்தோம். அவருடன் கூட, துடிக்கும் முகவாயுடனும் கூரான பூனைக் கண்களுடனும் தென்பட்ட ஒரு வறண்ட சின்ன ஆளுமிருந்தார். அவனுடம்பெங்கும் 'லாயர்' என எழுதப்பட்டிருந்தது.

''மிஸ்டர் ஹேமந்த்தும் இன்னிக்கு நம்ம கூட லஞ்ச் எடுத்துக்கப் போறார்'' – சொன்னார் மிஸஸ் ஆக்ராய்டு. ''மேஜர் ப்ளண்ட்டை உங்களுக்குத் தெரியும் தானே, சர் ஹேமந்த்? அப்புறம் டியர் டாக்டர் ஷெப்பர்ட் – பரிதாபமான ரோஜர் ஆக்ராய்டின் நெருங்கிய நண்பர். மேலும் —''

நிறுத்தினார் – ஹெர்குல் பொய்ரெட்டை சிறு தடுமாற்றத்தோடு நோட்டமிட்டபடி.

''இது மிஸ்டர் பொய்ரெட்மா'' என்றாள் ஃப்ளோரா. ''அவரைப் பற்றி நான் இன்னிக்குக் காலைல கூட சொன்னேனே...

''ஓ, யெஸ்'' என்று, நிச்சயமற்று சொன்னார் மிஸஸ் ஆக்ராய்டு. ''ஆமாம், டியர் ஆமாம். இவர் ரால்ஃப்பைக் கண்டுபிடிக்கணும், இல்லையா? அதுக்குத்தானே?''

''அவர், யார் அங்கிளைக் கொன்னதுனு கண்டுபிடிக்கணும்மா. அதுக்காக'' என்றாள் ஃப்ளோரா.

''ஓ, மை டியர்'' என அலறினார் அவளுடைய அம்மா. ''ப்ளீஸ்! நடுங்குதெனக்கு. இன்னிக்குக் காலைல நான் நிலைகுலைஞ்சுப் போயிட்டேன்... அடக்க முடியாத படபடப்பு. என்ன மாதிரியான ஒரு

கொடூரம் நடந்திருக்கு இந்த வீட்டுல! இது, ஏதோ ஒரு வகையான விபத்து தான்னு என்னால நினைக்காம இருக்க முடியலே. அதிசயமான கலைப்பொருட்களையெல்லாம் அழகா கையாள்வதில் பழக்கமுள்ளவர் தானே ரோஜர். அவர் கை தவறியோ அல்லது அப்படி எது மாதிரியோ தான் நடந்திருக்கணும்.''

போலீஸால் இந்த தியரி அமைதியாய் பார்க்கப்பட்டது. பொய்ரெட், வக்கீலைத் தனியாய் நகர்த்திப் போவதைப் பார்த்தேன் நான்... அவருடன் எதையோ கீழ்ஸ்தாயியில் ரகசியமாய் பேசினார். அப்போது இருவரும் தனியாய் ஜன்னலின் மறைவோரமாய் நகர்ந்துக் கொண்டனர். நானும் அவர்களுடன் இணைந்துக் கொண்டேன் – பிறகு உடனேயே தயங்கினேன்.

''தேவையில்லாம மூக்கை நுழைக்கிறேன்'' என்றேன் நான்.

''அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையவே கிடையாது'' என்றார் பொய்ரெட். ''நீங்களும் நானும், டியர் டாக்டர், நாம இரண்டு பேரும் பக்கத்துணையா நின்னு இந்த கேஸைத் துப்பறியறோம். நீங்க இல்லாம – நானொரு வீண். எனக்கு ஒரு சின்ன தகவல் மிஸ்டர் ஹேமந்த் கிட்டேயிருந்து தேவைப்பட்டது, அவ்ளோதான்.''

''நீங்க கேப்டன் ராம்ஃப்பின் சார்பில் இயங்கிக்கிட்டிருப்பதா நினைக்கிறேன்'' என்றார் வக்கீல் ஜாக்கிரதையாய்.

மறுப்பாய் தலையசைத்தார் பொய்ரெட். ''அப்படி கிடையாது. நான் நீதியின்பால் உள்ள மதிப்பின் காரணமாக பணியாற்றிக்கிட்டிருக்கேன். மிஸ் ஆக்ராய்டு அவரோட அங்கிளுடைய மரணம் பற்றி துப்பறியுமாறு என்னைக் கேட்டுக்கிட்டார்.''

மிஸ்டர் ஹேமந்த் இந்த பதிலால் சற்று பின்வாங்கினார். தொடர்ந்து பேசினார்: ''இந்த கேஸ்ல கேப்டன் பேடனுக்கு சம்பந்தமிருக்கலாம்னு நான் அதிகம் நம்பலே'' என்ற அவர் ''எத்தனை தான் சூழ்நிலை சாதகங்கள் அவருக்கு எதிரா இருந்தாலும்'' என முடித்தார். ''பணத்துக்காக அல்லாடிக்கிட்டிருந்தார் எனும் ஒரேயொரு காரணத்தைப் பிடிச்சுத் தொங்கிக்கிட்டு —''

விரைவாய் குறுக்கிட்டார் பொய்ரெட்: ''அவர் பணத்துக்காக அத்தனை இக்கட்டுல இருந்தாரா என்ன?''

லாயர் தோள்களைக் குலுக்கி விட்டு வறட்சியாய் பேசினார்: ''பணம்

என்பது ரால்ஃபைப் பொறுத்தமட்டில் உயிர் போகும் ஒரு நெருக்கடி – எப்பவுமே. வெறும் கையில நாம தண்ணீயை மொண்டெடுத்தா அது எத்தனை சீக்கிரம் வழுக்கிட்டு ஓடிடுமோ அப்படி ஓடிடும் ரால்ஃப் கையில – பணம். பணம் கேட்டு அவரோட வளர்ப்புத் தந்தைக்கு அவர் அப்ளிகேஷன் போட்டுக்கிட்டே தானிருப்பார்.''

''சமீபத்துலேயும் இப்படி அடிக்கடி நச்சரிச்சுக்கிட்டிருந்தாரா? உதாரணத்துக்கு போன வருஷம்?''

''அதை என்னால உறுதிப்படுத்தி சொல்ல முடியாது. இந்த சமாச்சாரத்தைப் பற்றி மிஸ்டர் ஆக்ராய்டு என்கிட்டே விவாதிச்சது கிடையாது.''

''புரியுது. ஆங்... திரு ஆக்ராய்டு தனது உயில்ல எப்படியெல்லாம் சொத்தைப் பிரிச்சு எழுதியிருக்கார்னு உங்களுக்கு நல்லாவே பரீச்சயமிருக்குனு, மிஸ்டர் ஹேமந்த்... எனக்குத் தெரிய வந்திருக்கு.''

''அப்படியே. இங்கே நான் இன்னிக்கு வந்திருப்பதன் நோக்கமே இது தான்.''

''அப்படினா, நான் மிஸ் ஆக்ராய்டுக்காக இந்த கேஸ்ல இயங்கிக்கிட்டிருக்கும் தனியார் துப்பறியும் நிபுணர் எனும் காரணத்தை முன்வைத்து, அந்த உயிலின் சாராம்சத்தை எனக்குச் சொல்ல உங்களுக்குத் தயக்கம் ஏதும் இருக்காதே?''

''அந்த சாராம்சம் ரொம்ப சிம்பிளானது, திரு பொய்ரெட். சட்டரீதியா உழைப்பவருக்குத் தர வேண்டியது... தர்ம ஸ்தாபனங்கள் அறக்கட்டளைகள் இதுக்கெல்லாம் போக வேண்டியது... தான தருமம் கொஞ்சம்... இதுக்கெல்லாம் அப்புறம்...

''ஆங், ஆங், ஒரு நிமிஷம். தானதருமம்? உதாரணமா —''

இதற்கு மிஸ்டர் ஹேமந்த் சின்னதாய் ஆச்சரியப்பட்டது போல இருந்தது. ''வீட்டைக் காக்கும் மிஸ் ரஸ்ஸெல்லுக்கு ஆயிரம் பவுண்டுகள்... சமையக்காரி எம்மா கூப்பருக்கு, ஐம்பது பவுண்டுகள்... அவருடைய செகரட்டரி ரேமண்ட்டுக்கு ஐநூறு... பல்வேறு மருத்துவமனைகளுக்கு...

பொய்ரெட் கையமர்த்தித் தடுத்து விட்டார். ''ஆஹ்... அறக் கட்டளை தர்மங்கள் என்னை எப்போதும் ஈர்ப்பது கிடையாது.''

''ஓஹோ. பத்தாயிரம் பவுண்டு மதிப்புள்ள பங்குகளிலிருந்து வரும்

வட்டி முழுவதும் மிஸஸ் ஆக்ராய்டுடைய வாழ்நாள் முழுமைக்கும் அவருக்கு தரப்படணும். மிஸ் ஃப்ளோரா ஆக்ராய்டுக்கு வெகுசுலபமா இருபதாயிரம் பவுண்டுகள் போகுது. மீதியிருக்குமெல்லாம் – இந்த சொத்து, வீடு, ஆக்ராய்டு அண்ட் சன்ஸின் பங்குகள், இவையெல்லாம் –அவரது வளர்ப்பு மகன் கேப்டன் ரால்ஃப் பேடனுக்கு.''

''மிஸ்டர் ஆக்ராய்டுக்கு ஏகப்பட்ட பணமோ?''

''ரொம்ப அதிகமான தொகை, ஸார். கேப்டன் பேடன் கொள்ளைக் கொள்ளையா பணமுள்ள இளைஞனா உருவெடுக்கப் போறார்.''

அங்கு சற்று அமைதி நிலவியது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அப்போது ''மிஸ்டர் ஹேமந்த்...'' என்று மிஸஸ் ஆக்ராய்டின் குரல் கனப்புப் பகுதியிலிருந்து ஒரு புலம்பல் போல வந்தது.

அந்த அழைப்புக்காக வக்கீல் நகர்ந்து விட, பொய்ரெட் என் கையைப் பிடித்திழுத்து ஜன்னல் பக்கமாய் தனியாய் தள்ளிப் போனார். ''ஆஹாஹா. அந்த வானவில்லைக் கவனியுங்க'' என்று குறிப்பிட் டார், அப்போது தேவையற்ற உரத்த குரலெடுத்து. ''என்ன அலங்கார அமைப்பு, இல்லே? வளைந்து, அதில் எல்லா நிறமும் கொண்டு, மனசுக்கு நிம்மதி திரும் விதமாய்...''

அதே சமயத்தில் அவரது கை என் கையில் தரும் அழுத்தத்தை உணர்ந்து உஷாரான நான், அப்படியே மிகவும் தணிந்த குரலெடுத்து சட்டென்று அவர் சொல்வதைக் கூர்ந்து கவனிக்கலானேன்: ''உண்மை யாவே உங்களுக்கு எனக்கு உதவணும்னு ஓர் எண்ணமிருக்கா? இந்த துப்பறிதலில் பங்கு கொள்ளணும்னு உந்துதல் இருக்கா?''

''ஆமாம், பின்னே!'' என்றேன் நான் உற்சாகம் கரைபுரள. ''இதை விட வேற எதுவும் இப்போதைக்கு நான் மிகவும் விரும்புவதா அமையாது! எந்த அளவுக்கு விறுவிறுப்பற்ற டல்லான ஒரு பனிமூட்ட வாழ்க்கையை நான் வாழந்துக்கிட்டிருக்கேன்னு உங்களுக்குத் தெரியாது. அசாதாரண விறுவிறுப்புகள் எதுவுமே இல்லாம –ச்சே!''

''அந்தக் குறையை நான் தீர்க்கறேன். வெல்... இனி நீங்களும் நானும் தொழில் நண்பர்கள் – துப்பறிதலில். இன்னும் ஒரு நிமிஷத்திலோ அல்லது ரெண்டு நிமிஷத்திலோ மிஸ்டர் ப்ளண்ட் வந்து நம்முடன் இணைந்துக் கொள்வார் என்பது என் ஊகம். இப்போ கவனிங்க...

எனக்கு சில விஷயங்கள் அவசியமா தெரிய வேண்டியிருக்கு – அவசரமும் கூட. ஆனா அதையெல்லாம் நான் தெரிஞ்சுக்க ஆவலாயிருக்கேன்னு நானே காட்டிக்க விரும்பலே. விளங்குதில்லே? ஆக, இது உங்களுடைய கட்டம் - கேள்விகளைக் கேட்க!''

''என்ன கேள்விகளை நான் கேட்கணும்னு விரும்பறீங்க?'' – விளங்காததால் கேட்டேன் நான்.

''உரையாடும்போது, அவரிடம், மிஸஸ் ஃபெர்ரஸ் எனும் பேரை நீங்க அறிமுகப்படுத்தணும்.''

''அப்படியா?''

''அவங்களைப் பற்றி செயற்கைத்தனம் தெரியாத இயற்கையான முறையில பேசுங்க. அவங்களோட கணவன் இறந்த சமயத்துல ப்ளண்ட் இங்கே வரைக்கும் வந்திருந்தாரானு கேளுங்க. நான் என்ன மாதிரி கோணத்துல சொல்றேன்னு விளங்குதா, ம்? இதுக்கு அவர் பதில் தரும்போது, தவற விட்டுடாம, அவரோட முகபாவத்தை, நீங்க கவனிப்பது வெளியே தெரிஞ்சுடாம, கவனியுங்க.''

இது பற்றி மேற்கொண்டு பேச அவகாசமில்லாமல் ஆகியது, ஏனெனில், அந்த சமயத்தில், ப்ளண்ட் அவர் பேசிக்கொண்டிருந்த கூட்டத்தை அப்படியே அந்தரத்தில் விட்டுவிடுவது போல விட்டு விட்டு, பொய்ரெட் ஆரூடம் போல் கண்டிருந்தபடி, எங்களிருவரையும் நாடி வந்துக் கொண்டிருந்தார்.

டெரஸில் ஒரு பொடிநடை செய்வோம் என நான் ஆலோசித்ததை ப்ளண்ட் ஏற்றுக் கொண்டார். பொய்ரெட் பின்தங்கி விட்டார்.

அப்போது வாடிப்போயிருந்த ஒரு ரோஜா மலரைப் பார்த்து அப்படியே நின்றேன் நான். ''ஓரிரு நாட்கள்லேயே வாழ்க்கைப் பாதை தான் எப்படியெல்லாம் மாறிடுது'' என்றேன் அதை கவனித்தபடி. ''போன வாரம் புதன்கிழமை நான் இங்கே வந்திருந்தேன், நல்லா நினைவிருக்கு. இதே டெரஸ்ல –இப்படியும் அப்படியும் நடந்தபடி. ஆக்ராய்டு அப்ப என்னோடயிருந்தார் – முழு உயிர்ப்புடன். எத்தனை அவா, அவருக்கு உலக வாழ்க்கை மேல! ஆனா இப்போ – மூணு நாளைக்கு முன்னாடி – பாவப்பட்ட ஆக்ராய்டு இஸ் டெட். இதே உயிர்ப்போட இருந்தாங்க மிஸஸ் ஃபெர்ரர்ஸ் – அவங்களும் கூட, டெட்! ஆஹ், அவங்களை உங்களுக்குத் தெரியுமில்லே – என்ன? ஓ,

யெஸ், உங்களுக்குத் தெரியுமே.''

ப்ளண்ட் ஒப்புதலாய் தலையசைத்தார்.

''இந்த தடவை நீங்க இங்கே வந்ததிலிருந்து அவங்களைப் போய் பார்த்தீங்களா?''

''அவங்களை அழைக்க ஆக்ராய்டு கூட சேர்ந்துப் போயிருந்தேன். போன செவ்வாய்னு நினைப்பு. சித்தப்பிரமைக் கொள்ள வைக்கும் கவர்ச்சி! மோகனப்பெண்! ஆனாலும், என்னவோ ரகசியமிருந்தது அவங்ககிட்டே. ரொம்ப ஆழத்துல. அவங்க என்ன நினைப்புல இருக்காங்கனு ஒருத்தரால சட்டுனு சொல்லிட முடியாது, யூ நோ!''

அவருடைய அசையாத பூனை நிற கண்களைக் கவனித்தேன். அவற்றில் நிச்சயமாய் எதுவுமில்லை. நான் ஒருபடி மேலேறினேன்: ''நீங்க அவங்களை சந்திச்சிருக்கீங்கனு நினைக்கிறேன்...

''போன தடவை நான் வந்திருந்தப்ப – அப்போ தான் அவங்களும் அவங்க கணவரும் இங்கே வசிப்பதற்காக வந்திருந்தாங்க.'' இப்போது சற்று தாமதித்த அவர் கூடுதலாய் சேர்த்தார்: ''அப்போதைக்கும் இந்த தடவை பார்த்தற்கும்... அவங்க நிறைய மாறியிருந்தாங்க.''

''என்ன வகையான – மாற்றம்?'' – கேட்டேன் நான்.

''பத்து வயசு கூடிட்ட மாதிரி.''

''அவங்க கணவர் இறந்தபோது நீங்க இங்கே வந்திருந்தீங்களா?'' – இந்தக் கேள்வி எத்தனை சாதாரணமான ஒன்றாய் பட வேண்டுமோ அப்படி குரலை வைத்துக் கொண்டு கேட்டேன்.

''நோ. நான் கேள்விப்பட்டதை வெச்சுக்கிட்டு வராம இருப்பதே மேல்னு பட்டுது எனக்கு. இரக்கமில்லாத கொடூரம், ஆனா அது தானே உண்மை.

நான் ஒப்புக் கொண்டேன்.

''ஆஹ்லே ஃபெர்ரர்ஸ் ஒரு நல்ல முன்னுதாரண கணவன் கிடையாது'' என்றேன் நான், ஜாக்கிரதையாய்.

''பொறுக்கினு நினைச்சேன் நான்'' என்றார் அவர்.

''அப்படி இல்லே'' என்றேன் நான். ''எல்லாம் பணத்தால – தேவைக்கு அதிகமா பணம் வெச்சிருந்த ஆசாமி.''

''ஓ! பணம்! உலகத்தின் எல்லா பிரச்சினைகளையும் ஒண்ணு திரட்டி பணம் எனும் ஒரே அரக்கன்ல கொண்டு வந்து முடிச்சுடலாம் – அல்லது

அது இல்லாத காரணத்துல கொண்டு போய்!''

''பிரச்சினை! ஆங், சொல்லுங்களேன்... அதுதானே உங்களுடைய பிரத்யேகமான பிரச்சினையா இருந்தது?''

''போதும் போதும் எனும் அளவுக்கு எனக்கு இருக்கு. அந்த வகையில நான் லக்கி பேர்வழி.''

''இருக்கலாம்.''

''சட்டரீதியா சொத்து வந்து சேர்ந்தது – மரணசாசனம் வழியா – போன வருஷம். அதை, ஒரு முட்டாள் மாதிரி, காட்டுப்பூனைகள் ஆராய்ச்சியில கொண்டு போய் நானே போட்டுட்டேன்.''

அப்போது, லஞ்சுக்கான மணியடிக்கப்பட்டது. நாங்களனைவரும் மதிய உணவுக்காக போனோம். பொய்ரெட் என்னைத் தனியாய் கொண்டு போனார்.

''நண்பா?''

''அவர் சரியாதான் பேசறார்'' – நான் சொன்னேன். ''யெஸ், இதுல நான் நிச்சயமாயிருக்கேன்.''

''அவரைத் தொந்தரவுக்குள்ளாக்கின மாதிரி – ஒண்ணுமேவா தென்படலே? அவரைத் தடுமாற வெச்சா மாதிரி?''

''மரண உயில் மூலமா போன வருஷம் தான் அவருக்கு ஏகமா பணம் வந்திருக்கு'' என்றேன் நான். ''இதுல ஏதும் இருக்கிற மாதிரி எனக்குத் தெரியலே. ஏன், வரக்கூடாதா? அவருக்கு அப்படி யாரும் எழுதி வெச்சிருக்கக் கூடாதா என்ன? அந்த ஆள் எவ்வித தடுமாற்றமு மில்லாம சுத்தமா இருக்கான்னு நான் சத்தியம் பண்றேன்.''

''சந்தேகத்துக்கிடமின்றி, சந்தேகத்துக்கிடமின்றி'' என்றார் பொய்ரெட் மிருதுவாய். ''இதுல உங்களை நீங்களே குழப்பிக்க வேண்டாம்.''

ஏதோ ஆசுவாசமடையாத குழந்தைக்கு சொல்வது போல சொன்னார் அவர்.

நாங்களனைவரும் டைனிங் அறைக்குள் குழுமியிருந்தோம். இந்த டேபிளில் நான் உட்கார்ந்து இருபத்து நாலு மணி நேரம் கடந்துள்ளது என்பதை நினைக்க எனக்கே ஆச்சரியமாயிருந்தது.

எல்லாம் முடிந்தபிறகு என்னை தனியே அழைத்துப் போன மிஸஸ் ஆக்ராய்டு என்னுடன் இணைந்து ஒரு சோஃபாவில் உட்கார்ந்துக்

கொண்டார்.

''என்னைக் காயப்படுத்தி விட்டதா என்னால உணராம இருக்க முடியலே'' என முணுமுணுத்தார், சிந்தும் கண்ணீரைத் துடைக்க துளியும் பொருத்தமற்ற ஒன்று என்று எண்ண வைக்கும் ஒரு கைக்குட்டையை உபயோகித்தபடி. ''என் மேல் ரோஜர் ஆக்ராய்டுக்கு இருந்திருக்கும் அவநம்பிக்கையை நினைக்கும்போது – அப்படி துடிக்கிறேன் நான். அந்த இருபதாயிரம் பவுண்டுகள் முழுக்க எனக்குத்தான் விடப்பட்டிருக்கணும் - ஃப்ளோராவுக்கல்ல. குழந்தையின் நல்வாழ்வு கருதி தாயார் தான் பணத்தை சரியா பாதுகாப்பானு அவருக்குத் தெரிஞ்சிருக்கணும். இதை நான் நம்பிக்கையற்ற தன்மைனு தான் சொல்வேன்.''

''அதை மறந்துடுங்க, மிஸஸ் ஆக்ராய்டு'' என்றேன் நான். ''ஃப்ளோரா ஆக்ராய்டின் நேரடி ரத்த சொந்தம். சகோதரன் மகள். ஒருவேளை அவரோட மச்சினியா இல்லாம சகோதரியாவே நீங்க இருந்திருந்தா, நடந்த எல்லாமும் வேற மாதிரியிருந்திருக்கும்.''

''சிசில் விதவையா நிக்கும் என்னோட உணர்வுகளும் மதிக்கப் படணும்'' என்றாள் அப்பெண்மணி, அவளுடைய கண்ணிமைகளைக் கையிலிருந்த கைக்குட்டையால் மிருதுவாய் துடைத்தபடி. ''ஆனா இதே ரோஜர் எப்பவுமே புரிஞ்சுக்க முடியாம நடந்துக்குவார் – பண விஷயத்துல–அதுக்காக கஞ்சன்னு சொல்ல வரலே. இதனால எனக்கும் ஃப்ளோராவுக்கும் கஷ்டமான நிலைமை தான் இங்கிருந்தது. அந்தக் கொழந்தைக்குக் கை செலவுக்குனு கூட மனுஷன் பணந்தரமாட்டார். அவ செலவுக்கான பில்'லுக்கெல்லாம் காசு தந்துடுவார் இல்லேங்கலே – ஆனா எப்படி... இதென்ன செலவு, அதென்ன இத்தனை செலவழிச்சிருக்கேனு ஆயிரத்தெட்டு கேள்விங்களைக் கேட்டு. ஓ... நான் என்ன சொல்ல வந்தேங்கிறதையே மறந்துத் தொலைச்சுட்டேன். என்ன சொல்ல வந்தேன், ஆங்? ஓ, யெஸ்! எங்களுதுனு ஒரு நயா பைசாவை நாங்க காட்ட முடியாது. யாசகம் தான். ஃப்ளோரா இதை வன்மையாக் கண்டிச்சா–யெஸ், சொல்வேன், அவ குரோதங்கொண்டு சபிச்சா – ஸ்ட்ராங்கா. இத்தனைக்கும் அவளுக்கு அவ அங்கிள் மேல அத்தனை ப்ரியமுண்டு. இருந்தாலும் செஞ்சா! பழைய துண்டுகள்ல ஓட்டை விழுந்துடுச்சுனு நான் சுட்டிக்காட்டி

னாலும் கூட அவர் புதுசா ஒரு டவல் வாங்கிக்க மாட்டார். இதுக்கெல்லாம் மேல... என்று இப்போது தொடர்ந்த மிஸஸின் குரலில் திடுக்கிடும் வன்ம எழுச்சி கண்ணகல இருந்தது: அத்தனை பெரிய ஆயிரம் பவுண்டு தொகையைச் சுளையா அள்ளிக் கொடுத்திருக்கார் நினைச்சுப் பாருங்க டாக்டர், ஆயிரம் பவுண்டு! அப்பப்பா..! அந்தப் பொண்ணுக்கு!''

''எந்தப் பொண்ணுக்கு?''

''அந்த ரஸ்ஸெல் பொண்ணுக்குத் தான். என்னவோ ரகசியம் இருந்தது அந்தப் பொண்ணோட நடவடிக்கைகள்ல – நான் சொல்லிக்கிட்டே தானிருந்தேன். ஆனா அவளுக்கு எதிரா நான் ஒரு வார்த்தை சொல்லிட்டாலும் அதை மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு எடுத்துக்கவே மாட்டார். அவ ஒரு மாபெரும் சக்திமிகும் பெண்மணிம்பார். அவளோட நேர்மை என்ன... ஒழுக்கமான இயக்கமென்ன... தர்மநெறி தான் என்ன... இப்படியெல்லாம் பேசுவார். அவளுக்கு! எனக்கென்னவோ, அவகிட்டே, கழுவுற மீன்ல நழுவற மீன் போல ஏதோவொண்ணு மறைஞ்சிருக்குனு தான் தோணுது – யெஸ். எப்படியெல்லாம் மடக்கிப் போட்டு ரோஜரை கலியாணம் கட்டிட முடியுமோ அத்தனைக்கும் அவ அஸ்திவாரம் போட்டுக்கிட்டு தானிருந்தா. வெச்சேன் புள்ளி – முற்றுப்புள்ளி. அவளை வெக்கிற இடத்துல வெச்சேன் நான். என்னைக் கண்டால வெறுப்பா, தெரியுமா? இயற்கை தானே. அவளை நான் கவனிச்சுக்கிட்டேன், ஆங்!''

விடாது பேசும் மிஸஸ் ஆக்ராய்டின் அதிரடியிலிருந்து விலகி விட ஏதாவது வாய்ப்பு கிட்டாதா என பரிதவிக்கலானேன். குட் பை சொல்ல வந்த மிஸ்டர் ஹேமந்த் எனக்குத் தேவையான விடுதலையை உண்டுபண்ணித் தந்தார். என் வாய்ப்பினைத் தன்னகப்படுத்திக் கொண்ட நான் எழுந்தே விட்டேன்.

''மரண விசாரணை பற்றி... என்ற நான், ''அது எங்கே நடந்தா நல்லதுனு நீங்க நினைக்கிறீங்க? இங்கேயா அல்லது கிராமத்து ஆண்கள் விடுதியிலா?'' என்று வக்கீலைக் கேட்டேன்.

இதைக் கேட்டதும், தொய்வாகி விட்ட முகத்தோடு என்னைப் பார்த்து மலங்க மலங்க முழித்தார் மிஸஸ் ஆக்ராய்டு.

''மரண விசாரணையா?'' – திகிலில் தத்தளிக்கும் ஏக்கத்தைப்

பிரதிபலித்தபடி கேட்டார். ''ஆனா இதுக்கு நிச்சயமா அப்படி யெல்லாம் சட்டரீதியான அசிங்கங்க வேண்டவே வேண்டாமே?''

மிஸ்டர் ஹேமந்த் இரு சின்ன வறட்சியான இருமல் குரைப்புகளுக்கு இடையே இவ்வாறு முணுமுணுத்தார்: ''தவிர்க்கயியலாதது. இந்த சூழ்நிலையில.''

''ஆனா, இதெல்லாம் இல்லாம, டாக்டர் ஷெப்பர்டால —''

''என் சக்திக்கும் எல்லைகளிருக்கு மேடம்'' – நான் வறட்சியாய் சொல்லி விட்டேன்.

''அவரோட மரணம் ஒருவேளை விபத்து மாதிரி நடந்திருந்தா —?''

''அவர் கொலை செய்யப்பட்டிருக்கார், மிஸஸ் ஆக்ராய்டு'' என்றேன் நான் முரட்டுத்தனமாய்.

அவர் ஒரு சிறு அலறலை வெளிப்படுத்தினார்.

''விபத்து கிபத்து எனும் கதறல்களெல்லாம் ஒரு நொடி கூட கோர்ட்டுல தாங்காது.''

கையாலாகாத்தனமாய் என்னைப் பார்த்தார் மிஸஸ் சிசில் ஆக்ராய்டு. 'சகிக்க முடியாதது...' என்பது போல பயந்துக் கொண் டிருக்கும் மிஸஸ் ஆக்ராய்டின் கொண்டாட்டத்துக்கெல்லாம் நேரம் ஒதுக்கித்தர எனக்கு அப்போது அவகாசமில்லை.

''அப்படி மரண விசாரணைனு ஒண்ணு நேர்ந்துட்டா, நா-ன்... நா-ன் வந்து கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியமிருக்காது, இல்லையா?'' – கேட்டார் அவர்.

''என்னவெல்லாம் அவசியமாயிருக்கும்னு எனக்குத் தெரியாது'' என்றேன் நான் சற்றே எரிச்சலாய். ''ஐ திங்க், உங்களோட பயச்சுமை யையெல்லாம் மிஸ்டர் ரேமண்ட் சுமந்துடுவார்னே எனக்குப் படுது. அவருக்கு நடந்துள்ள விபரீதம் சம்பந்தப்பட்ட அத்தனை சூழ்நிலை களும் தெரியும், அதனால, அடையாளம் காட்டவும் முறையான சாட்சியங்களைத் தரவும் அவரால முடியும்.''

இதனை ஏற்றுக் கொள்வதாய் சன்னமாய் முதுகு வளைத்து ஆமோதித்தார் வக்கீல். ''இதுல போய் பயந்துப் பதுங்க ஏதாவது இருப்பதா எனக்குத் தெரியலே, மிஸஸ் ஆக்ராய்டு'' என்றார் அவர். ''உங்க சங்கோஜ நிலைமையையெல்லாம், கூடுமான வரைக்கும் உங்களை நெருங்காம நாங்க பார்த்துக்கறோம். ஆங்... பணத்தைப்

பொறுத்த வரைக்கும், எல்லாமும் இப்பவே உங்களுக்கு வேணுமா? அதாவது...'' – புரியாமல் அவர் வக்கீலைக் கேள்விக்குறியாய் பார்த்த போது விளக்கினார் – ரெடி மனி – அதாவது ரொக்கத் தொகை. அப்படியில்லைனா உங்களுக்கு எத்தனை வேணுமோ அத்தனை பணம் கிடைக்கும்படி என்னால ஏற்பாடு பண்ணித்தர முடியும்.''

''அது இப்ப வேணாம்'' என்றது ரேமண்ட் – சற்று தொலைவில் நின்றுக்கொண்டிருந்தார் அவர். ''நேத்து மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு நூறு பவுண்டுக்கு செக் எழுதி பணமாக்கியிருந்தார்.''

''நூறு பவுண்டுகள்?''

''ஆமாம். இன்றைய கூலி மற்றும் பிற செலவுகளுக்காக. இந்தக் கணத்தில் கூட அது அப்படியே தானிருக்கு.''

''அந்தப் பணம் இப்ப எங்கேயிருக்கு? அவர் டேபிள்ல?''

''நோ. அவரோட பணத்தை அவர் எப்பவுமே அவருடைய படுக்கை யறையில தான் வெப்பார். இன்னும் குறிப்பா சொல்லணும்னா – ஒரு பழைய சின்னப் பெட்டியில. கோமாளித்தனம், ஆங்?''

''எனக்கென்னப் படுதுன்னா...'' என்றார் வக்கீல்: ''நான் இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னாடி அந்தப் பணம் அங்கேயே தானிருக்குனு நான் ஊர்ஜிதப்படுத்திக்கணும்.''

''நிச்சயமா'' – ஒப்புக் கொண்டார் செகரட்டரி. ''நான் உங்களை அங்கே கூட்டிட்டுப் போறேன்...! ஓஹ்...! மறந்துட்டேனே. கதவுப் பூட்டியிருக்கு.

பார்க்கரைக் கேட்டபோது, இன்ஸ்பெக்டர் ரக்லான், வீட்டு வேலைக்காரர்கள் அறையில் அவர்களைச் சில உதிரிக் கேள்விகள் கேட்டுக் கொண்டிருப்பதாய் தெரிய வந்தது. ஓரிரு நிமிடங்களுக்குள், கதவின் சாவியோடு, இன்ஸ்பெக்டர் ஹாலிலிருந்த இந்தக் கூட்டத் தோடு வந்து இணைந்திருந்தார். கதவுத் தாழ்ப்பாளை அவர் திறக்க, தாழ்வாரத்தைத் தாண்டியிருந்த அந்த சிறு படிக்கட்டுகளில் நாங்கள் ஏறினோம். மேற்படிக்கட்டின் முடிவில், ஆக்ராய்டின் படுக்கையறைக் கான கதவு திறந்தபடி காத்திருந்தது. உள்ளே, இருட்டாயிருந்தது. திரைச்சீலைகள் இழுத்து மூடப்பட்டிருந்தன. நேற்று பார்த்தது போலவே மெத்தை எடுத்துக் கீழே போடப்பட்டிருந்தது. இன்ஸ்பெக்டர் கதிரவனின் ஒளி உள்ளே நுழையுமாறு சீலைகளை

அகட்டி விட அங்கிருந்த அருமையான ரோஸ்-வுட் பீரோவின் மேற்பகுதி நோக்கிப் போனார் ரேமண்ட். ''இப்படித்தான்... பூட்டாத ஒரு டிராயர்ல அவரோட பணத்தை வெப்பார்... வேடிக்கை!'' – குறிப்பிட்டார் இன்ஸ்பெக்டர்.

இதை செகரட்டரி ஒதுக்கித் தள்ளினார். ''அனைத்து வேலைக்காரர் களின் உண்மை ஊழியத்தின் மீது மிஸ்டர் ஆக்ராய்டு முழு நம்பிக்கை வெச்சிருந்தார்.''

''ஓ! ஓ கே, ஓ கே'' என அவசரமாய் தன் கருத்தைத் திருத்திக் கொண்டார் இன்ஸ்பெக்டர்.

ரேமண்ட் அந்த டிராயரைத் திறந்தார். அதன் கடைசியிலிருந்து ஒரு தோல் பையை எடுத்தார். அதைத் திறப்பதன் மூலம் அதனுள்ளிருந்த சிறு பணம் வைக்கும் பர்ஸையும் எடுத்தார்.

''இதோ அந்த பணம்'' என்றார் அவர், குண்டாயிருந்த ஒரு சிறு பண முடிப்பு வெளியே எடுத்தபடி. ''நேத்து ராத்திரி டின்னருக்கு வர்ரதுக்கு முன்பு எனக்கு முன்னாடி தான் மிஸ்டர் ஆக்ராய்டு இதுக்குள்ளே பணத்தை வெச்சு ரெடி பண்ணினார், அதனால, இதுல நூறு பவுண்டு களை நீங்க தாராளமா பார்க்கலாம். மேலும், அதுக்குப் பிறகு இது தொடப்படவேயில்லை என்பதை நான் சொல்லத் தேவையில்லே.''

மிஸ்டர் ஹேமந்த் செகரட்டரியிடமிருந்து அந்த சிறு பண முடிப்பினைப் பெற்றுக் கொண்டு எண்ணினார். கூர்மையாய் நிமிர்ந்தார்.

''நூறு பவுண்டுன்னீங்க. ஆனா வெறும் அறுபது பவுண்டு தானிருக்கு.''

ரேமண்ட் அவரைப் பார்த்து முழித்தார். ''இம்பாஸிபிள்'', கதறியபடி துள்ளிக் குதித்து முன்னால் வந்தார் அவர். சத்தமாய் எண்ணினார் அவர்.

மிஸ்டர் ஹேமந்த், சரியே. கூட்டுத்தொகை அறுபது பவுண்டுகளைத் தான் தந்தது.

''ஆனா – என்னால புரிஞ்சுக்க முடியலே'' – பயம் கவ்வக் கத்தினார் செகரட்டரி.

பொய்ரெட் ஒரு கேள்வி கேட்டார்: ''நேத்து ராத்திரி டின்னருக்குக் கிளம்பிக்கிட்டிருந்த போது இதுல பணத்தை மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு வெச்சதை நீங்க பார்த்திருக்கீங்க... இதுலேந்து முன்கூட்டியே அவர்

வேற யாருக்கும் பணம் தரலேனு நீங்க நிச்சயமாயிருக்கீங்களா?''

''அப்படி எதுவும் அவர் தரலே - ஷூவர். 'இத்தனை குண்டா நூறு பவுண்டுகளைச் சுமந்துக்கிட்டு டின்னருக்கு வர எனக்குப் பிடிக்கலேனு' கூட அவர் சொன்னாரே.''

''அப்படினா இந்த சமாச்சாரம் ரொம்ப ஸிம்பிளானது. நேத்து சாயங்காலம் எதுக்காகவோ அவர் நாற்பது பவுண்டுகளைக் கொடுத்திருக்கணும்... இல்லேனா, அது, களவாடப்பட்டிருக்கணும்.''

''இது தான் முழுகதையின் சரியான சுருக்கம்'' என ஆமோதித்தார் இன்ஸ்பெக்டர். அவர் மிஸஸ் ஆக்ராய்டின் பக்கமாய் திரும்பினார். ''நேத்து சாயங்காலம் எந்த வேலைக்காரர் இந்தப் பக்கமா வந்திருக்கணும்?'

''படுக்கையை, வீட்டைக் கவனிக்கும் வேலைக்காரிதான் சுத்தம் பண்ணியிருக்கணும்னு நினைக்கிறேன்.''

''யார் அவ? அவளைப் பற்றி உங்களுக்கு என்ன அபிப்ராயம்?''

''அவ இங்கே கொஞ்ச நாளாத்தானிருக்கா'' என்றார் மிஸஸ் ஆக்ராய்டு. ''ஆனா அவ ஒரு நல்ல கிராமத்துப் பொண்ணு.''

''இந்த சமாச்சாரத்தை நாம உடனடியா சரியாக்கிடணும்னு நினைக்கிறேன்'' என்றார் இன்ஸ்பெக்டர். ''அந்தப் பணத்தை மிஸ்டர் ஆக்ராய்டுதான் முன்னமேயே யாருக்கோ எடுத்துத் தந்திருக்கார்னா, அது, கொலை பற்றிய மர்மம் சம்பந்தப்பட்டதா ஆகிடுது. உங்களைப் பொறுத்த வரைக்கும், மீதி வேலைக்காரங்கள்லாம் சரி தானா?''

''அப்படித்தான் நினைக்கிறேன்.''

''எதுவும் முன்னாடி காணாமப் போனதில்லையே?''

''நோ.''

''யாரும் வேலையை விட்டுப் போகலையே? இல்லே இது மாதிரி ஏதாவது... நீண்ட விடுப்பு, இப்படி?''

''எல்லா அறைகளையும் கவனித்துப் பராமரிக்க வேண்டிய வேலைக்காரி – *கிளம்பறா.*''

''எப்போ?''

''அவ நேத்து ராஜினாமா பண்ணியிருக்கானு நினைக்கிறேன்.''

''உங்ககிட்டே?''

''ஓ, நோ. வேலைக்காரங்க கிட்டே வெச்சுக்க எனக்கு எதுவும்

கிடையாது. வீட்டு சமாச்சாரங்களைக் கவனிச்சுப்பது, மிஸ் ரஸ்ஸெல்.''

இன்ஸ்பெக்டர், அவருக்குள்ளான சிந்தனையில் சில நிமிடங்கள் தொலைந்துப் போனார். பிறகு ஒப்புதலாய் தலையசைத்துக் கொண்ட அவர், ''நான் இப்ப முதல்ல அந்த மிஸ் ரஸ்ஸெல் கிட்டே பேசிடறேன்'' என்று குறிப்பிட்டார். ''இன்னொருத்தி – டேல் – அவளையும் பார்த்துடறேன்.''

பொய்ரெட்டும் நானும் அவருடன் கூட வேலைக்காரர்கள் அறை வரை போனோம். ரஸ்ஸெல், அவருக்கே உரித்தான சஞ்சலமற்ற திடத்தோடு எங்களை எதிர்கொண்டார்.

எலிஸி டேல், ஃபெர்ன்லி பார்க்கில் ஐந்து மாதங்களாய் இருக்கிறாள். நல்ல பெண். டியூட்டியில் சுறுசுறுப்பு. மரியாதை தெரிந்தவள். முன்பு வேலை பார்த்த இடங்களிலிருந்து இவள் குறித்த நல்ல கருத்தே உள்ளது. அவளுக்கு சம்பந்தமற்ற எதையும் திரும்பிக் கூட பார்க்கப் பிரியப்படாத குணம்.

''அறைகளையெல்லாம் கவனித்துப் பராமரிக்கும் அந்த வேலைக்காரி எப்படி?''

''அவளும் நல்ல சூப்பர் பொண்ணு தான். வெகு அமரிக்கை. கொடுத்த வேலையை செய்வதில் அற்புதமான வேலைக்காரி.''

''அப்ப எதுக்காக அவ மூட்டையைக் கட்டணும்?'' – கேட்டார் இன்ஸ்பெக்டர்.

ரஸ்ஸெல் வாயைத் திறந்தாள். ''அது பற்றியெல்லாம் நான் தெரிஞ்சுக்க வேண்டிய நிர்ப்பந்தம் கிடையாது. நேத்து மத்தியானம் மிஸ்டர் ஆக்ராய்டு அவளோட வேலைல குறை கண்டுபிடிச்சதா காதுல விழுந்தது. படிக்குமறையை அரேஞ்ஜ் பண்ணி வெப்பது அவளோட வேலை... அங்கே டேபிள்ல எதையோ அவ மாத்தி வெச்சுட்டா போல... இப்படித்தான் கேள்விப்பட்டேன். இதுக்கு அவர் அநியாயத்துக்கு எரிஞ்சு விழுந்திருக்கார்; இவ நோட்டீஸ் குடுத்துட்டா. இது தான் எனக்குத் தெரிய வந்தது... ஆனா நீங்க அவளைப் பார்த்துடறீங்களா?''

இன்ஸ்பெக்டர் ஆமோதித்தார். லஞ்சின் போதே நான் அந்தப் பெண்ணைக் கவனித்திருந்தேன். நெட்டையான பெண்... ஏகமான

ப்ரவுன் நிற தலைமுடியைப் பின்னுக்குத் தள்ளி இறுக்கமாய் முடிந்திருந்தாள். தடுமாற்றமற்ற பூனைநிற விழிகள். வேலைக்காரர்களை அழைத்து அனுப்பப்பட்ட தகவலுக்கு பதிலாய், நெட்டைக் குத்தலாய் வந்து நின்றாள் அவள் – அதே நேர்பார்வை பார்க்கும் விழிகள், எங்கள் மீது நிலைகுத்தியிருந்தன.

''நீங்க தான் ஊர்மிளாவா? – கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''யெஸ், ஸார். ஊர்மிளா போர்ன்.''

''நீங்க கிளம்பறதாக் கேள்விப்பட்டேன்.''

''யெஸ், ஸார்.''

''ஏனப்படி?''

''நான் சில தாள்களை மிஸ்டர் ஆக்ராய்டின் டேபிள்ல மாற்றி வெச்சுட்டேன். அதுக்குப் போய் எரிமலை கோபங்கொண்டார் அவர். பை-பை சொல்லிட்டேன். எத்தனை சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரம் கிளம்புனுட்டார் அவர்.''

''மிஸ்டர் ஆக்ராய்டுடைய படுக்கையறைக்கு நேத்து ராத்திரியில நீங்க எப்பவாவது போயிருந்தீங்களா? சுத்தம் பண்ண, இல்லே வேற எதுக்காகவாவது?''

''நோ, ஸார். அது எலிஸியின் வேலை. வீட்டின் அந்தப் பகுதிக்கு நான் போகவே இல்லே, ஸார்.''

''ஒரு பெருந்தொகையான பணம் அவரோட ரூமிலிருந்து காணாமப் போயிருக்குனு சொல்லிக்க விரும்பறேன், மிஸ்.''

கடைசியில், இதற்கு, அவள் பொங்குவதை நான் கவனித்தேன். ஒரு கோப அலை அவளுடைய முகத்தைக் கடந்து போயிற்று. ''த பாருங்க... பணத்தைப் பற்றியெல்லாம் எனக்கு ஒரு மண்ணும் தெரியாது. அதை நான் எடுத்ததாலே தான் மிஸ்டர் ஆக்ராய்டு என்னைத் தூக்கிட்டார்னு நீங்க நினைச்சீங்கன்னா – யூ ஆர் ராங்.

''அப்படி உங்க மேல நான் குற்றம் சுமத்தவேயில்லேம்மா'' என்றார் இன்ஸ்பெக்டர். ''இப்படிப் பத்திக்கக் கூடாது.''

அந்தப் பெண் அவரைக் கடுமையாய் பார்த்தாள். ''வேணும்னா என்னோட உடைமைகளை நீங்கப் பரிசோதிச்சுக்கலாம். ஆனா ஒண்ணும் கிடைக்காது.''

இப்போது பொய்ரெட் சட்டென்று இடைபுகுந்தார். கேட்டார்:

''உங்களை மிஸ்டர் ஆக்ராய்டு டிஸ்மிஸ் பண்ணினது – அல்லது நீங்களாகவே வேலையை விட்டது – நேத்து மத்தியானம். சரியா?''

அவள் பதில் சொல்லவில்லை. ஒப்புதலாய் தலையை மட்டும் ஆட்டினாள்.

''எத்தனை நேரம் உரையாடல் போனது?''

''எந்த உரையாடல்?''

''யெஸ் அவரோட படிக்குமறையில் உங்களுக்கும் மிஸ்டர் ஆக்ராய்டுக்குமான உரையாடல்.''

''எ – எனக்குத் தெரியலே.''

''இருபது நிமிஷம்? முப்பது நிமிஷம்?''

''அதுபோலத்தான் என்னவோ.''

''இதை விட கூடுதலா கிடையாது?''

''நிச்சயமா அரை மணி நேரத்துக்கு மேல கிடையாது.''

''தேங்க் யூ, மேடம்.

விளங்காமல் நான் அவரைப் பார்த்தேன். டேபிளில் இருந்த சிலவற்றை சீராக ஒழுங்காக்கிக் கொண்டிருந்தார் அவர் - நடுக்கங்களற்ற ஸ்திரமான விரல்களோடு. அவரது கண்கள் டாலடித்துக் கொண்டிருந்தன.

''அவ்ளோதான்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

ஊர்மிளா கழன்றுக் கொண்டாள். இன்ஸ்பெக்டர் ரஸ்ஸெல் பக்கமாய் திரும்பிக் கொண்டார்.

''எத்தனை காலமா அவ இங்கேயிருக்கா? அவ சேரும்போது யார்கிட்டேயிருந்தாவது அவ அறிமுகக் கடிதம் கொண்டு வந்தாளா?''

முதல் கேள்விக்கு பதில் தருவதற்கு முன், மிஸ் ரஸ்ஸெல் அருகிலிருந்த ஒரு பீரோ நோக்கி நகர்ந்து, அதன் டிராயர்களில் ஒன்றினைத் திறந்து, சேர்த்து க்ளிப் போடப்பட்டிருந்த ஒரு கடிதக்கொத்தினை வெளியிலெடுத்தார். அதிலிருந்து ஒன்றினைத் தெரிந்தெடுத்து அதனை இன்ஸ்பெக்டரிடம் அளித்தாள்.

''ஹ்ம்'' என்றார் இன்ஸ்பெக்டர். ''நல்லபடியாதான் எழுதியிருக்கு. மிஸஸ் ரிச்சர்ட் ஃபொல்லாய்ட் என்பவர் தந்திருக்காங்க. மார்பி கிராமப்பகுதி. யாரிந்தம்மா?''

''நல்லபடியான கிராமத்து மக்கள்'' என்றாள் ரஸ்ஸெல்.

''வெல்... என்றபடி அதனைத் திருப்பிக் கொடுத்து விட்ட இன்ஸ்பெக்டர், ''அந்த இன்னொரு பொண்ணைப் பாப்பம். எலிஸி டேல், ஆங்?''

எலிஸி டேல் நல்ல பெரிய சிகப்புப் பெண். வசீகரமான, ஆனால் சற்றே முட்டாள்தனம் தூக்கலாயிருக்கும் முகம். எங்கள் கேள்விகளுக்கு அவள் தேவையான அளவு உடனடி பதில்களைத் தந்தாள். பணம் காணாமல் போயிருப்பதற்கு அதிகக் கவலையையும் மனவிசாரத்தை யும் காட்டினாள்.

அவள் கிளம்பிய பிறகு, ''இவகிட்டே ஏதும் தப்பு தண்டாயிருக்கிற மாதிரி தெரியலே'' என முடித்தார் இன்ஸ்பெக்டர். ''பார்க்கர் எப்படி?''

மிஸ் ரஸ்ஸெல் அவள் உதடுகளிரண்டையும் பிரிக்க முடியாத அளவுக்கு சேர்த்துக் கொண்டாள். பதிலேதும் தரவில்லை.

சிந்தனையோடு தொடர்ந்து பேசியது இன்ஸ்பெக்டர் தான்: ''அந்த ஆள் கிட்டே ஏதோ தப்பிருக்கிற மாதிரியே எனக்குள்ளே ஓர் உணர்வு. அவனுக்கு எப்ப அவகாசம் இருந்திருக்கும் என்பதைக் கண்டுபிடிக் கிறதுல தான் எனக்கு பிரச்சினையே. டின்னர் முடிஞ்சவுடனே அவனுக்கு அவன் வேலையே தலைக்கு மேல இருந்திருக்கும். சாயங்காலம் முழுக்க அவன் இங்கே வரலே என்பதற்கு நல்ல நிரூபணமும் இருக்கு. எனக்குத் தெரியும் அவன் மேல கண்ணை வெச்சுக்கிட்டேயிருந்த எனக்கு இது நல்லாவே தெரியும். வெல், ரொம்ப நன்றி மிஸ் ரஸ்ஸெல். இப்போதைக்கு பிரச்சினையை அப்படியே தொங்க விட்டுடுவோம். மிஸ்டர் ஆக்ராய்டே காணாம போன தொகையை யாருக்காவது கொடுத்திருக்கணும் என்பது தான் அதிக சாத்தியமா இருக்கு.''

அந்த வேலைக்காரி எங்கள் அனைவருக்குமாய் சேர்ந்து ஒரு வறண்ட குட் ஆஃப்ட்டர் நூனை வைக்க, நாங்கள் ஒட்டுமொத்தமாய் விடை பெற்றுக் கொண்டோம்.

பொய்ரெட்டுடன் நான் வீட்டை விட்டு வெளியேறியிருந்தேன். நிலவிய அமைதியை ''எனக்கு விந்தையாயிருக்கு...'' என்று உடைத்த நான், ''அந்த பேப்பர்களை நினைச்ச உடனேயே ஆக்ராய்டை அப்படியொரு ஆத்திரமான முடிவெடுக்க வைக்குமளவுக்கு, அந்தப் பொண்ணு கலைத்து விட்ட பேப்பர்கள் தான் என்னவாயிருந்

திருக்கும்? வியப்பாயிருக்கு!'' என்றேன். ''இதுல இந்த மர்மத்தை உடைக்கும் ஏதாவது துப்பு இருக்குமானு வியக்கிறேன்.''

''டேபிள்ல இருந்த ஆவணங்கள்ல முக்கியமான எதுவும் இருக்கலேனு நம்மகிட்டே சொல்லியிருக்கார், செகரட்டரி'' என்றார் பொய்ரெட் நிதானமாய்.

''யெஸ். இருந்தாலும் --- '' தயங்கினேன் நான்.

''அப்படினா ஓர் அற்பமான விஷயத்துக்குப் போயா இந்த ஆக்ராய்டு அந்த அளவுக்கு எரிமலையா வெடிச்சிருக்கணும்னு உங்களுக்கு விந்தையாயிருக்கு... நெருடலாயிருக்கு... இல்லையா?''

''யெஸ். அப்படித்தான் இந்த சமாச்சாரம் போகுது.''

''ஆனா அது அப்படியோர் அற்பமான சமாச்சாரந்தானா?''

இக்கேள்வியை அனுமதித்த நான், ''நமக்கு அதுல என்னயிருந்ததுனு தெரியாது. ஆனா ரேமண்ட் தான் அறுதியிட்டு சொன்னாரே ---''

''இதிலிருந்து இந்த ரேமண்ட்டை ஒரு நிமிஷம் தூக்கி வெளியில போடுங்க. நீங்க அந்தப் பொண்ணைப் பற்றி என்ன நினைச்சீங்க?''

''எந்தப் பொண்ணு? ரூம் எல்லாத்தையும் கவனிக்க வேண்டிய அந்தப் பொண்ணு?''

''யெஸ். அறைகளை நிர்வகிக்கும் அதே பொண்ணு தான். ஊர்மிளா போர்ன்.''

சற்று தயக்கமாய் தான் சொன்னேன்: ''அவளைப் *பார்த்தா* நல்ல பொண்ணு மாதிரி தான் தெரிஞ்சா.''

பொய்ரெட் நான் சொன்னதையே திருப்பிச் சொன்னார். நான் வாக்கியத்தின் இறுதியில் அழுத்தம் தந்திருக்க, அவரோ அதன் நடுவில் அழுத்தம் தந்து முக்கியப்படுத்தினார்: ''அவளைப் பார்த்தா நல்ல பொண்ணு மாதிரி தான் தெரிஞ்சா.''

பிறகு ஒரு நிமிடம் போல மௌனமாகி விட்டு அவரது பாக்கெட்டிலிருந்து எதையோ எடுத்து என் கையில வைத்தார்.

''பாருங்க ஃபிரண்ட்... நான் ஒரு விஷயத்தை விளக்கப் போறேன். இதைப் பாருங்க.''

அன்றயை தினம் காலையில் இன்ஸ்பெக்டரால் சேகரிக்கப்பட்டு அவரால் பொய்ரெட்டிடம் தரப்பட்டிருந்த பட்டியல் இது. சுட்டிக் காட்டிய விரலைப் பின்தொடர்ந்து பார்த்தபோது, ஊர்மிளா போர்ன்

எனும் பெயருக்கு எதிரே பென்சிலால் ஒரு சிறு தப்புக்குறி போடப்பட்டிருந்ததைக் கவனித்தேன்.

''அப்போ நீங்க இந்தக் குறியைக் கவனிச்சிருக்க வாய்ப்பில்லே, டாக்டர். ஆனா, இந்தப் பட்டியல்ல, சம்பவம் நடந்த சமயத்துல எங்கேயிருந்தாங்க என்று எவ்வகையிலும் நிரூபிக்க முடியாத ஒரு பெயரிருக்கு. அது – ஊர்மிளா போர்ன்.''

''அப்படினா - என்ன நினைக்கிறீங்க? நீங்க... நீங்க – இவ தான் -

''ஓ, டாக்டர் ஷெப்பர்ட்... நான் எதை வேணும்னாலும் நினைக்கலாம். அதுக்கு எனக்கு உரிமையிருக்கு – அனுபவமுமிருக்கு. ஊர்மிளா போர்ன், மிஸ்டர் ஆக்ராய்டைக் கொன்றிருக்கலாம் - ஆனா அப்படி அவ பண்ணியிருப்பதற்கான இலக்காக எனக்கு எதுவுமே தெரியலையே'' என்ற பொய்ரெட் கேட்டார்: ''உங்களுக்கு?''

என்னைத் துளைத்தெடுக்கும்படி கடுமையாய் – நான் லஜ்ஜையாகிக் கண்களைத் தாழ்த்திக் கொள்ளுமளவுக்குக் கடுமையாய் – பார்த்தார்.

''உங்களுக்குத் தெரியுதா?'' – அதே கடுமையோடு திருப்பிக் கேட்டார்.

''எந்த வகையான இலக்கும் தென்படலே'' என்றேன் உறுதியாய்.

அவரது முறைப்பு நெகிழ்ந்தது. முகஞ்சுளித்துக் கொண்ட அவர், அவருக்குள்ளாகவே முணுமுணுத்தபடியிருந்தார்.

''ப்ளாக்-மெயில் செஞ்சவன் ஓர் ஆணாயிருப்பதால, இவ அந்த ப்ளாக்-மெயில் செஞ்சவளா இருக்க முடியாது அப்படினு ஆகுது. அப்படினா —''

நான் இறுமினேன் – அவர் பேசுவதை நிறுத்த. பிறகு ''ஆனா, அந்த விஷயத்துல —'' என்று தயக்கமும் சந்தேகமும் ஒருசேர ஆரம்பித்தேன்.

என் மேலே விழுந்து விடுபவரைப் போல பாய்ந்துத் திரும்பினார் அவர். ''என்ன? நீங்க இப்ப என்ன சொல்லப் போறீங்க?''

''பெ... பெரிசா ஒண்ணுமில்லே. ஒரு... ஒரு விஷயம்தான்... மிஸஸ் ஃபெர்ரர்ஸ் அவங்களோட கடிதத்துல ஓர் ஆள் அப்படினு தான் குறிப்பிட்டிருந்தாங்க. அதாவது நபர்னு. சொல்லப்போனா அது ஓர் ஆண்னு அவங்க குறிப்பிட்டு சொல்லலே. ஆனா நாங்க தான், நானும் மிஸ்டர் ஆக்ராய்டும், அப்படி எடுத்துக்கிட்டோம் – அது ஓர் ஆண்னு.''

மேற்கொண்டு நான் சொன்னதை பொய்ரெட் கவனித்தாற் போல்

தோன்றவில்லை. ஆனால் அவருக்குள்ளாக முணுமுணுக்க ஆரம்பித்து விட்டார்: ''ஓ, ஆமா... இதுவும் சாத்தியம் தானா அப்ப? யெஸ்... நிச்சயமா இதுவும் சாத்தியம் தான். அப்படினா, ஆஹ்! – நான் என்னோட ஊகங்கள் அத்தனையையும் மாற்றியாகணும் – மாற்றிப் போட்டு அடுக்கணும். புதுசா வரிசைப்படுத்தணும். முழுக்கவும் புதுசா–ஆஹ்! அணுக வேண்டிய முறை, வரிசை, அதனதன் இடத்துல பொருத்த வேண்டிய அவசரம் --- ஓ, இதெல்லாம் முன்னெப்போதை யும் விட இப்ப தான் எனக்கு அதிகமா தேவைப்படுது. எல்லாமும் பொருந்தணும் ஏன்னா, எல்லாத்துக்கும் ஓரிடமிருக்கு – இப்படி ஆகலேனா, நான் தப்பான பாதையில போய்க்கிட்டிருக்கேன்னு ஆகிடும்...

இந்த இடத்தில் அவருக்குள் முணுமுணுப்பதை விட்டுவிட்ட அவர் மீண்டும் என் மேல் விழுந்து விடுபவரைப் போல பாய்ந்துத் திரும்பினார். ''மார்பி எங்கேயிருக்கு?''

''மார்பினா?''

''மார்பி கிராமம்?''

''ஓ... நம்ம இன்ஸ்பெக்டர் இருக்கும் க்ரேன்செஸ்டருக்கு அந்தப் பக்கத்துல.''

''எத்தனை தூரந்தள்ளி?''

''பதினாலு மைல்கள் தள்ளியிருக்கலாம்.''

''உங்களால அது வரைக்கும் போயிட்டு வர முடியுமா? நாளைக்கே.''

''நாளைக்கேவா? கொஞ்சம் இருங்க... நாளைக்கு – அதாவது ஞாயிற்றுக்கிழமை. யெஸ்... என்னால ஏற்பாடு பண்ண முடியும். நான் அங்கே போய் என்ன பண்ணணும்னு எதிர்பார்க்கிறீங்க?''

''அந்த மிஸஸ் ரிச்சர்ட் — யாரது?''

''ஃபொல்லாய்ட்.

''ஆங், ஆங். அந்த மிஸஸ் ரிச்சர்ட் ஃபொல்லாய்டைப் போய் பார்க்கிறீங்க. எவ்ளோ முடியுமோ அந்த அளவுக்கு, இந்த ஊர்மிளா போர்ன் பற்றி விஷயத்தைக் கிரகியுங்க.''

''ரொம்ப நல்லது. ஆனா இதெல்லாம் தேவையில்லையோனு தோணுது எனக்கு.''

''வேலைக்கு சுணங்கும் தருணம் கிடையாது இது. ஓர் ஆணுடைய

உயிர், இதுல ஊசலாடிக்கிட்டிருக்கு.''

ஒரு பெருமூச்சுடன், ''புவர் ராஃப்'' என்றேன் நான். ''நீங்களும் அவர் குற்றமற்றவர்னு தானே நினைக்கிறீங்க?''

என்னை மிகவும் ஆழ்ந்த சிந்தனையுடன் இப்போது பார்த்தார் பொய்ரெட்.

''உண்மை என்னனு தெரிஞ்சுக்க விரும்பறீங்களா?''

''அஃப்கொர்ஸ்'' – விறுவிறுப்பானேன் நான்.

''இதோ, பிடியுங்க. என்னருமை ஃபிரண்ட்... எல்லாமும் அவர்தான் குற்றமுள்ளவர் என்றே கை நீட்டிக் காட்டுகின்றன.''

''என்ன!'' – அலறி விட்டேன் நான்.

பொய்ரெட் ஆமோதிப்பாய் தலையசைத்தார். ''யெஸ். அந்த முட்டாள் இன்ஸ்பெக்டர் – அவர் நிஜமா முட்டாளே தான் – இருந்தாலும் அவருடைய சந்தேகங்களும் இப்படியே தான் உள்ளன. நான் உண்மையைத் தேடிக்கிட்டு உழைக்கிறேன் – ஒவ்வொரு தடவையும் தலைகாட்டும் உண்மை ராஃப் நோக்கியே தீர்ப்பெழுதுது. இலக்கு, வாய்ப்பு, பண்ணப்பட்ட முறை – எல்லாமும். ஆனா, நான், எத்தனைப் பெரிய பாறாங்கல்லாயிருந்தாலும் அதைப் புரட்டியெடுத்துப் பார்க்காம தீர்வை முடிவு செய்ய மாட்டேன். நான் மேடம் ஃப்ளோராவுக்கு சத்யம் பண்ணித் தந்திருக்கேன். அவ என்மேல அவ்ளோ நம்பிக்கையாயிருக்கா. அவ்ளோ நம்பிக்கை.''

அத்தியாயம் 11

பொய்ரெட் வந்து சென்றார்

மறுநாள் மதியம் நான் மார்பி வீட்டின் அழைப்பு மணியை அடித்தபோது சற்று படபடப்பாயிருந்தேன். அப்படி எதைக் கண்டு பிடித்து வர பொய்ரெட் என்னை அனுப்பியிருப்பார் என்று நான் ரொம்பவும் வியந்துக் கொண்டிருந்தேன். அவர் என்னை நம்பி இந்தப் பணியை ஒப்படைத்திருக்கின்றார். ஏன்? மிஸ்டர் ப்ளண்ட்டைக் கேள்விகள் கேட்ட சமாச்சாரம் போலவே இதிலும் அவர் இருட்டிலேயே இருந்துவிடப் பிரியப்படுகின்றாரா? ப்ளண்ட் விஷயத்தில் மாபுத்திசாலித்தனமாய் தோன்றிய பொய்ரெட்டின் பதுங்கல் இதில் அர்த்தமற்ற ஒன்றாய் இருந்தது.

என்னுடைய சிந்தனைகள் அழகிய வேலைக்காரி ஒருத்தியின் நுழைவால் தடைப்பட்டன.

யெஸ் – மிஸஸ் ரிச்சர்ட் வீட்டிலிருக்கிறார். நான் ஒரு விசாலமான வரவேற்பறையில் அனுமதிக்கப்பட்டபோது, வீட்டு முதலாளியம்மா வரும்வரை ஆர்வமாய் அந்த அறையை நோட்டமிடும்படி ஆகியது. பெரிய, ஆனால் அதிகம் காலியாயிருந்த அறை. சில அழகிய பீங்கான் பொருட்கள், சில அழகான கலைப்பொருட்கள், கசங்கிய இருக்கை போர்வைகள் மற்றும் திரைச்சீலைகள். எல்லா வகையிலும் ஒரு பெண்ணுக்குகந்ததாய் மட்டுமே தோன்றும் அறை. சுவரிலிருந்த பெரிய படம்போட்ட ஓவியமொன்றை நான் கண்சாணித்துக் கொண்டிருந்த போது மிஸஸ் ரிச்சர்ட் அறைக்குள் வந்து சேர்ந்தார்.

அவர் ஓர் உயரமான பெண்மணி – அலங்கரிக்கப்படாத ப்ரவுன் நிற

கூந்தலோடு. எதிராளியை ஜெயித்து விடும் மந்திரப் புன்னகை.

தயக்கமாய், ''டாக்டர் ஷெப்பர்ட்?'' என்றாள் அவள்.

''அது தான் என் பேர்'' என்று மறுபதிலளித்தேன் நான். ''இப்படி அறிமுகமில்லாம நான் வந்து நின்றிருப்பதற்கு முதல்ல மன்னிப்புக் கேட்டுக்கறேன். எக்ஸ்கியூஸ் மீ. ஆனா எனக்கு உங்களால நியமிக்கப்பட்டிருந்த ஒரு வேலைக்காரியைப் பற்றிய தகவல்கள் அவசரமா தேவைப்படுது. ஊர்மிளா போர்ன்.''

இப்படியொரு பெயரை நான் உச்சரித்த கணமே அவருடைய முகத்திலிருந்த ப்ராண்ட் சிரிப்பு வற்றிப் போனது. என்னை உபசரிப்பதில் அவர் காட்டிய அந்நியோன்யம் முழுக்கவும் விலகிப் போனது. அசௌகரியமானார். சாதாரணமாய் இருக்க முடியாமல் ஆனார்.

தயக்கத்தோடு ''ஊர்மிளா போர்ன்?'' என்றார்.

''யெஸ்'' – நான் சொன்னேன். ''ஒருவேளை உங்களுக்கு அந்தப் பேர் நினைவில்லையோ?''

''ஓ, யெஸ். ஆமாமாம். எ-ன-க்குத் துல்லியமா நினைவிருக்கு.''

''ஒரு வருஷத்துக்கு முன்னாடி அவர் உங்களை விட்டுட்டுப் போனதா கேள்விப்பட்டேன்.''

''ஆமாம். ஆமாம் அவ போனா. அது ரொம்பச் சரி.''

''அவ உங்ககூட இருந்த வரைக்கும் உங்களுக்கு திருப்திகரமா இருந்தாளா? ஆங், எத்தனை காலம் அவ உங்ககிட்டே இருந்தா?''

''ஓ! ஓரிரு வருடங்கள் – மிகச்சரியா எத்தனை நாள்னு என்னால நினைவுபடுத்த முடியலே. அவ – அ-வ ரொம்ப திறமையானவ. நிச்சயமா உங்களுக்கும் அவ வேலை திருப்திகரமாத் தானிருக்கும், பாருங்க. அவ ஃபெர்ன்லியை விட்டுட்டுக் கிளம்பறது எனக்குத் தெரியாது. இது எனக்குத் துளிகூட தெரிய வரலே.''

''அவளைப் பற்றி நீங்க எனக்கு ஏதாவது சொல்ல முடியுமா?''–நான் கேட்டேன்.

''அவளைப் பற்றி ஏதாவது?''

''ஆமாம். அவ எங்கேயிருந்து வரா? அவளைப் பெத்தவங்க? இப்படியெல்லாம்...''

இதுவரை இல்லாத அளவுக்கு மிஸஸ் ரிச்சர்ட் ஃபொல்லாய்ட்டின்

முகம் உறைந்துப் போயனது. ''எனக்குத் தெரியவே தெரியாது.''

''உங்ககிட்டே வர்றதுக்கு முன்னாடி அவ வேலை செஞ்சது யார்கிட்டே?''

''ஓ, அது என் நினைவில இல்லையே... ஸாரி.''

அவருடைய நரம்பதிர்வுக்கு அடியில் இப்போது ஒரு கோப மின்சாரம் பாயத்துவங்கியிருந்தது. அவர், அவருடைய தலையை, ஒரு குலுக்கிக்குலுக்கித் திருப்பிக் கொண்டார் – அது, எனக்கு ஏனோ பிரபலமாயிருந்தது. ''இந்தக் கேள்வியையெல்லாம் கேட்க வேண்டிய அளவுக்கு இப்ப ஏதாவது அவசியம் இருக்கா?''

''நாட் அட் ஆல்'' என்றேன் நான் – வெளிக்காட்டிய ஆச்சரியத்தில் கொஞ்சம் மன்னிப்பையும் கலந்து. ''இதுக்கெல்லாம் பதில் தர நீங்க யோசிப்பீங்கனு தெரியாம கேட்டுட்டேன். ஐ'ம் ஸாரி.''

அவருக்குள் தற்காலிகமாய் வந்திருந்த கோபம் விலகி விட அவர் மறுபடியும் குழப்ப நிலைக்கே போனார். ''ஓ! கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல நான் சுணங்கவேயில்லே. சத்யமா சொல்றேன், நான் யோசிக்கலே. எதுக்காக நான் தயங்கணும்? இது – இ-து கொஞ்சம் தேவையற்றதா பட்டுது, அவ்ளோ தான். கொஞ்சமா... தேவை யற்றதா...!''

மருத்துவராய் இருப்பதன் ஓர் அனுகூலம் என்னவென்றால் எதிராளி நம்மிடம் பொய் சொல்வதை உடனே கண்டுபிடித்து விடலாம். அவருடைய குணாதிசயத்திலிருந்து மிஸஸ் ரிச்சர்ட் எனக்கு பதில் தருவதில் தயங்குவது நன்றாகவே புலப்பட்டது – ஆழமாய் தயங்குவது... நடுக்கத்தோடு தயங்குவது. அவர் அடிமுதல் நுனிவரை அசௌகரியமாகி, தலைகுப்புற மாறியிருந்தார். பின்னணியில் ஏதோவொரு மர்மமிருப்பது வெளிப்படை. எவ்வகையிலும் மோசம் செய்யப்படுவதை அனுபவித்திராத ஒரு பெண்மணியாய் அவரை கணித்தேன் நான்...

இதற்கு மேல் வேறெதையும் அவர் எனக்குத் தரப்போவதில்லை என்பது தெளிவாயிற்று. ஊர்மிளா போர்னைச் சுற்றி என்ன மர்மமிருக்கின்றதோ, அதை, நான் நிச்சயமாய் இந்த மிஸஸ் ரிச்சர்ட் மூலம் அறியப்போவது கிடையாது.

தோற்றுப் போன நான், தொந்தரவு தந்ததற்கு மற்றுமொரு முறை

மன்னிப்பு கூறிவிட்டு தொப்பியோடு புறப்பட்டு விட்டேன்.

ஒருசில நோயாளிகளைப் பரிசோதிப்பதற்காக போய் விட்ட நான் ஆறுமணி சுமாருக்கு வீடடைந்தேன். கரோலின், டீ கோப்பைகளுக்கு நடுவில் இருந்தாள். அவளது குணாதிசயமாய் எனக்கு மட்டுமே வெகு பிரசித்தமான, வெளியே காட்டிவிடாது பிரயத்தனப்பட்டு அடக்கி மறைத்து வைத்திருந்த பூரணக் களிப்பு – அவள் முகமெங்கும். தகவலைத் தர அல்லது தகவலைப் பெற அவளிடம் காணப்படும் முழுமையான சமிக்ஞை இது. எனக்குள் வியப்பு – இரண்டில் எதுவாயிருக்கும் என்று.

என்னுடைய பிரத்யேக ஈஸி-சேரில் நான் சாய்ந்தமர்ந்து, வீசிய இனிய குளிர்க்காற்றை அனுபவிக்கும் விதமாய் என்னிரு கால்களையும் நான் அகட்டி நீட்டிக்கொண்டபோது, ''இன்னிக்கு எனக்கு இனிமையான ஆஃப்ட்டர்நூன் அமைஞ்சது'' என்றாள் கரோலின்.

''உனக்கா?'' என்ற நான், ''என்ன... மிஸ் கேனட் டீக்காக வந்திருந்தாளா?'' என்றேன். மிஸ் கேனட் தான் இவளுக்காக சேதி சேகரிக்கும் முதன்மை நிருபர்.

''மறுபடியும் ஊகி'' என்றாள் கரோலின் சந்தோஷம் பொங்க.

கரோலினின் துப்பறியும் குழு முழுவதையும் ஜாக்கிரதையாய் மனதில் கொண்டு வந்து நிலைநிறுத்தி ஊகித்தேன். ஒவ்வொரு பேரையும் வெற்றி முழக்கமான மறுப்புத் தலையசைப்போடு திருப்பி விட்டாள் என் சோதரி. முடிவில் அவளே முன் வந்து ''மிஸ்டர் பொய்ரெட்!'' என்றாள். ''இதைப் பற்றி இப்ப நீ என்ன நினைக்கிறே?''

இது பற்றி நான் தடையின்றி நூற்றுக்கணக்காய் பல சமாச்சாரங்களை நினைத்தேன், ஆனால் அவற்றில் ஒன்றைக் கூட கரோலினிடம் உதிர்த்து விடாமலிருப்பதில் நான் முன்ஜாக்கிரதையாய் இருந்தேன்.

''எதுக்காக அவர் வந்தார்?'' என்றேன் நான்.

''என்னைப் பார்க்க, பின்னே! என்னோட சகோதரரோட நல்லா பழக்கம் ஏற்பட்டிருப்பதால, அவரோட பூரிக்கும் சகோதரியோடவும் பழக்கம் உண்டாக்கிக் கொள்வது உகந்ததுனு தோணியிருக்கு அவருக்கு. உன்னோட வசீகர ஸிஸ்டரோட நட்பு!''

''ப்ச்... அத விடு. எதைப்பற்றி அவர் பேசினார்?''

''அவரைப் பற்றியும் அவர் கையாண்ட கேஸ்களைப் பற்றியும்

வண்டி வண்டியா சொன்னார். இளவரசர் போன்ற ராஜாங்கக் குடும்பங்களின் கொலை மர்மங்களையெல்லாம் கூட இவர் தீர்த்து வெச்சிருக்கார். இது போல நிறைய. இது போன்ற விறுவிறுப்புகளை யெல்லாம் இத்துறையின் ஜாம்பவான் வாயாலேயே கேட்டது அவ்ளோ இண்ட்ரஸ்டிங்கா இருந்தது.''

அப்படித்தானிருக்கும் – கரோலினுக்கு. கேட்டேன்: ''கொலையைப் பற்றி அவர் பேசினாரா?''

''என்ன கேள்வியிது ஜேம்ஸ்! நிச்சயமா. லோக்கல் சமாச்சாரமா வேற என்னயிருக்கு பேச? மிஸ்டர் பொய்ரெட்டுக்கு இக்கொலையின் பல முடிச்சுகளை என்னால அவிழ்த்துத் தர முடிஞ்சது. இதுக்கு அவர் என்கிட்டே அத்தனை நன்றிபூர்வமா நடந்துக்கிட்டார். நான் பிறப்பிலேயே ஒரு துப்பறியும் மேதைனு சொன்ன அவர் எனக்குள்ளே பிறப்புலேயே அதுக்கான சாதுர்யம் கொட்டிக் கிடக்குனார். மனித உளவியல் பற்றிய செமத்தியான அறிதல் இருக்குனார் – எனக்கு.

நான் வியப்பிலிருக்க அவள் தொடர்ந்தாள்: ''மூளையிலிருக்கும் சாம்பல்நிற செல்கள் மற்றும் அவற்றின் வேலைப்பாடுகள் பற்றி ஏகமா பேசினார். அவரோட க்ரே செல்கள் தான் – அவரே சொன்னார் – முதல் தரம் வாய்ந்ததாம்.''

''அனுபவ வெற்றிகள் தரும் பெருமை.''

''இன்னும் கவனி. ரால்ஃபை எவ்ளோ சீக்கரம் கண்டுபிடிக்க முடியுமோ அவ்ளோ சீக்கிரம் கண்டுபிடிச்சுடணும்னு இருக்கார் அவர். இது தான் அவரோட முதன்மையான நினைப்பாயிருக்கு. இந்தக் கொலை விஷயத்துல அவரோட நிலைமை என்ன என்பதை அவரே முன்வந்து சொல்லி விடும்படி அவரை நாம உந்தித்தள்ளணுமாம். இப்படி அவர் பதுங்கியிருப்பது மரண விசாரணையின் போது மிகவும் துரதிர்ஷ்டவசமான பதிப்பனை உண்டாக்கி விடும்னார்.''

''இதுக்கு நீ என்னத்தை சொன்னே?''

''அவர் கருத்தை நானும் ஆமோதித்தேன்'' என்றாள் கரோலின் முக்கியப்படுத்தி. ''இதைப்பற்றி மத்தவங்க எப்படியெல்லாம் பேச ஆரம்பிச்சுட்டாங்க என்பதையும் நான் அவரண்டை சொல்லிட்டேன்.''

''கரோலின்'' என் கூர்மையாய் அழைத்த நான், ''அவர்கிட்டே நீ அன்னிக்கு மரக்காட்டுக்குள்ளே கேட்கும்படி நேர்ந்த விஷயத்தையும்

சொன்னியா?'' என கேட்டேன்.

மகிழ்ச்சியாய், ''நான் சொன்னேன்'' என்றாள் அவள்.

நான் எழுந்துக் கொண்டேன். நடக்க ஆரம்பித்தேன். ''நீ என்ன பண்றேன்னு உணர்ந்து தானே செய்றே?'' என வெடித்தேன் நான். ''இந்த சேர்ல நீ உட்கார்ந்துக்கிட்டிருப்பது எவ்ளோ உண்மையோ அந்த அளவுக்கு நிஜமா நீ பேடனோட கழுத்தை சுத்தி சுருக்குக் கயிறை இறுக்கிக்கிட்டிருக்கே.''

''அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாது'' என்றாள் கரோலின் துளியும் உலுக்கப்படாமல். ''இதை நீ அவரிடம் சொல்லாததுல தான் நான் ஆச்சரியப்படறேன்.''

''இதை மட்டும் அவர் காதுல விழுந்துடாமயிருக்க நான் எல்லா தற்காப்புகளும் செஞ்சேன்'' என்றேன். ''எனக்கு அவனை ரொம்பப் பிடிக்கும்டீ.''

''எனக்குந்தான். அதனால தான் நீ இப்ப முட்டாள்தனமா பேசிக்கிட்டிருக்கேனு சொல்றேன். ரால்ஃப் இப்பாதகத்தை செஞ்சிருப்பான்னு நான் நம்பலே. மடியில கனமிருந்தாத்தானே வழியில பயம்? அதனால அவன் ஆபத்துல இல்லே. ஆனா, நாம, அத்தனை உண்மைகளையும் திரு பொய்ரெட்டுக்குத் தந்து அவருக்கு உதவணும். ஏன், இப்படி நினைச்சுப் பாரேன்... கொலை நடந்த அந்த ராத்திரி முழுக்க ஒருவேளை ரால்ஃப் அதே பொண்ணோட கிளம்பி வெளியில இருந்திருந்தால்? அப்படி தான்னா அவனுக்கு எத்தனை அனுகூலமா அமையும்?''

''அப்படியோர் அனுகூலம் அவனுக்கு இருப்பது உண்மைனா'' என்ற நான் கேட்டேன்: ''எதுக்காக அவனே முன்வந்து அதை சொல்லிடக் கூடாது?''

''அந்தப் பொண்ணும் வம்புல மாட்டிக்கிடும்னு அவன் நினைக் கிறானோ என்னவோ?'' என்றாள் பட்டென்று. ''ஆனா திரு பொய்ரெட் அந்தப் பொண்ணைக் கண்டுபிடிச்சு, அனைத்து உண்மைகளையும் சொல்லி விடுவது தான் ஒரு பிரஜையின் கடமைனு அவகிட்டே விளக்கிச் சொன்னார்னா, அவளே வலிய முன்வந்து ரால்ஃப்பைக் காப்பாற்றிடலாம்.''

''நீ வேலையில்லாம உக்காந்துக்கிட்டு தேவையில்லாம ஒரு ருசிகர

மான காதல் கதையை உருவாக்கிக்கிட்டிருக்கியோனு தோணுதுடீ'' என்றேன் நான் கடுப்பாய். ''கட்டுக்கட்டாக்ரைம் நாவல்ங்க படிப்பதன் தாக்கம். அதெல்லாம் படிக்க வேணாம்னு தலைதலையா நான் அடிச்சுக்கிட்டிருக்கேன்.''

என் நாற்காலியில் நான் மறுபடியும் விழுந்தேன்.

''பொய்ரெட் உன்கிட்டே இதுக்கு மேல ஏதாவது கேள்விகள் கேட்டாரா?'' – விசாரித்தேன் நான்.

''நீ காலைல பார்த்த நோயாளிகளைப் பற்றி மட்டும்.''

''பேஷண்ட்ஸ்?'' – நம்பவே முடியாமல் தடாலடியாய் கேட்டேன் நான்.

''ஆமாம். உன்னோட அறுவை சிகிச்சை நோயாளிங்க. எத்தனை பேர் மற்றும் அவங்கள்லாம் யார் யார்.''

''அவருக்கு இந்தத் தகவலை உன்னால தர முடியும்னு சொல்றியா, ஆங்?'' – கட்டளையாய் கேட்டேன்.

கரோலின் உண்மையிலேயே அதிசயமானவள். ''ஏன் முடியாது?'' என்று விட்டாள்! ''ஆபரேஷன் தியேட்டர் வரைக்கும் போகும் பாதையை, இதோ, இந்த ஜன்னலிலிருந்து என்னால துல்லியமா பார்க்க முடியும். மேலும் எனக்கு அதியற்புத ஞாபகசக்தியுண்டு, ஜேம்ஸ். உன்னை விடவும் சிறப்பானதுனு சொல்லிக்க விரும்பறேன்.''

''ஒத்துக்கறேன்'' என்று முணுமுணுத்தேன் இயந்திரத்தனமாய்.

பெயர்களை விரல் விட்டு எண்ணி சரிபார்த்துக் கொண்டு தொடர்ந்தபடியிருந்தாள் என் சகோதரி: ''அந்தக் கிழ மிஸஸ் பென்னட், வயல்லேந்து வெட்டின விரலோடு ஓடி வந்த அந்தப் பையன், ஓர் அமெரிக்க பட்டாளத்தான், ஜார்ஜ் ஈவன்ஸ் அவரோட அல்ஸர் வலியோட. நாலாச்சா? அப்புறம் வேற யாராவது? இரு, கொஞ்சம் யோசிச்சுடறேன். ஆங், கடைசியா —''

குறிப்பிட்டுக் காட்ட வேண்டும் என்பதற்காகவே அவள் இடைவெளி தந்தாள்.

''அப்புறம்?''

இக்கேள்விக்கு, கரோலின், க்ளைமாக்ஸ் வார்த்தைகளை வெற்றிக் களிப்போடு கொண்டு வந்து இறக்கினாள். ஸ்ஸ் என்று ஸ்'களை மட்டும் அழுத்தமாய் பொருத்தி, அவளே அவளைப் பெருமையாய்

ஆமோதிக்கும் தினுசில் தலையசைத்துக் கொண்டு சொன்னாள்:

''மிஸ் ரஸ்ஸெல்!''

இருக்கையில் இப்போது சாய்ந்துக் கொண்டு வசதியாய் அமர்ந்த அவள் என்னை அர்த்தபுஷ்டியோடு பார்த்தாள்; அர்த்தபுஷ்டியோடு பார்ப்பது கரோலின் என்றால், அதனைத் தவிர்ப்பதென்பது இயலாதது.

நிஜமற்று, ''நீ என்ன சொல்றேனே எனக்குப் புரியலே'' என்றேன் நான். ''நோய் கண்டுள்ள அவளோட கால் முட்டிகளுக்காக என்னைக் கலந்தாலோசிக்க, ரஸ்ஸெல் ஏன் வரக்கூடாதா?''

''நோய் கண்ட முட்டி!'' என்றாள் கரோலின். ''வைக்கப்போறு! த்தூ! நீயும் நானும் தான் நோய் கண்டிருக்கோம் இப்ப – அவளோட முட்டி கிடையாது! அவ எதையோ பின்தொடர்ந்து மோப்பம் பிடிச்சுக்கிட்டே இங்கே வந்திருக்கா.''

''என்ன அது?'' – நான் கேட்டேன்.

அது என்ன என்பது கரோலினுக்கே தெரியவில்லை என்பதை அவள் ஒப்புக் கொள்ளும்படி ஆயிற்று. ''ஆனா ஒண்ணு தெரிஞ்சுக்கோ – அது என்ன என்பதைக் கண்டுபிடிக்கத்தான் அவரோட முயற்சியெல்லாமே – என்ன முழிக்கிறே? பொய்ரெட்டை சொன்னேன்! கழுவுற மீன்ல நழுவுறா அவ – இப்படி நழுவுறா என்பது பொய்ரெட்டுக்குத் தெரியும்.''

''இதே... இதே குறிப்பைத்தான் நேத்து மிஸஸ் ஆக்ராய்டும் எனக்குத் தந்தாங்க'' – சொன்னேன் நான். ''மிஸ் ரஸ்ஸெல்லிடம் நழுவி மறையும் ஏதோ ஒரு போக்கு இருக்குன்னாங்க.''

''ஆஹ்!'' என்றாள் கரோலின் இருளடைந்து. ''மிஸஸ் ஆக்ராய்டு! இவகிட்டே இன்னொண்ணு?''

''என்னது? இன்னொண்ணுனா?''

கரோலின் அவள் தந்தக் குறிப்பினை விளக்க மறுத்து விட்டாள். அவள் கையிலிருந்த ஸ்வெட்டர் பின்னும் பணியைத் தொடர்ந்தபடி பலமுறை ஒப்புதலாய் தலையசைத்துக் காட்டிய அவள், மாடிக்குக் கிளம்பி விட்டாள்.

அங்கேயே தங்கி விட்ட நான், கனப்பு நெருப்பில் பார்வையைப் பதித்து கரோலின் விட்டுவிட்டுப் போயிருந்த வார்த்தைகளிலேயே கிடந்தேன். மிஸ் ரஸ்ஸெல் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கொள்வதற்காகத் தான் நிஜமாய் பொய்ரெட் வந்திருப்பாரா? அல்லது

கரோலினின் கொடூர மூளைதான் அவளுடைய சிந்தனைகளுக்கு ஏற்ப இஷ்டத்துக்கு முடிச்சுகளைப் போட்டுப் பார்க்கின்றதா?

காலையில் வந்துப் போயிருந்த மிஸ் ரஸ்ஸெல்லின் நடவடிக்கைகளில் சந்தேகத்தைக் கிளப்பி விடும்படியாய் நிச்சயமாய் ஏதும் தெரியவில்லை. ஆனால்... ஆனால்...

போதை மருந்து உட்கொள்வது பற்றி விடாது அவள் கேட்டுக்கொண்டேயிருந்தது எனக்கு சட்டென்று நினைவுக்கு வந்தது. இப்படி ஆரம்பித்த உரையாடலை விஷம் மற்றும் விஷம் வைத்தல் நோக்கி அவள் நகர்த்திப் போனதும் என் நினைவுக்குள் வந்தது. ஆனாலும் இவ்வுரையாடலால் பாதகம் ஏதுமில்லை. ஆக்ராய்டு விஷம் வைத்துக் கொல்லப்படவில்லை. இருந்தாலும் கூட... ஏனிப்படி உரையாடியிருக்க வேண்டும் என நினைக்கும்போது... சற்று பொருந்தாமல்...

படிகளின் உச்சியிலிருந்து அமிலமாய் கரோலின் குரல் வந்தது. ''ஜேம்ஸ்... எல்லாம் ஆறிப் போகப் போகுது.''

கனப்புக்குள் கொஞ்சம் கரியை அள்ளிப் போட்டு விட்டு நான் மரியாதையாய் மாடிக்குப் போனேன்.

என்ன விலை கொடுத்தாவது வீட்டுக்குள் அமைதியைக் காப்பது சிறந்ததே.

அத்தியாயம் 12

மேஜையைச் சுற்றி அமர்ந்து...

அனைவரையும் சேர்த்து வைத்து ஒரு மரண விசாரணை திங்களன்று நடந்தது.

விசாரணையை இங்கு விவரமாக தர நான் முன்வரவில்லை. இப்படிச் செய்தால், நடந்த அத்தனையையும் திரும்பத்திரும்ப அரைத்ததாய் தான் ஆகும். போலீஸுடன் முன்னமேயே செய்துக் கொண்ட ஏற்பாட்டின்படி, மிகக்குறைந்த தகவல்களே வெளியே விடப்பட்டன. ரோஜர் ஆக்ராய்டின் மரணத்திற்கான காரணம் மற்றும் அது நடந்திருக்கவல்ல நேரம் இவ்விரண்டுக்காகவும் நான் சாட்சி தந்தேன். மரண விசாரணை மன்றத்தின் நீதிபதியால், ரால்ஃப் பேடன் வராமலிருந்தது விமர்சிக்கப்பட்டது. ஆனால், தேவையற்று இதற்கு அழுத்தம் தரப்படவில்லை.

இதற்குபிறகு நானும் பொய்ரெட்டும் இன்ஸ்பெக்டர் ரக்லானுடன் சில வார்த்தைகள் பேசிக்கொண்டிருந்தோம்.

''அவருக்கெதிராத்தான் எல்லாம் நிக்குது, மிஸ்டர் பொய்ரெட்'' என ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர்: ''நடுநிலைமையாத்தான் உள்ள அத்தனை துப்புகளையும் சேர்க்கப் பார்க்கிறேன் – யெஸ். நான் அங்கேயே இருப்பவன், அதனால தான் சொல்றேன் நான் க்ரேன்செஸ்ட்டர்ல பல தடவை பேடனைப் பார்த்திருக்கேன். அவர் குற்றவாளியா இருக்கணும்னு நான் பிரார்த்தனை பண்ணலே – ஆனா நீங்க எந்தக் கோணத்துல நின்னு இந்த வழக்கை ஆராய்ந்தாலும் அவருக்கெதிராத்தான் எல்லாம் நிக்குது. அவர் குற்றமற்றவர்னா, எதுக்காக இப்ப வந்து சாட்சி சொல்லலே? அவருக்கு எதிரா கை நிறைய

சாட்சிகள் வெச்சுக்கிட்டு காததிருக்கோம் ஆனா அந்த சாட்சிகள் எல்லாம் நாம நினைக்கிற மாதிரி கிடையாதுனு வந்து விளக்கி தவிடு பொடியாக்கிடலாமே... ஏன் அப்படிப் பண்ண மாட்டேங்கிறார்? எதுக்காக அவர் தரப்பு விளக்கங்களைத் தர முன்வரலே?''

பேசிக்கொண்டிருந்த சமயத்தில் எனக்குத் தெரிந்திருந்த விஷயங்களையெல்லாம் விடவும் இன்ஸ்பெக்டரின் வார்த்தைகளுக்குப் பின்னால் ஏகமாய் சமாச்சாரங்களிருந்தன. இங்கிலாந்தின் அனைத்து ரயிலடிகள் மற்றும் சந்திப்புகளுக்கும் ரால்ஃபின் அங்க அடையாளங்கள் தந்தியனுப்பப்பட்டிருந்தன. எல்லா இடங்களிலும் போலீஸ் முன்னெச்சரிக்கையாய் கண்காணித்துக் கொண்டேயிருந்தது. அவர் தங்கியிருந்த அறை, அவர் அடிக்கடி போய் வரும் வழக்கமுள்ள வீடுகள் ஆகியன ரகசியமாய் கவனிக்கப்பட்டன. இப்படி எல்லா மூலைகளிலும் மடக்கப்படும்போது அவரிருக்கும் இடத்தை அவரால் நீண்ட நாட்களுக்கு மறைத்து வைக்க முடியும் என்று தோன்றவில்லை. அவருக்கு எவ்விதமான மூட்டை முடிச்சுகளும் கிடையாது... மேலும், மற்றவர்களுக்குத் தெரிந்தமட்டில், அவரிடம் பணம் இல்லை.

''அவரை அன்னிக்கு ராத்திரி ஸ்டேஷன்ல பார்த்ததா ஒருத்தரைக் கூட என்னால பிடிக்க முடியலே'' என தொடரலானார் இன்ஸ்பெக்டர்: ''ஆனாலும், அவர் இந்தக் கிராமத்துப் பகுதியில மிகவும் பிரபலமானவர். ஆகையால் யாராவது அவரை கவனிச்சுதானிருக்கணும். லிவர்பூல் பகுதியிலிருந்தும் எவ்வித தகவலும் இல்லை.''

''அவர் லிவர்பூல் தான் போயிருக்கணும்னே நினைக்கிறீங்களா?'' – விசாரித்தார் பொய்ரெட்.

''வெல், சொல்ல முடியாது. ரயிலடியிலிருந்து வந்த அந்த டெலிபோன் தகவல் - ஜஸ்ட் லிவர்பூலுக்கான ரயில் கிளம்ப மூன்றே நிமிடங்கள் இருந்தபோது, அது இருந்த ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வந்திருக்கும் அந்த தொலைபேசி – ஆஹ்... இதுல நிச்சயமா ஏதோ இருக்கணும்.''

''தேவையில்லாம நம்மை திசை திருப்ப என்று இது நடந்திருக்காத வரைக்கும் – யெஸ், நெஜந்தான். ஆனா, அந்த டெலிபோன் மெஸேஜின் இலக்கே, இதுவா இருந்தால்?''

''அதுவும் சரிதான்'' என்றார் இன்ஸ்பெக்டர் ஆர்வமாய்.

''அப்படினா — டெலிபோன் அழைப்பே நம்மை திசைதிருப்பத்தான் என்பது தான் உங்களோட விளக்கமா?''

''மை ஃபிரண்ட்...'' என்ற பொய்ரெட் சொன்னார்: ''எனக்குத் தெரியலே.'' தொடர்ந்தார்: ''ஆனா ஒண்ணு மட்டும் சொல்லிக்க விரும்பறேன் — டெலிபோன் அழைப்புக்கான விளக்கம் நமக்குக் கிடைக்கப் பெறும்போது கொலைக்கான விளக்கமும் நமக்குக் கிடைச்சுடும். இது என் நம்பிக்கை.''

''இதேபோல நீங்க முன்னமும் ஏதோ சொன்னதா ஞாபகம்'' – பொய்ரெட்டைக் கிளர்ச்சியாய் பார்த்தபடி குறிப்பிட்டேன் நான்.

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தார். ''ஒவ்வொரு தடவையும் நான் இதே டெலிபோன் நிலைப்பாட்டுக்குத் தான் திரும்பி வரேன்'' என்றார் அவர் ஈடுபாடாய்.

''ஆனா, இந்த நிலைப்பாடு, இந்த சமாச்சாரத்துக்குத் துளியும் சம்பந்தமில்லாததா படுது'' என்றேன் நான்.

''ம்ம்... அப்படி நான் ஒத்துக்க மாட்டேன்'' என்று மறுத்தார் இன்ஸ்பெக்டர். ''ஆனா, மிஸ்டர் பொய்ரெட், இந்த ஒரேயொரு நிலைப்பாட்டை தேவையில்லாம ரொம்பவும் அதிகமா புடிச்சுக் கிட்டுத் தொங்கிக்கிட்டிருக்கார்னு மட்டும் சொல்லிக்க விரும்பறேன். இதைவிடவும் சிறந்த துப்புகள் எல்லாம் நம்மகிட்டே நிறையவே யிருக்கு. பிச்சுவாக் கத்தியிலிருக்கும் கைரேகைகள் ஓர் உதாரணத்துக்கு!''

ஏதாவது ஒரு விஷயத்தில் கிளர்ந்தெழும் போது வழக்கத்துக்கு மாறாய் அந்நியத்தனத்துடன் நடந்துக் கொள்ளும் அவருடைய குணாதிசயத்துக்குள் போனார் பொய்ரெட். ''இன்ஸ்பெக்டர்... ஜாக்கிரதை. ஜாக்கிரதை. முட்டுச்சந்து... *முட்டுச்சந்து* – விளக்கந் தெரியுமா?''

இன்ஸ்பெக்டர் ரக்லான் புரியாததால் முழித்தார். ஆனால், நான் புரிந்து விட்டதால் விழித்துக் கொண்டேன். ''எதைச் சொல்றீங்க பொய்ரெட்? *அந்த முட்டுச்சந்தையா?*''

சுத்தமாய் இன்ஸ்பெக்டர் வெலவெலத்துப் போய்விட, எனக்குப் புரிந்து விட்டது என்பதைப் புரிந்துக் கொண்ட பொய்ரெட், ''அதே தான் டாக்டர்'' என்று என்னைப் பார்த்து ஆமோதிப்பாய் தலை

யசைத்துப் பாராட்டிவிட்டு இன்ஸ்பெக்டருக்கு விளக்கலானார்: ''முட்டுச்சந்து. அது எங்கேயும் நம்மைக் கொண்டு போய் விடாது. ஆனா அங்கேயே இருக்கும். ஆஹ்ஹாஹா.''

இப்போது விளங்கிக்கொண்ட இன்ஸ்பெக்டர், ''அப்படியா சொல்றீங்க?'' என்றார். ''எனக்கு இதுல ஒப்புதலில்லே. அவை போலியான கைரேகைகள்னா சொல்ல வரீங்க? இப்படியெல்லாம் நடக்கும்னு நான் படிச்சிருக்கேன். ஆனா நிஜ அனுபவத்துல இது வரை நான் எதிர்கொண்டதில்லே. ஆனா போலியோ அசலோ – நிச்சயமா அவை நம்மை எங்கேயாவது கொண்டு போய் நல்லபடியா சேர்க்கும்.''

பொய்ரெட், வெறுமனே தனது தோள்களைக் குலுக்கி விட்டு இரு கைகளையும் நன்றாய் அகலமாய் விரித்து மறுப்பாய்க் காட்டினார்.

இதற்கு பிறகு பல்வேறு விரிவுப்படுத்தப்பட்ட கைரேகைகளை எங்களுக்குக் காட்டினார் இன்ஸ்பெக்டர். அவற்றின் சுருள்கள், வளைவுகள் எல்லாவற்றையும் மிகவும் தொழில்நுட்பரீதியாய் எங்களுக்கு விளக்கவும் செய்தார் அவர். ''அட பாருங்கப்பா'' என்றார் கடைசியாய் அலுத்துப்போய் – பொய்ரெட்டின் ஒட்டும் ஒட்டாத நிலையைப் பார்த்து. ''இந்த ரேகைகள் அன்னிக்கு ராத்திரி அங்கேயிருந்த யாரோ ஒருத்தரால தான் உண்டுபண்ணப்பட்டிருக்குனு – ஒத்துக்கிறீங்களா?''

''ம்'' என்று மட்டும் சொன்னார் பொய்ரெட். இது, ஆமோதிப்பா ஆட்சேபிப்பா என பிரித்தறிய முடியவில்லை.

''வெல்... நான் வீட்டிலிருக்கும் ஒவ்வோர் அங்கத்தினரின் கைரேகையையும், கவனமிருக்கட்டும்... *ஒவ்வோர் அங்கத்தினரின்* கைரேகையையும் பிடிச்சிருக்கேன். அந்தக் கிழவியிலிருந்து சமையக்காரி வரை.''

மிஸஸ் ஆக்ராய்டு அவரைப் போய் கிழவி என்று அடையாளங் காணப்பட்டதைப் பொறுத்துக் கொள்வாரா என்று தெரியவில்லை. ஒருவேளை அவர் மேலும் அதிகமாய் அழகு சாதனங்கள் வாங்க ஆரம்பித்து விடக்கூடும்.

''ஒவ்வோர் அங்கத்தினரின் கைரேகையையும்...'' என்று மீண்டுமொரு முறை எங்களுக்குள் பதிய வைத்தார் இன்ஸ்பெக்டர்.

''என்னுடையதையும் சேர்த்து'' என்றேன் நான் வறட்சியாய்.

''என்ன பிரயோஜனம்? எதுவும் ஒத்து வரலே. இது ரெண்டு சாத்தியக்கூறுகளை தான் விட்டு வெக்குது. ரால்ஃப் பேடன்; அல்லது டாக்டர் சொல்லும் அந்த மர்ம அந்நியன். இந்த ரெண்டு பேரையும் நாம பிடிக்கும்போது —''

''விலைமதிப்பற்ற கால அவகாசத்தை நாம மிக அதிகமாய் வீணாக்கியிருப்போம்'' என்று உடைந்தார் பொய்ரெட்.

''உங்க வாக்கியத்தை என்னால புரிஞ்சுக்க முடியலே, மிஸ்டர் பொய்ரெட்.

''வீட்டிலிருக்கும் அனைத்துப் பேரோட கைரேகைகளையும் படம்பிடிச்சாச்சுனு சொன்னீங்க'' – முணுமுணுத்தார் பொய்ரெட். ''இப்படி நீங்க சொல்வது ஸ்பஷ்டமான நிஜந்தானா, இன்ஸ்பெக்டர்?''

''நிச்சயமா.''

''யாரையும் வேண்டாம்னு ஒதுக்கிடாம பண்ணியிருக்கீங்களா?''

''யாரையும் வேண்டாம்னு ஒதுக்கிடாமத்தான் பண்ணியிருக்கேன்.''

''இருப்பவர், *இறந்தவர்?''*

ஒரு நிமிடம் பேயறைந்தாற் போலானார் இன்ஸ்பெக்டர். பிறகு மெதுவாய் மீண்டு வந்தார் அவர்: ''என்ன சொல்ல வரீங்க —?''

''அந்த இறந்தவர்?''

இப்போதும்கூட விளங்கிக் கொள்ள ஓரிரு நிமிடங்களை விழுங்கினார் இன்ஸ்பெக்டர்.

வெளிப்படையாய், ''என் ஆலோசனை இதுதான்...'' என்றார் பொய்ரெட்: ''பிச்சுவாக் கத்தியிலிருக்கும் கைரேகைகள், மிஸ்டர் ஆக்ராய்டுடைய கைரேகைகளாயிருக்கலாம். இதை நிரூபித்துக் கொள்வது மிகவும் சுலபமான ஒன்று. அவர் உடல் இன்னும் நம் கையிலதானிருக்கு.''

''ஆனா, ஏன்? இப்படிப் பண்ணுவதன் நோக்கம் தான் என்ன? நிச்சயமா இது ஒரு தற்கொலைனு உங்களுக்கு அபிப்பிராயமே கிடையாதே, மிஸ்டர் பொய்ரெட்.''

''ஆஹ் – நோ. நிச்சயமா. ஆனா என் தியரி என்னனா – கொலைகாரன் அவன் கையைச் சுற்றி ஒரு கையுறையோ அல்லது வேற எதையோ சுத்தியிருந்திருக்கான். ஆழமான முதலும் கடைசியுமான அந்தக் குத்து விழுந்து முடிஞ்ச மறுநொடியே, பாவப்பட்ட ரோஜர் ஆக்ராய்டின்

கையைப் பிடித்திழுத்து பிச்சுவாக் கத்தியின் பிடியைச் சுற்றி மூடி விட்டிருக்கான்.''

''ஆனா, ஏன்? ஏன்?''

பொய்ரெட் விடை தெரியாத தொனியில் மறுபடியும் தோள்களைக் குலுக்கிக் காட்டினார். ''ஏற்கெனவே குழப்பிக்கிட்டிருக்கும் ஒரு வழக்கை இன்னும் குழப்ப.''

''வெல்...'' என்ற இன்ஸ்பெக்டர், ''இதையும் நான் கவனிச்சுட றேன். அது சரி... இப்படியொரு ஐடியாவை எது கொண்டு வந்து உங்க மூளைக்குள்ளே போட்டது?'' என்றார்.

''பிச்சுவாக் கத்தி பற்றி எங்க கவனத்தைத் திருப்பி அதுல கை ரேகைகள் இருக்கும்னு நீங்க கனிவா விளக்கினபோது. ரேகைகளின் வளைவு சுழிப்பு இது பற்றியெல்லாம் எனக்கு ஏதோ கொஞ்சமா தெரியும் – இதுல நான் மாஸ்டர் கிடையாதுனு ஒத்துக்கறேன், ஓ கே! ஆனாலும் அதுல கைரேகைகள் பதிஞ்சிருக்கிற நிலை எனக்கு சம்மதமில்லாத வகையிலே இருக்கு. நான் குத்தணும்னு பிச்சுவாக் கத்தியைப் பிடிச்சிருந்தேன்னா, அப்படி அதுல கையை வெச்சுப் பிடிச்சிருக்க மாட்டேன். வலக்கை, தோளின் பின்பகுதியில ஓங்கிக் குத்தும்போது, இப்ப கைரேகைகள் இருக்கிற நிலையில கையை வெச்சுக்கிட்டு மிகத்துல்லியமா ஒருத்தனால குத்தியிருக்கவே முடியாது.''

இன்ஸ்பெக்டர் ரக்லான் குள்ள மனிதரைக் கண்ணகலப் பார்த்தார். இது போன்ற பிறர் காட்டும் பிரமிப்பையெல்லாம் கவனிக்கும் வழக்கமற்ற பொய்ரெட், தோள் பகுதியில், சட்டையில் ஒட்டியிருந்த ஒரு தூசினைத் தட்டி விட்டுக் கொண்டிருந்தார்.

''வெல்...'' என்ற இன்ஸ்பெக்டர், ''இதுவும் ஓர் ஊகம். இதையும் நான் கவனிச்சுடறேன். ஆனா இதுல உபயோகமா ஏதாவது முடிவு வரலேனா ஏமாந்துடாதீங்க'' என்றார்.

அவர் கிளம்பி வெளியே போய் மறைவதைப் பார்த்தபடியிருந்த பொய்ரெட், என்பக்கமாய் டாலடிக்கும் விழிகளோடு திரும்பினார். ''இப்ப... நாம எவ்வித தொந்தரவுமில்லாம நமக்கு நாமேனு விடப்பட்டுள்ள இந்த சமயத்துல, இந்தக் குடும்பத்தோட ஒரு சின்ன அளவளாவல் வெச்சுக்கிட்டா எப்படியிருக்கும், மை டியர் ஃபிரண்ட்?''

பொய்ரெட் வர்ணித்த 'சின்ன அளவளாவல்' அரை மணிநேரத்தில் ஏற்பாடாகியது. ஃபெர்ன்லி டைனிங் டேபிளைச் சுற்றி நாங்களமர்ந்தோம். பொய்ரெட், ஏதோ கம்பெனியின் சேர்மன் மையமாய் அமர்ந்திருப்பதுபோல வீட்டு முதலாளி அமரும் பெரிய இருக்கையில் அமர்ந்திருந்தார். வேலைக்காரர்கள் அனுமதிக்கப்படாததால் நாங்கள் ஆறு பேர் தான் மொத்தமும். மிஸஸ் சிசில் ஆக்ராய்டு, ஃப்ளோரா, மேஜர் ப்ளண்ட், யங் ரேமண்ட், பொய்ரெட் மற்றும் நான்.

அனைவரும் வந்தவுடன் பொய்ரெட் எழுந்து வணங்கினார். ''லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்... நான் உங்க எல்லோரையும் ஒரு காரணத்துக்காகத்தான் வரச் சொல்லியிருக்கேன்.'' இங்கு நிறுத்தினார். ''துவக்கமாக, இளைய மேடத்துக்கு, நான் ஒரு ஸ்பெஷல் வேண்டுகோளை வைக்க விரும்பறேன்.''

''எனக்காக?'' – சொன்னது, ஃப்ளோரா.

''மேடம்... நீங்க கேப்டன் ரால்ஃபுடன் நிச்சயமாகியிருக்கீங்க. அவர் யார் மேலயாவது முழு நம்பிக்கையோட இருக்கார்னு சொன்னா – அது நீங்க தான். நான் மிக உண்மையா உங்ககிட்டே மன்றாடி வேண்டிக்கிறேன்... உங்களுக்கு அவரோட இருப்பிடம் தெரிஞ்சா முதல் வேலையா அவரை வெளியே வரும்படி நீங்க ஊக்குவிக்கணும். வெயிட் வெயிட்...'' – (எதையோ சொல்ல ஃப்ளோரா எழுந்தாள்) – ''முழுசா எல்லாத்தையும் நீங்க உள்வாங்கிக் கொள்ளும் வரை ஒண்ணும் சொல்லக் கூடாது. மேடம்... நாளுக்கு நாள் அவரோட நிலைமை படு மோசமாகிக்கிட்டே போகுது. ஒரு தடவை அவர் வெளியே தலைகாட்டி வந்தார்னா, எத்தனை தான் மோசமான நிகழ்வுகள் நடந்திருந்தாலும் கூட, அவற்றை விளக்க அவருக்கு ஓர் அருமையான சந்தர்ப்பம் ஏற்படும். ஆனா இந்த மௌனம், இந்த தலைமறைவு – இதெல்லாம் சொல்வது தான் எதை? நிச்சயமா ஒண்ணே ஒண்ணைத் தான் – அவர் குற்றமுள்ளவர். மேடம்... அவர் குற்றமற்றவர் என்பதுல நீங்க அசைக்க முடியாம இருந்தீங்கன்னா, ப்ளீஸ், ப்ளீஸ்... அவரை உடனடியா வரும்படி உத்வேகம் ஊட்டுங்க – காலம் கடந்து விடுவதற்குள்.''

ஃப்ளோராவின் முகம் மயங்கி விடுவதைப் போல வெளிறிப் போயிற்று.

''காலம் கடந்து விடுவதற்குள்''–அவள் தணிந்தக் குரலில் ஒருமுறை முணுமுணுத்தாள்.

பொய்ரெட் வளைந்து முன்னுக்கு வந்தார், அவளை நேருக்கு நேராய் பார்த்து நெருங்கியபடி. ''பாரம்மா...'' என்றார் வெகு நெகிழ்ச்சியாய். ''இது தாத்தா பொய்ரெட், உன்னைக் கேட்பது! அதிக துப்பறியும் ஞானமும் அதைவிட அதிக அனுபவமும் மிக்க, ஓல்ட் தாத்தா பொய்ரெட். உங்களை நான் மாட்டி வைக்கப் போடும் பொறி கிடையாது இது, மேடம். என்னை நீங்க நம்ப மாட்டீங்களா? நம்பி கேப்டன் ராஃப் பேடன் எங்கே மறைஞ்சிருக்கார்னு சொல்லிட மாட்டீங்களா?''

அந்தப் பெண் இப்போது எழுந்து பொய்ரெட்டை நேர்பார்வை பார்த்தபடி நின்றாள். பிசிறற்றுப் பேசினாள்: ''மிஸ்டர் பொய்ரெட்... நான் சத்யம் பண்றேன். இறைவன் மீது சத்யம் பண்றேன். ராஃப் எங்கேயிருக்கான்னு எனக்கு ஒரு சின்ன ஊகம் கூட கிடையாது. அவனை நான் பார்க்கவுமில்லே, அவன் கூட பேசவுமில்லே–கொலை நடந்த அன்று. அதுக்கப்புறமும் இந்த ரெண்டும் நடக்கலே.''

அவள் மறுபடியும் உட்கார்ந்துக் கொண்டாள். அவளுடைய மௌனத்தையே ஓரிரு நிமிடங்கள் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்த பொய்ரெட், பிறகு தன்னிரு கைகளையும் இடியாய் மேஜை மீது இறக்கினார்.

''அவ்ளோதானா?'' என்றார் கடுமையாய். அவரது முகம் இறுகியது. ''நான், இப்போ, இந்த மேஜையைச் சுற்றிலும் உட்கார்ந் திருக்கும் உங்க அத்தனை பேரையும் – மிஸஸ் ஆக்ராய்டு, மேஜர் ப்ளண்ட், டாக்டர் ஷெப்பர்ட் அண்ட் மிஸ்டர் ரேமண்ட் – உங்க அத்தனை பேரையும் வேண்டறேன். நீங்கள்லாம் காணாமல் போயிருக்கும் நபரின் நெருக்கமான நண்பர்கள் அல்லது உறவினர்கள். ராஃப் எங்கே பதுங்கியிருக்கார்னு தெரியும்னா, ம், வாயைத் தொறங்க. பேசுங்க.

அமைதி நிலவியது. பொய்ரெட் ஒவ்வொருத்தராய் பார்த்தார். ''கெஞ்சறேன்...'' என்றார் ஒலி கம்மிய குரலில். ''பேசுங்க.''

ஆனால் அப்பொழுதும் அமைதியே இருந்தது–கடைசியில் மிஸஸ் ஆக்ராய்டால் அது உடைந்தது.

''ரால்ஃபின் இல்லாமை விளக்க முடியாத ஒண்ணு தான் என்பதை நான் ஒத்துக்கறேன்'' என்று எவ்வித உணர்ச்சிக் கலப்பும் இன்றி தட்டையாய் ஆரம்பித்தார் மிஸஸ் சிசில் ஆக்ராய்டு. ''சொல்லப் போனா, ரொம்ப விசித்திரமானது. இந்த மாதிரி இக்கட்டான நேரத்துல முன்னுக்கு வந்து நிக்காதது – வேடிக்கை தான். இந்த மறைவுக்குப் பின்னால ஏதோ இருப்பதாத்தான் நினைக்க வெக்குது. ஃப்ளோரா கண்ணு... நல்ல வேளைடீ, உன்னோட நிச்சயதார்த்தம் காதும் காதும் வெச்சா மாதிரி அறிவிக்கப்படாம நடந்தது. நல்ல வேளை இன்னும் நாம விளம்பரப்படுத்தலே.''

''அம்மா!'' – கத்தினாள் ஃப்ளோரா. ''ச்சே.''

''கடவுள் சித்தம்'' என்று அறிவித்தே விட்டார் மிஸஸ் ஃப்ளோரா. ''இதுல எனக்கொண்ணும் பக்தி பூர்வமான நம்பிக்கையெல்லாம் கிடையாது. ஆனா கடவுள் சித்தம் – மாற்ற முடியாதது, இல்லியா?''

இதற்கு, நிலைமையின் இறுக்கத்தைத் தணிக்க, மிஸஸ் ஆக்ராய்டின் கடவுள் நம்பிக்கையை நகைச்சுவையாய் ரேமண்ட் கொஞ்சம் பரிகசிக்க, கையிலிருந்த கைக்குட்டையை எடுத்துக் கொண்ட மிஸஸ் ஆக்ராய்டு பேசினார்: ''எம்பொண்ணு, எக்கச்சக்கமான சட்டசிக்கல் களிலிருந்து தப்பிச்சுட்டா. புவர் ஆக்ராய்டின் கொலையோடு ரால்ஃபுக்குத் தொடர்பிருக்கும்னு நான் ஒரு நொடி கூட நினைச்சுப் பார்த்தது கிடையாது தான் – அப்படியிருக்கும்னு எனக்குத் தோணலே. ஆனால், எனக்கு நடுநிலையான மனசுண்டு, எப்பவுமே, சின்னப் பொழுதிலிருந்து. யார்கிட்டேயும் மோசமான ஒரு பக்கமிருக்குனு நம்பறவ நான். பல தடவை ரால்ஃபை விமானங்கள்ல சோதனை யிட்டிருக்காங்க. அவன் சின்னவனா இருந்தபோது. காரணமில்லாம இருக்குமா? ஆனா எதுவும் மோசமா அவனுங்களுக்குக் கிடைக்கலே. சில பேர்கிட்டே, வயசானாலும் அந்தக் குணம் மாறாமத் தானிருக்குமாமே – சொல்றாங்க. இது குணம், அதனால, குணத்தின் விசையால் இயங்கும் நபர்கள், பாவம்... அவங்க செய்யும் செயல்களுக்கு ஜவாப்தாரியா நிக்க முடியாது தானே?! தடுக்க முடியாம அவங்க கட்டுப்பாட்டை அவங்களே இழந்துடறாங்க, யூ நோ!''

''மூட்றியா உன் வாயை'' என்று காட்டுக் கூப்பாடு போட்டாள்

ஃப்ளோரா. ''ரால்ஃப் செஞ்சான் எனும் கோணத்துலேயே இத்தனை பெருசா நீ பேசலேனு யார் அழுதது?''

''பொறுங்க, மிஸஸ் ஆக்ராய்டு'' என்றார் இப்போது ப்ளண்ட்.

''எனக்கு என்ன பண்றதுனே விளங்கலே'' என்றார் மிஸஸ் ஆக்ராய்டு அழுதபடி. ''எல்லாமே நிலைகுலைய வெக்குது. ரால்ஃப் தான் குற்றவாளினு ஆகிட்டா எஸ்டேட்டுக்கு என்னவாகும்? ஓஹ்...

ரேமண்ட் அவருடைய சேரை டேபிளிலிருந்து தள்ளிப் போகும்படி வெறியாய் தள்ளி விட்டான். மேஜர் ப்ளண்ட் தொடர்ந்து சாந்தமாகவேயிருந்தார், மிஸஸைத் துளையிட்டுப் பார்த்தபடி.

''நீங்க எல்லாருமே என்னை விரோதமா பார்ப்பது எனக்கும் புரியுது'' என்றார் மிஸஸ் ஆக்ராய்டு. ''ஆனா என் நிலைப்பாட்டை கடைசியா சொல்லிடறேன். ரால்ஃப் தானா முன்வந்து பேசாதது விசித்திரமாத் தானிருக்கு; ஃப்ளோராவுடைய நிச்சயதார்த்தம் விளம்பரப்படுத்தாததுக்கு நான் கடவுளுக்கு நன்றி சொல்லிக்கறேன்.''

''உன் நன்றியைக் கொண்டு போய் அந்தக் கனப்புல போடு'' என்ற ஃப்ளோரா துல்லியமான நடுக்கமற்றக் குரலில், ''நாளைக்கே அந்த விளம்பரம் வருது பாரு'' என்றாள் சவாலாய்.

செய்வதறியாது, ''ஃப்ளோரா!'' என கத்தினார் தாயார்.

அதற்குள் ஃப்ளோரா, செகரட்டரி பக்கமாய் திரும்பியிருந்தாள். ''மார்னிங் போஸ்ட் செய்தித்தாளுக்கு விளம்பரத்தை எழுதி அனுப்பிட முடியுமா? அதே மாதிரி டைம்ஸுக்கும்.''

''இது ஒரு புத்திசாலித்தனமான நகர்த்தல்னு நீங்க நினைச்சா, ஓகே மேடம்'' என்றான் ரேமண்ட்.

அழுத்தமாய் இப்போது ப்ளண்ட் பக்கம் திரும்பினாள் ஃப்ளோரா. ''இப்ப நான் வேற என்ன பண்றது? இப்ப இருக்கும் நிலைமையில நான் ரால்ஃப் பக்கம் தான் நிக்கணும் – நிப்பேன். இதுதான் சரினு உங்களுக்குப் படலே?''

தேடுதலோடு அவரைப் பார்த்தாள் இளையவள். ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு திடுதிப்பென்று ஆமோதிப்பாய் தலை யசைத்தார் ப்ளண்ட்.

கீச்கீச்சென்று எதிர்த்துக் கத்தினார் மிஸஸ் ஆக்ராய்டு. ஃப்ளோரா

ஆட்டங்காணாமலிருந்தாள். பிறகு ரேமண்ட் பேசினான்: ''உங்களுடைய குறிக்கோளை நான் பாராட்டறேன், மிஸ் ஃப்ளோரா. ஆனா, நீங்க ரொம்ப அவசரப்படறீங்கனு உங்களுக்கே தோணலே? ஓரிரு நாள் காத்திருங்க.''

''நாளைக்கா?'' என்று கிண்டல் தொனிக்கக் கேட்ட ஃப்ளோரா, ''அதனால ஒரு பயனும் விளைஞ்சுடப் போறதில்லே'' என்றாள்.

''மிஸ்டர் பொய்ரெட்'' என்றழுதார் அம்மா. ''நீங்க ஒண்ணுமேவா பேச மாட்டீங்க?''

''சொல்வதற்கு ஒண்ணும் கிடையாது'' என்று இதற்கு பதில் தந்தவர், ப்ளண்ட். ''அவ பண்றது தான் சரி. நான் அவபக்கம் நிக்கப் போறேன்.''

ஃப்ளோரா கைகுலுக்க அவர் நோக்கிக் கையை நீட்டினாள். ''தேங்க்யூ மேஜர் ப்ளண்ட்.''

''மேடம்...'' என்றழைத்த பொய்ரெட், ''உங்களுடைய துணிவையும் நேர்மையையும் பாராட்ட ஒரு கிழவனுக்கு சந்தர்ப்பம் தருவீங்களா?'' என்றார் கனிவாய். ''அதே சமயம், குறைந்தபட்சம் இரண்டு நாட்களுக்காவது உங்களுடைய இந்த முடிவைத் தள்ளிப்போடச் சொன்னால் – மிகவும் தாழ்மையா கேட்டுக் கொண்டால் – அதை நீங்க தப்பா எடுத்துக்காம ஏத்துக்குவீங்களா?'' என்றும் கேட்டார்.

ஃப்ளோரா நெளிந்தாள்.

''பேடன் மற்றும் நீங்க – ஆகிய இரண்டு பேரின் நலன் கருதியும் நான் இதைக் கேட்கிறேன், மேடம். நீங்க முகஞ்சுளிக்கலாம். நான் ஏன் அப்படி தள்ளிப்போடணும்னும் கேட்கலாம். ஆனா நீங்க அப்படித்தான் பண்ணியாகணும் என்பதை மட்டும் சொல்லிக்க விரும்பறேன். நீங்க தான் கேஸைக் கொண்டு வந்து என் கையில போட்டீங்க. இப்ப நீங்களே அதை உடைக்கலாகாது.''

மறுபதில் சொல்வதற்கு முன்னால் சற்று இடைவெளி தந்தாள் அவள். ''தள்ளிப் போட எனக்கு விருப்பமே கிடையாது'' என்றவள், ''நீங்க சொல்வதால – பண்றேன்'' என்றாள்.

பொய்ரெட் துரிதமாய், ''கவனியுங்க லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்'' என்றார். ''நான் சொல்ல வந்ததைத் தொடருகிறேன். நான் உண்மையை அடையணும் இதை நல்லாப் புரிஞ்சுக்கோங்க. உண்மை, அது எத்தனை தான் அசிங்கமாகவும் வலி தருவதாகவும்

இருந்தாலும், இதைத் தேடிச் செல்பவனுக்கு அழகானதாகவும் ஆவலைத் தூண்டுவதாகவும் தானிருக்கும். எனக்கு வயசாயிடுச்சு. முன்பிருந்தா மாதிரி சக்தியெல்லாமிருக்காது. சொல்லப்போனா, இதுவே நான் துப்பறியும் கடைசி கேஸா கூட ஆகிடலாம். ஆனா, ஹெர்குல் பொய்ரெட், ஒரு தோல்வியுடன் அவனோட தொழிலை முடிச்சுக்க மாட்டான். மறுபடியும் சொல்றேன், லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்... எனக்குத் தெரிஞ்சாகணும். உங்க எல்லாரையும் மீறியும் – என்னால தெரிஞ்சுக்க முடியும்.''

அந்தக் கடைசி வார்த்தையை ஏனையோரைத் தூண்டும் விதமாய் கொண்டு வந்து இறக்கிய பொய்ரெட், தூண்டப்பட்டு விட்டதா என ஒவ்வொரு முகமாய் ஆராய்ந்தார். நாங்கள் எல்லாருமே கொஞ்சம் கொஞ்சம் தாக்கப்பட்டதாய் உணர, ரேமண்ட் மட்டும் அவனுக்கே உரிய கலகல தன்மையோடு புருவங்களை சற்று உயர்த்திப் புன்னகையோடு கேட்டான்: ''உங்க எல்லாரையும் மீறியும்'னீங்க. என்னது அது?''

''அதே தான், மிஸ்டர். உங்க எல்லாரையும் மீறியும் – என்னால உண்மையைத் தொட முடியும். இந்த அறையிலிருக்கும் உங்கள்ல ஒவ்வொருவரும் என்கிட்டேயிருந்து எதையோ மறைக்கிறீங்க. (அனைவரிடமிருந்தும் மறுப்பு எழும்போல சூழ்நிலை உருவாக கையை நிமிர்த்தி அத்தனை பேரையும் அடக்கி விட்டார் பொய்ரெட்.) ''யெஸ், யெஸ். நான் என்னப் பேசறேன்னு எனக்குத் தெரியும், ஓ கே? அது தேவையேயற்ற ஒரு அற்ப விஷயமா இருக்கலாம் – இந்தக் கேஸோட துளியும் சம்பந்தமில்லாத முக்கியமற்ற ஒண்ணா கூடயிருக்கலாம். ஆனா – இருக்கு. உங்கள்ல ஒவ்வொருவரும் மறைச்சுப் பதுக்கி வெக்க, ஒவ்வொருத்தர் கிட்டேயும் என்னவோ இருக்கு. இப்ப சொல்லுங்க, நான் சரிதானே?''

குற்றஞ்சுமத்தி சவால்விட்ட அவருடைய பார்வை டேபிளை ஒரு முறை சுற்றி வந்து நின்றது. அப்பார்வைக்கு முன்னால் அத்தனை ஜோடிக் கண்களும் தாழ்ந்து விட்டன. யெஸ், என்னுடையதையும் சேர்த்து.

''மௌனத்துலேயே எனக்கு விடை கிடைச்சுடுச்சு'' என்றார் பொய்ரெட் ஒரு விசித்திரமான சிரிப்போடு. ''மறுபடியும் கெஞ்சறேன்.

என்கிட்டே உண்மையை சொல்லுங்க – தெரிஞ்ச அத்தனை உண்மையையும்.''

அங்கு அமைதி குடிகொண்டது.

''ஒருத்தர் கூடவா பேச மாட்டீங்க?''

அவர் இப்போது மறுபடியும் அந்த விசித்திர சின்னச் சிரிப்பினை உதிர்த்தார்.

''பாதகமில்லை'' – சொல்லி விட்டு எழுந்து வெளியேறி விட்டார் அவர்.

அத்தியாயம் 13

வாத்து இறகு

அன்று சாயங்காலம் பொய்ரெட் வேண்டுகோளை ஏற்று டின்னர் முடித்ததும் அவர் வீடு வரை போனேன் நான். வெளிப்படையாய் எதிர்ப்பினைப் பிரதிபலித்தபடி நான் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள் கரோலின். என்னுடன் சேர்ந்து வர அவளும் விரும்பியிருப்பாள் என்று எண்ணுகிறேன்.

அன்பாய் என்னை வரவேற்றார் பொய்ரெட். ஒரு டேபிளில் ஐரீஷ் விஸ்கியும் (நான் அருவருத்து வெறுப்பது), சோடா பாட்டிலும் கூடவே ஒரு க்ளாஸ் கோப்பையும் வைத்திருந்தார் அவர். ஆனால் அவர் சூடான சாக்லெட் திரவத்தை ருசித்துக் குடித்துக் கொண்டிருந்தார். அது தான் அவருடைய விருப்ப பானம் என்பதை பிறகு நான் அறிந்திருந்தேன்.

என் சகோதரியைப் பற்றி சாந்தமாய் விசாரித்த அவர், அவள் ஒரு அதிகபட்ச ருசிகரமான பெண் என வர்ணித்தார்.

''அவகிட்டே இப்படி சொல்லி வெச்சுடாதீங்க'' என்றேன் நான். ''தலைகனத்துல ஆடிடுவா. ஆங்... வீட்டுக்கு வந்திருந்தீங்களாமே? எப்படி போச்சு சந்திப்பு?''

கலகலவென சிரித்தார், சிறு கண்ணடிப்போடு.

''உண்மையான, உண்மையற்ற என்று அத்தனை லோக்கல் கிசுகிசுக்களும் கிடைச்சிருக்குமே''–குறிப்பிட்டேன் நான்.

''அதைவிட அதிகமா, விலைமதிப்பற்ற தகவல்களும்'' என்று என் குறிப்புக்குக் கூடுதல் கனம் சேர்த்தார்.

''உதாரணமா——''

மறுத்துத் தலையசைத்தார் அவர். ''சொல்லுங்க... என்கிட்டே ஏன் உண்மையை சொல்லியிருக்கக் கூடாது?'' – குறுக்கு விசாரணையாய் கேட்டார். ''இது போன்ற ஒரு குக்கிராமத்துல ரால்ஃப் பேடன் எது செஞ்சாலும் அது எப்படியாவது யாருக்காவது தெரிஞ்சுதான் போகும் – தப்பிக்க முடியாது. அன்னிக்கு அந்த மரக்காட்டு வழியா உங்க சகோதரி போகாம இருந்திருந்தா, வேறே யாராவது போயிருக்கப் போறாங்க... கவனிச்சிருக்கப் போறாங்க.''

''அப்படித்தான் ஆகியிருக்கும்'' என அரைமனதாய் ஒப்புக் கொண்டேன். ''இதிருக்கட்டும்... என் நோயாளிகள் பற்றி நீங்க காட்டிய ஆர்வம் – எதுக்காக?''

மறுபடியும் அவர் கண்ணடித்தார்.

''அந்த பட்டியல்ல ஒரே ஒருத்தர் தான், டாக்டர். ஒரே ஒருத்தர் தான்.''

''கடைசி ஆள்?'' – நான் ஆபத்தைக் கையிலெடுத்தேன்.

''மிஸ் ரஸ்ஸெல், கூர்ந்து கவனிக்கத்தக்க ஓர் உளவியல் பாடமா ஆர்க்கிறாங்க'' – என்று நழுவினார் அவர்.

''அவகிட்டே ஏதோ நழுவி மறையும் தன்மையிருக்குனு என் சகோதரியும் மிஸஸ் சிசில் ஆக்ராய்டும் சொல்வதை நீங்க ஒத்துக்கறீங்களா?'' – நான் கேட்டேன்.

''ஓ! என்ன, என்ன சொன்னீங்க? நழுவி மறையும் தன்மை, ஆங்?''

என்னால் முடிந்த அளவுக்கு கழுவும் மீனில் நழுவும் மீனாயிருக்கும் தன்மையை நான் அவருக்கு விளக்கினேன்.

''இப்படி அவளை அவங்க ரெண்டா வர்ணிக்கிறாங்க? அப்படித் தானே?''

''நேத்து மத்தியானம் கரோலின் இதே அர்த்தத்துல உங்க மண்டைக்குள்ளே ஏத்தலே?''

''இருக்கலாம்.''

''அதைத்தான் அவ பண்ணியிருப்பா – ஐ ஆம் ஷுர்.''

''பெண்களுக்கே உரிய உள்ளுணர்வு'' என பொதுவாய் பாராட்டினார் பொய்ரெட். ''பெண்கள் – ஆச்சரியமானவர்கள். அவங்க படைப்பின்படி ஏறுக்கு மாறான குழப்பங்களை உருவாக்கறாங்க – ஆனா அதிசயப்படும்படி ஒவ்வொரு முறையும் அவங்க குழப்பினது தான் சரியானதா இருக்கும்! பெண்கள், அவங்க கிரகித்துக் கொள்ளும்

ஆயிரமாயிரம் விஷயங்களை அவங்க ஆழ்மனதுக்குள்ளே போட்டுக் கறாங்க – அப்படிப் போட்டுக் கொள்வதே தெரியாம. பிறகு, அந்த ஆழ்மனது, அத்தனை சின்னத் தகவல்களையும் இணைக்குது – இதைத்தான் அவங்க உள்ளுணர்வின் சக்திங்கிறாங்க. நான், மனோவியலில் நுணுக்கமாய் நிபுணத்துவம் பெற்றவன். இதெல்லாம் எனக்குத் தெரியும்.''

அவரது நெஞ்சினை நிமிர்த்தி, இப்போது அவர் சொன்ன அத்தனையும் முக்கியமானவை என்பது போல உணர்த்தினார். அவருடைய குள்ள உயரத்துக்கு நெஞ்சை இந்த அளவுக்கு அவர் உயர்த்திக் காட்டியது, வேடிக்கைத்தனமாக, சர்க்கஸ் கோமாளி போல ஒரு நொடி காட்டி விட நான் அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரித்து விட்டேன். பிறகு அவர் ஒரு மடக்கு சாக்லெட் திரவத்தைக் குடித்து விட்டு முறுக்கு மீசையைத் துடைத்துத் திருகிக் கொண்டார்.

''இந்த ரோஜர் ஆக்ராய்டின் முழு கூத்தைப் பற்றியும் இப்போதைக்கு நீங்க என்ன நினைக்கிறீங்க என்பதை என்கிட்டே சொல்வீங்கனு எதிர்பார்க்கிறேன்'' – பொறுக்காமல் கேட்டு விட்டேன் நான்.

கையில் தாங்கியிருந்தக் கோப்பையை இறக்கி வைத்தார் அவர். ''அது – உங்களுக்கு வேணுமா?''

''வேணும்.''

''நான் எதையெல்லாம் பார்த்தேனோ அதையெல்லாம் நீங்களும் பார்த்திருக்கீங்க. அதனால, நம்ம ரெண்டு பேரோட எண்ணங்களும் ஒரே மாதிரி இருக்காதா?''

''நீங்க என்னைக் கிண்டலடிக்கிறீங்க'' என்றேன் இறுக்கமாய். ''இது போன்ற சமாச்சாரங்கள்ல எனக்கு உங்க அளவுக்கு முன்னனுபவம் கிடையாது.''

என்னைப் பார்த்து இணக்கமாய் சிரித்தார் அவர். ''இன்ஜின் எப்படி வேலை பண்ணுது என்பதை அறியத் துடிக்கும் குழந்தை போல – இப்ப நீங்க! இந்த சமாச்சாரத்தை ஒரு டாக்டருடைய கண்களால பார்க்காம ஒரு டிடெக்டிவுடைய கண்களால – யாரைப் பற்றியும் கவலைப்படாத, எல்லோரையும் அந்நியனாகவும் சந்தேகத்துக்குரியவராகவும் மட்டுமே பார்க்கும் ஒரு துப்பறியும் நிபுணருடைய கண்களால் – பார்க்க விரும்பறீங்க.''

''ரொம்ப சரியா போட்டுட்டீங்க'' என்றேன் நான்.

''அப்படிதான்னா நான் உங்களுக்கு ஒரு குட்டி விரிவுரை தரேன். முதல்ல பண்ண வேண்டியது – அன்று மாலை என்ன நடந்தது என்பது பற்றிய ஒரு க்ளியர் வரலாற்றினைப் பெற்றுக்கொள்வது – தவறாமல், தகவலைத் தந்துக் கொண்டிருப்பவர் பொய் சொல்லலாம் என்பதை மூளையில் நிறுத்தியபடி.

நான் என் புருவங்களை உயர்த்தி விட்டேன். ''என்ன ஒரு சந்தேகப்பேர்வழி?''

''ஆனா இது அத்தியாவசியம் நான் சத்யம் பண்ணித் தரேன் :_ாக்டர், இது தான் அத்தியாவசியம். இப்ப கவனியுங்க – டாக்டர் ஷெப்பர்ட், ரோஜர் ஆக்ராய்டு வீட்டிலிருந்து ஒன்பதடிக்க பத்து நிமிடங்களுக்குக் கிளம்பறார். இதெப்படி எனக்குத் தெரியும்?''

''ஏன்னா நான் சொன்னேன்.''

''ஆனா நீங்க எது உண்மையோ அதை பேசாமலிருக்கலாம் – அல்லது உங்களோட கைக்கடியாரம் சரியா வேலை பண்ணாம இருக்கலாம். ஆனா பார்க்கரும் நீங்க ஒன்பதடிக்க பத்து நிமிஷத்துக்குத் தான் வீட்டை விட்டுக் கிளம்பிப் போனீங்கனு சொல்றான். ஆகவே இந்த ஸ்டேட்மெண்ட்டை நாம ஏத்துக்கிட்டு மேலே போறோம். ஒன்பது மணிக்கு நீங்க ஓர் அந்நியனை எதிர்கொள்றீங்க – இதுதான் இந்த கேஸின் கிளுகிளுப்பான திருப்பமே. இப்படித்தான் இது நடந்ததுனு எனக்கெப்படி தெரியும்?''

''அப்படி நான் உங்ககிட்டே சொன்னேன்'' என நான் ஆரம்பிக்க, சற்று பொறுமையற்றுக் கையை உயர்த்தி என்னை நிறுத்தி விட்டார் அவர். ''ஆஹ்! இன்னிக்கு ராத்திரி உங்க மூளை கொஞ்சம் கம்மியா வேலை பண்ணுது, மைஃபிரண்ட். அது அப்படித்தான்னு உங்களுக்குத் தெரியும் – அது அப்படியே தான்னு எனக்கு எப்படித் தெரியும்?! இப்ப ஒண்ணு உங்களுக்கு சொல்லணும் டாக்டர். அந்த அந்நியன் – உங்க கற்பனை கிடையாது என எனக்கு ஊர்ஜிதமாச்சு; ஏன்னா, மிஸ் கன்னட் என்பவளுடைய வேலைக்காரி ஒருத்தி நீங்க சொன்ன அதே அடையாளங்களோட ஒருத்தனை, நீங்க பார்க்கிறதுக்கு ஒருசில நிமிடங்களுக்கு முன்னாடி சந்திச்சிருக்கா... அவ கிட்டேயும், அவன், உங்ககிட்டே கேட்ட கேள்வியான ஃபென்லி பார்க்குக்குப் போகும்

வழியைப் பற்றித்தான் கேட்டிருக்கான். ஸோ, அப்படி ஒருத்தன் இருக்கான். இதனால அவனைப் பற்றி ரெண்டு விஷயங்கள்ல நாம நிச்சயமா இருக்கலாம் – அவன் இந்தப் பகுதிக்குப் புதியவன்; எந்த நோக்கத்துக்காக அவன் ஃபெர்ன்லி பார்க் போயிருந்தாலும், ரெண்டு தடவை வெளிப்படையாகவே அவன் வழி கேட்டிருப்பதால, அவன் அங்கே போய்க்கிட்டிருக்கான் என்பதுல எந்த ரகசியத்தையும் அவன் வைக்கலே.''

''யெஸ்'' என்றேன் நான். ''நானும் உணர்றேன்.''

''இந்தக் கட்டத்துல அந்த அந்நியனைப் பற்றி மேற்கொண்டு விஷயங்களைக் கிரகிப்பதை என் வேலையா ஆக்கிக்கிட்டேன். அவன் கிராமத்து ஆண்கள் விடுதியில குடிச்சிருக்கான்னு தெரிஞ்சுக்கிட்டேன். அங்கேயிருக்கிற 'பார்' பணியாளன், அந்தாளு அமெரிக்க ஸ்டைல் ஆங்கிலம் பேசினதாகவும், அவனே கூட அப்போதான் அமெரிக்காவிலிருந்து வந்திருப்பதா சொல்லிக்கிட்டதாகவும் சொன்னான். அவன் பேசினதுல அமெரிக்க சாயல் இருந்ததா இப்ப உங்களுக்குப் படுதா?''

''யெஸ். அப்படியிருந்ததுனு தான் நினைக்கிறேன்'' என்றேன் நான், ஓரிரு நிமிடங்கள் சிந்தனையைப் பின்னுக்குத் தள்ளி யோசித்தபிறகு. ''ஆனா ரொம்ப சன்னமாத்தான் அப்படியிருந்தது. நிறைய இல்லே.''

''நல்லது. மேலும், இதோ இது; உங்களுக்கே நினைவிருக்கலாம், நான் அந்த சின்னத் தோட்ட அறையிலிருந்து எடுத்தது.''

எனக்கெதிரில் அந்த சிறு இறகினைப் பிடித்தார். அதை நான் ஆர்வமாய் பார்த்தேன். அப்போது நான் படித்திருந்த ஒரு விஷயம் குறித்த ஞாபகம் எனக்குள் மளமளவென சுழன்றடித்துக் கொண்டு வந்தது.

என் முகத்தைக் கவனித்துக் கொண்டிருந்த பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தார். ''யெஸ். போதை. ஹெராயின். போதை எடுத்துக் கொள்பவர்கள் இதுல தான் தொட்டெடுத்து அப்படியே மூக்கருகில் வெச்சு இழுப்பாங்க.''

''டையாமார்ஃபின் ஹைட்ரோக்ளோரைட்'' – நான் இயந்திரத்தனமாய் முணுமுணுத்து விட்டேன்.

''இந்த வகையில போதை மருந்தை உட்கொள்வது, மற்ற நாடுகள்ல

சர்வசாதாரணம். அந்தாளு கனடா அல்லது அமெரிக்காவிலிருந்து வந்திருப்பதற்கு ஒரு சான்று இது.''

''எது உங்க கவனத்தை முதல்ல அந்த சின்னத் தோட்டத்து அறை நோக்கி இழுத்தது?''–ஆர்வமாய் கேட்டேன் நான்.

''மை ஃபிரண்ட்... அந்தப் பாதையை உபயோகிக்கும் யாராயிருந்தாலும், அதை, வீட்டுக்கான ஒரு குறுக்குப் பாதையாத்தான் பயன்படுத்தறாங்கனு மட்டுமே இன்ஸ்பெக்டர் எடுத்துக்கிட்டார். ஆனா, இதே பாதையில, அந்தச் சின்னத் தோட்டத்து அறையும் இருப்பது என் கண்ல பட்டவுடனேயே அதை யார் வேணும்னாலும் ஓர் அளவளாவல் நிகழ்த்தும் இடமா பயன்படுத்தலாம்னு தோணிச்சு. அந்த அந்நியன் முன்கதவு வழியாவும் வரலே... பின்கதவு வழியாவும் நுழையலே என்பது இப்ப ஏறக்குறைய ஊர்ஜிதமாயிடுச்சு. அப்போ, அந்த அறையில முன்கூட்டியே இருந்த யாராவது போய் அவனை சந்திச்சிருப்பாங்களா? அப்படிதான்னா, அவங்க காத்திருப்பதற்கு அந்த சின்னத் தோட்டத்து அறையை விட வேறு எது அத்தனை வசதியா அமைஞ்சிருக்க முடியும்? இந்த எதிர்பார்ப்பை மனசுல வெச்சுக்கிட்டுத்தான் க்ளூ ஏதாவது கிடைக்குமானு நான் அந்த அறையை தேடியது! ரெண்டு துப்புகள் கிடைத்தன துண்டுக் கஞ்சித்துணி மற்றும் இறகு.''

''அந்தத் துண்டுக் கஞ்சித்துணி?'' – ஆர்வம் இன்னும் கூடி விட, கேட்டேன். ''அது பற்றி?''

பொய்ரெட் அவரது புருவங்களை உயரத் தூக்கினார். ''நீங்க உங்களோட சாதுர்யமிக்க மூளையின் சாம்பல் நிற செல்களைப் பயன்படுத்தலே'' என குறிப்பிட்டார் வறட்சியாய். ''அந்தத் துண்டுக் கஞ்சித்துணி என்னனு வெளிப்படையா தெரியுதே!''

''எனக்கு அந்தளவுக்கு அது வெளிப்படையாயில்லையே'' என்ற நான் கிண்டலுக்கு அனுமதி தராமல் பேசிக்கொண்டிருந்த கருவை மாற்றி விட்டேன். ''எப்படியோ... அந்த அந்நிய மனிதன் தோட்டத்து சின்ன அறைக்கு யாரோ ஒருத்தரை சந்திப்பதற்காக போகிறான். யாரந்த ஒருத்தர்?''

''இதுதான் முக்கியமான கேள்வியே'' – சொன்னார் பொய்ரெட். ''மிஸஸ் ஆக்ராய்டும் அவங்களோட பொண்ணும் கனடாவிலிருந்து

கிளம்பி வாழ்க்கையை ஓட்ட இங்கே வந்தவங்கனு உங்களுக்கு நினைவிருக்கில்லே?''

''எதையோ மறைக்கிறீங்கனு இன்னிக்கு அவங்களைக் குற்றம் சுமத்தியபோது, நீங்க உணர்த்தியது இதைத்தானா?''

''இருக்கலாம். இப்ப இன்னொரு பாயிண்ட். வீட்டின் அறைகளோட சுத்தத்தைக் கண்காணிக்கும் அந்த வேலைக்காரி சொன்ன கதையைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?''

''எந்தக் கதை?''

''அவ நீக்கப்பட்டதைப் பற்றிய கதை. ஒரு வேலைக்காரியை வேலையை விட்டுத் தூக்க அரைமணி நேரமா பிடிக்கும்? அந்த முக்கியமான தாள்களை மையப்படுத்திய கதை சாத்தியம்தானா? இதுல இன்னொண்ணும் நினைவிருக்கட்டும் டாக்டர்... ஒன்பதரையிலிருந்து பத்து வரைக்கும் அவ அவளோட ரூம்ல தான் இருந்ததா சொன்னாலும் கூட அதை ஊர்ஜிதப்படுத்த நம்மகிட்டே சாட்சியம் கிடையாது.''

''நீங்க எனக்கு கிலிப்பிடிக்க வெக்கிறீங்க'' என்றேன் நான்.

''ஆனா எனக்கு எல்லாமே கொஞ்சங்கொஞ்சமா தெளிவாக ஆரம்பிக்குது. ஓ கே... இப்ப உங்களோட சொந்த முடிவுகளையும் தர்க்கங்களையும் எனக்கு சொல்லுங்க. ம், ஸ்டார்ட்.''

என் பாக்கெட்டிலிருந்து ஒரு சின்ன தாளை எடுத்துக் கொண்டேன் நான். ''சில ஆலோசனைகளை நான் கிறுக்கி வெச்சிருக்கேன்'' என்றேன் நான், மன்னிப்புக் கேட்கும் தொனியில்.

''எக்ஸலெண்ட் – உங்களுக்குனு ஒரு முறை வெச்சிருக்கீங்க. அவை என்னென்னனு கேட்போம்.''

மாபெரும் துப்பறியும் நிபுணருக்கு ஆலோசனைகளைத் தருவதால், அவற்றை நான் சற்றே லஜ்ஜையான குரலில் வாசிக்கலானேன். ''எதை ஆலோசித்தாலும் அதை தர்க்க ரீதியா – அதாவது லாஜிக்கலா – விளக்கியாகணும் —''

''ஆஹ்... ஜஸ்ட் அப்படியே என் நண்பன் ஹேஸ்டிங்ஸ் சொல்வதையே சொல்லி ஆரம்பிக்கிறீங்க'' என்று சின்னதாய் இடைமறித்த பொய்ரெட், ''ஆனா, பாவிப்பய... அப்படி செஞ்சது தான் இல்லே'' என்று தனது ஆத்ம நண்பனை எண்ணிப் புன்முறுவிக்

கொண்டார்.

நான் ஆரம்பித்தேன்:

"பாயிண்ட் 1 : மிஸ்டர் ஆக்ராய்டு யாருடனோ பேசிக் கொண்டிருந்தது ஒன்பதரை மணிக்குக் கேட்கப்பட்டிருக்கு.

"பாயிண்ட் 2 : மாலையையொட்டிய ஏதோ ஒரு சமயத்துல பேடன் ஜன்னல் வழியா ரோஜரோட அறைக்கு வந்திருக்கணும். ஜன்னலில் இருக்கும் கால்தடங்களின் சாட்சி தரும் விளக்கமிதுதான்.

"பாயிண்ட் 3 : மிஸ்டர் ஆக்ராய்டு அன்றைய மாலைப்பொழுது முழுக்க நரம்பதிர்விலேயே இருந்ததால அவருக்குத் தெரிஞ்ச யாரையோ மட்டும் தான் அவர் உள்ளே அனுமதிச்சிருக்க முடியும்.

"பாயிண்ட் 4 : மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டுடன் ஒன்பதரைக்கு இருந்த நபர் பணத்தைத் தான் கேட்டுக்கிட்டு இருந்திருக்கார். ரால்ஃப் பேடன் தம்புடி இல்லாம இருந்தார்னு நமக்குத் தெரியும்.

"இந்த நாலு பாயிண்ட்டுகளும் மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டுடன் ஒன்பதரை மணிக்கு இருந்த நபர் ரால்ஃப் பேடன் என்பதை நமக்கு நல்லாவே தெரிய வெக்குது. ஆனா நமக்கு மிஸ்டர் ரோஜர் ஒன்பதே முக்காலுக்கு உயிருடன் இருந்தார் என்பது தெரியும், ஆகையால், அவரை பேடன் கொல்லலே. ரால்ஃப் போகும்போது ஜன்னலைத் திறந்து வெச்சுட்டே போயிருக்கான். அதுக்கப்புறம் வந்தக் கொலைகாரன் அது வழியா நுழைஞ்சிருக்கான்."

"அந்தக் கொலைகாரன் தான் யாரு?" – விசாரணையில் இறங்கினார் பொய்ரெட்.

"அந்த அமெரிக்க அந்நியன். அவன் இந்தப் பார்க்கர் பய கூட கூட்டணியில இருந்திருக்கலாம்... மேலும் பார்க்கரிடம் நம்மால மிஸஸ் ஃபெர்ரர்ஸை ப்ளாக்-மெயில் செஞ்சவனை அடையாளம் காண முடியுது. அப்படினா, பார்க்கர் தான் அந்தப் பிச்சுவாக் கத்தியை எடுத்து அந்த அந்நியனிடம் கொடுத்து கொலை நடந்திருக்கணும்."

"இது ஒரு தியரி" என்று ஒப்புக்கொண்டார் பொய்ரெட். "நிச்சயமா உங்களுக்கு புத்திசாலித்தனம் சிலபடிகள் நிறையவேயிருக்கு. ஆனா

இது நிறைய விஷயங்களைக் கணக்குல எடுத்துக்காத தியரியா இருக்கு.''

''உதாரணமா—''

''அந்த டெலிஃபோன் கால்... தள்ளப்பட்டிருந்த நாற்காலி...

''கடைசியா நீங்க குறிப்பிட்டது அத்தனை முக்கியமானதுனா நீங்க நினைக்கிறீங்க?''

''தேவையற்றதாகவும் இருக்கலாம்'' – ஏற்றுக் கொண்டார் என் நண்பர். ''சாதாரணப் போக்குல கூட அந்த நாற்காலி இழுக்கப் பட்டிருக்கலாம்... ரேமண்ட்டோ அல்லது ப்ளண்ட்டோ உணர்ச்சிப் போராட்டத்துல தாங்களாகவே அதைப் பழைய இடத்துல செருகி விட்டிருக்கலாம். அப்புறம் அந்த காணாமல் போன நாற்பது பவுண்டுகள் வேற இருக்கு...

''ரால்ஃபுக்கு ரோஜர் ஆக்ராய்டால் தரபபட்டது'' என ஆலோசித்தேன் நான். ''முதல்ல மறுத்திருந்தாலும் அப்புறம் தந்துடலாம்னு அவர் முடிவெடுத்திருக்கலாம்.''

''அப்படியும், இன்னும் கூட ஒரு விஷயம் விளக்கப்படாம தொக்கி நிக்குது.''

''என்னது?''

''ஒன்பதரை மணிக்கு மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டுடன் இருந்தது ரேமண்ட் தான் அப்படினு, எதுக்காக ப்ளண்ட் அவரோட மனசுல அத்தனை ஸ்திரமா இருக்கார்?''

''இதைத்தான் அவரே விளக்கிட்டாரே...'' என்றேன் நான்.

''அப்படியே தான்னா நீங்க நினைக்கிறீங்க? ஓ கே... நான் இதுக்கு அதிகம் அழுத்தம் தரலே. இதுக்கு பதிலா, ரால்ஃப் பேடனுடைய தலைமறைவுக்கு என்ன காரணமிருக்கும்னு நீங்க சொல்ல வரீங்க... ம், இதைச் சொல்லுங்க.''

''இதை விளக்குவது கொஞ்சம் கஷ்டமான சமாச்சாரம்'' என்றேன் நான் மெல்லமாய். ''ஒரு மருத்துவராத்தான் நான் இதை பேசியாக வேண்டியிருக்கு. ரால்ஃபின் நரம்புகள் திருகிப் போய் கட்டுப்பாடிழந்திருக்கணும். அவர் கிளம்பிப் போன ஒரு சில நிமிடங்கள்லேயே – அதாவது புயலாய் ரெண்டு பேருக்குள்ளும் ஒரு சந்திப்பு நிகழ்ந்த பிறகு பேடன் கிளம்பிப் போன ஒரு சில

நிமிஷங்கள்லேயே – அவருடைய அங்கிள் கொலையாகி இருப்பதாய் கண்டுபிடிக்கப்பட்ட சேதியை அவர் கேட்ட நொடியில என்னமாய் ஆகியிருப்பார்... நொறுங்கிப் போயிருப்பார். தலைகால் தெரியாம ஓடி ஒளிஞ்சுட்டார். ஆண்கள் இப்படி நடந்துக் கொள்வதில் வெகு பிரசித்தம் – அவங்க மேல தப்பே இருக்காதபோது தப்பு இருப்பதாய் நடந்துக் கொள்வது.''

''ஆமாம், ட்ரூ'' என ஆமோதித்தார் பொய்ரெட். ''ஆனா நாம ஒரு விஷயத்திலிருந்து கண்களை அகற்றக் கூடாது.''

''என்ன சொல்லப் போறீங்கனு எனக்குத் தெரியும்'' என குறிப்பு தந்தேன் நான்: ''இலக்கு. மோட்டிவ். அவரோட அங்கிளுடைய மரணத்தாலே கொள்ளைக் கொள்ளையா செல்வத்தை அடையறார், கேப்டன் ரால்ஃப் பேடன்.''

''இது ஓர் இலக்கு.''

''அப்படினா?''

''நண்பரே... நம்ம முகத்துல அறையற மாதிரி மூன்று இலக்குகள் நின்னுக்கிட்டிருப்பது உங்க கண்ணுக்குத் தெரியலியா? யாரோ அந்த நீலநிற உறையையும் அதிலிருந்த பொருளடக்கத்தையும் சுருட்டிக்கிட்டு ஓடியிருக்காங்க. இது ஓர் இலக்கு. அப்புறமா, ப்ளாக்-மெயில்! மிஸஸ் ஃபெர்ரர்ஸை மிரட்டிய ஆளா ரால்ஃப் பேடன் இருக்கலாம். வக்கீல் ஹேமந்த் சொன்னதை நினைவில் வெச்சுக்கணும் – சமீபகாலமா ரால்ஃப் பேடன் பணம் வேண்டி அவருடைய அப்பா கிட்டே மனு போட்டதே கிடையாதாம். இதை கவனத்துல வெச்சுக்கிட்டா, வேற எங்கிருந்தோ அவருக்குப் பணம் சப்ளை ஆகிக்கிட்டே இருந்திருக்கு என்பது விளங்குது. கடைசியா நீங்க சொன்னது.''

''டியர் டியர்'' என்றேன் நான், மேற்கொண்டு எதையும் ஏற்றுக்கொள்ள மூளையில் இடமின்றி. ''அப்படினா இந்தக் கேஸ் அவரைச் சுட்டிக்காட்டி தானே நிக்குது!''

''அப்படியா?'' என்று கேட்டார் பொய்ரெட். ''இதுல தான் நீங்களும் நானும் வேறுபடறோம். மூன்று இலக்குகள் – ம்ம், டூ மச். இது சாத்தியமில்லை. எனவே ரால்ஃப் பேடன் குற்றமற்றவன் என்பதன் பக்கமே நான் சாய வேண்டியிருக்கு, டாக்டர்.''

அத்தியாயம் 14

மிஸஸ் ஆக்ராய்டு

மாலை நேரத்து சந்திப்பு முடிந்தவுடன், வழக்கு மாறுபட்ட வேறொரு பிரிவுக்குள் நுழைவதாய் நான் உணர்வது எனக்குப் புரிந்தது. இந்த முழு சமாச்சாரத்தையும், ஒன்றிலிருந்து மற்றொன்று துல்லியமாக வேறுபட்டிருப்பது விளங்கும் வகையில், இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ரோஜர் ஆக்ராய்டு வெள்ளியிரவு காலமானது முதல் திங்கட்கிழமை இரவு வரையில் விரிவது, பிரிவு 1. இது, ஹெர்குல் பொய்ரெட்டிடம் வழங்கப்பட்டது போல, இக்காலகட்டத்தில் என்ன நடந்துள்ளது என்பதன் நேரடி வர்ணனையாகும். இந்நேரம் நெடுகிலும் நானும் ஹெர்குல் பொய்ரெட்டின் தோள்களில் பஞ்சவர்ணக் கிளி போல தொற்றிக் கொண்டேதானிருந்தேன். அவர் எவற்றையெல்லாம் பார்த்தாரோ அவற்றையெல்லாம்தான் நானும் பார்த்தேன். அவர் சிந்தனையில் என்ன ஓடிக்கொண்டிருக்கின்றது என்பதைப் படிக்க நான் என்னால் ஆன அத்தனை சிரத்தைகளையும் செய்தேன். இதில் முழுக்கவும் நான் தோற்றுப் போயுள்ளேன் என்பது இப்போது தான் எனக்குப் புரிகின்றது. பொய்ரெட், அவருடைய அத்தனை கண்டுபிடிப்புகளையும் என்னிடமும் விரித்துப் போட்டாலும் – அந்தக் குளத்தில் கண்டெடுத்த தங்க மோதிரத்தை ஓர் உதாரணமாகக் கொள்ளுங்களேன் – அவற்றிலிருந்து அவர் உருவாக்கியிருந்த தர்க்க ரீதியான முக்கிய முடிவுகளை வெளியே சொல்லி விடாமல் அவருக்குள்ளேயே வைத்துக் கொண்டார். இவ்வாறான ரகசியம் அவரது அடிப்படை குணாதிசயம் என்பது எனக்குப் பிற்பாடு தெரிய

வந்தது. குறிப்புகளையும் துப்புகளையும் ஆலோசனைகளையும் கூட அவர் தூக்கி நம்முன்னால் போடுவாராம்... ஆனால் இவற்றிற்கு மேலே நமக்கு அவர் எதுவும் பண்ண மாட்டாராம்.

மேலே சொன்னதுபோல, திங்கள் இரவு வரை நடந்ததாய் நான் என்ன சொல்வேனோ அதையேதான் பொய்ரெட்டும் சொல்லக்கூடும். ஷெர்லக்குக்கு எப்படி வாட்ஸனோ அப்படி இங்கே இவருக்கு நான். ஆனால் திங்களுக்குப் பிறகு எங்களுடைய பாதைகள் விரிந்துப் போய் விட்டன. அவருக்குள்ளேயே பிஸியாகிப் போனார் பொய்ரெட். கிங்ஸ் அப்பாட் கிராமத்தில் எதையும், யாருக்கும் தெரியாமல் பண்ண முடியாது. ஆகையால் அவர் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறார் என்பதெல்லாம் என் காதுகளுக்கும் வந்தன. ஆனால் அங்கெல்லாம் அவர் என்னையும் நம்பிக்கைக்குகந்தவனாய் கொண்டு போக வில்லை. மேலும், நானும் கூட, என்னுடைய தொழிலால் மூழ்கித்தான் போனேன்.

திரும்பிப் பார்க்கும்போது, என்னை மிக அதிகமாக அறைவது என்னவென்றால், இக்காலகட்டம் முழுவதுமே துண்டுத் துண்டாய் அமைந்திருந்த போக்கு தான். இந்த மர்மத்தைத் தெளிவாக்கி விடுவதில் ஒவ்வொருவரும் அவர்தம் கையைப் பதித்திருந்தனர். இது ஒரு விடுகதை விளையாட்டுபோல, ஆளுக்கு ஆள், அவர்கள் கண்டு வைத்திருந்த துப்பு அல்லது அறிதலை மையமாய் கொண்டு, விடை தந்து தெளிவாக்கிவிட பாடுபட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களின் முயற்சி, 'முயற்சி' எனும் நிலையோடு அப்படியே நின்றுப் போனது. துண்டுத் துண்டாய் கிடக்கும் அத்தனையையும் அதனதன் இடத்தில் ஒட்டி முழு உருவத்தை உருவாக்கித் தருவது பொய்ரெட் ஒருவருடைய தலையாய கடமையாயிற்று.

சில விஷயங்கள், இதனோடு சம்பந்தப்படாததாகவும் அர்த்தமற்ற வைகளாகவும் தென்பட்டன. உதாரணத்துக்கு, கணுக்கால் வரை மூடும் காலணி வகைகளான *பூட்ஸ்* பற்றி... அதிலும் குறிப்பாக கறுப்பு பூட்ஸ்கள் பற்றி எழுந்த கேள்விகள். ஆனால் இது பின்னால் தான் வருகின்றது... வரிசையாக எடுத்துக் கொண்டு நான் பேச வேண்டியது அவசியம் என்றால், முதலில் நான் நேயர்கள் முன் வைக்க வேண்டிய விஷயம் திருமதி சிசில் ஆக்ராய்டிடமிருந்து எனக்கு வந்த

அழைப்பைத்தான் பேச வேண்டும்.

என்னை வரச்சொல்லி செவ்வாய்க்கிழமை காலையிலேயே ஆளனுப்பியிருந்தார் மிஸஸ் சிசில் ஆக்ராய்டு. வந்த தகவலில் மிக அவசரத்தை என்னால் உணர முடிந்ததால் விழுந்தடித்துக் கொண்டு ஓடினேன். அங்கு, மிஸஸ் மிக மோசமான நிலையில் கிடந்ததைப் பார்க்க.

அந்தப் பெண்மணி படுக்கையில் கிடந்தார். சூழ்நிலைக்கேற்றவாறு அவர் அப்படியே இணங்கிப் போயிருப்பதாய் பட்டது. அவரது எலும்பாயிருக்கும் கையை எனக்குக் கொடுத்த அவர் படுக்கை வரை இழுக்கப்பட்டிருந்த நாற்காலியொன்றை உட்காரும்படி சுட்டிக் காட்டினார்.

''வெல், மிஸஸ் ஆக்ராய்டு'' என்று ஆரம்பித்த நான், ''என்னாச்சு உங்களுக்கு?'' என்றேன்.

பொதுநல மருத்துவருக்கே உரிய மேதமை வழியப் பேசினேன் நான்.

''நான் உடைஞ்சு தெம்பில்லாம ஆயிட்டேன், டாக்டர்'' என்றார் அவர், அலறும் குரலில், த்ராணியற்று. ''போச்சு... சுத்தம். என் உடம்பை என்னாலயே தூக்க முடியலே. சத்தேயில்லே. ரோஜர் போயிட்டதன் தாக்கம். சம்பவம் நடக்கும்போது இப்படி 'வீக்'காகும்னு பொதுவா சொல்வாங்க. இது, பிறகு நேரும் உடைப்பு - உணர்ச்சிக் குமுறல்.''

நான் ஒரு டாக்டர். நோய் இருக்கிறதா... அல்லது மிகைப்படுத்தப் பட்டு காட்டப்படுகின்றதா... அல்லது நோயே இல்லையா என்று பேஷண்ட்டைக் கண்ட கணத்தில் என்னால் சொல்லி விட முடியும். மிஸஸைப் பொறுத்தமட்டில் 'முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது' என்பதற்கு இணையான எந்தப் பதத்தினையும் என்னால் இப்போது இட்டு நிரப்ப முடியும்!

ஆனால், மாறாக, டானிக் எழுதித் தந்தேன்! அதை ஏற்றுக் கொண்டார் மிஸஸ் ஆக்ராய்டு.

நடக்கும் கொலை விளையாட்டில் ஒரு நகர்த்தல் இப்போது முடிவுக்கு வந்து விட்டதாய் தோன்றியது. ரோஜர் ஆக்ராய்டின் மரணத்தால் உண்டாகியிருக்கும் 'ஷாக்'குக்கு நிவாரணம் ஏற்படுத்த வேண்டி எனக்கு ஆளனுப்பப் பட்டதாய் நான் துளி கூட ஒப்புக்கொள்ள

மாட்டேன். ஆனால், மிஸஸ் ஆக்ராய்டு, எந்த ஒரு சமாச்சாரத்தையும் வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டு எனும் பாணியில் நேரடியாய் ஆரம்பிக்கும் விவரணை துளியும் அற்றவர். சொல்ல வேண்டிய எதையுமே சுற்றி வளைத்துத்தான் அவர் அடைகிறார். ஆகவே என்ன காரணத்துக்காக அவர் எனக்கு தகவல் அனுப்பி வரவழைத்து உட்கார வைத்திருக்கிறார் என நான் வியந்துக் கொண்டிருந்தேன்.

''அப்புறம் – அந்தக் காட்சி'' என்று சற்று இடைவேளைக்குப் பிறகு ஆரம்பித்தார் என் நோயாளி.

நான் அடுத்து முன்னேற வார்த்தைகளைக் கொட்ட வேண்டும் என எதிர்பார்ப்பதைப் போல சற்று நிறுத்தினார் அவர்.

''எந்தக் காட்சி?'' என்று மட்டும் கேட்டேன் நான். நிஜமாகவே எனக்கு விளங்கவில்லை.

''என்ன கேட்கறீங்க டாக்டர்? அது – மறந்து கூட போகுமா? அந்த பயங்கரமான குள்ள பிரெஞ்சு ஆள் – அல்லது பெல்ஜிய ஆள்? – எப்படியோ போகட்டும். ஆக, வேற்றுநாட்டவன். என்னமா நம்ம அத்தனை பேரையும் நேத்து வாரிவிட்டுக்கிட்டிருந்தான். அது என்னை நொறுக்கிடுச்சு. ரோஜர் ஆக்ராய்டு மரண கிலிக்கு மேல இது!''

''வருந்தறேன், மிஸஸ் ஆக்ராய்டு'' என்றேன் நான்.

''என்ன நினைச்சுக்கிட்டிருக்கார் அவர்னு எனக்கு விளங்கலே – நம்மளைப் பார்த்து அந்தக் கத்து கத்தறாரு? நான் எதையாவது தகவலை மறைச்சு ரகசியமா வெச்சிருப்பதா கனவுல கூட நினைக்க மாட்டேன். என் கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்கும் அத்தனை உதவிகளையும் நான் போலீஸுக்குத் தந்திருக்கேன்.''

மிஸஸ் ஆக்ராய்டு நிறுத்த, நான் சொன்னேன்: ''ஒத்துக்கறேன்.'' தொடர்ந்து என்ன சங்கடம் விளையப்போகின்றதோ என்பதில் நான் யோசனையைப் போட ஆரம்பித்தேன்.

''என் கடமையிலிருந்து நான் தவறிட்டதா ஒரு பய சொல்ல முடியாது'' என்று கறாராய் தொடர ஆரம்பித்தார் அவர்: ''இன்ஸ்பெக்டர் ரக்லான் பரிபூரணமா திருப்தியடைஞ்சுட்டார்னு தான் சொல்வேன். எதுக்காக இந்த இத்துனூண்டு வெளிநாட்டுக் காரன் குதிகுதினு இப்ப குதிக்கணும்? பார்த்தாலே சிரிப்புப் பொத்துக்கிட்டு வரும் கோமாளிப்பய – சர்க்கஸ் க்ளவுன் போல. இவனைக் கொண்டு

வந்து கேஸ்ல போட்டாத்தான் ஆச்சுனு எதுக்காக ஃப்ளோரா குதிச்சதுனு தான் எனக்கு விளங்கலே. இப்படி செய்யப்போவதைப் பற்றி ஒரு வார்த்தை எனக்கு சொல்லலே அவ. கிளம்பினா... அவளாவே முடிச்சுட்டா. ஃப்ளோராவுக்கு ரொம்ப சுத்நதிரம் தரப்பட்டிருக்கு.நான் இங்கே இருக்கேன்... அவ அம்மா வேற. இந்த விஷயத்துல முதல்ல என்கிட்டே அறிவுரை கேட்க அவ வந்திருக்கணும்.''

இந்த அத்தனையையும் நான் அமைதியாய் கேட்டபடியிருந்தேன்.

''என்ன நினைச்சுக்கிட்டிருக்கார் அவர்?'' என்று மறுபடியும் பொருமினார். ''இதுதான் எனக்குத் தெரிஞ்சாகணும். நான் எதையோ மறைக்கிறேன்னு அவர் கற்பனை பண்றாரா? அவர் – அவர் – சந்தேகத்துக்கிடமின்றி நேற்று என்னைக் குற்றஞ்சுமத்தினார்.''

நான் என் தோள்களைக் குலுக்கி இதில் எனக்கு சம்பந்தமில்லை என்பதைப் போல உணர்த்தினேன். ''இதனால உங்களுக்குப் பெரிய பிரச்சினை எதுவும் கிடையாது, மிஸஸ் ஆக்ராய்டு'' என்றேன். ''நீங்க எதையும் மறைச்சு வைக்காததாலே, என்ன குறிப்பினை அவர் நேற்று தந்திருந்தாலும், அது உங்களைச் சார்ந்ததா இருக்க முடியாது.''

''இந்த வேலைக்காரங்க ஒருபக்கம்...'' என்று வேறு திசையில் நுழைந்தார் அவர். ''கிசுகிசுக்கறாங்க. அப்புறம் அவங்களுக்குள்ளேயே கூடிப் பேசிக்கிறாங்க. அப்படி இவனுங்க எடுக்கிற முடிவுதான் உண்மைபோல ஊரைச் சுத்தி வருது – பார்க்கப்போனா அதுல ஒரு மண்ணுமிருக்காது.''

''வேலைக்காரங்க கிசுகிசுக்கிறாங்களா?'' – கேட்டேன் நான். ''எதைப்பற்றி?''

மிஸஸ் ஆக்ராய்டு புத்திசாலித்தனமான பார்வையை என்மீது வீசினார். அது என்னை சற்று நிலைகுலையத் தான் வைத்தது.

''அது என்னனு, மத்தவங்களுக்குத் தெரியலைனாலும், உங்களுக்குத் தெரிஞ்சிருக்கணும், டாக்டர். நீங்க பொய்ரெட் கூட எப்பப்பாரும் இருந்தீங்க, உண்டா இல்லையா?''

''யெஸ். இருந்தேன்.''

''அப்போ உங்களுக்குத் தெரியும் – *தெரியும்.* அது அந்தப் பொண்ணைப் பற்றி – ஊர்மிளா. இவ கிளம்பறா இல்லியா – அதான், பேசித் தள்றாங்க. போறப் போக்குல எத்தனை சங்கடங்களை

உண்டுபண்ணிட்டுப் போக முடியுமோ அத்தனையையும் உண்டாக்கிட்டுப் போகப் பார்க்கிறா அவ – இயற்கைதானே! துவேஷமும் வன்மமும் கொண்ட படைப்புங்க. அந்தக் கூட்டமே அப்படித்தான். இப்ப, டாக்டர்... நீங்களும் அங்கே இருந்ததாலே, அவ என்ன சொன்னா என்பது உங்களுக்கும் தெரிஞ்சிருக்கணும், இல்லையா? எவ்விதமான தப்பபிப்ராயங்களும் சுத்திக்கிட்டே இருக்கக் கூடாது என்பதுல நான் படபடப்பா இருக்கேன், டாக்டர். தபாருங்க... போலீஸ்னு வந்து விசாரிச்சா நீங்க ஒவ்வொரு சின்னச்சின்ன ஒப்பேறாத தகவல்களையும் யோசிச்சு யோசிச்சு அவங்ககிட்டே சொல்லிக்கிட்டு இருக்க முடியாது – சரிதானே? எத்தனையோ குடும்ப சமாச்சாரங்கள் சலசலப்புகள் இருக்கத்தான் செய்யும் – கொலையோடு எவ்வித தொடர்பும் இல்லாம. ஆனா வஞ்சகமா எதையாவது பண்ண நினைச்சா, அந்தப் பொண்ணு இந்த சலசலப்புகளை வெச்சுக்கிட்டு கயிறு திரிக்கலாம், இல்லையா?''

கொட்டிக் கொண்டிருக்கும் இத்தனைக்கும் பின்னால் வெகு நிஜமான பதைபதைப்பு இருப்பதை அடையாளம் கண்டு விடுவதில் நான் சாதுர்யமாகவே இருந்தேன். பொய்ரெட், அவர் எடுத்த 'சிறு அளவளாவல்' முயற்சி சரியென்று, இதோ இவர் நிரூபித்துக் கொண்டிருக்கிறார். மிஸஸ் ஆக்ராய்டிடம் மறைத்து ரகசியமாக்க ஏதோ இருந்திருக்கின்றது. அந்த 'ஏதோ', என்னவாயிருக்கும் என்பதைக் கண்டுபிடிப்பது என் வேலை.

''நான் உங்க இடத்துலயிருந்தா, மிஸஸ் ஆக்ராய்டு'' என்று திடுமென பிரவேசித்த நான், ''எதையும் விட்டு வைக்காம அத்தனையையும் கொட்டித் தீர்த்திருப்பேன்'' என்றேன்.

இதற்கு சிறு அலறலையே வெளியிட்டு விட்டார் அவர். ''ஓ! டாக்டர்... எப்படி நீங்க திடுதிப்புனு இப்படி மிரட்டலாம்? நீங்க சொல்வதைப் பார்த்தா, நான் ஏதோ–ஏ-தோ...! ஆனா எல்லாத்தையும் சுலபமா விளக்கிடலாம் தெரியுமா?''

''சுலபமா? அப்படினா ஏன் அப்படி பண்ணலே?'' – நான் ஆலோசித்தேன்.

சரிகை வேயப்பட்டிருந்த கைக்குட்டையை இப்போது எடுத்துக் கொண்ட மிஸஸ் ஆக்ராய்டு கண்கவர் தேவதையாய் ஆனார்.

''எல்லாத்தையும் நீங்க மிஸ்டர் பொய்ரெட் கிட்டே கொண்டு போய் போட்டுடுவீங்கனு – அதாவது க்ளியரா விளக்கிடுவீங்கனு நினைக்கிறேன், டாக்டர். ஏன்னா, ஒரு வெளிநாட்டுக்காரனால நம்முடைய கோணத்தைப் புரிந்துக் கொள்வதென்பது இயலாத ஒன்று, இல்லையா? உங்களுக்குத் தெரியாது, டாக்டர் – ஏன், யாருக்குமே தெரியாது – எதை எதிர்த்துக்கிட்டு நான் இருந்தேன் என்பது. தியாகம் - கொள்கைக்காக செய்வது போன்ற நீளமான முடிவேயற்ற தியாகம். இப்படித்தான் என் வாழ்க்கையை வர்ணிக்க முடியும். போனவங்களைப் பற்றிக் குற்றங்கூற நான் விரும்பலே – ஆனா உண்மை அப்படித்தான். நாட்டின் மாபெரும் பணக்காரரா இருக்க வேண்டிய பேடனே வருஷத்துக்கு ஓரிரு நூறுக்கு கை நீட்டிக்கிட்டு நின்னான்னா – நீங்களே முடிவு பண்ணிக்குங்க.''

நிறுத்தி விட்டு சரிகைக் கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். ''இன்னும் பணம் தரப்படாத பில்கள். எங்க செலவு தான். சிலவற்றை நான் ரோஜரிடம் காட்டக்கூட பயப்படுவேன். இப்படியெல்லாமா செலவழிப்பதுனு கடிஞ்சுக்கிட்டு பணம் தராம விட்டிருப்பார். எங்களாலும் அத்தகைய செலவுகளை நிறுத்த முடியலே. கூடிக்கிட்டே போச்சு. புதுப்புது பில்களும் வந்துக்கிட்டே இருந்தது.''

விசித்திரமாய் பேசிக் கொண்டே போகும் அவருடன் நானும் பங்கேற்று துக்கம் அனுசரிக்க வேண்டும் என்பது போல இப்போது நிராதரவாய் என்னைப் பார்த்தார் அவர்.

''இது சிலருடைய குணம்'' என்றேன் நான் பட்டும்படாமல்.

இதற்கு அவருடைய குரல் பாவம் மாற்றங்கொண்டது – பயங்கரமாய் குற்றம் சுமத்துவது போல ஆனது. ''நான் நரம்பதிர்வுல மாட்டிக்கிட்டு திண்டாடினேன்னு ஒப்புக்கிறேன், டாக்டர். ராத்திரியில என்னால தூங்க முடியலே. இதயத்தை சுற்றித் தாங்க முடியாத அடி – படபடப்பு. அப்புறம் எனக்கு ஸ்காட்ச் ஜென்டில்மேன்கிட்டேயிருந்து கடிதம் வந்தது – சொல்லப்போனா ஜென்டில்மென்னுனு சொல்லணும்... ரெண்டு பேர். மிஸ்டர் ப்ரூஸ் மேக்பர்ஸன் மற்றும் காலின் மேக்டொனால்ட். எதிர்பாராத ஒற்றுமை.''

''வாய்ப்பில்லே'' என்ற நான், ''அவங்க ஸ்காட்ச் ஜென்டில்மென்னு இருக்கலாம், இருந்தாலும், அவங்க முன்னோர் குறிப்புல மத்திய

கிழக்கு வாடையை நான் பார்க்கிறேன்'' என்றேன்.

''பத்து பவுண்டிலிருந்து பத்தாயிரம் பவுண்டு வரை. ரொக்கமா. கை மேல'' என ஞாபகப்படுத்திக் கொண்டு முணுமுணுத்தார் அவர். ''இவனுங்கள்ல ஒருத்தனுக்கு நான் எழுதினேன். இதுல கஷ்டங்களிருப்பதா பட்டுது.''

இங்கு அவர் நிறுத்தினார். நுணுக்கமான பிரதேசத்துக்குள் உரையாடல் நுழைவதை நான் உணர்ந்துக் கொண்டேன். பேச வேண்டிய விஷயத்துக்குள் வரவே வராமல் தடுமாறும் இப்படிப்பட்ட ஒருவரை நான் பார்த்ததே கிடையாது.

''அதாவது...'' என முணுமுணுப்பாய் சொன்ன அவர், ''இதெல்லா பிரச்சினையுமே எதிர்பார்ப்பினால் தானே? உயில் சாசனம் பற்றிய எதிர்பார்ப்புகள். எனக்குனு ரோஜர் ஏதாவது விட்டு வைப்பார் என்பதுல எனக்கு நம்பிக்கையிருந்தாலும், ஸ்திரமா எனக்குத் தெரியாதே. எப்படியாவது அந்த உயிலை ஒரு தடவைப் பார்த்தால் தான்! – அதுக்குனு பணம் பணம்னு அலையறேன்னு எடுத்துக்க வேணாம் – அதுக்கேற்றாற் போல நான் என் எதிர்கால ஏற்பாடுகளைப் பண்ணிக்கலாமில்லையா?'' என்று முடித்தார்.

ஓரப்பார்வையில் என்னை நோட்டமிட்டார் அவர். இருவரின் நிலைமையுமே இப்போது கண்ணாடி போல மிகவும் நுண்மையாகிப் போனது. தோலுரிக்கப்பட்டு முன்னே நிற்கும் அசிங்கமான நிஜத்தினை, அதிர்ஷ்டவசமாக, புத்திசாலித்தனமாய் வேயப்படும் வார்த்தைகள் காப்பாற்றிக் கொண்டிருந்தன.

''என்னால இப்போ உங்ககிட்டே சொல்ல முடிவதெல்லாம், இது தான் டாக்டர்'' என துரிதமானார் அவர். ''நீங்க என்னைத் தப்பா எடைபோட மாட்டீங்க எனும் நம்பிக்கையில சொல்றேன். சரியான வகையில தப்பு நேராத முறையில இதை நீங்க திரு பொய்ரெட்டிடம் கொண்டு போய் சேர்க்கணும். இது நடந்தது வெள்ளிக்கிழமை மத்தியானம் —''

சட்டென்று முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டார். நிச்சயமற்று விழுங்கினார்.

''ம்'' என்று ஊக்கப்படுத்தும் வகையில் சொன்னேன். ''வெள்ளிக்கிழமை மத்தியானம்?''

''எல்லாரும் வெளியே போயிருக்காங்கனே நான் எடுத்துக்கிட்டேன். ரோஜர் ஆக்ராய்டுடைய படிக்குமறை வரைக்கும் நான் போனேன். அங்கே போவதற்கு எனக்கு மட்டுமே தெரிந்த ஓர் உண்மையான காரணம் உண்டு. ஆனா அங்கே போனதும் மேஜை முழுக்க ஆவணங்கள் அடுக்கப்பட்டிருப்பதைப் பார்த்ததும் எனக்குள்ளே ஒரு பொறி: 'அவரோட டேபிள் டிராயர்கள் எதிலாவது ரோஜர் உயிலை வெச்சிருப்பாரா?' இப்படி ஒண்ணை நினைச்சுட்டா அம்பா இயங்கிடுவேன் நான்–சின்னப் பொழுதிலிருந்தே இப்படித்தான். அந்த நொடியில நினைச்சதைப் பண்ணி முடிச்சுடுவேன். சாவியை – விட்டேற்றித்தனமா – டேபிளின் மேல் டிராயர்லியே விட்டு வெச்சிருந்தார் அவர்.''

''அப்படியா?'' என்றேன் நான் உதவுவதாய் எண்ணிக் கொண்டு. ''ஆக நீங்க மேஜையைத் துளாவினீங்க. உயில் கிடைச்சதா?''

இதற்கு மிஸஸ் ஆக்ராய்டு சிறு அதிர்ச்சியைக் காட்டிவிட, தேவையில்லாமல் உள்ளே நுழைந்து குழப்பி விட்டதை உணர்ந்துக் கலவரமானேன் நான்.

''எத்தனை பயங்கரமா சொல்லிட்டீங்க. ஆனா அப்படி எதுவுமே உண்மையா நடக்கலே.''

''அப்படித்தான் இருந்தாகணும்'' என்று அவசர அவசரமாய் ஒட்டினேன். ''தப்புத்தப்பா விஷயங்களை நான் பார்ப்பதற்காக நீங்க என்னை மன்னிக்கணும்.''

''ஆண்களே இப்படித்தான் விசித்திரமானவர்கள். நான் ரோஜராயிருந்திருந்தா, அந்த உயில் என்ன என்பதை அறிவித்து விட கொஞ்சமும் தயங்கியிருக்கவே மாட்டேன். ஆனா ஆண்கள் ரகசியமானவர்கள். சுயதற்காப்புக்காகனு நினைப்பு, அவங்களுக்கு.''

தொடர்ந்தார்:

''அந்த டேபிளின் கடைசி டிராயருக்கு நான் போனபோது, ஊர்மிளா போர்ன் உள்ளே வந்தா. இக்கட்டான நிலைமை. பட்டுனு டிராயரை மூடிட்டு நிமிர்ந்த நான் உடனடியா அவளோட கவனத்தை டேபிள் மேலயிருந்த ஒருசில தூசு தும்பு பக்கமா திருப்பினேன் நான். ஆனா அப்போ அவ பார்த்த பார்வை எனக்குக் கொஞ்சமும் பிடிக்கலே–முழு மரியாதையா தான் பார்த்தா. இருந்தாலும், அந்தக் கண்களில் திடீர்னு

வெளிப்பட்ட ஒரு ஒளி... அது எனக்குப் பிடிக்கலே. இறுமாப்பும் அவமதிப்பும் கலந்த ஒரு கலவை – விளங்குதா? எப்பவுமே அந்தப் பொண்ணை எனக்கு பிடிக்காது. அவ நல்ல வேலைக்காரி... மேம் மேம்னே குழைவா... தலைக்கு தொப்பி, சமையல் கவுன் இப்படி எதைப் போட்டுக்க சொன்னாலும் நோ சொல்ல மாட்டா... பார்க்கர் இல்லாம போய் இவ கதவைத் திறந்தானா, ரொம்பவும் நிஜமா 'அவங்க வீட்டுல இல்லைனு' அற்புதமா சொல்லிடுவா... சாப்பாட்டு மேஜைக்கு பக்கத்துல சாப்பிட்டு முடியற வரைக்கும் காத்திருக்கும்போது மற்ற சமையக்காரிங்க போல வித்தியாசமான ஓசைகளையெழுப்பி சீக்கிரம் சீக்கிரம்னு உணர்த்த மாட்டா...! சரியாப் போச்சு... எதுல விட்டேன்?''

''இத்தனை நல்ல குணங்களைத் தாண்டியும் அவளை உங்களுக்குப் பிடிக்கலேனு சொல்லிக்கிட்டிருந்தீங்க.''

''பிடிக்கவே பிடிக்கலே. அவ – விளங்கிக்க முடியாதவ. மற்ற ஏனையவர்களிடமிருந்து அவகிட்டே மட்டும் வித்தியாசமா என்னவோ இருந்தது. தேவைக்கு அதிகமா படிச்சிருக்கா – இதான்னு நினைக்கிறேன்.''

''இருக்கட்டும். அப்புறம் என்ன நடந்தது?'' – பொறுமை நழுவக் கேட்டேன் நான்.

''ஒண்ணுமில்லே. கடைசியில ரோஜரே வந்தார். வெளியே ஒரு சிறு நடை போய்ட்டு திரும்பியிருக்கார்னு நினைச்சுக்கிட்டேன். 'என்ன இதெல்லாம்?' என்றார் அவர். 'ஒண்ணுமில்லே'னேன் நான்; 'பஞ்ச் எடுக்க உள்ளே வந்தேன்'னேன். கையோட பஞ்ச்சை எடுத்துக்கிட்டு நானும் வெளியேறிட்டேன். ஊர்மிளா வரலே – அங்கேயே இருந்துட்டா. ரோஜர் கூட ஒரு நிமிஷம் பேச முடியுமானு அவ அவர்கிட்டே அனுமதி கேட்டுக்கிட்டிருந்தது எனக்குக் கேட்டது. படுக்க, நான் நேரா என் ரூமுக்குப் போயிட்டேன். ரொம்ப கலங்கிப் போயிருந்தேன்.''

இங்கு சற்று தயக்கம் இருந்தது.

''இதெல்லாம் மிஸ்டர் பொய்ரெட் கிட்டே நீங்க விளக்கிடுவீங்க, இல்லியா? இந்த இத்தனை சமாச்சாரமும் எத்தனை அற்பமானதுனு உங்களுக்கே கூட இப்ப புரிஞ்சிருக்கும். ஆனா, எல்லாரும் எதையோ

மறைக்கிறீங்க... மறைக்கிறீங்கனு அவர் கதறும்போது இது தான் எனக்கு சட்டுனு நினைவுக்கு வந்தது. இந்த போர்ன் பொண்ணு இதை வெச்சுக்கிட்டு ஓர் அசாதாரணக் கதையைப் பின்னி விட்டிருக்கலாம் – ஆனா நீங்க போய் விளக்கிடுவீங்க தானே?''

''இவ்ளோதானா?'' – நான் கேட்டேன். ''நீங்க எல்லாத்தையும் என்கிட்டே சொல்லிட்டீங்களா?''

''யெ-ஸ்'' – சொன்னார் மிஸஸ் ஆக்ராய்டு. ''ஓ, யெ-ஸ்'' என்று ஸ்திரமாய் வேறு மீண்டும் சொன்னார்.

ஆனால் என்னால் அவரிடம் விளைந்த கண நேர தயக்கத்தை அடையாளங்காண முடிந்தது. அவர் இன்னும் என்னத்தையோ சொல்லாமல் பின்னுக்குத் தக்க வைத்துக் கொள்கின்றார். அடுத்து நான் கேட்ட கேள்வியை, என்னுள்ளிருந்த சாதுர்ய புத்திசாலித்தனம் தான் செலுத்தியது என்பதில் சந்தேகமில்லை: ''மிஸஸ் ஆக்ராய்டு... அந்த ஸில்வர் டேபிளைத் திறந்தமேனிக்கு விட்டு வைத்த ஆள் – நீங்க தானா?''

பட்டென்று கேட்டார் அவர்: ''இதெப்படி உங்களுக்குத் தெரியும்?''

''அப்ப, அது நீங்க தான்?''

''யெஸ் – நான் – கவனியுங்க... அதுல ஓரிரு வெள்ளிகள் இருந்தன – கவர்ந்திழுக்கும் வகை. இது சம்பந்தமான கட்டுரைகளைப் படிச்சுக்கிட்டிருந்தேன் நான். அதுல படத்தோட ஒரு கட்டுரை. ரொம்ப சின்ன வெள்ளி அது. ஆனா ஏகமா பணத்தை அள்ளித் தந்திருக்கு. அது, அப்படியே அச்சுஅசலா, ஸில்வர் டேபிள்ல இருந்த சரக்கு மாதிரியே இருந்துது. அதை நான் லண்டன் போகும்போது கூடவே எடுத்துக்கிட்டு போய் அங்கே – அதை – அதை – வித்துடலாம்னு நினைச்சிருந்தேன். ஒருவேளை அது உண்மையிலேயே பத்திரிகையில போட்டிருந்த அந்த வெள்ளியைப் போலவே விலைமதிப்பற்றதுதான்னா, கிடைக்கும் பணம், ரோஜருக்கு என்ன மாதிரியான ஒரு சந்தோஷ ஆச்சரிய மாயிருக்கும்னு நினைச்சுப் பாருங்க.''

இதற்கு விமர்சனங்கள் எதுவும் தருவதிலிருந்து விலகி விட்ட நான், மிஸஸ் ஆக்ராய்டு சொல்வதை அப்படியே எடுத்துக் கொண்டேன். என்னயிருந்தாலும், அவருக்கு வேண்டியதை அவருடைய வீட்டிலிருந்தே இந்த மாதிரியாய் எடுக்க ஏன் அவர் முயற்சி செய்திருக்க

வேண்டும் என்ற கேள்வியைக் கூட நான் ஒதுக்கியே விட்டேன்.

''மூடியை ஏன் திறந்த மேனிக்கே விட்டுட்டீங்க'' என்று கேட்டேன் நான். ''மறந்துட்டீங்களா?''

''நான் பயந்துட்டேன்'' என்றார் அவர். ''வெளியே டெரஸ்ல காலடி சப்தங்கள் நெருங்குவதை நான் கேட்டேன். அறையிலிருந்து பரபரத்து வெளியேறினேன். பார்க்கர் உங்களுக்குக் கதவைத் திறந்து விடுவதற்கு முன்னாடியே நான் மாடியேறியிருந்தேன்.''

''அது ரஸ்ஸெல்லாயிருந்திருக்கணும்'' என்றேன் நான் சிந்தனையாய். மிஸஸ் மிகவும் இண்ட்ரஸ்ட்டிங்கான ஒரு தகவலை எனக்குத் தந்திருக்கிறார். இத்தனை பெரிய வெள்ளிக் கதை உண்மையோ பொய்யோ... அது என்னை ஈர்க்கவில்லை; மிஸ் ரஸ்ஸெல் வரவேற்பறைக்குள்ளே ஜன்னல் வழியாக நுழைந்திருக்க வேண்டும் என்ற புரிதலும், அவள் மூச்சு விட முடியாமல் வந்து நிற்பதைப் பார்த்து ஏதாவது ஓட்டப்பந்தயம் ஓடிவிட்டு வந்திருப்பாளோ என நான் சரியாக முடிவெடுத்திருந்ததும் என்னை மிகவும் ஈர்த்தன. எனில் அவள் எங்கே இருந்திருப்பாள்? சின்னத் தோட்ட அறையும் அங்கிருந்த கஞ்சித்துணியும் என் நினைவுக்குள் வந்தன.

அந்த நொடியில் கட்டுப்படுத்த முடியாமல், ''எனக்கு, மிஸ் ரஸ்ஸெல், அவங்களுடைய கர்சீஃபுக்கும் சேர்த்துக் கஞ்சி போடு வாங்களோ அப்படினு சின்ன சந்தேகமாயிருக்கு!'' என்று விட்டேன்.

''உங்களால பொய்ரெட் கிட்டே விளக்க முடியுமா...? ப்ளீஸ் சொல்லுங்க...?'' என்ற அவரது துணுக்குறல் என்னை மீட்டு வந்தது.

''ஓ நிச்சயமா. ஒண்ணு விடாம.''

பிறகு நான் கிளம்பினேன்.

அறைகளை சுத்தம் பண்ணும் அதே பெண் முன்னறையிலிருந்தாள். அவள் தான் என்னுடைய தொப்பி, கைத்தடி ஆகியவற்றை எடுத்து தந்து உதவியது. இதுவரை இல்லாத அளவுக்கு அவளை நான் மிக நெருக்கத்தில் கவனிக்க முடிந்தது. அவள் அழுதிருக்கிறாள் என்பது சுத்தமாய் புலப்பட்டது.

''அவருடைய படிக்குமறைக்கு ரோஜர் ஆக்ராய்டு தான் உன்னை வரச்சொன்னதா நீ எப்படி என்கிட்டே சொல்லியிருக்கலாம்? நீ தான் அவர்கிட்டே பேசணும்னு கேட்டுக் கொண்டதா இப்ப நான்

கேள்விப்படறேன்.''

என் பார்வைக்கு முன்னால் அப்பெண்ணின் கருவிழிகள் கவிழ்ந்து இறங்கி விட்டன. பிறகு அவள் நிச்சயமற்று சொன்னாள்: ''எப்படியிருந்தாலும் நான் கிளம்பறதுனு முடிவு பண்ணிட்டேன்.''

நான் பிறகு ஒன்றும் சொல்லவில்லை. அவள் எனக்காக வாசற் கதவைத் திறந்து விட்டாள். அதனைக் கடந்து நான் வெளியேறிக் கொண்டிருந்த போது அவள் தணிந்தக் குரலில் சொன்னாள்: ''எக்ஸ்க்யூஸ் மீ ஸார்... கேப்டன் பேடன் பற்றி ஏதாவது செய்தி உண்டா?''

மறுப்பாய் தலையசைத்தேன் நான். விசாரணையாய் பார்த்தேன்.

''அவர் திரும்பி வந்தாகணும்'' என்றாள். ''அவர் திரும்பி வந்தே ஆகணும்.''

உதவிகரம் கேட்கும் பார்வையோடு என்னை இப்போது பார்த்தாள் அவள். ''யாருக்காவது அவர் எங்கேயிருப்பார்னு தெரியுமா?'' – கேட்டாள்.

''உனக்கு?''–கூர்மையாய் பட்டென்று கேட்டேன் நான்.

''நோ. நோ. எனக்கு ஒண்ணும் தெரியாது. ஆனா அவரோட நண்பராயிருக்கும் யாராயிருந்தாலும் ஒண்ணே ஒண்ணைத்தான் சொல்வாங்க: அவர் திரும்பி வந்தாகணும்.''

இவ்வாக்கியம் குறித்து அந்தப் பெண் மேலும் ஏதாவது புரியும்படி கேட்பாள் என காத்திருந்தேன் நான். அவளுடைய அடுத்த கேள்வியே என்னை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.

''கொலை எப்போ நடந்ததுனு சொல்றாங்க? ஜஸ்ட்... பத்து மணிக்கு முன்னாடியா?''

''அது தான் ஊகம்'' என்றேன் நான். ''ஒன்பதே முக்காலிலிருந்து பத்து வரை.''

''முன்னாடி இல்லியே? ஒன்பதே முக்காலுக்கு முன்னாடி இருக்காதே?''

கவனமாய் அவளைப் பார்த்தேன். நான் ஆமோதிப்பாய் தான் பதில் தர வேண்டும் என்பதில் அத்தனை ஆர்வமாயிருந்தாள் அவள்.

''இந்தப் பேச்சுக்கே இடமில்லை'' என்றேன் நான். ''அவரை உயிரோட ஒன்பதே முக்காலுக்கு மிஸ் ஆக்ராய்டு பார்த்திருக்கா.''

அவள் திரும்பிக் கொண்டு விட்டாள். அவளுடைய முழு உடம்புமே தொய்ந்திருப்பதாய் பட்டது எனக்கு.

''அழகி'' – எனக்கு நானே சொல்லிக் கொண்டேன், வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது. ''அதியற்புத அழகி.''

கரோலின் வீட்டிலிருந்தாள். அவளைப் பார்க்க பொய்ரெட் வந்து போயிருக்கிறார்... இதை அவள் முக்கியமானதாகவும், இதில் அவள் மிக திருப்தி அடைந்தவளாகவும் கருதிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''வழக்கை நகர்த்த அவருக்கு நான் சகாயம் பண்ணிக் கிட்டிருக்கேன்'' என்றாள்.

இதற்கு நான் இருப்புக்கொள்ளாமல் ஆனேன். சாதாரணமாகவே கரோலின் ஒரு கெட்ட மூட்டை. அவளுடைய துப்பறியும் உணர்வுக் கிண்டப்பட்டு விட்டால் அவள் எப்படியிருப்பாள்...?!

''ரால்ஃப் பேடனுடைய மர்மத்தோழியைத் தேடிக்கிட்டு ஒரு சுத்துசுத்திட்டு வந்தியா நீ?'' என விசாரித்தேன் நான்.

''எனக்கு இஷ்டம் வந்தா அதை நான் பண்ணுவேன்'' என்றாள் அவள். ''ஆனா இது ஒரு ஸ்பெஷல் விஷயம். அவனுக்காக பொய்ரெட் என்னைக் கண்டுபிடிக்க சொல்லியிருப்பது.''

''என்னது அது?'' – நான் கேட்டேன்.

''ரால்ஃப் பேடனுடைய கால் வரை மூடும் பூட்ஸ், கறுப்பா ப்ரௌனானு அவருக்குத் தெரியணுமாம்'' என்று சொன்னாள் கரோலின் முழு உண்மைத்தன்மையுடன்.

நான் அவளைப் பார்த்து முறைத்தேன். இந்த பூட்ஸைப் பிடித்துக் கொண்டு இப்போது புதிதாய் தொங்க ஆரம்பித்துள்ளது ஒரு பெரிய முட்டாள்தனம் என இப்போது எனக்கு விமரிசையாய் தெரிந்தது. இந்த சமாச்சாரத்தில் என்ன இருக்கிறது என விளங்கிக் கொள்வதில் நான் முழுக்கவும் தோற்றுப் போனேன்.

பூட்ஸ்?

''அவை ப்ரௌன் ஷூஸ்'' என்றேன் நான். ''நான் அவற்றை பார்த்தேன்.''

''ஷூ கிடையாது ஜேம்ஸ். காது இருக்கா இல்லையா உனக்கு...?! பூட்ஸ். விடுதியில ரால்ஃப் வைத்திருந்த ஒரு ஜோடி பூட்ஸ் கறுப்பா ப்ரௌனானு பொய்ரெட் தெரிஞ்சுக்க விரும்பறார். அதுல வழக்கின்

நிறைய விஷயம் தொங்குது.''

அடிமுட்டாள் என்று என்னைக் கூப்பிடுவதானாலும் செய்யுங்கள். எனக்கு அப்படி எதுவும் முக்கியமாய் தொங்குவதாய் தென்பட வில்லை.

''அதை நீ எப்படிடீ கண்டுபிடிக்கப்போறே?'' என கேட்டேன் நான்.

இதில் எவ்வித கஷ்டமும் இருக்காது என்று சொல்லி விட்டாள் கரோலின். எங்களுடைய ஆன்னியின் நெருங்கிய தோழி தான் மிஸ் கன்னட்டின் வேலைக்காரி க்ளாரா. க்ளாராவுக்கு பூட்ஸ் போடும் வழக்கமிருந்திருக்கிறது – அந்த விடுதியில். முழு சங்கதியும் சுலபமாய் முடிந்திருக்கின்றது – க்ளாராவுக்கு ஒரு முறை விடுப்பு தருவதில் தாராளமாய் இருந்திருக்கிறார் மிஸ் கன்னட் – பிறகென்ன... நன்றி விசுவாசம் – கரோலின் துப்பறியும் இலாக்காவின் கண்டுபிடிப்பு எக்ஸ்பிரஸ் வேகத்தில் முடுக்கி விடப்பட்டு வெற்றி பெறலாம்.

நாங்கள் மறுபடியும் லஞ்சுக்கு உட்காரும்போது கரோலின் குறிப்பிட்டாள்: ''ரால்ஃப் பேடனின் பூட்ஸுகள் பற்றி...

''வெல்...'' என்றேன் நான். ''அதுக்கென்ன இப்ப சாப்பிடும் போது?''

''மிஸ்டர் பொய்ரெட் அவை ஒருவேளை ப்ரௌனாகயிருக்கலாம் அப்படி நினைக்கிறார். அவர் தப்பு. அவை – கறுப்பு.''

இது தான் சரி என அங்கீகரித்துக் கொண்டு பலமுறை தலையை ஆட்டிக் கொண்டாள் கரோலின். பொய்ரெட்டை இவ்விஷயத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்று விட்டதாய் வெளிப்படையாகவே காட்டிக் கொண்டாள் அவள்.

நான் பதிலேதும் தரவில்லை. இந்த வழக்கோடு அந்த பூட்ஸின் வண்ணம் என்ன வகையில் பங்கு கொண்டிருக்கின்றது என்று நான் புதிர் போட்டுக் கொண்டிருந்தேன்.

அத்தியாயம் 15

ஜியோஃபெர்ரி ரேமண்ட்

பொய்ரெட்டுடைய தந்திர உத்தி பெற்றுத் தந்துள்ள வெற்றிக்கு, அன்று எனக்கு இன்னொரு ஊர்ஜிதம் கிடைக்கும்படி ஆனது. அவருக்குள்ளேயே இருக்கும் அடித்துக் கொள்ள முடியாத சாதுர்யமாகப் பட்டது அவருடனேயே பிறந்துள்ள ஒரு மாபெரும் துப்பறியும் திறமை என்பதை அவர் விடுத்த சவால் நிரூபித்துக் கொண்டிருந்தது. பயம் மற்றும் குற்றவுணர்ச்சி ஆகியன கலந்தக் கலவை மிஸஸ் ஆக்ராய்டிடமிருந்து உண்மையை மூட்டை கட்டி மறைத்து வைத்திருந்தது. எனவே அப்பெண்மணி தான் சவாலுக்கு பதில் தர முதலில் திரும்பிவந்தவர்.

அன்று மதியம் என் நோயாளிகளைப் பார்த்து விட்டு நான் வீடு திரும்பியவுடன், ஜியோஃபெர்ரி ரேமண்ட் அப்போது தான் கிளம்பிப் போனதாய் சொன்னாள் கரோலின்.

ஹாலில் என் மேல் கோட்டினை மாட்டியபடி, ''அவர் என்னைப் பார்க்கணும்னாரா?'' என்றேன்.

''அவர் பார்க்க விரும்பியது மிஸ்டர் பொய்ரெட்டை'' என்றாள் அவள். ''*லார்ச்சஸ்* போய் பார்த்துட்டு இங்கே வந்திருக்கார். மிஸ்டர் பொய்ரெட் வீட்டுல இல்லே. மிஸ்டர் ரேமண்ட், அவர் இங்கே இருக்கலாம்... அப்படி இல்லேனா உனக்கு அவர் எங்கேயிருப்பார்னு தெரியலாம்னு நினைச்சுக்கிட்டு வந்தார்.''

''எனக்கு ஒண்ணும் தெரியாதும்மா.''

''காத்திருக்க வெக்க எவ்ளவோ முயற்சி செஞ்சேன்'' என்ற கரோலின், ''ஆனா அவரோ அரை மணி நேரத்துல *லார்ச்சஸு*க்கே

திரும்பி வரேன்னு சொல்லிட்டு கிராமத்துக்குள்ளே போயிட்டார். இதுல பரிதாபம் என்னனா... அவர் கிளம்பி தலை மறைஞ்ச அடுத்த நிமிஷம் இந்தப் பக்கம் மிஸ்டர் பொய்ரெட் வந்துட்டார்.''

''உள்ளே வந்தாரா?''

''நோ. இங்கே இல்லே. அவர் வீட்டுக்கு.''

''அதெப்படி உனக்குத் தெரியும்?''

''ஜன்னல் எதுக்கிருக்கு?''–சுருக்கமாய் சொல்லி விளங்க வைத்தாள் கரோலின்.

இந்த விஷயம் முழுக்கப் பேசி முடிந்து விட்டது எனப்பட்டது எனக்கு. ஆனால் அவளுக்கு வேறு மாதிரி பட்டிருக்கிறது. பின்வருமாறு அவள் கேட்டதை, நடந்த எங்களுடைய உரையாடலைத் 'தொடர்ந்தாள்' என்பதா அல்லது புதிதாய் 'ஆரம்பித்தாள்' என்பதா!

''நீ அங்கே போறே, இல்லே?''

''எங்கே?''

''லார்ச்சஸுக்குத்தான், வேறெங்கே?''

''மை டியர் கரோலின்'' என்று அசதியாய் அழைத்த நான், ''எதுக்காகடீ?'' என்று கேட்டேன்.

''அவரைப் பார்த்தாதான் ஆச்சுனு இருக்கார் ரேமண்ட்'' என்றாள் கரோலின். ''போனேனா என்ன ஏதுனு அத்தனையும் உன் காதுலேயும் விழும்.''

நான் என் புருவங்களை அபரிமிதமாய் உயர்த்தினேன். ''வம்பளப்பது, நான் செய்த ஒரு பூர்வஜென்ம பாவமாய் இப்பவும் என்னைத் தொடர்ந்து வரலே'' என்றேன் பச்சாதாபமின்றி. ''என் பக்கத்து வீட்டுல என்ன நடக்குதுனு மூக்கைத் துருத்திக்கிட்டு கவனிக்காம, என்னால என் வீட்டிலிருந்து வெளியில போக முடியும்... உள்ளே வர முடியும்.''

''முட்டாள்தனத்திலிருந்து மாறி நீ ஒரு புத்திசாலியா எழுந்திருக்கவே மாட்டியா?'' என்றாள் என் சகோதரி. ''நான் என்னவெல்லாம் தெரிஞ்சுக்கணும்னு நினைக்கிறேனோ அதையெல்லாம் தான் நீயும் தெரிஞ்சுக்கணும்னு விரும்பறே. ஆனா, நீ, ரொம்ப நேர்மை யானவன்... வம்பெல்லாம் அளக்காதவன். ப்ர்ர்ர்ர். அதனால அப்படி விரும்பறதை வெளியே காட்டிக்காம அலைவே... இல்லியா?!''

''ஆமாம் கரோலின்'' என அடித்துச் சொல்லிவிட்டு, நான் என்னறைக்குள் போய் விட்டேன்.

பத்து நிமிடங்கள் கூட ஆகியிருக்காது... கதவைத் தட்டி விட்டு உள்ளே நுழைந்தாள் கரோலின். அவள் கையில் ஜாம் போல ஏதோ நிரப்பப்பட்டிருந்த ஒரு ஜாடியை ஏந்தியிருந்தாள்.

''இந்த ஜாடி ஜாமைக் கொண்டு போய் உன்னால மிஸ்டர் பொய்ரெட்கிட்டே கொடுத்துட்டு வர முடியுமா, ஜேம்ஸ்?'' என்றாள் அவள். ''தரேன்னு நான் அவருக்கு சத்யம் பண்ணியிருந்தேன். வீட்டிலேயே பண்ணும் ஜெல்லி ஜாமை அவர் டேஸ்ட் பண்ணியதேயில்லையாம் – பாவம்!''

''ஏன்... ஆன்னி போக முடியாதோ?'' – வெறுப்பாய் கேட்டேன் நான்.

''அவ வேற வேலையைப் பார்த்துக்கிட்டிருக்கா. அவளை என்னால இப்போதைக்கு அவுத்து விட முடியாது. சூடாயிருக்கும்போதே குடுத்துட்டு வாடா.''

நானும் கரோலினும் ஒருவர் மாற்றி மற்றவரைப் பார்த்துக் கொண்டோம்.

''சரி'' என எழுந்தேன் நான். ''இந்த சனியனைத் தூக்கிட்டுப் போகும் நான் வாசல்லேயே வெச்சுட்டுத் திரும்பிடுவேன். என்ன சொல்றேன்னு புரியுதா?''

இப்போது கரோலின் புருவங்களைத் தூக்கிக் காட்டினாள். ''பின்னே!'' என்று வேறு சிரித்தாள். ''அங்கே பிறகு வேற எதையாவது பண்ணுனு நான் சொன்னேனா என்ன?''

பற்களை உள்ளூர நறநறத்துக் கொண்டே, வெளியேற வாசற்கதவை நான் திறந்தபோது, ''ஒருவேளை மிஸ்டர் பொய்ரெட்டைப் பார்க்கும்படி ஆகிட்டா...'' என்ற அவள், ''மறக்காம அவர்கிட்டே நீ அந்த பூட்ஸ் பற்றி சொல்லிடு'' என்றாள்.

குறி பார்த்து பாயும் புலியின் தீவிரம். அவள் இப்போது அங்கே என்னை எதற்காக அனுப்பிக் கொண்டிருக்கிறாள் என்பதை அழகாய் சொல்லி முடித்து விட்டாள். எனக்கும் அந்த பூட்ஸ் என்னுள்ளே உண்டுபண்ணியிருக்கும் குழப்பத்தைத் தீர்த்துக் கொள்வதில் படபடப்பு இருக்கத்தான் செய்தது. அவர் வீட்டுக்கதவு திறக்கப்

பட்டதும், இயந்திரத்தனமாக என்னையுமறியாமல் மிஸ்டர் பொய்ரெட் உள்ளே இருக்கின்றாரா என்று கேட்கும்படித்தான் ஆனது.

உடனே துள்ளிக்குதித்து முன்னால் வந்த பொய்ரெட் என்னை அத்தனை குதூகலத்தையும் திரட்டிப் போட்டு வரவேற்றார். ''உட்காருங்க முதல்ல, மை குட் ஃபிரண்ட்'' என்றார். ''பெரிய சேர் வேணுமா? சின்னதே சரியாயிருக்குமா? ரூம் சில்லுனு இருக்கு, இல்லே?'' என்றெல்லாம் உபசரித்தார்.

எனக்கென்னவோ ரூம் இறுக்கமாய் இருப்பதாய் தான் பட்டது... ஆனால் அப்படி சொல்வதைத் தவிர்த்து விட்டேன். ஜன்னல்கள் சாத்தப்பட்டிருக்க, பெரிய ஜன்வாலைக் கனப்பில் கனன்றுக் கொண்டிருந்தது.

''இந்த இங்கிலீஷ் மக்களுக்கு புத்தம்புதுக் காற்றுனா பைத்தியம்'' என்றார் பொய்ரெட். ''பறபறக்கும் புதுக்காற்று நிறையவே வெளியிலிருக்கு, அது எங்கிருக்கணுமோ அங்கு. அதைப் போய் எதுக்கு வீட்டுக்குள்ளே விட்டுகிட்டிருக்கணும்? சரி... அதையெல்லாம் விட்டுடுவோம். எனக்கு ஏதாவது கொண்டு வந்திருக்கீங்களா, ஆங்?''

''ரெண்டு சமாச்சாரங்கள்'' என்றேன். ''ஒண்ணு – இது – ஜெல்லி ஜாம்.''

ஜாடியை அவர் கைக்கு மாற்றினேன்.

''மேடம் கரோலின் தான் எத்தனை கனிவாயிருக்காங்க. ஆஹ்... அவங்க கொடுத்த சத்யத்தை நினைவிலேயே வெச்சிருந்திருக்காங்க. இன்னொண்ணு?''

''தகவல் – ஒருவகையான தகவல்.''

பிறகு அவரிடம் எனக்கும் மிஸஸ் ஆக்ராய்டுக்குமிடையே நடந்த சம்பாஷணை முழுவதையும் சொன்னேன். ஈடுபாடாய் கேட்டார், ஆனால் அதீத கிளர்ச்சி கொள்ளவில்லை.

''இது அடிப்படை தகவல் ஒன்றை ஊர்ஜிதமாக்கித் தருது'' என்றார். ''மேலும், இது, வீட்டின் தலைமை வேலைக்காரி சொன்ன சாட்சியத்தை ஊர்ஜிதப்படுத்தித் தருது. அவ சொன்னது ஞாபக மிருக்கா... ஸில்வர் டேபிளோட மூடி திறந்திருந்ததாகவும் அப்படி போகும்போது அதை அவ மூடினதாகவும் சொன்னா அவ.''

''பூக்கள் எல்லாம் வாடாம இருக்கானு பார்க்கத்தான் வரவேற்

பறைக்குப் போய் வந்ததா அவ சொன்னதுல எத்தனை தூரத்துக்கு உண்மையிருக்கு?''

''ஆஹ்! அதை நாம கொஞ்சம்கூட பொருட்படுத்தவேயில்லை, அப்படித்தானே ஃபிரண்ட்? அது தப்பிக்க சொன்ன ஓர் அவசர மன்னிப்பு! அங்கிருக்கும் அவளோட இருப்பினை நியாயப்படுத்த அவளுக்கு அவசரம்... அவளா ஒரு கற்பனையை உருவாக்கிக்கிட்டா. இப்படி ஒண்ணைச் சொன்னாத்தானே நீங்க மேற்கொண்டு ஊர்ஜிதப்படுத்திக்க முயல முடியாது'' என்றவர், சிந்தனையாய் சொன்னார்: ''அவ அந்த ஸில்வர் டேபிள்ல எதையோ நோண்டிக்கிட்டு இருந்ததாலே தான் அவளுக்குப் படபடப்பு இருந்ததுனு நான் இதுவரை சிந்திச்சுக்கிட்டிருந்தேன். ஆனா, ஐ திங்க்... இனிமே இதுக்கு நாம வேற காரணத்தைத் தேட வேண்டியிருக்கு.''

''யெஸ்'' என்று ஏற்றுக்கொண்டேன் நான். ''வெளியே யாரைப் பார்க்க அவ போயிருந்தா? ஏன்?''

''யாரையோ பார்க்கத்தான் அவ போயிருந்தானு நீங்க நினைக்கிறீங்களா?''

''அப்படித்தான்.''

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தார். ''நானும் – அப்படித்தான்'' என்றார் சிந்தனையுடன்.

இப்போது சிறு தயக்கம் நிலவியது.

''இதுக்கு நடுவுல...'' என்ற நான், ''உங்களுக்கு என் சகோதரியிட மிருந்து ஒரு சேதி கொண்டு வந்திருக்கேன்'' என்றேன். ''ரால்ஃப் பேடனின் பூட்ஸுகள் கறுப்பு – ப்ரௌன் கிடையாது.''

இந்தத் தகவலைத் தந்துக் கொண்டிருக்கும் போது அவரை நான் நெருக்கமாய் கவனித்தபடியிருந்தேன். அப்போது கணநேர அமைதி யின்மை அவர் முகத்தில் விளைந்ததாய் ஞாபகம்... ஆனால் அது உருவான கணத்தில் கலைந்து விட்டது.

''அவை ப்ரௌன் கிடையாது என்பதில் அவங்க முழு ஸ்திரமா இருக்காங்களா?''

''அடிச்சு சொல்றா.''

''ஆஹ்!'' என்று துயரமாய் குறிப்பிட்டார் பொய்ரெட். ''இது – பரிதாபம்.''

வானமிடிந்துத் தலையில் விழுந்ததைப் போலானார். மேற்கொண்டு எவ்வித விளக்கங்களுக்கும் நுழையாமல், புதிதாய் ஒரு விஷயத்தைப் பேச ஆரம்பித்து உரையாடலின் திசையை மாற்றி விட்டார்.

''அந்தத் தலைமை வேலைக்காரி – ரஸ்ஸெல் – அவ, கடந்த வெள்ளிக்கிழமை உங்களைக் கலந்தாலோசிக்க வந்தபோது – கேட்பதற்கு மன்னிக்கணும்... மருத்துவ சிகிச்சையைத் தவிர வேறு ஏதாவது பேச்சு இடம்பெற்றதா?''

''தாராளமா கேளுங்க... எதுக்கு மன்னிப்பு கேட்கணும்?'' என்று அவருக்குள்ள உரிமையைச் சுட்டிக்காட்டிய நான் சொன்னேன்: ''மருத்துவரீதியான ஆலோசனைகள் முடிஞ்சதும் சில நிமிஷங்கள் விஷம் பற்றிப் பேசினாங்க. அதைக் கண்டுபிடிப்பதுல உள்ள சுலப முறைகள் மற்றும் கடினமான நிலைப்பாடுகள் ரெண்டையும் கேட்டுக்கிட்டாங்க. அப்புறம் போதை பற்றி. நிறைவா போதை அடிமைகள் பற்றி.''

''கோகைனை முக்கியப் பொருளாக்கி, ஆங்?''

''இதெப்படி உங்களுக்குத் தெரியும்?'' – கேட்டேன் ஆச்சரியம் தாளாது.

இதற்கு விடையாக, அந்தக் குள்ள மனிதர் எழுந்து, அறைக்குக் குறுக்காய் நடந்து செய்தித்தாள்கள் சீராய் அடுக்கி வைத்திருக்கும் பகுதிக்குப் போனார். 16 வெள்ளி என தேதியிடப்பட்டிருந்த டெய்லி பட்ஜெட் செய்தித்தாளை எடுத்து, அதில், கோகைன் கடத்தல் பற்றியிருந்த கட்டுரை ஒன்றைக் காட்டினார். அது ஒரு நீர்த்துப் போனக் கட்டுரை – புகைப்படங்களை மட்டுமே நம்பி பெருசுபெருசான படங்களோடு வந்திருந்த அதிக மதிப்பற்ற கட்டுரை.

''இது தான் கோகைன் பற்றி அவங்களோட சிந்தனையை விரட்டியிருக்கு, நண்பா'' என்றார்.

இப்படி இவர் சுட்டிக்காட்டுவதன் அர்த்தம் எனக்குப் பிடிபடாததால் இது குறித்த மேலும் வினா-விடை நிகழ்ச்சியை நான் தொடர்ந் திருப்பேன்... அப்போது பார்த்து கதவு மட்டும் தட்டப்படாம லிருந்திருந்தால். கதவு திறக்கப்பட்டது. ஜியோஃபெர்ரி ரேமண்ட்.

எப்போதும் போலவே கிளுகிளுப்புடனும் புது சிலிர்ப்புடனும் நுழைந்த அவன், எங்களிருவரையும் இனிமையாய் வணங்கினான்.

''எப்படியிருக்கீங்க டாக்டர்? மிஸ்டர் பொய்ரெட்... இன்னிக்குக் காலையிலிருந்து நான் இங்கே வருவது இது ரெண்டாவது தடவை. உங்களைப் பிடிச்சுடணும்னு நான் பரபரப்பாயிருக்கேன்.''

''நான் கிளம்பிடறது நல்லதுனு தோணுது'' என்றேன் நான், ரேமண்ட் விஷயத்துக்குள் நுழைவதற்குள்.

''நான் வந்ததால நீங்க போவதா இருக்க வேண்டாம், டாக்டர். இவ்ளோ தான் விஷயம் —'' என, பொய்ரெட் கை காட்டிய இருக்கையில் அமர்ந்தபடி ஆரம்பித்து விட்டான் அவன்: ''நான் ஒரு விஷயத்தை ஒப்புக்கிறதுக்காக இங்கே வந்திருக்கேன்.''

''பாவ மன்னிப்பு?'' என கண்ணடித்தார் பொய்ரெட்.

''இதுல பாவம் கிடையாது... ஸோ மன்னிப்பு வகையில சேர்க்க முடியாது. ஜஸ்ட்... ஒப்புக்கொள்ளுதல். இதுல எதனோடும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. ஆன, சொல்லப்போனா, நேற்று மத்தியானத்திலிருந்து என் மனச்சாட்சி என்னைக் குடைஞ்சுக்கிட்டேயிருக்கு. நாங்க எல்லோரும் எதையோ சொல்லாம, வேணும்னே மறைச்சு வெச்சுப்பதா நீங்க குற்றஞ்சுமத்தினீங்க, மிஸ்டர் பொய்ரெட். எனக்குள்ளே குற்றமிருப்பதா பட்டுது. எனக்குள்ளே – யெஸ் – விஷயமிருக்கு.''

''அப்படினா, அது என்ன மிஸ்டர் ரேமண்ட்?''

''நான் சொன்னது மாதிரி, இது எதனோடும் ஒட்டாத விஷயம் ஜஸ்ட், இதோ, இதுதான்: நான் கடன்லயிருந்தேன் – ஒத்துக்கறேன். அடைச்சாகணும், உடனடியா. கழுத்தை நெரிச்சாங்க. உயில் மூலமா அந்தத் தொகை எனக்கு மிகச்சரியான நேரத்துல வந்து சேர்ந்தது. ஐநூறு பவுண்டுகள்... வாவ். இந்தத்தொகை என் கடனெல்லாம் தீர்ந்து நான் மறுபடியும் நிறைவா வாழ்க்கைப் பாதையில நடக்க வழி செஞ்சுத் தந்துது.''

எங்களிருவரையும் பார்த்து அப்படியே சுவீகரித்து விடும் ஒளிவுமறைவேயற்ற வெளிப்படையான புன்னகையை அவர் வீச, அது, அவரை விட்டு விலகமுடியாத அளவுக்கான அழகு இளைஞனாய் அவரை ஆக்கித் தந்தது.

''சொன்ன விஷயத்தின் சாராம்சம் புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன். சந்தேகமே உருவான போலீஸ்காரனுங்க நாம பணமுடையில

தவிச்சுக்கிட்டிருந்ததா சொன்னோம்னு வெச்சுக்கங்க... அதை அப்படியே ஒரு நிஜ வாக்கா எடுத்துக்க மாட்டாங்களே. அதுல தப்பர்த்தம் தேடுவானுங்க. ஆனா நான் இதை மறைச்சிருக்கக் கூடாது – முட்டாள், முட்டாள். நானும் ப்ளண்ட்டும் தான் ஒன்பதே முக்காலி லிருந்து பில்லியர்ட் அறையே கதினு கிடந்தோமே – இப்படி ஒரு நீர்ப்புகாப் பெட்டி போல சாட்சி கை மேல இருக்கும்போது என்ன பயம்? இத்தனையிருந்தாலும், நீங்க நேத்து வந்து எதையோ மறைக்கறீங்க அது இதுனு ஓர் இடி போல சொன்ன போது... தேவையேயில்லாம நெஞ்சுக் குத்தப்படுவதை நான் உணர்ந்தேன். அதை மனசிலிருந்து சரி பண்ணிப்பது தான் நல்லதுனு வந்துட்டேன்.''

எழுந்துக் கொண்டார். எங்களைப் பார்த்தபடி அதே வெள்ளந்திச் சிரிப்பினைக் கொடுத்தார்.

''நீங்க ரொம்ப புத்திசாலி இளைஞன்'' என்றார் பொய்ரெட், அவரைப் பார்த்து அங்கீகரிப்பாய் சிலமுறை தலையசைத்தபடி. ''ஒண்ணு புரிஞ்சுக்குங்க... யாராவது என்கிட்டேயிருந்து எதையாவது மறைக்கிறாங்க அப்படினு நான் நினைச்சா, அப்படி மறைக்கப்படுவது படுமோசமான விஷயமாத்தானிருக்கும்னே நான் கற்பனை பண்ணிக்கிறேன். நீங்க நல்லா பண்ணிட்டீங்க – புரிய வெச்சுட்டீங் கன்னேன்.''

''சந்தேகத்திலிருந்து நான் விலகிட்டேன்னு நினைக்கும்போது நிம்மதியாயிருக்கு'' – சிரித்தார் ரேமண்ட். ''இனி பாரம் கிடையாது.''

''இது தான் விஷயம்'' என்றேன் நான் ஈர்க்கும் இளைய காரியதரிசி வெளியேறி கதவினை அறைந்து மூடியபோது.

''யெஸ்'' – ஏற்றுக்கொண்டார் பொய்ரெட். ''ஆனா ஒருவேளை இவர் பில்லியர்ட் அறையில இல்லாம போயிருந்தா? யாருக்குத் தெரியும்? சொல்லப்போனா, பற்பல கொலைகள், ஜஸ்ட் ஐநூறுக்கும் கம்மியான தொகைக்கு ஆசைப்பட்டு அரங்கேறியிருக்கு. எந்தத் தொகை ஒரு மனுஷனை அவன் சுயக்கட்டிலிருந்து அவிழ்த்து விட்டுடும் என்பதைப் பொறுத்தது – கொலை. எல்லாம் ஐன்ஸ்டீனின் சார்ப்புக்கொள்கை போன்றது தான், ஆங்? ஒரு விஷயத்தை நீங்க கவனிச்சீங்களா, டாக்டர்–மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டுடைய மரணத்தால அந்த வீட்டுல பல பேருக்கு நல்ல லாபம் கிடைக்குது. மிஸஸ் சிசில்

ஆக்ராய்டு, மிஸ் ஃப்ளோரா ஆக்ராய்டு, யங் மிஸ்டர் ரேமண்ட், வீட்டு வேலைக்காரி ரஸ்ஸெல். ஒருத்தருக்குத் தான் ஒண்ணும் போகலே – மிஸ்டர் ப்ளண்ட்.

இந்தப் பெயரை அவர் சொன்னது மிகமிக விசித்திரமாய் இருந்ததால் நான் விளங்காமல் நிமிர்ந்து அவரைப் பார்த்தேன். ''என்ன சொல்ல வரீங்கனு புரிஞ்சிக்க முடியலே.''

''நான் குற்றஞ்சுமத்தினவங்கள்ல ரெண்டு பேர் என்னிடம் உண்மையைத் தந்துட்டாங்க.''

''மேஜர் ப்ளண்ட் கிட்டேயும் எதையோ மறைச்சுப் பதுக்க வேண்டிய விஷயமிருக்குனா நினைக்கிறீங்க?''

''இந்தக் கேள்விக்கு பதிலா இளையவர்கள் பற்றி சொல்லப்படும் ஒரு முதுமொழியைத் தான் பதிலாக்க வேண்டியிருக்கு: 'காதலை மட்டும் மறைக்கத் தெரிந்தவர்கள் இளைஞர்கள்.' ஆங், ஆனா ஒண்ணு... விஷயத்தை மறைப்பதுல, பாவம் இந்த ப்ளண்ட், தெம்பற்றவர்!''

இப்போது, ''சில சமயங்கள்ல...'' என ஆரம்பித்த நான், ''ஒரு விஷயத்துல இன்னும் நாம சரியான முடிவு பற்றிப் பேசலியோனு எனக்குத் தோணுது.''

''எது, அது?''

''மிஸஸ் ஃபெர்ரர்ஸின் ப்ளாக்-மெயிலர் தான், அந்தக் கொலைகாரனாகவும் இருந்தாகணும்னே நாம நம்பிக்கிட்டிருக்கோம். இதுல நாம தவறு இழைச்சிருக்கக் கூடாதா?''

பொய்ரெட் உத்வேகமடைந்து ஏற்றுக் கொண்டார்.

''வெரி குட். யெஸ் – நிச்சயமா இதுக்கு வெரி குட்டேதான். இந்த சிறந்த ஐடியா உங்களுக்கு வருமானு நான் எதிர்பார்த்துக்கிட்டிருந்தேன். நிச்சயமா இது சாத்தியம்தான். ஆனா நாம இன்னொரு விஷயத்தையும் நினைவில வெச்சுக்கணும். கடிதம் காணாமப் போயிடுச்சு. இது, நிச்சயம் நீங்க சொல்ற மாதிரி, கொலைகாரன் தான் அதைக் கொண்டு போயிட்டான்னு சுட்டிக் காட்டலே. நீங்க முதல்ல உடலைப் பார்த்தபோது, நீங்களும் கவனிக்காத வகையில் பார்க்கர் அதை அப்படியே அபகரிச்சிருக்கலாம்.''

''பார்க்கர்?''

''யெஸ் – பார்க்கர். நான் எப்பவுமே சுழன்று வந்துக் குவிவது பார்க்கரிடம் தான். கொலைகாரன் என்ற நோக்கத்துல இல்லே – நோ, அவன் கொலையைப் பண்ணலே. ஆனா, மிஸஸ் ஃபெர்ரர்ஸை மிரட்டியே கொன்ன அந்த ப்ளாக்-மெயில் பொறுக்கியா, பார்க்கரை விட வேறு யார் பொருத்தமா இருந்துட முடியும்? கிங்ஸ் படாக் மாளிகை வேலைக்காரங்க கிட்டேயிருந்தே இந்த பார்க்கர் திரு ஃபெர்ரர்ஸின் மரணம் குறித்த அத்தனை தகவல்களையும் கறந்திருப்பான்.''

''பார்க்கர் அந்த லெட்டரை அமுக்கியிருக்கலாம்''–இப்போது நான் ஏற்றுக் கொண்டேன். ''அது காணாமப் போயிடுச்சுனு நான் கவனிப்பதற்கு கொஞ்சம் முன்னாடி தான் அது நடந்திருக்கணும் – யெஸ்.''

''இந்தக் 'கொஞ்சம் முன்னாடி' என்பது எத்தனை? இது முக்கியம். மேஜர் ப்ளண்ட்டும் ரேமண்ட்டும் அறைக்குள்ளே வந்துட்ட பிறகா? அல்லது நுழைவதற்கு முன்னாடியேவா?''

''நினைவுபடுத்த முடியலே'' என்றேன் நான் மெதுவாய். ''முன்னாடினு தான் நினைக்கிறேன் – ம்ம், பிறகு தான்! இருங்க, இருங்க... எது சரி? ஆங்... அவங்க வருவதற்கு முன்னாடி தான், யெஸ்.''

''நிச்சயமா?''

''முக்காவாசி அப்படித்தான் நினைக்கிறேன். யெ-ஸ்.''

''அப்படினா, இந்தத் தேடுதல், மூணு பேரை நோக்கி நீளுது'' – சிந்தனையோடு சொன்னார் பொய்ரெட். ''ஆனா பார்க்கர் தான் சாதகமா படுது. ஆங்... இந்த பார்க்கர் பயலை வெச்சுக்கிட்டு ஒரு சிறு பரிசோதனைப் பண்ணிப் பார்த்துடணும்னு எனக்குள்ளே ஓர் எண்ணம் இருந்துக்கிட்டேயிருக்கு. இப்பவே பண்ணிட்டா என்ன, ஃபிரண்ட், ஆங்? ஃபெர்ன்லி வரை வர முடியுமா?''

நான் உடனடி சம்மதம் தந்துவிட, இருவரும் தாமதமின்றி வெளியேறினோம். அங்கு மிஸ் ஆக்ராய்டைப் பார்க்க வேண்டும் என பொய்ரெட் தெரிவிக்க தற்சமயம் ஃப்ளோரா எங்களிடம் வந்து நின்றாள்.

''டியர் மேடம் ஃப்ளோரா'' என அறிவித்த பொய்ரெட், ''நான்

உங்ககிட்டே ஒரு சின்ன ரகசியத்தை சொல்ல வந்திருக்கேன். பார்க்கர் குற்றமற்றவன் என்பதுல எனக்கு இன்னமும் முழு திருப்தி உண்டாகலே. உங்க துணையோட ஒரு சின்ன பரிசோதனையைச் செய்து பார்க்க எண்ணம். அன்னிக்கு ராத்திரி இடம்பெற்ற பார்க்கரின் சில இயக்கங்களை மறுபடியும் மீட்டிப் பார்க்கணும். ஆனா இதை மறைக்க அவர்கிட்டே என்ன சொல்லலாம்னு நாம சிந்திச்சாகணும் – ஆஹ்! அதை நானே தரேன். இந்த சின்ன ரேழி போன்ற லாபியில் பேசப்படும் அத்தனையும் வெளியே டெரஸ்ல கேட்குமானு நான் தெரிஞ்சுக்க விரும்பறேன் – ஓ கே? இதுதான் நம்ம திட்டம்னு இருக்கட்டும். இப்ப – பார்க்கருக்கு மணி அடிங்க.''

நான் செய்ய, தற்சமயம் பட்லர் வந்து சேர்ந்தான்.

''கூப்பிட்டீங்களா, ஸார்?''

''யெஸ், மை குட் பார்க்கர். என் மூளையில ஒரு சின்ன பரீட்சை பண்ணிப்பார்க்க விருப்பம். மேஜர் ப்ளண்ட்டை வெளியில படிக்குமறை ஜன்னலையொட்டிய டெரஸ் பகுதியில நான் நிக்க வெச்சிருக்கேன். அன்னிக்கு ராத்திரி, அறையின் நுழைவுல இருக்கும் இந்த சின்ன ரேழி பகுதியிலிருந்து நீயும் மிஸ் ஆக்ராய்டும் பேசிய வார்த்தைகளை அங்கே நிற்கும் யாராவது கேட்டிருக்க முடியுமானு பரீட்சை பண்ண விரும்பறேன். அந்த சின்னக் காட்சியை மீண்டும் நடிச்சுக் காட்டணும். நீ அப்ப சுமந்திருந்த ட்ரே அல்லது அது என்னவோ அது... அதை நீ மறுபடியும் எடுத்துக்கலாம்.''

பார்க்கர் இதற்காக போய்விட, நாங்களிருவரும் படிக்குமறையின் நுழைவாயிலுக்கு வெளியே உடனடியாய் இருந்த சின்ன ரேழிப் பகுதிக்குப் போய் நின்றுக் கொண்டோம். கீழேயிருந்த அறைக்குள் தற்சமயம் சில சலசலப்புகள் கேட்டு அடங்கியதும், கீழே, ஹாலிலிருந்து இப்பகுதிக்கு வழிவிட்டுத் தரும் கதவைக் கடந்து பார்க்கர் வந்துக் கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு தட்டு, அதில் விஸ்கி, சின்னத்துண்டு, இரண்டு கண்ணாடிக் கோப்பைகள் ஆகியன இருந்தன.

வெளிப்படையாய் கிளர்ந்தெழுந்து விட்டது தெரியும் வண்ணம், ''வெயிட் வெயிட்'' என்று அலறிய பொய்ரெட், ''நாம பண்ணும் எதுவும் ஒரு முறையோட அழகா இருக்கணும். எப்படி நடந்ததோ

அப்படியே. இது தான் என்னோட குணாதிசயம்'' என்றார்.

''துப்பறியும் இலக்கணம், ஸார்'' என்றான் பார்க்கர். ''கொலையை மறுபடியும் பண்ணிப் பார்ப்பது'ம்பாங்க, இல்லே?''

பொய்ரெட்டின் கட்டளைக்காக அப்படியே காத்துக் கொண்டு நின்ற அவன் துளி நடுக்கமற்று சாந்தமாயிருந்தான்.

''ஆஹ், விஷயம் தெரிஞ்சிருக்கு, அந்த குட் பார்க்கர், ஆஹ்'' என குதித்து விட்டார் பொய்ரெட். ''இதைப் பற்றியெல்லாம் – அதாவது இந்த பரீட்சை முறைகளைச் சொல்றேன் – படிச்சு வெச்சிருக்கான் பய. இப்ப அத்தனையையும் எத்தனை துல்லியமா பண்ண முடியுமோ அப்படி ஏற்பாடு பண்ணிடுவோம் – ப்ளீஸ். நீ, வெளி ஹாலிலிருந்து இந்தப் பகுதிக்கு உள்ள அந்த ஒரே கதவு வழியா வரே – இப்ப வந்தது போல. மேடம் அப்ப – எங்கேயிருந்தாங்க?''

''இங்கே'' – அவளுடைய இடமாய், ஜஸ்ட் படிக்குமறையின் கதவுக்கு அருகாமையை எடுத்துக் கொண்டாள் ஃப்ளோரா.

''கரெக்ட், ஸார்'' என்றான் பார்க்கர்.

''அப்பத்தான் நான் கதவை மூடியிருந்தேன்'' என தொடர்ந்து நினைவுகூர்ந்தாள் ஃப்ளோரா.

''யெஸ், மிஸ்'' – ஏற்றுக்கொண்டான் பார்க்கர். ''இப்ப இருக்கிற மாதிரியே அப்பவும் உங்க கை, கைப்பிடியிலேயே தானிருந்தது.''

''அப்ப சரி'' என்ற பொய்ரெட், ''அந்த சின்னக் காட்சியை மறுபடியும் நீங்க எனக்குப் பண்ணிக் காட்டுங்க'' என ஆர்வமானார்.

ஃப்ளோரா அவளுடைய கையைக் கதவின் கைப்பிடியிலேயே வைத்தபடி நின்றாள். பார்க்கர், கையில் தட்டினை ஏந்திக் கொண்டு, ஹால் கதவின் வழியே நுழைந்து முன்னேறிக் கொண்டிருந்தான்.

படிக்குமறையின் கதவருகே வந்ததும் ஃப்ளோராவால் நிறுத்தப்பட்டான். ''ஓ, பார்க்கர். இன்னிக்கு ராத்திரி மறுபடியும் தொந்தரவு பண்ணப்படுவதை மிஸ்டர் ஆக்ராய்டு விரும்பலே.''

சொல்லிவிட்டு மிகவும் தணிந்த குரலில், ''சரியாத்தானே சொன்னேன்?'' என்று சரிபார்த்துக் கொண்டாள்.

''என்னுடைய ஞாபகசக்திக்கு உட்பட்டு, மிஸ் ஃப்ளோரா...'' என்ற பார்க்கர், சொன்னான்: ''ராத்திரி என்பதற்கு பதிலா 'இன்னிக்கு சாயங்காலம்'னு சொன்னமாதிரி ஞாபகம்.'' பிறகு அவனது குரலை

ஏதோ நாடக மேடையில் பேசுவது போல நன்றாய் உயர்த்திக் கொண்ட அவன், ''நல்லது மிஸ். அப்ப வழக்கம்போல எல்லாத்தையும் நான் பூட்டிடலாமில்லே?'' என கேட்டான்.

''யெஸ், ப்ளீஸ்.''

பார்க்கர் கதவு வழியே திரும்பி விட, ஃப்ளோரா அவனைத் தொடர்ந்து விட்டு, மெயின் படிக்கட்டுகளை ஏற ஆரம்பித்தாள்.

அங்கிருந்தபடியே, ''இது போதுமா?'' என்று கேட்டாள் அவள்.

தனது கைகளிரண்டையும் படபடவென தேய்த்தபடி, ''அட்டகாசம்'' என்றார், துப்பறியும் குள்ள மேதை. ''ஆனா ஒரு நிமிஷம் பார்க்கர்... அன்னிக்கு சாயங்காலம் நீ ரெண்டு கோப்பையா கொண்டு வந்தே? யாருக்காக அந்த ரெண்டாவது?''

''நான் எப்பவுமே ரெண்டு க்ளாஸ் தான் கொண்டு வருவேன், ஸார்'' என்றான் பார்க்கர். ''மேற்கொண்டு ஏதாவது கேட்பதற்கு இருக்கா?''

''நத்திங். ஐ தேங்க் யூ.''

''நன்றி, ஸார்.''

மிக மரியாதையாய் விலகி வெளியேறினான் பார்க்கர்.

பொய்ரெட் நட்டநடு ஹாலில் முகஞ்சுளித்தபடி நின்றுக் கொண்டார். ஃப்ளோராவும் இறங்கி வந்து எங்களோடு இணைந்துக் கொண்டாள்.

''உங்க பரீட்சை சுபமா முடிஞ்சதா?'' என கேட்டாள் இளையவள். ''எதுக்கு இதெல்லாம்னு எனக்கு இன்னும் விளங்கலே, தெரியுமா?''

மிகவும் மதிப்புப் பாராட்டும் வகையில் அவளைப் பார்த்து சிரித்தார் பொய்ரெட்.

''நீங்க விளங்கிக்கணும்னு எந்த அவசியமும் கிடையாது'' என்று விட்டார். ''ஆனா சொல்லுங்க... பார்க்கர் அன்னிக்கு ராத்திரி கொண்டு வந்த ட்ரேயில ரெண்டு கோப்பைகள் இருந்ததா?''

ஃப்ளோராவின் புருவங்கள் ஓரிரு கணங்கள் சுருங்கிக் கொண்டன.

''என்னால நிச்சயப்படுத்திப் பார்க்க முடியலே'' என்றாள். ''இருந்ததா தான் ஞாபகம். அது – அது – அது தான் உங்க பரீட்சையின் இலக்கா?''

பொய்ரெட் அவளுடைய கைகளை இழுத்துக் கொண்டு தட்டிக் கொடுத்தார்.

''இப்படி சொல்லுவோம்'' என்றார்: ''மக்கள் உண்மையைப் பேசுவாங்களானு பரீட்சிப்பதிலே எனக்கு எப்பவுமே இண்ட்ரஸ்ட் உண்டு.''

''பார்க்கர் உண்மையைப் பேசினானா?''

''அவன் உண்மையைத் தான் பேசினான்னு நினைக்கிறேன்'' – சிந்தனையோடு சொன்னார் பொய்ரெட்.

சில நிமிடங்கள் கழித்து நாங்கள் கிராமத்துத் தெருவில் நடந்தபடி திரும்பிக் கொண்டிருந்தோம்.

''அந்தக் கண்ணாடிக் கோப்பைகள் பற்றிய கேள்வி எதுக்காக?'' – ஆர்வமாய் கேட்டேன் நான்.

பொய்ரெட் அவரது தோள்களை மறுப்பாய் குலுக்கிக் காட்டினார். ''ஏதாவது கேட்டாகணுமில்லே?'' என்றார் பிறகு.

நான் அவரைப் பார்த்து முழித்தேன்.

''எதெப்படியோ மை ஃபிரண்ட்... என்று சாதாரணமான பொய்ரெட், ''எனக்கு எது வேணும்னு நினைச்சேனோ அதுல ஏதோ கொஞ்சம் இப்ப எனக்குத் தெரியும். அந்த நிலையிலேயே இதை நாம விட்டுடுவோம்'' என்றார்.

அத்தியாயம் 16

பார்ட்டி

அன்றைய இரவில் நாங்கள் ஒரு சிறு பார்ட்டி கொண்டாடினோம். இது போன்ற ஆடம்பரமற்ற பொழுதுபோக்குகள் கிங்ஸ் அப்பாட்டில் மிகப் பிரசித்தம். முதலில் காபி, பிறகு கேக், சாண்ட்-விச் மற்றும் தேநீர் என நீளும்.

அன்றைய இரவில் முக்கிய விருந்தினர்களாக மிஸ் கன்னட்டும் சர்ச்சுக்கு அருகாமையில் வாழும் கலோனல் கார்ட்டரும் வந்திருந்தனர். சீட்டாட்டம் இது போன்ற பார்ட்டிகளின் முக்கிய அங்கமாகயிருக்கும். இதற்கு இணையான இன்னொன்று: கிசுகிசு. சில சமயங்களில் சூடுபிடித்து ஆடிக்கொண்டிருக்கும் சீட்டாட்டத்தையே ஓரங்கட்டி விடுமளவுக்கு கிசுகிசுக்கள் வென்று நிற்கும். ரம்மி, பிரிட்ஜ் என சீட்டுக்கட்டுக்களின் ஓயா ஓசையே பார்ட்டியின் பிரதானமாயிருக்கும். அன்றும் அப்படித்தானிருந்தது, ஆகவே, ரம்மி... ஜோக்கர்... ஸெட்... ஏ'ஸ்... போன்று கூக்குரலாய் எகிறிய சீட்டு விளையாட்டின் வார்த்தைகளையெல்லாம் வடிகட்டி விட்டு, அன்றைய முக்கியக் கிசுகிசுவாய் இடம்பெற்ற ரோஜர் ஆக்ராய்டின் கொலை பற்றிய விவரங்களை மட்டும் இங்கு நேயர்களுக்குத் தருகிறேன்.

''மிஸ்டர் ஆக்ராய்டின் இந்த வழக்கு ரொம்பவும் தான் மர்மம் நிறைஞ்சதாயிருக்கு'' என ஆரம்பித்தது கலோனல், ஒரு கப் காபியை ஏற்றுக் கொண்டு. ''இது வெறும் கொலையா மட்டும் படலே, டாக்டர். இதுல வேற என்னவெல்லாமோ பிணைஞ்சுக்கிடக்கு. உங்களுக்கும் எனக்கும் மட்டும் இருக்கட்டும்... இதோட இணைச்சு 'ப்ளாக்-மெயில்'ங்கிற வார்த்தையும் பேசப்படுது. என் காதுபட

கேள்விப்பட்டேன்.''

இப்படிப்பட்ட வார்த்தைகளை உதிர்த்து விட்டு கலோனல் என்னைப் பார்த்து ஒரு பார்வை விட்டாரே... அதனை, 'ஒரு கிரகத்து மனிதன் மறு கிரகத்து மனிதனைப் பார்த்தது மாதிரி' என வகைப்படுத்திக் கொள்ளலாம்.

''அதுல ஒரு பொம்பிளை அடிநாதமாயிருக்கா – நோ டவுட்'' – அவரே சொன்னார். ''கவனிச்சுக்குங்க டாக்டர், ஒரு பொம்பிளை.''

இந்தக் கணத்தில் தான் கலோனலும் மிஸ் கன்னட்டும் எங்களோடு வந்து இணைந்துக் கொண்டனர். சீட்டுக்கட்டினை உடைப்பது என முடிவானது. குழு அமைத்துக் கொண்டோம். கரோலினோடு இதிலாவது நான் ஒன்றாய் இருக்க வேண்டாமே என்று எதிரணியில் சேர்ந்துக் கொண்டேன். ஆட்டம் துவங்கியது தான் தாமதம்... ''இன்னிக்குக் காலையில நான் ஃப்ளோரா ஆக்ராய்டைப் பார்த்தேன்'' என்றாள் கன்னட்.

''எங்கே பார்த்தீங்க அவளை?'' – கரோலின்.

''அவ என்னைப் பார்க்கலே'' – இது போன்ற சிறு கிராமங்களில் இப்படி சாத்தியமேபடாத ஒன்றை சாதித்து விட்ட தொனியில் சொன்னாள் கன்னட்.

''அவ யாருடனாவது இருந்தாளா, அப்ப?''

''வெரி மச். ஆமாம்.''

இப்போது இரு பெண்களின் கண்களும் சந்தித்துக் கொண்டன... அப்படியே பார்வையிலேயே தகவல்களைப் பரிமாறிக் கொண்டதைப் போலிருந்தது.

''அப்படியா...? அப்படியா!'' என்றாள் கரோலின் படு ஈடுபாட்டுடன். ''அது தானா? அதே தானா? வெல், இது என்னைக் கொஞ்சமும் ஆச்சரியப்படுத்தலே, ஆங்!''

(இங்கு சீட்டாட்டத்தில் பேச்சு திரும்பியது. பிறகு சட்டென்று க்ரைமுக்குள் நுழைந்தது மிஸ் கன்னட் தான்.)

''எனக்கு இந்த க்ரைம், கொலை, விசாரணை இது பற்றியெல்லாம் ரொம்பவும் தெரியாது. ஆனா ஒரு விஷயத்தை என்னால ஸ்திரப் படுத்தி சொல்ல முடியும். இந்த சமாச்சாரங்கள்ல வழக்கமா கேட்கப் படும் ஒரே முதல் கேள்வி: 'கொலையானவர் உயிரோட

இருக்கும்போது அவரைக் கடைசியா சந்திச்சது யார்?' அப்படி யார் செஞ்சதோ அந்த ஆள் சந்தேகக்கண் கொண்டு பார்க்கப்படறார். இதுல ஃப்ளோரா ஆக்ராய்டு தான் அவரைக் கடைசியா பார்த்தது. அதனால அவளை எல்லாரும் படு கேவலமா பார்ப்பாங்க – படு கேவலமா. இது என் கருத்து – ஆனா இதுதானே வழக்கமா நடப்பதும்...?! இதனால தான் – அதாவது இப்படி அவ மேல சந்தேகம் விழுந்து தீவிரமாகாம இருக்கத்தான் – தன்மேல பழி திசைத்திரும்பட்டும்னு, கேப்டன் ரால்ஃப் பேடன் தலைமறைவாகவே இருக்கார்.''

இதை நான் மெலிதாய் எதிர்த்தேன்: ''அப்படிப் பேசாதீங்க. இரக்கமில்லாம தன்னோட சொந்த அங்கிளையே ஃப்ளோரா போன்ற தளதள இளைய பெண்ணொருத்திக் குத்திக் கொல்லுவானு யாரும் சொல்ல மாட்டாங்க.''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது'' என்றாள் கன்னட். ''பாரீஸின் தாதாக்கள் பற்றிய ஒரு புத்தகத்தைப் படிச்சுக்கிட்டிருந்தேன். அதுல போட்டிருக்கு – சில கொடூர கொலைகாரர்கள் தேவதைகள் போன்ற முகம் கொண்ட இளைய பெண்கள்னு.''

''அதெல்லாம் பிரான்ஸ்ல'' என்றாள் கரோலின் அக்கணத்திலேயே. தொடர்ந்தாள்: ''எனக்குள்ளேயே உதித்த ஒரு சொந்த ஊகமிருக்கு – பேடன் பற்றி. ம்ம்... மூச். இப்போதைக்கு இதை நான் எனக்குள்ளேயே தான் வெச்சுக்கப் போறேன்.''

''பூட்ஸ் பற்றிய சேதியெல்லாம் சரிதானா?'' என்றாள் கன்னட். ''கறுப்பு தான் போல?''

''வெரி கரெக்ட்.

''இதைப்புடிச்சுக்கிட்டு ஏன் தொங்கணும்? உனக்கு ஏதாவது தட்டுப்படுதா?'' - கேட்டது, மிஸ் கன்னட்.

வாயை இறுக்கமாக மூடிக் கொண்டு விட்டாலும், அது குறித்த அனைத்தும் தெரியும் என்ற அழுத்தமான தொனியில் தலையை ஆட்டிக் காட்டினாள் கரோலின்.

''நம்ம டாக்டர் மிஸ்டர் பொய்ரெட் கூடவே இருப்பதால அவருக்கு பல ரகசியங்கள் தெரிஞ்சிருக்கும்னே தோணுது'' என எப்படியாவது ஏதாவது தகவல் கிட்டுமா என அலைந்தார் கன்னட்.

''அப்படியெல்லாம் எதுவும் கிடையாது'' என்றேன் நான்.

''பெருந்தன்மை'' என்று வெறுப்பேற்றியது என் சகோதரி. ''ரகசியம் காக்கறானாம்.''

இதற்கு, ''ஆமாம் டாக்டர்...'' என்று சந்தேகம் கேட்பது போல ஆரம்பித்த கலோனல், ''அவரென்ன அப்படியொரு பெரிய டிடெக்டிவ்வா?'' என்றார்.

''உலகம் இதுவரை கண்டிராத, மாபெரும்'' என அடைமொழி வைத்து பதில் தந்தாள் கரோலின். ''எந்த விளம்பரமும் கூடாது என்பதற்காக பேரைக் கூட மாத்திக்கிட்டு அவர் இங்கே வந்து வாழ வேண்டியிருந்திருக்கு.''

மிஸ் கன்னட் ''நம்ம சின்ன கிராமத்துக்கு ஆச்சரியமாய் கிடைத் துள்ள விருந்தாளி. ஆங்... இப்ப நான் சொல்றதைக் கவனியுங்க... என்று ஒரு சிறு உரை தருவதற்கான முன்னேற்பாட்டினைக் காட்டினார்: ''க்ளாரா – இவ என் வீட்டு வேலைக்காரி, தெரியுமில்லே? – இவ, எலிஸியின் அற்புதத் தோழி – இந்த எலிஸி ஃபெர்ன்லி பார்க்கின் வேலைக்காரி. எலிஸி அவகிட்டே என்ன சொன்னானு நினைக்கிறீங்க? ஏகப்பட்ட பணம் அங்கே திருடுப் போயிருக்குனு சொல்லியிருக்கா. இதுக்கெல்லாம் முழு காரணம் அறைகளைக் கவனித்து சுத்தம் செய்யும் அந்தப் பொண்ணு தான் என்பது அவளோட கணிப்பு – அதாவது எலிஸியோட. அவ இந்த மாசத்தோட மூட்டை கட்டறாளாமே – ஆனா, ஏனோ ராத்திரி முழுக்க அழுது தீக்கறாளாம். என்னைக் கேட்டீங்கன்னா, அந்தப் பொண்ணுக்கு ஏதோவொரு கூட்டத்தோட தொடர்பிருக்கும் சாத்தியம் நிறைய தெரியுது. அவ எப்பவுமே புரிஞ்சுக்கொள்ள முடியாத பொண்ணாத்தான் இருந்திருக்கா. சுற்றுவட்டாரத்துல இருக்கிற எவ கூடவும் அவளுக்கு நட்பு கிடையாது. அவளுக்குத் தரப்படும் லீவுல அவமட்டும் வெளிவாசலுக்குத் தனியாப் போய்ட்டு வரா – இது இயற்கைக்கு முரணா தெரியலே? சந்தேகத் துக்கும் இடம் தருதும்பேன். நம்ம பொண்ணுங்க சாயங்காலம் கூடி அடிக்கும் அரட்டையில வந்து கலந்துக்கோனு ஒரு நாள்கேட்டுப் பார்த்தேன் - மறுத்துட்டா! விடலே நான். அவ வீடு... பொறந்த இடம்... இதையெல்லாம் குடைஞ்சேன். ம்ம். முகத்திலறைந்தா மாதிரி திரும்பிப் போயிட்டா. மரியாதையெல்லாம் தெரிஞ்சப் பொண்ணு தான் - ஆனா, திமிர்.''

மூச்செடுக்க அவள் நிறுத்திய இடைவெளியில் பொறுமையிழந் திருந்த கரோலின், ''அந்த மிஸ் ரஸ்ஸெல்'' என்று புகுந்துக் கொண்டு விட்டாள். ''ஜேம்ஸைக் கலந்தாலோசிக்க வரும் போர்வையில போன வாரம் வெள்ளிக்கிழமை இங்கே வந்திருந்தா அவ. எனக்கென்னவோ விஷமெல்லாம் எங்கே வெச்சிருக்குனு பார்க்கத்தான் அவ வந்திருக்கானு தோணுது.''

''என்ன ஓர் அசாதாரண கற்பனை'' என்றாள் கன்னட். ''நீ சொல்வது உண்மையாயிருக்குமானு எனக்கு ஆச்சரியமாயிருக்கு.''

(இங்கு சீட்டாட்டத்தில் பேச்சு திரும்பியது. பிறகு சட்டென்று க்ரைமுக்குள் நுழைந்தது என் சகோதரி.)

''கேப்டன் ராம்ஃப் எங்கேயிருப்பான் என்பது பற்றி எனக்குள்ளே ஒரு சின்ன சாதுர்யமான ஐடியா உருவாகியிருக்கு'' என்றாள் அவள்.

அப்படியே அனைத்தையும் விட்டுவிட்டு நாங்களனைவரும் அவளையே முறைத்து முழிக்கலானோம்.

''இது ரொம்ப இண்ட்ரஸ்ட்டிங்காயிருக்கு மிஸ் கரோலின்'' என்றார் கலோனல். ''முழுக்கவும் உங்களோட ஊகம் மட்டும் தானா?''

''வெல். முழுக்கவும் அப்படியில்லே. நானே அதைப் பற்றி சொல்லிடறேனே. எங்க ஹால்லயிருக்கும் அந்தப் பெரிய வரைபடம் பற்றி உங்களுக்குத் தெரியும் தானே?''

நாங்களனைவரும் ஒட்டுமொத்தமாய் யெஸ் வைத்தோம்.

''அன்னிக்கு வந்துட்டுக் கிளம்பி வெளியேறும்போது மிஸ்டர் பொய்ரெட் அதுகிட்டே போய் நின்னார். பார்த்தார். அப்புறமா ஏதோ சில குறிப்புகளை விட்டார் – அது என்னனு சரியா எனக்கு நினைவிலே இல்லை; நம்ம கிராமத்துக்கு அருகிலிருக்கும் ஒரே பெரிய நகரம் க்ரான்செஸ்டர் தான் என்பது போலனு ஞாபகம். இதுவும் சரிதான். ஆனா அவர் போய்ட்ட பிறகு திடுதிப்புனு எனக்குள்ளே ஓர் உதயம்.''

''உதிச்சது எது?'' என்றேன் நான் கிண்டல் வெளிப்படையாய் தெரியும்படி.

''அவர் சொன்னதுக்குள்ளே வெச்சிருந்த அர்த்தம்.''

''அர்த்தம்?''

''பேடன் க்ரான்செஸ்டர்ல இருக்கான்.''

''க்ரான்செஸ்டர்லியா, மிஸ் கரோலின்'' – கேட்ட கலோனலுக்கு

நெஞ்சடைத்திருக்கக் கூடும். ''நிச்சயமா க்ரான்செஸ்டர்ல இருக்க முடியாது. அது நமக்கு எத்தனை பக்கமாயிருக்கு?!''

''அது தான்... அதே தான் காரணமே'' என வெற்றி முழக்கமாய் அலறிவிட்டாள் கரோலின். ''இதிலிருந்து அவன் இங்கேயிருந்து ட்ரெயின் பிடிச்செல்லாம் எங்கேயும் போகலே என்பது ஊர்ஜிதமா யிடுச்சு. அவன் சும்மா அப்படியே காலாற க்ரான்செஸ்டருக்குள்ளே நடந்தே போய் சேர்ந்திருப்பான். அவன் இன்னமும் அங்கே தான் இருக்கான் என்பதே என் நம்பிக்கை. கைக்கெட்டும் தூரத்துல அவன் இருக்கலாம்னு யாரும் கனவு கூட காண மாட்டாங்க, இல்லியா?''

இந்த தியரிக்கு நான் பல ஆட்சேபணைகளை முன்வைத்தேன். ஆனால், கரோலின் அவளுடைய மூளைக்குள் எதையாவது நிச்சயப்படுத்தி ஏற்றிக் கொண்டு விட்டாளென்றால் அதனை யாராலும் தடம்புரள வைக்க முடியாது.

''இதே ஐடியாதான் மிஸ்டர் பொய்ரெட்டுக்கும் வந்ததுனு சொல்றே'' என சிந்தனையாய் சொன்னாள் கன்னட். ''ஆச்சரிய ஒற்றுமை. ஆனா ஒரு விஷயம் தெரியுமா... இன்னிக்கு மத்தியானம் நான் க்ரான்செஸ்டர் வரைக்கும் ஒரு பொடி நடை போய் வந்தேன். அந்த திசையிலிருந்து வந்த ஒரு கார்ல அவர் போய்க்கிட்டிருந்தார்.''

நாங்கள் ஒருவர் மாற்றி மற்றொருவரைப் பார்த்துக் கொண்டோம்.

பிறகு சீட்டாட்டம் கொஞ்சம் முன்னேற, அப்போது மூவரும் என்னைப் பிடித்து உலுக்கியெடுத்தார்கள். நான் பொய்ரெட் கூடவே இருப்பதால் நிச்சயம் வாய் திறந்து விஷயங்களைக் கொட்ட வேண்டும் என்று வந்த கோரிக்கைக்கு, என்னிடமிருந்து விஷயங்களைக் கறக்கவே முடியாது என கடுகடுத்து விளக்கினாள் கரோலின். நானுமே கூட, எவ்வித முடிவுகளையும் கிஞ்சித்தும் வெளிக்காட்டி விடாத புத்திசாலித்தனம் பொய்ரெட்டின் குணாதிசயம் என்பதை சொல்லிப் பார்த்தேன். ஆனாலும் அவர்களுடைய தொணதொணப்பு நீண்டதால், ''அப்படியேதாவது இண்ட்ரஸ்டிங் சங்கதியை நான் தந்துதான் ஆகணும்னா–பிடிங்க. ஒரு கலியாண மோதிரம்... உள்ளே தேதி மற்றும் R என்ற எழுத்து. இதைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?'' என்று ஒரு பெரிய விவாதத்துக்கு வழிவகுத்து விட்டு ஒதுங்கிக் கொண்டேன்.

இது எங்கேயிருந்து கிடைத்தது... அந்த தேதி என்ன... போன்ற

எல்லாம் கேட்கப்பட்டன. சொன்னேன்.

''மார்ச் 13'' என்றாள் கரோலின் மெதுவாய். ''ஜஸ்ட் ஆறு மாசத்துக்கு முன்னாடி, ஆஹ்!''

ஆமோதிப்பும் ஆட்சேபணையும் நிறைந்த ஒரு நீண்ட விவாதத்துக்குப் பிறகு மூன்று கோட்பாடுகள் வரையப்பட்டன.

1. கலோனல் கார்ட்டர்: ரால்ஃப், ஃப்ளோராவை ரகசியத் திருமணம் செய்துள்ளான்.

2. மிஸ் கன்னட்: ரோஜர் ஆக்ராய்டு, மிஸஸ் ஃபெர்ரர்ஸுடன் ரகசியமாய் திருமணம் நடத்தியுள்ளார்.

3. என் சகோதரி: ரோஜர் ஆக்ராய்டு, அவரது தலைமை வேலைக்காரியான ரஸ்ஸெல்லை மணந்துள்ளார்.

இதையும் மீறியொரு நான்காவது கோட்பாடு, நாங்கள் தூங்கப்போகும்போது பிறந்தது. பிரசவித்தது: கரோலின்.

''நான் சொல்றதைக் குறிச்சுக்கோ ஜேம்ஸ்'' என்றாள் திடுமென. ''ஜியோஃபெர்ரி ரேமண்டுக்கும் ஃப்ளோராவுக்கும் கலியாணம்னா – அதைக் கேட்டு நான் ஆச்சரியப்பட மாட்டேன்.''

''அப்படினா, நிச்சயமா அது, from Gனு தான் இருந்திருக்குமே ஒழிய from Rனு இருக்காது.

''உனக்கு ஒண்ணும் தெரியாதுடா. சில பெண்கள் அவங்களுடைய ஆண்களை கடைசி பேரை வெச்சுக்கூட அழைப்பதுண்டு. இப்ப?''

''சரி. அப்ப மேஜர் ப்ளண்ட்?''

''நான்சென்ஸ். அவர் ஃப்ளோராவைப் பிரமிக்கிறார் - இல்லேங்கலே. ஆனா நினைச்சு பாரு – பக்கத்துலேயே கட்டழகா ஓர் இளைய செகரட்டரியிருக்கும்போது அப்பா ஸ்தானத்துல ஒருத்தனையா ஒரு பொண்ணு புடிப்பா? குருட்டுத்தனமா ப்ளண்ட்டை அவ ஊக்கப் படுத்திக்கிட்டே இருந்திருக்கலாம் இதுல எல்லாம் பெண்கள் கை தேர்ந்தவங்க. ஆனா ஒண்ணு சொல்லிக்க விரும்பறேன் ஷெப்பர்ட். ஃப்ளோரா ஆக்ராய்டு, ரால்ஃப் பேடனுக்காக கடுகத்தனை கூட சிந்தனையை வைக்கலே. எப்பவும். இதை நீ என்கிட்டேயிருந்து எடுத்துக்கோ.''

வாய் திறக்காமல், அதை நான் அவளிடமிருந்து எடுத்துக் கொண்டேன்.

அத்தியாயம் 17

பார்க்கர்

மறுநாள் காலையில் நான் சிறு குழப்பத்துக்குள்ளாகுமாறு ஆனது. அந்த மோதிரத்தைக் கண்டுபிடித்தது குறித்து ரகசியமாய் வைத்துக் கொள்ள வேண்டும் என பொய்ரெட் என்னிடம் வலியுறுத்தவில்லை என்பது நிஜமே. இன்னொரு பக்கத்தில் அவரேகூட ஃபெர்ன்லி பார்க்கில் இது குறித்து இன்னமும் மூச்சு காட்டவில்லை. என்னைப் பொறுத்தமட்டில் அது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை அறிந்துள்ள ஒரே நபர் நான்தான். இதனாலெல்லாம் நான் தனித்து உணருமளவுக்கு குற்றவுணர்ச்சி கொண்டேன். இந்த உண்மை இப்போது கிங்ஸ் அப்பாட் முழுக்கவும் காட்டுத்தீ போல பரவிக் கொண்டிருக்க வேண்டும். எந்நேரமும் பொய்ரெட்டிமிருந்து ஒட்டுமொத்தக் கடுஞ்சினம் வரப்போகிறது என எதிர்பார்த்திருந்தேன்.

மிஸஸ் ஃபெர்ரர்ஸ் மற்றும் மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு ஆகிய இருவருடைய நல்லடக்கமும் ஒன்றாய் காலை பதினொரு மணிக்கு என ஏற்பாடாகியிருந்தது. துக்கம் அனுஷ்டித்த ஆழ்ந்த சடங்காய் அமைந்தது அது. ஃபெர்னிலியிலிருந்து ஏறத்தாழ எல்லோரும் ஆஜராகியிருந்தனர்.

இது நடந்தேறியதும், அங்கு பங்கேற்க வந்திருந்த பொய்ரெட் என்னை அவரது கரவளையத்துக்குள் அடக்கி நானும் அவரோடு *லார்ச்சஸ்*வரை வந்தால் தான் ஆயிற்று என்று விட்டார். மிகவும் ஆழ்ந்து அவர் காணப்பட்டதால் மேதாவித்தனமாய் முந்தைய இரவு நான் எடுத்து விட்டிருந்த மோதிரக் கண்டுபிடிப்பு பற்றிய சரடு அவருடைய

காதுகளை எட்டியிருக்க வேண்டும் என்றே நான் பயந்தேன். ஆனால், உடனடியாகவே, அவருடைய சிந்தனை முழுவதும் வேறேதோ முழுக்கவும் வேறுபட்ட ஒரு கோணத்தில் ஆக்கிரமித்துக் கிடந்ததைக் கண்டுகொள்ள முடிந்தது.

''கவனிங்க டாக்டர்...'' என்ற அவர், ''நாம இயங்கி ஆகணும்'' என்றார். ''உங்களோட உதவியுடன் நானொரு சாட்சியை பரீட்சிக்க விரும்பறேன். நாம அவனைக் கேள்விகள் கேட்போம்... அவனுக்குள்ளே அப்படியொரு பயத்தைத் தூவி விட்டு உண்மை வெளி வந்தே ஆகணும்னு ஆக்குவோம்... ஓ கே?''

முழுக்கவும் ஆச்சரியப்பட்டு, ''எந்த சாட்சியைப் பற்றி பேசிக்கிட்டிருக்கீங்க?'' என்றேன் நான்.

''பார்க்கர்!'' – சொன்னார் பொய்ரெட். ''என் வீட்டுக்கு இன்னிக்கு காலைல பனிரெண்டு மணிக்கு அவனை நான் வரச் சொல்லியிருக்கேன். இந்த நிமிஷத்துல அவன் அங்கே நமக்காகக் காத்திருக்கணும்.''

''எதுக்கு இது இப்ப? நீங்க என்ன நினைக்கிறீங்க?'' – அவரைப் பக்கவாட்டில் நோட்டமிட்டபடி இறங்கினேன் நான்.

''எனக்கு ஒண்ணு தெரியும் – *நான் திருப்தியாகவே.*''

''அவன் தான் மிஸஸ் ஃபெர்ரர்ஸை ப்ளாக்-மெயில் பண்ணினதுனு நம்பறீங்களா?''

''அது... அல்லது —''

''ம்?'' – ஓரிரு நிமிடக் காத்திருப்புக்குப் பிறகு கேட்டேன்.

''மை ஃபிரண்ட், என்னால இதைச் சொல்ல முடியும் - அது இவன் தான்னு நான் நம்பறேன்.''

அவர் சொன்ன விதத்திலிருந்த கனம், மேலும் அதில் தோய்ந்திருந்த விளக்கவொண்ணா மேலும் எதுவோ... என்னை உடனடியாய் வாயடைக்க வைத்தன.

வீடடைந்ததும், ஏற்கெனவே *லார்ச்சஸு*க்கு வந்திருந்த பார்க்கர், நாங்கள் திரும்பி வருவதற்காக காத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டோம். நாங்கள் வரவேற்பறைக்குள் நுழைந்ததும் பட்லர் மிகவும் மரியாதையாய் எழுந்து நின்றுக் கொண்டான்.

''குட் மார்னிங் பார்க்கர்'' என்றார் பொய்ரெட், மலர்ச்சியாய். ''ஒரே ஒரு நிமிஷம், ப்ளீஸ்.''

குளிருக்கு வாகாய் அணிந்திருந்த கோட்டையும் கையுறையையும் அவிழ்க்க ஆரம்பித்தார் அவர். ''என்கிட்டே விடுங்க ஸார்'' என்று பாய்ந்தோடிய பார்க்கர், பொய்ரெட்டுக்கு உதவினான். கதவுக்கருகி லிருந்த சேரில் அவற்றை பதவிசாக இறக்கி வைத்தான். அவன் செய்வதையே ஒப்புக்கொள்ளும் பாவனையில் பார்த்துக் கொண்டிருந்தார் பொய்ரெட்.

''தேங்க் யூ, மை குட் பார்க்கர்'' என்றார். ''அந்த இருக்கையில உட்கார முடியுமா? நான் சொல்ல வேண்டிய விஷயம் கொஞ்சம் நேரம் பிடிக்கும்.''

பயபக்தி நிறைந்த குறுகிய விதத்தில் ஸீட்டின் நுனியில் உட்கார்ந்தான் பார்க்கர்.

''இந்தக் காலை வேளையில உன்னை நான் எதுக்காக இங்கே வரச்சொல்லியிருக்கேன்னு ஏதாவது ஊகம்... ஆங்?''

பார்க்கர் சின்னதாய் இறுமினான். ''காலமாகிவிட்ட என்னோட முதலாளி பற்றிய சில கேள்விகளை – தனிப்பட்ட சில பிரத்யேக ப்ரைவேட் கேள்விகளை – என்னிடம் கேட்க விரும்புவதா அறிவுறுத்தப்பட்டேன், ஸார்.''

கம்பீரமாய் அவனைப் பார்த்தபடி, ''மிகச்சரி'' என்றார் பொய்ரெட். ''சொல்லு... ப்ளாக்-மெயில் பண்ணுவதுல உனக்கு முன்னனுபவம் உண்டா?''

''ஸார்!'' – தன் கால் எகிறத் துள்ளியெழுந்து விட்டான் பட்லர்.

''படபடத்துப் போகிற மாதிரி நீயாவே காட்டிக்க வேணாம், பட்லர்'' என்றார் பொய்ரெட் நேரடியாய். ''ஏதோ நீ தான் சத்யத்தின் பிரதிநிதி போல காட்டிக்க வேணாம், அடிபட்ட புலியே! ப்ளாக்-மெயில்னா என்னனு தெரிஞ்சுக்க வேண்டிய அத்தனையும் உனக்கு ஒட்டு மொத்தமா... அட்சரசுத்தமா தெரியும், இல்லையா?''

''ஸார், ஸா-ர்... நான், நா-ன்... என்னிக்குமே, என்-னிக்-குமே...

''...இது போல அவமானப்படுத்தப்பட்டது கிடையாது'' – முடித்துக் கொடுத்தார் பொய்ரெட். ''அப்படினா, மிஸ்டர் ஆக்ராய்டின் படிக்குமறை சம்பாஷணைல ப்ளாக்-மெயில் அப்படிங்கிற ஒத்தை வார்த்தையை நீ கேட்ட மறுகணமே, எதுக்காக அத்தனை சிரத்தையா வேகவேகமா ஓடிப்போய் நீ அதை முழுசா ஒட்டுக் கேட்டிருக்கணும்,

மை எக்ஸலெண்ட் பார்க்கர்?''

''நா-ன், பண்-ணலே, நா-ன்...''

''நீ கடைசியா வேலை செஞ்சது யார்கிட்டே?'' – தடாலடியாய் பட்டென்று அறைந்தார் பொய்ரெட்.

''நான் கடைசியா வேலை செஞ்சது?''

''யெஸ், யெஸ். நீ மிஸ்டர் ஆக்ராய்டு கிட்டே வேலைக்கு வர்றதுக்கு முன்னாடி உன்னோட முதலாளியா இருந்தது யார் மேன்?''

''மேஜர் எல்லர்பீ அப்படினு ஒருத்தர், ஸார்—''

இந்த வார்த்தைகளை அவனுடைய வாயிலிருந்தே பொய்ரெட் பிடுங்கி எடுத்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

''கரெக்ட். மேஜர் எல்லர்பீ. இந்த மேஜர் எல்லர்பீ போதைக்கு அடிமையான ஒருத்தர், அப்படித்தானே? நீ அவரோட கூட பிரயாணத்துல எல்லாம் ஒண்ணா போயிருக்கே, ரைட்? அவர் பெர்முடாவில இருந்தபோது சிக்கல் உருவாகியிருக்கு – ஒருத்தன் கொலை பண்ணப்பட்டிருக்கான். இதுல மேஜர் எல்லர்பீக்கும் கொஞ்சம் பங்கிருக்கு; அது மூடி மறைக்கப்பட்டிருச்சு. ஆனா இது பற்றி உனக்கு முழுசும் தெரியும். உன்னோட வாயைத் திறக்கவே முடியாத அளவுக்கு மூடி வைக்க மேஜர் எல்லர்பீ உனக்குத் தந்தது எத்தனை?''

பொய்ரெட்டைப் பார்த்துத் திறந்த வாயை மூட மறந்து முழித்தபடியிருந்தான் பார்க்கர். சுக்குநூறாகியிருந்தான் மனிதன். அவனுடைய முகவாய் முறிந்து விட்டதைப் போலத் துடித்துக் கொண்டிருந்தது.

''என்னை நல்லா கவனி... நான் தேவையான அத்தனை விசாரணைகளும் முடிச்சுட்டுத்தான் உன்கிட்டே எறங்கியிருக்கேன்'' என்றார் பொய்ரெட் மலர்ந்த முகத்துடன். ''நான் இப்ப சொல்ற மாதிரி தான் எல்லாமும் நடந்திருக்கு. உனக்கு பை கொள்ளாம பணம் ப்ளாக்-மெயில்ல கிடைச்சிருக்கு... மேஜர் எல்லர்பீயும் மண்டையைப் போடற வரைக்கும் உன் மிரட்டலுக்கு பயந்துப் பயந்துக் கொடுத்துக்கிட்டே இருந்திருக்கார். போகட்டும்... இப்ப நான் உன்னோட புது ப்ளாக்-மெயில் பரிசோதனை பற்றி கேட்க ஆசைப்படறேன்.''

இன்னமும் கூட பொய்ரெட்டைப் பார்த்துத் திறந்த வாயை மூட மறந்து முழித்தபடியிருந்தான் பார்க்கர்.

''மறுக்க முயற்சிப்பது வீண். ஹெர்குல் பொய்ரெட்டுக்குத் தெரிஞ்சாச்சு. மேஜர் எல்லர்பீ பற்றி நான் என்ன சொன்னேனோ அவையத்தனையும் அப்படித்தான் – சரி தானே?''

அவனுடைய கட்டுப்பாட்டுக்கு எதிராய் இயங்குவதைப் போல் விருப்பின்றி ஒரு முறை ஆமோதித்துத் தலையசைத்தான் பார்க்கர். அவன் முகம் முழுக்கவும் வெளிறிப் பேயறைந்துப் போனது.

''ஆனா, நான் ஒரு துளியும் மிஸ்டர் ஆக்ராய்டு கிட்டே அப்படி நடந்துக்கலே'' – ஈனசுரத்தில் முனகினான் அவன். ''கடவுள் மேல சத்யம், ஸார் - மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு கிட்டே இப்படி எதுவும் நான் வெச்சுக்கலே. இதெல்லாம் எப்பவாவது ஒரு நாள் கிளறப்படும் எனும் பயத்துலேயே தான் நானிருந்தேன். மேலும், வாக்குமூலம் தரேன் ஸார், நா-ன் மிஸ்டர் ஆக்ராய்டைக் கொல்லலே.''

அவனது குரல் ஏறக்குறைய அலறும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது.

''உன்னை நம்பும் நிலைக்கு நான் இப்போதைக்குத் தள்ளப்படறேன், மை ஃபிரண்ட்'' என்றார் பொய்ரெட். ''உனக்கு அந்த தில் கிடையாது – அந்த உத்வேகம் கிடையாது. ஆனா – எனக்கு உண்மை கிடைச்சாகணும்.''

''நான் என்ன வேணும்னாலும் தரேன், ஸார்... உங்களுக்கு என்ன தெரிஞ்சுக்க வேணுமோ அத்தனையையும் சொல்றேன், ஸார். அன்னிக்கு ராத்திரி என்னப் பேசப்பட்டதுனு நான் கேட்க முயற்சி பண்ணினதென்னவோ உண்மைதான். நான் கேட்ட ஓரிரு வார்த்தைகள் எனக்குள்ளே அப்படியொரு ஆர்வத்தை உண்டுபண்ணின. யாரும் தன்னை தொந்தரவு பண்ணக்கூடாதுனு மிஸ்டர் ஆக்ராய்டு சொன்னது... டாக்டரோடு டாக்டரா கதவையடைச்சு மூடிக்கிட்டது... இதெல்லாம்! ப்ளாக்-மெயில் எனும் வார்த்தையை நான் கேட்டேன் ஸார் – வெல் —''

இங்கு அவன் தயக்கமாய் நிறுத்திக் கொண்டான்.

''அதுல உனக்கு சாதகமா ஏதாவது இருக்குமோனு நீ நினைச்சே'' – மிருதுவாய் எடுத்துத் தந்தார் பொய்ரெட்.

''வெல் – யெஸ், ஸார். நான் நினைச்சேன் ஸார். ஒரு வேளை மிஸ்டர்

ஆக்ராய்டு ப்ளாக்-மெயில் பண்ணப்படுவதாயிருந்தா அதுல எனக்கு ஓர் விள்ளல் ஏன் வரக்கூடாதுனு எழுந்தேன், ஸார்.''

விறுவிறுப்பான ஒரு 'பாவம்' பொய்ரெட்டின் முகத்தைக் கடந்துப் போனது. அவர் முன்னுக்கு வளைந்து வந்தார். ''மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு ப்ளாக்-மெயில் பண்ணப்படுவதாய் நீ நம்ப, உனக்கு, அந்த ராத்திரிக்கு முன்னால ஏதாவது சந்தர்ப்பம் இருந்ததுண்டா?'

''ம்ம். கிடையவே கிடையாது ஸார். அது எனக்குவொரு பெரிய ஆச்சரியம் ஸார். அத்தனை சரியான ஒரு ஜென்டில்மேன் இப்படி யெல்லாமா போய் அகப்பட்டிருப்பதுனு தான் நினைச்சேன்.''

''எத்தனை தொகை – உன் காதுல விழுந்தது?''

''எதுவும் கேட்கலே, ஸார். நான் பண்ண வேண்டிய பணிகளே, அடுக்களையில தலைக்கு மேல கிடந்தது. இதையும் மீறி ஓரிரு முறை நான் அவரோட படிக்குமறை பக்கம் நழுவியதெல்லாம் வீணாவே போயின. முதல் தடவை முயன்றபோது, வெளியே வந்த டாக்டர் ஷெப்பர்ட் என்னைக் கையும் களவுமா பார்த்தாரு... அடுத்த தடவை, என்னைக் கடந்து அதே திசையில் மிஸ்டர் ரேமண்ட் முன்னாடி போயிக்கிட்டிருந்ததாலே என்னால மேற்கொண்டு போக முடியாம போச்சு. கையில ட்ரேயைத் தூக்கிக்கிட்டு நான் முயன்றபோது என் முயற்சியின் தலையை வெட்டி அனுப்பினது, மிஸ் ஃப்ளோரா.''

அவனுடைய உண்மைத்தன்மையைப் பரீட்சிக்க செய்வதைப் போல அவனை நீண்ட நெடுநேரம் பார்த்தவண்ணமிருந்தார் பொய்ரெட். நிஜ ஊழியனாய் அமர்ந்தேயிருந்தான் பார்க்கர். சொன்னான்: ''நீங்க என்னை நம்பறீங்கனே நினைக்கிறேன், ஸார். மேஜர் எல்லர்பீ பற்றி மறுபடியும் போலீஸ் குப்பையைக் கிளறும்னும் அதனால் அவங்களோட சந்தேகம் என் மேல விழும்னும் தான் நான் இத்தனை நாளா பயந்துக்கிட்டே இருக்கேனே ஒழிய, மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு விஷயத்தை நான் சிந்திச்சதே கிடையாது, ஸார்.''

''உன்னை நம்பத்தான் வேண்டியிருக்கு'' என்றார் பொய்ரெட். ''ஆனா இன்னும் உன்கிட்டே நான் கேட்க வேண்டிய ஒண்ணேஒண்ணு பாக்கியிருக்கு – உன்னோட வங்கிக் கணக்குப் புத்தகத்தை எனக்குக் காட்டு. உனக்கு அப்படியொண்ணு இருக்குனு நினைக்கிறேன்...?!''

''யெஸ், ஸார். சொல்லப்போனா அது என்கிட்டேயே இப்ப இருக்கு, ஸார்.''

எவ்விதக் குழப்ப அறிகுறியும் காட்டாமல் உடனடியாய் அதனையெடுத்துக் கொடுத்தான் அவன். ஒல்லியான அந்தப் பச்சை நிற புத்தகத்தைப் பெற்றுக் கொண்ட பொய்ரெட் அதிலுள்ள கணக்கு வழக்குகளை நோட்டமிட்டார்.

''ஆஹ்! இந்த வருஷம், நீ, 500 பவுண்டு மதிப்புள்ள நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட் வாங்கியிருக்கே போலிருக்கே?'' என்றார் பொய்ரெட்.

''யெஸ் ஸார். என்னோட கடந்தக்கால எஜமானனோட மேஜர் எல்-லர்பீயுனான தொடர்பால நான் ஏற்கெனவே ஓராயிரம் பவுண்டு சேர்த்திருக்கேன், ஸார். சில குதிரைங்க மேல கட்டினதுல இந்த வருஷம் எனக்கு லக் அடிச்சது – அதுல கொஞ்சம். ஜுபிளி பரிசு ஒண்ணு அறிவிச்சாங்களே – பவுண்டு 20 – நினைவிருக்கணுமே... அது ஸார் – அது எனக்குத்தான் வந்தது.''

பொய்ரெட் பாங்க் புக்கைத் திருப்பி அவனிடமே தந்துவிட்டார்.

''குட் மார்னிங் பார்க்கர். நீ கிளம்பலாம். உண்மைகளைத் தான் நீ என்னிடம் சொல்லியிருக்கேனு நான் நம்பறேன். அப்படி நீ செய்யாம விட்டிருந்தா – அந்த அளவுக்கு நீ அவதிப்பட நேரிடும், ஃபிரண்ட்.

பார்க்கர் கிளம்பி அவன் தலைமறைந்ததுமே பொய்ரெட் அவருடைய மேல் கோட்டினை மீண்டுமொரு முறை எடுத்துக் கொண்டார்.

''மறுபடியும் வெளியே போறீங்களா?'' என்றேன் நான்.

''யெஸ். நம்ம குட் மிஸ்டர் ஹேமந்த்தைப் போய் ஒரு சின்ன விஸிட் அடிச்சுட்டு வருவோமே...

''ஓ கே. ஆனா – நீங்க பார்க்கர் சொன்ன கதையை நம்பறீங்களா?''

''நேரடியா பார்க்கப்போன அதுல நம்பகத்தன்மை இருக்கத்தான் செய்யுது. அவன் சிறப்பான ஒரு நடிகனாக இல்லாதபட்சத்தில் சொல்றேன் – அந்த ப்ளாக்-மெயில் கிளைக்கதையின் பலிகடாவே ரோஜர் ஆக்ராய்டு தான் என்பதே பார்க்கருடைய நினைப்பு. அப்படிதான்னா, மிஸஸ் ஃபெர்ரர்ஸ் பிஸினஸ் பற்றி இந்தப்பயலுக்கு ஒரு மண்ணும் தெரியாது.''

''அப்படினா – யாரது?''

''சரியா கேட்டீங்க. அதான் இப்ப கேள்வியே! அந்த ப்ளாக்-மெயிலர் – யாரது? இப்ப நாம மிஸ்டர் ஹேமந்த் நோக்கி எடுக்கும் முயற்சி ஒரு வகையில நமக்கு வழிகாட்டும். யெஸ் – அது, ஒண்ணு, பார்க்கரை முழுமையா வெளியிலே கொண்டு போய் நிறுத்திடும் – இல்லேனா –''

''இல்லேனா?''

''இன்னிக்குக் காலையிலிருந்து சொல்ல வந்த வாக்கியத்தைப் பாதி பாதியிலே விட்டுடும் கெட்ட பழக்கம் என்னைத் தொத்திக் கிட்டிருக்கு'' என்று மன்னிப்புக் கோரும் தொனியில் சொன்னார் பொய்ரெட். ''இதை நீங்க கொஞ்சம் இன்னிக்குத் தாங்கிக்கணும்.''

இந்த இணக்கமான தருணத்தை சாதகமாக்கிக் கொண்ட நான் ''நானும் உங்ககிட்டே சின்ன மன்னிப்புக் கேட்டுக்கணும்'' என்று என் மன அரிப்பை இறக்கி வைத்து விட இறங்கினேன். ''அந்த மோதிரம் பற்றி உங்களோட முன் அனுமதி இல்லாமலே நான் கொஞ்சம் கசிய விட்டுட்டேன்.''

''எந்த மோதிரம்?''

''தங்கமீன் குளத்துல நீங்கக் கண்டெடுத்த மோதிரம் தான்...

''ஆஹ்! யெஸ்'' என்றார் பொய்ரெட் மிக அகலமாய் சிரித்தபடி.

''இதனால நீங்க கோபமடையலேயே? தப்பு என் மேலத்தான்.''

''அய்யய்யே... இதனாலென்ன நண்பா! அப்படி சொல்லக்கூடாதுனு நான் ஒண்ணும் உங்ககிட்டே எந்தவிதமான உத்தரவும் போட்டு வெக்கலியே. அதைப்பற்றி பேசித்தான் ஆகணும்னா அதை பேச உங்களுக்குப் பூரண சுதந்திரமிருக்கு. உங்க சகோதரி ஈடுபாடா இருந்தாங்களா, கேட்க?''

''அவ தான், வேற யாரு? அது பெரிய அலையையே உருவாக்கி யிருக்கு. விதம் விதமான ஊகங்கள்.''

''ஆஹ்! என்ன அலையடிச்சாலும் அது ரொம்ப ஸிம்பிள் தெரியுமோ! அதுக்கான உண்மையான விளக்கம், இதோ, கண்ணுக்கு முன்னாடியே இருக்கு. தெரியலே?''

நான் என்னையும் அறியாமல் கண்களை அகல விரித்து முன்னால் தேடியே விட்டேன்! ''அப்படியா?''

பொய்ரெட் மிக அகலமாய் சிரித்து விட்டார். ''புத்திசாலி மனிதன்,

அவனா வாய் விட்டு பேசி விடுவது கிடையாது'' என்றார் சூசகமாய். ''அப்படித்தானே! ஆங்... மூச். நாம மிஸ்டர் ஹேமந்த் வளாகத் துக்குள்ளே வந்தாச்சு.''

லாயர் அவருடைய அலுவலகத்துக்குள்ளிருக்க, நாங்கள் எவ்வித தாமதமுமின்றி உள்ளே அனுப்பப்பட்டோம். அவர் எழுந்து வக்கீலுக்கே உரிய வறண்ட பாணியில் வரவேற்றார்.

பொய்ரெட் உடனே வந்த விஷயத்துக்குள் இறங்கி விட்டார். ''ஸார்... உங்களுக்கு என்னிடம் பகிர்ந்துக் கொள்வதில் இடையூறு இல்லாதபட்சத்தில், நான் சில தகவல்களை வேண்டி, இங்கே வந்திருக்கேன். நீங்க கிங்ஸ் பட்டாக்கில் வசித்த காலஞ்சென்ற மிஸஸ் ஃபெர்ரர்ஸுக்காக இயங்கி வந்ததா கேள்விப்படறேன்.''

லாயரின் கண்களில் துரிதமாய் விளைந்த ஆச்சரியக் கதிர்களை நான் நோட்டமிட்டு விட்டேன்... அதற்கு முன், உடனேயே, அவரது பணிநிமித்தமான உணர்ச்சியற்ற முகமூடி வந்து குவிந்து விட்டது.

''நிச்சயமா. அவரோட அத்தனை கணக்கு வழக்குகளும் எங்க கைகள் வழியாதான் சென்றன.''

''வெரி குட். வெல், இப்ப இனிமே நான் சொல்லவுள்ள எதையும் நீங்க கேட்கத் துவங்குவதற்கு முன்னாடி, டாக்டர் ஷெப்பர்ட் சொல்லவுள்ள சங்கதிகளை நீங்க கேட்க வேண்டுமாய் வேண்டிக் கறேன். கடந்த வெள்ளியன்று இரவு உங்களுக்கும் மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டுக்குமிடையே நடந்த உரையாடலை மறுபடியொருமுறை சொல்வதற்கு உங்களுக்கு ஒண்ணும் ஆட்சேபணை கிடையாதே, ஃபிரண்ட்?''

''துளி கிடையாது'' என்ற நான், அந்த விநோத மாலையன்று நடந்தவை பற்றிய கச்சேரியை துவங்கினேன்.

முழு கவனத்துடன் கேட்டுக் கொண்டார் ஹேமந்த். நான் முடித்ததும், ''ப்ளாக்-மெயில்'' என்றார் சிந்தனையுடன்.

''உங்களுக்கு இது ஆச்சரியமாயிருக்கா?'' என்று கேட்டார் பொய்ரெட்.

அவருடைய மூக்குக் கண்ணாடியைக் கழற்றிய லாயர் கைக்குட்டையால் அதனைப் பளபளப்பாக்கிக் கொண்டார். ''நோ'' என்று பதில் தந்தார். ''எனக்கு இதுல ஆச்சரியமே கிடையாதுனு தான்

சொல்வேன். இப்படி ஏதோவொண்ணு இதுல பிணைஞ்சிருக் கணும்னு கொஞ்ச நாளாவே எனக்கு எண்ணமுண்டு.

''அப்படினா இது நம்மிருவரையும்...'' என பரபரப்பாய் சொன்ன பொய்ரெட், ''... நான் தேடி வந்த தகவல் நோக்கி செலுத்துது. எத்தனை தொகை தரப்பட்டிருக்கு என்பது பற்றி யாராவது ஒருத்தரால தகவல் தரமுடியும்னா, அது, நீங்க ஒருத்தர் தான், ஸார்'' என்றார்.

சில நொடிகளுக்குப் பிறகு ''அந்தத் தகவலை மறைச்சுப் பதுக்க எனக்கு எந்தக் காரணமும் தெரியலே'' என்ற ஹேமந்த் பேச ஆரம்பித்தார்: ''கடந்த சில வருடங்கள்ல, மிஸஸ் ஃபெர்ரர்ஸ், அவங்க ளுடைய பாதுகாப்பு சேமிப்புகள் சிலவற்றை விற்க ஆரம்பிச்சாங்க. அதுல வந்த தொகை அவங்களோட கணக்குல தான் போடப்பட்டதே ஒழிய மேற்கொண்டு வேறெதிலும் முதலீடா போடப்படலே. அவருக்கு வந்துக் கொண்டிருந்த பணவரவுகள் மிகப்பெரிய தொகை... மேலும் அவருடைய கணவரின் மரணத்துக்குப் பிறகு அவர் மிகவும் அமைதியான வாழ்க்கையைத் தான் ஸிம்பிளா நடத்திக்கிட்டு வந்தாங்க... அதனால, சேகரிக்கப்பட்ட இத்தொகை வேறெதோ ஸ்பெஷல் காரணத்துக்காக கொடுக்கப்படும்னு தான் நினைக்க வெச்சுது. ஒரு தடவை நான் வாய் விட்டே கூட கேட்டுட்டேன்... அதுக்கு, அவரோட கடந்தகால கணவரின் ஏழை உறவுகள் பலவற்றைத் தாங்க வேண்டிய சூழல்ல அவங்க இருப்பதா சொல்லி அப்படியே பேச்சை நிறுத்திக்கிட்டாங்க. நானும் இவ்விஷயத்தை அப்படியே போட்டுட்டேன் – வேறென்ன செய்ய? இதுவரைக்கும், மிஸ்டர் ஆஹ்(லே) ஃபெர்ரர்ஸ் மீது உரிமையுள்ள இன்னுமொரு பெண்ணுக்குத்தான் அத்தொகை பகுதி பகுதியா போய்க்கிட்டிருக்கு என்ற எண்ணத்துல மட்டுமே நானிருக்கேன். ஆனா இதுல மிஸஸ் ஃபெர்ரர்ஸ் ஒரு பாத்திரமா இருப்பாங்கனு நான் நினைச்சதே கிடையாது.''

''அந்தத் தொகை?'' – கேட்டார் பொய்ரெட்.

''எல்லா வகையான செலவுகளையும் சேர்த்து வெச்சுப்பார்த்தா, வெளியே கணக்கில்லாம போன தொகை கிட்டத்தட்ட இருபதாயிரம் பவுண்டுகள்னு சொல்வேன்.''

'இருபதாயிரம் பவுண்டுகள்!'' என்று ஆச்சரியக் கூவலை

வெளியிட்டேன் நான். ''ஒரு வருஷத்துல!''

''மிஸஸ் ஃபெர்ரர்ஸ் மாபெரும் பணக்காரி'' என்று குறிப்பு தந்தார் பொய்ரெட், வறட்சியாய்.

''இதுக்கு மேலும் நான் ஏதாவது உதவி பண்ணக் கூடியது இருக்கா?'' என்றார் ஹேமந்த்.

''நோ'' என எழுந்துக் கொண்ட பொய்ரெட், ''ஐ தேங்க் யூ'' என்றார். ''உங்க வேலையை நிலைகுலைய வெச்சதுக்கு – எக்ஸ்க்யூஸ் மீ'' என்றார் பொய்ரெட்.

''நாட் அட் ஆல், நாட் அட் ஆல்.''

மறுபடியும் நாங்கள் வெளியே வந்திருந்தபோது, ''நிலைகுலைய என்ற வார்த்தை...'' என குறிப்பிட்டுக் காட்டிய நான் ''... சித்தப்பிரமை பிடிச்ச இடத்துல பயன்படுத்த வேண்டிய ஒரு வார்த்தை'' என்றேன்.

''அப்படியா'' என விசனப்பட்டு விட்டார் பொய்ரெட். ''நாடு விட்டு நாடு வரும்போது வார்த்தை பிரயோகம் கத்துக்கணும். அப்படினா, 'நான் வந்து உங்க வேலையக் குழப்பியிருந்தா மன்னிச்சுடுங்க'னு சொல்லியிருக்கலாமோ?'' என்றார்.

''தொந்தரவு எனும் வார்த்தை தான் உங்க மனசுல இருக்கு. அதை இஷ்டத்துக்குப் போட்டு நீங்க செய்வது தான் – குழப்புவது!''

''அதான்... அதே தான். தேங்க் யூ ஃபிரண்ட். ஆங்... இப்ப நம்ம பார்க்கரைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க? கையில கொள்ளை கொள்ளையான தொகையான இருபதாயிரம் பவுண்டுகளை வெச்சுக்கிட்டு அவன் இன்னுமா ஒரு பட்லரா வாழ்க்கையைத் தொடர்ந்திருப்பான்? ம்ம். இன்னொரு பெயருல அவன் தொகை முழுவதையும் போட்டு வெச்சிருக்கலாம்னு ஒரு வழி இருந்தாலும், அவன் நம்மகிட்டே சொன்ன அத்தனையும் நிஜமேனு நினைக்கும் நிலையில தான் நானிருக்கேன். இது நமக்கு ஒரேயொரு சாத்தியக் கூறைத் தான் விட்டு வைக்குது டாக்டர். ரேமண்ட், அப்படியில்லைனா, வெல்... அது மேஜர் ப்ளண்ட்.

''நிச்சயமா அது ரேமண்டா இருக்க முடியாது'' என மறுத்தேன் நான். ''அவர் வெறும் ஐநூறு பவுண்டு எனும் தொகைக்குத்தான் சிங்கியடிச்சுக்கிட்டிருந்ததா அவரே சொன்னார்.''

''யெஸ் – அப்படித்தான் அவர் சொன்னார்.''

''அப்புறம் இந்த மேஜர் ப்ளண்ட்டைப் பொறுத்தவரைக்கும் —''

''நான் சொல்றேன் அந்த வெரி குட் மேஜர் பற்றி'' என தடுத்தார் பொய்ரெட். ''விசாரணைகள் பண்ணிக் கொண்டேயிருக்க வேண்டியது தான் என் பணியே. நான் அவற்றை பண்றேன். அவர் சொன்னாரில்லையா மரண சாசனத்தின் வழியா அவருக்கு திடீர்னு வந்ததா– ஒரு சொத்து பற்றி! அது கிட்டத்தட்ட இருபதாயிரம் பவுண்டுகள்னு நான் கண்டுபிடிச்சிருக்கேன். இதைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?''

என்ன பேசுவது என்று வார்த்தைகளே அகப்படா வண்ணம் நான் அந்த அளவுக்கு வாயடைத்துப் போயிருந்தபோது என்னத்தைப் பேசப் போகிறேன்! ''இது சாத்தியமே கிடையாது!'' என்றேன் நான் இறுதியாய். ''அனைவருக்கும் பரீச்சயமான ஒரு பிரபலஸ்தரான மேஜர் ப்ளண்ட் போன்ற ஒருவர் —''

பொய்ரெட் தோள்களைக் குலுக்கிக் காட்டினார். ''யாருக்கு இதெல்லாம் தெரியும்? அவர் மிகப்பெரிய ஐடியாக்கள் கொண்ட ஒரு மனிதன். ஆங்... அவரை என்னாலயும் ஒரு ப்ளாக்-மெயிலரா நினைச்சுப் பார்க்க முடியலே என்பதை நானே ஒத்துக்கறேன். ஆனா இன்னொரு சாத்தியக்கூறு இருக்கு–நீங்க துளியும் கணக்கில் கொள்ளாத ஒன்று.''

''என்னது அது?''

''நெருப்பு, மை ஃபிரண்ட். ரோஜர் ஆக்ராய்டே அந்தக் கடுதாசி, நீலகவர் எல்லாத்தையும் நீங்க நகர்ந்த பிறகு பஸ்மமாக்கியிருக்கலாம்.''

நான் நிதானமாய், ''அது அப்படி நடந்திருக்கும்னு என்னால ஒப்புக்க முடியலே'' என்றேன். ''இருந்தாலும், யெஸ், அது அப்படியும் ஆகியிருக்கலாம். தன் மனசை அவர் மாற்றிக்கிட்டிருக்கலாம்.''

இந்த சமயத்தில் நாங்கள் எங்கள் வீடடைந்திருந்தோம்... அந்நொடியில் ஓர் உந்துதலில் உள்ளே வருமாறு அவரை நான் வரவேற்றேன்.

வந்தார். சிறு சிற்றுண்டி சாப்பிட்டோம். இதற்கு பிறகு நாங்கள் கனப்புக்கு முன்னால் உட்கார்ந்திருந்தபோது கரோலின் பொய்ரெட்டை நேரடியாகவே தாக்கி விட்டாள்: ''இன்னும் ரால்ஃப் பேடனைக் கண்டுபிடிக்க முடியலியா?''

''அவரை நான் எங்கே போனா பிடிச்சுக்கிட்டு வர முடியும், மேடம்!''

''ஒரு வேளை க்ரான்செஸ்டர் போனா அவரைப் பிடிச்சுடலாமோனு நினைச்சேன்'' – அழுத்தமான உள்ளர்த்தம் வைத்த தொனியில் சொன்னாள் கரோலின்.

இதற்கு, பொய்ரெட் கிலியறைந்தவரைப் போல காணப்பட்டார். ''க்ரான்செஸ்டர்? ஓ, எதுக்காக பிரத்யேகமா க்ரான்செஸ்டர்ல?''

சிறு எரிச்சல் தெறிக்க விஷயத்தை ஏன் என அவருக்கு நான் புரியவைத்தேன். ''எங்ககிட்டே கொட்டிக்கிடக்கும் ரகசிய துப்பறியும் பட்டாளத்தான்களில் ஒருத்தன் உங்களை நேற்று க்ரான்செஸ்டர்ல பார்க்கும்படி ஆகியிருக்கு'' என்றேன் நான்.

பொய்ரெட்டின் கிலி மறைந்தது. நெஞ்சார சிரித்தார் அவர். ''ஆஹ்! அதுவா! பல் மருத்துவரைப் பார்க்க ஒரு சின்ன விஸிட்! என் பல் – அதுக்கு வலிச்சுக்கிட்டே இருக்கணும். நிவாரணத்துக்காக அங்கே போவேன். நல்லா இருந்த பல்லு தான் அது. மருந்தெடுத்துக்கிட்டா குணமாயிடும்னு நினைக்கிறேன். ஆனா எதிரா சொல்றாரு டாக்டர். பிடுங்கிடலாம்கிறார். நான் முடியாதுனு மறுக்கிறேன். விவாதம் பண்றேன். அவர் சொன்னதையே சொல்றார். அவருக்குனு ஒரு வழி!''

பட்டென உடைந்து காணாமல் போய் விட்ட மாபெரும் பலூன் போல ஆனாள் கரோலின்.

நாங்கள் ரால்ஃப் பேடன் பற்றி பேசுவதில் விழுந்தோம். ''பலமற்றவன்'' என்றேன் நான். ''ஆனா நயவஞ்சகமெல்லாம் கிடையாது.''

''ஆஹ்! பலமற்றவன்'' என்ற பொய்ரெட், ''அது எங்கே கொண்டு போய் விடும்?'' என்று கேட்டார்.

''அப்படி போடுங்க அரிவாளை'' என்றாள் கரோலின். ''இந்த ஜேம்ஸை எடுத்துக்குங்க. துளி தைரியம் கிடையாது. தண்ணீ போல, வெலவெலத்தவன். நான் மட்டும் இவனைக் கவனிச்சுக்க இவன் பின்னாடியே இல்லேனா—''

எரிச்சலானேன். ''தனிப்பட்ட கால் வாரல் இல்லாம உன்னால பேசவே முடியாதா?''

இதனாலெல்லாம் கொஞ்சமும் நகர்த்தப்படாத கரோலின், ''நீ பலஹீனமானவன்தான் ஜேம்ஸ்'' என்றாள். ''நான் உன்னை விட எட்டு

வயசு மூத்தவ. இதையெல்லாம் மிஸ்டர் பொய்ரெட் தெரிஞ்சுப்பதுல எனக்கொண்ணும் ஆட்சேபணை கிடையாது —''

மதிப்பான ஒரு சிறு வணக்கத்தைப் புதுப்பித்துக் காட்டிக் கொண்ட பொய்ரெட், ''ஓஓ! நான் அப்படி நினைச்சதே கிடையாது மேடம்'' என்றார்.

''எட்டு வருஷம் மூத்தவ. உன்னைக் கண்ணுங்கருத்துமா கவனிச்சுக்கிட்டேயிருப்பது என் கடமைனே நான் வாழ்ந்தவ. தப்பான சூழல்ல வளர்க்கப்பட்ட நீ, நான் மட்டும் இல்லாமப் போயிருந்தா இப்ப என்ன மாதிரியான ஒரு நிலையில போய் முட்டிக்கிட்டு நின்னுருப்பேனு அந்தக் கடவுளுக்குத் தான் வெளிச்சம்...

விட்டத்தைப் பார்த்து புகையை உருண்டை உருண்டையாய் அது நோக்கி விரட்டியபடி ''ஒரு வீரதீரசாகசப் பொண்ணைக் கலியாணம் கட்டியிருப்பேன்'' என்றேன்.

''வீரதீரசாகசப்பெண்!'' – மூக்கை உறிஞ்சி வெறுப்பேற்றியபடி சொன்னாள் கரோலின். ''நாம இப்ப வீரதீரம் செய்யவல்ல வீராங்கனைப் பொண்ணு ஒருத்தியைப் பற்றிப் பேசித்தான் ஆகணும்னா—''

வாக்கியத்தை முடிக்காமல் அவள் அப்படியே விட்டு விட, சிறு ஆர்வம் பொங்க ''வெல்?'' என நுனி கொடுத்தேன் நான்.

''நத்திங். இங்கிருந்து நூறு மைல் தூரத்துக்குள்ளேயே ஒருத்தியை நான் சொல்ல முடியும்.''

இங்கு, சட்டென்று அவள் பொய்ரெட் பக்கமாய் திரும்பிக் கொண்டாள். ''சொல்லுங்க பொய்ரெட்... கொலையைச் செஞ்சது அந்த வீட்டுல இருக்கிற யாரோ ஒருத்தர் தான் எனும் முடிவுல நீங்கயிருப்பதா ஜேம்ஸ் சொல்றான். இதுக்கு என்னால சொல்ல முடிஞ்ச ஒரே பதில்: நீங்க – தப்பு.''

''நான் தப்பா இருப்பதை எப்போதும் விரும்பாதவன்'' என்று அழகாய் இதற்கு பதில் தந்தார் பொய்ரெட். ''நீங்க சொல்வது போல கிடையாது. ஆமாம்... நீங்க எப்படி அப்படி சொல்றீங்க?''

பொய்ரெட்டின் குறிப்புக்களைக் கொஞ்சமும் காதுகளில் வாங்கிக் கொள்ளாமல், ''இப்படி நான் சொல்ல கை நிறைய சாட்சிகள் இருக்கு'' என தொடர்ந்துக் கொண்டிருந்தாள் கரோலின்: ''ஜேம்ஸ் தந்தது.

இன்னும் பல வழிகள்ல கிடைச்சது. சாட்சிகளைச் சொல்றேன். நான் 'பார்த்த' வரைக்கும் அந்த வீட்டுல இருந்தவங்கள்ல ரெண்டே ரெண்டு பேருக்குத்தான் மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டைப் போட்டுத் தள்ளும் வாய்ப்புகள் இருந்திருக்கு. ரால்ஃப் பேடன் மற்றும் ஃப்ளோரா ஆக்ராய்டு.''

''மை டியர் கரோலின்—''

''த பாரு ஜேம்ஸ். இப்ப என்னைத் தொந்தரவு செய்யாதே. நான் எதைப் பற்றி என்ன பேசறேன்னு தெரிஞ்சுதான் பேசறேன். பார்க்கர் அவளைக் கதவுலயே பிடிச்சிருக்கான் – உண்டா இல்லையா? அவ அங்கிளுக்கு அவ குட் நைட் சொன்னதையெல்லாம் அவன் தன்னோட சொந்தக் காதாலே கேட்கவேயில்லே. அப்பவே அவ அவரைக் கொன்னுட்டு வெளியே வந்திருக்கலாம், ஆங்!''

''கரோலின்!''

''அவ தான் பண்ணியிருக்கானு நான் சொல்லலையே ஜேம்ஸ். அவ பண்ணியிருக்கக் கூடும்னு சொல்லிக்கிட்டிருக்கேன். இந்தக் காலத்துப் பொண்ணுங்களைப் போலவே, ஒரு மண்ணும் தெரியா விட்டாலும் மேலேயிருக்கும் சூரியனுக்குக் கீழேயிருக்கும் அத்தனையும் தனக்கே தெரிஞ்சா மாதிரி மேதாவித்தனமா கூவிக்கிட்டே அலையும் மத்த விடலைங்களைப் போல இந்த ஃப்ளோரா பொண்ணும் அலைஞ்சாலும், ஒரு கோழிக்குஞ்சைக் கொல்லும் தைரியம் அவளுக்கிருக்குனு கூட நான் ஒத்துக்க மாட்டேன். ஆனா, இது இப்படித்தான். கொலை நடந்ததா கூறப்படும் சமயத்துல ரேமண்டுக்கும் மேஜர் ப்ளண்டுக்கும் வேறிடத்துல இருந்ததா நிரூபணமிருக்குடா. மிஸஸ் ஆக்ராய்டுக்கும் இருக்கு. ஏன்... இந்த ரஸ்ஸெல் பொண்ணுக்குக் கூட அவ வேற ஜோலியா இன்னோர் இடத்துல இருந்ததா அலிபீ இருக்கு. யாருக்குத் தான் இல்லே – இந்த ரால்ஃப் மற்றும் ஃப்ளோரா தவிர! இதுல நீ என்ன வேணும்னாலும் சொல்லிட்டுப் போ – ரால்ஃப் பேடன் கொலைகாரன்னு என்னால ஏத்துக்கவே முடியாது. நம்ம வாழ்நாள் முழுமைக்கும் நாமறிஞ்சு வெச்சிருக்கும் அழகு பய!''

இதற்கு பிறகு அவருடைய சிகரெட்டிலிருந்து சுருள் சுருளாய் எழும் புகையையே கண்ணுற்றபடி ஒரு நிமிடம் போல அமைதியாயிருந்தார்,

பொய்ரெட். இறுதியாய் அவர் பேசியபோது, அக்குரல், வெகு தொலைவிலிருந்து, மிக மேலாண்மையாய், ஆர்வத்தைக் கிண்டிவிடும் பதிவோடு அமைந்திருந்தது. அவருடைய சராசரி பாணியில் இல்லாமல் முழுக்கவும் மாறியிருந்தது அது:

''உதாரணத்துக்கு ஒரு மனுஷனை எடுத்துப்போம்... ஒரு சாதாரண சராசரி மனுஷன். கொலை அப்படினு ஓர் ஐடியாவே சிந்தையில் இல்லாத ஆள். அவனுக்குள்ளே பலஹீனத்தின் ஒரு சிறு நூலிழை எங்கேயோ இருக்கு – ரொம்ப ஆழத்துல. அது இதுவரை அதனுடைய பாத்திரத்தை நடத்திக்காட்ட தட்டியெழுப்பப்படலே. அது அப்படி தட்டியெழுப்பப்படாமலே கூட கடைசி வரை ஆகிடலாம் – அப்படினா அவன் ஒரு புனிதனாக எல்லோராலும் மரியாதையா வைக்கப்பட்டு கல்லறைக்குப் போயிடுவான். ஆனா நாம ஏதோவொண்ணு நடக்குதுனு எடுத்துப்போம். அவனுக்கு ஏதோ முடை வந்துடுது – ஏன், அது கூட இல்லே. விபத்தா அவன் ஒரு ரகசியத்துக்குள்ளே காலிடறி விழுந்துடறான் – ரகசியம்... யாரோ ஒருவருடைய ரகசிய வாழ்வு அல்லது ரகசிய மரணம் சம்பந்தப்பட்ட ரகசியம். இது அவனுக்குள்ளே உடனே ஏற்படுத்தும் உத்வேகம் – 'பேசி விடு' என்பதுதான். ஒரு சரியான நாட்டுப் பிரஜையா அதைப்பற்றி அவன் பேசிடத்தான் நினைப்பான். ஆனா அப்போ அவனுக்குள்ளேயே இருக்கும் அந்த பலஹீனத்தின் சிறு நூலிழை முழிச்சிக்குது. இதுலயிருக்கு பணம் சேர்க்கும் சந்தர்ப்பம் – பெரும்பணம் சேர்க்கும் வாய்ப்பு. அவனுக்குப் பணம் வேணும் – அதுக்காக அவன் ஏங்கிக்கிட்டிருக்கான் – இப்ப அது அத்தனை சுலபமா ஆகிடுச்சு. ஏகமான பெருந்தொகையை அடைய அவன் செய்ய வேண்டியது ஒண்ணுமே கிடையாது – ஜஸ்ட், அமைதி காக்கணும். இது தான் ஆரம்பம். பணம் வேணும் எனும் வெறி கொழுந்து விட்டு எரிய ஆரம்பிக்குது. அவனுக்கு மேலும் மேலும் – வேணும்! அவன் காலடிக்கு அடியில் திறந்துக் கிடக்கும் தங்கச்சுரங்கத்தைப் பார்த்து மயங்கிக்கிடக்கான் அவன். பேராசை அடையறான். இந்த பேராசையால அவன் தன்னையே தாண்டி ஆடறான். ஓர் ஆணை, ஒருத்தன் எத்தனை வேணுமோ அத்தனை தூரத்துக்கு அமுக்கலாம்; ஆனா ஒரு பெண்ணை ஒருத்தன் அதிகம் அமுக்கிப் பார்க்கக்கூடாது. ஒரு பெண்ணுக்கு உண்மையைப்

பேசிடணும் எனும் அவா, அவ அடி மனசுல இருந்துக்கிட்டேயிருக்கும். எத்தனை ஆண்கள் அவங்களுடைய பெண்டாட்டிகளை ஏமாற்றினதை ரகசியமா சுமந்துக்கிட்டே கல்லறை போய் சேர்ந்துடறானுங்க! ஆனா எத்தனை பொண்ணுங்க அவங்களுடைய கணவன்மார்களை ஏமாத்தினதை அதே கணவன்மார்களிடம் மறைக்க முடியாம சொல்லிட்டு அவங்களுடைய வாழ்க்கையையே சூறாவளியா ஆக்கிக்கிட்டிருக்காங்க! அமுக்கப்பட்டுக்கிட்டே தானிருப்பாங்க. ஆனா ஒரு தாள முடியாத நொடிப்பொழுதுல உண்மையை அப்பட்டமா சொல்லிட்டு அந்த நொடியில கிடைக்கும் ஆனந்தத்துக்காக இரையாகிப் போயிடறாங்க. இப்படிப்பட்டது தான்னு நினைக்கிறேன், இந்த வழக்கு. நான் சொன்ன அந்த நூலிழை உதாரணம் – இந்த கேஸ்ல மிக அதீதமா இருக்கு. ஆனா இது மட்டுமே முடிவா அமையலே. தங்க முட்டை போடும் வாத்து கதையா கதை திரும்பிடுது. நாம யாரைப்பற்றிப் பேசிக்கிட்டிருக்கோமோ அவனை, ஆபத்து, திறந்த முகத்துடன் சந்திக்குது. அந்த மனுஷன் அதே மாதிரியான மனுஷன் கிடையாது – போன வருஷம் இருந்த அதே மாதிரியா கிடையாதுனு வெச்சுக்கங்களேன். அவனுடைய அறநெறி சார்ந்த எண்ணங்களெல்லாம் முனை மழுங்கிப் போயாச்சு. தப்பிச்சாகணும்னு அவன் வழிவகை தெரியாம துடிச்சுக் கிட்டிருக்கான். தோற்றுப் போய்க் கொண்டிருக்கும் கட்சியிலிருந்து போர் செஞ்சுக்கிட்டிருக்கும் அவன் தப்பிக்க எதை வேணும்னாலும் கைவிளக்கா எடுத்துக்க துணியறான்... ஏன்னா, விஷயம் தெரிஞ்சுட்டா, அவனுக்குத் தப்பிப்பே கிடையாது என்பது அவனுக்கு நல்லாவே தெரியும். அப்போ தான் – அந்தப் பிச்சுவாக்கத்தி அவன் கண்ணுக்குப் படுது!''

பொய்ரெட் சிறிது நேரம் அமைதியாயிருந்தார். இந்த அறைக் குள்ளே ஒரு சுழற்சியை சுண்டி விட்டது போல காணப்பட்டார் அவர். அவருடைய வார்த்தைகள் உண்டுபண்ணிய பதிப்பினை வார்த்தை களில் விளக்க என்னால் முயற்சி பண்ண முடியாது. இந்த பரிசோதனையில் விளக்கவொண்ணா ஈவிரக்கமற்ற தன்மை யிருந்தது... மனிதத்தன்மையே அற்ற நோக்கு இருந்தது... இவை எங்களிருவரையும் இந்தப் பக்கம் பலமாய் அறைந்து ஸ்தம்பிக்க

வைத்திருந்தது.

''அப்புறமா...'' என மிருதுவாய் தொடர்ந்த அவர், ''பிச்சுவாக்கத்தி அகற்றப்படும்... அவன் அவனாகவே – நார்மலாக, கனிவு மிக நிறைந்தவனாய் – ஆகிப்போவான். ஆனால் மறுபடியும் ஒரு தேவை எழுந்தால், மறுபடியும் அவன் தாக்க வருவான்.''

கரோலின் தான் அவளாகவே முன்வந்து எழுந்துக் கொண்டது: ''நீங்க ரால்ஃப் பேடன் பற்றி பேசிக்கிட்டிருக்கீங்க'' என்று விட்டாள் அவள். ''நீங்க சரியா இருக்கலாம்... இல்லாமலும் இருக்கலாம். ஆனா ஒருத்தனை – அவன் எங்கே என்ன பண்ணிக்கிட்டிருக்கான்னே தெரியாத ஓர் ஆளை – இப்படி தாட்சண்யமின்றி குற்றம் சுமத்த உங்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது.''

''கரோலின்!''

''அ... சும்மாயிருடா!''

அப்போது டெலிபோன் மணி கூர்மையாய் அலறியது. நான் ஹாலை அடைய வெளியே வந்து ரிஸீவரை எடுத்தேன். ''வாட்?'' என்றேன் நான். ''யெஸ்... டாக்டர் ஷெப்பர்ட் தான் பேசறது.''

நான் ஓரிரு நிமிடங்கள் பொறுமையாய் கேட்டுக் கொண்டிருந்து விட்டு சுருக்கமாய் மறுபதில் தந்தேன். ரிஸீவரை அதனிடத்திலேயே வைத்து விட்டு மற்றவர்களிருந்த அறைக்கு திரும்பினேன்.

''பொய்ரெட்'' – நான் சொன்னேன். ''லிவர்பூல் பகுதியில் ஓர் ஆளைப் பிடிச்சிருக்காங்க. அவன் பேர் சார்ல்ஸ் கென்ட். அன்னிக்கு ராத்திரி ஃபெர்ன்லி பார்க்குக்கு வந்த அந்நியன் இவன்தான்னு நம்பறாங்க. உடனடியா என்னை லிவர்பூல் போகச் சொல்லி அடையாளம் காணச் சொல்றாங்க.''

அத்தியாயம் 18

சார்ல்ஸ் கென்ட்

அரைமணிநேரத்தில், லிவர்பூல் செல்லும் ட்ரெயினில் நான், பொய்ரெட் மற்றும் இன்ஸ்பெக்டர் ரக்லான் ஆகியோர் பறந்துக் கொண்டிருந்தோம். இன்ஸ்பெக்டர் பட்டவர்த்தனமாய் வெளியே தெரியுமாறு கிளர்ச்சியிலிருந்தார்.

''வேறெதும் கிடைக்கலேனாலும் இந்த ப்ளாக்-மெயில் சமாச்சாரம் பற்றி எதாவது துப்பு கிடைக்கலாம்'' என்று வெற்றி முழக்கமாய் சொன்னார் அவர். ''போன்ல கேட்டதுலேந்து ஆசாமி ரொம்ப கரடுமுரடானவன்னு தெரியுது. போதை மாத்திரைங்க வேற எடுத்துக்கறானாம். அவன் கிட்டேயிருந்து நாம எதைப் பிடுங்கணும்னு நினைக்கிறோமோ அதை சுலபமா வாங்கும்படிதான் இருக்கப் போகுது, பாருங்க. துளி இலக்கு மட்டும் கண்ல பட்டா கூட போதும்... இவனைத் தவிர வேற ஒருத்தரும் மிஸ்டர் ஆக்ராய்டைக் கொல்லலைனு சொல்லிடலாம். அப்படினா எதுக்காக இந்த பேடன் பய தலைமறைவா இருந்து பிராணனை வாங்கணும்? இந்த முழு சமாச்சாரமும் சகதிக்குட்டைப்பா. அப்படித்தான் – கொழகொழ. இதிருக்கட்டும்... மிஸ்டர் பொய்ரெட், கேளுங்க. அந்த கைரேகைகள் பற்றி நீங்க கணிச்ச ஊகம் படு துல்லியம். அவை மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டுடைய சொந்த ரேகைகளே. ஒண்ணு கவனிச்சீங்களா... இதே, இதே ஐடியா தான் எனக்குமிருந்தது. ஆனா அப்படியெல்லாம் இருக்கவே இருக்காதுனு நாந்தான் ஒதுக்கியே வெச்சுட்டேன்.''

இன்ஸ்பெக்டரைப் பார்த்து என்னால் சிரிக்கத்தான் முடிந்தது. குப்புற விழுந்து விட்டார்... பாவம் மீசையில் தான் மண்

ஒட்டவில்லை.

''இந்த மனுஷனை...'' என்ற பொய்ரெட், ''இன்னும் அரெஸ்ட் பண்ணலே, இல்லே?'' என கேட்டார்.

''நோ. சந்தேகத்தின் பேரில் பிடிச்சு வெச்சிருக்காங்க.''

''தன்னைப் பற்றி அவன் என்ன தான் சொல்றான்?''

''இத்துனூண்டு'' என்றார் இன்ஸ்பெக்டர். ''ஜாக்கிரதைப் பேர்வழி, ஆங்! ஏகப்பட்ட குற்றங்களிருக்கு அவன் மேல–ஆனா யார் நிரூபிக்க?''

லிவர்பூலில் வந்திறங்கியதும் இறங்காததுமாய் பொய்ரெட்டுக்கு தரப்பட்ட மனமொப்பிய வரவேற்பைப் பார்த்து நான் கண்ணகல வியந்து நின்றேன். எங்களை அங்கு வந்து எதிர்கொண்ட சூப்பரின்டெண்டெண்ட் ஹேஸ், பொய்ரெட்டுடன் சில காலங்களுக்கு முன்னாள் சிலபல கேஸ்களில் சேர்ந்து பணியாற்றியிருக்க வேண்டும்... இவருக்கிருக்கும் சாதுர்யம் மிகுந்த புத்திக் கூர்மை பற்றி இன்றும் சிலாகிப்படங்காமல் பேசினார்.

''இப்ப நம்ம கையில இங்கே மிஸ்டர் பொய்ரெட் கிடைச்சாச்சு'' என்று மனமொப்பி சொன்ன ஹேஸ், ''அப்படினா வெற்றி அதிக தூரமில்லை'' என்று அறிவித்தே விட்டார். ''நீங்க ரிடையர்ட் ஆகியாச்சுனு இல்லே ஓய் நினைச்சுக்கிட்டிருக்கேன்!''

''அப்படித்தான் ஆனேன், மை குட் ஹேஸ், அப்படித்தான் ஓய்வானேன். ஆனா ரிடையர்மெண்ட் என்பது தான் எத்தனை கொடூரமானது! ஒவ்வொரு நாளும் உங்களை மட்டும் தனியா பிரிச்சு வைக்கனே புலரும் நாட்களை உங்களால தாங்கிக்கவே முடியாது!''

''இருக்கலாம். ஸோ, கிளம்பி, இங்கே நாங்க பிரத்யேகமா கண்டுபிடிச்சு வெச்சிருப்பவனைப் பார்க்க நீர் ஓடி வந்திருக்கீர்! பலே, பலே. இதான், டாக்டர் ஷெப்பர்டா? உங்களால அவனை அடையாளம் காண முடியும்னு நினைக்கிறீங்களா, ம்?''

''நிச்சயமா என்னால சொல்ல முடியலே'' – சந்தேகமாய் சொன்னேன் நான்.

''இவனை எங்கே, எப்படி கையகப்படுத்தினீங்க?'' – விசாரித்தார் பொய்ரெட்.

''வழக்கம்போலத்தான். அங்க அடையாளங்கள் – பப்ளிக்ல சுழல விட்டோம். பத்திரிகைலயும், தனிப்பட்ட முறையிலும். இதுல ரொம்ப

பெரிய திருப்பமெல்லாம் ஏற்பட்டுடாது என்பது என்னோட தாழ்மையான கருத்து – இப்பவே சொல்லிடறேன்! இவன் பேசற விதத்துல அந்நிய சாயலிருக்கு. அன்னிக்கு ராத்திரி இவன் கிங்ஸ் அப்பாட் கிராமத்துக்குப் பக்கத்துல இருந்தான் என்பதை மறுக்கலே, ஒத்துக்கறான். அப்படி நான் அங்கே இருந்ததுல உங்களுக்கு என்ன குடி முழுகிப் போயிடுச்சுனு கதர்றான். ஒரு கேள்வியைக் கேட்டு முடிக்கறதுக்குள்ளே எகிர்றான் – நம்மளை ஒரு கை பார்த்துடுவேன்னு. நம்மளை!''

''நானும் அவனைப் பார்ப்பதற்கு அனுமதியிருக்கா?'' – கேட்டார் பொய்ரெட்.

வேண்டுமென்றே தனது ஒரு கண்ணை மூடிக்கொண்ட சூப்பரின் டெண்டெண்ட் ஹேஸ், ''தன்னடக்கம், ஆங்?'' என்றார். ''நீங்களும் எங்களுடன் இருப்பதுல அத்தனை மகிழ்ச்சி ஸார், எங்களுக்கு. உங்களுக்கு என்ன தோணுதோ அதைப் பண்ண உங்களுக்குப் பூரண அனுமதியிருக்கு. ஸ்காட்லாண்டு யார்டு இன்ஸ்பெக்டர் ஜேப் உங்களைப் பற்றி கொஞ்ச நாளைக்கு முன்னாடி அப்படி விசாரிச்சுக்கிட்டிருந்தார். இந்த கேஸ்ல தனிப்பட்ட ஈடுபாட்டால நீங்க இணைஞ்சிருப்பதைக் கேள்விப்பட்டதா சொன்னார் அவர். இந்த பேடன் ரால்ஃப் எங்கே பதுங்கியிருக்கான்னு என்கிட்டே சொல்ல முடியுமா, ஸார்?''

''இந்த சூழ்நிலையில இதை சொல்வது அத்தனை புத்திசாலித்தனமா எனக்குப் படலே'' என்றார் பொய்ரெட் இறுக்கமாய். குள்ளதுப்பறியும் நிபுணர் தன் அதிர்வான பதிலை அத்தனை அடக்கமாய் வலிக்காமல் செய்து விட்டார். இதற்கு என் முகத்தில் சிறு புன்னகையை வெளியேற்றினேன்.

சம்பிரதாய சில முன்னேற்பாடுகளுக்குப் பிறகு பிடித்து வைக்கப் பட்டிருப்பவனை நேர்முகம் காண நாங்கள் அழைத்துப் போகப் பட்டோம்.

அவன் இளையவன். இருபத்து மூன்றுக்கு மேல் என்னால் கணிக்க முடியாது. நல்ல உயரம், ஒல்லி. இவ்வயதில் இருக்க வேண்டிய உடற்பலம் விழலுக்கிறைத்த நீராகி விட்டதைச் சொல்லும் சற்றே நடுங்கும் கைகள். அவனது தலைமுடி கருமையாயிருந்தாலும்

அமைந்திருந்த துரிதமான நீலநிற விழிகள் அடிக்கடி சுற்றியிருப்போரை ஒரு சதுர நோட்டம் விட்டுக் கொண்டேயிருந்தது. நான் அன்று சந்தித்த முகத்தில் எனக்கு ஏற்கெனவே தெரிந்த யாரோ ஒருவரின் பதிவு இருப்பதாகவே நான் இது நாள் வரை மூளைக்குள் துளாவிக் கொண் டிருந்தேன்... ஆனால் அது ஒருவேளை இவன் தானென்றால், ம்ம்... என் அந்த எண்ணம் தவறு என்றே ஆகும். எனக்குத் தெரிந்த எவரையும் இவன் கடுகத்தனை கூட ஒத்திருந்து நினைவுபடுத்தவில்லை.

''கவனி, கென்ட்'' என்ற சூப்பரின்டெண்டெண்ட் ஹேஸ், ''எழுந்திரு. நில். இங்கே சில பார்வையாளர்கள் உன்னைப் பார்க்கணும்னு வந்திருக்காங்க. யாரையாவது உனக்கு அடையாளம் காண முடியுதா?''

கென்ட் எங்களை மேட்டுமையாய் ஒரு முறை பார்த்தானே ஒழிய பதில் தரவில்லை. அவனது பார்வை எங்கள் மூவரின் மேலும் படர்வதைக் கவனித்தேன் நான்... இறுதியில் அது நிலைத்தது, என் மீது!

''வெல், ஸார்'' என்ற சூப்பரின்டெண்டெண்ட் ஹேஸ், ''இப்ப நீங்க'' என்றார். ''என்ன சொல்றீங்க?''

''உசரம் அதே தான்'' – நான் சொன்னேன். ''பொதுவான தோற்றத்தைப் பார்க்கும்போது கூட, இவன் நம்ம தேடல்ல இருக்கும் ஆளாத்தான் தெரியறான். இதுக்கு மேல, என்னால போக முடியலே.''

''என்ன கருமம் இதெல்லாம்?'' என்று கத்தினான் கென்ட். ''கம் ஆன். கேட்கறேன் இல்லே? துப்புங்க! நான் என்ன பண்ணியிருப் பேன்னு நினைச்சுக்கிட்டு இந்த அடையாளம் காணும் திருவிழா? தொறங்கய்யா வாயை! சம்பந்தப்பட்டிருப்பதா நீங்க நினைக்கும் நான் கேட்கிறேன்.''

இப்போது ஒப்புதலாய் தலையசைத்தேன் நான். ''இவன் தான் அந்த அந்நியன்'' என்றேன். ''என்னால குரலை அடையாளம் காண முடியுது.''

''என் குரலை நீ அடையாளம் காணறே, ஆங்? உனக்குக் குரல் வளையே இல்லாம பண்றேன் பார். எங்கேடா இதுக்கு முன்னாடி இந்தக் குரலைக் கேட்டதா சொல்றே?''

''போன வெள்ளிக்கிழமை சாயந்திரம், ஃபெர்ன்லி பார்க் கேட்டுக்கு வெளியே. அதுக்கான வழியை நீ அங்கே என்கிட்டே கேட்டே.

''நான் கேட்டேன், இல்லையா?''

''நீ ஒத்துக்கிறியா?'' – கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''யோவ்... நான் எதையுமே ஒத்துக்கலேங்கறேன். நீ இதை நீட்றே. இதுவரைக்கும் நீங்க என்னை வெச்சுக்கிட்டு எதைப் பத்திப் பேசிக்கிட்டிருக்கீங்கனே தெரியலேங்கறேன். மண்ணு, கேட்கறான் ஒத்துக்கிறியானு!''

''கடந்த ஒருசில தினங்களா நீ நியூஸ் பேப்பரே படிக்கலியாப்பா?'' என்று, வந்ததிலிருந்து முதல் முறையாய் வாய் திறந்தார், பொய்ரெட்.

''ஓ, அப்ப, அதுதான் இதுவா? ஃபெர்ன்லியில ஒரு வயசான கோழியோட தலையைச் சீவிட்டதா படிச்சேன். ஓஓஓ... அப்ப அதை நான் தான் பண்ணினேன்னு சொல்லி ஃபைலை மூடப் பார்க்கிறீங்க போல, ஆங்?''

''நீ அந்த ராத்திரி அங்கே இருந்திருக்கே'' என்றார் பொய்ரெட்.

''உங்களுக்கெப்படி அது தெரியும், மிஸ்டர்?''

''இதனால.''

சொன்ன பொய்ரெட் தனது பாக்கெட்டிலிருந்து ஏதோவொன்றினை எடுத்து அதனைத் தூக்கிப் பிடித்தார்.

சின்னத் தோட்டத்து அறையில் நாங்கள் கண்டெடுத்திருந்த வாத்து இறகு அது.

அதைப் பார்த்த அதே கணத்தில் அந்த மனிதனின் முகபாவம் மாற்றங்கொண்டது. அவன் கை பாதி தூரம் வரை தானாகவே எழும்பி விட்டது.

''நோ, நண்பா. இது எம்ப்டி. காலி. அன்னிக்கு ராத்திரி அந்த சின்னத் தோட்டத்து அறையில நீ எங்கே விட்டுட்டு வந்திருந்தியோ அங்கேயே தானிருந்தது இது.''

சார்ல்ஸ் கென்ட் இதற்கு அவரை நிச்சயமற்றுப் பார்த்தான். ''உனக்கு எல்லாரையும் பற்றி கொஞ்சங்கொஞ்சம் எல்லாமும் தெரிஞ்சிருக்கும் போலிருக்கே, வெளிநாட்டு பன்னீ! ஆனா ஒரு முக்கியமான விஷயத்தை உன் சாணி மோந்து பார்க்கும் மூக்கு மோப்பம் பிடிக்கலையோ? கவனி மேன்: அந்தக் கெழ ஃபெர்ன்லி பார்க் முண்டம் சீவப்பட்டது ஒன்பதே முக்காலிலிருந்து பத்துக்குள். இல்லையா?''

''அப்படியே'' என்று ஏற்றுக் கொண்டார் பொய்ரெட்.

''யெஸ். ஆனா நிஜமா அது அப்படித்தானா? இது எனக்குத் தெரிஞ்சாகணும்.''

''இந்த ஜென்டில்மேன் அதை உனக்கு சொல்வார்.''

இன்ஸ்பெக்டர் ரக்லானைச் சுட்டிக் காட்டினார் பொய்ரெட். இன்ஸ்பெக்டரோ தயங்கினார். சூப்பரின்டெண்டெண்ட் ஹேஸை அரை பார்வை பார்த்தார். பொய்ரெட்டை முறைத்தார். பிறகு, ஏதோ ஒப்புதல் கிடைக்கப்பெற்று விட்டதைப் போல சொன்னார்: ''அது தான் சரி. ஒன்பதே முக்காலிலிருந்து பத்துக்குள்.''

''அது அப்படித்தான்னா என்னை இங்கே பிடிச்சு வெக்க உங்களுக்கு எந்த நியாயமும் கிடையாது'' என்றான் கென்ட். ''ஒன்பது இருபத்தைந்துக்கே நான் ஃபெர்ன்லி பார்க்கை விட்டு ரொம்ப தொலைவு போயாச்சு. இதை நீங்க விஸில் 'பார்ல' கேட்டுத் தெரிஞ்சுக்கலாம். ஃபெர்ன்லியிலிருந்து க்ரென்செஸ்டர் போற வழியில ஒரு மைல் தூரத்துல இருக்கு இந்த பார். நல்லா நாலு வுடு விட்டுட்டு வந்தேன். இது நடந்தது நிச்சயமா ஒன்பதே முக்காலை யொட்டி. இது எப்படி இருக்கு?''

இன்ஸ்பெக்டர் இந்த நேரம் பார்த்து எதையோ அவரது நோட்டு புத்தகத்தில் கிறுக்கிக் கொண்டிருக்க, கென்ட், ''என்னத்தைக் கிறுக்கறே?'' என கேட்கும்படி ஆனது.

''இதை விசாரிச்சுத்தான் தெரிஞ்சுக்கணும்'' என்றார் அவர். ''நீ உண்மையைத் தான் பேசியிருந்தேனா உன் மேல எந்த கம்ப்ளெ யிண்ட்டும் இருக்காது. என்னயிருந்தாலும், நீ ஃபெர்ன்லி பார்க்குல என்ன பண்ணிக்கிட்டிருந்தே?''

''ஒருத்தரைப் பார்க்கப் போயிருந்தேன்.''

''யார்?''

''அது உனக்கு சம்பந்தமில்லாம பிஸினஸ்.''

''பேசறதுல உருப்படியா மரியாதை காட்டினேனா அது உனக்கு நல்லது மேன்'' என ஹேஸ் அவனை எச்சரித்தார்.

''மண்ணாங்கட்டி மரியாதை. அங்கே நான் என் சொந்த வேலையா போனேன்னு சொல்றேனில்லே – அவ்ளோ தான். விடுங்க. கொலை நடந்த காலம்னு நீங்க சொல்ற நேரத்துக்கு முன்னாடியே நான்

அங்கிருந்து காத தூரம் போயாச்சு என்பது மட்டும்தான் உங்க கூட்டத்துக்குத் தேவையானது – ஓ கே?''

''உன் பேர் சார்ல்ஸ் கென்ட்'' என்ற பொய்ரெட் கேட்டார்: ''நீ எங்கே பொறந்தே?''

அவன் பொய்ரெட்டை முறைத்தான். பின் உறுமினான். ''நான் முழுக்க முழுக்க பிரிட்டிஷ் - ஆங்கிலேயன்.''

''யெஸ்'' என்றார் பொய்ரெட் சிந்தனையுடன். ''அப்படித்தான் நான் நினைக்கிறேன். நீ கென்ட்ல பொறந்தேனு நான் நினைக்கிறேன்.''

அந்த மனிதன் அப்படி முறைத்தான். ''எதனால அப்படி? என் பேராலேயா? இதுக்கும் என் பேருக்கும் என்ன சம்பந்தமிருக்கு? கென்ட்னு பேர்ல இருக்கிறவன் எல்லாம் அந்த நாட்டுல தான் பொறந்திருக்கணும்னு உங்க கவர்ன்மெண்ட்ல சட்டம் கொண்டு வந்துட்டீங்களா என்ன?''

''சில சந்தர்ப்ப சூழ்நிலைகளை வெச்சுப் பார்க்கும்போது நான் அப்படி ஊகிப்பதுண்டு'' என்றார் பொய்ரெட் பட்டும்படாது. *''சில சந்தர்ப்ப சூழ்நிலைகளை வெச்சுப் பார்க்கும்போது – உனக்குப் புரியணுமே!''*

அவர் சொன்ன குரலில் அத்தனை அர்த்தமிருந்தது, கூடயிருந்த இரண்டு போலீஸ் அதிகாரிகளையும் ரொம்பவும் ஆச்சரியப்படுத்து மளவுக்கு. சார்ல்ஸ் கென்ட்டைப் பொறுத்தவரை, செங்கல் சிகப்பாய் ஆன அவன் பொய்ரெட் மீது பாயத்தான் போகின்றான் என்றே நினைத்தேன் நான். போகட்டும் என நினைத்தானோ என்னவோ ஒரு வில்லத்தனமான சிரிப்போடு விட்டு விட்டான்.

தனக்கு முழு திருப்தி உண்டாகி விட்டது என்பது போல ஒப்புதலாய் தலையசைத்துக் கொண்ட பொய்ரெட் கதவு வழியாக அவரது வழியைப் பார்த்துக் கொண்டு வெளியேறி விட்டார். தற்சமயம் இரண்டு போலீஸ் அதிகாரிகளாலும் அவர் இணைந்துக் கொள்ளப் பட்டார்.

''அவன் சொன்னதை முதல்ல நாம சரி பார்த்துடுவோம்'' என்றார் இன்ஸ்பெக்டர் ரக்லான். ''அவன் பொய் சொல்றாப்ல எனக்குப் படலே. ஆனாலும் அவன் அங்கே ஃபெர்ன்லி பார்க்குல போய் என்ன பண்ணிக்கிட்டிருந்தான் என்பது பற்றிய ஒழுங்கான விளக்கத்தைத்

தந்துதான் ஆகணும். எனக்கென்னவோ நம்மளுடைய ப்ளாக்-மெயிலரைச் சரியா பிடிச்சுட்டோம்னே தோணுது. இன்னொரு பக்கத்துல, அவன் கொடுத்த கதை மட்டும் உண்மைனு ஆகிட்டா, கொலைக்கும் அவனுக்கும் தொடர்பே இல்லேனு ஆகிடும். பிடிபட்ட போது அவன்கிட்டே பத்து பவுண்டு காசிருந்தது – அவனைப் பொறுத்த வரைக்கும் இது அதிகம். எனக்கென்னவோ அந்த நாற்பது பவுண்டு நோட் இவனுக்குத் தான் போயிருக்கணும்னு படுது – அந்த கரன்ஸி எண்களோட இது ஒத்து வரலே – ஸோ வாட்... நோட்டை எங்கேயாவது மாத்தியிருப்பான். மிஸ்டர் ஆக்ராய்டு இவன்கிட்டே அந்தப் பணத்தைக் கொடுத்திருக்கணும்... பய விட்டாபோதும்னு பறந்திருப்பான். ஆமா, அவன் பொறந்த ஊரு கென்ட் தானா என்பதுல அப்படி என்னயிருக்கு? இதுக்கும் அதுக்கும் என்ன கனெக்ஷன்?''

''நத்திங்'' என்றார் பொய்ரெட் மிருதுவாய். ''எனக்குள்ளே உதித்த ஒரு சிறு ஊகம். நான், என்னோட சின்ன ஊகங்களுக்குப் பேர் போனவன்.''

''அப்படியா?'' என்று, அவரைப் புதிராய் படித்தபடி கேட்டார் இன்ஸ்பெக்டர்.

சூப்பரின்டெண்டெண்ட் ஹேஸ், அடக்கமுடியா சிம்ம சிரிப்புக்குள் போய் விட்டார். ''பல தடவை இதையே இன்ஸ்பெக்டர் ஜேப் கிண்டலா சுட்டிக்காட்டியிருக்கார். *மிஸ்டர் பொய்ரெட்டும் அவரோட சின்ன ஊகங்களும்!* ஜேப் சொல்லி இதைக் கேக்கணும்... சிரிப்பு பொத்துக்கிட்டு வரும்.''

''நெவர் மைண்ட்'' என்று கிண்டலை ரசிக்கத்தான் செய்தார் பொய்ரெட்.

நானும் அவரும் ஒன்றாக மதியவுணவு எடுத்துக் கொண்டோம். இந்த வழக்கு குறித்த முழு சமாச்சாரமும் அவருக்கு முன்னால் இப்போது விரிந்து திறந்து கிடக்கிறது என்பது எனக்கு நன்றாகவே தெரிந்து விட்டது. பொய்ரெட்டை உண்மை நோக்கி இழுத்து செல்லும் கடைசி நுனி கூட இப்பொழுது அவருடைய கைகளில் சிக்கி விட்டது என்றே கூட சொல்வேன். இருந்தாலும் புதிதாய் விளைந்துள்ள சில சந்தேகங்கள் என்னை குழப்பின. எனக்குப் புதிராய் படுபவை அவருக்கும் அப்படியே புதிராகத்தானிருக்க வேண்டும் எனவும்

நம்பினேன்.

என்னுடைய தலையாய புதிர், இந்த கென்ட் அங்கே ஃபெர்ன்லி பார்க்கில் என்ன பண்ணிக்கொண்டிருந்திருக்கக் கூடும் என்பதே ஆகும். மறுபடி மறுபடி நான் இதே கேள்வியை எனக்குள் கேட்டுக் கொண்டேனே ஒழிய, திருப்தி தரும் பதில் அகப்படவில்லை. இறுதியாய் சின்ன விசாரணையைப் பொய்ரெட்டிடமே நடத்திவிடத் துணிந்தேன். அவரின் பதில் உடனடியாய் கிடைத்து விட்டது.

''நண்பா... இதுக்கு விடை எனக்குத் தெரியும்னு தோணலே.''

''உண்மையா?''–நம்ப முடியாமல் கேட்டேன் நான்.

''யெஸ். ஆமாம்ப்பா. அவன் கென்ட்ல பிறந்த காரணத்துக்காகத் தான் அன்னிக்கு ராத்திரி ஃபெர்ன்லி பார்க் போனான் அப்படினு நான் இப்ப உங்ககிட்டே சொன்னா அது அவ்ளோ புத்திசாலித்தனமா உங்களுக்குப் படாதுனு நினைக்கிறேன்.''

நான் அவரைக் கண்ணகலப் பார்த்தேன்.

''அவ்ளோ என்ன... இது துளிகூட புத்தி சுவாதீனமுள்ள பேச்சா எனக்குப்படலே'' என்றேன் வறட்சியாய்.

''ஆஹ்!'' என்றார் பொய்ரெட் பரிதாபமாய். ''வெல். பாதகமில்லே. அப்படியே ஆனாலும், எனக்குள்ளே, இது குறித்து, சின்ன ஊகமிருக்கு!''

அத்தியாயம் 19

ஃப்ளோரா ஆக்ராய்டு

அடுத்த நாள் காலை நான் என்னுடைய ஆஸ்பத்திரி ரவுண்ட்ஸ் முடித்து விட்டு திரும்பிக் கொண்டிருந்தபோது இன்ஸ்பெக்டர் ரக்லானால் எதிர்கொள்ளப்பட்டேன். ''குட் மார்னிங் டாக்டர் ஷெப்பர்ட்'' என்ற அவர், ''அவன் கொலை நிகழ்ந்ததா நாம சொல்லும் சமயத்துல ஃபெர்ன்லி பார்க்ல இவ்லேனு சொன்னது சரினு ஆகியிருக்கு'' என்றார்.

''யார்? கென்ட்டா?''

''கென்ட்டே. விஸில் பார் பொம்பளை நல்லா நினைவு வெச்சிருக்கா. காட்டின அஞ்சு ஃபோட்டாக்கள்லேந்து சரியா இவனுதைத் தெரிந்தெடுத்துத் தரா அவ. ஒன்பதரை மணிக்குத் தான் இவன் பார்க்குள்ளே நுழையறான் – இந்த விஸில் பார், ஃபெர்ன்லி பார்க்கிலிருந்து தாராளமா ஒரு மைல் தள்ளியிருக்கு என்பதை கவனிக்கணும். இவன் கையில கத்தைக்கத்தையா பணமிருந்ததைப் பார்த்ததா சொல்றா அந்த பார் பொண்ணு – பாக்கெட்டிலிருந்து எடுத்தானாம், அத்தனையையும். கால்ல நழுவற மாதிரி என்னவோ ஒரு ஷூவைப் போட்டுக்கிட்டு ப்ளாட்பாரம் மாதிரியிருக்கிற இவன்கிட்டே இத்தனை பணமானு வியந்திருக்கா அவ. இப்படித்தான் அந்த நாப்பது பவுண்டும் போயிருக்கு, ரைட்.

''ஃபெர்ன்லி பார்க்குக்கு ஏன் போனான்னு சொல்ல இன்னும் அந்த ஆள் மறுக்கிறானா?''

''முத்துச்சிப்பி தான். தொறக்கலையே. இன்னிக்குக் காலையில கூட ஹேஸ்க்கு போன் பண்ணி நிலைமையைக் கேட்டேன். ம்ம்.''

''அன்னிக்கு ராத்திரி அந்த ஆள் எதுக்காக ஆக்ராய்டோட வீட்டுக்குப் போனான் எனும் காரணம் தனக்குத் தெரியும்கிறாரு ஹெர்குல் பொய்ரெட்'' – நான் சொன்னேன்.

''அப்படியா சொன்னாரு?'' என ஆர்வம் பொங்கக் கதறினார் இன்ஸ்பெக்டர்.

''யெஸ். அவன் கென்ட்ல பொறந்ததாலத் தான் அவன் அங்கே போனான்னு காரணம் சொல்றார்.''

என்னால் விளங்கிக் கொள்ளயியலாத ஒன்றை அடுத்தவரிடம் செலுத்தி அவரை இன்னும் குழப்பி விட்டதில் நான் பூரண திருப்தியடைந்தேன்!

ஒரு மண்ணும் புரியாதவராய் ஓரிரு நிமிடங்கள் வரை என்னை முறைத்தபடியேயிருந்தார் ரக்லான். பிறகு ஓர் இறுக்கம் அவருடைய எரிச்சலான முகத்தில் படர, அர்த்தபுஷ்டியோடு அவருடைய முன்நெற்றியைத் தட்டிக் கொண்டார்.

''பைத்தியமாயிருக்கணுங்''' என்று விட்டார் முடிவாய். ''இப்படித் தான் இருக்கணும்னு எனக்கு கொஞ்சகாலமா நினைப்புண்டு. பாவம், கிழம்! ஸோ, அதனால எல்லாத்தையும் விட்டுட்டு இப்படி தனியா வந்து ஒண்டிக்கிட்டிருக்கார். குடும்பத்தால் ஏற்பட்டிருக்கணும் – வாய்ப்பிருக்கு. அவரோட சகோதரன் மகன் ஒருத்தன்... இவருக்குத் தலைவலியா இருந்தான். அவனாலேயே... பாவம், பாவம்.''

''அப்படியெல்லாம் கூட அவருக்கு உறவிருக்கா?'' – ஆச்சரியம் தாளாமல் கேட்டேன்.

''சொல்லலே அவரு? இதெல்லாம் வெளியே விட மாட்டாரே!''

''இதெல்லாம் உங்களுக்கு யார் சொன்னது?''

மறுபடியும் ஓர் இறுக்கம் அவருடைய முகத்தில் குடிகொண்டது. ''உங்க சகோதரி, மிஸ் ஷெப்பர்ட், அவங்கதான் இந்த எல்லா கதையையும் சொன்னது.''

ரியலி, கரோலின் ஓர் ஆச்சரியமானவளே. ஒவ்வொருவரின் குடும்ப ரகசியத்தின் கடைசி சொட்டு வரை தெரிந்து விடும் வரை அவள் ஓய்வதில்லை. துரதிர்ஷ்டவசமாக, அப்படி அறிந்துக் கொள்பவற்றை அவள் வரையில் மட்டுமே பொத்தி வைத்துக் கொண்டு விட வேண்டும் என்று அவளுக்குப் போதித்து விளங்க வைப்பதில், நான்

தோற்றே போயுள்ளேன்.

''உள்ளே ஏறுங்க இன்ஸ்பெக்டர்'' என்றேன் நான், காரின் கதவினைத் திறந்து விட்டபடி. ''*லார்ச்சஸ்* வரைக்கும் நாம ரெண்டு பேரும் போய் தற்போது கிடைத்த செய்திகளைப் பரிமாறிப்போம்.''

''அதுவும் சரிதான். குழம்பிப் போன ஆசாமியாயிருந்தாலும் அந்த கைரேகைகள் பற்றி நல்ல பயனுள்ள ஊகத்தைத் தான் அவர் எனக்குத் தந்தார்.''

அவருக்கே உரித்தான கனிவான புன்னகையோடு எங்களை வரவேற்றார் பொய்ரெட். ஒப்புதலாய் அவ்வப்போது தலையை அசைத்தபடி நாங்கள் கொண்டு போய் தந்த செய்தியைக் கவனித்தார் அவர்.

''எல்லாம் சரிங்கிற மாதிரிதான் படுது, இல்லே?'' என்றார் இன்ஸ்பெக்டர், ஏனோ சந்தேகம் கவ்வியவராய். ''யெஸ் – ஒரு மைல் தூரத்துல இருக்கிற பார்ல தண்ணியடிச்சுக்கிட்டே அதே நேரத்துல அதே மனுஷன் இங்கே கொலையும் பண்ணியிருக்க முடியாதுல்லே?''

''அவனை நீங்க விடுதலை பண்ணிடப் போறீங்களா?''

''வேற என்னப் பண்றதுனு எதுவும் தெரியலே. தப்பான நோக்கத்துல அவன் பணம் வாங்கியிருக்கான்னு சொல்லி அவனைப் பிடிச்சு வெச்சுக்கிட்டேயிருக்க நமக்கு பவர் கிடையாது. அதை நம்மால நிரூபிக்கவும் முடியாது – இதையும் ஞாபகம் வெச்சுக்கணும்.''

இன்ஸ்பெக்டர் ஒரு தீக்குச்சியைத் தூக்கி ஒழுங்கற்ற விதத்தில் கனப்பு நோக்கி சுண்டி விட்டார். அதை எடுத்த பொய்ரெட் அப்படிப் பட்டவற்றைப் போட என வடிவமைக்கப்பட்டிருந்த முறத்தில் அதனை கொண்டு போய் போட்டார். அவருடைய இந்தயியக்கம் முழுக்க முழுக்க இயந்திரத்தனமாய் நடந்தது. அவருடைய சிந்தனை முழுவதும் வேறேதோ முழுக்க வேறுபட்ட ஏதோவொன்றில் சஞ்சரித்துக் கொண்டிருப்பதை என்னால் பார்க்க முடிந்தது.

''நான் நீங்களா இருந்தா... என இறுதியாய் தொடங்கிய பொய்ரெட், ''இப்போதைக்கு அந்த கென்ட் மனுஷனை நான் விடுதலை பண்ண விட மாட்டேன்'' என்றார்.

''என்ன சொல்றீங்க?''

''என்ன சொன்னேனோ அதை! இப்போதைக்கு அவனை நான்

விடுதலை பண்ண மாட்டேன்.''

''அந்தக் கொலையோட இவனோட கைவரிசை ஏதாவது இருக்கும்னு நீங்க நினைக்கலே, அப்படித்தானே?''

''அப்படித்தான்னு சொல்லலாம் – ஆனா இந்த விஷயத்துல ஒருத்தர் இப்போதைக்கு எதையும் நிச்சயப்படுத்தி சொல்லிட முடியாது.''

''ஆனா இப்பத்தானே அவன் எங்கேயிருந்தான் எனும் விஷயத்தை நான் விவரமா —''

பொய்ரெட் எதிர்ப்பு தெரிவித்துக் கையை உயர்த்தினார். ''நண்பா, நண்பா. நான் கேட்டேன். நான் செவிடு கிடையாது, பைத்தியக்காரனும் கிடையாது – இதுக்கு கடவுளுக்கு நன்றி! ஆனா கவனியுங்க... நீங்க இந்த விஷயத்தை தப்பான ஒரு பிரதேசத்துல நின்னுக்கிட்டு பார்க்கிறீங்க.''

பொய்ரெட்டை மிகவும் காரமாய் முறைத்தார் இன்ஸ்பெக்டர். ''எதை வெச்சு இப்படி குறை சொல்றீங்க எனக்கு விளங்கலே. லுக் ஹியர்... மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு ஒன்பதே முக்காலுக்கு உயிரோடத் தானிருந்தார் என்பது நமக்குத் தெரியும். நீங்க இதை ஏத்துக்கறீங்க, இல்லையா?''

சில கணங்கள் கேட்டவரையே பார்த்துக் கொண்டிருந்த பொய்ரெட், பிறகு சிறு சிரிப்பூடே மறுப்பாய் தலையசைத்து விட்டார்!

''நிரூபிக்கப்படாத எதையும் நான் என்னுள்ளே அனுமதிப்பது கிடையாது.''

''வெல்... இதுக்கு நமக்கு வேண்டிய அளவுக்கு சாட்சியிருக்கு. மிஸ் ஃப்ளோரா ஆக்ராய்டின் சாட்சியமே கை மேல இருக்கு – மறந்துட்டீங்களோ?''

''அவ மாமனுக்குப் போய் குட் நைட் சொன்ன சாட்சி, ஆங்? ஆனா, நான், என்கிட்டே ஓர் இளைய கன்னி சொல்வதை என்னிக்குமே முக்கியப்படுத்தி அங்கீகரிப்பது கிடையாது – அது, கவர்ச்சிகரமான அழகியா இருந்தாலும் கூட!''

''வேணாம்யா. அழகி சாட்சி வேணாம். ஆனா பார்க்கர் பார்த் திருக்கானில்லே – அதே அழகி ஆக்ராய்டு அறையை விட்டு வெளியே வந்ததை! இந்த சாட்சியையும் தூக்கிக் குப்பைத் தொட்டியில போட்டுடலாமா?''

''நோ'' – பொய்ரெட்டின் குரல் திடீர் கூர்மை கொண்டு வெகுண்டெழுந்தது. ''இது தான்... ஜஸ்ட், இது தான் அவன் பார்க்காதது. இதை நான் அன்னிக்கு நடத்திப் பார்த்த சிறு பரிசோதனை மூலம் திருப்திகரமா விளங்கிக்கிட்டேன் – உங்களுக்கு நினைவிருக்கணுமே டாக்டர்? பார்க்கர் அவளைக் கதவுக்கு வெளியே பார்த்திருக்கான் – அவ கையைக் கதவுல வெச்சிருந்த நிலையில. மேடம் ரூமுக்குள்ளேயிருந்து வெளியே வரும் நிலையில அவன் பார்க்கலே.''

''அப்படினா அவங்க வேற எங்கேயிருந்து அங்கே போயிருப்பாங்க – அதாவது கதவுக்கு பக்கத்துல?''

''படிக்கட்டிலிருந்து.''

''படிக்கட்டு?''

''இது என்னோட சின்ன ஊகம் – யெஸ்.''

''ஆனா அந்தப் படிக்கட்டுகள் மிஸ்டர் ரோஜர் ரூமுக்குத்தானே நேரா போகுது?''

''சர்வ நிச்சயமா.''

இத்தனைக்குப் பிறகும் இன்ஸ்பெக்டர் அழகாய் முழித்துக் கொண்டுதானிருந்தார். ''என்ன நினைக்கிறீங்க நீங்க? ஃப்ளோரா, அவங்களோட அங்கிள் பெட் ரூம் வரைக்கும் போயிருந்தாங்கனா சொல்ல வரீங்க? வெல், இருந்தாத்தான் என்ன? அதுக்காக ஏன் அவங்க பொய் சொல்லணும்?''

''ஆஹ்! ஜஸ்ட் அதே தான் இப்போதைய கேள்வி. இதுக்கான பதில், அவங்க அங்கே என்னத்தைப் பண்ணிக்கிட்டிருந்தாங்க என்பதை பொறுத்திருக்கு, இல்லையா?''

''அந்த தொகை – அதை சொல்ல வரீங்களா? ஓஹ்... தொலைஞ்ச நாற்பது பவுண்டு பணத்தை அந்தப் பொண்ணுதான் எடுத்தானா சொல்ல வறீங்க?''

''நான் எதையும் சொல்ல வரலே'' என்றார் பொய்ரெட். ''ஆனா ஒரு விஷயத்தை உங்களுக்கு நான் மறுபடியும் நினைவுபடுத்தப் போறேன். அந்த அம்மாவுக்கும் பொண்ணுக்கும் வாழ்க்கை என்பது அத்தனை சுலபமான ஒரு பிரயாணமா அமையலே. பணம் செலுத்த வேண்டிய பில்கள் தொடர்ச்சியா வந்துக்கிட்டேயிருந்திருக்கு. பண விஷயங்கள்ல இந்த ரோஜர் மனுஷன் புரிஞ்சுக்க முடியாத படைப்பு. அந்தப்

பொண்ணு ஒப்பிட்டுப்பார்த்தா ரொம்ப சின்னதா படும் ஒரு தொகைக்காக தொங்கிக்கிட்டு இருந்திருக்கலாம். அப்போ என்ன நடந்திருக்கும்னு நீங்களே கொஞ்சம் படம்பிடிச்சுப் பாருங்க. அவங்க பணத்தை எடுத்துக்கிட்டு அந்த சிறிய படிக்கட்டுகள் வழியா எறங்க ஆரம்பிக்கிறாங்க. அப்போ ஹால்லேந்து கோப்பைகள் உராய்ந்தாடும் சப்தம் அவங்களை அடையுது. இந்த சப்தம் ஏன்னு அவங்களுக்குத் துளி சந்தேகங்கிடையாது – பார்க்கர் படிக்குமறைக்கு வந்துக்கிட்டிருக்கான். என்ன ஆனாலும், அவங்க படிக்கட்டுல இருப்பது போல பார்க்கப்படக் கூடாது – யாராலும்! நிச்சயமா பார்த்தான்னா பார்க்கர் அதை மறக்கவே மாட்டான் – வித்தியாசமா வேற நினைச்சுத் தொலைப்பான். காசு தொலைஞ்சு போன சேதி வெளியே வந்தா, படியிறங்கி இந்தப் பொண்ணு வந்துக்கிட்டிருந்தது சட்டுனு உடனடியா பார்க்கருக்கு நினைவுக்கு வந்துடும். பார்க்கர் கீழே கதவுக்கு அருகில் வரும்போது, மேலே படிக்குமறை கதவு வரை போய் சேர்ந்து விடுவதற்கு மிஸ் ஃப்ளோராவுக்கு அவகாசம் கிடைக்குது – அங்கே போய் கதவு பிடியில கையை வெச்சுக்கிட்டு நின்னுக்கலாம்! அவங்க மண்டையில எது முதல்ல வந்ததோ அதை சொல்லிடறாங்க – அன்னிக்கு சாயங்காலம் மிஸ்டர் ரோஜர் இட்டிருந்த கட்டளை. இதுக்கப்புறம் அவங்களோட ரூமை நோக்கி மேலே போயிடறாங்க.

''சரி. ஆனா பிறகு'' என விடாமல் பிடித்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர், ''உண்மையைப் பேசி விட வேண்டியதன் அதி முக்கியத்துவத்தை அவங்க உணர்ந்திருக்கணும், இல்லையா? ஏன் அப்படி நடக்கலே?'' என்றார்.

''பிறகு'' என்ற பொய்ரெட், ''ஃப்ளோராவின் நிலைமை கொஞ்சம் தர்மசங்கடம் நிறைஞ்சதா ஆகிடுது. போலீஸ் வந்திருக்கு... என்னவோ திருட்டு நடந்திருக்கு... இந்த அளவு மட்டும் தான் அவங்ககிட்டே முதல்ல சொல்லப்படுது. நேச்சுரலி, திருட்டுப் போன பணம் பற்றி கண்டுபிடிச்சாச்சு எனும் ஒரு முடிவுக்குக் குற்றமுள்ள அவங்க தானாவே ஒரு முடிவுக்கு வந்துக்கறாங்க. அவங்களோட ஓர் எண்ணம் – சொன்ன கதையை விடாம பிடிச்சுக்கணும் என்பது. அப்புறம் அவங்களோட அங்கிளே கொல்லப்பட்டுள்ளார் என்பது தெரிஞ்சதும் விதிர்விதிர்த்துப் போயிடறாங்க. இப்ப ஒரே வழிதான் அவங்களுக்கு: ஒண்ணு சொன்ன

கதையைப் பிடிச்சுக்கிட்டு அப்படியே தொங்கு; அப்படியில்லேனா அத்தனை உண்மையையும் சொல்லிடு. ஓர் அழகிய வசீகர இளைய கன்னி – தன்னை மற்றவர்கள் திருடினு பார்ப்பதை ஏத்துக்க மாட்டா, ஃபிரண்ட்ஸ்.''

ரக்லான் தனது கை முஷ்டியை ஆக்ரோஷமாய் ஒரு பேரிடியாக மேஜையின் மீது இறக்கினார். ''இதை நான் நம்ப மாட்டேன்'' என்றார். ''இது – இது – இதுல, எந்தவித நம்பகத்தன்மையும் கிடையாது. ஆமாம்... இது உங்களுக்கு முதல்லேந்தே தெரியுமா?''

''இப்படியும் ஒரு சாத்தியக்கூறு இருக்கு என்பது என் மனசுல ஆரம்பத்திலேந்தே இருக்கு'' – ஏற்றுக்கொண்டார் பொய்ரெட். ''மேடம் ஃப்ளோரா நம்மகிட்டேந்து எதையோ மறைச்சு மறைச்சே வெக்கிறார் என்பதுல எனக்கு ரெண்டாவது கருத்து கிடையாது. என்னை நானே திருப்திபடுத்திக்க நான் சொன்ன அந்த சின்ன பரிசோதனையை பண்ணிப் பார்த்தேன். டாக்டர் ஷெப்பர்டும் அதுல என்கூட இருந்தார்.''

''அது பார்க்கருக்கான டெஸ்ட்டுனு தான் எங்கிட்டே சொன்னீங்க, ஆங்...'' – கசப்பாய் சுட்டிக்காட்டினேன் நான்.

''நண்பா...'' என மன்னிப்புக்கோரும் விதமாய் அழைத்த பொய்ரெட், ''அப்போ நான் உங்ககிட்டேயே குறிப்பிட்டுக் காட்டினபடி, ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லத்தானே வேண்டியிருக்கு'' என்றார்.

இன்ஸ்பெக்டர் எழுந்துக் கொண்டார். ''இதுல ஒரேயொரு வழி தானிருக்கு'' என்றார். ''நேரடியா அந்தப் பொண்ணைப் போய் மூச்சடைக்க வைக்குமாறு நாம சந்திச்சு விடுவது தான். என்னோட இப்ப ஃபெர்ன்லி வரை உங்களால வர முடியுமா, மிஸ்டர் பொய்ரெட்?''

''ஓ, நிச்சயமா. டாக்டர் ஷெப்பர்ட் நம்மைக் கார்ல அழைச்சுக் கிட்டுப் போவார்.''

நான் மனமொப்பி ஒத்துழைத்தேன்.

மிஸ் ஆக்ராய்டு பற்றி விசாரித்தபோது நாங்கள் நேராய் பில்லியர்ட்ஸ் அறைக்கு அனுப்பப்பட்டோம். ஃப்ளோராவும் மேஜர் ஹெக்டரும் அங்கிருந்த நீளமான ஜன்னல் திட்டில் உட்கார்ந்திருந்தனர்.

''குட் மார்னிங், மிஸ் ஃப்ளோரா'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''உங்ககூட தனியா நாங்க ஓரிரு வார்த்தைகள் பேச அனுமதி கிடைக்குமா?''

உடனடியாய் எழுந்துக் கொண்டு விட்ட ப்ளண்ட் கதவு வரை விறுவிறுவென போய் விட்டார்.

''என்ன இதெல்லாம்'' என உடனே படபடப்பாய் கேட்டார் ஃப்ளோரா. ''நீங்க போக வேண்டாம் ப்ளண்ட். அவர் இங்கே இருக்கலாம், இல்லையா?'' – இன்ஸ்பெக்டர் பக்கமாய் திரும்பிய ஃப்ளோரா கேட்டாள்.

''அது உங்களோட விருப்பம்'' என்றார் இன்ஸ்பெக்டர் வறட்சியாய். ''ஓரிரு கேள்விகளை உங்ககிட்டே கேட்க வேண்டிய கடமையில நானிருக்கேன், மிஸ். அதை நான் தனிப்பட்ட முறையில உங்ககூட நடத்த விரும்பறேன்... சொல்லப்போனா அப்படி நடத்தப்படுவது தான் மேலானதுனு நீங்ககூட விரும்புவீங்க.

ஃப்ளோரா கவனமாய் அவரையே பார்த்தாள். அவளுடைய முகம் மளமளவென வெளிறிக் கொண்டிருப்பதை நான் கவனித்தேன். பிறகு அவள் ப்ளண்ட் பக்கம் திரும்பி பேசினாள்: ''நீங்க இங்கே தான் இருக்கணும்னு நான் விரும்பறேன் – யெஸ் – ப்ளீஸ். என்னத்தைத் தான் இந்த இன்ஸ்பெக்டர் சொல்லணும்னு பிரியப்படறாரோ அதை நீங்களும் கேட்கலாம் என்பது என் நிலை.''

''வெல்...'' என்றபடி தன்னுடைய தோள்களைக் குலுக்கி வழிவிட்ட இன்ஸ்பெக்டர், ''அப்படி நீங்க ஒரு முடிவெடுத்தீங்கன்னா, அது உங்க இஷ்டம்'' என்று விட்டு ஆரம்பித்தார்: ''இங்கிருக்கும் மிஸ்டர் பொய்ரெட் என்கிட்டே சில விஷயங்கள்ல வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கார். அது இது தான்: கடந்த வெள்ளிக்கிழமையன்று நீங்க மிஸ்டர் ஆக்ராய்டுடைய படிக்குமறைக்குப் போகவேயில்லே. இதனால, நீங்க மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டைப் பார்க்கவேயில்லை என்பதும், குட் நைட் அது இதெல்லாம் சொல்லவேயில்லை என்பதும் தானா விளங்கிடுது. ஆனா, அவரோட ஹால் கதவைத்தாண்டி பார்க்கர் உங்க அங்கிள் பகுதிக்கு நுழையும் அந்தக் கணத்துல, படுக்கையறை யிலிருந்து கீழ்நோக்கி நீளும் சின்னப் படிக்கட்டுகள்ல எதுலேயோ தான் நீங்க இருந்திருக்கணும் என்பது அவரோட ஊகம்.''

ஃப்ளோராவின் அகன்ற கண்கள் இப்போது பொய்ரெட் பக்கம்

இடம்மாறின. அவர் இவையத்தனையையும் தான் ஏற்றுக் கொள்வது போல ஆமோதிப்பாய் தலையசைத்தார். ''மேடம்... அன்னிக்கு நாம அத்தனை பேரும் டேபிளைச் சுற்றி உட்கார்ந்தபோது என்கிட்டே நீங்க வெளிப்படையா இருந்து விடுவது தான் நல்லதுனு நான் உங்களைக் கட்டாயப்படுத்தினேன். தாத்தா பொய்ரெட் கிட்டே ஒருத்தன் சொல்லாம விட்டுவிடும் எதனையும் அவர் கண்டுபிடிக்காம விட மாட்டார்னும் கோடிக்காட்டினேன். நடந்ததா, இல்லையா? சரி விடுங்க... இப்பவும் கூட விஷயத்தை நான் உங்களுக்கு மிக சுலபமா ஆக்கித் தரேன். நீங்க அந்தப் பணத்தை எடுத்தீங்க - உண்டா, இல்லையா?''

''பணமா?'' - ப்ளண்ட் கறாராய் அதிர்ந்தார்.

குறைந்தபட்சம் ஒரு நிமிடம் வரை நீடித்த அமைதி அங்கு நிலவியது.

பிறகு தன்னைத்தானே கட்டியிழுத்து நிலையான ஃப்ளோரா பேசினாள்: ''மிஸ்டர் பொய்ரெட் தான் சரி. அந்தப் பணத்தை நான் எடுத்தேன். நான் திருடினேன். *நான் ஒரு திருடி...* யெஸ், சாதாரண, அருவெறுப்பான, கீழ்த்தர திருடி. இப்ப அது உங்களுக்குத் தெரியும்! இப்படி அது உங்களுக்குத் தெரிஞ்சுடுச்சு என்பதுல நான் அத்தனை மகிழறேன் - யெஸ். கடந்த சில தினங்கள் ஒவ்வொண்ணும் எனக்கு ஒரு தீக்கனா'' இப்போது சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்துக் கொண்டவள் அவளுடைய முகத்தை அவளது இரு உள்ளங்கை களுக்குள் புதைத்துக் கொண்டு விட்டாள். அடைக்கப்பட்ட விதமாய் அவள் விரலிடுக்குகளின் வழியே பேசினாள்: ''நான் இங்கே வந்து விழுந்த தினத்திலிருந்து என் வாழ்க்கை எப்படி ஓடிக்கிட்டிருக்கு என்பது இங்கிருக்கும் உங்கள்ல ஒருத்தருக்கும் தெரியாது. தேவை நிறைய - அதுக்காக ஏங்க வேண்டியது - அதை அடைய பொய் - ஏமாற்றுவது - எப்படியோ வாங்கி விடுவது - அப்புறமா பில் பில்'லா வந்து மிரட்டுவது - எப்படியாவது பணத்தைத் தந்துடறேன்னு அவனுங்க கிட்டே சொல்லிட்டு அவனுங்க தலை மறைஞ்சதும் கையைப் பிசைஞ்சுக்கிட்டு முழிப்பது - ஓஹ்! அதையெல்லாம் நினைக்கும்போது அப்படி ஒரு பிச்சைக்காரியா இருந்த என்னை நானே வெறுக்கிறேன்! இது தான் எங்க ரெண்டு பேரையும் ஒண்ணு சேர்த்து இறுக்கிப் போட்டது - நான், ரால்ஃப். நாங்க ரெண்டு பேருமே

பலஹீனமானவங்க – பணத்துல! நான் அவரைப் புரிஞ்சுக்கிட்டேன், வருத்தப்பட்டேன் ஏன்னா நானும் அதே குடையின் கீழ் தான் அனுபவிச்சுக்கிட்டிருந்தேன். சொந்தக்கால்ல நிக்குமளவுக்கு தைரியமோ பலமோ கிடையாது – எங்க ரெண்டு பேருக்குமே. நாங்க சத்தற்றிருந்தோம், தாள முடியாத ஏழைமை, வெறுப்பு.''

இப்போது ப்ளண்ட்டை நிமிர்ந்துப் பார்த்த அவள் பிறகு அவளுடைய காலை பலமாக தரையில் போட்டு எத்தினாள்.

''என்னை ஏன் அப்படி ஒரு ஜந்துவைப் பார்ப்பது மாதிரி பார்க்கிறீங்க? ஏதோ உங்களால நம்பவே முடியாத மாதிரி?! நான் ஒரு திருடியா இருந்திருக்கலாம் – ஆனா நான் இப்ப முழுக்க முழுக்க என் சுயமா ஆகியிருப்பவ. நான் மேற்கொண்டு இப்ப எந்தப் பொய்யும் பேசலே. நீங்க மனசுல கற்பனை பண்ணி எதிர்பார்த்துக்கிட்டிருக்கிற ஒரு பொண்ணா இனிமேலும் என்னை நான் 'காட்டிக்க' விரும்பலே – இளைய, வெகுளியான, பாவம் போன்ற, ஸிம்பிளான, ஒண்ணும் தெரியாத பாப்பா போல நான் 'காட்டிக்க' விரும்பலே – யெஸ். ஒருவேளை, இதனால இனிமே நீங்க என்னை சந்திக்கவே விரும்ப லேனு ஒரு முடிவை கையில எடுத்துக்கிட்டா கூட எனக்கொண்ணும் கவலை கிடையாது. இப்படியெல்லாம் மறைச்சு வெச்சிருக்கேனே என்று என்னை நானே நொந்துக்காத நொடி கிடையாது, ஆனா, இதை நான் வெளியே சொல்வதாலே ரால்ஃபோட நிலைமையில மேம்பாடு கிடைக்கும்னு ஆகியிருந்தா, நிச்சயமா அந்தக்கணமே நான் போட்டுடைச்சிருப்பேன் இதையும் நீங்க நல்லா புரிஞ்சுக்கணும். ஆனா அப்படி அவனுக்கு சாதகமா இது மாறும்னு எனக்குப் புலப்படவேயில்லே – சொல்லப்போனா அவனுக்கெதிரா இது இன்னும் இறுக்கமான சூழலைத்தான் உருவாக்கும்னே நினைச்சேன். என் பொய்யைக் கெட்டியா பிடிச்சு வெச்சுக்கிட்டு அவனுக்கு நான் துரோகம் பண்ணலே... பண்ணலே.''

''ரால்ஃப்'' என்றார் ப்ளண்ட். ''ஐ ஸீ. ரால்ஃப்'' என்றார் மறுபடியும். ''ஓஹோ – எப்பவுமே அது ரால்ஃப் தானா?''

''உங்களுக்கு விளங்கலே'' என்றாள் ஃப்ளோரா நம்பிக்கையிழந்து. ''எப்பவுமே உங்களால விளங்கிக்க முடியாது.''

சொன்ன அவள் மேஜரை விட்டுவிட்டு, இன்ஸ்பெக்டர் பக்கமாய்

திரும்பிக் கொண்டு விட்டாள். ''நான் எல்லாத்தையும் ஒத்துக்கறேன்; பணத்துக்கான இக்கட்டின் உச்சியில் நான் இருந்தேன் என்பது சம்பந்தப்பட்ட எல்லாத்தையும் நான் ஒதுக்காம ஒத்துக்கறேன். டின்னர் டேபிள்லேந்து அவர் கிளம்பிப் போயிட்ட பிறகு அன்னிக்கு சாயந்திரம் நான் என் அங்கிளைப் பார்க்கவேயில்லை. அந்தப் பணத்தைப் பொறுத்தமட்டில் நீங்க என்ன கடமையை நிறைவேற்ற வேண்டுமோ அதை தயவுகூர்ந்து நிறைவேற்றிக்கலாம்'' என்றவள், அனைவருக்கும் பொதுவாய், ''அது, இப்போதைய என் நிலைமையை விட நிச்சயமா மோசமா இருந்து விடப் போவதில்லே'' என்று ஜாடையாய் பேசினாள்.

திடுமென மறுபடியும் நொறுங்கிப் போன அவள், தலையை தனது தோளுக்குள் புதைத்தபடி அவளுடைய அறை நோக்கி ஓடி விட்டாள்.

''வெல்...'' என சுரத்தற்று உணர்ச்சியுமற்று தட்டையாய் சொன்ன இன்ஸ்பெக்டர், ''இவ்ளோ தானா எல்லாமும்?'' என்றார்! அடுத்து என்ன செய்வதென்றே விளங்காமல் தொலைந்துப் போனவராய் தோன்றினார் அவர்.

''இன்ஸ்பெக்டர் ரக்லான்'' என சாந்தமாய் சொன்னபடி ப்ளண்ட் முன்னால் வந்தார். ''அந்தப் பணம் மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டால் ஒரு ஸ்பெஷலான காரணத்துக்காக எனக்குத் தரப்பட்டதாகும். இவ தான் அதை எடுத்தான்னு ஃப்ளோரா சொல்றான்னா, அது, கேப்டன் ரால்ஃபைப் பொத்திக் காக்கும் ஒரு காரணத்துக்காகத் தானே தவிர வேறு கிடையாது. உண்மை, இப்ப நான் சொன்னது போலத்தான்... இதை நான் எந்த சாட்சிக் கூண்டிலும் ஏறி சொல்லத் தயார்.''

முதுகு வளைத்து வந்தனம் தெரிவித்த அவர் அப்படியே அறையை விட்டு வெளியேறத் துவங்கினார்.

ப்ளண்ட்டின் இந்த இயக்கத்துக்குப் பின்னால் மின்னல் போல பொய்ரெட் இயங்கினார். அவரை ஹாலிலேயே பிடித்தார் துப்பறியும் நிபுணர். ''ஸார், ஒரு நிமிஷம், கெஞ்சிக் கேட்டுக்கறேன்.''

''வெல், என்ன?''

''கதை, இது தான்'' என்றார் துரிதமாய்: ''நீங்க சொன்ன இந்த சின்ன கற்பனையெல்லாம் என்னை ஏமாத்திடாது. இதை நீங்க புரிஞ்சுக்கணும். அந்த பணத்தைக் கையாடியிருப்பது மிஸ் ஃப்ளோரா தான் – சத்யமாய். ஆனாலும் கூட இப்படியொரு கற்பனையை சரியா

செஞ்சுதுக்காக நான் உங்களைப் பாராட்டறேன் – ஏன்னா, இதையே தான் நான் ஏற்கெனவே கற்பனை பண்ணி வெச்சிருந்தேன், அதனால. சமய சந்தர்ப்பத்துக்கு ஏத்தா மாதிரி சட்சட்னு யோசிச்சு இயங்கறதுல நீங்க அசகாயர், ஆங்.''

''இப்படியெல்லாம் ஒரு பாராட்டு உங்ககிட்டேயிருந்து வரணும்னு நான் நாக்கைத் தொங்க விட்டுக்கிட்டு காத்திருக்கலே'' என்றார் மேஜர் கத்தியாய்.

இன்னுமொரு முறை வெளியே போவதற்கு அவர் முன்னேற முயல, மேற்குறிப்பிட்ட ப்ளண்ட்டின் குறிப்பால் துளியும் வருத்தப்படாதிருந்த பொய்ரெட், அவரது கையைக் குறுக்காய் நீட்டி, முன்னேறிக் கொண்டிருந்தவரின் பாதையை மறித்து விட்டார்.

''ஆஹ்! ஆனா, நீங்க இப்ப நான் பேசப் போவதை கவனிச்சே ஆகணும். எனக்கு நிறைய சொல்ல வேண்டியிருக்கு. அன்னிக்கு, எல்லோரும் எதையோ என்கிட்டே சொல்லாம மறைச்சு வெக்கிறீங்க என்பது போல நான் பேசியிருந்தேன். கவனியுங்க... மேடம் ஃப்ளோரா, அவங்க மனசு முழுக்கவும் உங்களை ரொப்பி வெச்சு அணுஅணுவா காதலிச்சுக்கிட்டிருக்காங்க. உங்களை அவங்க சந்திச்ச அந்த முதல் கணம் முதல். உண்டா இல்லையா? ஓஹ்! இதைப்பற்றி வெளிப்படையா சொல்வதுல நாம தயங்க வேண்டாமே. ஏன்னு தெரியலே, உங்க இங்கிலாந்துல இந்த வியாதி நிறையவேயிருக்கு – காதலை ஒத்துக்காத, காதலை வெளிப்படையாக்காத, காதலை அந்தரங்கமா மட்டுமே உணரும் வியாதி! நீங்க மேடம் ஃப்ளோராவை விரும்பறீங்க. அதை நீங்க உலகின் ஏனைய அனைத்துக்கும் தெரியாம பொத்திப் பொத்தி மறைச்சு வெக்கவே நினைக்கிறீங்க. அதுவும் நல்லதே – அப்படியே போகட்டும். ஆனா பொய்ரெட்டுடைய ஒரேயோர் அறிவுரையை மட்டும் தட்டாம எடுத்துக்குங்க. இதை இந்தக் காதலை - நீங்க மேடம்கிட்டேயிருந்தே மறைச்சு வெக்கணும்னு நினைப்பதை மட்டும் செய்யாதீங்க.''

பொய்ரெட் பேசிக்கொண்டிருந்த காலம் நெடுகிலும் விதம் விதமான இருப்புக் கொள்ளாமைகளை ப்ளண்ட் வெளியிட்ட படியிருந்தாலும் அவருடைய கடைசி வார்த்தைகள் அப்படியே ப்ளண்ட்டை இறுக்கிப் பிடித்து நிறுத்தியது.

''நீங்க என்ன உணர்த்த வரீங்க?'' – கூர்மையாய் கேட்டார் அவர்.

''நீங்க, அவ, கேப்டன் ரால்ஃப் பேடனை விரும்புவதா நினைச்சுக் கிட்டிருக்கீங்க – ஆனா, நான், ஹெர்குல் பொய்ரெட் சொல்றேன், அது அப்படி கிடையாது. மேடம் ஃப்ளோரா, இளைய பேடனை ஏத்துக்கிட்டாங்க – அவங்களோட அங்கிளைத் திருப்தி படுத்த. எவ்வித பிடிப்புமற்று போய்க்கொண்டிருந்த அவங்களுடைய வாழ்க்கையில திருமணம் ஒண்ணு தான் வசதி வாய்ப்புகளை மீட்டுத்தரும்னு அவங்க ஸ்திரமா நம்பினதாலே இந்த நிலைமை. ஒரு தப்பிப்பு, அவ்வளவே. மேடம் அவனை விரும்பினாங்க... ரெண்டு பேருக்குள்ளும் நல்ல ஒற்றுமையும் விட்டுக்கொடுத்தலும் கருணையும் தயையும் இருந்தன. ஆனா காதல் – நோ! கேப்டன் ரால்ஃப் பேடன் அல்ல மேடம் ஃப்ளோரா காதலிப்பது.''

''என்னத்தைய்யா நீ பேசிக்கிட்டே போறே?'' – கேட்டார் ப்ளண்ட்.

''நீங்க ஒரு குருடன், ஸார். குருடனே! அவ விசுவாசம் மிகுந்தவ – அந்த சின்னக்கழுதை! ரால்ஃப் பேடனை மேகமூட்டம் சூழ்ந்திருக்கு – இந்த நிலைமையில அவனைச் சார்ந்தேயிருப்பது தான் அவனைக் கவுரவப்படுத்துவதாகும்னு, பாவம், மாபெரும் அறவழியில் நின்னுக்கிட்டிருக்கா அவ.''

பொய்ரெட் பண்ணிக் கொண்டிருந்ககும் சிறப்பான பணிக்கு எனது ஒருசில வார்த்தைகள் வலு சேர்க்கும் என துரிதமாய் விளங்கிக் கொண்ட நான் உற்சாகப்படுத்தும்படி அவற்றை பேசினேன்: ''அன்னிக்கு என் ஸிஸ்டர் கூட சொன்னா. ரால்ஃப் பேடனுக்காக ஃப்ளோரா மனசுல இம்மி இடம் கிடையாதுன்னா அவ. எதிர்காலத்திலும் இருக்காதுன்னா. இந்த மாதிரி விஷயங்கள்ல என் சகோதரி எப்பவுமே சரி.''

நான் நல்லதை நினைத்து சொன்ன இவையத்தனையையும் அப்படியே விலக்கி விட்டார் ப்ளண்ட். அவர் பொய்ரெட்டிடம் பேசினார்: ''அப்படியா? உண்மையாவே நீங்க ஃப்ளோரா பற்றி இப்படித்தான் நினைக்கிறீங்களா——?''

அப்படியே நிறுத்திக் கொண்டு விட்டார். நினைப்பவற்றை சடுதியில் வார்த்தைகளில் கோர்க்கத் தெரியாத வகை, இந்த ப்ளண்ட்.

''என்னை நம்பலேனா, அவளையே போய் நேரா கேட்டுப்பாருங்க,

ஸார். அந்தப் பணம் – திருடு – அது பற்றியெல்லாம் இப்ப உங்க மனசுல எவ்வித களங்கமும் இல்லேனு நினைக்கிறேன் —''

''இப்ப அதைப்போய் அவளுக்கு எதிரா தூக்கிப்பிடிச்சுக்கிட்டு நிப்பேன்னு நினைக்கிறீங்களா? பண விஷயத்துல ரோஜர் ஆக்ராய்டு எப்பவுமே விளங்கிக் கொள்ள முடியாத மனுஷன். அவ பணமுடையில இருந்திருக்கா... அவரோட குணம் தெரிஞ்சதால அவரண்டை சொல்லாம விட்டிருக்கா. புவர் கேர்ள்.''

பொய்ரெட் சிந்தனையோடு பக்கவாட்டுக் கதவினை இப்போது பார்த்தார். ''இந்த வழியாத்தான் மேடம் ஃப்ளோரா தோட்டத்துக்குள்ளே இறங்கினதா எனக்கு ஞாபகம்'' என்று விட்டு நமுட்டு சிரிப்பு சிரித்தார்.

''நான் ஒரு மாங்கா முட்டாளா இருந்திருக்கேன்'' என்று பட்டென ஒப்புக்கொண்டு விட்டார் மேஜர் ப்ளண்ட்! ''எல்லாம் திரைக்கதை அமைக்கப்பட்ட நாடகம் போல இப்ப நடந்திருக்கு. தேங்க் யூ, தேங்க் யூ ஸோ மச், மிஸ்டர் பொய்ரெட்.''

பொய்ரெட்டுடைய கையைப் பிடித்து அழுத்தமான குலுக்கலை அளித்தார் அவர். பிறகு அவர் பக்கவாட்டுக் கதவு பக்கமாய் சுழன்றடித்து நகர்ந்து தோட்டத்துக்குள் விழுந்தார்.

''மாங்கா முட்டாளெல்லாம் கிடையாது'' என்று பொதுவாய் சொன்னார் பொய்ரெட், வெளியேறியவரின் திசையினைப் பார்த்தபடி. ''ஒரே ஒரு வகை முட்டாள் தான் அவர் – காதல் முட்டாள்.''

அத்தியாயம் 20

மிஸ் ரஸ்ஸெல்

இன்ஸ்பெக்டர் ரக்லான் உலுக்கப்பட்டே விட்டார். ''இது எல்லாத்தையும் இல்லே மாத்தி தொலைக்குது. எல்லாத்தையும்'' என புலம்பினார். ''உங்களுக்கு இது தட்டுப்படுதா இல்லையா, மிஸ்டர் பொய்ரெட்?''

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன்–யெஸ், நானும் அப்படியே தான் நினைக்கிறேன்'' என்றார் பொய்ரெட். ''ஆனா, யூ ஸீ, நான் இப்படிப்பட்ட ஓர் ஐடியாவோடத் தானிருந்தேன்.''

சற்று நேரத்துக்கு முன்னால் எங்கள் முன்னால் உடைந்த உண்மையை மட்டுமே ஒரே ஐடியாவாக தற்போது கொண்டிருந்த இன்ஸ்பெக்டர், சந்தோஷமற்று பொய்ரெட்டைப் பார்த்தார். பார்த்து விட்டு, அவருடைய கண்டுபிடிப்புகளின் மீதான மேலான பேச்சினைத் தொடங்கினார்:

''அந்த அலிபீஸ்? கொலை நேரத்துல ஒவ்வொருத்தரும் வெவ்வேறு இடத்துல இருந்ததா சொல்லப்பட்ட தகவல்கள்? அவையத்தனையும் இனி பைசா பெறாது! மறுபடியும் அத்தனையையும் புனருத்தாரணம் பண்ணியாகணும். ஒவ்வொரு கழுதைப்பயலுகளும் ஒன்பதரையி லிருந்து என்னத்தையெல்லாம் பண்ணிக்கிட்டிருந்தானுங்க... எங்கே பண்ணிக்கிட்டிருந்தானுங்க... இதெல்லாத்தையும் மறுபடியும் தோண்டியாகணும். ஒன்பதரை – நாம பிடிச்சுக்கிட்டு தொங்க வேண்டிய நேரம் இது தான். அந்த ஆசாமி கென்ட் பற்றிய உங்களுடைய வழிகாட்டுதல்கள் சரிதான் பொய்ரெட் அவனை நாங்க இன்னும் விடுவிக்கலே. இப்ப ஒரு கணக்கை கவனியுங்க. ஒன்பதே முக்காலுக்கு

அவன் விஸில் பார்ல இருக்கான் – ஓ கே? ஓடியிருந்தான்னு வெச்சுக் கிட்டா கால் மணி நேரத்துல அவனால 'பாரை' அடைஞ்சிருக்க முடியும். ஆக அவனோட குரலைத்தான் மிஸ்டர் ஆக்ராய்டுடன் உரையாடிக்கிட்டிருந்த குரலா அந்த ரேமண்ட் செகரட்டரி பய கேட்டிருக்கணும் – பணங்கேட்டு, அதை ரோஜர் மறுத்து! ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம் – அந்த டெலிபோன் சேதியை அனுப்பின ஆசாமி, அது, இவன் கிடையாது. ஸ்டேஷனிருக்கு பாருங்க... அது இன்னொரு திசையில அரை மைல் தொலைவிலேயிருக்கு... சொல்லப்போனா, பாரிலிருந்து ஒன்றரை மைல் வரும். இந்த கென்ட் பயலோ ஒன்பது ஐம்பது வரைக்கும் பார்லியே தானிருந்திருக்கான். ஓ, அந்த டெலிபோன் மெஸெஜ் வேறப்பா – சுத்திச்சுத்தி நாம அதுலேயே தான் வந்து நிக்கிறோம்!''

''அப்படித்தான் நாம பண்ணிக்கிட்டிருக்கோம்'' என்றார் பொய்ரெட். ''இது விசித்திரமாயிருக்கு.

''தன்னோட வளர்ப்பு அப்பா அறையில குதிச்ச கேப்டன் ரால்ஃப் பேடன், உள்ளே ரோஜர் ஆக்ராய்டு கொல்லப்பட்டார் என்பதை பார்த்துட்டு, அந்த டெலிபோன் தகவலை அனுப்பியிருக்கும் சாத்தியக்கூறுகள் அதிகமா தென்படுது. அலறியிருப்பான் அவன்... தன்மேல குற்றம் விழுமோனு பயந்திருப்பான்... ஓடிட்டான். இது சாத்தியம் தான் இல்லையா?''

''எதுக்காக அவன் டெலிபோன் பண்ணணும்?''

''அந்தக்கிழமனிதன் உண்மையிலேயே இறந்துட்டானா என்பதுல அவருக்கு சந்தேகமிருந்திருக்கும். உடனடியா அங்கே டாக்டரை அனுப்புவது தான் புத்திசாலித்தனம்னு முடிவெடுத்திருக்கலாம் – இதுல அவரோட இருப்பைத் துளியும் காட்டிக்காம. யெஸ், சொல்லுங்க, ஒரு பேச்சுக்கு, இந்த ஐடியா எப்படியிருக்கு?''

இந்த ஐடியாவால் அவர் தனக்குத்தானே சிலிர்த்துக் கொண்டிருந்த படியால், இதற்கு எதிராக எது சொல்லியிருந்தாலும் அவரால் ஊதி வெளியேற்றத்தான் பட்டிருக்கும்.

இந்தச் சமயத்தில் நாங்கள் என்னுடைய வீட்டினை அடைந்திருந் தோம். நான், பொய்ரெட்டை இன்ஸ்பெக்டருடன் சேர்ந்து ஸ்டேஷன் போகுமாறு செய்து விட்டு, நீண்ட நெடுநேரமாய் காத்துக் கொண்டிருந்த

என் பேஷண்டுகளைப் பார்க்க விரைந்து விட்டேன்.

கடைசி பேஷண்ட்டையும் பார்த்து கை கழுவிய பிறகு வீட்டின் பின்னால் இருக்கும் (என்னுடைய கண்டுபிடிப்புகளுக்கான வொர்க்-ஷாப் என நான் வர்ணிக்கும்) சின்ன அறைக்குப் போனேன். நானே உருவாக்கியிருந்த தந்தியில்லா தகவல் பரிமாற்ற பரிசோதனை அமைப்பு அங்கிருந்தது. அதை பார்த்து நான் பெருமிதமடைந்தேன். கரோலினுக்கு என்னுடைய பரிசோதனைக் கூடமே பிடிப்பதில்லை. உபயோகமற்றுப் போயிருந்த ஓர் அலாரம் கடியாரத்தை நான் சரி பண்ண முயன்றுக் கொண்டிருந்தபோது இவ்வறையின் கதவு திறக்கப்பட்டது... கரோலின் தலையை மட்டும் நீட்டினாள்.

''ஓ! இங்கே வந்து உட்கார்ந்துக்கிட்டிருக்கியா, ஜேம்ஸ்?'' என்றாள் அவள் – அதனை ஏற்றுக்கொள்ளயியலாதவளாய். ''மிஸ்டர் பொய்ரெட் உன்னைப் பார்க்கணும்கிறார்.''

அவளுடைய திடீர் பிரவேசம் என்னுள் ஏற்படுத்திய திடுக்கிடல், நான் இணைத்துக் கொண்டிருந்த நுணுக்கமான பகுதிகளை அசைத்து விட்டதால் எரிச்சலான நான், அலாரத்திலிருந்து கண்களை மாற்றாமல், ''என்னைப் பார்த்துதான் ஆகணும்னா அவரை இங்கே வரச்சொல்லு'' என்றேன் கடுமையாய்.

''இங்கேயா?'' என்றாள் அவள்.

''அதைத்தான் நான் சொன்னேன் – இங்கே.

என் பரிசோதனையெல்லாம் என்ன கூத்தோ என்பதைப் போன்ற முனகலை வெளியிட்டபடி விலகினாள் அவள். சில நிமிடங்களில் திரும்பி வந்த அவள் பொய்ரெட்டை உள்ளே அனுப்பி விட்டு கதவை ஒரு பேரிடியாய் அடித்து சாற்றி விட்டு விலகிப்போனாள்.

''ஆஹா! மை ஃபிரண்ட்!'' என்று உள்ளங்கைகளிரண்டையும் ஒன்று சேர்த்து தேய்த்துக்கொண்டே முன்னுக்கு வந்த பொய்ரெட், ''என்னை விட்டுட்டு அவ்ளோ சுலபமா உங்களால் தனியாகிட முடியலே, பார்த்தீங்களா!'' என்றார்.

''இன்ஸ்பெக்டர் கூட முடிஞ்சாச்சா?'' என்றேன் நான்.

''இப்போதைக்கு – யெஸ். ஆங், நீங்க எல்லா பேஷண்ட்டுகளையும் பார்த்து முடிச்சாச்சா?''

''ம்.''

பொய்ரெட் உட்கார்ந்துக் கொண்டு, தலையை மட்டும் ஒரு பக்கமாய் சற்று அதிகமாய் சாய்த்து, ஏதோ ஒரு பெரிய ஹாஸ்யத்தை ரசித்துக் கொண்டிருக்கும் தொனியில் ''நீங்க தப்பா சொல்றீங்க'' என்றார். ''நீங்க பார்க்க வேண்டிய இன்னும் ஒரு பேஷண்ட் பாக்கியிருக்கு.

''அது நீங்க கிடையாதே?'' என்று ஆச்சரியத்தில் பீறிட்டேன் நான்.

''ஆங், நான் கிடையாது. என் ஆரோக்கியம் ஆச்சரியப்படத்தக்கது. இப்ப உங்ககிட்டே நிஜத்தை சொல்லிடணும் – இது நான் பண்ணி யிருக்கும் ஒரு ராஜதந்திர சந்திப்பு! நான் ஒருத்தரைப் பார்க்கணும்னு விரும்பறேன், ஓ கே? அதே சமயத்துல முழு கிராமமும் 'எதுக்கு இந்த சந்திப்பு?' அப்படினு மூக்கை நுழைச்சு ஆளாளுக்கு ஊகிக்கிற மாதிரி ஆகிடக்கூடாதுனும் நினைக்கிறேன். அந்தப் பொம்பிளை என் வீட்டுக்கு வருவதை யாராவது ஒருத்தர் பார்த்துட்டாலும் இது தான் நடக்கும் – அவ பொம்பிளைங்கிறதால! ஆனா உங்களைப் பொறுத்தவரைக்கும் அவ ஏற்கெனவே ஒரு பேஷண்ட்டா இங்கே வந்துக்கிட்டிருக்கிறவ தான், ஸோ, நோ ப்ராப்ளம்.

''மிஸ் ரஸ்ஸெல்!'' – நான் கூவி விட்டேன்.

''துல்லியம். அவங்க கூட நிறைய பேசணும்னு நான் விரும்பறேன். அதனால உங்க ஆஸ்பிட்டலுக்கு வந்துடுமாறு அவங்களுக்கு நான் சீட்டு அனுப்பிட்டேன். இதனால் உங்களுக்கு எம்மேல கோபங் கிடையாதே?''

''இதுக்கு நானும் இந்த சந்திப்புல இடம்பெற அனுமதிக்கப் படுவதைப் பொறுத்தது அது!'' என்றேன்.

''இல்லாமலா பின்னே! உங்களோட சொந்த ஆஸ்பித்திரி...!''

''மிஸ்டர் பொய்ரெட்'' என்று சொன்னபடி கையிலிருந்த சிறு உபகரணம் ஒன்றைத் தூர வைத்துத் திரும்பிய நான், ''ஆலோசனை ஆலோசனைனு எல்லாமே அசாதாரணமா போயிக்கிட்டிருக்கு'' என்றேன். ''இடம்பெறும் ஒவ்வொரு மாற்றமும் கேஸையே உலுக்கி மாற்றிப்போடுமளவுக்கு பிரம்மாண்டாதான் நிகழ்ந்துக்கிட்டேயிருக்கு. இப்பப்பாருங்க, இது! எதுக்காக நீங்க இப்ப மிஸ் ரஸ்ஸெல்லைப் பார்க்க இத்தனை பரபரப்பா இருக்கீங்க?''

பொய்ரெட் அவருடைய புருவங்களை உயர உயர்த்தினார்.

''நிச்சயமா இது வெளிப்படையாவே தெரியுதே டாக்டர்...!''

''உங்ககிட்டே இந்த தொந்தரவு வேற'' என்றேன் நான். ''உங்களுக்கு எல்லாமே வெளிப்படை தான். ஆனா என்னைத்தான் நீங்க பனிமூட்டத்துக்குள்ளேயே நடக்க விடறீங்க.''

பொய்ரெட் உண்மையாய் தனது தலையை மறுத்தசைத்துக் காட்டினார். ''நீங்க தான் ஒண்ணும் தெரியாத ஆள் மாதிரி எனக்கு முன்னாடி முகமூடி போட்டுக்கிட்டே இருக்கீங்க'' என்று விட்டார் அவர். ''மேடம் ஃப்ளோராவுடைய விஷயத்தையே எடுத்துப்பமே. இன்ஸ்பெக்டர் ஆச்சரியத்தின் உச்சத்துக்கே தூக்கியெறியப்பட்டார் – ஆனா – நீங்க – ம்ம், கிடையாது.''

''அவ ஒரு திருடியா இருப்பானு நான் கனவு கூட கண்டது கிடையாது'' என்று, அப்படி ஒரு ஊகத்துக்கு என்னுள் இடமே இருந்ததில்லை என்பதை சுட்டிக் காட்டினேன்.

''அதெப்படியோ. ஆனா நான் உங்க முகத்தைப் பார்த்தேன் – ஆனா நீங்க இன்ஸபெக்டர் ரக்லானைப் போல விளக்க முடியாத அளவுக்கு ஆச்சரியத்து அதிசயிச்சுப் போகலே, டாக்டர்.''

ஓரிரு நிமிடம் சிந்தித்தேன் நான். ''யெஸ் – நீங்க சொல்வதும் சரிதான்'' என்றேன் இறுதியாய். ''இக்கதை நெடுகிலும் ஃப்ளோரா எதையோ சொல்லாம அவளுக்குள்ளேயே போட்டுப் பதுக்கி வெச்சுக்கிறானு நான் நினைச்சுக்கிட்டு தானிருக்கேன். ஆகவே, உண்மை, அது தானா உடைஞ்சு வெளியாகும்போது, அடிமனசுல அப்படியொண்ணு உண்டு எனும் முடிவு இருப்பதால, பெரிய தாக்கம் உண்டாகலே. ஆனா அப்படியேதும் அடி மனசுல ஊகங்கள் இல்லாத இன்ஸ்பெக்டர் ரக்லான், பாவம், திண்டாடித்தான் போயிட்டார் – யெஸ்.''

''ஆஹ்! இதனால அவர் போட்ட ஊகங்கள், எண்ணங்கள் எல்லாத்தையும் அவர் மாற்றியடுக்கி மண்டையைப் பிடுங்கியாகணும். புவர் மேன்! அப்படி அவர் குழம்பிப் போயிருந்த பித்துப்பிடிச்சது போன்ற நிலைமையைச் சட்டுனு எனக்கு சாதகமா நான் ஒண்ணு சாதிக்கப் பயன்படுத்திக்கிட்டேன்.''

''என்னது அது?''

பொய்ரெட் அவரது பாக்கெட்டிலிருந்து ஒரு சின்னத் துண்டுச்

சீட்டினை வெளியில் எடுத்தார். அவற்றில் சில வார்த்தைகள் எழுதப் பட்டிருந்தன, அவற்றை அவர் உரக்கப் படித்தார்.

கடந்த சில நாட்களாக, பரிதாபமான முறையில் சென்ற வெள்ளிக் கிழமையன்று இறந்த ஃபெர்ன்லி பார்க் மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டின் மகன் உறவான கேப்டன் ரால்ஃப் பேடனைப் போலீஸ் தேடி வருகின்றது. இந்த கேப்டன் ரால்ஃப் லிவர்பூலில் அமெரிக்காவுக்கு தப்பிக்க முயன்றுக் கொண்டிருந்தபோது பிடிபட்டார்.

அந்தத் துண்டுச்சீட்டினை அவர் மறுபடியும் மடித்து வைத்துக் கொண்டார். ''இது, மை ஃபிரண்ட், நாளைக்கு செய்தித்தாள்ல இருக்கும்.''

மூச்சுபேச்சற்று அவரை நான் பார்த்தேன். '''ஆ-னா, ஆனா – அது உண்மை கிடையாதே! இவர் லிவர்பூல்ல இல்ல!''

பொய்ரெட் என்னைக் கதிர்வீச்சாய் பார்த்தார். ''உடனடியா வேலை பண்ணக்கூடிய புத்திசாலித்தனம் இருக்கு, உங்களுக்கு! கிடையாது தான் – கேப்டன் ரால்ஃப் லிவர்பூல்ல கண்டுபிடிக்கப்படலே தான். எனக்கும் இன்ஸ்பெக்டருக்கும் அப்படியொண்ணும் நம்பகத்தன்மை விளையாததால இப்படி ஒரு விளம்பரத்தை நியூஸ் பேப்பர்ல நான் தருவதில் அவருக்குத் துளியும் இஷ்டம் கிடையாது. ஆனா, இது ப்ரிண்ட்ல வருவதால, படு சுவாரஸ்யமான பின்விளைவுகள் நடக்கப்போகின்றன என்ற ஸ்திரமான நம்பிக்கையை நான் அவருக்குத் தந்தேன். இதனால, இப்படி ஒரு விளம்பரத்தைத் தருவதால் பிறகு என்ன நேர்ந்தாலும் அதுக்கு அவர் பொறுப்பு கிடையாது என்ற ஒப்பந்தத்தின் பேரில், ஓ கே பண்ணினார்.''

நான் பொய்ரெட்டைப் பார்த்து முறைத்தேன். அவர் பதிலுக்கு என்னைப் பார்த்து புன்னகைத்தார்.

''இதிலிருந்து என்னத்தை நீங்க எதிர்பார்க்கிறீங்க?''

''சாதுர்யத்துக்குக் காரணமான மூளையின் சாம்பல்நிற செல்களைக் கொஞ்சம் உசுப்பி விடணும் நீங்க'' என்றார் அவர்.

அவர் எழுந்து, நான் பரிசோதனை செய்துக் கொண்டிருந்த பெஞ்ச் வரை வந்தார். ''மெஷின் அவற்றின் வேலைப்பாடு இதிலெல்லாம்

உங்களுக்கு விருப்பம் அதிகமோ'' என்றார். அங்கு களேபரமாய் கிடந்த சிறிதும் பெரிதுமான பல உபகரணங்களை நோட்டமிட்டார் அவர்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்கென்று ஒரு பொழுதுபோக்கு உண்டு. நான் உடனடியாய் பொய்ரெட்டின் கவனத்தை வீட்டிலேயே வெற்றிகரமாய் நான் வடிவமைத்திருந்த வயர்-லெஸ் சாதனம் பக்கமாய் திருப்பினேன். வீட்டுக்கு உபயோகப்படும் என்னுடைய சில இன்னபிற கண்டுபிடிப்புகளையும் அவருக்குக் காட்டினேன்.

''அடிச்சு சொல்றேன், மிஸ்டர் ஷெப்பர்ட்'' என்று இறுதியாய் சொன்ன அவர், ''நீங்க தொழிலால ஒரு கண்டுபிடிப்பாளரா ஆகி யிருக்கணும் – டாக்டரா அல்ல'' என்றார். ''ஆங், அதோ, அழைப்பு மணி. உங்க பேஷண்ட்! ம், கம் ஆன், ஆஸ்பிட்டலுக்குப் போவோம்.''

இதற்கு முன் ஒருமுறை அசத்தலான மிஸ் ரஸ்ஸெல்லின் அழகினை நான் சிலாகித்துப் பார்த்ததுண்டு. இந்தக் காலையில் நான் அதே அழகினால் புதிதாய் அடிக்கப்பட்டேன். வெறும் கறுப்பு உடை தான்... நல்ல உயரம் மற்றும் அவருக்கே உரிய சுதந்திரத்தன்மையின் வீச்சு... கரிய பெரிய வண்டு விழிகள்... எப்போதும் வண்ணம் கூடியேயிருக்கும் உருண்டை முகவாய். வயதுக்காலத்தில் பார்க்கும் ஆடவர்களையெல் லாம் வீழ்த்தித் தள்ளும் அசகாய அழகியாய் இருந்திருக்க வேண்டும் என்று கணக்குப் போட்டுக் கொண்டேன் நான்.

''குட் மார்னிங் மேடம்'' என்றார் பொய்ரெட். ''உட்காரலாமே. நான் உங்ககூட நடத்த ஆவலாயிருக்கும் உரையாடலுக்கு தன்னுடைய மருத்துவமனை அறையை விட்டுக் கொடுத்திருக்கிறார், கனிவான டாக்டர் ஷெப்பர்ட்.''

அவருக்கே உரித்தான தளராத, அலட்டலற்ற வகையில் உட்கார்ந்துக் கொண்டார் ரஸ்ஸெல். அவருக்குள் ஏதாவது உள்ளார்ந்த படபடப்புகள் இருந்திருந்தாலும் அவை வெளியே தெரியுமளவுக்கு உருமாற்றம் கொள்ளவில்லை.

''தப்பா நினைக்கலேனா... என்ற அவர், ''இதெல்லாம் விசித்திரமான அணுகுமுறைகள்'' என்று பட்டென்று சொல்லி விட்டார்.

''அப்படி கிடையாது, மிஸ் ரஸ்ஸெல். நான் உங்களுக்குத் தர ஒரு சேதி வெச்சிருக்கேன்!''

''அப்படியா!''

''சார்ல்ஸ் கென்ட் லிவர்பூலில் கைது பண்ணப்பட்டிருக்கான்.''

அவள் முகத்தின் கிஞ்சித்து தசையும் அசைந்து மாற்றங்கொள்ள வில்லை. அவள், அவளுடைய கண்களை மட்டும், மிக அகண்ட நிலைக்கு விரித்தார்... பிறகு ஒரு சின்ன கிண்டல் தொனிக்க, ''அதுக் கென்ன இப்ப?'' என்றார்.

இக்கணத்தில் எனக்குள் வந்தே விட்டது – சார்ல்ஸ் கென்ட்டின் கீழ்ப்பணிய மறுக்கும் குணாதிசயத்தில் நான் எதையோ எங்கோ ஏற்கெனவே பார்த்திருந்ததாய் எனக்குள் உறுத்திக் கொண்டிருந்த ஒற்றுமை! இந்த இரண்டு குரல்களும் – ஒன்று கரடுமுரடான கரகரத்த குரல், மற்றொன்று வலி கொண்ட பெண்மை – ஆக இவ்விரண்டும், ஒலித்த நாதத்தில் விளக்கவொண்ணாதபடி ஒத்துப்போயிருந்தன. அன்றைய இரவன்று ஃபெர்ன்லி பார்க் கேட்'டின் அருகே எனக்குள் நினைவில் வந்து ஆனால் கண்டுபிடிக்க முடியாதபடி ஆனது, மிஸ் ரஸ்ஸெல்தான்.

இந்தக் கண்டுபிடிப்பை அப்படியே சுமந்துக் கொண்டு நான் பொய்ரெட்டைப் பார்க்க, அவர், மிகச்சரியான கணிப்பு என்பதை உணர்த்தி ஆமோதிப்பாய் தலையசைத்தார்.

''உங்களுக்கு இதுல இண்ட்ரஸ்ட் இருக்கும்னு தோணிச்சு, அவ்ளோதான்'' என்றார் அவர் மிருதுவாய்.

''அப்படியெதுவும் கிடையாது'' என்றார் ரஸ்ஸெல். ''ஆங், யாரிந்த சார்ல்ஸ் கென்ட்?''

''இது ஓர் ஆசாமி மேடம்... கொலை நடந்த இரவு ஃபெர்ன்லி பார்க்கிலிருந்த ஆசாமி.''

''ரியலி?''

''அதிர்ஷ்டவசமா அவன் வேறயிடத்துல இருந்ததுக்கான நிரூபணமும் அவன்கிட்டே இருக்கு. இங்கிருந்து ஒரு மைல் போல தள்ளியிருக்கும் ஒரு பொதுயிடத்துல அவன் ஒன்பதே முக்காலுக்கு இருந்திருக்கான்.''

''அவன் அதிர்ஷ்டம்'' என்றாள் ரஸ்ஸெல்.

''ஆனா, இன்னும் எங்களுக்கு, அவன் ஃபெர்ன்லி பார்க்குக்கு வந்து என்ன பண்ணிக்கிட்டிருந்தான் என்பது தான் தெரிய வரலே.

உதாரணத்துக்கு... யாரைப் பார்ப்பதற்காக அவன் அங்கே போனான்?''

வீட்டு வேலைக்காரர்களின் தலைவி, ''இந்த விஷயத்துல என்னால உங்களுக்கு உதவி பண்ண முடியும்னு தோணலே'' என்றாள் சாந்தமாய். ''இது பற்றி எதுவும் என் காதுகளுக்கு வரலே. இதுதான் பேச வேண்டிய விஷயம்னா —''

எழுந்திருக்க விழைவது போன்ற சிறு நகர்த்தலை செய்தாள் அவள். பொய்ரெட் அவளை நிறுத்தினார்.

''இது மட்டுமே நாம இப்ப பேச வேண்டிய ஒரே விஷயம் கிடையாது மேடம்'' என்றார் மிருதுவாய். ''இன்னிக்குக் காலையில புதிதான முன்னேற்றங்கள் கிளம்பியிருக்கு. மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு ஒன்பதே முக்காலுக்கு கொலை செய்யப்படலே – அதுக்கு முன்னாலேயே என்பது தான் அது. டாக்டர் ஷெப்பர்ட் கிளம்பி வெளியேறிய எட்டு ஐம்பதிலிருந்து ஒன்பதே முக்காலுக்குள்.''

உடனடியாய் அமர்ந்திருந்த பெண்மணியின் முகத்தின் நிறம் மங்கி மறைந்து வெளிறி கலங்குவதை நான் பார்த்து விட்டேன். அவளுடைய உடலே கணத்தில் குறுகி விட, முன்வளைந்து வந்தாள் அவள். சொன்னாள்: ''ஆனா மிஸ் ஆக்ராய்டோட சாட்சியிருக்கே – அவங்க குட் நைட் சொன்ன சாட்சி —''

''அப்படி அவங்க சொன்னது ஒரு முழு பொய்னு ஃப்ளோரா ஒத்துக்கிட்டாச்சு. அன்னிக்கு சாய்ந்திரம் முழுக்க அவங்க மிஸ்டர் ரோஜரோட படிக்குமறைக்கே போகலே. இதனாலே தான் இந்தப் புது நேர மாற்றம்!''

''அப்படினா —''

''அப்படினா, சார்ல்ஸ் கென்ட் தான் நாம தேடிக்கிட்டிருக்கிற ஆசாமினு ஆகுது. அவன் தான் ஃபெர்ன்லி பார்க் வரைக்கும் வந்திருக்கும் ஒரே அந்நியன் – ஏன் அப்படி வந்தான்னு கணக்கு தர முடியாதவன் —''

''அவன் அங்கே என்ன பண்ணிக்கிட்டிருந்தான்னு என்னால சொல்ல முடியும்'' – பட்டென கதறி விட்டாள் ரஸ்ஸெல். ''மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டுடைய தலை முடியில கூட ஒண்ணை அவன் தொடலே. அவன் பண்ணலே, என்கிட்டேயிருந்து எடுத்துக்குங்க – அவன் பண்ணலே.''

அவள் இன்னும் முன்னுக்கு வளைந்து வந்தாள். அவளுடைய இரும்புத்தனமான சுயக்கட்டுப்பாடு ஒருவழியாய் இறுதியில் உடைந்து சுக்குநூறாகிப் போனது. கிலியும் தப்பிப்பற்ற துடிப்புமே அவளுடைய முகமெங்கும்.

''மிஸ்டர் பொய்ரெட்... மிஸ்டர் பொய்ரெட்... ப்ளீஸ், என்னை நம்புங்க.

பொய்ரெட் எழுந்துக்கொண்டு அவள் வரை போனார். நம்பிக்கை தந்து அவளுடைய முதுகில் வாஞ்சையாய் தட்டினார் அவர். ''யெஸ், யெஸ். நான் நம்பறேன். நம்புவேன். எப்படியாவது நான் உங்களைப் பேச வெச்சாகணும், பார்த்தீங்களா!''

ஒரு நொடி அவள் முகத்தில் சந்தேகம் படர்ந்து மறைந்தது. ''நீங்க சொன்னதெல்லாம் நெசந்தானே?''

''சார்ல்ஸ் கென்ட் தான் கொலைகாரன் என்பதையா கேட்கிறீங்க? யெஸ், அது நெஜந்தான். அவன் எதுக்காக ஃபெர்ன்லி பார்க் வந்திருந்தான் என்பதை சொல்லி விடுவதன் மூலம், நீங்க ஒருவர் தான் அவனைக் காப்பாத்த முடியும்.

''அவன் – என்னைப் பார்க்க வந்தான்'' – அவள் தணிந்த மற்றும் வேகவேகமான குரலில் பேசினாள். ''நான் அவனைச் சந்திப்பதற்காக வெளியே போனேன் —''

''அந்தச் சின்னத் தோட்டத்து அறையில, இல்லியா? எனக்குத் தெரியும்.''

''உங்களுக்கெப்படி தெரியும்?''

''மேடம்... ஹெர்குல் பொய்ரெட்டுடைய பிஸினஸ் தெரிந்துக் கொள்வது தான். அந்தச் சின்னத் தோட்டத்து அறையில நீங்க எத்தனை மணிக்கு வந்து காத்திருப்பீங்க எனும் தகவலை சொல்லுவதற்காக அன்னிக்கு சாயந்திரம் நீங்க வெளியேறியிருந்த விஷயம் எனக்குத் தெரியும்.''

''ஆமாம், நான் செஞ்சேன். அவன்கிட்டேயிருந்து எனக்குத் தகவல் வந்தது ஸார்–அவன் அங்கே வரப்போவதா! எப்படியாவது ஃபெர்ன்லி பார்க்குக்கு அவன் வந்து விடுவதை நான் தடுத்தாகணும். அவன் எனக்குத் தந்திருந்த முகவரிக்குக் கடுதாசி போட்டேன். அதுல ஃபெர்ன்லி பார்க்குக்கு வர வேண்டிய வழி, அதன் அடையாளம்

எல்லாத்தையும் எழுதிட்டு வெளித்தோட்டத்து அறையில பார்க்க லாம்னு சொல்லியிருந்தேன். அதுக்கெல்லாம் அவன் பொறுமை யில்லாம போயிடுவானோனு ஒரு பயம் எனக்கு... அந்த அறையில காத்திருக்காம தடதடனு உள்ளே வந்துட்டான்னா...? உடனே வேகமா வெளியே ஓடிப்போய் நிச்சயமா ஒன்பது பத்துக்கு அவனை நான் அங்கே வந்து சந்திப்பேன்னு சிட்டு எழுதி வெச்சுட்டு வந்தேன். இதையெல்லாம் நான் பண்ணிக்கிட்டிருப்பதை எந்த வேலைக்காரனும் பார்த்து விடுவதை நான் விரும்பலே... ஸோ, வரவேற்பறை ஜன்னல் வழியா நழுவிப் போயிட்டு வந்தேன். அப்படி நான் திரும்பியபோது தான் டாக்டர் ஷெப்பர்டைப் பார்க்க நேர்ந்தது... உடனே ஒரு பயம் - அவர் என்னைத் தப்பா எடுத்துக்கிட்டா?! ஓடி வந்ததால மூச்சு கூடயில்லாம நின்னுக்கிட்டிருந்தேன். அன்னிக்கு ராத்திரி டாக்டரும் டின்னருக்கு அழைக்கப்பட்டிருப்பது பற்றி எனக்கு எதுவுமே சொல்லப்படலே.''

இங்கு கொஞ்சமாய் நிறுத்தினாள் அவள்.

''தொடரலாம்'' என்றார் பொய்ரெட். ''அவனைப் பார்க்க ஒன்பது பத்துக்கு நீங்க வெளியேறினீங்க. ரெண்டு பேருக்குள்ளும் என்னென்ன சொல்லிக்கிட்டீங்க?''

''அதை சொல்வது கஷ்டம். அதா-வது–''

''மேடம்... என இங்கு இடைமறித்த பொய்ரெட், ''இந்த விஷயத்துல எனக்கு முழு உண்மையும் கிடைச்சாகணும். யெஸ். நீங்க இப்ப எங்ககிட்டே என்னவெல்லாம் சொல்லப் போறீங்களோ அது அத்தனையும் இந்த நாலு சுவற்றைத் தாண்டி எப்போதும் வெளியே போகாது. டாக்டர் ஷெப்பர்டுக்கு ரகசியம் காக்கத் தெரியும் அப்படியே தான் எனக்கும். வேணும்னா நீங்க ஆரம்பிக்க நான் உங்களுக்கு முதல் வாக்கியத்தை அமைச்சு தரேன். இந்த சார்ல்ஸ் கென்ட், இவன் உங்க மகன், சரி தானே?''

அவள் ஒப்புதலாய் தலையசைத்தாள். அவள் முகமெங்கும் போன வண்ணம் திரும்பியது.

''யாருக்கும் இது தெரியாது. நடந்தது பல வருடங்களுக்கு முன்னாடி... கென்ட்ல. அப்போ எனக்குக் கலியாணம் ஆகலே...

''அதனால அந்த நாட்டு பேரான கென்ட்டை அவன் பேரோடயே

ஒட்ட வெச்சுக்கிட்டீங்க. புரியுது.''

''எனக்கு வேலை கிடைச்சது. அவன் தங்கவும், வாழவும் தேவையான காசை என்னால தர முடிஞ்சது. நான் தான் அவன் அம்மானு நான் என்னிக்குமே சொன்னது கிடையாது. ஆனா அவன் மோசமானவனா வளர ஆரம்பிச்சான். குடிச்சான். ட்ரக் எடுத்துக் கிட்டான். கனடா வரைக்கும் போணும்னான்... அந்தப் பிரயாணத் துக்கான செலவையும் தர எப்படியோ பாடுபட்டு முடிச்சேன். அப்புறம் சில வருஷங்களா அவன்கிட்டேயிருந்து எதுவுமே சேதி வரலே. அப்புறமா எப்படியோ எந்த வழியிலோ நாந்தான் அவன் அம்மா எனும் செய்தியைக் கிளறி எடுத்துட்டான். பணம் பணம்னு கேட்டுக் கடுதாசிகள். அவன்கிட்டேயிருந்து. உச்சகட்டமா, அவன் இதே நாட்டுக்கு வந்தவுடனேயே அவன்கிட்டேயிருந்து தொடர்பு வந்தது. என்னைப் பார்க்க ஃபெர்ன்லி பார்க் வரேன்னு சொன்னான் அவன். துடிச்சுப் போயிட்டேன். இந்த வீட்டுல வெச்சு அவனை சந்திக்க எனக்கு துளியும் விருப்பம் கிடையாது. என்னை இந்த வீட்டார் எப்பவுமே மிகுந்த... மிக மிகுந்த மரியாதையாத்தான் வெச்சிருக்காங்க. யாருக்காவது துளி சந்தேகம் வந்தாக்கூட வேலைக்காரங்களுடைய தலைவியா நான் வளைய வருவது முடிவுக்கு வந்துடும். அதனால தான் அவனுக்கு இப்ப நான் உங்களுக்கு சொன்னது போல கடுதாசி போட்டேன்.''

''காலையில நீங்க டாக்டர் ஷெப்பர்டைப் பார்க்கப் போயிருக்கீங்க?''

''யெஸ். அவனுக்கு ஏதாவது சகாயம் பண்ண முடியுமானு குழம்பிக்கிட்டிருந்தேன். ட்ரக் எடுக்க ஆரம்பிப்பதற்கு முன்னாடி வரைக்கும் அவன் கெட்ட பையன் கிடையாது.

''ஓஹோ'' என்றார் பொய்ரெட். ''நாம கதையை விடாம தொடரு வோம். அன்னிக்கு ராத்திரி தோட்டத்துச் சின்ன அறைக்கு அவன் வந்தானா?''

''யெஸ். நான் அங்கே போனபோது எனக்காக அவன் அங்கே காத்துக்கிட்டிருந்தான். கடுமையாகவும் கண்றாவியாவும் பேசியபடி யிருந்தான் அவன். என்கிட்டேயிருந்த அத்தனை பணத்தையும் தூக்கிக்கிட்டு அங்கு போயிருந்த நான், அத்தனையையும் அவனுக்கு அள்ளி கொடுத்தேன். நாங்க ரெண்டு பேரும் கொஞ்ச தூரம்

நடந்தோம்... அப்புறம் அவன் போயிட்டான்.''

''அப்போ மணி எத்தனை?''

''ஒன்பது இருபது... ஒன்பது இருபத்தைந்து இருக்கணும். ஏன்னா நான் வீட்டுக்குள்ளே திரும்பியபோது மணி ஒன்பதரை ஆகலே.''

''எந்த வழியில அவன் திரும்பிப் போனான்?''

''அவன் வந்த அதே வழியில தான் – இந்த அறையையும் வாசல் கேட்டையும் இணைக்கும் பாதை.''

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்துக் கொண்டார். ''அப்புறம் நீங்க? நீங்க என்ன பண்ணீங்க?''

''நான் வீட்டுக்கே திரும்பி வந்துட்டேன். டெரஸ்ல புகைப்பிடிச்சுக் கிட்டு மேலும் கீழும் நடந்துக்கிட்டேயிருந்தார் மேஜர் ப்ளண்ட். அதனால சுற்றிவந்து பக்கவாட்டு கதவு வழியா நுழைஞ்சுட்டேன். அப்போதான், நான் இப்ப சொன்னது போல, மணி, ஒன்பதரை ஆகியிருந்தது.''

பொய்ரெட் மறுபடியும் ஒப்புதலாய் தலையசைத்தார். ஓரிரு விஷயங்களைத் தனது சின்ன பாக்கெட் நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொண்டார் அவர். பிறகு, சிறு சிந்தனையுடன், ''ஐ திங்க்... அவ்ளோதான்'' என்றார்.

''இதையெல்லாம் நான் —'' என தயங்கிய ரஸ்ஸெல், ''இதை யெல்லாம் நான் இன்ஸ்பெக்டர் ரக்லான் கிட்டேயும் சொல்லணுமா?'' என்று கேட்டார்.

''அது வரைக்கும் விஷயம் உங்களை இழுக்கலாம். ஆனா நாம இப்போதைக்கு அவசரப்பட்டுட வேணாம். முறையா, வரிசைக் கிரமமா நாம முன்னேறுவோம். சார்ல்ஸ் கென்ட் இன்னும் அதிகார பூர்வமா கொலைக்குற்றத்துக்கு ஆளாகலே. சூழ்நிலை மெல்ல மெல்ல மாறி உங்களுடைய வாழ்க்கைக் கதையே இவ்வழக்குக்குத் தேவை யற்ற ஒன்று எனுமளவுக்கு ஆக்கிடலாம். வெயிட்.''

மிஸ் ரஸ்ஸெல் எழுந்துக் கொண்டாள்.

''தேங்க் யூ வெரி மச், மிஸ்டர் பொய்ரெட்'' என்றாள் அவள். ''நீங்க ரொம்ப கரிசனையா நடந்துக்கிட்டீங்க – ரொம்ப. நீ-ங்க, நீங்க என்னை நம்பறீங்க, இல்லையா? இந்த கொலையோடு சார்ல்ஸ் கென்ட்டுக்கு தொடர்பு கிடையாதுனு நம்பறீங்க தானே?''

''ஒன்பதரை மணிக்கு மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டோட அவருடைய அறையில பேசிக்கிட்டிருந்த நபர் உங்க மகனா இருக்கும் சாத்தியக்கூறு கிடையாது என்பதுல சந்தேகம் வர வாய்ப்பில்லே. உற்சாகத்தை இழக்க வேண்டாம், மேடம். இனி எல்லாம் நல்லதாகவே நடக்கும்.

மிஸ் ரஸ்ஸெல் கிளம்பிப் போனாள். நானும் பொய்ரெட்டும் ஒன்றாய் விடப்பட்டோம்.

''இது தான் கதையா?'' என்றேன் நான். ''சார்ல்ஸ் கென்ட் பார்க்க வந்த நபர் மிஸ் ரஸ்ஸெல்தான் அப்படினு எப்படி நீங்க கொத்திப் பிடிச்சீங்க? அவங்களுக்குள்ளேயிருக்கும் ஒற்றுமைகளை நீங்க பிடிச்சுட்டீங்களா?''

''முகந்தெரியா அந்த மனிதன் யாரென்று நாம் முகத்துக்கு முகம் பார்ப்பதற்கு ரொம்ப முன்னாடியே நான் மிஸ் ரஸ்ஸெல்லை அவனோடு சேர்த்து வெச்சாச்சு. அந்த வாத்து இறகை நாம பார்த்த அந்த கணத்திலேயே. வாத்து இறகு போதை மருந்தினை எனக்குள்ளே ஆலோசித்தது... ட்ரக் சம்பந்தமா ரஸ்ஸெல் உங்களை பார்க்க வந்துட்டுப் போயிருக்கா. பிறகு அன்னிக்குக் காலையில நியூஸ் பேப்பர்ல கோகைன் பற்றி நான் படிக்கிறேன். எல்லாம் சுலபமா விளங்கிப் போச்சு. அன்னிக்குக் காலையில போதையால அடிமையான யார் மூலமாகவோ அவளுக்கு பேப்பர்ல வந்திருக்கும் கட்டுரை தெரிய வருது – உடனே ஆரம்பக்கட்ட ஆலோசனைகளை வாங்க உங்ககிட்டே வரா. கோகைன்னு அவ முன்னுதாரணம் சொல்லக் காரணம் அந்தக் கட்டுரை அது பற்றித்தான் பேசுது. அப்போ, ட்ரக் விஷயத்துல நீங்க மிகவும் பொதிந்து ஆழ்ந்து பேச ஆரம்பிச்சதும் பட்டுனு டிடெக்டிவ் கதைகள் பற்றி பேச்சை திசை திருப்பிடறாங்க. மகன் அல்லது சகோதரன் அல்லது தகாத ஏதோவோர் ஆண் உறவு - இதை மூன்றையும் தான் நான் சந்தேகிச்சு வெச்சிருந்தேன். ஆஹ்... நான் கிளம்பறேன். லஞ்ச் நேரம்.''

அத்தியாயம் 21

செய்தித்தாள் விளம்பரம்

மிஸ் ரஸ்ஸெல் மருத்துவமனைக்குள் வந்து போனது கரோலின் கண்களிலிருந்து தப்பவில்லை என்பதை நான் சொல்லவும் தேவையில்லை. இதை நான் ஏற்கெனவே எதிர்பார்த்து வைத்திருந்ததால், அப்பெண்மணியின் மூட்டுவலி பற்றிய நீண்ட பிரசங்கம் ஒன்றினைக் கையோடே வைத்திருந்தேன். ஆனால் இன்று கரோலின் குறுக்குக் கேள்விகள் கேட்கும் மனோநிலையிலில்லை. அவளைப் பொறுத்தமட்டில், மிஸ் ரஸ்ஸெல் எதற்காக வந்து போனாள் என்பது அவளுக்குத் தெரியும்... ஆனால் எனக்குத் தெரியாது.

''உன்னை பம்ப் அடிக்கிறா அவ, ஜேம்ஸ்'' என்றாள். ''அடிச்சு அடிச்சு விஷயத்தைக் கறக்கப் பார்க்கிறா. எனக்கு சந்தேகமே கிடையாது. இதைப் பண்ணத்தான் அவ இங்கே மினுக்கிக்கிட்டு வரானு உனக்குத் துளியும் தெரியாது. ஆம்பிளைங்க வேஸ்ட்ப்பா. நீ மிஸ்டர் பொய்ரெட்டுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவனா இருக்கேனு அவளுக்குத் தெரியும்... தகவல்களைப் பிடுங்கப் பார்க்கிறா. என்ன சொல்றேன்னு ஏறுதா, ஜேம்ஸ்?''

''என்ன சொல்றேன்னு, ஜஸ்ட் கடுகு கூட விளங்கிக்க முடியலே. நீ நிறைய அசாதாரண சங்கதிகளை நினைக்கிறே.

''கிண்டலடிச்சுப் பேசறதுல பிரயோஜனம் கிடையாது. அவ வாய்விட்டு சொல்லத் தயாராயிருக்கிற சங்கதிகளை விடவும் அவளுக்கு மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டுடைய மரண ரகசியங்கள் தெரியும் - ஆமாம்.''

வெற்றி முழக்கமிட்டவளாய் தனது இருக்கையில் நன்றாய் சாய்ந்து

உட்கார்ந்துக் கொண்டாள் கரோலின்.

''உண்மையாவே தான் நீ இப்படி நினைக்கிறியா?'' – நானாய் கேட்டேன்.

''நீ இன்னிக்கு ரொம்ப டல்லாயிருக்கே ஜேம்ஸ். மறுபடியும் அஸிடிட்டீயா?''

இதற்கு பிறகு எங்களுடைய உரையாடல் முழுக்கவும் குடும்ப சங்கதிகளாய் போனது.

காலை தினசரியில் பொய்ரெட் வரைந்திருந்த விளம்பரம் அப்படியே அச்சுஅசலாக மறுநாள் பிரசுரமாகியிருந்தது. இதன் நோக்கம் பற்றி அறியாது நான் முழுக்கவும் இருளிலிருந்தாலும் இது கரோலினின் மீது அழுத்தமான தாக்கத்தை அள்ளித் தந்திருந்தது.

இதையே தான் அவள் முன்னமேயே அடித்து சொன்னதாய் என்னிடமே பச்சையாய் புளுகினாள். அப்படியேதும் சொன்னதே யில்லையே என்பது போல நான் புருவங்களை உயர்த்தினேன்... வாதாட எண்ணமில்லை. உடனே அவளுடைய மனச்சாட்சி குத்தி யிருக்க வேண்டும்... பின்வருமாறு முன்னேறினாள்: ''லிவர்பூல் அப்படினு வேணும்னா பட்டவர்த்தனமா நான் எடத்தோட பேரை சொல்லாம இருந்திருக்கலாம்... ஆனா பய அமெரிக்கா பக்கம் கம்பி நீட்டப்போறான்னு எனக்குத் தெரியும். பைத்தியக்கார போலீஸுங்க.''

கரோலினின் இந்தக் குறிப்பு என்னுள் ஒரு சிறு பொறியைக் கிண்டி விட்டு பிரகாசிக்க வைத்தது. கேட்டேன்: ''கரோலின்... பொய்ரெட்டுக்கு ஒரு மூளை சுவாதீனமற்ற பைத்தியக்கார உறவு இருப்பதா எனக்குத் தெரியவே தெரியாது'' என்றேன்.

''உனக்குத் தெரியாது? ப்ர்ர்ர்ர்! ஓ, அவர் அது பற்றிய எல்லாத்தையும் என்கிட்டே சொன்னார். பாவப்பட்ட பய. குடும்பத்தையே துக்கத்துல ஆழ்த்திய சங்கதியாகியிருக்கு இது. ஒரு காப்பகத்துல கொண்டு போய் தான் முதல்ல வெச்சிருக்காங்க. ஆனா அது தாங்க முடியாத அளவுக்கு வளர்ந்துட்டதால பயந்துப் போய் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலேயே தள்ளிட்டாங்க. ப்ச்.''

''பொய்ரெட் ஃபேமிலி பற்றி என்னவெல்லாம் தெரிஞ்சிருக் கணுமோ அது அத்தனையையும் நீ தெரிஞ்சு வெச்சிருக்கே போலிருக்கு'' என்றேன் நான், சக்தியற்றும் வற்றி.

''ம், ரொம்ப நிறையவே'' என்றாள் அவள், தற்பெருமையடக்கி! ''தங்களுக்குள்ள சுமைகளை மற்றவர்களிடம் இறக்கி வைப்பதுல மனிதர்களுக்கு எப்பவுமே ஒரு நிம்மதி உண்டு. ஆனா ஒண்ணு தெரியுமா... நானா வலிய போய் யார்கிட்டேயும் விஷயத்தைக் கொடு கொடுனு அல்லாடுவது கிடையாது. அதுவா – வருது! உதாரணத்துக்கு, மிஸ்டர் பொய்ரெட்டை நான் அடுத்த முறை பார்த்தேன்னா, 'ஏன் ஸார்... உங்க வீட்டுக்கு இன்னிக்குக் அதிகாலையில சூரியன் கூட உதிக்காத இரவுல, கடுங்குளிரையும் பொருட்படுத்தாது, வந்து போன அந்த ஆசாமி யார்?'னு கேட்கவே மாட்டேன். ஆனா இந்த விஷயத்தின் விளக்கம், எங்க ரெண்டு பேருக்குமான உரையாடல்லேயே தானா வந்து விழுந்துடும். ஹாஹ்ஹா!''

''இன்னிக்கு அதிகாலையிலா?'' – நான் விசாரித்தேன்.

''அதிகாலைக்கும் ரொம்ப முன்னாடியே'' என்றாள் கரோலின். ''பால்கூட வரலே அப்ப. ஜன்னல் வழியா எதேச்சையா வெளியே பார்த்துக்கிட்டிருந்தேன். சீலை அடிச்சுக்கிட்டேயிருந்தது. அது ஒரு ஆசாமி. ஆம்பிளை. மூடின கார்ல வந்தான். அவனும் முழுக்க மூடிக்கிட்டிருந்தான் – மூட்டை போல. அவன் முகத்தின் துளியூண்டு சாயல் கூட எனக்குத் தெரியலே. இருட்டு வேற, ஓ கே? ஆனா இதுல என்னோட ஊகத்தை நான் இப்ப சொல்றேன்... அது எவ்ளோ சரினு நீயே தெரிஞ்சுப்பே பாரு.

''என்ன அது உன் ஊகம்?''

கரோவலின் அவளுடைய குரலை மாயம் செய்பவளைப் போல குறைத்துக் கொண்டு விட்டாள்: ''ஓர் உடல்நல அதிகாரி.''

''உடல்நல அதிகாரி?'' – ஆச்சரியத்தில் அறையப்பட்டு விட்டேன் நான். ''கரோலின்!''

''நான் சொல்றதை நல்லாக் குறிச்சு வெச்சுக்கோ, ஜேம்ஸ், நல்லாக் குறிச்சு வெச்சுக்கோ. அன்னிக்குக் காலையில அந்த ரஸ்ஸெல் பொம்மணாட்டி விஷம் விஷம்னு விஜாரிச்சுக்கிட்டு உன் பின்னாடியே சுத்தினா. சுத்தினா தானே? இப்ப கவனி... அன்றைய இரவு ரோஜர் ஆக்ராய்டு, வெகு சுலபமா, உணவுல விஷம் வைக்கப்பட்டிருப்பார்.''

பலமாகவே சிரித்து விட்டேன். ''நான்-ஸென்ஸ்'' என்றேன். ''அவர் கழுத்துல குத்தப்பட்டிருக்கார். என் அளவுக்கு இது உனக்கும்

தெரியும்.''

''இது செத்ததுக்கு அப்புறம் ஜேம்ஸ்.

''அடிப்பாவி!''

''ஒரு தப்பான திசையில திசை திருப்ப.

''நான் பாடியைப் பரீட்சித்தவண்டீ. நான் என்ன பேசறேன்னு ஒரு டாக்டரா எனக்கு நல்லாவே தெரியும். அது மரணத்துக்கு அப்புறம் உருவாக்கப்பட்ட காட்சி கிடையாது. மரணமே அதால தான். இதுல போய் தலையை விட்டுக் குழப்பாதே தாயே.

கரோலின் முட்டாளே என்பது போல என்னைப் பார்த்தபடியே யிருக்க, அது என்னை மேலும் எரிச்சலாக்க, வேறு வழியின்றி நான் தொடரலானேன்: ''ஒண்ணு சொல்லுடீ நீ... என்கிட்டே டாக்டருக்கான பட்டம்னு ஒண்ணு இருக்கா, இல்லையா?''

''உன்கிட்டே அது இருக்கு, ஜேம்ஸ். அதை வெச்சுக்கிட்டு நாக்கை வழி. உன்கிட்டே இல்லாதது இது தான்'' என்றவள் சொன்னாள்: ''கற்பனை!''

எங்களுடைய வீட்டுக்கு அன்று மதியம் பொய்ரெட் வந்தபோது இந்த கரோலின் விடாப்பிடியாய் நடந்துக்கொண்ட விதத்தைப் பார்த்து நான் அதிசயித்துத் தான் போனேன். என் சகோதரி, நேரடி கேள்வியாய் கேட்காமல், எப்படியெல்லாம் கற்பனை பண்ண முடியுமோ அப்படி யெல்லாம் கற்பனை பண்ணிக்கொண்டு, அன்று காலை அவரது இல்லத்திற்கு வந்து போன பார்வையாளரைப் பற்றிக் கேட்டுத் துளைத்தெடுத்து விட்டாள். எந்த இலக்கினை மனதில் வைத்துக் கொண்டு இப்படி சுற்றிச்சுற்றி அவள் அடிக்கிறாள் என்பதை கண்களில் டாலடிக்க பொய்ரெட் செவ்வனே அறிந்து விட்டதால், அவள் எதைப்பற்றிப் பேசுகிறாள் என்பதே புரியாத ஒருவராய் உட்கார்ந்துக் கொண்டு அவள் சுற்றி வளைத்துப் போட்ட பந்தையெல்லாம் அழகாய் ஃபீல்டு செய்து வெற்றிகரமாய் திருப்பி அனுப்பிய வண்ணமிருந்தார்.

இந்த விளையாட்டை அனுபவித்து விளையாடிய திருப்தியோடு எழுந்துக் கொண்ட அவர், ஒரு சிறு நடை போய்வரலாமே என ஆலோசித்தார். ''நீங்க என்கூட வரலாமில்லே, டாக்டர்? திரும்பும் போது நமக்கு கரோலின் சூடானடீ தருவாங்க...

''என் பாக்கியம்'' என்ற கரோலின், ''உங்களுடைய அந்தப்

பார்வையாளனும் கூட வருவாரில்லே?'' என்று போட்டாள் தூண்டில்.

''என்ன தாராள மனசு உங்களுக்கு?'' என்றார் பொய்ரெட்! ''ஆனா, நோ. என் ஃபிரண்டு மற்றவங்ககிட்டேயிருந்து தன்னைப் பிரிச்சு வெச்சுப்பதையே விரும்பறான். கூடிய சீக்கிரம் உங்களுக்கு அவனோட அறிமுகம் உண்டாகும்.

''உங்களோட நெருக்கமான ஓல்ட் ஃபிரண்டுனு யாரோ சொன்ன மாதிரி நினைப்பு'' என்று அவளுடைய கடைசி முயற்சியையும் விட்டு வைக்க மனமில்லாது தூக்கி வீசினாள்.

''அப்படியா சொன்னாங்க?'' என்ற பொய்ரெட், ''வெல்... நாம கிளம்பலாமே'' என்று விட்டார்.

எங்களுடைய பொடி நடை ஃபெர்ன்லி பார்க் பக்கமாய் எங்களைக் கொண்டு சென்றது. இப்படித்தான் ஆகப்போகிறது என்பதை நான் முன்கூட்டியே ஊகித்திருந்தேன். பொய்ரெட்டின் அணுகுமுறைகளை நான் கொஞ்சங்கொஞ்சமாக விளங்கிக் கொள்ள ஆரம்பித்திருந்தேன். ஒவ்வொரு சின்னச்சின்ன முக்கியமற்ற நகர்த்தல்கள் கூட முழு வழக்கின் மீதும் ஏதோவொரு வகையில் பொருந்தி நிற்கத்தான் செய்கின்றது.

''உங்களுக்குத் தர ஒரு முக்கியமான வேலை வெச்சிருக்கேன், மை ஃபிரண்ட்'' என்றார் கடைசியாய். ''இன்னிக்கு ராத்திரி, என்னோட வீட்டுல, ஒரு சின்ன அளவளாவல் வெச்சுக்கலாம்னு திட்டம். நீங்களும் வரணும் – முடியும் தானே?''

''நிச்சயமா.''

''குட். அந்த வீட்டுல இருக்கிறவங்களும் வேணும். அதாவது: மிஸஸ் சிசில் ஆக்ராய்டு, மிஸ் ஃப்ளோரா, மேஜர் ப்ளண்ட் மற்றும் மிஸ்டர் ரேமண்ட். இதுக்கு என்னோட தூதுவனா நீங்க இயங்கணும் என்பது என் விருப்பம். இந்த சின்ன கூட்டம், இரவு ஒன்பது மணிக்குனு வெச்சுப்போம். அவங்களை நீங்க வரச்சொல்லுவீங்க தானே – ம்?''

''வித் ப்ளஷர்... ஆனா ஏன் நீங்களே அவங்க எல்லாரையும் அழைக்கக் கூடாது?''

''ஏன்னா, அவங்க அப்ப என்கிட்டே கேள்விகளா தொடுப்பாங்க. ஏன்? எதுக்கா? என்னோட ஐடியா என்னனு சொன்னாத்தான்

வருவோம்னு கூட சொல்லிடலாம். ஆனா, என் குட் ஃபிரண்ட், நேரங்காலம் பொருந்தி வர வரைக்கும் என்னோட சின்னச்சின்ன ஊகங்கள் பற்றி சும்மா தொணதொணப்பது எனக்குப் பிடிக்காத விஷயம்.''

நான் சின்னதாய் சிரித்தேன்.

''நான் ஏற்கெனவே உங்ககிட்டே சொல்லியிருக்கிற என் நண்பன் ஹேஸ்டிங்ஸ், நான் ஒரு மனித முத்துச்சிப்பி என்பான். வாயைத் தொறக்கவே மாட்டேனாம் – அதுக்கு. ஆனா அவன் தப்பு. நிஜங்கள்... சாட்சிகள் இவற்றை பொறுத்த அளவில் நான் எதையுமே எப்போதுமே மூடி வெச்சுக்கிட்டவன் கிடையாது. ஆனா ஒவ்வொருத்தருக்கும் அந்த சாட்சியங்கள் மீதான முடிவுகள் வேறுபடும்தானே...!''

''ஓ கே – நீங்க சொன்னதை நான் எப்ப பண்ணணும்னு எதிர்பார்க்கிறீங்க?''

''உங்களால முடிஞ்சதுனா–இப்பவே. வீட்டுக்கு ரொம்ப பக்கத்துல வந்துட்டோம்.''

''நீங்க உள்ளே வரலியா, அப்ப?''

''நோ. நான் இப்படியே மைதானத்துல சுத்திக்கிட்டிருக்கேன். கால் மணி நேரத்துல மறுபடியும் நான் வாச கேட்டுல வந்து உங்க கூட சேர்ந்துக்கறேன்.''

நான் ஒப்புக்கொண்டு என் பணியை ஆரம்பிக்கக் கிளம்பினேன். வீட்டில் அப்போதிருந்த ஒரே நபராக மிஸஸ் ஆக்ராய்டு அறிவிக்கப்பட்டார். மிக தாராளமாக என்னை எதிர்கொண்ட அவர் கப் டீ அருந்திக் கொண்டிருந்தார்.

''அந்த சின்ன விஷயத்தைப் பொய்ரெட் கிட்டே தீர்த்து வெச்சதுக்கு ரொம்ப நன்றி, டாக்டர்'' என்றார். ''ஆனா, வாழ்க்கை என்பது ஒரு கஷ்டம் போனா மறு கஷ்டமாகவே ஆகிடுச்சு. ஃளோரா பற்றிக் கேள்விப்பட்டீங்க இல்லே?''

''எக்ஸாக்டா, என்னது அது?''–முன்ஜாக்கிரதையாய் கேட்டேன்.

''இந்தப் புது நிச்சயதார்த்தம். ஃப்ளோராவும் ஹெக்டர் ப்ளண்ட்டும். ரால்ஃப் இருந்திருந்தா உண்டுபண்ணியிருப்பதைப் போன்ற செமத்தியான ஜோடி கிடையாது தான். ஆனா, இதுலேயெல்லாம்

சந்தோஷமில்லே முதல்ல வருவது! ஃப்ளோராவுக்குத் தேவையான தெல்லாம் முதிர்ச்சியான ஓர் ஆள் – நம்பிக்கை மிகுந்த மற்றும் நிலையான. இந்த வகையில ரொம்பவே பொருத்தமானவர் ஹெக்டர். ஆங்... ரால்ஃப் கைதாகி விட்ட சேதியை இன்னிக்குக் காலையில பேப்பர்ல பார்த்தீங்களா?''

''யெஸ்'' என்றேன் நான். ''நான் பார்த்தேன்.''

''கொடூரம்'' – மிஸஸ் ஆக்ராய்டு கண்களை மூடிக்கொண்டார். நடுங்கினார். பிறகு என்னைப் பார்த்துப் பேசினார்: ''ஜியோஃபெர்ரி ரேமண்ட் கொதிச்சுக்கிட்டிருக்கார். லிவர்பூலுக்கு போன் போட்டார். ஆனா அந்த போலீஸ் ஸ்டேஷன்ல இவருக்கு எந்தத் தகவலையும் தரமுடியாதுனு சொல்லிட்டாங்களாம். சொல்லப்போனா அவங்க ரால்ஃப்பைக் கைது பண்ணலேனு சொல்லியிருக்காங்க. இதனால செய்தித்தாள் பண்ணியிருக்கும் தவறுனே அடிச்சு சொல்லிக் கிட்டிருக்கார் அவர். இதை மத்த வேலைக்காரங்க மத்தியில சொல்ல நான் முன் வரலே – எத்தனை பெரிய அவமானம்! ஃப்ளோரா உண்மையாவே அவனுக்கு கழுத்தை நீட்டியிருந்தான்னா --- நினைச்சுப் பாருங்க.

இயலாமையால் தனது கண்களை மீண்டும் மூடிக் கொண்டார் அவர். இப்படி இடைவிடாது பெய்யும் மழையாய் இவர் பேசிக் கொண்டிருப்பதற்கு நடுவில் பொய்ரெட் எனக்கிட்டக் கட்டளையை நிறைவேற்ற எப்போது இடைவெளி உண்டாகும் என பரிதவித்துக் கொண்டிருந்தேன்.

நான் பேச அவகாசம் எடுத்துக் கொள்வதற்குள் மீண்டும் பொழிய ஆரம்பித்து விட்டார் மிஸஸ்: ''நேத்து நீங்க அந்தப் பாழாப்போற இன்ஸ்பெக்டர் ரக்லான் கூட வந்திருந்தீங்க, இல்லையா? பிசாசுப் பய – மிஸ்டர் ரோஜர் ரூம்லேந்து ஃப்ளோரா பணத்தை எடுத்தா என்பதை எத்தனை அசிங்கமா முன்வெச்சான் அவன். இந்த விஷயம் ரொம்ப சின்ன ஸிம்பிளான ஒண்ணு, தெரியுமா? என்னவோ சின்ன சில தட்டுமுட்டு சாமான்களை வாங்கப் பிரியப்பட்டிருக்கு குழந்தை. அந்த மனுஷனும் யாரும் அவரைத் தொந்தரவு பண்ணக்கூடாதுனு சொல்லிட்டதாலே அவரைப் போய் இதுக்காக தொந்தரவு பண்ண அவளுக்கு மனசு வரலே. அவர் எங்கே

நோட்டுகளை வெப்பார்னு தெரிஞ்சிருந்ததாலே நேரா போய் தேவையான நோட்டுகளை அவ எடுத்துக்கிட்டா. ஸோ, ஸிம்பிள்! நம்ம வீட்டுக்குள்ளேயே சொந்த அங்கிளோட பணத்தை எடுப்பதா திருட்டு? வ்வ்வாஆஆ!''

''இந்த விஷயம் பற்றிய ஃப்ளோராவின் விளக்கமா இது?'' – நான் கேட்டேன்.

''மைடியர் டாக்டர்... இந்தக்காலத்துப் பொண்ணுங்களைப் பற்றியா உங்களுக்குத் தெரியாது! சொல்வதை அப்படியே கேட்டு விடுவது தான் இன்றைய பெண்கள். ஹிப்னாடிஸம் கேள்விப்பட்டிருக்கீங்க இல்லே... நீங்க டாக்டர், உங்களுக்கா சொல்லித் தரணும்! மனோ வசியம். அதான் நடந்திருக்கு. இந்தப் பாழாப் போற இன்ஸ்பெக்டர் மனுஷன் 'திருடிட்டே... திருடிட்டே...'னு சொல்லிச் சொல்லியே, பணத்தை எடுத்ததைக் கூட ஒரு திருடா நினைக்கிற மாதிரி அவளை மாத்திட்டார். எதெப்படியோ போய்த் தொலையட்டும்... இந்த ரெண்டையும் – அதாவது ஃப்ளோரா, ப்ளண்ட் சொல்றேன் – இதுங்களைச் சேர்க்க இது உதவிச்சே.''

இங்கு அவர் நிறுத்தும்போது, ''இப்ப கொஞ்சம் கவனியுங்க'' என்று அவருடைய ஓட்டத்துக்கு ஒரு வேகத்தடை போட்ட நான் ''மிஸ்டர் ஹெர்கூல் பொய்ரெட்டிடமிருந்து நான் ஒரு சேதி கொண்டு வந்திருக்கேன்'' என்றேன்.

''எனக்கா?''

எச்சரிக்கப்பட்டவராய் ஆனார் மிஸஸ் ஆக்ராய்டு.

அப்படி தனிப்பட்ட ஒன்றும் கிடையாது என விளக்கிய நான் பொய்ரெட் என்ன விளக்க சொல்லியிருந்தாரோ அதை விளக்கினேன்.

''பண்ணிடலாம்'' என்றாலும் அதை சந்தேகந்தொனிக்கவே சொன்னார் அவர். ''மிஸ்டர் பொய்ரெட் வரச்சொன்னா நாங்க வந்து தானே தீரணும். ஆனா இது எதுக்காக? எனக்கு முன்னமேயே தெரியணும்னு விரும்பறேன்.''

மிகவும் உண்மையாக இக்கேள்விக்கு பதில் எனக்கே தெரியாது என்பதை சொன்னேன்.

''அப்ப எப்படியோ போங்க'' என சபிக்கும் விதத்தில் சொன்ன

அவர், ''நான் மத்தவங்ககிட்டேயும் சொல்லிடறேன். ஒன்பது மணிக்கு எல்லாரும் அங்கேயிருப்போம்.''

இதற்கு பிறகு விடை பெற்றுக் கொண்ட நான் வெளியே சந்திப்புக்கு பொய்ரெட்டிடம் ஏற்கெனவே பேசியிருந்த இடத்தில் இருவரும் சேர்ந்துக் கொண்டோம்.

''கால் மணி நேரத்தையும் கடந்து லேட்டா வந்திருக்கேன்னு நினைக்கிறேன்'' என குறிப்பிட்டேன் நான். ''ஆனா அந்தப் பொம்பளைப் பேச ஆரம்பிச்சுட்டா, வாக்கியத்தின் முடிவைப் பிடிச்சு அறுத்து நிறுத்துவது இயலாத ஒண்ணா ஆகிடுது.''

''பரவாயில்லே, விடுங்க'' என்றார் பொய்ரெட். ''இந்த பார்க், விஸ்தாரமா அற்புதமாயிருக்கு.''

என் வீடு நோக்கி நாங்கள் கால்களைப் பரவ விட, வாசல் கதவிலேயே எங்களுக்காக ஆர்வமாய் ஒட்டிக் கொண்டிருந்தாள் கரோலின்.

அவளது உதடுகளின் மீது ஆள்காட்டி விரலைப் பதித்து எங்களை நிசப்தமாக்கிய அவளுடைய முகம் முக்கியத்துவமும் பரவசமும் கொண்டு துடித்துக் கொண்டிருந்தது.

''ஊர்மிளா போர்ன்'' என்றாள் அவள். ''ஃபெர்ன்லி பார்க்கின் அடுக்களை பொண்ணு. அவ இங்கேயிருக்கா! டைனிங் ஹால்ல உட்கார வெச்சிருக்கேன் – பொருத்தந்தானே! கொடூரமான மனோ நிலையில இருக்கா, பாவம். என்னவோ ஏதோ! உடனடியா மிஸ்டர் பொய்ரெட்டைப் பார்த்தே ஆகணும்கிறா அவ. எத்தனையோ சமாதானம் சொல்லி பார்த்தேன். சூடா ஒரு கப் கொடுத்தேன். இந்த அளவுக்கு உடைஞ்சுப் போயிருக்கிற ஒருத்தரைப் பார்க்கிறதுக்கு மனசு சங்கடப்படுது.''

''டைனிங் ரூம்லேயா?'' என்றார் பொய்ரெட்.

''இது வழி'' என்று முன்னால் குதித்தோடிய நான் கதவினைத் திறந்து வழி காட்டினேன்.

டேபிளுக்கு அருகில் ஊர்மிளா போர்ன் உட்கார்ந்துக் கொண்டிருந்தாள். அவள் கைகள் அவளுக்கு முன்னால் விரிந்துக் கிடந்தன – அப்போது தான் அவற்றில் புதைத்திருந்த முகத்தினை அவள் தூக்கியிருக்க வேண்டும். அழுதழுது அவளுடைய கண்கள் சிவந்

திருந்தன.

''ஊர்மிளா போர்ன்'' என நான் பொய்ரெட்டிடம் முணு முணுத்தேன்.

ஆனால் என்னையும் கடந்து அணைப்பதற்கு தோதாக கைகளை நீட்டியபடி போய்க் கொண்டிருந்தார் பொய்ரெட். ''நோ'' என்றார் அவர். ''இது சரி கிடையாது. எதுக்கு அழணும்? இது ஊர்மிளா போர்ன் கிடையாது, இல்லையா குழந்தே... இது ஊர்மிளா பேடன் - சரிதானே? மிஸஸ் ஊர்மிளா ரால்ஃப் பேடன்.''

அத்தியாயம் 22

ஊர்மிளாவின் கதை

ஓரிரு நொடிகள் அந்தப்பெண் ஓசையற்று பொய்ரெட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு, அவளுடைய பேசாத்தன்மை உடைந்து விட, ஒப்புதலாய் அவள் தனது தலையை ஒரு முறை அசைத்து உணர்த்தி, விம்மி விம்மி வெடியாய் அழத் தொடங்கி விட்டாள்.

என்னைத் தள்ளிக்கொண்டு முன்னுக்குப் போன கரோலின், அப்பெண்ணைச் சுற்றிலும் கரவளையமிட்டு ஆதரவாய் தோளில் தட்டிக் கொடுத்தாள். ''விடு, விடும்மா'' என்றாள் மிருதுவாய். ''எல்லாம் சரியாகிடும். நீயே பார்க்கத்தான் போறே பாரு... எல்லாம் சுபமா முடியத்தான் போகுது. கண்ணைத் தொடச்சுக்க கண்ணு.''

எதை வம்பளக்கலாம், யார் வாயைக் கிண்டிப் பார்க்கலாம் என மூக்கின் நுனி துடிக்க அலையும் கரோலினுக்குள்ளும் கனிவு புதைந்துத்தான் இருக்கின்றது. ஊர்மிளாவின் கதறலுக்கு முன்னால் பொய்ரெட் சொன்ன உண்மை உண்டாக்கியிருக்க வேண்டிய கிளர்ச்சி கூட அமுங்கியே தான் போயிற்று.

தற்சமயம் நிமிர்ந்து உட்கார்ந்துக் கொண்ட ஊர்மிளா கண்களை அழுந்தத் துடைத்தெறிந்தாள். ''ஸாரி. அசிங்கப்படுத்திட்டேன்.''

''சேச்சே. அப்படி கிடையாதம்மா'' என்றார் பொய்ரெட் கனிவாய். ''போன வாரம் நீ சுமந்திருக்கவல்ல மனச்சுமைகளை எங்க எல்லாராலும் உணர முடியுது.''

''அது ஒரு சுமக்கவொண்ணா சுமையா உனக்கு இருந்திருக்கணும்''

என்றேன் நான்.

''நீங்க இப்ப சொன்ன சமாச்சாரத்தைப் பற்றி...'' என்ற ஊர்மிளா, ''உங்களுக்கெப்படி இது தெரியும்?'' என்றாள். ''பேடன் சொன்னாரா?''

பொய்ரெட் மறுப்பாய் தலையசைத்தார்.

''என்னை எது இன்னிக்கு இங்கே கொண்டு வந்து தள்ளியிருக்குனு தெரியுமா?'' என தொடர்ந்த அவள், ''இது —'' என்றாள்.

கசங்கியிருந்த ஒரு செய்தித்தாளின் நறுக்கினை அவள் வைத்திருந்தாள். பொய்ரெட் பேப்பருக்குக் கொடுத்திருந்த அந்தப் பத்தி எனக்கு நினைவுக்கு வந்தது.

''இது, ரால்ஃபைக் கைது பண்ணியாச்சுனு சொல்லுது. ஆக இனி எல்லாமே வீண். மேற்கொண்டு எதையும் நான் மூடி மறைச்சு ஒரு பிரயோஜனமும் இல்லே.''

''செய்தித்தாள்ல வரும் எல்லாமும் எப்பவும் உண்மை கிடையாது, மேடம்'' என கள்ளப்பார்வை பார்த்தபடி முணுமுணுப்பாய் சொன்னார் பொய்ரெட். ''எப்படியோ போகட்டும்... இப்ப நீங்க எல்லாத்தையும் அழகா விரிச்சு எங்களுக்கு முன்னாடி போட்டுடுவீங்கனு நினைக்கிறேன். என்ன எப்படி நடந்தாலும், நமக்குத் தேவை உண்மை தானே...

இப்போது அவரை சந்தேகமாய் பார்த்தபடி தயங்கினாள் ஊர்மிளா.

''நீ என்னை நம்பலே'' என்றார் பொய்ரெட் நிதானமாய். ''ஆயினும் இத்தனை சிரமப்பட்டு என்னை நீ பார்ப்பதற்காக வந்திருக்கே, ம்? ஏன்?''

''ஏன்னா இதை ரால்ஃப் பேடன் செஞ்சிருப்பார்னு நான் நம்பலே'' என்றாள் அவள் தணிந்த குரலில். ''மேலும் நீங்க படுபுத்திசாலி என்பது என் கணிப்பு... அதனால உண்மையைக் கண்டுபிடிச்சுடுவீங்க என்பது என் நம்பிக்கை. மேலும் —''

''ம்?''

''நீங்க கனிவு நிறைந்தவர் என்பது என் எண்ணம்.

இதற்கு பலமுறை ஒப்புதலாய் தலையசைத்தார் பொய்ரெட். ''ரொம்ப தேங்க்ஸ் மேடம், இதுக்கு ரொம்ப தேங்க்ஸ். என்னைப் பொறுத்தவரைக்கும் உங்க வீட்டுக்காரர் இந்தக் கொலையை

செய்யலை என்பது தான் என் கணிப்பும் – ஆனா நடக்கும் சங்கதிகள் எல்லாம் அவருக்கு எதிரா இல்லே நெருக்குது. அவரை நான் காப்பாத்தணும்னா – எதெல்லாம் எனக்கு ஒண்ணு விடாம தெரிய வரணுமோ அது அத்தனையும் எனக்குத் தெரிய வந்தாகணும் – அப்படி சொல்லும் தகவல்கள் கேஸை இன்னும் அவருக்கு எதிரா ஆக்கிப் போடும் சாத்தியக்கூறு இருந்தாலும் கூட!''

''எவ்ளோ நல்லா நீங்க புரிஞ்சுக்கிறீங்க'' கனிவாய் சொன்னாள் அவள்.

அங்கிருந்த கை வைத்த நாற்காலியொன்றில் வாட்டமாய் உட்கார்ந்தபடி, ''என்னை நீங்க வெளியே போகச் சொல்ல மாட்டீங்கனு நினைக்கிறேன்'' என்றாள் கரோலின். ''எனக்கென்ன தெரிஞ்சாகணும்னு சொல்லிடறேன்'' என தொடர்ந்த அவள், ''எதுக்காக இந்தப் பொண்ணு ஒரு சமையக்கார பொண்ணா இத்தனை நாளும் மாறுவேடம் போட்டுக்கிட்டிருந்தா?'' என கேட்டாள்.

''மாறுவேடம்?'' – நான் கேட்டேன்.

''அதைத்தானேடா நான் சொன்னேன். எதுக்காக அப்படி செஞ்சேம்மா நீ?''

''வாழ'' என வறட்சியாய் சொன்னாள் அவள்.

இதற்கு மேல் ஊக்கப்படுத்தப்பட்டதன் விளைவாக அவளுடைய கதையை அவள் தொடர்ந்தாள்... அதை இங்கு நான் என்னுடைய வார்த்தைகளில் தருகிறேன்.

ஊர்மிளா போர்ன் ஏழு பேர் நிறைந்த குடும்பத்தில் ஒருத்தி என தெரிகின்றது. தரித்திரம் கூத்தாடிய ஓர் ஐரீஷ் குடும்பமது. ஏழு பேரில் ஏறத்தாழ அத்தனை பெண் குழந்தைகளுமே அவரவர் வாழ்க்கையை அவரவர்களே பார்த்துக் கொள்ளும்படி சொந்தக் காலில் சமுதாயத்தில் இறங்கி விட வேண்டிய நிலையில் முடிந்தது, அவர்களது ஏழைமை. ஊர்மிளாவின் முதல் அக்கா கேப்டன் ஃபாலியட்டை மணமுடித்துக் கொண்டவள். இந்தப் பெண்ணைத் தான் நான் ஞாயிறன்று பார்த்து விட்டு திரும்பியது... அப்போது நேர்ந்த படபடப்பின் காரணம் இப்போது விளங்கியது. தானாகவே வாழ்க்கையை அமைத்துக் கொள்ள துணிந்த இப்பெண் – நர்ஸரியிலோ, காப்பகத்திலோ போய் ஆதரவற்றவர்களைக் கவனித்துக் கொள்ளும் வழக்கமான

அடைக்கலத்தைத் தவிர்த்து விட்டு – சமையல் பொறுப்பினை ஏற்றுக் கொண்டாள். தன்னை ஒரு 'சமையல்கூடத் தலைவி' என ஆக்கிக் கொள்ள உழைத்திருக்கிறாள். ஃபெர்ன்லி பார்க்கில் 'இவள் ஒரு தனிமைப் பேர்வழி' என்ற பட்டத்தை சம்பாதிக்கும்படி இவள் தனித்தேயிருந்திருந்தாலும், வேலையைப் பொறுத்தமட்டில், ஜெயித் திருக்கிறாள் – திறமை மேலும் திண்மை.

''அந்த வேலையை நான் ருசித்தேன்'' என்றாள் அவள். ''எனக்கே எனக்குனு இதுல நிறைய நேரம் கிடைச்சது.''

இதற்கு பிறகு தான் ரால்ஃப் பேடனைச் சந்திக்கும்படி ஆகியிருக் கிறது... இது காதலாய் பூத்து ரகசியத் திருமணமாய் வளர்ந்துள்ளது. இதற்கு, ஊர்மிளாவின் இணக்கத்துக்கு எதிராகத்தான் பேடன் வற்புறுத்தியிருக்கிறான். பைசா கையிலில்லாத ஒரு பெண்ணைப் போய் தான் மணப்பதை அவனுடைய வளர்ப்புத் தந்தை அனுமதிக்க மாட்டார் என்றிருக்கிறான் அவன். காதும் காதும் வைத்தாற்போல் மணப்பது தான் சரியென்றும் பிறகு சமய சந்தர்ப்பம் சாதகமாய் வாய்க்கும் ஒரு நன்னாளில் போட்டு உடைத்து விடலாம் என்பதும் அவனது வார்த்தைகள்.

இப்படியாக ஒருவழியாய் ஏற்பாடுகள் முடிந்து விட ஊர்மிளா போர்ன் ஊர்மிளா பேடனானாள். தனது கடனெல்லாம் அடைத்து முடித்த பிறகு, தனக்கென ஒரு வேலையும் கிடைத்த பிறகு, அப்போது தனது சொந்தக்காலில் நிற்கும் யோகமும் ஒரு நாள் வருமே... அன்றைக்கு நடந்த அத்தனையையும் உடைக்கலாம் என்று அடித்து சொல்லியிருக்கிறான் அவன்.

இத்திருமணம் பற்றி ஏதுமறியாத தனது தந்தையைத் தன்னுடைய அனைத்துக் கடனையும் அடைத்து உதவிடுமாறு நச்சரித்து எப்படி யாவது அனைத்துக் கடன் தொல்லைகளிலிருந்தும் வெளி வந்து தனியாளாய் புது வாழ்வு தொடங்கி விடலாம் என்பது பேடனுடைய நம்பிக்கை. ஆனால், எத்தனை தொகை கடனுள்ளது என்று பேடன் சொன்ன தொகையே உடனடியாய் மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டைப் புயலென எழச்செய்து விட எந்த உதவியும் கிடையாது என்று சொல்லி சல்லிக்காசுக்குக் கூட மறுத்திருக்கிறார் அவர். சில மாதங்கள் கடந்திருக் கின்றன... மறுபடியும் ஃபெர்ன்லி பார்க்குக்கு வருகிறான் பேடன்.

பழைய கதையை மீண்டும் கிளறவில்லை மிஸ்டர் ரோஜர். இந்தப்பயல் ஃப்ளோராவை மணக்க வேண்டும் என்று அவருக்குள்ளிருந்த அவாவை மட்டுமே தூக்கிப் பிடித்திருக்கிறார்.

இந்தக் கட்டத்தில்தான் ரால்ஃப் பேடனுக்குள்ளிருந்த பலஹீனம் தலைதூக்கியுள்ளது. அவனது வழக்கம்போல், உடனடியாக, சுலபமாக கிடைக்கவல்ல தீர்வினைக் கையிலெடுத்து விடுகின்றான். எனக்குத் தெரிந்தமட்டில் ஃப்ளோராவும் சரி... அல்லது பேடனும் சரி... இருவருமே அவர்களுக்குள் காதல் கீதலெல்லாம் கிடையாது என கதறவில்லை. இருபக்கமும், இது, ஒரு பிஸினஸ் போலத்தான் கையாளப்பட்டுள்ளது. ஒட்டுறவற்று. வந்து சேரவல்ல சுதந்திரம், பணம் மற்றும் வளமான எதிர்காலத்துக்காக ஃப்ளோரா 'ஒப்புக் கொண்டாள்'; பேடனும், முக்கியமாய், பணத்துக்காக, கிடைத்த வாய்ப்பினை அப்படியே அபகரித்துத் தக்க வைத்துக் கொண்டான். அவன் கடன்கள் அடையும்... புது வெள்ளைத்தாளாய் அவன் வாழ்க்கையை எழுத ஆரம்பிக்கலாம். எல்லாம் கைகூடியதும், கொஞ்சங்காலமானதும் ஓசைப்படாமல் இருவருமே நிச்சய தார்த்தத்தை உடைத்துப் போட்டு விடுவார்கள். இரு இளைஞர்களுமே நிச்சயதார்த்தத்தை முடிந்த அளவுக்கு அப்போதைக்கு ரகசியமாக வைத்தே தீர வேண்டும் என்றிருந்திருக்கிறார்கள். அதிலும், இந்த பேடன், இதனை எப்படியாவது ஊர்மிளாவின் கண்களிலிருந்து மறைத்தே தீர வேண்டும் என்று தவித்திருக்கிறான். அவளுடைய ஆளுமையான மற்றும் தீர்மானமான குணாதிசயம் இதனை ஏற்றே கொள்ளாது என்பது அவனுக்கு நன்கு தெரியும்.

பிறகு வந்தது, உச்சகட்டம். எப்போதுமே தனது கை ஓங்கியேயிருக்க வேண்டும் என கருதும் ரோஜர் ஆக்ராய்டு திருமண நிச்சய தாம்பூலத்தைப் பொதுவாய் அனைவரும் அறிய போட்டுடைக்க முன் வருகின்றார். இப்படிச் செய்யப் போவதைப் பற்றி பேடனிடம் ஒரு வார்த்தை போடாத ரோஜர், ஃப்ளோராவிடம் மட்டும் தெரிவித் திருக்கிறார். பேடனின் முந்தைய திருமணப்பின்னணி பற்றி தெரியாத ஃப்ளோரா இதற்கு வேறெந்த வகையிலும் எதிர்ப்பு எழுப்பவில்லை. இப்படித்தான், ஊர்மிளாவின் தலைமீது, அறிவிக்கப்படும் சேதி பேரிடியாய் இறங்குகின்றது. அவளது அழைப்புக்கிணங்கி டவுனி

லிருந்து ஓடோடி வந்திருக்கிறான் பயல். மரக்காட்டுக்குள் இருவரும் சந்திக்க, அந்த உரையாடலின் ஒரு பகுதிதான் என்னுடைய சகோதரியால் கேட்கப்பட்டுள்ளது. ரால்ஃப், இன்னும் கொஞ்ச நாளைக்கு வாயைப் பொத்திக் கொண்டிருக்குமாறு பெண்ணைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்... இந்த ரகசியம் இனி தொடரயியலாது என அவள் கத்தியிருக்க வேண்டும்... நேராய் போய் மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டிடம் போட்டுடைக்கப் போவதாய் அவள் எகிற, கணவனும் மனைவியும் அமிலங்களாய் மாறியிருக்க வேண்டும்.

எதிலும் நேர்கொண்ட பார்வையுடைய ஊர்மிளா அன்று மதியமே மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டுடன் ஒரு சந்திப்புக்கு நேரங்கேட்டு வாங்கி உண்மையை உடைத்திருக்கின்றாள். புயலாய் இருந்திருக்கிறது இவர்களுடைய சந்திப்பு – ஒருவேளை தனக்குள் ஏற்கெனவே இருந்த குழப்பங்களில் ரோஜர் மூழ்காமலிருந்திருந்தால் இந்த சந்திப்பு இன்னும் சூறாவளியாய் கூட ஆகியிருக்கும். எப்படியோ... சந்திப்பும் உரையாடலும் சுகமாய் அமையவில்லை. அவரை ஏமாற்றி செய்யப் பட்ட எதையும் அத்தனை சுலபமாய் மன்னித்து விடும் பரோபகாரி கிடையாது, இந்த ரோஜர் ஆக்ராய்டு. ரால்ஃப் மீது தான் அவருடைய கடுங்கோபம் மையம் கொண்டிருந்தாலும் இந்தப் பொண்ணும் உள்ளே புகுந்து இவள் பங்குக்கு சொத்துரிமை பற்றி பேசிவிட, ஆக சொத்துக்காகத்தான் வாளிப்பான பணக்கார வாலிபனை மடக்கிப் போட்டு விட்டாய் என எகிறியிருக்கிறார் அவர். மறக்கவோ, மன்னிக்கவோ முடியாத கடுஞ்சொற்கள் இருமருங்கிலிருந்தும் வீசப்பட்டுள்ளன.

அன்று மாலையே, சின்னத் தோட்டத்து அறையில், பேடனைச் சந்தித்திருக்கிறாள் ஊர்மிளா... இதனை செய்ய அவள் வீட்டின் பக்கவாட்டு வழி மூலமாக போயிருக்கிறாள். இரண்டு பேரும் வார்த்தைகளால் சரமாரியாக அடித்துக் கொண்டுள்ளனர். தக்க நேரம் அமையாதபோது உண்மையை உடைத்து விட்டதால் தன்னுடைய எதிர்காலத்தின் மீதே சமாதி கட்டி விட்டதாய் கதறியிருக்கின்றான் ரால்ஃப். ரெட்டை வேடம் போட்டு பலதாரத்துக்குள் நுழைய நினைத்து விட்டதாய் அவனை வாட்டியிருக்கிறாள் இவள்.

கடைசியாய் பிரிந்துள்ளனர். இது நடந்த அரை மணி நேரத்துக்கு

அப்புறமாய் தான் ரோஜரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த இரவிலிருந்து, பேடன் பற்றி, ஊர்மிளா, எவ்வித தகவலையும் கேட்கவுமில்லை, அவனைப் பார்க்கவுமில்லை.

இவ்விதமாய் முழு கதையும் தானாக விரிந்து எங்கள் முன்னால் பரவியதும் அது தரவல்ல உண்மைகள் பற்றி கதிகலங்கினேன் நான். உயிருடனிருந்திருந்தால் முதல் வேலையாய் உயிலை மாற்றி விடுவது தான் தனது தலையாய வேலையாய் ரோஜர் ஆக்ராய்டு செய்திருப்பார்– எனக்கு அவரை நன்றாகவே தெரியும். ஆனால் அப்படியேதும் நடந்து இவர்களுக்கு வரக்கூடிய சொத்துக்கள் இல்லாமல் ஆகிவிடக்கூடாது. இவர்களிருவருக்குமே ரோஜர் ஓர் இடையூறு என்றோர் இக்கட்டில் நிகழ்ந்துள்ளது ரோஜரின் கொலை.

என் சிந்தனை தடைப்பட்டது. பேசிக்கொண்டிருந்தது, பொய்ரெட். அவருடைய குரலின் கனத்தை வைத்து அவருக்கும் வெளியாகியுள்ள இப்புதுக்கதை விளைவிக்கவல்ல பாதகத் திருப்பங்கள் புரிந்துள்ளது என்றே பட்டது.

''மேடம்... நான் உங்களை ஒரு கேள்வி கேட்க வேண்டியுள்ளது. அதுக்கு நீங்க முழு உண்மையா பதில் தரணும். ஏன்னா, அதுல தான் வழக்கின் முழு கனமும் அமர்ந்துள்ளது. ம், சொல்லுங்க... நீங்க மிஸ்டர் பேடன்கிட்டேயிருந்து விடை பெற்று தோட்டத்து சின்ன அறையிலிருந்து கிளம்பியபோது மணி எத்தனை? இப்ப கொஞ்ச கால அவகாசம் கூட நீங்க எடுத்துக்கலாம். துல்லியமான பதில் தேவை.''

பாதிச்சிரிப்பை உதிர்த்த அந்தப் பெண், ''இதே கேள்வி மேலே நான் மறுபடி மறுபடி மூளையைப் போட்டுப் பிசைஞ்சு யோசிச்சிருக்க மாட்டேன்னா நீங்க நினைக்கிறீங்க? அவரை நான் பார்க்க வெளியே போனபோது, மணி, ஒன்பதரையை அப்பத்தான் தாண்டியிருந்தது. மேஜர் ப்ளண்ட் மேலும் கீழுமா டெரஸ்லேயே நடந்துக்கிட்டிருந்தார்; ஆகவே அவரை தவிர்க்க நான் சுற்றிவர போய் புதருக்குள் நுழைஞ்சு வழி பண்ணிக்க வேண்டியதா ஆச்சு. ரெண்டு நிமிஷத்துல நான் சின்ன அறைக்குப் போயிட்டேன். எனக்காக அங்கே ரால்ஃப் காத்திருந்தார். நான் அவர்கூட அதிகபட்சம் பத்து நிமிஷம் தானிருந்திருக்கணும் – ஏன்னா, நான் வீடு திரும்பியபோது மணி ஒன்பதே முக்கால்.''

அன்று விடாது இவள் கேட்ட கேள்வியின் முக்கியத்துவத்தை

இப்போது நான் உணர்ந்தேன். ஒன்பதே முக்காலுக்குள் மிஸ்டர் ஆக்ராய்டு கொலையாகியிருக்க வேண்டும்... அதற்கு பிறகு அல்ல என இவள் துடித்ததன் அர்த்தம் விளங்கியது.

இதே சிந்தனையின் பிரதிபலிப்பினைப் பொய்ரெட்டின் அடுத்த கேள்வியில் நான் கண்டேன்: ''யார் அந்த சின்ன தோட்டத்து அறையை விட்டு முதல்ல வெளியேறியது?''

''நான்.''

''ரால்ஃப் பேடனை அப்படியே அதே அறையிலேயே விட்டுட்டா?''

''யெஸ். ஆ-னா, ஆ-னா— நீங்க என்ன நினைக்கிறீங்க?''

''மேடம், நான் என்ன நினைக்கிறேன் என்பதல்ல இப்போ நமக்குத் தேவை. நீங்க வீட்டுக்குத் திரும்பினதும் செஞ்சது என்ன?''

''நான் என் ரூம் வரைக்கும் போயிட்டேன்.''

''அப்புறம் அங்கேயே எவ்ளோ நேரமிருந்தீங்க?''

''பத்து மணி வரைக்கும் இருக்கலாம்.''

''இதை நிரூபிக்க யாராவது இருக்காங்களா?''

''நிரூபணம்? நான் என்னோட அறையிலேயே இருந்ததுக்கா? ஓ, நோ. ஆனா சத்யமா சொல்றேன்— ஓ, ஓ! யார் வேணும்னாலும் என்ன வேணும்னாலும் சொல்வாங்க. அ-தா-வ-து—''

அவளுடைய கண்களில் கவிழ்ந்திறங்கிய கலவரக்கிலியை நான் படித்தேன்.

அவளுக்காக பொய்ரெட் வாக்கியத்தை முடித்துத் தந்தார்: ''—அதாவது, ஜன்னல் வழியா நுழைஞ்சு உள்ளே குதிச்சு ஆக்ராய்டைக் குத்தியது நீங்க தான்னு, ஆங்? யெஸ் – உலகம் ஜஸ்ட் இப்படி நினைக்க வாய்ப்பிருக்கு.''

''ஒரு வடிகட்டின முட்டாளைத் தவிர வேற ஒருத்தன் அப்படி நினைக்க முடியாது'' என்று மரியாதையற்று பட்டென்று சொல்லி விட்டாள் கரோலின். ''நீ ஒருத்தி நொய் நொய்னு அழுதுக்கிட்டு. இல்லேனா, இல்லேனு சொல்லிட்டுப் போவியா!'' என்று விட்டு அவளுடைய தோள்களை ஆதரவாய் தட்டிக் கொடுத்தாள் என் சகோதரி.

ஊர்மிளா அவளது கரங்களுக்குள் தன் முகத்தை மறைத்து அமர்ந்தாள். ''கொடூரம்'' என முணுமுணுத்தாள் அவள். ''ஹாரிபிள்.''

நட்புறவாய் அவளை ஓர் உலுக்கு உலுக்கினாள் கரோலின். ''கவலைப்படாதேங்கிறேன்! அப்படிதான் நடந்ததுனு பொய்ரெட் நினைக்கவேயில்லை, விளங்குதா? உன் புருஷன்காரனைப் பொறுத்தவரைக்கும் அவனும் இதுல இருக்க மாட்டான்னு தான் என்னோட கணிப்பு. யெஸ். பொம்பளைப்பய இந்த நேரத்துலா ஓடியொளிஞ்சுக்கிட்டு உன்னை அல்லாட விடணும்?''

ஆனால் ஊர்மிளா சக்தியாய் தலையை மறுத்து அசைத்தாள். ''ஓ, நோ. அப்படி கிடையாது. ரால்ஃப் அவரைக் காப்பாத்திப்பதற்காக ஓடியிருக்கவே மாட்டார். இப்ப எனக்கு எல்லாம் தெரியுது. அவரோட வளர்ப்பு தந்தை மரணமான சேதியை அவர் கேட்ட பொழுதுல, அப்படி அவரைக் கொன்னது நான்தான்னு அவர் நினைச்சிருக்கணும்.''

''அப்படியெல்லாம் எதையும் அவனுக்கு நினைக்கத் தெரியாது'' என்றாள் கரோலின்.

''நான் அவர்கிட்டே அன்னிக்கு ராத்திரி அத்தனை கொடூரமானவளா நடந்துக்கிட்டேன். கடுமையாவும் கசப்பாவும். அவர் என்ன சொல்ல வந்தார்னு நான் கேட்க முனையவேயில்லே – அவர் என்னை மனசார சுமக்கிறார்னு அவர் சொல்ல வந்ததுக்கு நான் அனுமதி தரவேயில்லை. நான் அங்கே நின்னுக்கிட்டிருந்தேன் – வரிசையா திட்டித் தீர்த்தேன். எத்தனை முடியுமோ அத்தனை அளவுக்கு அவரைக் காயப்படுத்திடணும் என்பது தான் என் கொள்கையா இருந்தது.''

''அதெல்லாம் அவனை ஒண்ணும் காயப்படுத்தியிருக்காது'' என்றாள் கரோலின். ''ஓர் ஆள்கிட்டே நீ என்னத்தையெல்லாம் பேசினே என்பது பற்றி எப்பவும் நீ கவலையடையாதே. அவங்களுக்கு நம்ம மேல இருக்கிற நம்பிக்கையில, நாம நிஜமா அப்படி நினைச்சு சொல்லவேயில்லைனு தான் எடுத்துப்பாங்க.''

ஊர்மிளா கையைப் பிசைந்தும் பிரித்துமாய் தொடர்ந்துக் கொண்டிருந்தாள்: ''கொலை கண்டுபிடிக்கப்பட்டு அவர் முன்னுக்கு வராததை எண்ணி நான் ரொம்பவும் அதிர்ச்சியானேன். ஒரு கணம் நானும் கூட நினைச்சு பார்த்தேன்... ஆனா அது அவராயிருக்காது என்பது மனசுக்குள்ளே முடிவானதும், என்னை சந்தேகப் பட்டுட்டார்னு தான் ஆகியது. ஆனா எப்படியாவதும் முன்வந்து அவரே அவரோட நிலையை எடுத்து வெச்சுடணும்னு தான் நான் தினம்தினம்

பிரார்த்தனை பண்ணிக்கிட்டிருக்கேன். அவருக்கு டாக்டர் ஷெப்பர்ட் மேல தனி ப்ரீதியுண்டு... அதனால டாக்டருக்கு நிச்சயமா அவர் எங்கே பதுங்கியிருக்கார் என்பது தெரியும்னு கூட நான் ஊகிச்சதுண்டு.

''எனக்கா?'' என நான் வியக்க, ''இவனுக்கு எதுக்கு அந்தப் பயலோட பதுங்குமிடம் தெரியணும்?'' என்றாள் கரோலின்.

''சொல்லத் தெரியலே'' என்ற அவள், ''பேடன், டாக்டர் ஷெப்பர்டை ரொம்ப நெருக்கமானவரா கருதினார்... அதனால கிங்ஸ் அப்பாட்ல அவரோட சிறந்த நண்பரா நான் டாக்டரைத்தான் எடுத்துக்கிட்டேன்'' என்றாள்.

''மை டியர்'' என்ற நான், ''இந்த நிமிஷத்துல ரால்ஃப் பேடன் எங்கேயிருக்கான்னு எனக்குத் துளி தகவல் தெரியாது'' என்றேன்.

''இது நிஜந்தான்'' என்றார் பொய்ரெட்.

''ஆனா—'' என்ற ஊர்மிளா பேப்பர் நறுக்கினை உயரத்தூக்கிக் காட்டினாள்.

''ஆஹ்! அதுவா!'' என்ற பொய்ரெட், ''அது ஏதோ தப்பு செய்திம்மா'' என்றார். ''இந்த நொடி வரையில் பேடன் கைது பண்ணப்படவில்லை.''

''அப்போ—அப்போ—''

பொய்ரெட் வேகமாய் சொன்னார்: ''எனக்கு இன்னொரு விஷயம் அவசியமா தெரிஞ்சாகணும். கேப்டன் ரால்ஃப் அணிவது ஷூவா அல்லது பூட்ஸா?''

ஊர்மிளா மறுத்துத் தலையசைத்தாள். ''நினைவில்லே.''

''ப்ச்! உங்களுக்கு தெரிய வாய்ப்பு கம்மிதான்'' என்ற பொய்ரெட் சொன்னார்: ''இப்ப மேடம்... அழுகை கிடையாது. கொடூரம்னெல்லாம் சொன்னீங்களே... அந்த எதுவும் கிடையாது. உற்சாகமாயிருங்க. முழு நம்பிக்கை வையுங்க – ஹெர்குல் பொய்ரெட் மேல.''

அத்தியாயம் 23

பொய்ரெட் ஏற்பாடு செய்த சின்ன அளவளாவல்

''இப்ப... என்றெழுந்த கரோலின், ''இந்தக் கொழந்தே என்னோட சேர்ந்து மாடிக்கு வரப்போறா. தூங்க. கவலைப்படாதே ஊர்மிளா. உனக்கு என்னெல்லாம் பண்ண முடியுமோ அனைத்தையும் மிஸ்டர் பொய்ரெட் செய்வார் – இதுல நம்பிக்கை வை.

''நான் திரும்பி ஃபெர்ன்லிக்கே போயிடணும்'' – நிச்சயமற்று சொன்னாள் அவள்.

அவளுடைய பிடிவாதத்தை ''நான்ஸென்ஸ்'' என ஸ்திரமாய் மறுத்தாள் கரோலின். ''இப்போதைக்கு நீ என் கட்டுப்பாட்டுல இருக்கே. என்னவானாலும் தற்போதைக்கு நீ இங்கேதான் தங்கப் போறே. என்ன மிஸ்டர் பொய்ரெட்?''

''இது தான் சிறந்த திட்டமா இருக்க முடியும்'' – ஒப்புக்கொண்டார் குள்ள பெல்ஜியன். ''இன்னிக்கு ராத்திரி நான் ஏற்பாடு பண்ணி யிருக்கும் சின்ன அளவளாவலுக்கு மேடம் ஊர்மிளா வரணும். ஒன்பது மணிக்கு. என் வீட்டுல. நீங்க இருக்கணும் என்பது தான் இதுல முக்கியமே.''

கரோலின், ஊர்மிளாவோடு புறப்பட்டு அடுத்த அறைக்குப் போய் விட்டாள். கதவு அவ்விருவருக்கும் பின்னால் அறைந்து மூடப்பட்டது. பொய்ரெட் மறுபடியும் ஓர் இருக்கையில் விழுந்தார்.

''விஷயங்க அது அதுவா தளந்தொட ஆரம்பிக்குது'' என்றார்.

''ஆனா எல்லாமும் ரால்ஃப் பேடனுக்கு எதிரா மேலும் இருட்டை யல்லவா எடுத்து வீசுது'' – இருளடைந்து சொன்னேன் நான்.

பொய்ரெட் ஏற்றுக்கொண்டார். ''யெஸ். அப்படித்தான் போகுது. ஆனா இப்படித்தான் இருக்கும்னு முன்னமேயே எதிர்பார்த்திருக்கணும், இல்லையா?''

இக்குறிப்பால் சற்றே புதிர்ப் போடப்பட்டவனாய் ஆன நான் அவரை முறைத்தேன். அவர் நாற்காலியில் சாய்ந்துக் கொண்டு, இரு கைகளின் விரல் நுனிகளும் ஒன்றுக்கொன்று தொட்டுத் தாளமிடும் படி, அரைக்கண் மூடிய நிலையிலிருந்தார். திடுமென பெருமூச் செறிந்து எழுந்த அவர் மறுப்பாய் தலையசைத்துக் கொண்டார்.

''என்னது அது?'' – நான் கேட்டேன்.

''இப்படித்தான்... என் ஆத்ம நண்பனான ஹேஸ்டிங்ஸின் நினைப்பு என்னை அடிக்கடி இம்சைப்படுத்துவதுண்டு. அர்ஜெண்டைனில் இருப்பதா நான் சொல்லலே – அந்த ஃபிரண்ட். எப்பல்லாம் எனக்கு பெரிய கேஸ் வருமோ அப்பல்லாம் அவன் எனக்கு அருகில் பக்கபலமா இருப்பான். மேலும் அவன் எனக்கு உதவியிருக்கான் – யெஸ், பல சந்தர்ப்பங்கள்ல அவன் உதவியிருக்கான். அவனையறியாமலேயே உண்மையை அவன் கண்டுபிடிச்சு அதுலேயே விழுந்தும் கிடப்பான்! ஆனா அப்படி உண்மையைக் கண்டுபிடிச்சுட்டோம் என்பது தான் அவனுக்குத் தெரியாது! இன்னும் சில சந்தர்ப்பங்கள்ல வழக்கு சம்பந்தமா முட்டாள்தனமா ஏதாவது ஒரு வார்த்தையை... அல்லது குறிப்பை விடுவான் அவன். அந்தக்குறிப்பு எனக்கு உண்மையின் முகவரியை அள்ளித் தந்ததுண்டு! ம், மேலும், எந்த வழக்கெல்லாம் அவனுக்கு மிக ஈடுபாடானதா படுதோ அது பற்றிய இண்ட்ரஸ்டிங் குறிப்பெழுதி வைச்சிக்குவான் அவன்! ஓ, ஹேஸ்டிங்ஸ்!''

இப்போது நான் சற்றே தர்மசங்கடமான இருமலை வெளியிட்டேன். ''இதைப் பொறுத்தவரைக்கும் —'' என தொடங்கிய நான் அப்படியே நிறுத்தியும் விட்டேன்.

பொய்ரெட் அவருடைய இருக்கையில் நெட்டைக் குத்தலாய் உட்கார்ந்தார். அவரது கண்கள் பளபளத்தன. ''இதைப் பொறுத்த வரைக்கும் —? ம், கம் ஆன்... என்ன சொல்ல வந்தீங்க?''

''சொல்லப்போனா கேப்டன் ஹேஸ்டிங்ஸ் பதிந்து பிரசுரித்துள்ள சில வழக்குகளை நானே கூட படிச்சதுண்டு. ஏன் நாம கூட இப்படிப்பட்ட ஒரு விசித்திரமான வழக்கு எதுலேயாவது நம்முடைய

கைவரிசையைக் காட்டக் கூடாதுனு நான் எண்ணியதுண்டு. அப்படியொரு வித்தியாசமான வாய்ப்பு – இதுல! விட மனசு வரலே எனக்கு!''

மேற்கொண்டு பேச முடியாமல் எனக்கு நானே தடுமாறுவதும் வார்த்தைகள் கோர்வையாகாமல் தொக்கி நிற்பதும் விளங்கியது.

பொய்ரெட் நாற்காலியினின்றும் குதித்தெழுந்தார். என்ன சொல்லப்போகிறாரோ என ஒரு நிமிடம் நான் பின்வாங்கினாலும் அவர் கருணையாகவே நடந்துக் கொண்டார். ''இது மகா ஆச்சரியமானது! ஆக, என்னவெல்லாம் நடந்துக்கிட்டிருக்கு என்பது பற்றிய குறிப்பை நீங்க இந்த கேஸ் நெடுகிலும் பதிஞ்சுக்கிட்டே தான் வரீங்க, இல்லையா?''

நான் ஒப்புதலாய் தலையசைத்தேன்.

''தூள்'' என கதறி விட்டார் பொய்ரெட். ''அவற்றை நான் பார்க்கிறேனே – இதே கணத்துல!''

இப்படி ஒரு திடீர் வேண்டுகோளுக்கு பொருந்துமாறு நானோ என் குறிப்புகளோ தயாராயில்லை. உடனடியாகவே என் மூளையை உலுக்கியெடுத்து சில தகவல்களைத் தேடினேன்.

''அதுல என்னோட பர்ஸனல் கணிப்புகளும் – ஆங்காங்கே – தலைகாட்டுமே—''

''ஓ, எனக்கு விளங்குது. பாதகமில்லே, காட்டட்டுமே! என்னை சில இடங்கள்ல கோமாளியா சித்தரிச்சிருக்கீங்களோ: நோ மேட்டர். இப்படித்தான் ஹேஸ்டிங்ஸும் பண்ணுவான். என் மனம், இந்த சின்னச்சின்ன உலுக்கல்களுக்கெல்லாம் அசையாது.''

இன்னும் சந்தேகம் மாறாது, என்னுடைய டேபிள் மற்றும் அதன் டிராயர்கள் எல்லாவற்றையும் குடைந்தெடுத்து, ஓர் அடுக்கான தாள் கூட்டத்தை அவரிடம் தந்தேன். பிற்காலத்தில் இதனை ஒரு புத்தகமாகக் கொண்டு வரலாம் என்ற கனவிருந்ததால் நான் அத்தனை குறிப்புகளையும் அத்தியாயம் வாரியாக பிரித்திருந்தேன். நேற்றிரவு தான் மிஸ் ரஸ்ஸெல் வந்து போனது வரை அத்தனையையும் வரிசைக்கிரமாக்கியிருந்தேன். இதனால், பொய்ரெட்டின் கைகளில் மொத்தம் 20 அத்தியாயங்கள் இருந்தன.

அவரை, அவற்றோடு விட்டு விட்டேன்.

சற்று தொலைவில் முன்பதிவாகியிருந்த ஒரு நோயாளியைப் பார்ப்பதற்காக கிளம்பி விட்ட நான் திரும்பும் போது மணி எட்டு. தட்டு நிறைய சூடான டின்னர் பரிமாறப்பட்டது. ஏழரைக்கே என் அக்காளோடு டின்னரை முடித்துள்ள பொய்ரெட், எனது சின்ன 'தொழிற்பேட்டையில்' போய் உட்கார்ந்துக் கொண்டு அனைத்து அத்தியாயங்களையும் படித்து முடித்துள்ளார்.

''ஆங், ஜேம்ஸ்'' என்ற என் சகோதரி, ''என்னைப் பற்றி அதுல நீ எழுதியதுல ஜாக்கிரதையாதானே இருந்தே?'' என்று கேட்டாள்.

என் முகம் வாடியாது. நான் துளியும் ஜாக்கிரதையாய் இல்லை!

என் உணர்வினைப் படித்த கரோலின், ''அதனால ஒண்ணும் பெரிய பாதகமில்லே'' என்றாள். ''மிஸ்டர் பொய்ரெட்டுக்கு என்னை நல்லா தெரியும். அதனால அதையெல்லாம் எப்படி புரிஞ்சுக்கணும்னு அவருக்குத் தெரியும்.''

நான் எனது ஆய்வகத்துக்குள் போனேன். ஜன்னல் திட்டில் உட்கார்ந்திருந்தார் பொய்ரெட். அவரருகிலிருந்த நாற்காலியில் நான் தந்திருந்த சிதறிய தாள்கள் செவ்வனே அடுக்கப்பட்டிருந்தன. அதன் மீது தனது கையைப்பதித்த அவர், ''நான் உங்களுடைய அடக்கமான பங்களிப்பைப் பாராட்டறேன்'' என்றார்.

''ஓ'' என்றேன் நான், சற்றே பின்னுக்குத் தள்ளப்பட்டவனாய்.

''உங்களுடைய பேசா மவுன குணத்துக்கும்'' என்றார் பிறகு.

''ஓ'' என்றேன் நான் மீண்டும்.

''இப்படி எழுத மாட்டான் ஹேஸ்டிங்ஸ்'' என்றார் பொய்ரெட். ''ஒவ்வொரு பக்கத்திலும் பல 'நான்' இருக்கும்... 'என்' இருக்கும்... 'என்னுடைய, எனது' இதெல்லாமிருக்கும். அவன் என்ன நினைத்தானோ அது தான் – அவன் என்ன செய்தானோ அது தான் அதிகம் பதியப்பட்டிருக்கும். ஆனா நீங்க, வாஹ்... நீங்க, உங்களோட இருப்பையே பின்னுக்குத் திரைக்குப் பின்னால் வெச்சுட்டீங்க. ஓரிரு இடங்கள்ல தான் அது தென்படுது... வீடு பற்றி பேசும்போது! சரிதானே?''

அவருடைய கண்ணடிப்புக்கு முன்னால் நான் குறுகினேன். ''அந்த முழு பங்களிப்பு பற்றியும் உங்க கணிப்பு என்ன?'' என்றேன் நான் சற்றே படபடப்பாய்.

''உங்களுக்கு என்னோட நடுநிலையான கருத்து வேணுமா?''

''யெஸ்.''

''மிகவும் பிரயத்தனப்பட்டு துல்லியமாய் தரப்பட்டுள்ள தகவல்கள்'' என்றார் அவர் கனிவாய். ''இந்தக் கேஸ்ல உங்களுடைய பங்குகள் பற்றி எதையுமே பேசாம நீங்க மவுனமா இருந்த போதிலும், அத்தனை நிஜங்களையும் நீங்க பணிவாய் மற்றும் துல்லியமாய் பதிஞ்சிருக்கீங்க.''

''இது உங்களுக்குப் பிரயோஜனமாயிருந்ததா?''

''யெஸ். இது *போதுமான அளவுக்கு* எனக்கு உதவி புரிஞ்சிருக்குனு கூட சொல்வேன். யெஸ். கம்... நாம நம் வீட்டுக்குக் கிளம்புவோம். அங்கே அளவளாவலுக்கான ஏற்பாடுகளைப் பண்ணணும்.''

கரோலின் ஹாலிலேயே இருந்தாள். எங்களுடன் வர அவளும் அழைக்கப்படுவாள் என்று அவள் எதிர்பார்த்ததாய் பட்டது. பொய்ரெட் சூழ்நிலையை சாதுர்யமாய் கையாண்டு விட்டார்.

''நீங்களும் கூடயிருக்கணும்னு தான் விருப்பம் மேடம்'' என்று வருத்தமாய் சொன்னார் அவர். ''ஆனா இந்த திருப்பத்துல அது புத்திசாலித்தனமா ஆகாது. ஒண்ணு கவனிச்சீங்களா... இந்த இரவு கூட்டப்படும் அத்தனை பேரும் சந்தேகப்பட்டியலில் உள்ளவர்கள். அவங்களுக்குள்ளே நான் கண்டுபிடிக்கணும் – மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டைக் கொன்னது யார்னு.

''இது முடியும்னு நீங்க நெஜமாவே நம்பறீங்களா?'' – நான் நம்பிக்கையற்று கேட்டேன்.

''உங்களுக்கு இல்லேங்கறது தெரியுது'' என்றார் பொய்ரெட் வறட்சியாய். ''ஹெர்குல் பொய்ரெட்டுடைய உண்மையான மதிப்பை இன்னும் நீங்க பாராட்டலேனு தெரியுது.''

இந்தக் கணத்தில் ஊர்மிளா மாடிப்பகுதியிலிருந்து இறங்கி வந்தாள்.

''நீ தயாராயிட்டியா, மை சைல்ட்?'' என்று கேட்டார் பொய்ரெட். ''அதுதான் குட். நாம ரெண்டு பேரும் சேர்ந்தே என் வீட்டுக்குப் போவோம். கரோலின் என்னை நம்புங்க... என்னால எத்தனை ஒத்தாசை பண்ண முடியுமோ அப்படியிருப்பேன் உங்களுக்கு. குட் ஈவினிங்.''

முன்கதவில் ஒட்டிக் கொண்டு எங்களையே பேந்தப்பேந்தப்

பார்க்கும்படி கரோலினை அப்படியே விட்டுவிட்டு நாங்கள் கிளம்பினோம்.

லார்ச்சஸின் வரவேற்பறை தயாராகிக் கொண்டிருந்தது. டேபிளில் பலவகை பானங்களும் க்ளாஸ் கோப்பைகளுமிருந்தன. மற்ற அறைகளிலிருந்து பல நாற்காலிகள் இங்கு வந்து குவிக்கப்பட்டிருந்தன.

இப்படியும் அப்படியுமாக ஓடிக் கொண்டு பொய்ரெட் அனைத்தையும் ஏற்பாடு பண்ணிக் கொண்டிருந்தார். அங்கிருந்த விளக்கின் இடத்தை சற்று மாற்றியமைத்து, தரைவிரிப்பின் மடிப்பினை நேர்நெய்து அழகாக்கி! குறிப்பாய் அந்த விளக்கின் மீது அவர் கவனம் அதிகமாய் வைத்து இப்படியப்படி திருகி அதை ஃபோகஸ் பண்ணினார். நாற்காலிகளை சுற்றிலும் நல்ல வெளிச்சம் வரும்படி ஆக்கப்பட்டிருந்த விளக்கொளி, அறையின் எதிர்ப்புறத்தில் – அங்குதான் பொய்ரெட் உட்காரப்போகிறார் என நான் ஊகித் திருந்தேன் – மாலைநேர மந்தாரம்போல ஒளி கம்மியாயிருக்கும்படி அமைக்கப்பட்டிருந்தது.

ஊர்மிளாவும் நானும் இப்படி இயங்கிக் கொண்டிருந்த அவரை கவனித்துக் கொண்டிருந்தோம். தற்சயம் அழைப்பு மணியடித்தது.

''அவங்க வராங்க'' என்றார் பொய்ரெட். ''குட். எல்லாம் தயாராயிருக்கு.''

கதவு திறக்கப்பட ஃபெர்ன்லியில் வந்திருந்த கூட்டம் உள்ளே வந்து தாங்களாக அடுக்கிக் கொண்டது. முன்னால் போன பொய்ரெட் மிஸஸ் ஆக்ராய்டையும் மிஸ் ஃப்ளோராவையும் உபசரித்து வரவேற்றார். ''நீங்க இங்கே வந்திருப்பதற்கு ரொம்ப நன்றி'' என்றார். ''மேஜர் ப்ளண்ட் அண்ட் மிஸ்டர் ரேமண்டுக்கும் தான்.''

வழக்கம்போலவே சுசீலமாயிருந்தார் செகரட்டரி. ''இதெல்லாம் என்ன கூத்து?'' என்றார் அவர் சிரித்தபடி. ''ஏதாவது புது அறிவியல் சார் மெஷின், ஆங்? கண்டுபிடிச்சிருக்கீங்களா? அதை எங்க கழுத்தை சுற்றிக்கட்டி யாரோட இருதயத் துடிப்பு குற்றமுற்ற துடிப்புனு கண்டுபிடிக்கப் போறீங்களா? இப்படியொரு கண்டுபிடிப்பு வந்திருக்கு இல்லே?''

''அதைப்பற்றி நான் படிச்சேன், யெஸ்'' என ஏற்றுக்கொண்டார் பொய்ரெட். ''ஆனா நான் ஒரு பழைய பஞ்சாங்கம். அடிப்படை

வழிமுறைகளைத் தான் நான் கடைபிடிக்கிறேன் – குற்றவாளியை வெளியே கொண்டு வர. மூளையின் சாதுர்யமான சாம்பலநிற க்ரே செல்களை மட்டுமே நம்பி நான் உழைக்கிறேன் – நோ மெஷின். இப்ப நாம ஆரம்பிக்கலாம் – ஆனா அதுக்கு முன்னாடி உங்க எல்லாருக்கும் நான் பண்ண வேண்டிய ஓர் அறிவிப்பு இருக்கு.''

ஊர்மிளாவின் கையைப் பற்றி அவளை முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார். ''இந்தப் பொண்ணுதான் மிஸஸ் ரால்ஃப் பேடன். கடந்த மார்ச்சில் இவ கேப்டன் ரால்ஃபைக் கலியாணம் கட்டியிருக்கா.''

மிஸஸ் ஆக்ராய்டிடமிருந்து ஒரு சிறு கதறல் வெளிப்பட்டது. ''ரால்ஃப்! கலியாணம்! கடந்த மார்ச்! ஓ! என்ன ஒரு முட்டாள்தனம். இவள் எப்படி இப்படி பண்ணலாம்?''

ஊர்மிளாவை இதற்கு முன்னால் பார்த்ததே இல்லை என்பது போல அவளை அப்படி முறைத்தார் மிஸஸ்.

''ஊர்மிளாவோடு கலியாணம்'' என்று மிக ஆச்சரியமாய் குறிப்பிட்டு தொடர்ந்தார் அவர். ''நெஜமா சொல்றேன் மிஸ்டர் பொய்ரெட்... என்னால உங்களை நம்பவே முடியலே.''

இதையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு ஊர்மிளா பேச ஆரம்பித்திருக்க வேண்டும்... ஆனால் ஃப்ளோரா அதற்குள் முந்திக் கொண்டு விட்டாள். சமையக்கலை பெண்ணை நெருங்கிய அவள் தனது கையை அவளது கைக்குள் வளையமிட்டு, ''நாங்க ஆச்சரியமடைவதையெல்லாம் நீ ஒரு பொருட்டா எடுத்துக்கக் கூடாது'' என்றாள். ''எங்களுக்கு இப்படியொரு உறவு பற்றி துளி ஐடியா கிடையாது. நீயும் ரால்ஃபும் உங்க ரகசியத்தை செமத்தியா பொத்தி வெச்சுட்டீங்க. நான் – இதுபற்றி முழு சந்தோஷம் அடையறேன். ''நீங்க ரொம்ப கனிவாயிருக்கீங்க மிஸ், வெகு கனிவா'' என தணிந்த குரலில் குறிப்பிட்டாள் ஊர்மிளா. ''உங்களுக்குக் கோபம் வருதுனா அதுல தவறே கிடையாது – அது சரிதான். ரால்ஃப் படுமோசமா நடந்துக்கிட்டார் – குறிப்பா உங்ககிட்டே.

பிடித்திருந்த கையில் ஆதரவான சில சிறு தட்டுக்களைத் தந்த ஃப்ளோரா, ''அதைப்பத்தியெல்லாம் நீ மனசுல போட்டுக் குழப்பிக்க வேணாம்'' என்றாள். ''ரால்ஃப் செய்வதறியாம மடக்கப்பட்டான். அதனால இருந்த ஒரேயொரு தப்பிப்பைக் கையிலெடுத்துக்கிட்டான்.

நான் அவனிடத்துல இருந்திருந்தா இதையேதான் பண்ணியிருக்கக் கூடும்.''

பொய்ரெட் டேபிளில் சன்னமாய் சில தட்டுக்கள் தட்டி தொண்டையை முக்கியப்படுத்தி செருமிக் காட்டினார்.

''போர்ட் மீட்டிங் தொடங்கியாச்சு'' என்றாள் ஃப்ளோரா. ''நாம மேற்கொண்டு எதுவும் பேசக்கூடாதுனு குறிப்பால உணர்த்திட்டார் மிஸ்டர் பொய்ரெட். ஆனா ஜஸ்ட் ஒண்ணே ஒண்ணை மட்டும் சொல்லிட்டேன். ரால்ஃப் எங்கேயிருக்கான்? யாருக்குத் தெரியலே னாலும் உனக்குத் தெரியணும்.''

''ஆனா எனக்கும் தெரியாதே'' என இயலாமையில் ஏறக்குறைய கதறி விட்டாள் ஊர்மிளா. ''இதுதான் என் பிரச்சினையே. உயிர் பிடுங்கும் பிரச்சினை.''

''அவர் லிவர்பூல்ல இல்ல? பேப்பர்ல அப்படித்தானே போட்டி ருக்கு'' என்றது, ரேமண்ட்.

''அவர் லிவர்பூல்ல இல்லே'' என சுருக்கமாய் சொன்னார் பொய்ரெட்.

''சொல்லப்போனா'' என இடைபுகுந்த நான், ''ஒருத்தருக்கும் அவர் எங்கேயிருக்கார்னு தெரியலே'' என்றேன்.

''ஹெர்குல் பொய்ரெட்டைத் தவிர, ஆங்!'' என்றது, ரேமண்ட்.

இதற்கு மிகவும் கறாராய் எதிராளிக்கு பதில் தந்தார் பொய்ரெட்:

''நான் - எனக்கு எல்லாம் தெரியும். இது நினைவிருக்கட்டும்.

ஜியோஃபெர்ரி ரேமண்ட் புருவங்களை நன்றாய் உயர்த்தினார். ''எல்லாம்?'' என விஸில் தந்தான். ''ஊவ்! என்ன தற்பெருமை!''

''ரால்ஃப் பேடன் எங்கேயிருக்கான்னு உங்களால துல்லியமா ஊகிக்க முடியும்னா சொல்ல வரீங்க'' என்றேன் நான் நம்பிக்கை துளியுமற்று.

''நீங்க இதை ஊகிப்பதுனு சொல்றீங்க. நான் தெரிஞ்சுப்பதுனு சொல்றேன், மை ஃபிரண்ட்.''

''க்ரான்செஸ்டர்ல'' – பதவிசாய் குறிப்பிட்டேன்.

''நோ'' என்றார் பொய்ரெட். *''நாட் இன் க்ரான்செஸ்டர்.''*

இதற்கு மேல் அவர் எதுவும் சொல்லவில்லை. ஆனால் அவரிடமிருந்து விளைந்த ஓர் அதிகார அங்க அசைவு

எங்களனைவரையும் இருக்கைகளை ஆக்கிரமிக்குமாறு செய்தது. எல்லோரும் அமர்ந்துக் கொண்டிருக்கும்போதே கதவு திறக்கப்பட்டு இருவர் உள்ளே வந்து அங்கிருந்த இரு இருக்கைகளில் அமர்ந்துக் கொண்டனர். அவர்கள் பார்க்கரும் ரஸ்ஸெல்லும்.

''எண்ணிக்கை முழுமையாகியிருக்கு'' என்றார் பொய்ரெட். ''அனைவரும் இங்கே இருக்கீங்க.''

அவர் சொன்ன குரலில் ஒரு திருப்தி வளையம் இருந்தது. இப்படிச் சொன்னதில் அறையின் கதவு மூலையில் வந்தமர்ந்தவர்களிடம் ஒருவித இருப்புக் கொள்ளாமை எழுந்தடங்கியதை நான் கவனித்தேன். இந்த அறையை ஒரு பொறி எனத்தான் வர்ணிக்க முடியும் கதவடைக்கப்பட்ட பொறி.

பொய்ரெட் ஒரு பட்டியலை முக்கியத்துவம் தந்து படித்தார். ''மிஸஸ் ஆக்ராய்டு, மிஸ் ஃப்ளோரா, மேஜர் ப்ளண்ட், மிஸ்டர் ஜியோஃபெர்ரி ரேமண்ட், மிஸஸ் ரால்ஃப் பேடன், ஜான் பார்க்கர், எலிஸபெத் ரஸ்ஸெல்.''

அந்தத் தாளை அவர் டேபிளில் அப்படியே வைத்தார்.

''இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?'' – தொடங்கியது, ரேமண்ட்.

''நான் இப்ப படிச்ச பட்டியல்'' என்ற பொய்ரெட், ''என் சந்தேகப் பட்டியல்'' என்றார். ''இங்க கூடியிருக்கும் உங்கள்ல ஒவ்வொருத்தருக்கும் மிஸ்டர் ஆக்ராய்டைக் கொலை பண்ணியிருக்கும் சாத்தியக் கூறு இருக்கு —''

கத்தவல்ல அவருடைய தொண்டைக்கு செமத்தியான வேலை தந்துக் கொண்டு விடுபட்ட அம்பாய் துள்ளியெழுந்தார் மிஸஸ் சிசில். ''இப்படி சொல்வதை நான் கண்டிக்கிறேன்'' என்று கத்தினார். ''இது எனக்குப் பிடிக்கலே. நான் வீட்டுக்குக் கிளம்பறேன்.''

''நான் என்ன சொல்ல விரும்பறேன் என்பதை முழுக்கவும் கேட்டு முடிக்கிற வரைக்கும்'' என்று அதிகாரமாய் குறிப்பிட்ட பொய்ரெட், ''நீங்க இங்கிருந்த போகவே முடியாது, மேடம்'' என்றார் தீர்வாய்.

சில கணங்கள் தாமதித்து விட்டு தொண்டையைச் செருமிக் கொண்டார் அவர்:

''ஆரம்பத்திலிருந்து நான் துவங்கறேன். இந்த கேஸைக் கையிலெடுத்துக்குமாறு மிஸ் ஆக்ராய்டு என்கிட்டே சொன்னவுடனே

நான் குட் டாக்டர் ஷெப்பர்ட் கூட சேர்ந்து ஃபெர்ன்லி பார்க் வரை போயிருந்தேன். நான் அவரோட சேர்ந்து டெரஸ்ல நடந்துக்கிட்டிருந்த போது தான் ஜன்னல் மரச் சட்டத்துல பதிந்திருந்த காலடித்தடங்கள் எனக்குக் காட்டப்பட்டன. அங்கிருந்து இன்ஸ்பெக்டர் ரக்லான் என்னை அழைச்சுக்கிட்டு வீட்டின் முன்னாடியிருக்கும் பாதைக்கு போனார். அங்கிருந்த சின்ன தோட்டத்து அறை என் கவனத்தை ஈர்க்க, அதை நான் அக்கு வேறு அணி வேறா துளாவினேன். எனக்கு அங்கு ரெண்டு முக்கியத்துப்புகள் கிடைத்தன – ஒண்ணு கஞ்சிப்போட்ட ஒரு துண்டுத்துணி... மற்றொன்று வாத்து இறகு. கஞ்சிப்போட்ட துணி உடனடியா வேலைக்காரியொருத்தியின் சீருடையை நினைவு படுத்தியது. வீட்டிலிருப்போரின் பட்டியல் முழுக்கவும் இன்ஸ்பெக்டர் ரக்லானால் எனக்குத் தரப்பட்டபோது, சமையக்காரப் பொண்ணு ஊர்மிளாவுக்கு மட்டுந்தான் கொலை நடந்த நேரத்துல அவ எங்கே யிருந்தா என்பதற்கான நிரூபணம் இல்லை என்பது உடனடியா எனக்குப் புலப்பட்டது. அவளே சொல்லிக்கொள்ளும் கதையின்படி ஒன்பதரையிலிருந்து பத்து வரைக்கும் அவ அவளோட படுக்கை யறையிலே இருந்திருக்கானு தெரியுது... ஆனா அப்படியில்லாம அவ தோட்டக்கார அறையிலேதானிருந்தான்னு நாம எடுத்துக்கிட்டா? அப்படிதான்னா அவ அங்கே யாரையோ சந்திப்பதற்காகத் தான் போயிருக்கா என்பது தெளிவாகுது. இப்ப கவனியுங்க... டாக்டர் ஷெப்பர்டின் கூற்றுப்படி, அன்னிக்கு ராத்திரி வெளியிலிருந்து யாரோ ஓர் அந்நியன் வீட்டுக்குள்ளே வந்திருக்கான் என்பது நமக்குத் தெரியும் கேட்'டருகே டாக்டர் பார்த்த முகந்தெரியாதவன். மேலோட்டமா பார்த்தா அந்த புதிய'வன் தான் தோட்டத்து சின்ன அறையில ஊர்மிளாவை சந்திக்கப் போன ஆசாமி அப்படினு எண்ணம் வரும். அவன் தோட்டத்து அறை வரைக்கும் போனவன் தான் என்பதுல அதிக சந்தேகம் கிடையாது – அந்த வாத்து இறகு அங்கே இருந்ததால. இது உடனே போதை மருந்து எடுத்துக் கொள்பவனைத்தான் எனக்குள்ளே நினைவுபடுத்திச்சு – அட்லாண்டிக் பகுதியில இறகுல போதை மருந்தையெடுத்து மூக்குக்கு அருகே வெச்சு இழுக்கும் பழக்கம் அதிகமுண்டு. வந்த அந்த அந்நியன் அமெரிக்க ஸ்டைல்ல பேசினதா டாக்டர் ஷெப்பர்ட் சொன்னதால என் இந்த ஊகம் செமத்தியா

பொருந்தி நின்னுது.

''ஆனா ஒரு விஷயத்தால நான் நகர முடியாம நின்னுப் போனேன். நேரம் – காலநேரம் – இது சரியா பொருந்தலே. ஊர்மிளா போர்ன் நிச்சயமா ஒன்பதரைக்கு முன்னாடி அந்தச் சின்னத் தோட்டத்து அறைக்குப் போயிருக்கவே முடியாது... ஆனா அந்த அந்நிய ஆளோ ஒன்பது ஐந்துக்கெல்லாம் அந்த அறைக்குள்ளே போயிருக்கணும். அவன் அங்கேயே அப்படியே அரைமணிநேரம் காத்திருந்திருக்கலாம்னு நான் எடுத்துக்கலாம். இப்படி எடுத்துக்க முடியாவிட்டால் ஒரேயொரு மாற்று வழி தானிருக்கு: அங்கே ரெண்டு தனித்தனி சந்திப்புகள் நிகழ்ந்திருக்கு. இந்த ரெண்டாவது எண்ணத்தை நான் கையில எடுத்துக்கிட்டதும் பல நிஜங்கள் தளந்தொட்டன. அன்னிக்குக் காலையில மிஸ் ரஸ்ஸெல் – வீட்டு வேலைக்காரங்களோட நிர்வாகி – டாக்டர் ஷெப்பர்டைப் போய் சந்திச்சிருக்காங்க என்பதையும் அப்ப நிகழ்ந்த உரையாடலின்போது போதை மருந்துக்கு அடிமையானவங்களோட நிவாரணம் பற்றி ரொம்ப ஆர்வமா பேசியிருப்பதும் எனக்குத் தெரிய வந்தது. இதையும் வாத்து இறகையும் இணைச்சுப் பார்த்த நான், ஆக, ஃபெர்ன்லிக்கு அன்னிக்கு ராத்திரி வந்த அந்நியன் மிஸ் ரஸ்ஸெல்லைத்தான் பார்க்க வந்திருக்கணுமே தவிர ஊர்மிளாவை அல்ல என்று நானா முடிவெடுத்துக்கிட்டேன். அப்படினா, மிஸஸ் ஊர்மிளா, யாரோட சந்திப்புக்காக அந்த சின்னத் தோட்டத்து அறைக்குப் போயிருக்கணும்? இந்த சந்தேகத்தோட நான் ரொம்ப நாள் திண்டாடலே. முதல்ல மோதிரத்தைக் கண்டுபிடிச்சேன் – கலியாண மோதிரம், R என்ற எழுத்தோடும் அதுக்குள்ளே ஒரு தேதியோடும். பிறகு, ரால்ஃப் பேடன் ஒன்பது இருபத்தைந்து மணிக்கு வீட்டின் நுழைவுப் பாதை வழியா சின்னத் தோட்டத்து அறை வரைக்கும் வந்திருப்பதைப்பற்றி நான் அறியப்பெற்றேன்; கூடவே அன்னிக்கு மத்தியானம் மரக்காட்டுக்குள்ளே பேடன் நிகழ்த்திய சந்திப்பு, சம்பாஷணை பற்றி அறிய நேர்ந்தது – சந்திப்பு... பேடனுக்கும் இன்னொரு முகந்தெரியா பொண்ணுக்கும். ஸோ, என்னுடைய கண்டுபிடிப்புகள் அத்தனையும் அழகா அடுக்கடுக்கா அமைவதை என்னால பார்க்க முடிந்தது. ஒரு ரகசிய திருமணம், மரணம் சம்பவித்த அன்று அறிவிக்கப்பட்ட நிச்சயதார்த்தம், மரக்காட்டுக்குள் புயலாய்

இடம்பெற்ற சம்பாஷணை, அன்னிக்கு இரவு தோட்டத்து அறையில ஏற்பாடான ஒரு சந்திப்பு.

''எதேச்சையா, அடுக்கப்பட்ட இந்த நிஜங்கள் அத்தனையும் எனக்கு இன்னொரு விஷயத்தை வெளிச்சம் போட்டுக் காட்டின. மிஸஸ் பேடன் மற்றும் மிஸ்டர் பேடன் ஆகிய இருவருக்குமே மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு உடனடியா மண்டையைப் போட்டுட்டா நல்லது என ஓர் இக்கட்டு இருந்த விஷயம் தானது. *கொலைக்கான இலக்கு.* எதிர்பாராம மேலும் ஒரு விஷயத்தையும் இது தீர்த்து வைத்தது: *ஒன்பதரை மணிக்கு மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டுடன் இருந்தது, மிஸ்டர் பேடனா இருக்க முடியாது.*

''இது, நம்மை, இக்கொலை சம்பந்தமான மற்றுமொரு முக்கிய மற்றும் இண்ட்ரஸ்டிங் நுனிக்கு இழுத்து வந்தது. ஒன்பதரை மணிக்கு மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு அறைக்குள்ளே இருந்தது தான் யாரு? தன் மனைவியுடன் தோட்டத்து அறையில இருந்த ரால்ஃப் பேடன் கிடையாது. சார்ல்ஸ் கென்ட்டும் கிடையாது – ஏற்கெனவே கிளம்பி அவன் போயாச்சு. யார், அப்ப? இந்தக் கட்டத்துல தான் நான் என்னுடைய மிக புத்திசாலித்தனமான – மிக கொடூரமான – மிக பச்சாதாபமற்ற கேள்வியை எடுத்து முன்னால வெச்சுக்கிட்டேன். அது: *நிஜத்துல யாராவது அவர்கூட இருந்தாங்களா என்ன?''*

பொய்ரெட் முன்னுக்கு வளைந்து வந்து அவருடைய மேற்கண்ட கடைசி கேள்வியை ஒரு துப்பாக்கிக் குண்டாய் எங்கள் ஒவ்வொருவரின் மீதும் சுட்டிருந்தார். பிறகு தன் குறி தப்பவில்லை என்று நிம்மதியடைந்த ஒருவனின் எக்காளத்தோடு மீண்டும் இருக்கையில் வாகாக சாய்ந்தமர்ந்துக் கொண்டார்.

இதில் ரேமண்டுக்கு சம்மதமில்லை. ஆகையால் சிறு எதிர்ப்பினைப் பதிந்தார்: ''ஒருவேளை என்னை நீங்க ஒரு புளுகன்னு முத்திரை குத்த முயல்றீங்களோனு தெரியலே, மிஸ்டர் பொய்ரெட்'' என்றார் அவர். ''ஆனா இந்த விஷயங்கள்லாம் என் ஒருத்தனோட சாட்சியத்தை மட்டும் நம்பி கிடையாது, இல்லையா? மேஜர் ப்ளண்ட் கூட மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு யார்கூடவோ பேசிக்கிட்டிருந்ததைக் கேட்டிருக்கார். அவர் வெளியே டெரஸ்ல இருந்ததாலே அந்த வார்த்தைகளைத் துல்லியமா அவரால பெற முடியலே – ஆனா குரலை நிச்சயப்படுத்தி

அடையாளம் சொல்றாரே.''

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தார். ''அதை நான் மறக்கலே'' என்றார் சாந்தமாய். ''ஆனா மேஜர் ப்ளண்ட், மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு பேசிக்கிட்டிருந்தது உங்களோடத்தான் எனும் அபிப்ராயத்துல இல்லே இருந்திருக்கார்...''

ஒரு கணம் ரேமண்ட் வீழ்த்தப்பட்டவராய் உணர்ந்ததைக் கவனிக்க முடிந்தது. பிறகு அவராகவே மீண்டு எழுந்தார்: ''ஆனா இப்ப அவர் அபிப்ராயப்பட்டது தப்புனு அவருக்குத் தெரியும்.''

''எக்ஸாக்ட்லி'' என்றார் மேஜர்.

''இருந்தாலும் அப்ப அப்படி அவர் நினைச்சதுக்கு ஏதாவது ஒரு காரணம் இருந்துதான் ஆகணும். ஏன், உங்களைனு தனியா பிரிச்சு அவர் அபிப்ராயப்பட்டிருக்கணும்?'' என முணுமுணுத்துக் கொண்டார் பொய்ரெட். ''ஓ, நோ'' என்று தனக்கெதிராய் வந்திருக்க வேண்டிய வார்த்தைகளைக் கையை உயர்த்தித் தடுத்து விட்டார் அவர். ''நீங்க என்ன காரணத்தைத் தருவீங்கனு எனக்குத் தெரியும் ஆனா அதெல்லாம் என் இந்தக் கேள்விக்கு பத்தாது. நாம இதற்கான விடையை வேற எங்கேயாவது தேடணும். எப்படி சொல்வேன்? எப்படி விளக்குவேன்? ஆங்... கவனியுங்க. ஆரம்பத்திலிருந்து ஒரு விஷயத்துல நான் தட்டுத்தடுமாறிக்கிட்டுத் தானிருந்தேன் – அது: மிஸ்டர் ரேமண்ட் காத்துவாக்குல கேட்ட அந்த வார்த்தைகளின் அமைப்பு... கட்டமைப்பு. அதைப்பற்றி ஒருத்தர் கூட சுட்டிக் காட்டாததும், விமர்சனம் பண்ணாததும், வித்தியாசமாயிருக்கு... ஏன்னு கேட்காததும் எனக்கு அதியாச்சரியமாயிருக்கு.''

சில கணங்கள் தாமதித்து விட்டு அமைதியாய் அவற்றை மீட்டிக்காட்டினார் அவர்:

''சமீப காலமாய் என் பர்ஸ் மேல் கண்பதித்து அடிக்கடி அதற்கு வரும் அழைப்புகள் அதிகமாகிக் கொண்டே போகின்றன. இதனால், உன் தேவைகளை இனிமேல் என்னால் பூர்த்தி பண்ண முடியாமல் ஆகி விடுமோ என்று எனக்கு அச்சமாகக்கூட உள்ளது.''

''இது படு வித்தியாசமா உங்களை அறையலே?'' – கேட்டார் பொய்ரெட்.

''அப்படியெதுவும் எனக்குப் படலியே'' என்றார் ரேமண்ட்.

''பலமுறை எனக்குக் கடுதாசிகள் அவர் சொல்லியிருக்கார். டிக்டேட் பண்ணுவார். அப்பல்லாம் எக்ஸாக்ட்லி இதே போன்ற வார்த்தை களைப் போட்டுத்தான் இலக்கண சுத்தமா சொல்வார்.''

''அப்படிப்போடு''என் அலறியே விட்டார் பொய்ரெட். ''கடுதாசி டிக்டேட் பண்ணும்போது – இல்லையா? இலக்கண சுத்தமா, ஆங்? ஆனா பேசும்போது?''

''பேசும்போது எதுக்கு இலக்கண சுத்தம்? பைத்தியக்காரம்பாங்க! ம்ம். மத்தவங்களுக்குப் போடும் கடிதங்கள்ல தான் முழு பூரணத்துவத்தை அவர் எதிர்பார்ப்பார்.''

''அதே அதே. இதைத்தான்... இதே நிலைமையைத் தான் நான் உங்களுக்கு விளக்கிப் போட துடிச்சுக்கிட்டிருந்தேன். இப்படி ஸ்பஷ்ட சுத்தமான பதங்களை ஒருத்தன் மத்தவங்ககிட்டே பேசும்போது உபயோகப்படுத்துவானா? ரேமண்ட் சொன்ன மாதிரி பைத்தியக்காரன்னு தான் சொல்வாங்க. ஆக, மேற்குறிப்பிட்ட ஆக்ராய்டு பேசியதாய் சொல்லும் வாக்கியங்கள் அவர் யார் கூடவோ பேசியபோது உதிர்ந்த வசனமா இருக்கவே முடியாது. ஸோ... ஒரு வேளை அப்போ அவர் கடிதத்தை டிக்டேட் பண்ணிக்கிட்டு இருந்திருந்தா—''

''ஒரு கடுதாசியை உரக்க சொல்லிக்கிட்டிருந்தார்னு சொல்ல வரீங்க'' என்று குறிப்பிட்ட ரேமண்ட், ''அப்படியேயிருந்தாலும் அதை அவர் யார்கிட்டேயாவது தானே சொல்லிக்கிட்டு இருந்திருக்கணும்?'' என்றார்.

''ஏன் அப்படி? வேற யாராவது அந்த அறையில இருந்ததா நமக்கு சாட்சி கிடையாது. வேற எந்தக் குரலும் கேட்கப்படலே – மிஸ்டர் ஆக்ராய்டுடைய குரலைத் தவிர... நினைவிருக்கட்டும்.''

''நிச்சயமா அப்படிப்பட்ட ஒரு கடிதத்தை ஒருத்தன் தனக்குத்தானே சத்தம் போட்டு படிக்க மாட்டான், மிஸ்டர் பொய்ரெட். நிச்சயம் மாட்டான் – அவன் மூளை குழம்பி பைத்தியமாகாத வரைக்கும்!''

''நீங்க எல்லாரும் ஒரு சமாச்சாரத்தை மறந்துட்டீங்க'' என்றார் பொய்ரெட் மிருதுவாய்: ''ஃபெர்ன்லி பார்க்குக்கு அந்த வார புதன்கிழமையன்று வந்துப் போன ஆள்.''

அங்கிருந்த அனைவரும் பொய்ரெட்டைக் கண்ணகலப் பார்த்தனர்.

''ஆமாம், அவன் தான்'' என அவர்களுக்கு நம்பிக்கையளித்தபடி தொடர்ந்தார் பொய்ரெட். ''புதன்கிழமையன்று. வந்துப்போன ஆள் நமக்கு இப்ப முக்கியமானவன் கிடையாது. ஆனா அவன் எந்த கம்பெனிக்காக வந்து போயிருந்தானோ அது என்னை ரொம்பவும் ஈர்த்தது.''

''ரெக்கார்ட் கம்பெனி'' – மூச்சடைக்க சொன்னார் ரேமண்ட். ''இப்ப எனக்குப் புரியுது. பேசுவதைப் பதிவு பண்ணும் மெஷின். அதைத்தான் நீங்க மனசுல வெச்சுக்கிட்டுப் பேசறீங்களா?''

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தார். ''ஒரு டேப் பண்ணும் மெஷின் வாங்க பணம் தருவதாக மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு சம்மதிச்சிருக்கார், நினைவிருக்கா? எனக்கு உடனே அந்த கம்பெனியைத் தொடர்பு கொண்டு விசாரிச்சுடணும்னு ஆவல் பொங்கிச்சு. அவங்க பதில்: மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு அந்தக் கம்பெனியிலிருந்து உரையாடல்களைப் பதிவு பண்ணவல்ல ஒரு மெஷினை வாங்கியிருக்கார். இந்த விஷயத்தை அவர் எதுக்காக உங்ககிட்டேயிருந்து மறைச்சிருக்கணும் - எனக்கு விளங்கலே.''

''அதை வெச்சுக்கிட்டு என்னை ஆச்சரியப்படுத்த அவர் நினைச்சிருக்கலாம்'' – கிசுகிசுவென சொன்னார் ரேமண்ட். ''மத்தவங்களை ஆச்சரியப்படுத்திப் பார்க்கும் குழந்தை குணம் அவருக்கு உண்டு. அந்த வெற்றியைத் தூக்கிப் பிடிச்சுக்கிட்டு ஓரிரு நாட்கள் அலைவார். அந்த மெஷின்கூட ஒரு புது பொம்மையுடன் விளையாடும் குழந்தை போல அவர் விளையாடியிருக்கலாம். நீங்க சொல்வது சரிதான் மிஸ்டர் பொய்ரெட் – இப்படி ஸ்பஷ்ட சுத்தமான பதங்களை ஒருத்தன் மத்தவங்ககிட்டே பேசும்போது உபயோகப்படுத்த மாட்டான் தான்!''

''இந்த திருப்பம்... என்ற பொய்ரெட், ''தானாகவே இன்னொண்ணையும் விளக்குது. இது, எதுக்காக மேஜர் ப்ளண்ட் உள்ளேயிருந்து பேசிக்கிட்டிருந்தது நீங்கதான்னு அனுமானிச்சுக்கிட்டார் என்பதையும் விளக்குது. அறையின் உள்ளேயிருந்து வந்த வசனங்கள் தனது கீழ்பணியாற்றும் ஒரு செகரட்டரியிடம் சொல்லும் இலக்கண தரத்தில் இருந்ததாலே ப்ளண்ட்டுடைய அடியாழத்து உள்மனது உள்ளேயிருப்பது நீங்கதான்னு நினைக்க வெச்சிடுச்சு. அவருடைய மேலோட்டமான நிகழ்கால மனது வேறெதோ

முழுக்கவும் வித்தியாசமான எதன்மீதோ சஞ்சரிச்சுக்கிட்டு இருந்திருக்கணும் – ஒருவேளை அவர் பார்த்த அந்த உருவத்தின் மீது! அது மிஸ் ஆக்ராய்டாயிருக்கும்னு நினைச்சிருப்பார் மேஜர். ஆனா, நெஜமா பார்த்தா, சின்னத் தோட்டத்து அறை நோக்கிப் பதுங்கிப்பதுங்கிப் போய்க்கிட்டிருந்த ஊர்மிளாவின் கஞ்சி போடப்பட்ட வெள்ளை உடை உருவத்தைத் தான் அவர் அப்ப பார்த்திருக்கார்.''

தனது முதல் ஆச்சரியத்திலிருந்து வெளியே வந்திருந்தார் ரேமண்ட். ''இருந்தாலும்'' என்று குறிப்பிட்ட அவர், ''உங்களுடைய இந்தக் கண்டுபிடிப்பு மாபுத்திசாலி நிரம்பியதாகவே இருந்தாலும், வழக்கின் இருப்பில் பெரிய மாற்றத்தை உண்டுபண்ணிடலே'' என்றார். (என்னால் இப்படியெல்லாம் கண்டுபிடித்திருக்க முடியாது என ஒப்புக் கொள்கிறேன்.) ''மிஸ்டர் ஆக்ராய்டு ஒன்பதரைக்கு உயிரோடத் தானிருந்திருக்கார் – ஏன்னா அப்போ அவர் அந்த பதிவு பண்ணும் மெஷினோடப் பேசிக்கிட்டிருந்திருக்கார். அந்த சமயத்துல மிஸ்டர் கென்ட்டும் காம்பவுண்டை விட்டே வெளியே போயிட்டார். ஆக மிஞ்சுவது — ரால்ஃப் பேடன் —''

தயக்கமாய் சொல்லி விட்டு ஊர்மிளாவைப் பார்த்தார் அவர்.

''நானும் ரால்ஃபும் பிரிந்துக் கிளம்பியது ஒன்பதே முக்காலை யொட்டி. அவர் வீட்டு நோக்கிப் போகவேயில்லே – இதுல நான் நிச்சயமாயிருக்கேன். அங்கே போகும் எண்ணமே அவருக்கு அப்ப இல்லே. இந்த பூமியில கடைசி வேலையா அவர் பண்ண நினைச்சது – அவரோட வளர்ப்புத் தந்தையைப் பார்ப்பது! அவர் அங்கேயிருக்கார் என்பதாலேயே வீட்டு பக்கம் கூட அவர் திரும்பலே.''

''இப்போதைக்கு உங்க கதை நம்பகத்தன்மையோட சந்தேகத்துக்கு இடம் தராமத்தானிருக்கு'' என்றார் ரேமண்ட். ''கேப்டன் பேடன் இதுல சம்பந்தப்படாதவர்னு நான் ஆரம்பத்திலிருந்தே முடிவா யிருக்கேன். ஆனா நீதிமன்றம் பற்றியும், அது தூக்கி வீசவல்ல கேள்விகள் பற்றியும் நாம எண்ணிப் பார்க்காம இருக்க முடியாது. சாட்சிகளை வெச்சே நீதிதரவல்ல கண்மூடி நீதிமன்றத்துக்கு முன் அவர் சாட்சி தான் என்ன? இந்த மாதிரியான ஒரு துரதிர்ஷ்டமான மற்றும் கழுத்தை நெரிக்கும் இக்கட்டுல கூட அவர் முன்வரலேனா—''

பொய்ரெட் இங்கு இடைமறித்தார். ''இது தான் உங்க ஆலோசனை,

இல்லையா? அவர் முன்வந்து அவரோட நிலைமையை விளக்கணும், ஆங்?''

''நிச்சயமா. பின்னே? ஆனா இது அவர் எங்கேயிருக்கார்னு தெரிஞ்சா தானே—''

''எனக்கு அவர் எங்கேயிருப்பார் என்பது தெரியும்னு நான் சொல்வதை நீங்க நம்பவே கூடாதுனு இருக்கீங்க. இருந்தாலும், இப்பத்தான் நான் அடிச்சு சொன்னேன் – எனக்கு எல்லாமும் தெரியும். டெலிபோன் அழைப்பின் பின்னணி, ஜன்னல் மரக்கட்டையிலிருக்கும் காலடித்தடங்கள், ரால்ஃப் பேடன் பதுங்கியுள்ள இடம் –''

''அவர் எங்கே?'' – கூர்மையாய் வார்த்தையை வீசினார் ப்ளண்ட்.

''ரொம்ப தூரமெல்லாம் கிடையாது'' என்றார் பொய்ரெட் புன்னகைத்தபடி.

''க்ரேன்செஸ்டர்?'' – கேட்டேன் நான்.

பொய்ரெட் என் பக்கமாய் திரும்பினார். ''எப்பவும் நீங்க என்னை இதைத்தான் கேட்கிறீங்க. க்ரேன்செஸ்டர்ல தான் அவர் இருக்கார் எனும் ஐடியா உங்க ரத்தத்துல ஊறிடுச்சு. அவர் – *அதோ!*''

நாடகத்தனமாய் திசையைச் சுட்டிக் காட்டினார் அவர். அனைவரின் முகமும் திரும்பின.

கதவின் நுழைவாயிலில் ரால்ஃப் பேடன் நின்றுக் கொண்டிருந்தான்.

அத்தியாயம் 24

ரால்ஃப் பேடனின் கதை

அது, எனக்கு ஒரு தர்மசங்கடமான நிலையாய் அமைந்தது. என்ன நடக்கிறது என்பதையே என்னால் விளங்கிக் கொள்ள முடியாமல் ஆனது... சுற்றிவர ஆச்சரியக் குமுறல்களும் உணர்ச்சி வெடிப்புகளும் இடம்பெற்றன. என்னை நானே கட்டுக்குள் கொண்டு வரும் நிலை உருவானபோது பேடனும் அவனது மனைவியும் கைகளுக்குள் கைகள் பின்னி நின்றுக் கொண்டிருந்தனர். என்னைப் பார்த்து சிரித்தான் அவன்.

பொய்ரெட்டும் கூட சிரித்தார்... ஆனால் கூடவே என்னை நோக்கி வலிமையாய் சுட்டுவிரல் நீட்டிக் கொண்டிருந்தார். ''ஹெர்குல் பொய்ரெட்டிடமிருந்து விஷயங்களை மறைத்து வைப்பது பிரயோஜனமற்றதுனு நான் மூச்சுக்கு முன்னூறு தரம் சொல்லியிருக்க மாட்டேன்?'' என தடாலடியாய் சொன்னார் அவர். ''அப்படி மறைப்பது தெரிஞ்சா நிச்சயம் உண்மையைக் கண்டுபிடிக்காம பொய்ரெட் விடமாட்டான்னு நான் விளக்கலே?''

பிறகு மற்றவர்கள் நோக்கித் திரும்பிக் கொண்டார் அவர்.

''ஒரு நாள், இதே நாம ஆறு பேரும், ஒரு சின்ன வட்ட மேஜையைச் சுற்றிலும் உட்கார்ந்தோம் – நினைவிருக்கு இல்லே? நாலு பேர் அவங்களுடைய ரகசியங்களைத் தந்துட்டாங்க. டாக்டர் ஷெப்பர்ட் அவர் மறைச்சு வெச்சதை எனக்குத் தர தவறிட்டார். ஆனா, வழக்கு நெடுகிலும், என்னோட சந்தேகங்கள் என்னை விட்டு விலகாம என்னுடனேயே இருந்தன. கவனியுங்க... டாக்டர் ஷெப்பர்ட் சம்பவ

இரவன்று பேடனைத் தேடிக்கிட்டு ஆண்கள் விடுதி வரைக்கும் போனார். அவரை அங்கே டாக்டரால பார்க்க முடியலே; சரி... இருக்கட்டும். ஆனா ஒருவேளை அவர் திரும்பும்போது தெருவுலேயே பேடனை சந்திச்சிருந்தால்? இந்தக் கேள்வியை நானே கேட்டுக் கிட்டேன். டாக்டர் ஷெப்பர்ட் பேடனின் நெருங்கிய நண்பர், மேலும், கொலை நடந்தக் களத்திலிருந்த சுடச்சுட வெளியே வரும் முதல் நபர் டாக்டர் தான். பேடனுக்கு எதிரா விஷயங்கள் அடுக்கி நிற்பதை அவர் நிச்சயமா உணர்ந்திருக்கணும்.''

''யெஸ்'' – விசனப்பட்டு சொன்னேன் நான். ''இது சம்பந்தமான அத்தனையையும் நானே இப்ப முன் வந்து விளக்கி விடுவது தான் புத்திசாலித்தனமாகும்னு நினைக்கிறேன். மத்தியானம் கிளம்பி பேடனைப் பார்க்க நான் போயிருந்தேன். முதல்ல அவனோட நம்பிக்கைக்கு உகந்த நபரா என்னை எடுத்துக்க அவர் முன்வரலே. ஆனா சற்று நேர உரையாடலுக்குப் பிறகு அவனோட ரகசியத் திருமணம் பற்றி என்கிட்டே சொன்னான். இவன் அப்போ விழுந்துக் கிடக்கும் பள்ளம் பற்றியும் விளக்கினான். கொலை கண்டுபிடிக்கப் பட்டதும், நிஜங்கள் ஒவ்வொண்ணா தளந்தொடும்போது, நிச்சயமா பேடனை சம்பந்தப்படுத்தாம இருக்க முடியாது என்பதை நான் உணர்ந்துட்டேன். அவன் நேரடியா தொடர்பு படுத்தப்படலேனாலும், அவன் விரும்பிய பெண் நிச்சயமா துரத்தப்படுவா. இவ பொண்டாட்டியைப் போட்டுத் துளைச்செடுத்து அவளால மறைக்க முடியாம போகலாம்; இல்லேனா அவ மேலேயே கூட பழி திசை திரும்பிடலாம்—''

இங்கு நான் சற்று தயங்கி நின்று விட இடைவெளியை பேடனே நிரப்பலானான்:

''ஒத்துக்கறேன். விஷயம் என் காதுக்கு எட்டியபோது, நான் கிளம்பியதும் மறுபடியும் அப்பாவைப் பார்க்க ஊர்மிளா போயிருப் பான்னே நான் நினைச்சேன். அன்னிக்கு மத்தியானம் தான் அவர் இவ மேல அத்தனை கோரமா நடந்துக்கிட்டிருக்கார். இவளால தாங்கவோ மன்னிக்கவோ முடியாத அளவுக்கு அவர் திட்டி பழிச்சிருக்கணும் – அப்போ இவள் தன் கட்டுப்பாட்டை இழந்த ஒரு கணத்துல – என்ன பண்றோம்னு கூட இவ புரிஞ்சுக்காம – இவளாவே முன்னேறி—''

நிறுத்தினான் பேடன்.

அவனிடமிருந்து தன் கையை அதிர்ச்சியாய் உருவிக் கொண்ட ஊர்மிளா ஓரிரு அடிகள் தள்ளிப் பின்னுக்குப் போய் விட்டாள். ''இப்படியா என்னை நினைச்சீங்க, ரால்ஃப்? நான் தான் ஐயாவைக் கொன்னு சீவிட்டேன்னா மனசோட மனசா நீங்க நினைச்சீங்க?''

''நாம மறுபடியும் குற்றமுள்ள வகையில நடந்துக்கிட்ட டாக்டர் விஷயத்துக்கு வருவோம்'' என்றார் பொய்ரெட் வறட்சியாய். ''பேடனுக்கு என்ன உதவி தரமுடியுமோ அதை பண்ண முன் வந்திருக்கிறார் டாக்டர் ஷெப்பர்ட். போலீஸிடமிருந்து பேடனை மறைச்சு வெப்பதுல வெற்றியடைஞ்சிருக்கார், டாக்டர்.''

''எங்கே?''–கேட்டார் ரேமண்ட். ''அவரோட வீட்டுல?''

''ஆஹ், அப்படி கிடையாது'' என்றார் பொய்ரெட். ''நான் என்னையே கேட்டுக்கிட்ட இதே கேள்வியை நீங்களும் உங்க கிட்டேயே கேட்டுக்கணும். நல்ல டாக்டரான ஷெப்பர்ட், பேடனை மறைச்சு வெக்கிறார்னா அவர் எந்த இடத்தைத் தெரிந்தெடுப்பார்? அது நிச்சயமா இங்கே எங்கேயோ கைக்கெட்டும் தூரத்துல தான் இருந்தாகணும். ஓர் ஓட்டல்? நோ. ஒரு லாட்ஜ்? ம்ம். அப்ப, எங்கே? ஆஹ்! எனக்கு விடை கிடைச்சது. ஒரு நர்ஸிங் ஹோம். டாக்டரில்லே! மூளை குழம்பிப்போன ஒருத்தருக்கான இல்லம். என்னோட இந்த ஊகத்தைப் பரீட்சித்துப் பார்க்க இறங்கினேன். என் உறவுக்காரப் பையன் ஒருத்தனுக்கு மூளை குழம்பிடுச்சுனு நானா ஒரு கதையை உருவாக்கறேன். மேடம் கரோலின்கிட்டே போய் அப்படிப்பட்ட நோயாளிகளுக்கு உகந்த ஏதாவது ஹோம் இருக்கானு கேட்கிறேன். க்ரான்செஸ்டர் அருகில் இருக்கிற ரெண்டு ஹோம்களுக்கு தன்னுடைய பேஷண்ட்கள் சில பேரை டாக்டர் அனுப்பியிருக்கார்னு சொல்லி அவை பற்றிய விவரங்களைத் தராங்க அவங்க. விசாரணைகளைத் துரிதமாக்கினேன். யெஸ் – அந்த ரெண்டுல ஒரு காப்பகத்துக்கு, சனிக்கிழமையன்று டாக்டரே கொண்டு போய் ஒரு நோயாளியைச் சேர்த்திருக்கும் சேதி தெரிய வருது. ஏதோவொரு பேர்ல அந்தப் பேஷண்ட் அறியப்பட்டிருந்தாலும் அது தான் பேடன் என்று கண்டுபிடிச்சுட எனக்கு அதிக நேரம் பிடிக்கலே. சில அலுவலக சம்பிரதாயங்களுக்கு அப்புறம் என்னால பேடனை வெளியே கொண்டு

வர முடிஞ்சது. நேற்று அதிகாலைக்கு முன்னாடியே என் வீட்டுக்கு வந்துடறார் பேடன்.''

பொய்ரெட்டை கவலை தோய பார்த்தேன் நான். ''கரோலினின் அரசாங்க உணவதிகாரி!'' என முணுமுணுத்துக் கொண்டேன். ''இதை நான் ஊகிக்காம போயிட்டேனே!''

''உங்களோட எழுதிப்பதியப்பட்ட இந்த வழக்குல இருந்த தன்னடக்கம் பற்றி நான் ஏன் குறிப்பிட்டேன்னு இப்ப புரியுதா?'' என என் காதில் கிசுகிசுத்தார் பொய்ரெட். ''அது சொன்ன பல விஷயங்கள் அத்தனையும் உண்மையே – ஆனா *உங்க சம்பந்தப்பட்ட சில விஷயங்கள் வெட்டி எடுக்கப்பட்டிருக்கே,* மை ஃபிரண்ட்...! தன்னடக்கம், ஆங்?''

எதிர்த்துப் பேச தெம்பற்றவனானேன்.

''டாக்டர் ஷெப்பர்ட் எனக்கு அத்தனை விசுவாசமா இருந்தார்'' என்றான் பேடன். ''என் சதை மாதிரி, இந்த இக்கட்டு முழுக்க உறுதுணையா நின்னார். எது எனக்கு சிறந்ததுனு அவர் எண்ணினாரோ அதைத்தான் அவர் எனக்கு செஞ்சு தந்தார். மிஸ்டர் பொய்ரெட் சொல்வதை வெச்சு, அப்படி அவர் செஞ்சது சிறந்தது இல்லேனு இப்ப எனக்கு சொல்லப்படுது. அதாவது நான் முன்வந்திருக்கணும்... வழக்கை சந்திச்சு என் நிலைமையை விளக்கியிருக்கணும், இப்படி. அந்த ஹோம்ல ஒரு நியூஸ் பேப்பரை நான் கண்ணால பார்க்கலே. என்ன நடந்துக்கிட்டிருக்கு என்பது பற்றி எனக்கு ஒண்ணுமே தெரியாம ஆயிடுச்சு.''

''எதை வெளியே விடலாம்னு *நினைக்கிறாரோ* அதை மட்டுமே வெளியிடும் குணமுள்ளவர் டாக்டர்'' என்றார் பொய்ரெட் வறட்சியாய். ''ஆனா நான், சின்னச்சின்ன விஷயங்களைக் கூட கண்டுபிடிச் சுடுவேன். இது தான் என் பிஸினஸ்!''

''இப்பவாவது எங்களுக்கு அன்றைய இரவு என்னதான் நடந்தது எனும் உண்மை விவரம் கிடைக்குமா?'' என பொறுமையிழந்து கேட்டார் ரேமண்ட்.

''உங்களுக்கு அது ஏற்கெனவே தெரியும், ஸார்'' என்றார் ரால்ஃப் ''நான் சொல்ல ரொம்ப கம்மியான சங்கதிகள் தான் பாக்கியிருக்கு. ஒன்பதே முக்காலையொட்டி நான் தோட்ட அறையை விட்டுக்

கிளம்பி, அடுத்து இனி என்ன பண்ணுவது என்ற பூதாகார கேள்வியுடன், இருந்த சந்துபொந்திலெல்லாம் நடக்கலானேன். நான் படிக்குமறைக்கு அருகில் போகவேயில்லை என்பதையும் எனது வளர்ப்புத் தந்தையை நான் பார்க்கவேயில்லை என்பதையும் நிரூபிக்க அந்த நேரத்துல நான் எங்கேயிருந்தேன்னு என்னால விளக்க முடியாத துர்லப நிலையில இருக்கேன். இது அந்தக் கடவுள் மீதான சத்ய வார்த்தைகள். உலகம் என்ன வேணும்னாலும் நினைக்கட்டும்... ஆனா என்னோட இந்த உண்மையை நீங்க நம்பணும்னு வேண்டிக்கிறேன்.''

''எங்கேயிருந்தார்னு சொல்ல முடியாத துர்லப நிலையாம்'' முணுமுணுத்தார் ரேமண்ட். ''இதெப்படி போதும்? நான் உங்களை நம்பறேன் இது ஒருபக்கமிருக்கட்டும். கோர்ட்டுக்கு? இதெப்படி போதும்?''

இடைமறித்து குதூகலக்குரலில் பேசிய பொய்ரெட், ''இது தான் எல்லாத்தையும் படு சுலபமாக்கிடுதே'' என்றார். ''பார்க்கப்போனா, ரொம்ப சுலபம். வெரி ஸிம்பிள், மேன்.''

நாங்களெல்லலோரும் அவரையே கண்ணகல முறைத்தோம்.

''நான் என்ன சொல்ல வரேன்னு புரியலே? நோ? கேப்டன் பேடனைக் காப்பாற்ற நிஜ கொலைகாரன் முன்வந்து உண்மையைச் சொல்லியாகணும்.''

எங்களனைவரையும் ஒரு சுற்று பார்த்தார் அவர்.

''யெஸ் – நான் சொன்னது சொன்னது தான். கேப்டன் பேடனைக் காப்பாற்ற நிஜ கொலைகாரன் முன்வந்து உண்மையைச் சொல்லி யாகணும். இங்கே இப்ப இன்ஸ்பெக்ட்ர் ரக்லானை நான் அழைக்க வில்லை என்பதை நீங்க கவனிக்கணும். ஒரு காரணத்துக்காகத்தான். எனக்குத் தெரிஞ்ச, எல்லாத்தையும் நான் அவர்கிட்டே போட்டுடைக்க விரும்பலே. குறைந்தபட்சம் இன்னிக்கு ராத்திரி வரையிலாவது அவர்கிட்டே நான் சொல்ல விரும்பலே.''

முன் வளைந்து வந்த அவருடைய குணாதிசயமும் நடவடிக்கையும் சட்டென்று முழுக்கவும் மாறின. அவர் திடுமென ஆபத்தானவரானார்.

''இப்போது உங்ககிட்டே பேசிக்கொண்டிருக்கும் எனக்கு – மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டைக் கொன்ற நபர் இப்போ இந்த அறையில

தானிருக்கார் என்பது தெரியும். நான் சொல்வது அந்தக் கொலை காரனுக்கு: நாளைக்கு இந்த உண்மை அப்படியே இன்ஸ்பெக்டர் ரக்லான் கைகளில் தரப்படும். விளங்குதா?''

இறுக்கமான அமைதி அங்கு நிலவியது. இதற்கு நடுவில் வீட்டு வேலைக்கார பெண் ஒரு தந்தியை எடுத்துக்கொண்டு வந்தாள். பொய்ரெட் அதனைக் கிழித்துப் பிரித்தார்.

ப்ளண்ட்டின் குரல் சம்பந்தமற்று எகிறியது: ''கொலைகாரன் எங்கள்ல ஒருத்தர்னு சொன்னீங்க. யார்னு – உங்களுக்குத் தெரியுமா?''

பொய்ரெட் இப்போது வந்திருந்த செய்தியைப் படித்து முடித்திருந்தார். அதனை அவருடைய கையிலேயே சுருட்டினார். *''எனக்குத் தெரியும் – இப்போ.''*

சொல்லிவிட்டுக் கையில் உருண்டையாகியிருந்த தாளைத் தட்டிக்காட்டினார் அவர்.

''என்னது அது?'' – கூர்மையாய் கேட்டார் ரேமண்ட்.

''ஒரு தந்தி சேதி. இப்போது அமெரிக்காவுக்குப் பயணமாகிக் கொண்டிருக்கும் ஒரு கப்பல் பிரயாணியிடமிருந்து.''

அங்கு மரண அமைதி நிலவியது. எழுந்து வணங்கி கிளம்பும் பாவனையில் ஆன பொய்ரெட் சொன்னார்: ''லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்... நான் கூட்டியிருந்த இந்த சிறு அளவளாவல் முடிவுற்றது. உண்மை, காலையில் இன்ஸ்பெக்டர் ரக்லானுக்கு அனுப்பப்படும்.''

அத்தியாயம் 25

முழு உண்மை

பொய்ரெட்டிடமிருந்து விளைந்த ஒரு சின்ன அங்க அசைவு என்னை மட்டும் பின்தங்கிவிடும்படி சொன்னது. நான் கட்டுப் பட்டேன். கனப்பு வரை நகர்ந்திருந்த நான் அதிலிருந்த பெரிய கட்டிகளை என் பூட்ஸ் நுனியால் சிந்தனையாய் கிளறி விட்டபடி யிருந்தேன்.

நான் புதிர்ப் போடப்பட்டவனாய் ஆனேன். பொய்ரெட்டின் ஆணையின் அர்த்தம் விளங்காததால், இவ்வழக்கில், இப்போதுதான், முதல் முறையாய் தனியாய் கடல் நடுவே தள்ளப்பட்டவனாய் உணர்ந்தேன். ஒரு கணம், இதுவரை நான் சாட்சியாய் நின்று பங்கெடுத்துக் கொண்டிருந்த இந்த சந்திப்பையே, ஒரு ஆபத்து என்று தான் என்னால் கருத முடிந்தது. தன்னை முன்னிலைப்படுத்தி முக்கியப்படுத்திக் கொள்ள பொய்ரெட்டே போட்டுக் கொண்டுள்ள நாடகமாகவே எனக்குப்பட்டது. ஆயினும், என்னையும் கடந்து, இதற்கடியில் தங்கியிருக்கும் நிஜத்தன்மையை என்னால் உணர முடியாமலில்லை. அவரது வார்த்தைகளில் ஏதோவொரு நிஜ பூகம்பமிருந்தது – மறுக்க முடியாத உண்மை தகதகத்தது. ஆனாலும், இப்பவும் கூட, அவர் முழுக்கவும் தப்பான பாதையில் தான் போய்க் கொண்டிருக்கிறார் என்றே நான் கருதினேன்.

கடைசி நபரும் வெளியேறி கதவு அறையப்பட்டதும் அவரும் கனப்பு வரை வந்தார். ''வெல், மை ஃபிரண்ட்'' என சாந்தமாய் சொன்ன அவர், ''இதைப்பற்றியெல்லாம் நீங்க என்ன நினைக்

கிறீங்க?'' என கேட்டார்.

''என்னத்தை நினைப்பதுனே எனக்குத் தெரியலே'' என வெளிப்படையாய் சொன்னேன். ''எதுக்காக இதெல்லாம்? கொலைகாரனுக்கு இப்படி நீட்டி முழக்கி பயத்தைத் தந்து அலற வெக்கறதுக்கு பதிலா உண்மையைத் தூக்கிக்கிட்டு ஏன் நீங்க நேரடியா இன்ஸ்பெக்டர் ரக்லான்கிட்டேயே போயிருக்கக் கூடாது?''

பொய்ரெட் உட்கார்ந்துக் கொண்டு அவருடைய சிகரெட் உறையை எடுத்துக் கொண்டார். சில நிமிடங்கள் அவர் அமைதியாய் புகைத்து முடித்தார். பிறகு:

''உங்களுடைய மூளையின் சாதுர்ய சாம்பல் நிற செல்களைத் தட்டி விடுங்க'' என்றார். ''என்னோட ஒவ்வொரு நடவடிக்கைக்குப் பின்னாலேயும் ஒரு காரணமுண்டு.

சில கணங்கள் தயங்கிய நான் பின் பேசினேன்: ''முதல்ல எனக்குத் தோணுவது இதுதான்: யார் கொலைகாரன்னு உங்களுக்கே தெரியாது... ஆனா இங்கே இருப்பவர்கள்ல அது யார்னு கண்டுபிடிக்க பூச்சி காட்டறீங்க. ஆக, முகந்தெரியா அந்த கொலைகாரன் வாயாலேயே உண்மையைக் கக்க வைக்கத்தான் இத்தனை ஜோடிக்கப்பட்ட வசனங்கள். சரியா?''

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தார். ''புத்திசாலித்தனமான ஊகம். ஆனால் சரி கிடையாது.''

''அதாவது என்ன சொல்ல வர்ரேன்னா – பல உண்மைகளை நீங்க கண்டுபிடிச்சிருக்கும் சாதுர்யத்தைப் பறை சாற்றி அவனை அப்படியே முன்னால வந்து விழ வைக்க முயற்சி பண்ணியிருக்கீங்க. இதுக்கு அவன் வாய் திறந்து தான் தான் கொலைகாரன்னு சொல்ல வேண்டிய அவசியமில்லை. நாளைக்கு நீங்க இயங்கி விடுவதற்கு முன்னாடி, மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டை அமைதியாக்கின மாதிரி அவன் உங்களையும் காதும் காதும் வெச்சா மாதிரி அமைதியாக்க முயற்சிக்கலாம் – அப்ப நீங்க அவனைப் பிடிச்சுடலாம்.

''என்னையே இரையாய் வைத்துப் பின்னப்படும் பொறி! ஆனா நான் அப்படி ஒரு ஹீரோத்தனம் காட்ட உகந்தவன் கிடையாதுப்பா.''

''அப்படினா உங்களைப் புரிந்துக் கொள்வதில் நான் தோத்துட்டேன்னு தான் சொல்லணும். இப்படியெல்லாம் பேசி நீங்க

கொலைகாரனையே தப்பிக்க விட்டுடுவீங்களோனு தோணுது.''

மறுப்பாய் தலையசைத்தார் பொய்ரெட். ''அவனால தப்பிக்க முடியாது''–ஆழ்ந்து பேசினார். ''ஒரே ஒரு வழி தான் தப்பிக்க இருக்கு –அது விடுதலை கிடையாது.''

''இன்னிக்கு ராத்திரி வந்தவங்கள்ல ஒருத்தர் தான் கொலை பண்ணினது என்பதுல நீங்க நிச்சயமாத்தான் இருக்கீங்களா?'' – நான் நம்பிக்கை வற்றி கேட்டேன்.

''யெஸ், மை ஃபிரண்ட்.

''எந்த நபர்?''

சில நிமிடங்கள் வரை அங்கு அமைதி நீடித்தது. பிறகு சிகரெட் துண்டைச் சுண்டி கனப்பின் நடுவே போய் வீழும்படி செய்தவர், சாந்தம் மாறாத குரலில் பேசலானார்:

''இந்த வழக்கு நெடுகிலும் நான் பிரயாணித்த பாதையில உங்களை நான் இப்ப கூட்டிட்டுப் போறேன். படிப்படியா ஒவ்வொரு படியிலும் என்கூடவே வரும் நீங்களே, அனைத்து உண்மைகளும் சந்தேகத்துக் கிடமின்றி ஒரேயொரு நபரைச் சுட்டிக்காட்டுவதைப் புரிஞ்சுப்பீங்க, பாருங்க. ரெண்டு நிஜங்களும் நேரத்தைப் பொறுத்தமட்டிலான சின்ன பேதமும் என் கவனத்தைக் குறிப்பாய் கவர்ந்தன. முதல் நிஜம்: டெலிபோன் அழைப்பு. ரால்ஃப் பேடன் தான் கொலைகாரன்னா, அந்த டெலிபோன் கால், ஓர் அர்த்தமற்ற மற்றும் முட்டாள்தனமான சாட்சியா மாறிடுது. ஆகவே, நான் எனக்கு நானே சொல்லிக்கிறேன்: ரால்ஃப் பேடன் கொலைகாரன் கிடையாது.

''வீட்டிலிருக்கும் யாராலும் அந்த டெலிபோன் அழைப்பு வரவில்லை என்பதை நான் திருப்திகரமா ஊர்ஜிதம் பண்ணிக்கிட்ட பிறகு, அந்தக் கொடிய மாலை வேளையில அங்கே ஃபெர்ன்லி பார்க்கிலிருந்தவர்களின் நடுவிலிருந்து தான் நான் கொலைகாரனைக் கொத்தியெடுக்கணும் என்பதுல முடிவானேன். ஆகவே அந்த தொலைபேசி அழைப்பு கொலைக்கு உடந்தையா இருந்த ஒருவனால வந்திருக்கணும் என்ற ஒரு தீர்வினை அடைஞ்சேன். இந்த முடிவுல எனக்கே கூட பெருமை கிடையாது–ஆனா இப்போதைக்கு இப்படியே இருக்கட்டும்.

''நான், அடுத்து, வந்த அந்த அழைப்புக்கான இலக்கு என்னவா

யிருக்கும்னு பரிட்சை பண்ண இறங்கினேன். இது கஷ்டமாச்சு. ஆகவே இது உண்டு பண்ண வல்ல முடிவினைக் கணக்கில் கொண்டு இக்கேள்விக்கான விடையை அடைய முயற்சித்தேன். எப்படியோ மறுநாள் காலையிலே கண்டுபிடிக்கப்படப் போகிற அந்தக் கொலை – அன்னிக்கு ராத்திரியே கண்டுபிடிக்கப்பட வேண்டும். இதை நீங்க ஒத்துக்கறீங்களா?''

''யெ-ஸ்'' – நான் ஒத்துக் கொண்டேன். ''யெஸ். மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு அன்னிக்கு ராத்திரி அவரை யாருமே தொந்தரவு பண்ணக் கூடாதுனு சொல்லியிருப்பதால, நீங்க சொல்வது போல விஷயம் மறுநாள் காலையில தான் தெரிய வந்திருக்கும்.''

''புத்திசாலி. இந்த ஊகம் மேட்சாகி அம்சமா பொருந்தி நிக்குது, இல்லையா? ஆனாலும் இன்னும் சில விஷயங்கள் பனிப்படலமா இருக்கு. மறுநாள் காலைல கண்டுபிடிக்கப்படுவதற்கு பதிலா அன்றைய இரவே கொலை கண்டுபிடிக்கப்படுவதுல என்ன ஆதாயம் இருந்துடப் போகுது? என்னால ஒரேயொரு காரணத்தைத் தான் பிடிக்க முடிஞ்சது. ஒரு குறிப்பிட்ட நேரத்துல நடந்ததாதான் கொலை கண்டுபிடிக்கப்படணும்னு ஒரு முடிவுல முன்கூட்டியே இருக்கும் அந்தக் கொலைகாரனால, அப்பத்தான் கதவு திறக்கப்படும்போது அவனே அங்கே கூடவேயிருந்த மாதிரி ஒரு ஸ்திரமான சூழலை நிச்சயப்படுத்திட முடியும் – அல்லது உடைத்த உடனேயாவது அங்கு வரும்படி ஆகிவிடும்.

''ஓ கே... அடுத்து நாம ரெண்டாவது சாட்சிக்கு வரோம். சுவரோரத் திலிருந்து இழுக்கப்பட்டிருந்த நாற்காலி. இதுல ஒரு முக்கியத்துவமும் கிடையாது... வீட்ல சேர்ங்க எங்கே வேணும்னாலும் இருக்கும்னு ஒதுக்கிட்டார் இன்ஸ்பெக்டர். நான், மாறாக, இதை ஒரு அதிமுக்கிய சாட்சியா பதுக்கிக்கிட்டேன்.

''உங்களோட கைப்பிரதியில நீங்க படிக்குமறையின் அழகான வரைபடத்தையும் தந்திருந்தீங்க. அது இப்ப உங்க கையிலேயிருந்தா அதுல நீங்களே பார்க்கலாம்: பார்க்கர் சுட்டிக்காட்டின மாதிரி அந்த நாற்காலி இழுக்கப்பட்டிருந்தால், அது மிகச்சரியா, கதவுக்கும் ஜன்னலுக்குமான நேர்க்கோட்டுல அம்சமா நிக்கும்.''

''ஜன்னல்!'' – என்னையுமறியாது பட்டென சொல்லி விட்டேன்

நான்.

''உங்களுக்கும் என் ஐடியா இருந்திருக்கு போல. கதவைத் திறந்துக்கிட்டு உள்ளே வரும் யாரோட கண்ணிலும் அந்த ஜன்னலோட தொடர்புடைய எதுவோ ஒன்று பட்டுடவே கூடாது என்பதற்காகத்தான் அந்த சேர் இழுக்கப்பட்டதா நான் கற்பனை பண்ணிக்கிட்டேன். ஆனா நான் உடனேயே இந்த ஊகத்தை ஒதுக்கிட்டேன் ஏன்னா, அது பெரிய பின்பக்கம் இருக்கும் சேராயிருந்தாலும், கதவருகே நின்னுக் கிட்டிருக்கும் ஒருத்தருக்கு ஜன்னலின் மிகக்கம்மியான பகுதியைத் தான் – அதோட கீழ்த்திட்டு வரைனு சொல்லலாம் – அந்தப் பகுதியை மட்டும்தான் அதால மறைக்க முடியும். ஆனா, நண்பா, முக்கியமான ஒண்ணை நாம மறந்துடக் கூடாது. அந்த ஜன்னலுக்கு முன்னாடிதான் சில சஞ்சிகைகளும் நோட்டுப்புத்தகங்களும் வைக்கப்பட்டிருந்த ஒரு டேபிள் இருந்துது. அந்த டேபிள் இழுக்கப்பட்ட நாற்காலியினால முழுக்கவும் மறைந்தே போனது. இப்பத்தான் – இந்தக்கட்டத்துல தான் – எனக்கு, உண்மை, ஒரு நிழலாப் புலப்பட ஆரம்பிச்சது.

''அந்த டேபிள்ல யாரும் பார்த்துடக்கூடாத ஏதோவொண்ணு இருந்ததா வெச்சுப்போம். கொலைகாரனால வைக்கப்பட்ட ஏதோ ஒண்ணு! இந்த நேரத்திலும் அது என்னவாயிருக்கும்னு எனக்குத் துளி ஊகம் கிடையாது. ஆனா, எனக்கு, அது பற்றிய, சில ருசிகர சாட்சிகள் மட்டும் தெரிஞ்சிருந்தது. அது, கொலைகாரன் கொலை செய்து முடித்துக் கிளம்பியபோது அவன் கையோடே கொண்டு போக முடியாத அளவுக்கு அமைந்துவிட்ட ஒன்று. அதே சமயம், கொலை கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, எத்தனை சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரம் அது அங்கிருந்து நகர்த்தப்பட்டு விட வேண்டும் என்பதும் ஓர் முக்கியம். இதனால தான் – அந்த டெலிபோன் அழைப்பு; மற்றும் இதன் மூலமா கொலைகாரன், உடல் கண்டெடுக்கப்படும்போது, ஸ்தலத்திலேயே இருந்துவிட அமையும் வாய்ப்பு.

''இன்னும் கவனியுங்க. போலீஸ் ஸ்தலத்துக்கு வந்து சேர்ரதுக்கு முன்னாடி அங்கே நாலு பேரிருந்தாங்க. நீங்க, பார்க்கர், மேஜர் ப்ளண்ட் மற்றும் மிஸ்டர் ரேமண்ட். எந்த நேரத்துல கொலை கண்டெடுக்கப் பட்டிருந்தாலும் அந்த நேரத்துல ஸ்தலத்துல இருக்கவல்ல ஒரே ஆசாமி பார்க்கர் தான் என்பதால பார்க்கரை நான் உடனடியா என்

பட்டியலிலிருந்து வெளியேற்றிட்டேன். மேலும் அவன் தான் இழுக்கப்பட்ட அந்த நாற்காலி பற்றி என்கிட்டே சொன்னது. ஆக இக்கொலையிலிருந்து பார்க்கர் விலக்கப்பட்டுடறான் – ஆனா அந்த ப்ளாக்-மெயில் சமாச்சாரத்தைப் பொறுத்தவரைக்கும் அப்பவும் எனக்கு அவன் மேல கண்ணிருந்தது. மேஜர் ப்ளண்ட் மற்றும் ரேமண்ட் ரெண்டு பேருமே சந்தேகப்பட்டியல்ல இருந்தாங்க, ஏன்னா, ஒருவேளை அந்தக் கொலை அதிகாலைல கண்டுபிடிக்கப்பட்டிருந்தா, அந்த வட்டமேஜையில இருந்த 'பொருள்' கண்டுபிடிக்கப்படுவதைத் தடுப்பது காலந்தாழ்ந்து போய்விடும்படி இவங்க ஸ்தலத்துக்கு வரும் சூழ்நிலை ஆகியிருக்கும் என்பது தான் சாத்தியமாகுது.

''இப்ப – அந்தப் பொருள் என்ன? காற்றுவாக்குல கேட்கப்பட்ட ரோஜர் பேசியதாய் கூறப்படும் வசனம் பற்றிய என் விவாதங்களை நீங்க இவ்ளோ நேரம் கேட்டுட்டுத் தானிருந்தீங்க. பேசுவதைப் பதிவு பண்ணும் இயந்திரத்தை விற்கும் ஆசாமியொருத்தன் வீட்டுக்கு வந்து போனதாக கேள்விப்பட்டதிலிருந்து அந்த மெஷின் பற்றிய ஐடியா என் மூளையில வேரூன்றிச்சு. அரை மணிநேரத்துக்கு முன்னாடி இதே அறையில நான் சொன்னதை நீங்களும் தான் கேட்டீங்க, இல்லையா? வந்திருந்த எல்லாருமே என் தியரியை ஏத்துக்கிட்டாங்க – ஆனா ஒரு அதிமுக்கிய சாட்சி அவங்க கண்லேந்து தப்பிச்சுட்டா மாதிரி தெரியுது. மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டால அந்த பதிவு பண்ணும் மெஷின் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்று ஏற்றுக் கொண்டோமே யானால்... ஏன் எவ்விதமான அத்தகைய மெஷினும் கண்டெடுக்கப் படலே?''

''இதைப்பற்றி இப்படி நான் நினைக்கவேயில்லை'' – நான் சொன்னேன்.

''பேசுவதைப் பதிவு பண்ணும் ஒரு மெஷின் மிஸ்டர் ரோஜரால் வாங்கப்பட்டிருக்கு. ஆனா அவரது கட்டுக்குள்ளே அப்படி ஒரு மெஷின் காணப்படலே. ஸோ, அந்த மேஜையிலிருந்து எதுவோ எடுக்கப்பட்டுள்ளதுனா – ஏன் அது அந்த மெஷினா இருக்கக்கூடாது? ஆனா அப்படி அதை எடுத்துக்கிட்டுப் போவதுல அதுக்குனே சில சங்கடங்கள் இருக்கு. அனைவரது கவனமும், வேறு வழியின்றி கொலையுண்டுக் கிடந்த மனுஷன் மேலயே தான் குவிந்திருந்தன.

அதனால், அறையிலிருந்த வேற எவரும் கவனிக்காதவண்ணம், அதே அறையிலிருந்த யாராலும் அந்த வட்ட மேஜைக்கு அருகே போயிருக்க முடியும். ஆனா ஒலியைப் பதிவு பண்ணும் ஓர் இயந்திரம் கனமான பெரிய சமாச்சாரம்... காதும் காதும் வெச்சா மாதிரி அதை பாக்கெட்ல நழுவ விட்டுக்கிட்டு ஓடிட முடியாது. அதை எடுத்துக் கொண்டு போகும் தகுதி வாய்ந்தவனா அங்கே ஒருத்தனிருக்க வேண்டும் – நல்ல கனமான கோணி மாதிரியான பையோட —

''எங்கே நான் வந்து நிக்கறேன்னு உங்களுக்கு விளங்குதா? கொலைகாரனின் அடையாளம் கொஞ்சங்கொஞ்சமா இப்ப வடிவம் கொள்ளுது. அங்கே ஸ்தலத்துல நேரடியா வந்திருந்த நபர் அவர் - ஆனா மறுநாள் காலையில கொலை கண்டுபிடிக்கப்பட்டிருந்தா அங்கே இருந்திருக்க சாத்தியமில்லாத நபரும் கூட.

இங்கு நான் இடைமறித்தேன். ''எதுக்காக அந்த மெஷினை அப்புறப்படுத்தணும்? இதுல என்ன லாஜிக் இருக்கு?''

''நீங்க மிஸ்டர் ரேமண்ட் மாதிரியான ஆசாமி. கேட்கப்பட்ட வசனங்கள், அந்த மெஷினிடத்தில் மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டால் ஒன்பதரை மணிக்குப் பேசப்பட்ட வார்த்தைகள்னே நீங்க எடுத்துக் கறீங்க. ஆனா ஒரு நிமிஷம் இந்த உபயோககரமான மெஷினின் பயனைக் கொஞ்சம் நினைச்சுப்பாருங்க. இதுல நீங்க பேசறீங்க, இல்லையா? அப்புறமா செகரட்டரியோ டைப்பிஸ்ட்டோ அதை மறுபடியும் ஆன் பண்றாங்க... அது மறுபடியும் பேசுது.''

''அதாவது —'' என்ற நான் மூச்சடைத்து விட்டேன்.

பொய்ரெட் ஒப்புதலாய் தலையசைத்தார்.

''யெஸ். ஒன்பதரை மணிக்கு, மிஸ்டர் ஆக்ராய்டு ஏற்கெனவே பிணமாகத்தானிருக்கார். பேசியது அந்த மெஷின் தான் மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டல்ல.''

''அப்ப கொலைகாரன் தான் அதை ஓட விட்டிருக்கான். அப்ப அவன் அந்த நிமிஷத்துல உள்ளே தானிருந்திருக்கணும்.

''சாத்தியம் உண்டு. ஆனா இப்படி அது ஒன்பதரை மணிக்கு ஓட வேற ஏதாவது மெக்கானிக்கல் உபகரணம் – அலாரம் செட் பண்ணுவது போலனு வெச்சுக்கங்களேன் – அப்படி ஏதாவது உபயோகப்படுத்தப் பட்டிருக்கும் சாத்தியக்கூறினை நாம ஒதுக்கிடக் கூடாது. இப்படி

எடுத்துக்கிட்டா ரெண்டு தகுதிகளை நம்முடைய கற்பனை கொலைகாரனோட நாம பொருத்தி வெக்கணும். மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு பேசுவதைப் பதியும் இயந்திரம் வாங்கியிருக்கிறார் என்ற சேதி அவனுக்குத் தெரிஞ்சிருக்கணும்; மேலும் போதுமான அளவுக்கான இயந்திர தொழிநுட்ப அறிவு கொண்டவனாகவும் இருக்கணும்.

''ஜன்னலிலிருந்த காலடித்தடங்கள் பற்றி நினைக்கும்போது இவையத்தனையும் எனக்குள்ளே படமாகியிருந்தன. இந்த விஷயத்துல எனக்குள்ளேயிருந்த மூன்று முடிவுகள்: 1. அவை உண்மையாவே ரால்ஃப் பேடனால உண்டாகியிருக்கலாம். அவர் அன்னிக்கு ஃபெர்ன்லி பார்க்ல இருந்திருக்கார்... அவரே ஜன்னல் வழியா எகிறிக் குதிச்சு படிக்குமறைக்குள்ளே போய் – அங்கே அவரோட அப்பா இறந்துக்கிடப்பதைப் பார்த்திருக்கலாம். இது ஓர் ஊகம். 2. அந்தத்தடங்கள், ரால்ஃப் காலணி போலவே போட்டிருக்கும் வேற ஒரு நபரால கூட உண்டுபண்ணப்பட்டிருக்கலாம். ஆனா வீட்டிலிருக்கும் அனைவருமே கேப்டன் போல கனமான ரப்பர் அடியும் அதுல முத்து முத்தா கனமான டிஸைனும் கொண்ட ஷூவெல்லாம் போடுவது கிடையாது... எல்லா காலணிகளுமே சாதாரணமானவை தான். ஆகவே, ரால்ஃப் போன்ற காலணி போட்ட இன்னொருத்தர் உண்டுபண்ணியிருக்கலாம் என்ற ஊகத்தை நான் விட்டுவிடும்படி ஆனது. சார்ல்ஸ் கென்ட்டின் ஷூ, வழுவழு பாதம் கொண்டது. 3. அந்தக் காலடித்தடங்கள், பேடனின் மீது சந்தேகத்தைத் திசை திருப்ப யாராலோ வேண்டுமென்றே உருவாக்கப்பட்டுள்ளது. இதைப் பரிசோதிக்க சில சாட்சிகளை ஊர்ஜிதம் பண்ணிக் கொள்ள வேண்டியிருந்தது. விடுதியிலிருந்து பேடனின் ஒரு ஜோடி ஷூக்கள் போலீஸாரால் கையகப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றை பேடனோ அல்லது வேற யாரோ அன்றைய சாயங்காலம் அணிஞ்சிருக்க சாத்தியம் கிடையாது – ஏன்னா அவற்றின் பாதங்கள் அத்தனை சுத்தமாயிருந்தது. போலீஸ் தியரியின்படி பேடன் அதே மாதிரியான இன்னொரு ஜோடி ஷூ வெச்சிருப்பதா சொன்னாங்க... நானும் அது உண்மைதான்னு ஊர்ஜிதம் பண்ணிக்கிட்டேன். இப்ப என்னோட தியரி சரிதான்னு ஊர்ஜிதமாகணும்னா, கொலைகாரன் பேடனோட அதே மாதிரியான இன்னொரு ஷூவை அணிந்து வந்திருக்கணும் – அப்படினா, வேற

ஏதோ வகையான *மூணாவது* காலணியைத் தான் பேடன் அணிந் திருக்கணும். அந்த *மூணாவது* ஒரு வேளை ஷூவாவும் இருக்கலாம்... இல்லே ஒரு மாற்றத்துக்கு பூட்ஸாகவும் இருக்கலாம்னு நான் கற்பனை பண்ணிக்கிட்டேன். இதைப் பற்றி உங்களோட சகோதரியை நான் விசாரணைக்குள்ளே போட்டேன் – என்னோட எண்ணம் வெளியே தெரிஞ்சுடாமயிருக்க பூட்ஸின் நிறம் பற்றிய ஒரு இடைச்செருகலை வெச்சு!

''அவங்களோட விசாரணையின் முடிவு உங்களுக்கும் தெரியும். ரால்ஃப் பேடன்கிட்டே ஒரு ஜோடி பூட்ஸ் இருந்திருக்கு. நேற்று என் வீட்டுக்கு பேடன் வந்ததும் நான் கேட்ட முதல் கேள்வி – அந்தப் பரிதாபகரமான இரவன்று கேப்டன் அணிந்திருந்த காலணி என்ன என்பதைத்தான். ரால்ஃப் பூட்ஸ் தான் அணிஞ்சிருக்கார் - சொல்லப் போனா மாற்றா போட்டுக்க வேற எதுவும் இல்லாததால இன்று வரைக்கும் கூட அவர் பூட்ஸைப் போட்டுக்கிட்டுத்தான் அலையறார்.

''இந்தக் கட்டத்துல நம் கொலைகாரன் பற்றிய விவரணையில நாம இன்னும் சில அடிகள் முன்னேறி நிக்கறோம் – அன்றைய தினம் கேப்டன் ரால்ஃபுடைய ஷூவை ஆண்கள் விடுதியிலிருந்து கமுக்கமா அமுக்கி விடும் சாத்தியமுள்ள ஓர் ஆள்.''

இங்கு நிறுத்திக் கொண்டு சற்றே உரத்தக் குரலில் அவர் சொன்னார்: ''இன்னும் ஒரேயொரு பாயிண்ட் பாக்கியிருக்கு. அந்த ஸில்வர் டேபிளிலிருந்து பிச்சுவாக்கத்தியையும் கமுக்கமா அமுக்கும் சந்தர்ப்ப மிருந்தவனைத் தான் கொலைகாரனாக நிறுத்த முடியும். யார் வேணும்னாலும் அந்தக் கத்தியை எடுத்திருக்கலாம்னு நீங்க வாதாட முன்வரலாம்... ஆனா, அந்த ஸில்வர் டேபிளைப் பார்த்தபோது அதுல அக்கத்தி இல்லைனு ஃப்ளோரா சொன்ன சாட்சியத்தை நாம மறந்துடக் கூடாது.''

இங்கு மறுபடியும் நிறுத்தினார், சற்று நீளமாய்.

''இப்ப முழுக்க அடுக்குவோம் – இப்பத்தான் எல்லாம் துல்லியமா துலங்கி கொலைகாரனின் உருவைக் காட்டுதே. அன்றைய தினம், சாயங்காலத்துக்கு முன்னாடியே ஆண்கள் விடுதிக்கு போயிருக்கும் சாத்தியமுள்ள ஓர் ஆள் – மிஸ்டர் ஆக்ராய்டு பதிவு பண்ணும் இயந்திரம் வாங்கியிருப்பதை அறிந்துள்ள ஓர் ஆள் – மெக்கானிக்கல் விஷயங்கள்ல

*அதிக ஈடுபாடு உள்ள சிந்தனை கொண்ட ஓர் ஆள் – மிஸ் ஃப்ளோரா வந்து விடுவதற்குள் அந்த ஸில்வர் டேபிளிலிருந்து பிச்சுவாக்கத்தியை எடுத்துப் பதுக்கிவிடும் சந்தர்ப்பமிருந்த ஓர் ஆள் – பதிவு மெஷினைப் பதுக்கி எடுத்துப்போக தகுதியான பை... சற்றே பெரிய கறுப்பு ரப்பர் பை போல ஒன்றினை வைத்திருக்கவல்ல ஓர் ஆள் – பார்க்கர் போலீஸுக்கு போன் பண்ணிக்கொண்டிருக்கும்போது தனியாய் படிக்குமறையில் இருக்கும் வாய்ப்பு அமையப் பற்ற ஓர் ஆள். சொல்லப்போனா, அது: **டாக்டர் ஷெப்பர்ட்!''***

அத்தியாயம் 26

உண்மையைத் தவிர வேறொன்றும் இல்லை

சில நிமிடங்களுக்கு அங்கு மயான அமைதி தான் நிலவியது.

பிறகு நான் பெரிதாய் சிரித்தேன். ''நீங்க பைத்தியக்காரன்'' என்றேன்.

''நோ'' என்று வழித்தெறிந்து விட்டார் பொய்ரெட். ''நான் பைத்தியக்காரன் கிடையாது. கால நேரத்துல ஏற்பட்ட ஒரு சின்னப் பிசகு தான் என்னோட முழு கவனத்தையும் உங்க மேல திருப்பி நிறுத்திச்சு.''

''காலநேரத்துல பிசகு?''–புதிர்ப்போடப்பட்டவனாய் விசாரித்தேன் நான்.

''யெஸ், யெஸ். வெளிவாசலிலிருந்து வீடு வரை நடந்து அடைய, ஐந்து நிமிடங்கள் ஆகும்னும், டெரஸ் சார்ந்த சுருக்கு வழியில வந்தா இன்னும் கூட சீக்கிரம் வரலாம்னும் எல்லாரும் எனக்கு விளக்கினாங்க – நீங்க உட்பட. ஆனா, உங்களுடைய சொந்த வார்த்தைகள் மற்றும் பார்க்கருடைய சாட்சியத்தின்படி, நீங்க எட்டு ஐம்பதுக்கு வீட்டை விட்டுக் கிளம்பியிருக்கீங்க. ஆனா வெளிவாசல் கேட்டை அடைந்த போது மணி ஒன்பது. ஆக பத்து நிமிடம் எடுத்துக்கிட்டிருக்கீங்க. அன்னிக்குக் கடுங்குளிர். ஹாய்யா நடந்துப் போக ஒருத்தனும் விரும்பியிருக்க மாட்டான். ஐந்து நிமிஷத்துல முடிச்சிருக்க வேண்டிய நடை பிரயாணத்துக்கு நீங்க அப்போ எதுக்கா பத்து நிமிடங்கள் வரை எடுத்திருக்கணும்? வழக்கு நெடுகிலும், படிக்குமறையின் ஜன்னல் மூடியே தானிருந்தது என்பதற்கு நமக்கு சாட்சியா உங்களோட

வார்த்தைகள் மட்டும் தான் இருக்கு என்பது அப்ப எனக்கு நினைவுக்கு வந்துது. ஜன்னலை மூடியாச்சானு ரோஜர் ஆக்ராய்டு உங்களைக் கேட்டிருக்கார் – ஆனா அவர் எழுந்து போய் ஊர்ஜிதம் பண்ணிக்கலே. வீட்டைச் சுற்றி நீங்க ஓடி, ஷூவை மாற்றிக்கிட்டு, ஜன்னல்ல ஏறி, ஆக்ராய்டைக் கொன்னுட்டு, சாதுவா கேட்டுக்கு ஒன்பது மணிக்குத் திரும்பிட உங்களுக்கு அந்தப் பத்து நிமிஷம் போதுமானதா? ரோஜர் ஆக்ராய்டு அன்னிக்கு இருந்ததைப் போல படபடப்போடே இருந்த ஒரு மனுஷன், நிச்சயமா ஜன்னல் பக்கம் சத்தம் வந்து பார்த்திருப்பான்... அதனால உங்க ரெண்டு பேருக்கும் போராட்டம் தான் ஏற்பட்டிருக்கும்னு தான், நான் முதல்ல இந்த ஊகத்தையே ஒதுக்கிட்டேன். ஆனா ஒருவேளை, நீங்க, அங்கிருந்து கிளம்புவதற்கு *முன்னாடியே* ரோஜர் ஆக்ராய்டைக் கொன்னிருந்தால்? அதாவது நீங்க அவரோட நாற்காலிக்குப் பின்னாடி நீங்க நிற்க சந்தர்ப்பம் கிடைச்ச போதே நீங்க மிஸ்டர் ஆக்ராய்டைக் கொன்னிருந்தால்? இப்படி நடந்திருந்தா, நீங்க முன்கதவு வழியாகவே வெளியேறறீங்க – அப்புறம் வேகமா அந்தச் சின்னத் தோட்டத்து அறைக்குள்ளே போயிடறீங்க – அங்கே ஷூவை மாற்றிக்கறீங்க – வெளியே வந்து களிமண் சேத்துல காலை வெச்சு வீட்டைச்சுற்றி ஜன்னல் வழியா கால்தடங்களைப் பதிச்சு உள்ளே குதிக்கறீங்க கதவை தாழ் போட்டுட்டு மறுபடியும் வந்த வழியே சின்னத் தோட்டத்து அறைக்குப் போறீங்க – உங்களோட பழைய ஷூவுக்கே மாறிக்கிட்டு கேட்டுக்குப் போயிடறீங்க. இதையே தான் அன்னிக்கு மிஸஸ் ஆக்ராய்டுடன் நீங்க இருந்தபோது நான் பண்ணிப் பார்த்தேன். ஜஸ்ட் பத்து நிமிஷங்கள் தான் புடிச்சது. அப்புறம் வீட்டுல இருக்கீங்க – கொலை நடந்த நேரத்துல நீங்க வீட்டுல இருந்ததற்கான சூப்பர் சாட்சி! இங்கே உங்களோட மெக்கானிக்கல் உபகரணம் ஒன்பதரைக்கு மெஷினை இயக்கிடுது.''

அந்நியப்படுத்தப்பட்டு, என் காதுக்கு மட்டும் கேட்கும் விதத்தில் ''மிஸ்டர் பொய்ரெட்'' என்றழைத்த நான், ''இந்த கேஸைப் பற்றி நீங்க ரொம்ப மூளைக்கு வேலை தந்திருக்கீங்க. சொல்லுங்க – மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டைக் கொல்வதால் எனக்கு என்ன லாபம் கிடைக்கப் போகுது?'' என கேட்டேன்.

''*பாதுகாப்பு*. மிஸஸ் ஃபெர்ரர்ஸை ப்ளாக்-மெயில் பண்ணின அந்த

ஆள் – நீங்கதான். மிஸ்டர் ஃபெர்ரர்ஸை எது கொன்னது என்பது பற்றிய அறிதல், அவரைக் கண்ணுக்குக் கண்ணா பார்த்த டாக்டரைத் தவிர வேற யாருக்கு நல்லா தெரிஞ்சுட முடியும்? அன்னிக்கு முதல் நாள் தோட்டத்துல நீங்க என்கூட பேசினபோது பிதுர்ராஜ்ய சொத்தா உங்களை வந்தடைந்த சொத்து எதையோ பற்றி குறிப்பிட்டீங்க. அப்படியெல்லாம் உங்களுக்கு சட்டரீதியா எதுவும் வந்திருப்பதா என்னால கண்டுபிடிக்க முடியலேயே. மிஸஸ் ஃபெர்ரர்ஸின் இருபதாயிரம் பவுண்டுகளுக்காக நீங்க என்னவோ காரணத்தை சிருஷ்டிக்க வேண்டியிருந்திருக்கு. அது உங்களுக்குப் பத்தல – ஆழந்தெரியாம காலை விட்டு நீங்க வந்த பணத்தை முதலீடு பண்ணி இழக்கறீங்க. உடனே அவங்க மேல நீங்க உங்களோட ஆதிக்கத்தை செலுத்த ஆரம்பிக்கிறீங்க. ப்ளாக்-மெயில் ஆதிக்கம். அந்தப் பொம்பளையும் ஒரு கட்டத்துல நீங்க துளியும் எதிர்பார்த்திராத வழியைக் கையிலெடுத்துக்கிட்டு போயிடறாங்க. இந்த உண்மையை மட்டும் மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டு படிச்சிருந்தார்னா... கருணை யெல்லாம் அதிகமற்ற அவரால உங்க வாழ்வே சின்னாபின்னமாகி யிருக்கும்.''

அவரை ஓடஓட விரட்டும் முயற்சியாய், ''அந்த டெலிபோன் அழைப்பு?'' என்றேன் நான். ''அது பற்றியும் பீற்றிக்கும்படியான ஒரு விளக்கத்தை நீங்க வெச்சிருக்கணும்னு நான் நினைக்கிறேன்.''

''கிங்ஸ் அப்பாட் ரயிலடியிலிருந்து உங்களுக்கு ஒரு டெலிபோன் கால் வந்திருக்கு எனும் சாட்சி ஒண்ணு தான் என்னுடைய அத்தனை முன்னேற்றத்துக்குமான பெரும் தடைக்கல்லாயிருந்தது என்பதை நான் ஒத்துக்கறேன். முதல்ல அப்படி ஒரு கதையை நீங்களே கற்பனை பண்ணி ஓடவிட்டிருக்கணும்னு தான் நான் நினைச்சேன். அது ஒரு மகாபுத்திசாலித்தனமான டைரக்டோரியல் டச் - யெஸ். ஃபெர்ன்லிக்கு வரவும் அங்கு சடலத்தைப் பார்க்கவும் உங்களுக்கு ஒரு செமத்தியான காரணம் வேணும் - அப்படியே, மரணம் சம்பவித்த நேரத்துல நீங்க ஃபெர்ன்லி வீட்டிலேயே இல்லை எனும் நிரூபணத்துக்கு தடையாயிருக்கும் அந்தப் பதிவு இயந்திரத்தைத் தூக்கிக்கிட்டு ஓடிடணும். அன்னிக்கு உங்க வீட்டுக்கு நான் வந்து உங்க சகோதரியிடம் யாரெல்லாம் பேஷண்ட்ஸ் வந்துட்டுப் போனாங்கனு பேசிக்

கிட்டிருக்கும்போது, இதை எப்படி வெற்றிகரமா நடத்திக் காட்டியிருக்க முடியும்னு எனக்குப் பனிப்படலமாத் தான் ஊகங்கள் இருந்துது. அப்போ மிஸ் ரஸ்ஸெல் பற்றி என் மூளையில எண்ணங்களே இல்லை. அவங்களோட விஸிட் ஓர் அதிர்ஷ்டவசமான ஒற்றுமை – ஏன்னா, அதுதான் நான் எதை மனசுல வெச்சுக் கேள்விகள் கேட்டுக்கிட்டிருந்தேனோ அதிலிருந்து உங்க எண்ணத்தை முழுக்க திசை திருப்பி வெச்சுது. நான் எதைத்தேடிக்கிட்டிருந்தேனோ அது எனக்குக் கிடைச்சது; அன்னிக்குக் காலையில உங்களைத் தேடி வந்த பேஷண்ட்டுகள்ல அமெரிக்கா போய்க்கிட்டிருந்த ஒரு நோயாளி இருந்திருக்கார். அன்னிக்கு ராத்திரி லிவர்பூலுக்குப் போயிக்கிட்டிருக்கிற ஆளா, இவரைத் தவிர வேற யார் உங்களுக்கு கனக்கச்சிதமா பொருந்துவாங்க? அதுக்கப்புறம் அவன் கடலேறி காத தூரத்துல இல்லே பயணிச்சுக்கிட்டிருப்பான்...! ஓரியன் கப்பல் சனிக்கிழமை தான் புறப்படுது என்ற சேதி கிடைக்கப்பெற்றேன். சில கேள்விகளை உடனே கோர்த்து அவருக்கு நான் ஒரு தந்தியனுப்பியிருந்தேன். இப்போ என் கைக்கு வந்ததா நீங்க பார்த்த அந்த பதில் இது தான்:

நீங்க, ரொம்ப சரி. டாக்டர் ஷெப்பர்ட் என்னை ஒரு சேதி அனுப்புமாறு சொல்லியிருந்தார். லிவர்பூலுக்குக் கிளம்புமுன் ஸ்டேஷனிலிருந்து நான் போன் செய்யணும்.

''பியூட்டிஃபுல். ஒரு போன் கிராமத்து போலீஸ் ஸ்டேஷன்லேந்து உங்களுக்கு வந்ததா இருக்கணும் – அது நடந்தாச்சு. வந்த அழைப்பு பொய் கிடையாது. நீங்க பேசியிருக்கீங்க. உங்க அக்காவும் பார்த்திருக்காங்க. ஆனா அப்ப என்ன சேதி வந்தது என்பதற்கு ஒரேயொரு சாட்சி தானிருக்கு – அது: நீங்க!''

நான் கொட்டாவி விட்டேன். ''இந்த எல்லாமே'' என்ற நான், ''ரொம்ப இண்ட்ரஸ்ட்டிங்கா தானிருக்கு. ஆனா நிஜ நடப்புல இதெல்லாம் சாத்தியமானு தான் சந்தேகமாயிருக்கு!''

''ஓ! ஆனா நான் சொன்னது நல்லா நினைவிருக்கட்டும் டாக்டர் - உண்மை, நாளைக்குக் காலையில இன்ஸ்பெக்டர் ரக்லானிடம் ஒப்படைக்கப்படும். ஆனா, உங்க அக்காவை மனசுல வெச்சுக்கிட்டு,

இதுலேந்து தப்பிக்க உங்களுக்கு நான் இன்னொரு வழியை சொல்ல விரும்பறேன். அதிகமாக எடுத்துக்கொள்ளப்பட்ட தூக்க மாத்திரைகள். விளங்குது இல்லே? ஆனா கேப்டன் ரால்ஃப் பேடன் இதிலிருந்து விடுபட்டாக வேண்டும். ஆகவே நீங்க எழுதிக்கிட்டிருந்த இந்த வழக்கு பற்றிய கையெழுத்துப் பிரதியை முழுக்க முடித்து விடுமாறு வேண்டிக்கறேன் – உங்க சம்பந்தமான விஷயங்களை மட்டும் மறைத்தெழுதும் முறையை விட்டு விட்டு!''

''ஆலோசனைகள் தருவதுல நீங்க மன்னன் போல'' என்று குறிப்பிட்டேன் நான். ''நீங்க பேச வேண்டியதெல்லாம் முடிச்சாச்சுனு நினைக்கிறீங்களா?''

''ஆங்... இப்படி நீங்க கேட்டதால் ஒண்ணே ஒண்ணு மட்டும் பாக்கியிருப்பது நினைவுக்கு வருது. மிஸ்டர் ரோஜர் ஆக்ராய்டை அமைதியாக்கின மாதிரி என்னையும் ஆக்க நீங்க முயற்சி மேற் கொண்டா அது பெரும் முட்டாள்தனமா ஆகிடும். அப்படிப்பட்ட முயற்சிகளெல்லாம் ஹெர்குல் பொய்ரெட்டிடம் செல்லாது, விளங்குதா?''

சின்னதாய் சிரித்துக்கொண்டு ''மை டியர் பொய்ரெட்'' என்ற நான், ''எப்படி வேணும்னாலும் நாலிருந்திருக்கலாம்... ஆனா முட்டாள் கிடையாது'' என்றேன்.

எழுந்துக் கொண்டேன். ''வெல், வெல்'' என்றேன் சின்ன கொட்டாவியோடு. ''வீட்டுக்கு நான் திரும்பணும். அருமையான இண்ட்ரஸ்டிங்கான ஒரு மாலைப்பொழுதை அமைச்சுத் தந்ததுக்கு, தேங்க்ஸ்.

பொய்ரெட்டும் எழுந்துக் கொண்டு அவருக்கே உரிய சாந்தமான முறையில் முதுகு வளைத்து வணக்கம் தெரிவித்தார், நான் வாசல்கதவு வழியே கடந்துக் கொண்டிருந்தபோது.

அத்தியாயம் 27

மனம் வருந்தி...

விடிகாலை ஐந்து மணி. நான் மிகக் களைத்துப் போயிருந்தேன் – ஆயினும் நான் எனது கடமையை முடித்திருந்தேன். எழுதி எழுதி என் கைமுட்டிகள் வலித்தன.

ஓர் விநோதமான, அந்நியமான முடிவு – நான் எழுதியுள்ள பிரதிக்கு. இதை நான் எழுதியதே, பின்னொரு நாளில், பொய்ரெட்டின் தோல்வியுற்ற வழக்குகளில் ஒன்றாய் இது பிரசுரமாக வேண்டும் என்ற அர்த்தத்தில்தான்.

என்று நான் ரால்ஃப் பேடன் மற்றும் மிஸஸ் ஃபெர்ரர்ஸ் ஆகியோரின் இரு மண்டைகளும் ஒன்றோடொன்று உராய்ந்தபடி போவதை பார்த்தேனோ அப்போதிலிருந்து எப்போது வேண்டு மானாலும் பிரளயம் வெடிக்கலாம் என்று ஆரூடம் கணித்துதான் வைத்திருந்தேன். அவனை நம்பி அவள் இருக்கிறாள் என்று நான் எண்ணியிருந்தேன்; ஆனால் அங்கு நான் தவறு செய்துள்ளேன். இருப்பினும், அன்றிரவு நான் ரோஜர் ஆக்ராய்டின் படிக்குமறைக்குப் போகும் வரை... அவர் உண்மையை என்னிடம் சொல்லும் வரை... இந்த சந்தேகம் என்னை விடாமல் பிடித்துக் கொண்டேதானிருந்தது.

புவர் ஓல்ட் ஆக்ராய்டு. இந்த இக்கட்டிலும் அவர் உயிருக்கு நான் ஒரு வாய்ப்பு தந்துள்ளேன் என்பதை நினைக்கும்போது எனக்கு திருப்தியாக உள்ளது. காலந்தாழ்ந்து விடுவதற்கு முன் அந்தக் கடிதத்தை ஒரு முறை முழுக்கப் படித்துவிடுமாறு நான் கெஞ்சியிருக்கிறேன். அல்லது, என் மனம் தொட்டு சொல்ல வேண்டுமானால், அவரைப் போல பிடிவாதம் பிடித்த பன்றித் தலையர்கள் அந்தக் கடிதத்தைப்

படிக்காமல் இருந்து விடுவது தான் நல்லது என்று நான் எண்ண வில்லை? அவருக்கு அன்றிரவு இருந்த நரம்பதிர்வு ஒரு செமத்தியான உளவியல் பாடம். ஆபத்து கையருகில் வந்து விட்டதை அவர் உணர்ந்திருக்கிறார். இருந்தாலும் அவர் என்னை சந்தேகிக்கவில்லை.

அந்தப் பிச்சுவாக்கத்தி பிறகு வந்த ஒரு திட்டமே. இதற்காக நான் வரும்போது ஒரு கையடக்க ஆயுதத்தை எடுத்து வந்திருந்தேன். ஆனால் ஸில்வர் டேபிளில் பிச்சுவாக்கத்தியைப் பார்த்த மாத்திரத்தில், என்னை நோக்கிக் கைநீட்ட முடியாத ஓர் ஆயுதத்தை பயன்படுத்திக் கொள்வதை ஏன் கை நழுவ விடவேண்டும் என்று முடிவு செய்துக் கொண்டேன்.

அவரைக் கொன்று விட வேண்டும் என்று சில நாட்களாகவே நான் நினைத்திருக்கிறேன் என்றுதான் சொல்ல வேண்டும். மிஸஸ் ஃபெர்ரர்ஸின் மரணத்தைப் பற்றி நான் கேள்விப்பட்டவுடனேயே அவள் அத்தனையையும் ரோஜரிடம் சொல்லியிருக்க வேண்டும் என்றே நான் உணர்ந்தேன். நான் அவரைப் பார்த்தபோது அவரிடம் காணப்பட்ட படபடப்புக்கு அவருக்கு உண்மை தெரிந்து விட்டது தான் காரணம் என்றே நான் நினைத்தேன்.

அவருடைய படபடப்புக்குக் காரணம் பேடன் தான் என்றால் – வெல், எந்தக் கெடுதலும் அவருக்கு நேர்ந்திருக்காது. இரண்டு நாட்களுக்கு முன்னால் அவருடைய அந்தப் பேசுவதைப் பதியும் மெஷினில் ஏற்பட்ட பழுதினை சரிசெய்ய என்னிடம் தந்திருந்தார். அதில் ஏதோ சின்னதாய் தான் பழுதிருந்தது, இருந்தாலும், அது என்னிடமே ஓரிரு நாட்கள் இருக்கட்டும் என்று ரிப்பேர் செய்யும் சாக்கில் வைத்துக் கொண்டேன். அதில் என்ன பண்ண வேண்டுமோ அதை பண்ணியிருந்த நான் அன்று மாலை என் பையில் போட்டு அதனை சுமந்துப் போயிருந்தேன்.

ஓர் எழுத்தாளனாய் என்னை நானே பிரமிக்கிறேன். பின்வருவதை விட வேறெது அழகாய் அமையும்:

கடிதங்கள் எட்டு நாற்பதுக்கு உள்ளே கொண்டு வந்து தரப்பட்டன. அந்தக் கடிதம் படிக்கப்படாமலிருக்க நான் அவரை விட்டு வெளியேறிய போது மணி எட்டு ஐம்பது. என் கையைக் கதவுப்பிடியில் வைத்தபடி நான் ஏதாவது பண்ணாமல் கிளம்புகிறேனா என நான் திரும்பி நோட்டமிட்டேன்.

கவனியுங்கள், எல்லாம் உண்மை தான். ஆனால் முதல் வாக்கியம் முடிந்தபிறகு முற்றுப்புள்ளிக்கு பதிலாக மூன்று புள்ளிகள் வைத்து உணர்த்தியிருந்தேனென்றால் நிச்சயம் படிப்பவர்களுக்கு இடைப் பட்ட அந்த பத்து நிமிடத்தில் என்ன நடந்திருக்கும் என்ற ஓர் ஆர்வ உந்துதல் விளைந்திருக்கும்.

கதவிலிருந்து நான் அறையை ஒரு சுற்று பார்த்தபோது எனக்கு பூரண திருப்தியாயிருந்தது. எதுவும் பண்ணாமல் விடப்படவில்லை. அந்த மெஷின் ஜன்னலுக்கருகிலிருந்த டேபிளில் இருந்தது. ஒன்பதரை மணிக்கு வேலை பண்ண ஆரம்பிக்கும்படி அதில் அலார வேலைப்பாடு ஆகியிருந்தது. பெரிய சேர், கதவருகிலிருந்து பார்த்தால் அதை மறைக்கும்படி இழுத்து விடப்பட்டிருந்தது.

கதவுக்கு வெளியில் பார்க்கரைப் பார்த்ததும் நான் அதிர்ந்து வெலவெலத்துப் போனேன் என்பதை ஒப்புக் கொள்கிறேன். இதை நான் உண்மையாய் பதிவும் பண்ணியிருந்தேன்.

பிறகு, பிரேதம் கண்டறியப்பட்டதும், பார்க்கர் டெலிபோன் பண்ண ஓடியதும், இரண்டு முக்கிய வேலைகளை முடித்தேன். மெஷினை எடுத்து பைக்குள் திணித்துக் கொள்வது மற்றும் சேரை நகர்த்தி அதன் பழைய இடத்தில் விட்டு வைப்பது. அந்த சேர் நகர்த்தலைப் போய் பொய்ரெட் கவனித்துக் குறித்துக் கொள்வார் என நான் கனவு கூட காணவில்லை. தர்க்கரீதியாக சொல்லப்போனால் அவர் பிரேதம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் மட்டுமே முனைந்தியங்கி மற்ற விஷயங்கள் அனைத்திலும் ஒரு குருடனாய் தான் இருந்திருக்க வேண்டும்.

ஒன்பதே முக்காலுக்கு தனது மாமாவை உயிருடன் பார்த்ததாய் ஃப்ளோரா சொல்லப் போகிறாள் என்பது முன்கூட்டியே தெரிந்திருக்கக் கூடாதா என்று இப்போது நினைக்கிறேன். இது எனக்கு பெரும் புதிராய் இருந்துக் கொண்டே வந்தது. சொல்லப் போனால் கேஸ் நெடுகிலுமே என்னால் எதுவும் பண்ண முடியாத பல சமாச்சாரங்கள் என்னைப் புதிராக்கிக் கொண்டேதானிருந்தன.

என் மாபெரும் பயமாய் கடைசி வரை நீடித்தது கரோலின் தான். அவள் ஊகித்து விடுவாள் என்பதே என் திண்ணமான எண்ணம். பலஹீனம் பற்றி அவள் அன்று பேசியது ஓர் ஆச்சரியம்.

வெல், அவளுக்கு என்றுமே உண்மை தெரிய வரப்போவதில்லை. பொய்ரெட் சொன்னது போல தப்பித்து விட ஒரு வழி உள்ளது.

நான் அவரை நம்பலாம். அவரும் இன்ஸ்பெக்டர் ரக்லானும் அவர்களுக்குள்ளேயே போட்டு மூடிவிடத் தயங்க மாட்டார்கள். கரோலினுக்கு இது தெரிந்து விடுவதை நான் விரும்பவில்லை... அவளுக்கு என் மேல் பிரியமுண்டு... என்னைப் பற்றி பெருமையுமுண்டு. என் மரணம் அவளுக்கு பெரும் கவலையாய் அமையும்; ஆனால் கவலைகள் கரையவல்லவை...

இந்த முழு கைப்பிரதியையும் ஓர் உறையில் போட்டு பொய்ரெட்டுக்கு அனுப்பி விடுவேன்.

அதற்கு பிறகு?

எதை எடுத்துக் கொள்ளலாம்? வெரோனல்? யெஸ் – ஒரு நீதி இருக்கும். இதற்காக மிஸஸ் ஃபெர்ரர்ஸின் மரணத்துக்கு நான் ஜவாப்தாரியாகிறேன் என்று அர்த்தமில்லை. அது, அவளுடைய செய்கைகளால் விளைந்த நேரடி காரணம். அவளுக்காக நான் துளி இரக்கப்படவில்லை.

எனக்காகவும் நான் துளி பரிதாபப்படவில்லை.

ஆகவே அது வெரோனலாகவே இருக்கட்டும்.

இந்த பொய்ரெட் பணி ஓய்வு எடுத்துக்கொண்டு இங்கு பூசணிக்காய் வளர்க்க வராமல் இருந்திருக்கக் கூடாதா என்று எண்ணிக் கொள்கிறேன்.

[முடிந்தது]

மின்நூல் கூடம்

DIGITAL LIBRARY

Do you enjoy reading but can't get to your local library?

Then let us bring the library to **YOU**!

மின்நூல் ஆக்கம் : தமிழ் நேசன்